ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (மூலமும் பொருளும் - முழுவதும்)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

www.namperumal.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (1.ப்ரஸ்தாவ பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

## தனியன்

*ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ*
*வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி*

## ச்லோகங்கள்

1. ஸந்த: ஸ்ரீரங்க ப்ருத்வீச சரணத்ராண சேகரா:
ஜயந்தி புவநத்ராண பதபங்கஜ ரேணவ:

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனின் மென்மையான திருவடிகளை எப்போதும் பாதுகாக்கும் அவனுடைய பாதுகைகளைச் சிலர் தங்கள் தலையின் மீது ஆபரணம் போன்று, அலங்காரமாக ஏற்கின்றனர். அப்போது, அனைத்து உலகங்களையும் காத்து நிற்கும், மென்மையான தாமரை போன்று சிவந்த திருவடிகளின் தூசிகள், அவர்களது தலையின் மீது படிகின்றன. இதன் காரணமாக அவர்கள் அனைத்திலும் வெற்றியுடன் உள்ளனர்.

**விளக்கம்** - இந்தச் ச்லோகத்தின் மூலம், நம்மாழ்வாரின் புகழை வெளிப்படுத்துகிறார். ஸ்ரீரங்கநாதனின் பாதுகை என்பது நம்மாழ்வாரையே குறிக்கும். ஆக, நம்மாழ்வாரைத் தங்கள் தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடுபவர்களுக்கு அனைத்திலும் வெற்றியே என்று கூறுகிறார்.

2. பரதாய பரம் நமோஸ்து தஸ்மை
ப்ரதமோதாஹரணாய பக்திபாஜாம்
யதுபஜ்ஞம் அசேஷத: ப்ருதிவ்யாம்
ப்ரதித: ராகவ பாதுகா ப்ரபாவ:

**பொருள்** - பரதனின் மூலம் ஸ்ரீராமனின் பாதுகைகளுக்கு உள்ள பெருமைகள் முழுவதும் அனைத்து உலகங்களுக்கும் உணர்த்தப்பட்டன. இதன் மூலம் பலரும் பக்தி அடைந்தனர். இப்படிப்பட்ட பரதாழ்வானுக்கு என்னுடைய நமஸ்காரங்கள் என்றும் உரித்தாக வேண்டும்.

**விளக்கம்** - “பாதுகைக்கு இத்தனை பெருமை உள்ளது என்பதை நீவிர் எப்படி அறிந்தீர்?”, என்று பெரியபெருமாள் தேசிகரிடம் வினவினான். அதற்கு ஸ்வாமி அவனிடம், “நாம் பரதாழ்வான் மூலமாக அறிந்தோம்”, என்றார். அயோத்தியில் 14 வருடங்கள் பாதுகை மூலமாக எந்தவிதமான குறைகளும் இன்றி ஆண்டபோது, அனைத்து உலகங்களும் மிகுந்த நன்மை பெற்றன. இதனால் பல இடங்களிலும் எம்பெருமானின் திருவடி நிலைகளான சடாரியைத் தலைகளில் படும்படி

வைப்பது என்ற வழக்கம் உண்டானது.ஆக நாம் அனைவரும் நன்மை பெறக் காரணமாக இருந்தவர் பரதாழ்வாரே ஆவார். எனவே இந்தச் ச்லோகத்தில் பரதனைப் போற்றுகிறார்.

3 வர்ணஸ்தோமை: வகுளஸுமந: வாஸநாம் உத்வஹந்தீம்
ஆம்நாயாநாம் ப்ரக்ருதிம் அபராம் ஸம்ஹிதாம் த்ருஷ்ட வந்தம்
பாதே நித்ய ப்ரணிஹித தியம் பாதுகே ரங்கபர்த்து:
த்வந்நாமாநம் முநிம் இஹ பஜே த்வாம் அஹம் ஸ்தோதுகாம:

**பொருள்** - ஹே பாதுகே! உன்னை வணங்கி ஸ்தோத்ரம் செய்யவேண்டும் என்று நான் எண்ணியுள்ளேன். இதனால் செய்தது என்ன? மகிழ மலர்கள் பல வைத்துக் கட்டப்பட்ட மாலையை ஒத்த மணம் வீசும்படியாக, நம்மாழ்வாரின் சொற்கள் என்னும் மலர்கள் கொண்டு கட்டப்பட்ட மாலையாக, தமிழ்வேதமாகிய திருவாய்மொழி உள்ளது. வேதத்திற்கு இணையாக உள்ளது போன்று இத்தகைய திருவாய்மொழியைக் கூறியது யார் என்றால் - எப்போதும் ஸ்ரீரங்கநாதனின் திருவடியையே சிந்தித்தபடி உள்ள நம்மாழ்வார் ஆவார். அத்தகைய நம்மாழ்வார், உனது பெயரான பாதுகை (சடாரி) என்றே கூறப்படுகிறார். அந்த முனிவரை நான் வணங்குகிறேன்.

4 திவ்ய ஸ்தாநாத் த்வம் இவ ஜகதீம் பாதுகே காஹமாநா
பாத ந்யாஸம் ப்ரதமம் மநகா பாரதீ யத்ர சக்ரே
யோக க்ஷேமம் ஸகல ஜகதாம் த்வயி அதீநம் ஸ ஜாநந்
வாசம் திவ்யாம் திசது வஸுதாச்ரோத்ர ஜன்மா முநிர் மே

**பொருள்** - பாதுகையே! ஸத்ய லோகத்தில் இருந்து ஸ்ரீரங்கநாதனை நீயே அயோத்திக்கு எழுந்தருளச் செய்தாய். உன்னைத் தொடர்ந்து வந்த சரஸ்வதி, அயோத்தி இராமனின் காவியமான இராமாயணத்தின் வாக்குகளை வால்மீகிக்கு அளிக்கும் விதமாக பூமிக்கு வந்தாள். இத்தகைய வால்மீகி முனிவர் எனக்கு சிறந்த சொற்களை அளிக்கவேண்டும்

**விளக்கம்** - இராமாயணத்திற்கு முன்பு வேதங்கள், புராணங்கள் என்று பல இருந்தபோதிலும், ஸம்ஸார விஷயங்கள் அடக்கிய உயர்ந்த நூல்கள் ஏதும் இருந்தது கிடையாது. ஆக முதலில் தோன்றிய இனிமையான காவியம் இராமாயணமே ஆகும். இதே போன்று முதல் அர்ச்சாவதாரமாக இந்த மண்ணில் இறங்கியவன் பெரியபெருமாள் என்றும், நம்பெருமாள் என்றும், அழகிய மணவாளன் என்றும் போற்றப்படும் ஸ்ரீரங்கநாதன் என ஒப்பு நோக்குகிறார். சரஸ்வதிக்கும் பாதுகைக்கும் உள்ள ஒற்றுமை என்ன? சரஸ்வதி முதன் முதலாக பாரத கண்டத்தில் தோன்றியதால் பாரதி எனப்பட்டாள்; பாதுகை முதலில் பரதனால் ஆராதிக்கப்பட்டதால் பாரதி

எனப்படுகிறது. முதலில் பாதுகை இங்கு வந்திருக்கவேண்டும் . அதனை ஒரு கணமும் பிரியாதவனான நம்பெருமாள், பாதுகைகளைத் தொடர்ந்தபடி இங்கு வந்தான் என்று கருத்து.

5 நீசே அபி ஹந்த மம மூர்த்தநி நிர்விசேஷம்
துங்கே அபி யத் நிவிசதே நிகம உத்தமாங்கே
ப்ராசேத ஸ ப்ரப்ருதிபி: ப்ரதம உபகீதம்
ஸ்தோஷ்யாமி ரங்கபதி பாதுகயோர் யுகம் தத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் எப்படிப்பட்டவை என்றால் - மிகவும் உயர்ந்த பொருளான வேதங்களின் தலைகளிலும் உள்ளன; மிகவும் தாழ்ந்தவனான என் போன்றோர் தலைகளிலும் உள்ளன. இது வியப்பல்லவா? வால்மீகி போன்ற உயர்ந்தவர்களால் துதிக்கப்பட்ட அந்தப் பாதுகைகளை நானும் ஸ்தோத்திரம் செய்யப் போகிறேன்.

**விளக்கம்** - இங்கு வேதத்தின் தலை என்பது உபநிஷத்துக்கள் ஆகும். அவை பாதுகைகளைக் கூறுகின்றன என்று கருத்து. மேலும் வால்மீகி போன்றவர்கள், இராமனின் பாதுகையைத் தங்கள் மனக்கண்களால் மட்டுமே கண்டனர். ஆனால் இங்கு இவரோ அன்றாடம் திருவரங்கனின் பாதுகையை மெய்யான கண்களால் காண்பதால், வால்மீகி போன்றவர்களை விடத் தான் தாழ்ந்தவன் ஆனாலும், துதி செய்ய ஏற்றவன் என்றார். வேதங்களின் சிரஸ் பாகத்தில் அமரும் பாதுகைகள், தாழ்ந்தவர்களான நம் போன்றோர் தலைகளிலும் சடாரியாக அமர்வது, இத்தனை தாழ்ந்து வருவது அவற்றின் ஸௌலப்யத்தைக் குறிக்கும். வால்மீகியை ஏன் கூற வேண்டும்? இவருக்கு பாதுகையைப் பற்றிய ச்லோகம் எழுத வழிகாட்டியாக, பாதுகைகளைப் பற்றி முன்பே கூறியவரான வால்மீகியைக் கூறினார்.

6 தத் தே முகுந்த மணி பாதுகயோ: நிவேசாத்
வல்மீக ஸம்பவகிரா ஸமதாம் மம உக்தி:
கங்கா ப்ரவாஹ பதி தஸ்ய கியாநிவ ஸ்யாத்
ரத்யோதகஸ்ய யமுநா ஸலிலாத் விசேஷ:

**பொருள்** - என்னுடைய இந்த ஸ்லோகங்களை (சொற்களை) நான், உயர்ந்த இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட முகுந்தனான க்ருஷ்ணனின் பாதுகைகள் மீது வைக்கிறேன் . இதனால் நிகழ்வது என்ன? இந்தச் ஸ்லோகங்கள், வால்மீகியின் இராமாயணத்திற்கு நிகராக மாறிவிடுகின்றன. மழைபெய்து வீதியில் ஓடும் நீர் மற்றும் யமுனை நதியின் நீர் ஆகிய இரண்டும் கங்கை நதியில் விழும்போது இரண்டிற்கும் வித்தியாசம் ஏதும் இல்லை அல்லவா?

**விளக்கம் -** இங்கு ஒரு கேள்வி எழக்கூடும் . ஸ்லோகம் ஐந்தில், தன்னைத் தாழ்ந்தவன் என்று கூறுகிறார். தாழ்ந்தவனின் சொற்களில் பலன் ஏதும் எற்படுமா என்பதே அந்தக் கேள்வியாகும். இதற்கு விடை தருகிறார் . தான் தாழ்ந்தவனாக இருந்தாலும் தனது சொற்கள் ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் பற்றி உள்ளதால், தாமாகவே பலன் பெற்றுவிடும் என்று கூறுகிறார். இங்கு தெருவில் ஓடும் நீர் என்பதை இவரது சொற்களாகவும், யமுனையின் புனிதமான நீர் வால்மீகியின் சொற்களாகவும், கங்கை நீர் என்பது இரண்டையும் புனிதமாக்கும் பாதுகைகள் என்றும் கொள்ளலாம். மேலும் இதனை பாராயணம் செய்தால் இராமாயணம் போன்று பலன் அளிக்கும் என்றும் கருதலாம்.

7 விஜ்ஞாபயாமி கிம் அபி ப்ரதிபந்ந பீதி:
ப்ராகேவ ரங்கபதி விப்ரமபாதுகே த்வாம்
வ்யங்க்தும் க்ஷமா: ஸதஸதீ விகத அப்யஸூயா:
ஸந்த: ஸ்ப்ருசந்து ஸதயை: ஹ்ருதயை: ஸ்துதிம் தே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னைத் துதிக்க நான் இந்த ஸ்லோகங்களை எழுதத் தொடங்கும் முன்னர் (நான் இதனை எழுதத் தகுதி உள்ளவனா என்னும்) ஒரு விதமான பயம் ஏற்படுகிறது. இதனை நான் இங்கு ஒரு விண்ணப்பமாகச் செய்கிறேன் . அது என்னவெனில் - இந்த உலகில் உள்ள நல்லவை, தீயவை ஆகியவற்றை அறியும் திறன் உடைய பெரியோர்கள், மிகுந்த தயை செய்து, நான் இயற்றிய இந்த ஸ்லோகங்களை, பொறாமை நீங்கிய கருணை கொண்ட மனதுடன் கேட்க வேண்டும்.

**விளக்கம் -** இங்கு பொறாமை அற்ற பெரியவர்கள் என்றார். ஏன்? பொறாமை அற்றவர்கள், குறைகளை நம்மிடம் மட்டுமே கூறுவார்கள். ஆனால் பொறாமை உள்ளவர்கள் அந்தக் குறைகளை ஊர் முழுவதும் கூறி, நம்மை அவமானப்படுத்த எண்ணுவார்கள். எனவே தனது ஸ்லோகத்தில் குறை இருப்பின் தன் மீது பொறாமை அற்ற பெரியோர்கள் தன்னிடம் மட்டுமே தெரிவித்தல் நலம் என்பதால் இவ்விதம் கூறினார். மேலும், இந்தச் ச்லோகத்தில் குறை உள்ளது என்று பொறாமை காரணமாகக் கூறிவிட்டால், பாதுகையைப் பற்றிய ச்லோகத்தை அபசாரம் செய்தது போன்றதாகிவிடும். அதனால் அவர்களுக்கு ஏற்படும் அபசாரத்திற்குத் தான் காரணமாகி விடக்கூடாது என்று அஞ்சுகிறார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

8 அச்ரத்ததானநமபி நந்வதுநா ஸ்வகீயே
ஸ்தோத்ரே நியோஜயஸி மாம் மணிபாதுகே த்வம்
தேவ: ப்ரமாணம் இஹ ரங்கபதி: ததாத்வே
தஸ்ய ஏவ தேவி பதபங்கஜயோ: யதா த்வம்

**பொருள்** - உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! நான் எந்தவிதமான ச்ரத்தையும் இல்லாதவன் ஆவேன் . ஆயினும் உன்னைக் குறித்து ஸ்லோகங்கள் இயற்றும்படி நீ என்னைப் பணிக்கிறாய். ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளுக்கு நீ எவ்விதம் உள்ளாய் என்று நான் அறியவில்லை. அதனை ஸ்ரீரங்கநாதனே எனக்குக் கூறுவானாக!

**விளக்கம்** - ஒரு பொருளின் தன்மை என்ன, உயர்வு என்ன என்பதை அந்தப் பொருளின் உரிமையாளர் கூறினால் அல்லவா மற்றவர்களுக்குப் புரியும்? இது போன்று, இங்கு பாதுகையின் தன்மை என்ன என்பதை, அதனை அன்றாடம் தனது திருவடிகளில் அணிந்துள்ள ஸ்ரீரங்கநாதனே கூறவேண்டும் என்று வேண்டுகிறார்.

9 யதாதாரம் விச்வம் கதிரபி ச யஸ்தஸ்ய பரமா
தமப்யேகா தத்ஸே திசஸி ச கதிம் தஸ்ய ருசிராம்
கதம் ஸா கம்ஸாரேர் த்ருஹிணஹர துர்போத மஹிமா
கவீநாம் க்ஷுத்ராணாம் த்வம் அஸி மணிபாது ஸ்துதிபதம்

**பொருள்** - கம்ஸனின் சத்ருவாகிய க்ருஷ்ணனின் அழகான திருவடிகளில் உயர்ந்த கற்களுடன் உள்ள பாதுகையே! இந்த உலகம் முழுவதையும் தாங்குபவனாக நம்பெருமாள் உள்ளான். அனைத்தும் வந்து சேரும் இடமாகவும் அவனே உள்ளான்.அப்படிப்பட்ட நம்பெருமாளையே நீ ஒருவளாகத் தாங்குகிறாயே! மேலும் அவனுக்கு ஏற்ற அழகான நடையையும் நீயே அளிக்கிறாய். உனது பெருமைகளை ப்ரம்மன்,சிவன் போன்றவர்களால் கூட அறிய இயலாது. அப்படி உள்ளபோது, அற்ப கவியான என் போன்றவர்கள் துதிக்கும் விஷயமாக நீ எப்படி உள்ளாய்?

**விளக்கம்** - இங்கு தாங்கி நிற்பது என்பதன் மூலம் உயர்த்தியைக் கூறுகிறார். தன்னை அண்டியவர்களை, நிலையாக அதே இடத்தில் உயர்த்தி நிறுத்தும் வல்லமை கொண்டது பாதுகையாகும் என்று கருத்து.

10 ச்ருத ப்ரஜ்ஞா ஸம்பந் மஹித மஹிமாந: கதிகதி
ஸ்துவந்தி த்வாம் ஸந்த: ச்ருதி குஹரகண்டூஹர கிர:
அஹம் து அல்ப: தத்வத் யதிஹ பஹு ஜல்பாமி ததபி
த்வதாயத்தம் ரங்கக்ஷிதிரமண பாதாவநி! விது:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை எப்போதும் பாதுகாத்து வரும் பாதுகையே! சாஸ்திர ஞானம் மூலமும், தங்களுக்கே உரிய ஞானம் மூலமும் பல பெரியவர்கள் உன்னை எவ்வளவோ துதி செய்துள்ளனர். அவர்கள் துதியானது காதுகளின் துளைகளுக்கு இன்பம் அளிக்கவல்லதாக உள்ளன. ஆனால் இது போன்ற ஞானம் ஏதும் இல்லாத நான், உன்னைக் குறித்துப் பிதற்றுகின்றேன். இதனையும் உனது செயல் என்றே பெரியவர்கள் கூறுகின்றனர்.

**விளக்கம் -** பெரியவர்கள் இவ்வாறு புகழ்ந்து கவிதைகள் இயற்றுவது பகவானின் செயல் என்று அவர்கள் கொள்கிறார்கள். ஆனால் அவை அனைத்தும் உனது (பாதுகை) செயல் என்று அவர்கள் அறியவில்லை. ஆயினும் நான் அறிவேன். எனது சொற்கள் முழுவதும் உனது செயலே ஆகும். எனது தலையில் நீ நின்று இவ்வாறு செய்கிறாய் அல்லவா? ஆயினும் அவர்களைக் காட்டிலும் எனக்கு நீ அதிகமாகவே அருளினாய் என்றே கூறவேண்டும். இல்லையெனில் நன்கு கற்ற அவர்கள் துதிக்கு முன்பாக எனது துதிகள் எவ்வாறு நிற்க இயல்கிறது?

11 யத் ஏஷ: ஸ்தௌமி த்வாம் த்ரியுகசரணத்ராயிணி தத:
மஹிம்ந: கா ஹாநி: தவ மம து ஸம்பந்நிரவதி:
சுநா லீடா காமம் பவது ஸுரஸிந்து: பகவதீ
தத் ஏஷ: கிம்பூதா ஸ து ஸபதி ஸந்தா பரஹித:

**பொருள் -** ஞானம், பலம், சக்தி, தேஜஸ், ஐச்வர்யம், வீர்யம் என்ற ஆறு குணங்களுடன் கூடிய நம்பெருமாளின் திருவடிகளைப் பாதுகாக்கும் பாதுகையே! அற்பனான நான் உன்னைத் துதித்து ஸ்தோத்திரம் இயற்றினால் உனது மேன்மைக்கு குறைவு ஏதும் உண்டாகப் போவதில்லை. ஆனால் அதன் மூலம் எனக்கு எல்லையற்ற நன்மைகள் உண்டாகின்றன. நாய் ஒன்று கங்கை நீரைக் குடித்தால் கங்கைக்கு குறைவு ஏதும் ஏற்படாது; மாறாக நாய்க்கு நன்மை ஏற்படுகிறது அல்லவா?

**விளக்கம்** - உயர்ந்தவர்களைத் தாழ்ந்தவர்கள் புகழ்ந்தால் உயர்ந்தவர்களுக்கு என்ன குறை உண்டாகப் போகிறது? ஆனால் இவ்விதம் தாழ்ந்தவர்கள் அவர்களைப் புகழும்போது, இந்த உலகமானது உயர்ந்தவர்களைக் கண்டு, "தாழ்ந்தவர்களுடன் இவன் தொடர்பு வைத்துள்ளானே? இவனும் அப்படியெனில் அவர்கள் போன்றுதானோ?", என்று எண்ண வாய்ப்புண்டு அல்லவோ? இதற்கு விடை அளிக்கிறார் - பாதுகை விஷயத்தில் இது பொருந்தாது, காரணம் பாதுகைகள் எந்தவிதமான தாழ்வும் அற்றவனும், ஆறு உயர்ந்த குணங்களின் இருப்பிடமாக உள்ளவனும் ஆகிய நம்பெருமாளின் திருவடித் தொடர்பு பெற்றவை என்பதால் ஆகும். ஆகவே, தாழ்வாக உள்ள, தான் புகழ்ந்ததால் இந்த உலகம் பாதுகையைப் பற்றித் தவறாகக் கூறாது என்கிறார். இங்கு கங்கையின் உதாரணம் பொருத்தமே - காரணம், த்ரிவிக்ரமனாக வாமனன் உயர்ந்தபோது, அவனது திருவடிகளின் தொடர்பு, பாதுகைகளைப் போன்று கங்கைக்கும் கிட்டியது அல்லவா?

12 மித ப்ரேக்ஷா லாபக்ஷண பரிணமத் பஞ்சஷபதா
மத் உக்தி: த்வயி ஏஷா மஹித கவி ஸம்ரம்ப விஷயே
ந கஸ்ய இயம் ஹாஸ்யா ஹரி சரணதாத்ரி க்ஷிதிதலே
முஹு: வாத்யா தூதே முகபவந விஷ்பூர் ஜிதமிவ

**பொருள்** - ஸ்ரீ ஹரியான க்ருஷ்ணனின் பாதுகையே! அவனுடைய திருவடிகளைப் பாதுகாப்பவளே! உன்னுடைய தன்மைகளைப் பற்றி, பல உயர்ந்த கவிகள், உயர்த்தியாக ஸ்தோத்ரம் செய்யப்படுபவளாக நீ உள்ளாய். இப்படி இருக்கையில் என்னைப் போன்றவர்களின் ஸ்தோத்ரங்கள் அற்பமானவையே - காரணம் எனக்கு ஒரு நேரத்தில் ஐந்து அல்லது ஆறு பதங்கள் மட்டுமே தோன்றுகின்றன. இப்படி இருந்தாலும் நான் துதி செய்ய முயற்சிப்பது எப்படி உள்ளது என்றால் - பெரிய மரம் ஒன்றை வாய் மூலம் ஊதி அசைய வைப்பவனின் முயற்சி போன்றதாகும். வாய் மூலம் ஊதி மரத்தை அசைய வைப்பவனின் முயற்சி கண்டு உலகம் பரிகாசம் செய்வது போன்று, எனது கவிதையையும் கண்டு உலகம் பரிகாசம் செய்யாதோ?

**விளக்கம்** - ஒரு பெரிய மரமானது பலத்த காற்று வந்தால் கூட சிறிதே அசையும் தன்மை உடையது. அதனை ஒருவன் தனது வாயால் ஊதி அசைக்க முயன்றால் உலகம் அவனைக் கண்டு சிரிக்கும் அல்லவோ? இந்த முயற்சி போன்றே தன்னுடையதும் உள்ளது என்றார். இங்கு மேலும் ஒரு கருத்து உள்ளது. மரம் என்பதை ஸ்ரீரங்கநாதன் என்றும், காற்று என்பதை வேதங்கள் என்றும் கொள்ளலாம் . உயர்ந்த வேதங்கள் கூட அவனை நெருங்கி உணர இயலாமல் உள்ளபோது, அற்பமான தன்னால் இயலுமோ என்றார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

13 நிஸ்ஸந்தேஹ நிஜ அபகர்ஷ விஷய உத்கர்ஷ: அபி ஹர்ஷ உதய
ப்ரத்யூட க்ரம பக்தி வைபவ பவத் வையாத்ய வாசாலித:
ரங்காதீச பதத்ர வர்ணந: க்ருத ஆரம்பை: நிகும்பை: கிராம்
நர்மாஸ்வாதிஷு வேங்கடேச்வர கவி: நாஸீரம் ஆஸீததி

**பொருள்** - எனது தாழ்மை என்பதையும், நான் ஸ்தோத்ரம் செய்ய முற்படும் பாதுகைகளின் உயர்த்தி என்பதையும் பற்றிச் சந்தேகம் இன்றி நான் உணர்வேன். ஆயினும் எனது எல்லையற்ற மகிழ்வும், பாதுகைகள் மீது கொண்டுள்ள எல்லையற்ற பக்தியும் காரணமாக எனக்கு மிகவும் துணிச்சல் வந்தது என்றே கூற வேண்டும். இதன் காரணமாகவே நான் ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் விஷயமாகத் தாறுமாறான சொற்களைக் கொண்டு இவற்றைக் கூறுகிறேன். இதன் மூலம் தாறுமாறாகக் கவிதை இயற்றக்கூடியவர்களில், வேங்கடேசன் என்கிற நான், முதல் இடத்தைப் பிடிக்கிறேன்.

14 ரங்கக்ஷ்மாபதி ரத்நபாது பவதீம் துஷ்டூஷத: மே ஜவாத்
ஜ்ரும்பந்தாம் பவதீய சிஞ்ஜித ஸுதா ஸந்தோஹ ஸந்தேஹதா:
ச்லாகா கூர்ணித சந்த்ரசேகர ஜடா ஜங்கால கங்காபய:
த்ராஸாதேச விச்ருங்கல ப்ரஸரண உத்ஸிக்தா: ஸ்வயம் ஸூக்தய

**பொருள்** - உயர்ந்த கற்களால் இழைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னைத் துதித்து கவி பாட வேண்டும என்ற ஆசை எனக்கு அதிகமாக உள்ளது. உனது நாயகனான ஸ்ரீரங்கநாதனின் மிக உயர்ந்த பக்தனான சிவபெருமான் தனது தலையை அசைக்கும்போது அவனது சடைமுடியில் மிகவும் வேகமாக ஓடிவரும் கங்கை நதியின் ஓசையானது, உன்னுடைய அமிர்தம் போன்ற இனிய நாதத்தைப் போன்று உள்ளது. அந்த கங்கை நதியானது, தான் ஓடிவரும் பாதையில் தனக்கு ஏதேனும் தடை வருமோ என்று அச்சம் கொள்ளாமல் கர்வத்துடன் ஓடிவருகிறது. அப்படி ஓடிவரும் கங்கை நீரின் வேகம் போன்று உன்னைப் பற்றிய சொற்கள் எனக்கு வர வேண்டும்.

**விளக்கம்** - வைஷ்ணவாநாம் யதா சம்பு: ஸ்ரோதாயாம் ஜாந்ஹவி யதா - சிவனை விட உயர்ந்த வைஷ்ணவர் வேறு யாரும் இல்லை. அப்படிப்பட்ட சிவனால் போற்றப்படும் பெருமாளின் பாதுகை என்றார். கங்கையின் வேகம் சிவனின் தலை அசைப்பால் மேலும் அதிகமாகிறது என்றார்.தன்னிடமிருந்து வெளிவரும் பாதுகைகள் பற்றிய கவிதைகள் கண்டு, அந்தச் சொற்கள் தடை ஏதும் இல்லாத தன்னையே தடுத்துவிடுமோ என கங்கை அஞ்சும்படியாக, கர்வத்துடன் சொற்கள் வெளிவரவேண்டும் என்றார் - இப்படியாகவும் கருத்து உரைக்கலாம்.

15 ஹிமவந் நளஸேது மத்யபாஜாம்
பரத அப்யர்ச்சித பாதுகா அவதம்ஸ:
அதபோதநதர்மத: கவீநாம்
அகிலேஷு அஸ்மி மனோரதேஷுஅபாஹ்ய:

**பொருள்** - பரதனால் ஆராதிக்கப்பட்ட ராமனின் பாதுகையை எனது தலைக்கு அலங்காரமாகக் கொண்டேன். உடனே ஏற்பட்டது என்ன? இமயம் தொடங்கி வானர வீரனான நளன் கட்டிய ஸேது வரை உள்ள அனைத்து கவிஞர்களையும் விட நான் உயர்ந்த மேன்மை பெற்றுவிடுவேன்.

**விளக்கம்** - எனது விருப்பம் நிறைவேற நான் பாதுகையை எனது தலையில் ஏற்றேன். இதனால் உண்டாவது - மற்ற கவிஞர்கள் தங்கள் விருப்பம் நிறைவேற எனது கவிதைகளை பின்பற்றுவர் என்று கருத்து. அனைவருக்கும் தேவையான விவரங்கள் இந்த ஸ்லோகங்களில் கிட்டும் என்றார்.

16 அநிதம் ப்ரதமஸ்ய சப்தராசே:
அபதம் ரங்கதுரீண பாதுகே த்வாம்
கத பீதி: அபிஷ்டுவந் விமோஹாத்
பரிஹாஸேந விநோதயாமி நாதம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எப்போது உண்டானவை என்று கூற இயலாதபடி எக்காலத்திலும் இருந்து வரும் வேதங்கள் கூட உன்னை முழுவதுமாகக் கூறி முடிக்க இயலாது. இப்படிப்பட்ட உன்னை, எனது அறியாமை காரணமாக, பயம் சிறிதும் இன்றி ஸ்தோத்ரம் செய்யத் தொடங்கிவிட்டேன். இதன் மூலம் ஸ்ரீரங்கநாதன் மனம் மகிழ்ந்து புன்முறுவல் செய்கிறான் (நான் அவனை மகிழ்விக்கிறேன்).

**விளக்கம்** - நம்பெருமாளின் வீரங்களைக் குறித்து புகழ்வது போன்று, அவனது ஹாஸ்யரஸம் வெளிப்படுத்த எண்ணுவதும் அவனுக்குச் செய்யும் கைங்கர்யமே ஆகும். இதனால் நிகழ்வது - இந்த முழு ஸ்லோகத்தைக் கண்ட ஸ்ரீரங்கநாதன் மற்றவர்களைப் பார்த்து, “இது போல் உங்களால் இயற்ற இயலுமா?”, என்று பரிகாசம் செய்து சிரிக்கப் போகிறான் என்பதாகும்.

17 வ்ருத்திபி: பஹுவிதாபி: ஆச்ரிதா
வேங்கடேச்வரகவே: ஸரஸ்வதீ
அத்ய ரங்கபதி ரத்ந பாதுகே
நர்த்தகீவ பவதீம் நிஷேவதாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை உயர்ந்த இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்டவளாக அலங்கரிக்கும் பாதுகையே! நாட்டியம் ஆடுபவள் எவ்வாறு பலவித பாவங்களை வெளிப்படுத்துவாளோ, அது போன்று வேங்கடேசன் என்ற கவி மூலம் வெளிப்படும், உன்னைப் பற்றிய பலவிதமான புகழாரங்கள் அடங்கிய சொற்கள், உன்னை வணங்கிச் சேவிக்கவேண்டும்.

**விளக்கம் -** பொதுவாக நாட்டியம் ஆடும்போது, மஹாராணியை அழைத்து அமர வைப்பார்கள். அந்த மஹாராணி முன்பாக நாட்டிய நிகழ்ச்சி நடைபெற, அதனைக் கண்டு மஹாராணி மனம் மகிழ்ந்து இரசிப்பாள். இங்கு பாதுகையை மஹாராணியாக அமரவைக்கிறார். அந்தப் பாதுகை முன்பாக நாட்டியம் ஆடுபவள் போன்று தன்னை எண்ணிக் கொள்கிறார். நடனம் ஆடுபவள் பல அபிநயங்களைப் பிடிப்பது போன்று, இவர் பாதுகையைப் பற்றிய பல விவரங்களை வெளிப்படுத்துகிறார். அந்தச் சொற்கள் அனைத்தும் பாதுகையை வணங்கி நிற்கவேண்டும் என்று கூறுகிறார். இவ்விதம் பாதுகை தன்னுடைய சொற்களைக் கேட்டு மகிழ்ந்து அமர்வதாகக் கூறுகிறார்.

18 அபார கருணாம்புதே: தவ கலு ப்ரஸாதாத் அஹம்
விதாதும் அபி சக்நுயாம் சதஸஹஸ்ரிகாம் ஸம்ஹிதாம்
ததாபி ஹரிபாதுகே தவ குண ஔக லேச ஸ்திதே:
உதாஹ்ருதி: இயம் பவேத் இதி மிதாபி யுக்தா ஸ்துதி:

**பொருள் -** ஸ்ரீஹரியான க்ருஷ்ணனின் பாதுகையே! நீ எல்லையற்ற கருணைக் கடலாக உள்ளாய். இதன் மூலம் உன் மீது பல லட்சம் ஸ்லோகங்கள் என்னால் இயற்ற முடியும். ஆயினும் இத்தனை லட்சம் ஸ்லோகங்களும் உன்னைப் பற்றி முழுமையாகக் கூற இயலாமல் இருக்கும். எனவே உதாரணமாக இங்கு சில ஆயிரம் மட்டுமே போதுமானது என்று முடிவு செய்தாய் போலும்.

**விளக்கம் -** பாதுகை ஸ்வாமியிடம், "எத்தனை ச்லோகங்கள் என் மீது இயற்றுவதாக நீ சபதம் மேற்கொண்டாய்?", என்றாள். அதற்கு ஸ்வாமி, "1000 ச்லோகங்கள்", என்றார். உடனே பாதுகை சற்று பரிகாசமாக, "உம்மால் அவ்வளவுதான் இயலுமோ?", என்று கேட்டாள். அதற்கு ஸ்வாமி,

“நம்பெருமாளின் பாதுகையே! உன்னைப் பற்றி உனது அருள் காரணமாக, அடியேனால் ஒரு லக்ஷம் ச்லோகங்கள் கூட இயற்ற இயலும். நீ அனுமதி அளித்தால் செய்கிறேன்”, என்றார். இதனைக் கேட்ட பாதுகை, “என்னைப் பற்றி நீ உதாரணமாக உள்ள சிலவற்றை மட்டும் எழுதினால் போதுமானது”, என்றாள்.

19 அநுக்ருத நிஜநாதாம் ஸூக்திம் ஆபாதயந்தீ
மநஸி வசஸி ச த்வம் ஸாவதாநா மம ஸ்யா:
நிசமயதி யதா அஸௌ நித்ரயா தூரமுக்த:
பரிஷதி ஸஹ லக்ஷ்ம்யா பாதுகே ரங்கநாத:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது மனதிலும் வாக்கிலும் சொற்கள் எப்படி வரவேண்டும் என்றால் - உனது ஒலியானது, தான் (நம்பெருமாள்) நடக்கும் போது எத்தனை இனிமையாக உள்ளது என்று ஸ்ரீரங்கநாதன் நினைத்துக் கொள்வானோ அதுபோல் இருக்கவேண்டும். இவ்விதம் உனது நாதத்தை என் மூலம் நீ வெளிப்படுத்தவேண்டும். இதன் சுவாரஸ்யத்தில் அவன் மயங்கி, ஸ்ரீரங்கநாச்சியாருடன் விழித்திருந்து நான் கூறும் இவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பான். ஆகவே எனது வாக்குகள் அவனுக்கு இன்பமாக இருத்தல் வேண்டும்.

**விளக்கம்** - ஸ்வாமி தேசிகர் பாதுகையிடம், “இந்தச் ச்லோகங்களை நீ மட்டும், இங்கு உள்ளவர்கள் மட்டும் கேட்டால் போதாது. நம்பெருமாள் அவனுடைய நாயகியான ஸ்ரீரங்கநாச்சியாருடன் எழுந்தருளியிருந்து கேட்டு மகிழ வேண்டும்”, என்றார். உடனே பாதுகை, “அதற்கு என்னிடமிருந்து நீவிர் என்ன எதிர்பார்க்கிறீர்?”, என்றாள். ஸ்வாமி உடனே வெகுசாமர்த்தியமாக, “நீ நடக்கும்போது உனது இனிமையான சப்தத்தில் நம்பெருமாள் மயங்கி விடுகிறான் அல்லவா? அந்த நாதத்தை எனது சொற்களுக்கு அளிப்பாயாக. அதன் மூலம் உறங்கச் சென்ற நம்பெருமாள், “நம்முடைய பாதுகையின் நாதம் போன்று உள்ளதே”, என்று விரைவாக இங்கு வருவான். இங்கு வந்தவன் ஸ்ரீரங்கநாச்சியாருடன் அமர்ந்து என்னுடைய ச்லோகங்களைக் கேட்டு ரசிப்பான். எனது சொற்கள் இரசிக்கும்படி இல்லையென்றால் அவன் மீண்டும் உறங்கச் சென்றுவிடுவான் அல்லவோ?”, என்றார்.

20 த்வயி விஹிதா ஸ்துதிரேஷா
பதரக்ஷிணி பவதி ரங்கநாதபதே
ததுபரி க்ருதா ஸபர்யா
நமதாம் இவ நாகிநாம் சிரஸி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! பெருமாளின் திருவடிகளில் செய்யப்படும் பூஜையானது தேவதைகளின் தலையில் சென்று சேர்ந்துவிடுகிறது. இதே போன்று நான் உன்னைத் துதித்து இயற்றும் இந்தச் ஸ்லோகங்கள் அனைத்தும் பகவானின் திருவடிக்கும் சென்று சேர்கிறது.

**விளக்கம்** - பகவானின் திருவடிகளை அண்டுவதை விடுத்து சிலர் மற்ற தேவதைகளை நாடுவதுஉண்டு. இதுபோல் அல்லவா இவர் செயல் உள்ளது - பகவானின் திருவடி மீது துதி பாடாமல் பாதுகையின் மீது இயற்றுகிறாரே? இதற்கு விடை தருகிறார் - பாதுகை மீது இயற்றிய துதி,அவன் பாதங்களைச் சென்று அடையும் என்கிறார். எப்படி என்பதற்கு உதாரணம் கூறுகிறார். ஒரு முறை சிவனுக்காக இயற்ற வேண்டிய பூஜையை க்ருஷ்ணனின் திருவடிகளில் அர்ஜுனன் செய்தான். அப்போது அந்த மலர்கள் சிவனின் தலைமுடியைச் சென்று அடைந்தன. இதுபோன்று பாதுகைக்குச் செய்யும் துதிகள் திருவடிகளுக்கும் பொருந்தும்.

## ப்ரஸ்தாவ பத்ததி ஸம்பூர்ணம்

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்
நம்பெருமாள் திருவடிகளைக் காக்கும் பாதுகைகளே தஞ்சம்
தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே தஞ்சம்
உடையவர் திருவடிகளை தஞ்சம் அடைந்த தூப்புல்பிள்ளை திருவடிகளே தஞ்சம்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# *(2. ஸமாக்யா பத்ததி)*

(மூலம், பொருள், விளக்கம்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

# 2. ஸமாக்யா பத்ததி

இந்தப் பத்ததி முழுவதும் நம்மாழ்வாரையும் பாதுகையையும் இணைத்துப் போற்றுகிறார்.

21. *வந்தே விஷ்ணுபத ஆஸக்தம் தம்ருஷிம் தாம் ச பாதுகாம்*
*யதார்த்தா சடஜித் ஸம்ஜ்ஞா மத் சித்த விஜயாத் யயோ:*

**பொருள்** - சடகோபன் என்னும் நம்மாழ்வார், பாதுகை ஆகிய இருவருமே நம்பெருமாளின் திருவடிகள் மீது மிகுந்த ஆசை கொண்டுள்ளனர். இவர்களை நான் வணங்குகிறேன். இவர்கள் இருவருக்குமே சடாரி என்னும் திருநாமம், எனது மனதை வென்றதன் மூலம் அர்த்தம் கொண்டதாக ஆனது.

**விளக்கம்** - பாதுகை, நம்மாழ்வார் என்ற இருவருக்கும் சடாரி, சடகோபன் என்ற திருநாமங்கள் வந்தன. சடம் என்ற வாயுவை வென்றதால் சடகோபன் என்றும், சடர்கள் (மூடர்கள்) என்பவர்களைத் திருத்தி அரங்கன் பணியில் ஈடுபடுத்துவதால் சடகோபன் என்றும் கூறப்படுகிறார். பாஞ்சராத்ர சம்ஹிதையில் சடன் என்ற அசுரனை அழிப்பதற்காக, பாதுகை இந்த உலகிற்கு வந்ததாகக் கூறப்பட்டதால் அதற்கு சடாரி என்ற பெயர் உண்டு. என்னிடம் உள்ள துர்குணங்களை விலக்குவதாலும் இந்தப் பெயர்கள் இவர்களுக்குப் பொருந்தும்.

22. *த்ரமிட உபநிஷத் நிவேச சூந்யாந்*
*அபி லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந்*
*த்ருவம் ஆவிசதி ஸ்ம பாதுகாத்மா*
*சடகோப: ஸ்வயம் ஏவ மாநநீய:*

**பொருள்** - அனைவராலும் போற்றிக் கொண்டாடப்பட வேண்டியவர் நம்மாழ்வார் ஆவார். ஏன்? அவர், அனைவரும் பெரியபெருமாளை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் திருவாய்மொழியை அருளிச் செய்தார். ஆயினும் அதனை அறிய இயலாதவர்களும் பகவானை அடைய ஏதுவாக, தானே சடாரியாக, பாதுகையாக அவதரித்தார் என்பது உறுதியே.

**விளக்கம்** - வேதங்களைக் கற்க இயலாதவர்களுக்காக, அந்த வேதங்கள் என்னும் பழங்களைப் பிழிந்து, அதன் சாறாக திருவாய்மொழியை அருளிச்செய்தார். இத்தகைய உயர்ந்த திருவாய்மொழியையும் கற்க இயலாதவர்களைக் கரையேற்ற என்ன வழி என்று நம்மாழ்வார் சிந்தித்தார். பின்னர், தானே சடாரியாக, பாதுகையாக அவதரித்தார். இதன் மூலம் அனைவரின் தலைகளிலும் படும்படி நின்று, அவர்களுக்கு பகவத் அனுபவம் கிட்டும்படிச் செய்தார்.

23. *நியதம் மணி பாதுகே ததாந:*
*ஸ முநி: தே சடகோப இதி அபிக்யாம்*
*த்வத் உபாச்ரித பாத ஜாத வம்ச*
*ப்ரதிபத்யை பரம் ஆததாந ரூபம்*

**பொருள் -** இரத்தினக் கற்களால் பதிக்கபெற்ற பாதுகையே! நீ அடைந்துள்ள நம்பெருமாளின் திருவடிகளிலிருந்து உண்டான சூத்திரவம்சத்தில் நம்மாழ்வார் தோன்றினார். உன் மீது கொண்டுள்ள உயர்ந்த பக்தியை உணர்த்தவே, அவர் சடடோபன் என்ற திருநாமத்தை ஏற்றுக்கொண்டார். இதன் காரணமாகவே அவர் அந்தப் பிறப்பில் அவதரித்தார்

**விளக்கம் -** பகவானின் திருவடிகளில் இருந்து தோன்றியது பூமியும் சூத்திரர்களும் ஆகும். பூமி அனைவரது கர்மமும் இயற்ற அடிப்படையாக இருந்து உதவுகிறது. இது போன்று சூத்திரர்களும் அனைத்து வர்ணத்தினருக்கும் உதவுகின்றனர். இந்தக் குலத்தில் தோன்றிய நம்மாழ்வார், அந்தணர்களுக்கு திருவாய்மொழியைக் கொடுத்து உதவினார். இதன் மூலம் அந்தக் குலத்தை கௌரவப்படுத்தினார்.மற்ற வர்ணங்கள் பாதுகையின் தொடர்பில்லாத அவயவங்களில் (எம்பெருமானின் உறுப்புகள்) தோன்றியதால் அவை தாழ்ந்தவையே. இந்தக் குலத்திற்கு மட்டுமே பாதுகையின் தொடர்பு உள்ளதால், மற்ற வர்ணத்தைவிட இது உயர்ந்ததே ஆகும் - என்பதன் மூலம் இந்தக் குலத்திற்கு கௌரவம் அளித்தார்.

24. *முநிநா மணிபாதுகே த்வயா ச*
*ப்ரதிதாப்யாம் சடகோப ஸம்ஜ்ஞயைவ*
*த்விதயம் ஸகல உபஜீவ்யம் ஆஸீத்*
*ப்ரதமேந ச்ருதி: அந்யத: தத் அர்த்த:*

**பொருள் -** இரத்தினக் கற்களல் இழைக்கப்பட்ட பாதுகையே! சடகோபன் என்ற பெயர் பெற்ற நம்மாழ்வாரும் நீயும் ஒரே போன்ற செயல்களைச் செய்தீர்கள். அது என்ன? அனைவருக்கும் பயன்படக் கூடிய செயலாகும். நம்மாழ்வார் செய்தது வேதங்கள் அனைத்தையும் தமிழில் உரைத்து அனைவராலும் ஓதக் கூடியபடி செய்தார். நீ செய்தது - வேதத்தின் பொருளான நம்பெருமாளை அனைவரும் வணங்கும்படி உன் மீது எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருகிறாய்.

**விளக்கம் -** வேதம் ஓத வேண்டுமானால் உபநயனம் ஆகியிருக்க வேண்டும், மூன்று வர்ணத்தினராக இருத்தல் வேண்டும், புருஷர்களாக இருக்க வேண்டும் - என்று பல நிபந்தனைகள்

உள்ளன. ஆனால் நம்மாழ்வார், வேதங்களில் உள்ள விஷயங்களைத் தமிழ்ப்படுத்தி, திருவாய்மொழியான அதனை அனைவரும் ஓதலாம்படிச் செய்தார்.

நம்பெருமாளைச் சேவிக்க வேண்டுமானால் கோயிலுக்குச் செல்லவேண்டும். சிலரால், சில காரணங்களால் கோயிலுக்குச் செல்ல இயலாமல் இருக்கும். நம்பெருமாளைக் காண இயலவில்லையே என இவர்கள் மனம் வருந்தக்கூடும். ஆனால் பாதுகையாகிய நீ, நம்பெருமாளை உன் மீது எழுந்தருளச் செய்து, கோயிலுக்கு வெளியில் உள்ள திருவீதிகளில் அவனைச் சஞ்சாரம் செய்ய வைக்கிறாய். இதன் மூலம் அனைவரும் அவனைக் காணும்படிச் செய்கிறாய்.வேதங்களைத் தமிழில் செய்து, அனைவரும் பயனடையும்படி ஆழ்வார் செய்தார். அந்த வேதநாதனை நீ கோயிலுக்கு வெளியில் கொணர்ந்து, அனைவரும் பயனடையும்படிச் செய்கிறாய்.

25. *ஆகர்ண்ய கர்ணாம்ருதம் ஆத்மவந்த:*
*காதாஸஹஸ்ரம் சடகோப ஸூரே:*
*மஞ்ஜு ப்ரணாதாம் மணிபாதுகே த்வாம்*
*தத் ஏக நாமாநம் அநுஸ்மரந்தி*

**பொருள்** - உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஆத்மஸ்வரூபம் என்ன என்பதை உணர்ந்தவர்களுக்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழி மிகவும் இன்பமாக உள்ளது. இது போன்று அவர்களுக்கு நம்பெருமாள் நடக்கும் போது எழும் உனது ஓசையும் இனிமையாக உள்ளது. ஆகவே ஒரே போன்ற சப்தம் உடைய உனக்கு நம்மாழ்வாரின் பெயரையே வைத்தனர்.

**விளக்கம்** - இந்த உலகில் ஒருவரைப் போன்று மற்றொருவருக்குக் குரல் இருந்தால், ஒருவர் பேசும்போது மற்றவர் வந்துவிட்டார் என நினைப்பார்கள். அது போன்று நீ வரும்போது எழும் நாதம் கேட்ட பலரும், நம்மாழ்வார் வந்துவிட்டதாகவே எண்ணினர். எனவே உன்னையும் அவராகவே பெயரிட்டு அழைத்தனர். இவ்விதமாக நீயும் நம்மாழ்வாரும் ஒன்றே என நினைப்பவர்கள் செய்வது என்ன? நம்பெருமாள் ஸஞ்சாரம் செய்யும்போது எழும்பும் உனது ஒலியைக் கேட்டால், திருவாய்மொழியின் ஓசையைக் கேட்டது போன்றே எண்ணுகின்றனர். திருவாய்மொழியின் ஓசையைக் கேட்கும்போது, உனது நாதத்தையே அதில் கேட்கின்றனர்.

26. *ய: ஸப்தபர்வ வ்யவதான அதுங்காம்*
*சேஷத்வ காஷ்டம் அபஜத் முராரே:*
*தஸ்யாபி நாமோத்வஹநாத் த்வயா அஸௌ*
*லகூக்ருத: அபூத் சடகோப ஸூரி:*

**பொருள்** - முரன் என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் ஏழு பக்தர்களைக் கடந்து, தான் எட்டாவது பக்தராக உள்ள உயர்வை நம்மாழ்வார் அடைந்தார். அவருடைய பெயரை, நீ அவருக்குப் பின்னால் வந்து வைத்துக் கொண்டதால் எட்டாவது நிலையில் நீ உள்ளாய். இதனால் நீ அவரை விட உயர்ந்து, அவர் உன் முன்பு தாழ்ந்தவர் ஆனார்.

**விளக்கம்** - இங்கு திருவாய்மொழியில் *(3.7.10)* நம்மாழ்வார் - அடியார் அடியார் தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் - என்று ஏழு அடியார்களுக்குத் தன்னை அடியாராகக் கூறிக்கொண்டார். நீ உன்னை அவருக்கும் அடியாராக எட்டாவது இடத்தில் அமைத்துக் கொண்டாய். இதனால் அவர் உன்னைவிட ஒரு படி தாழ்ந்தவராகி விட்டார்.

27 *சய்யாத்மநா மதுரிபோ: அஸி சேஷபூதா*
*பாதாச்ரயேண ச புந: த்விகுணீக்ருதம் தத்*
*பூயோபி பாகவத சேஷதயா தத் ஏவ*
*வ்யங்க்தும் பதாவநி சடாரி பதம் பிபர்ஷி*

**பொருள்** - நம்பெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மது என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணன் சயனிக்கும் படுக்கையாக நீ உள்ளதால் அவனுக்குத் தாஸியாக உள்ளாய். மேலும் தணிந்து, அவனது திருவடிகளை அண்டி நிற்பதால், உன்னுடைய அடிமைத்தனம் இரண்டு மடங்கானது. இத்தகைய பகவத் சேஷத்வத்தை விட, பாகவத சேஷத்வம் மிகவும் உயர்ந்தது என்று உலகிற்குப் ப்ரகாசமாக உணர்த்த விரும்பி, நம்மாழ்வாரின் திருநாமமான சடாரி என்ற பெயரைச் சூட்டிக் கொண்டாய் போலும்.

**விளக்கம்** - பாகவத சேஷத்வத்தின் எல்லை நிலமாக நம்மாழ்வார் இருந்தார். நீ அவருக்கும் அடிமையாக நின்று, சேஷத்வத்தின் எல்லையாக மாறிவிட்டாய்.

28. *பத்யேந தேவி சடகோப முநி: தவ ஆஸீத்*
*தஸ்ய அபி நாமவஹநாத் மணி பாதுகே த்வம்*
*சேஷீ பபூவ யுவயோரபி சேஷசாயி*
*சேஷம் த்வசேஷம் அபி சேஷ பதே ஸ்திதம் வ:*

**பொருள்** - உயர்ந்த இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட அரங்கனின் பாதுகையே! உன்னைக் குறித்து நம்மாழ்வார் பாசுரங்கள் இயற்றியதால் உனக்குத் தொண்டனாக அவர் உள்ளார். அவருடைய திருநாமத்தை வைத்துக் கொண்டதால் அவருடைய அடிமை போன்று நீ உள்ளாய். ஆதிசேஷன் மீது சயனித்தபடி உள்ள பெரியபெருமாள் உங்கள் இருவருக்கு மட்டும் அல்லாமல் அனைத்து உலகிற்கும் எஜமானனாக உள்ளான். ஆகவே இந்த உலகம் முழுவதும் உங்கள் மூன்று பேருக்கும் அடியவர்களாக உள்ளனர்.

**விளக்கம்** - நம்மாழ்வார் திருவாய்மொழியில் "சுடர் அடி தொழுது" என்று உன்னைப் பாடினார். நீயோ அவரது திருநாமத்தை வைத்துக் கொண்டுள்ளாய். இப்படியாக உனக்கு அவர் அடிமையாகவும், நீ அவருக்கு அடிமையாகவும் உள்ளீர்கள். உங்கள் இருவரின் எஜமானனாக அழகிய மணவாளன் உள்ளான்.

29. *விந்த்யஸ்தம்பாத் அவிஹதகதே: விஷ்வக் ஆசாந்த ஸிந்தோ:*
*கும்பீஸூநோ: அஸுர கபல க்ராஸிந: ஸ்வைரபாஷா*
*நித்யம் ஜாதா சடரிபுதநோ: நிஷ்பதந்தீ முகாத் தே*
*ப்ராசீநாநாம் ச்ருதி பரிஷதாம் பாதுகே பூர்வகநண்யா.*

**பொருள்** - அகஸ்தியர் என்ற முனிவர் விந்திய மலையை அடக்கினார். தான் ஆசமனம் செய்வதற்காக ஸமுத்திரத்தின் நீரை முழுவதுமாக உட்கொண்டார். வாதாபி என்ற அசுரனைத் தனது ஆகாரமாக உட்கொண்டார். இப்படிப்பட்ட அகஸ்திய முனிவர் தனக்கு இஷ்டமான மொழியாகத் தமிழைக் கொண்டிருந்தார். அப்படி இருந்தபோதும், எப்போதும் இருக்கும் மொழி என்ற போதும், அந்த மொழி ஸம்ஸ்க்ருதம் போன்று பெரும் புகழ் பெறாமல் இருந்தது. ஆனால் நம்மாழ்வாராகத் தோன்றிய உனது (பாதுகை) திருவாய் மூலம் வெளிப்பட்ட திருவாய்மொழியால் நிகழ்ந்தது என்ன? தமிழ்மொழியானது வேதத்திற்கும் முந்தைய காலத்தியது என்று எண்ணும்படி ஆனது.

**விளக்கம்** - இராமாயண காலத்திலேயே அகஸ்த்தியர் இருந்தார் என்பதை அவருடைய பெயரானது வால்மீகி இராமாயணத்தில் இடம் பெற்றுள்ளதன் மூலம் அறியலாம். ஆக தமிழும்

அப்போதே இருந்தது என்னும் அறியலாம்.இப்படி உயர்ந்த தமிழ் மொழியை திருவரங்கன் மேலும் கௌரவித்தபடி இப்போதும் உள்ளான். எப்படி? திருவரங்கன் திருவீதி உலா வரும்போது முதலில் பிரபந்த கோஷ்டி செல்கிறது. அந்தத் தமிழின் பின்னே அல்லவா நம்பெருமாள் செல்கிறான்? அவனைப் பின் தொடர்ந்து வேதங்கள் வருகின்றன. தமிழுக்கு இந்த ஏற்றம் நம்மாழ்வாரால் வந்தது.இங்கு நம்மாழ்வாரும் பாதுகையும் ஒன்றே எனக் கூறுவது காண்க.

30. *சடகோப இதி ஸமாக்யா தவ ரங்கதுரீண பாதுகே யுக்தா*
*ஸூதே ஸஹஸ்ரம் ஏவம் ஸூக்தி: ஸ்வயம் ஏவ யத் மயா பவதீ*

**பொருள்** - நம்பெருமாளின் திருவடிகளைக் காக்கும் பாதுகையே! நீ என் மூலமாக ஆயிரம் ச்லோகங்கள் உண்டு பண்ணினாய். நம்மாழ்வார் திருவரங்கன் மீது ஆயிரம் பாசுரங்கள் இயற்றினார். இந்தப் பொருத்தம் காரணமாக உன்னைச் சடாரி என்றும், சடகோபன் என்றும் அழைத்தனர் போலும்.

**விளக்கம்** - கடந்த ச்லோகத்தில் பாதுகையும் நம்மாழ்வாரும் ஒன்றே என்றார். இதற்குச் சிலர், "நம்மாழ்வார் நம்பெருமாள் மீது ஆயிரம் பாசுரங்கள் அருளிச் செய்தார். பாதுகையோ அவ்விதம் ஏதும் செய்யவில்லை. அப்படி உள்ளபோது எவ்வாறு பாதுகையும் நம்மாழ்வாரும் ஒன்று எனலாம்?", என்று ஆட்சேபம் செய்தனர்.இதற்கு ஸ்வாமி தேசிகன் இந்தச் ச்லோகம் மூலம் விடை அருளிச் செய்தார் - இந்தப் பாதுகா ஸஹஸ்ரத்தை நான் இயற்றவில்லை. பாதுகையே இயற்றியது. ஆக பாதுகையை நம்மாழ்வார் பெயரிட்டு சடகோபன் என்று அழைப்பது சரியே - என்றார்.

## ஸமாக்யா பத்ததி ஸம்பூர்ணம்

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (3.ப்ரபாவ பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

31. வந்தே தத் ரங்கநாதஸ்ய மாந்யம் பாதுகயோ: யுகம்
உந்நதாநாம் அவநதி: நதாநாம் யத்ர ச உந்நதி:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளை வணங்காமல் உள்ளவர்களுக்குத் தாழ்வான நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் அந்தப் பாதுகைகளைப் போற்றி, வணங்குபவர்களுக்கு மிகவும் உயர்ந்த நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அந்த இரண்டு பாதுகைகளையும் நான் வணங்குகிறேன்.

**விளக்கம் -** பாதுகைகளை அணிவதில் திருவரங்கனுக்கு மகிழ்வே ஆகும். எப்படி என்றால் இதனை தன்னுடைய திருவடிகளில் சேர்த்துக்கொள்ள குனிந்து பார்க்கிறான். தொடர்ந்து பாதுகைகளை அணிந்து கொள்கிறான். அதன் பின்னர் முன்னை விடச் சற்று அதிகமாக உயர்ந்து நிற்கிறான். ஆக, பாதுகையால் உயர்த்தி உள்ளது அல்லவா? ஆகவே திருவரங்கனையே உயர்த்தும் மேன்மையும் பாதுகைக்கு உண்டு எனலாம்.

32 நிச்சேஷம் அம்பரதலம் யதி பத்ரிகா ஸ்யாத்
ஸப்த அர்ணவீ யதி ஸமேத்ய மஷீ பவித்ரீ
வக்தா ஸஹஸ்ரவதந: புருஷ ஸ்வயம் சேத்
லிக்யதே ரங்கபதி பாதுகயோ: ப்ரபாவ:

**பொருள் -** பாதுகையின் பெருமைகளை எழுத இயலும் - எப்படி? ஆகாயம் முழுவதுமாகச் சேர்ந்து பெரியதொரு காகிதமாக இருந்தல் வேண்டும். ஏழு கடலும் இணைந்து, எழுதும் மையாக மாற வேண்டும். எழுதுபவனாக ஆயிரம் தலைகளுடன் கூடிய பரமபுருஷனாகிய ஸ்ரீரங்கநாதனே இருக்க வேண்டும். இப்படி என்றால் - பாதுகையின் பெருமைகளை ஏதோ ஒரு சிறிய அளவு எழுதி முடிக்க இயலும்.

**விளக்கம் -** இங்கு ஸ்வயம் என்ற பதம் காண்க. இதன் பொருள் “தானாகவே” என்பதாகும். ஒரு செயலை மற்றவர்கள் கூறிச் செய்வதை விட நாமாகவே செய்தால் ஈடுபாடு அதிகம் அல்லவா? அது போன்று இங்கு திருவரங்கன் தானாகவே ஈடுபாட்டுடன் முயன்றால் மட்டுமே பாதுகைகளின் முழுப் பெருமைகளும் அவனுக்கும் பிடிபடும் என்றார். மேலும் லிக்யேத என்ற பதம் “எழுதப்படலாம்” என்று ஐயத்துடன் கூறுவதைக் காண்க.

33 வேத உபப்ருஹ்மண குதூஹலிநா நிபத்தம்
விச்வம்பரா ச்ருதிபவேந மஹர்ஷிணா யத்
வ்யாஸேந யத் ச மதுஸூதந பாதரக்ஷே
த்வே சக்ஷுஷீ த்வதநுபாவம் அவேக்ஷிதும் ந:

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் பாதுகையே! வேதங்களின் உண்மையான பொருளை உணர்ந்து கொள்வதில் சிரமம் அதிகம் ஆகும். அப்படிப்பட்ட வேதத்தின் பொருளை உலகிற்கு உணர்த்த எண்ணிய வ்யாஸ பகவான் மஹாபாரதத்தையும், வால்மீகி மஹரிஷி இராமாயணத்தையும் அருளிச்செய்தனர். இவை இரண்டும் பாதுகையாகிய உனது பெருமைகளை நாங்கள் காண்பதற்கு ஏற்ற இரு கண்கள் போன்று உள்ளன.

**விளக்கம்** - இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இரண்டிலும் பாதுகையின் பெருமை எவ்விதம் கூறப்பட்டது? இராமாயணத்தில் இராமனின் பாதுகைகளைப் பரதன் தனது தலையில் தாங்கி அயோத்தி வந்தான். மஹாபாரதத்தில் க்ருஷ்ணனின் பாதுகைகளை உத்தவர் தனது தலையில் ஏற்று பத்ரிகாச்ரமம் வந்தார்.

34 ப்ரத்யக்ஷயந்தி பரிசுத்ததிய : யதாவத்
ராமாயணே ரகுபுரந்தர பாதரக்ஷே
சச்வத் ப்ரபஞ்சிதம் இதம்பரயைவ வ்ருத்த்யா
ஸம்க்ஷேப விஸ்தரதசாஸு தவ அநுபாவம்

**பொருள்** - ஸ்ரீராமனின் பாதுகையே! ஸ்ரீமத் இராமாயணத்தில் பல இடங்களில் உனது பெருமைகள் சுருக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளன. தெளிந்த அறிவை உடையவர்கள் இவற்றை உணர்கின்றனர். அவர்கள் உனது பெருமையை இவற்றின் மூலம் கண்ணால் காண்பது போன்று தெளிவாக அறிகின்றனர்.

**விளக்கம்** - பதினான்கு ஆண்டுகள் ஸ்ரீராமனின் சிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து, அவனுக்கும் மேலாக இந்த உலகத்தைப் பாதுகைகள் ஆண்டன என்பதை அந்தக் காலகட்டத்தில் இருந்தவர்கள் கண்டனர் என்றார். அதனையே இராமாயணம் கூறுகிறது என்றார்.

35 அல்பச்ருதைரபி ஜனை: அநுமீயஸே த்வம்
ரங்கேசபாது நிபதம் நிகம் உபகீதா
ஸாரம் ததர்த்தம் உபப்ருஹ்மயிதும் ப்ரணீதம்
ராமாயணம் தவ மஹிம்நி யத: ப்ரமாணம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் சிறிய அளவே வேதத்தைப் பற்றி அறிந்தவர்கள் கூட, "பாதுகையைப் பற்றி வேதத்திலே கூறப்பட்டுள்ளது", என்று கூறுகின்றனர். இது எப்படி சாத்தியம்? வேதங்களின் முழு அர்த்தங்களை வெளிப்படுத்தும் விதமாக உள்ள இராமாயணத்தில் உனது பெருமைகள் பல இடங்களில் கூறியுள்ளதால் ஆகும்.

**விளக்கம் -** வேதங்களை ஓரளவு அறிந்தவர்கள் என்ன நினைக்கின்றனர் என்றால், "பாதுகையைப் பற்றி வால்மீகி முனிவர் இராமாயணத்தில் மிகவும் பரக்கப் பேசியுள்ளார். வால்மீகியைப் போன்றவர்கள் எந்த ஒரு கருத்தைக் கூறுவதாக இருந்தாலும், அந்தக் கருத்து வேதத்தில் கூறப்பட்டிருந்தால் மட்டுமே கூறுவார்கள். ஆக, பாதுகையைப் பற்றி இவர் கூறுவதன் மூலம், இதனைப் பற்றி வேதங்களின் நிச்சயமாகக் கூறப்பட்டிருக்கும்", என்பதாகும்.

36 திஷ்டந்து ச்ருத: ததோபி மஹிதம் ஜாகர்த்தி தத் பாதுகே
தத் தாத்ருக் ப்ரதநாய தாவக குண க்ரமாய ராமாயணம்
யஸ்ய ஆஸீத் அரவிந்த ஸம்பவ வதூ மஞ்ஜீர சிஞ்ஜாரவ
ஸ்பர்த்தா துர்த்தர பாதபத்த பணிதி: வல்மீக ஜந்மா கவி:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வேதங்கள் உன்னைப் பற்றி உயர்வாகக் கூறுவது இருக்கட்டும் . ஆயினும் அந்த வேதங்களைக் காட்டிலும் அனைவராலும் கொண்டாடப்படும் இராமாயணம் உனது குணங்களையும் மேன்மையையும் வெளிப்படுத்தியபடி உள்ளது. இந்த உலகில் உள்ள புற்றில் இருந்து வெளி வந்த வால்மீகி மஹரிஷி, இத்தகைய இராமாயணத்தை எவ்விதம் இயற்றினார்? தாமரை மலரில் அமர்ந்துள்ள ப்ரம்மனின் தேவியான ஸரஸ்வதியின் கால் சிலம்புகளின் ஒலி மூலம் ஏற்பட்ட ஓசைகளே இவரது வாயில் இருந்து, இராமாயணச் சொற்களாகப் புறப்பட்டன அல்லவா?

**விளக்கம் -** இராமனைக் குறித்த த்யானத்தில் அமர்ந்த வால்மீகி, அந்தத் த்யானத்தில் மூழ்கி புற்றாகவே இருந்தார். பின்னர் த்யானம் முடிந்து எழுந்து, தான் பெற்ற இராம அனுபவத்தை உலகிற்கு உணர்த்தினார்.அந்த வேளையில் ப்ரம்மனின் அனுக்ரஹம் பெற்றவராதலால், ஸரஸ்வதியின் க்ருபைக்குப் பாத்திரமானர். இராமாயணத்தின் ஒவ்வொரு நிகழ்விற்குத் தகுந்தபடி

அவள் ஆடிக் காண்பிக்க, அவளது க்ருபையால் இவரது வாயிலிருந்து சொற்கள் ப்ரவாஹமாக வந்தன.

37பக்தி ப்ரஹ்வ புரப்ரபஞ்ஜந ஜடாவாடீ ஸநீட ஸ்புரத்
சூடாரக்வத வாஸநா பரிமள ஸ்த்யாநே ஸ்தும: பாதுகே
ரங்கக்ஷோணிப்ருத் அங்கிரிபத்மயுகளீ பூர்ண ப்ரபத்தே: பலம்
நிச்சிந்வந்தி விபச்சித: சமதநா: நித்யம் யதுத்தம்ஸநம்

**பொருள் -** திரிபுராஸுரன் என்ற அரக்கனை அழித்த சிவன், தனது சிரஸில் எப்போதும் உன்னைத் (பாதுகை) தரித்தவனாகவே உள்ளான். உன் மீது உள்ள பக்தியால் இவ்வாறு வணங்கியபடி உள்ளான். இதனால் அவன் ஜடாமுடியில் சூடியுள்ள கொன்றை மலர்களின் வாசம், பாதுகையில் எப்போதும் வீசியபடி உள்ளது. இதனால் மகிழ்ந்த பாதுகை, பருமனாக உள்ளது. இப்படிப்பட்ட பாதுகையை நாம் வணங்குகிறோம். இந்த்ரியங்களை அடக்கத் தெரிந்தவர்களான வித்வான்கள் செய்வது என்ன? பாதுகையைத் தங்கள் சிரஸில் தாங்கியபடி உள்ளனர். அவர்கள், "ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் அடைக்கலம்", என்று தங்கள் மனம் மற்றும் வாக்கினால் கூறுவதற்கு ஏற்ற பயன் இதுவே என்று எண்ணுகின்றனர்.

**விளக்கம் -** இராமாயணத்தில் பாதுகையின் பெருமையைப் பற்றிக் கூறியவர், இங்கு அதனைத் தங்கள் தலைகளில் ஏற்பது பற்றிக் கூறுகிறார். நம்பெருமாளின் அடியார்கள் எப்போதும் தங்கள் தலையில் அவனது பாதுகையை ஏற்பதையே விரும்புவர் என்றார்.

38 மாத: பாதுகே தவ குணாந் க: ஸ்தோதும் அஸ்தோகதீ:
கோடீரேஷு யதர்பண ப்ரணயிநாம் ஸேவாக்ஷணே ஸ்வர்க்கிணாம்
அந்யோந்யம் க்ஷிபதாம் அஹம் ப்ரதமிகா ஸம்மர்த்த கோலாஹலம்
விஷ்வக்ஸேந விஹார வேத்ரலதிகா கம்ப: சிராத் லும்பதி.

**பொருள் -** மாதவனாகிய க்ருஷ்ணனின் பாதுகையே! அனைவருக்கும் தாய் போன்றவளே ! உனது குணங்கள் முழுவதையும் நன்கு உணர்ந்து, உன்னைத் துதிபாடும் அறிவு கொண்டவர்கள் யார் உள்ளனர்? உனது நாயகனான நம்பெருமாளைத் தேவர்கள் வணங்க வருகின்றனர். அப்போது உன்னைத் தங்கள் தலையில் ஏற்றுக்கொள்வதற்காக அவர்கள், "நான் முந்தி, நீ முந்தி" , என்று போட்டி போடுகின்றனர். இதனால் அங்கு பெரும் சப்தம் ஏற்படுகிறது. விஷ்வக்சேனர் தனது கையில் விளையாட்டிற்காக வைத்துள்ள பிரம்பைக் காண்பித்து, சிரமப்பட்டு இவர்கள் எழுப்பும் சப்தத்தை அடக்குகிறார். இப்படிப்பட்ட தேவர்களாலும் உன்னைத் துதிக்க இயலாது.

**விளக்கம்** - நம்பெருமாளின் திருமுன்பாகப் பலரும் சடாரியைப் பெற்றுக் கொள்வதற்காக முண்டியபடி வருவார்கள். அப்போது அங்கு பெரும் கூட்ட நெரிசல் உண்டாகிறது. இவ்விதம் நாம்தான் வருகிறோம் என்பது இல்லை, தேவர்களும் நிற்கின்றனர். இந்நிலையில் அங்கு வரும் விஷ்வக்சேனர் தேவர்களிடம், "நம்பெருமாள் இந்த மனிதர்கள் மீது உள்ள வாத்ஸல்யத்தினால் இங்கு வந்தவன் ஆவான். ஆகவே அவனது சடாரியைப் பெறுவதற்கு அவர்களுக்கே முதலிடம்", என்று வரிசைப்படுத்தியபடி உள்ளார்.

39 யோஷித்பூத த்ருஷந்தி அபோட சகட ஸ்தேமாநி வைமாநிக
ஸ்ரோதஸ்விநீ உபலம்பநாநி பஸித் உதஞ்சத் பரீக்ஷிந்தி ச
தூத்யாதிஷ்வபி துர்வசாநி பதயோ: க்ருத்யாநி மத்வேவ யத்
தத் தே தத் ப்ரணயம் தத் ஏவ சரணத்ராணம் வ்ருணே ரங்கிண:

**பொருள்** - நம்பெருமாளின் திருவடிகள் எப்படிப்பட்டவை - கல்லாகக் கிடந்த அகலிகையைப் பெண்ணாக மாற்றியவை; பலம் வாய்ந்த சகடாசுரனை உதைத்து அழித்தவை; த்ரிவிக்ரம அவதாரத்தில் வானம் வரை அளந்து, கங்கையை உண்டாக்கியவை; சாம்பலில் இருந்து பரீக்ஷத் அரசனை உண்டாக்கியவை; பாண்டவர்களுக்காகத் தூது சென்றவை ஆகும். இப்படிப்பட்ட பல குணங்களை வெளிப்படுத்திய திருவடிகளுடன் எப்போதும் பாதுகைகள் சினேகத்துடன் பிரியாமல் உள்ளன. இப்படியாக நம்பொருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! எனக்கு மேன்மை ஏற்பட அருள்வாயாக.

**விளக்கம்** - ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு திருக்கல்யாண குணம் வெளிப்படுவதைக் காணலாம். இதில் பாண்டவர்களுக்காகத் தூது சென்ற ஸௌலப்யம் மிகவும் போற்றத்தக்கது. அது போன்று அந்தத் திருவடிகளைத் தன்னிடம் அழைத்து வந்து, தனக்கு மேன்மை அளிக்கவேண்டும் என்றார்.

40 வந்தே தத் மதுகைடப ஆரிபதயோ: மித்ரம் பதத்ரத்வயம்
யத்தத் பக்தி பராநதேந சிரஸா யத்ர க்வசித் பிப்ரதி
த்வித்ர ப்ரஹ்ம விநாடிகா அவதி பத வ்யத்யாஸ சங்காபர
த்ராஸ உத்கம்பதசா விஸம்ஸ்துல த்ருதி: த்ரைவிஷ்டபானாம் கண:

**பொருள்** - மது, கைடபன் என்னும் அசுரர்களுக்குச் சத்ருவாக உள்ள நம்பெருமாளின் திருவடிகளுக்குப் பாதுகைகள் மிகவும் பொருத்தமான ஸ்நேகத்துடன் உள்ளன. இப்படியாக

அந்தத் திருவடிகளை அவை காப்பாற்றுகின்றன. அந்தப் பாதுகைகளை நான் வணங்குகிறேன். இவற்றின் மற்றொரு பெருமை என்னவெனில் - ஒருவன் மிகுந்த பக்தியுடன் அந்தப் பாதுகைகளைத் தனது தலையில் ஏற்கும்போது, ப்ரம்மனின் இரண்டு மூன்று விநாடிகள் மட்டுமே பதவியில் உள்ள தேவதைகள், தங்கள் பதவிக்கு இவனால் (பாதுகையைத் தலையில் ஏற்பவன்) ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி நடுங்குகின்றனர்.

**விளக்கம் -** நமது ஒரு வருடம் என்பது தேவர்களின் ஒரு நாள் ஆகும். தேவர்களின் ஆயிரம் சதுர்யுகங்கள் ப்ரம்மனின் ஒரு பகல் ஆகும். ஒரு பகலில் 14 மன்வந்தரங்கள் ஏற்படும். ஒவ்வொரு மன்வந்தரமும் ப்ரம்மனின் இரண்டு மூன்று நாழிகைகளுக்கு மட்டுமே சமமாகும். இந்த ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களின் பதவிகள் மாற்றம் அடையும். இவ்வாறு அற்பகாலமே உள்ள தங்கள் பதவிக்கு, பாதுகையைத் தலையில் ஏற்பவன் மூலம் ஆபத்து வருமோ என்று தேவர்கள் நடுங்குவார்கள்.

41 பத்மா காந்த பத அந்தரங்க விபவ உத்ரிக்தம் பதத்ரம் பஜே
யத் பக்த்யா நமதாம் த்ரிவிஷ்டபஸதாம் சூடாபதேஷு அர்பிதம்
நித்ய ஆபீத நக இந்து தீதிதி ஸுதா ஸந்தோஹம் உச்சை: வமதி
அந்த: நூநம் அமாந்தம் அந்திக லஸத் சேஷாபட சத்மநா

**பொருள் -** தாமரையில் அமர்ந்துள்ள ஸ்ரீரங்கநாயகியின் நாயகனான நம்பெருமாள் திருவடிகளுடன் சிநேகமாக உள்ளதால் பாதுகை மிகவும் உயர்ந்துள்ளது. அவற்றை நான் வணங்குகிறேன். கோயில்களில் தலை வணங்கி நிற்கும் தேவர்களுக்குச் சடாரி வைக்கப்படும்போது, முதலில் அவர்கள் தலையில் பரிவட்டம் என்ற வெண்மையான பட்டாடை கட்டியபின் சடாரி வைக்கின்றனர். இது எப்படி உள்ளது? நம்பெருமாளின் திருவடி நகங்கள் சந்திரனைப் போன்று குளிர்ந்த கதிர்களை வீசியபடி உள்ளன. அந்த அமிர்தத்தைப் பருகிய பாதுகைகள், அந்த வெண்மையான அமிர்தத்தைக் கக்குவது போல் உள்ளது.

**விளக்கம் -** கடந்த ச்லோகத்தில் தேவர்கள் பாதுகையைத் தலையில் ஏற்கும் மனிதனைக் கண்டு அச்சம் கொள்வதாகக் கூறினார். அந்த அச்சத்தை நீக்க, தேவர்கள் தாங்களும் விரைவாக நம்பெருமாளின் திருமுன்பாக நின்று, சடாரியைத் தலையில் ஏற்கின்றனர். இதனால் அவர்களின் பதவியைப் பற்றிய அச்சம் நீங்குகிறது.


**Email:**sridharan_book@yahoo.co.in

42. தத் விஷ்ணோ: பரமம் பதத்ர யுகளம் த்ரயந்த பர்யந்தகம்
சிந்தாதீத விபூதிகம் விதரது ச்ரேயாம்ஸி பூயாம்ஸி ந:
யத் விக்ராந்திதசா ஸமுத்தித பத ப்ரஸ்யந்தி பாதஸ்விநீ
ஸக்யேநேவ ஸதா நதஸ்ய தநுதே மௌளௌ ஸ்திதிம் சூலிந:

**பொருள் -** "தத் விஷ்ணோ : பரமம் பதம்" என்று உபநிஷத்துக்கள் பாதுகையின் மேன்மையைக் கூறுகின்றன. இப்படியாக உயர்ந்த ஐச்வர்யம் உடைய ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் நமக்கு உயர்ந்த நன்மைகளை ஏற்படுத்தவேண்டும். நம்பெருமாள் த்ரிவிக்கிரமனாக நின்றபோது, அவன் திருவடிகளில் இருந்து பெருகிய கங்கையுடன் பாதுகை தொடர்புடையதாக ஆனது. அப்போதிலிருந்து கங்கை எவ்வாறு சிவனின் தலையில் எப்போதும் உள்ளதோ, அதுபோன்று பாதுகையும் சிவனின் தலையில் உள்ளது.

**விளக்கம் -** சிவனின் தலையில் உள்ள இரண்டு பொருள்கள் குறித்துக் கூறினார். அவை கங்கையும் பாதுகையும் என்றார். இரண்டுமே எம்பெருமானின் திருவடிகளுடன் தொடர்பு கொண்டவையாகும். ஒன்று (கங்கை) த்ரிவிக்ரமனாக நம்பெருமாள் நின்றபோது அவனுடைய திருவடிகளின் தொடர்பு அடைந்தது. மற்றொன்று அவனது திருவடிகளில் எப்போதும் இருப்பதால், அவன் திருவடிகளின் தொடர்பு பெற்றது.

43 அம்புநி அம்புநிதே: அநந்யகதிபி: மீநை கியத் கம்யதே
க்லேசேநாபி கியத் வ்யலங்கி ரபஸ உத்துங்கை: ப்லவங்கேச்வரை:
விஜ்ஞாதா கியதீ புந: க்ஷிதிப்ருதா மந்தேந கம்பீரதா
கிம்தை: கேசவ பாதுகா குண மஹாம்போதே: தடஸ்தா வயம்.

**பொருள் -** நீரைத் தவிர வேறு இடங்கள் உயிர் வாழ இயலாத மீன்கள் கூட கடலில் ஓரளவு மட்டுமே செல்ல இயலும். வேகத்தில் சிறந்தவர்களான அனுமான் முதலானவர்கள் கூட கடலில் ஓரளவு மட்டுமே தாண்டிச் செல்ல இயன்றது; அதற்கே மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தரமலை அந்தக் கடலின் ஆழத்தை ஓரளவு மட்டுமே கண்டது. அவற்றைப் பற்றி நமக்கு என்ன? நம்பெருமாளுடைய பாதுகைகளின் குணங்கள் பெரிய ஸமுத்திரம் போன்று உள்ளது. மற்றவற்றைப்போல் அல்லாமல் நாம் அதன் கரையிலேயே அல்லவா நின்று கொண்டிருக்கிறோம்?

**விளக்கம் -** தங்களால் ஆழம் காண இயலாது என்று அறிந்த மீன்கள், எப்படியாவது கடலின் ஆழத்தைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று வீண் முயற்சி செய்தபடி உள்ளன. அக்கடலின் நீள அகலங்களை அறியவேண்டும் என்று சிலர், தங்களை அனுமனாக எண்ணிக்கொண்டு வீண் முயற்சி செய்தபடி உள்ளனர்.நாம் இது போன்று செய்யவேண்டாம் - காரணம் நம்பெருமாளின்

பாதுகைகளுக்கு உள்ள குணங்கள் ஸமுத்திரத்தை விட ஆழமானது என்று நாம் அறிவோம். அப்படி உள்ளபோது அவற்றை நாம் வர்ணித்துவிடுவோம் என்று ஏன் வீண் முயற்சி செய்யவேண்டும்?

44 பதகமல ரஜோபி: வாஸிதே ரங்கபர்த்து:
பரிசத நிகமாந்தே பாதுகே தாரயந்த:
அவிதித பரிபாகம் சந்த்ரம் உத்தம்ஸயந்தே
பரிணத புவனம் தத் பத்மம் அத்யாஸதே வா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் உள்ள தூசிகளால் பாதுகை முழுவதும் தெளிக்கப்பட்ட நறுமணமானது வீசியபடி உள்ளது. மேலும் அந்தப் பாதுகைகள் உபநிஷத்துக்களை உடையதாகவும் உள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த பாதுகைகளைத் தங்கள் தலையில் ஏற்றுக் கொள்பவர்கள் நிலை என்ன? அவர்கள் - வளர்வதையும் தேய்வதையும் இயல்பாக உடைய சந்திரனைத் தலையில் சூட்டிக் கொள்ளும் பதவியையோ அல்லது தாமரை மலரில் அமர்ந்து உலகைப் படைக்கும் பதவியையோ பெறுகிறார்கள்.

**விளக்கம்** - இங்கு தலையில் சந்திரனைச் சூடும் பதவி என்பது சிவன் பட்டமாகும். தாமரையில் அமர்வது என்பது ப்ரம்ம பட்டமாகும்.ஒரு ஐயம் ஏற்படலாம். பாதுகைகள் இவ்விதம் அற்பமான பலன்களான பதவிகளையும் அளிக்குமா? இதற்கான காரணத்தையும் கூறுகிறார். நம்பெருமாளின் திருவடிகளில் உள்ளதால் பாதுகாதேவிக்கு ரஜஸ் உண்டாகி, இவ்விதம் செய்கிறாள் என்றார். ரஜஸ் என்றால் ரஜோ குணத்தையும் குறிக்கும், தூசிகளையும் குறிக்கும். இதனை ச்லேடையாகக் கூறுகிறார்.

45 ஸக்ருதபி கில மூர்த்நா சார்ங்கிண: பாதுகே த்வாம்
மநுஜம் அநுவஹந்தம் தேஹபந்த வ்யபாயே
உபசரதி யதார்ஹம் தேவவர்க்க: த்வதீய
ஸ து நியமிதப்ருத்ய: ஜோஷம் ஆஸ்தே க்ருதாந்த:

**பொருள்** - சார்ங்கம் என்னும் வில்லை உடைய நம்பெருமாளின் பாதுகையே! உன்னை ஒரு மனிதன் தனது வாழ்நாளில் ஒருமுறையாவது தலையில் ஏற்றால் போதுமானது. அந்த மனிதனின் உடல் தரையில் விழும் காலத்தில் உனது வேலையாட்களான நித்யசூரிகள், அவனைச் சரியானபடி உபசாரம் செய்து அழைத்துப்போகின்றனர். இதனைக் காணும் யமன் தனது தூதர்களை அடக்கியபடி அங்கிருந்து மௌனமாகத் திரும்பி விடுகிறான்.

**விளக்கம் -** சடாரியைத் தங்கள் வாழ்க்கையில் ஒருமுறையாவது தலையில் ஏற்பவர்களை யமன் திரும்பிப்பார்க்கவும் அஞ்சுவான் என்று கருத்து. அவர்களுக்கு மீண்டும் ஸம்ஸார சுழற்சி என்பதே இல்லை.

46 பதஸரஸிஜம் ஏதத் பாதுகே ரங்கபர்த்து:
ப்ரதிநிதி பதவீம் தே காஹதே ஸ்வேந பூம்நா
ததிதம் அபரதா சேத் திஷ்டத: தஸ்ய நித்யம்
கதம் இவ விதிதார்த்தா: த்வாம் பஜந்தே மஹாந்த:

**பொருள் -** பாதுகையே! தாமரை மலர் போன்ற மென்மையான நம்பெருமாளின் திருவடிகள் உனக்கு ஈடான பெருமையை எப்படிப் பெற்றன தெரியுமா? - உன்னை அணிந்துள்ளதாலே பெற்றன. இது தவறான கருத்து என்றால் - அங்கு செல்லும் அனைவரும் பெரியபெருமாளின் திருவடிகளை விடுத்து, உன்னை உயர்வாக எண்ணி, உன்னைத் தங்கள் தலைகளில் ஏன் வைத்துக் கொள்கின்றனர்?

**விளக்கம் -** முக்கியமானவர் ஒருவர், அவரது ப்ரதிநிதி ஒருவர் என்று இருவர் உள்ளனர் என்று வைத்துக்கொள்வோம். முக்கியமானவர் ஏதோ ஒரு நேரத்தில் அங்கு இல்லை என்றால், ப்ரதிநிதியாக உள்ளவருக்கு மதிப்பு குறைவே ஆகும். இங்கு பாதுகைகள் முக்கியமானவை என்றும், பெரியபெருமாளின் திருவடிகள் ப்ரதிநிதி என்றும் கொள்ளப்பட்டன. ஆக முக்கியமான பாதுகை உள்ளபோது அதனை ஏற்பார்கள் அன்றி பெரியபெருமாளின் திருவடிகளை ஏற்பார்களோ? அந்தத் திருவடிகளுக்கு உள்ள பெருமை என்பதே உனக்குப் ப்ரதிநிதியாக உள்ளது என்பதே ஆகும்.

47 ச்ருதிசிரஸி நிகூடம் கர்மணாம் சோதிதாநாம்
த்வதவதி விநிவேசம் ந அதிகந்தும் க்ஷமாணாம்
பரிஹஸதி முராரே: பாதுகே பாலிசாநாம்
பசுவத பரிசேஷாத் பண்டித: நாம யஜ்ஞாந்

**பொருள் -** முரன் என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் பாதுகையே! சாஸ்திரங்களில் கூறப்பட்ட யாகம் முதலான பல கர்மங்களை இயற்றிய பின்னர், அவற்றைப் பாதுகையான உன்னிடம் சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்று உபநிஷத்துக்கள் மறைமுகமாகக் கூறுகின்றன. இது தெரியாத அஜ்ஞானம் நிரம்பிய மூடர்கள் இயற்றும் யாகங்கள் அனைத்தும் எந்தப் பயனும்


**Email:**sridharan_book@yahoo.co.in

அளிக்காமல் உள்ளன. அந்த யாகங்களில் எஞ்சி உள்ளது பசுவதை மட்டுமே என்று வேதம் அறிந்தவன் பரிகாசம் செய்கிறான்.

**விளக்கம்** - நாம் செய்யும் கர்மங்களை "ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம்" என்று கூறி நிறைவு செய்வதைக் காண்கிறோம். இது போன்று சாஸ்திரங்களில் கூறப்பட்ட யாகம் முதலியவற்றை "ஸர்வம் க்ருஷ்ண பாதுகார்ப்பணம்" என்று கூறவேண்டும் என்றார்.

48 ஜநயிதும் அலம் அர்க்யம் தைத்யஜித் பாதரக்ஷே
நமதி மஹதி தேவே நாகஸிந்தோ: விசீர்ணா:
முஹு: அஹிபதி சூடா மௌளிரத்ந அபிகாதாத்
பரிணத லகிமாந: பாதஸாம் ஊர்மய: தே

**பொருள்** - அசுரர்களை அழித்த க்ருஷ்ணனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னைச் சிவன் அடிக்கடி வணங்கிச் சேவிக்கிறார். அப்போது அவரது தலையில் உள்ள உயர்ந்த நாகத்தின் இரத்தினக் கல்லானது, அவரது தலையில் உள்ள கங்கை நீரை மோதுகிறது. இதனால் அந்த நீர் உன் மீது சிறிதுசிறிதாக விழுகிறது. இதனைக் காணும்போது உன்னை அர்க்ய நீர் விட்டு ஆராதிப்பது போன்று உள்ளது.

49 பதஸரஸிஜயோ: த்வம் பாதுகே ரங்கபர்த்து:
மநஸி முநிஜநாநாம் மௌளிதேசே ச்ருதீநாம்
வசஸி ச ஸுகவீநாம் வர்த்தஸே நித்யம் ஏகா
தத் இதம் வகதம் தே சாச்வதம் வைச்வரூப்யம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீ ஒருவளாக இருந்தபோதிலும் ஒரே நேரத்தில் - ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகள், ரிஷிகளின் மனம், வேதங்களுடைய தலைப்பாகமாகிய வேதாந்தங்கள், தூய கவிஞர்களின் வாக்கு - என்று பல இடங்களில் வாசம் செய்கிறாய். எனவே உனது சரீரம் கண்ணனுடைய சரீரம் போன்று ஒரே நேரத்தில் பலவாக உள்ளது என்று த்யானம் செய்கின்றனர்.

**விளக்கம்** - ஒரு பொருள் ஒரே நேரத்தில் பலவாகத் தோற்றம் அளிப்பது வியப்பு அல்லவா? இங்கு பாதுகை பல தன்மைகளில் உள்ளது. இதனைக் காணும்போது ராஸலீலை நேரத்தில் கண்ணன் பலவாகத் தோற்றம் எடுத்தது போன்றும், அர்ஜுனனுக்கு விச்வரூபம் காண்பித்தபோது பலவாகத் தோன்றியது போன்றும் உள்ளது.

50 பரிஸர விநதாநாம் மூர்த்நி துர்வர்ண பங்க்திம்
பரிணமயஸி சௌரே: பாதுகே த்வம் ஸுவர்ணம்
குஹகஜந விதூரே ஸத்பதே லப்த வ்ருத்தே:
க்வநு கலு விதித: தே கோப்யஸௌ தாதுவாத:

**பொருள்** - பாதுகையே! உன்னைத் தங்கள் தலைகளில் ஏற்றுக்கொண்டவர்களுக்கு நீ செய்வது என்ன? அவர்கள் தலைகளில் கெட்ட எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளவற்றை (தலை எழுத்து) தங்கத்தால் எழுதப்பட்ட நல் எழுத்துக்களாக நீ மாற்றி விடுகிறாய். உன்னைத் தீய மக்கள் அண்டிவிடாதபடி நீ வெகு தூரத்தில் உள்ளாய்; இப்படிப்பட்ட ரஸவாதவித்தையை நீ எங்கு கற்றாய்?

**விளக்கம்-** சாதாரண பொருள் ஒன்றைத் தங்கமாக மாற்றும் வித்தைக்கு ரஸவாதம் என்று பெயர். இங்கு மக்களின் தலை எழுத்துக்கள் சாதாரணமாக உள்ளன. ஆனால் பாதுகையைத் தங்கள் தலையில் ஏற்பவர்களின் தலை எழுத்தானது தங்கமாக மாறி விடுகிறது. இதனால் அவர்களும் இந்த உலகத்தில் தங்கம் போன்று அனைவராலும் போற்றும்படியாக மாறிவிடுகின்றனர்.

51 பலி மதந விஹாராத் வர்த்தமாநஸ்ய விஷ்ணோ:
அகிலம் அதிபதத்பி: விக்ரமை: அப்ரமேய:
அவதிம் அநதிகச்சந் பாபராசி: மதீய:
ஸமஜநி பதரக்ஷே ஸாவதி: த்வத் மஹிம்நா

**பொருள்** - பகவானின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மஹாபலியின் கர்வத்தை அடக்குவதற்காக ஒரு விளையாட்டைச் செய்வது போன்று, எம்பெருமான் மிகவும் சர்வசாதாரணமாக ஓங்கி வளர்ந்தான். அப்போது அவனுடைய திருவடிகளால் அனைத்து உலகங்களையும் அளக்க முயன்றான். ஆனால் அவனால் இயலவில்லை. இதன் காரணம் - எல்லையற்ற பெருங்கூட்டமாக எனது பாவங்கள் இந்த உலகில் இருந்தன; இவற்றை அவனது திருவடிகளால் அளக்க இயலாதபோது, உனது வலிமையால் அவை அழிந்துவிட்டன. இதன் பின்னர் பகவானால் அனைத்தையும் அளக்க இயன்றது.

**விளக்கம்** - இங்கு அனைத்து அண்டங்களையும்விட தனது பாவங்களின் பரப்பளவு அதிகம் என்கிறார். அதனை த்ரிவிக்ரமனால் அளக்க இயலவில்லை. அப்போது பாதுகைகள் தனது தலையில் பட்டன(கடந்த ச்லோகமும் காண்க). அதன் மூலம் தனது பாவங்கள் அழிந்தன என்றும்,

எம்பெருமானால் அதன் பின்னரே அளக்க இயன்றது என்றும் கூறுகிறார். திருவடிகளைவிட பாதுகைகளுக்கு உள்ள மேன்மை மீண்டும் கூறப்பட்டது.

52 தடபுவி யமுநாயா: தஸ்துஷீ யத் நிவேசாத்
வஹதி நிகமசாகா வைபவம் நீபசாகா
பதகமலம் இதம் தத் பாதுகே ரங்கபர்த்து:
த்வயி பஜதி விபூதிம் பச்ய சாகநுசாகாம்

**பொருள் -** பாதுகையே! யமுனையின் கரைகளில் உள்ள கடம்ப மரங்கள் அனைத்திலும் க்ருஷ்ணனின் அழகான திருவடிகள் பதிந்தன. இதனால் அந்த மரங்கள் அனைத்தும் வேதங்களுக்கு ஒப்பான பெருமையைப் பெற்றன. பல சாகைகள் உடைய வேதங்கள் போன்று பல கிளைகளுடன் இந்த மரங்கள் உள்ளன. அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் தாமரை மலர் போன்ற சிறிய அழகிய திருவடிகள் உன்னுடன் உள்ளதால் மேலும் பெருமை அடைகின்றன.

**விளக்கம் -** கண்ணனின் திருவடிகள் பட்டவுடன் மரங்களும் வேத அந்தஸ்து பெற்று விடுகின்றன. அதன் கிளைகள் வேதங்களின் சாகைகள் போன்றதாகின்றன. அப்படிப்பட்ட திருவடிகள், பாதுகை தங்கள் மீது பட்டவுடன் மேலும் பெருமை அடைகின்றன. திருவடிகளுக்கு இந்த வல்லமை உண்டானது பாதுகையால்தானோ?

53 சிரஸி விநிஹிதாயாம் பக்திநம்ரே பவத்யாம்
ஸபதி தநுப்ருத: தாம் உந்நதிம் ப்ராப்நுவந்தி
மதுரிபு பதரக்ஷே யத்வசேநைவ தேஷாம்
அநிதரஸுலபம் தத் தாம ஹஸ்தாபசேயம்

**பொருள் -** மது என்ற அசுரனை அழித்த நம்பெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! பக்தியால் வணங்கி, உன்னைத் தங்கள் தலையில் ஏற்றுக் கொள்பவர்கள் மிகவும் உயர்ந்த மேன்மையை அடைகின்றனர். இத்தகைய மேன்மை எது? உனது தொடர்பு அற்றவர்கள் அடைய இயலாததாக உள்ளதும், பரமபதம் என்ற உயர்ந்த இடத்திலிருந்து இங்கு வந்ததும், நம்பெருமாள் என்று போற்றப்படுவதும் ஆகிய உயர்ந்த ஜோதியை அவர்கள் தங்கள் கைகளால் எட்டிப் பிடிக்கின்றனர்.

**விளக்கம் -** நமது கைகளில் எளிதில் சிக்காமல் உள்ள நம்பெருமாள், அவனது சடாரியை நமது தலையில் தரித்துக் கொண்டால் நமக்கு வசப்படுவான் என்று கருத்து.

54 ஸக்ருதபி புவநே அஸ்மிந் சார்ங்கிண: பாதுகே த்வம்
உபநிஷத் அநுகல்பை: உத்தமாங்கை: ததாநா:
நரகம் இவ மஹாந்த: நாகம் உல்லங்கயந்த:
பரிஷதி நிவிசந்தே ப்ராக்தநாநாம் குரூணாம்

**பொருள்** - சார்ங்கம் என்ற வில்லை ஏந்திய இராமனின் பாதுகையே! உபநிஷத்துக்களுக்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ள உன்னை, இந்த உலகில் உள்ள ஒரு சிலர் தங்கள் தலையில் ஏற்றுக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்கள் நரகத்தை கடப்பது போன்று மிகவும் எளிதாக ஸ்வர்கத்தையும் கடந்து, தங்களது ஆசான்கள் உள்ள மோக்ஷ சபையை அடைந்து விடுகின்றனர்.

55 சம தம குண தாந்த உதந்த வைதேசிகாநாம்
சரணம் அசரணாநாம் மாத்ருசாம் மாதவஸ்ய
பதகமலம் இதம் தே பாதுகே ரக்ஷ்யம் ஆஸீத்
அநுதயநிதாநாநாம் ஆகமாநாம் நிதாநம்

**பொருள்** - பாதுகையே! கண் முதலான இந்த்ரியங்களைத் தன்வயப்படுத்தி அடக்குதல்; மனதைக் கட்டுப்படுத்தல்; தயை போன்ற குணங்கள் கொண்டிருத்தல்; பக்தியுடன் இருத்தல் - இது போன்ற உயர்ந்த தன்மைகளுக்கு மாறுபட்டவர்களாக நாங்கள் உள்ளோம். எங்களை இவ்வாறு உள்ள நிலையில் இருந்தும் காப்பாற்றுவது எது? தோற்றம் மற்றும் அழிவு போன்றவை இல்லாமல், என்றும் உள்ள வேதங்களுக்கும் புதையல் போன்று உள்ள நம்பெருமாளின் திருவடிகளே எங்களைக் காக்கின்றன. அப்படிப்பட்ட உயர்ந்த திருவடிகளையே நீ காப்பாற்றுகிறாய்.

**விளக்கம்** - நமக்காக திருவடிகள் உள்ளன. அந்தத் திருவடிகளுக்காகவும், நம்பெருமாளுக்காகவும் கவலைப்பட யாரேனும் உள்ளனரா என்றால் லக்ஷத்தில் ஒருவர் கூடக் கிடைப்பது அபூர்வம். இதனைக் கண்ணனும் கீதையில் தெளிவாகவே கூறுகிறான் (மஹாத்மா துர்லபம்). இவ்விதம் லக்ஷத்தில் ஒருவன் நம்பெருமாளின் நலத்தைப் பற்றி நினைக்கிறான் அல்லவா? அந்த ஒருவனுக்காக மட்டுமே அவன் பெரியகோயிலில் இன்னமும் உள்ளான். இவ்விதம் அல்லாமல் அவனது திருவடிகளை எப்போதும் பாதுகாத்து நிற்பதால், திருவடிகளைக் காட்டிலும் பாதுகைக்கு மேன்மை அதிகம் என்றார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

56 பரிசித பத பத்மாம் பாதுகே ரங்கிண: த்வம்
த்ரிபுவந மஹநீயாம் ஸாதரம் தாரயந்த:
நிஜசிரஸி நிலீநம் தேவி மந்தாரமால்யம்
நிகமபரிமளை: தே வாஸயந்தீவ தேவா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து வேதங்களாலும் போற்றப்படும் திருவடிகளில் நீ உள்ளாய். மூன்று உலகங்களும் உன்னைக் கொண்டாடிப் போற்றுகின்றன. இதனைக் கண்ட தேவதைகள் தங்கள் தலையில் அணிந்துள்ள மலர் மாலைகளைக் காட்டிலும் அதிக மணம் உள்ள உன்னைத் தங்கள் தலைகளில் ஏற்றுக்கொள்கின்றனர்.

**விளக்கம்** - வேதங்கள் நம்பெருமாளை - ஸர்வகந்த: - என்று போற்றுகின்றன. ஆக அனைத்து நறுமணங்களுக்கும் இருப்பிடமாக அவன் உள்ளான். அவனது நறுமணங்கள் அவனது திருவடிகளில் எப்போதும் உள்ள உனக்கும் வந்துவிடுகிறது. இதன் மூலம் அவனைப் போன்றே நீ நறுமணம் வீசுவதால், தங்கள் தலையில் உள்ள மலர்களை விட நீ உயர்ந்தவள் என்று உணர்ந்து, உன்னை தேவதைகள் தங்கள் தலையில் ஏற்றுக்கொள்கின்றனர்.

57 கநகஸரித் அநூபே கல்ப வ்ருக்ஷஸ்ய பூஷ்ணோ
பத கிஸலய லக்நா பாதுகே மஞ்ஜரீ த்வம்
பரிணதி மதுராணாம் யா பலாநாம் ஸவித்ரீ
வஹஸி நிகமப்ருந்தை: ஸம்பதம் ஷட்பதாநாம்.

**பொருள்** - பாதுகையே! காவேரி நீரால் சூழப்பட்ட திருவரங்கத்தில் அழகிய மணவாளன் சயனித்துள்ளான். அவனைக் காணும் போது கற்பக மரம் போன்று உள்ளான். அவனது திருவடிகள் அந்த மரத்தின் தளிர் இலைகள் போன்று அழகாக உள்ளன. அப்படிப்பட்ட திருவடிகள் என்னும் தளிர் இலைகளின் நடுவே உள்ள அழகான மலர்கள் போன்று நீ உள்ளாய். உன்னிடம் இருந்து நன்மையை அளிக்கவல்ல பலன்கள் என்ற பழங்கள் தோன்றுகின்றன. இதனை அறித்த வேதங்கள் வண்டுகள் போன்று மலராகிய உன்னையே சுற்றுகின்றன போலும்.

**விளக்கம்** - இங்கு பெரியபெருமாளின் திருமேனியை ஒரு கற்பக மரமாக வர்ணித்தார். அவனது திருவடிகள் தளிர் இலை போன்று உள்ளன என்றார். இங்கு ஒரு சந்தேகம் எழலாம். பொதுவாக எம்பெருமானின் திருவடிகள் தாமரை போன்று சிவந்த மலராகக் கூறுவது அல்லவா வழக்கம், இங்கு இவர் இலை போன்று என எவ்வாறு கூறுகிறார்? தளிர் இலைகளும் சிவந்து காணப்படும் என்பது ஒரு பதிலாகும்.

**மற்றொரு விளக்கம்** - பெரியபெருமாளின் திருவடிகளின் நிறம் எப்போதும் ஆழ்வார் கூறியபடி - பச்சை மாமலைபோல் மேனி - என்பதற்கு ஏற்ப சற்றே பச்சை நிறமே, அதனால்தான் இலைகளாகத் திருவடியைக் கூறினார்; ஆனால் சிவந்த மலர் போன்ற அவனது பாதுகைகள் அவனுடன் எப்போதும் ஒட்டியபடி உள்ளதால், அவற்றையே திருவடி என்று நினைத்து மயங்குபவர்கள் உண்டு - என்றும் கூறலாம்.

58 பரிகலயஸி சேத் மாம் பத்மவாஸா நிஷேவ்யே
பதகமலயுகே த்வம் பாதுகே ரங்கபர்த்து:
அவிதித நிகமாநாம் நூநம் அஸ்மாத்ருசாநாம்
அகடித கடநீ தே சக்தி ஆவிஷ்க்ருதா ஸ்யாத்

**பொருள்** - பாதுகையே! மஹாலக்ஷ்மியால் எப்போதும் வணங்கியபடியும் வருடப்பட்டும் இருக்கும் பெரியபெருமாளின் தாமரை போன்ற திருவடிகளில் நீ என்னைச் சேர்க்க வேண்டும். இவ்வாறு நீ செய்தாய் என்றால் உனக்கு மிகவும் திறமை அதிகம் என்று பொருள் - ஏன்? வேதம் போன்றவற்றை அறியாத என் போன்றவர்கள் அடைய இயலாதபடி உள்ள இடம் பகவானின் திருவடியாகும். அதனை நீ அடைய வைக்கிறாய். இந்த உலகில் ஒருவரால் அடைய இயலாத ஒரு பொருளை அடைய வைப்பதற்குத் திறமை வேண்டும் அல்லவா?

**விளக்கம்** - ஸ்ரீரங்கநாச்சியார் மட்டுமே மிகவும் உரிமையுடன், எளிதாகப் பற்றும் இடமாக நம்பெருமாளின் திருவடிகள் உள்ளன. அந்தத் திருவடிகளை நம்மைப் போன்ற, பலவிதங்களிலும் தாழ்ந்தவர்கள் சிந்திப்பது என்பதே இயலாத செயலாகும். அப்படி உள்ளபோது அதனை நாம் அடையும்படி ஒருவர் செய்கிறார் என்றால், அவர் எத்தனை திறமையும் வல்லமையும் உடையவராக இருக்கவேண்டும் என்று ஸ்வாமி தேசிகன் வியந்து கூறுகிறார்.

59 ச்ருதிசத சிர: சூடா அபீடே நிபீடயிதும் க்ஷமே
துரித ஸரிதாம் ஓகாந் ஏதாந் அமோக விஸர்ப்பிண:
க்ரம பரிணமத் வேத: ச்ரேணீ சிகா மணி கட்டநா
மஸ்ருணித தலே ரங்கக்ஷோணீ ப்ருத: மணிபாதுகே

**பொருள்** - வேதங்களின் தலைகளில் உள்ள உபநிஷத்துக்கள், வேதங்களுக்கு ஆபரணமாக உள்ளன. இப்படிப்பட்ட உபநிஷத்துக்களின் தலைகளுக்கு பெரியபெருமாள் ஆபரணமாக உள்ளான். இவன் பாதுகைகளின் தலைகளுக்கு ஆபரணம் போன்று உள்ளான். உயர்ந்த கற்கள் இழைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள், தங்கள் மீது அடிக்கடி சிரம் தாழ்த்தி வணங்கும் தேவர்களின் தலையில் உள்ள இரத்தினக்கற்கள் கொண்டு வழவழப்பாக உள்ளன. வெள்ளம்

போன்று வேகமாகப் பரவியபடி உள்ள எனது பாவங்கள் என்ற வெள்ளத்தைத் தடுக்க, இந்தப் பாதுகைகள் மட்டுமே உதவும்.

**விளக்கம்** - நம்பெருமாளின் பாதுகைகளின் தேவர்கள் எப்போதும் தலையைத் தாழ்த்தி வணங்கியபடி உள்ளநர். இதனால் அவர்களின் க்ரீடங்களில் உள்ள இரத்தினக்கற்கள், பாதுகைகளின் உள்ள மிக உயர்ந்த கற்களில் உராய்கின்றன. இதனால் பட்டை தீட்டப்பட்டது போன்று பாதுகையில் உள்ள கற்கள் மேலும் வழுவழுப்பாகின்றன. அந்தப் பாதுகைகள் எனது பாவம் என்னும் வெள்ளம் பாய்ந்து வராமல், தங்களிடம் உள்ள அந்தக் கற்கள் மூலமாகத் தடுக்கின்றன.

60 ஜகத் ஜநந ரக்ஷண க்ஷபண ஸங்கிந: ரங்கிண:
பவித்ரதமம் ஆத்ரியே பகவத: பதத்ர த்வயம்
சிவத்வ கரண க்ஷம த்ரிதிவஸிந்து ஸம்பந்திநம்
ப்ரதாவ்ய சரணம் நிஜம் ப்ரணிததாதி யத்ர ப்ரபு:

**பொருள்** - இந்த உலகங்கள் அனைத்தையும் படைத்து, காத்து, ப்ரளயம் ஏற்படும்போது தன்னுள் லயிக்கும்படிச் செய்பவன்; பகவான் என்ற பதத்திற்கு ஏற்றவன் - இப்படிப்பட்டவன் ஸ்ரீரங்கநாதன்ஆவான். அவனுடைய தூய்மையான பாதுகைகளை நான் வணங்குகின்றேன், அவற்றை எனக்கு ஆதரவாகக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதன் செய்வது என்ன? ப்ரம்மனால் த்ரிவிக்ரமனின் திருவடிகளைக் கழுவிய நீரைத் தலையில் ஏற்றதால் சிவன் மங்களம் அடைந்தார். அத்தகைய தூய்மையான திருவடிகளைப் பாதுகைகளின் மீது வைக்கும் போது ஸ்ரீரங்கநாதன் தனது திருவடிகளைக் கழுவிய பின்னரே வைக்கிறான்.

**விளக்கம்** - நம்பெருமாள் த்ரிவிக்ரமனாக உயர்ந்தபோது, அவனது திருவடிகளை ப்ரம்மன் புனிதமான கங்கையைக் கொண்டு கழுவினான். ஆயினும் நம்பெருமாள் தன்னுடைய சஞ்சார காலங்களில் பாதுகைகளைத் தன் திருவடிகளில் சேர்ப்பதற்கு முன்பாக, திருவடிகளை மிகவும் சுத்தமாகக் கழுவிக் கொள்கிறான். பாதுகைகள் அத்தனை புனிதமானவை என்று கருத்து.

61 யத் அத்வரபுஜாம் சிர: பதயுகம் ச ரங்கேசிது:
த்ருடம் கடயிதும் க்ஷமம் பவதி சேஷ சேஷித்வத:
சிரஸ்த்ரம் இதம் அஸ்து மே துரிதஸிந்து முஷ்டிந்தயம்
கதத்வ விஹதி க்ஷமம் கிம் அபி தத் பதத்ரத்வயம்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** இந்த இரண்டு பாதுகைகளும் தேவர்களுடைய தலைகள் மற்றும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் ஆகியவற்றுக்குப் பெருமை சேர்க்கிறது; பெருமை அடைகிறது - அதாவது தேவர்களின் தலைக்குப் பெருமை சேர்க்கிறது, ஸ்ரீரங்கநாதனின் திருவடிச் சேர்க்கையால் தான் பெருமை அடைகிறது. மேலும் பாவங்கள் அனைத்தையும் தனது ஒரே பிடிக்குள் அடக்கி விடுகிறது. இதனால் தீய வழிகளில் செல்வது தடுக்கப்படுகிறது. இப்படியாக இன்ன பெருமைகள் என்று கூற இயலாத பல பெருமைகள் கொண்டதாக உள்ளது. ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளையே பாதுகாக்கும் பெருமை உள்ள பாதுகைகள் எப்போதும் எனது தலையில் இருக்க வேண்டும்.

**விளக்கம் -** இங்கு உள்ள சேஷம், சேஷி என்பதற்கு "அடிமை, எஜமானன்" என்னும் பொருள் அல்லாமல், "பெருமைப்படுத்துகிற பொருள், பெருமைபடுத்தப்பட்ட பொருள்" என்றும் கூறுவார்கள். பாதுகைகளைத் தங்கள் தலைகளில் வைத்துக் கொண்டதால் மிகுந்த பெருமை கிட்டுவதால், பாதுகையானது பெருமைப்படுத்தும் பொருள் எனலாம். திருவடிகளுக்கே பாதுகைகள் பாதுகாப்பாக உள்ளதால், பெருமைபடுத்தப்பட்ட பொருள் என்றும் கூறலாம்.

62 ஸமுத்கக்ஷிபதி சேதஸி ஸ்திர நிவேசிதா தாவகீ
முகுந்த மணிபாதுகே முஹு: உபாஸநா வாஸநா
உதர்க்க பரிகர்க்கசாந் உபரிபர்வணா கர்விதாந்
அநர்த்த சத கர்ப்பிதாந் அமரசம்பளீ விப்ரமாந்

**பொருள் -** முகுந்தனாகிய க்ருஷ்ணனின் மணிகள் பதிக்கப்பெற்ற பாதுகையே! மனதில் எப்போது நிலையாக நீ இருக்கும்படியாக த்யானிக்கவேண்டும். இதன் பலன் என்ன? பொறுக்க முடியாத துன்பம் ஏற்படுத்தக் கூடியதும், தாழ்மையாகக் கருதப்படுவதும், பல உபத்திரவங்களை உடையதும் ஆகிய தேவலோகப் பெண்களுடன் விளையாடுதல் போன்றவை கூட வெறுக்கும் பக்குவம் உண்டாகிவிடும் . உன்னைப் பற்றிய த்யானம், அவற்றை மறக்கும்படிச் செய்து விடுகிறது.

**விளக்கம் -** பாதுகைகளைத் தொடர்ந்து த்யானிக்கும்போது, மனதி கெட்ட எண்ணங்கள் உதிப்பதில்லை. கெட்ட எண்ணங்கள் ஏற்படாமல் உள்ளபோது, தீயசகவாசம் உண்டாவதில்லை. தீய நட்பு ஏற்படாதபோது, பகவத் சிந்தனை அதிகரிக்கிறது.

63 விகாஹந்தே ரங்கக்ஷிதிபதி பதத்ராயிணி ஸக்ருத்
வஹந்த: த்வாம் அந்தர் விநிஹத குசேல வ்யதிகரா:
மது உத்தாம் ஸ்தம்பேரம் கரட நிர்யத் மதுஜரீ
பரீவாஹ ப்ரேங்கத் ப்ரமர முகாராம் அங்கணபுவம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! குசேலரை மனதில் நினைத்தபடி உன்னைத் தங்கள் தலையில் வைத்துக்கொண்டால் போதுமானது. அவர்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது அங்கு கொழுப்பினால் பருத்த யானைகள் கட்டப்பட்டுள்ளதையும், அவற்றின் மத ஜலங்களில் வண்டுகள் ரீங்காரம் செய்தபடி உள்ளதைக் காண்பார்கள் (யானை வீட்டில் உள்ளது என்றால் ஐஸ்வர்யம் நிறைந்துள்ளது என்று பொருள்).

**விளக்கம்** - உன்னைத் தலைகளில் ஏற்பவர்கள் பெறுவது என்ன? க்ருஷ்ணனிடம்தான் ஏதேனும் பெற்றோமா இல்லையா என்று அறியாமல் குசேலர் இருந்தார். இப்படியாகத் தாங்கள் பெற்றது என்ன என்று அறியாதபடி அவர்களுக்கு அதிக ஐச்வர்யம் அளித்து விடுகிறாய். அவர்கள் வீடு திரும்பும் போது மதயானைகள் கட்டப்பட்டுள்ளதைக் காண்கின்றனர் (ஐச்வர்யம் வந்தது என்று பொருள்).

64 அதிதைவதம் ஆபதத்ஸு கல்பேஷு அதிகாரம் பஜதாம் பிதாமஹாநாம்
அபிரக்ஷது ரங்கபர்த்து: ஏஷா கருணா காசந பாதுகாமயீ

**பொருள்** - இனி வரப்போகும் கல்பங்கள் அனைத்திலும் ப்ரம்ம பட்டத்தை அடையப்போகும் அனைவராலும் ஆராதிக்கத் தகுந்தது; ஸ்ரீரங்கநாதனின் எல்லை காண இயலாத கருணை என்பதே உருவமாக உள்ளது - இப்படிப்பட்டது எது என்றால், ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே ஆகும். அந்தப் பாதுகைகள் நம்மைக் காக்கட்டும்.

**விளக்கம்** - ப்ரம்ம பட்டம் என்பது பாதுகைகளைத் தங்கள் தலையில் ஏற்றவர்களுக்கு மிகவும் எளிதாக, தானாகவே கிட்டக்கூடியது ஆகும். இங்கு நம்பெருமாளின் கருணை என்பதே பாதுகை என்னும் வடிவு எடுத்ததோ என்று வியந்து கூறுகிறார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

65 த்ருவம் இந்த்ரிய நாக ச்ருங்கலா வா நிரய த்வார நிவாரண அர்க்களா வா
அநபாய பத ஆதிரோஹிணீ வா மம ரங்கேச விஹார பாதுகே த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் லீலைகள் அனைத்திலும் பங்கு பெறும் பாதுகையே! எனது இந்த்ரியங்கள் யானை போன்ற வலுவுடன் என்னை இழுக்கும்போது, அவற்றை அடக்கும் சங்கிலி போன்று நீ உள்ளாய். நான் நரகத்தின் வாசல் நோக்கிச் செல்லாதவண்ணம், அந்த நரகத்தின் வாசல் கதவின் தாழ்ப்பாளாக நீ உள்ளாய். மேலும், அழிவே இல்லாத ஸ்ரீவைகுண்டத்திற்கு நான் சுலபமாக ஏறிச் செல்ல உதவும் ஏணியாகவும் நீ உள்ளாய்.

**விளக்கம்** - நரகம் செல்வதற்கு, பாவங்கள் பல செய்வதே காரணமாஇ விடுகிறது. இந்தப் பாவங்களுக்கான காரணம் இந்த்ரியங்களை அதன் போக்கில் திரியவிடுவதே ஆகும். ஆக, முதலில் பாதுகைகள் நம்முடைய இந்த்ரியங்களை அடக்குகின்றன. இதன் மூலம் பாவம் செய்வது தடுக்கப்படுகிறது. இதனையும் மீறி ஏதோ சில காரணங்களால் நரகம் செய்ய நேரிட்டாலும், பாதுகைகள் நரகத்தின் வாயிலில் நின்று, நம்மைத் தடுத்து விடுகின்றன. இப்படியாக நாம் ஸ்ரீவைகுண்டம் செல்ல எளிய ஏணியாக பாதுகைகள் உள்ளன.

66 சரணாகத ஸார்த்த வாஹ சீலாம் ச்ருதி ஸீமந்த பத ப்ரஸாதந அர்ஹம்
அதிரங்கம் உபாஸ்மஹே முராரே: மஹநீயாம் தபநீய பாதுகே த்வாம்

**பொருள்** - முரன் என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் பாதுகையே! வேதங்களுக்கு அலங்காரமாக உள்ள வேதாந்தங்களால் பூஜிக்கத் தகுந்தபடி நீ உள்ளாய். நீ செய்வது என்ன? உன்னை அண்டும் அனைவரையும், பெரிய பெருமாளிடம் அழைத்துச் சென்று, அவர்களுக்குச் சரணாகதி ஏற்படும்படிச் செய்கிறாய். இப்படிப்பட்ட உன்னை ஸ்ரீரங்க விமானத்தில் நாங்கள் காண்கிறோம்.

**விளக்கம்** - தன்னிடம் வந்தவர்களை அன்புடன் பெரியபெருமாளிடம் அழைத்துச் சென்று, அவனுடைய ஸம்பந்தம் என்றும் இருக்கும்படிச் செய்துவிடுகிறாள். ஆக, பாதுகை எப்போதும் பெரியபெருமாளின் ஸன்னதியிலேயே உள்ளாள்.

67 இஹ யே பவதீம் பஜந்தி பக்த்யா க்ருதிந: கேசவ பாதுகே நியுக்தா:
கத்யாம்ப திரோஹிதம் த்ருதீயம் நயநம் த்ரீணி முகாநி வா கிம் ஏஷாம்

**பொருள்** - அழகான சுருண்ட தலைமுடி உடைய க்ருஷ்ணனின் பாதுகையே! இந்த உலகில் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள், உன்னைப் பக்தியுடன் வணங்கியபடி உள்ளனர். இவர்களுடைய மூன்றாவது கண், மற்ற மூன்று முகங்கள் மறைந்து உள்ளதோ?

**விளக்கம்** - பாதுகையை ஆராதிப்பவர்களுக்கு சிவன் என்ற பதவி, ப்ரம்மன் என்ற பதவி தேடி வரும். மூன்று கண்கள் என்பது சிவனையும், நான்கு முகங்கள் என்பது ப்ரம்மனையும் குறிக்கும். மூன்றாவது கண் என்றும், வெளியில் தெரிவது தவிர மூன்று தலைகள் என்பதும் இப்பதவிகளைக் குறிக்கும். அந்தப் பதவிகளை அடைய எந்த அளவு உயர்ந்திருக்க வேண்டுமோ, அதே அளவு உயர்ந்தால் மட்டுமே பாதுகை மீது பக்தி உண்டாகும் என்று கருத்து.

68 மதுவைரி பரிக்ரஹேஷு நித்யம் க்ஷமயா த்வம் மணி பாதுகே ஸமேதா
தத் அபி க்ஷமஸே ந கிம் பரேஷாம் த்ரிதஸாதீஸ்வர சேகரே நிவேசம்

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த பெரியபெருமாளின் பாதுகையே! அப்படிப்பட்ட பெரியபெருமாள் உபயோகப்படுத்தும் அனைத்து விதமான பொருள்களிலும் நீயே மிகவும் பொறுமை உடையவளாக உள்ளாய். இவ்வாறு இருந்தாலும், தேவர்கள் தங்கள் தலையில் உன்னைத் தவிர வேறு எதனை ஏற்றுக்கொண்டாலும் நீ ஏன் பொறுத்துக் கொள்ள மறுக்கிறாய்?

**விளக்கம்** - பாதுகையைத் தங்கள் தலைகளில் ஏற்றுக் கொண்ட தேவர்கள், தங்கள் தலையில் க்ரீடம், வெண்குடை போன்றவற்றை ஏற்க மாட்டனர். இதன் காரணம், பாதுகை அந்தச் செயலைப் பொறுக்காது என்பதால் ஆகும்.

69 த்விதயம் ப்ரதியந்தி ரங்கபர்த்து: கதிசித் காஞ்சந பாதுகே சரண்யம்
அபயாந்விதம் அக்ரிமம் கரம் வா பவதீ சேகரிதம் பதாம்புஜம் வா

**பொருள்** - தங்கத்தால் இழைக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகில் உள்ள புண்ணியம் நிறைந்தவர்கள் செய்வது என்ன? அபய முத்திரை காணபிக்கும் நம்பெருமாளின் திருக்கரம், உன்னால் அலங்காரம் செய்யப்பட்ட அவனது தாமரை போன்ற திருவடிகள் - இந்த இரண்டையும் எப்போதும் வணங்கியபடி உள்ளனர். இதனால் தங்கள் கவலைகளை மறந்து அவர்கள் உள்ளனர்.

**விளக்கம்** - நம்பெருமாளின் வலது திருக்கரமானது “அஞ்சேல்” என்று அபயஹஸ்தத்துடன் உள்ளது. அவனது திருவடிகளோ, அதனை அடைந்தவர்களை நழுவவிடாமல் உள்ளது. இந்த இரண்டையும் பற்றுபவர்கள், எதனைக் குறித்தும் கவலை கொள்வதில்லை.

70 பரதாச்வஸநேஷு பாதசப்தம் வஸுதா ச்ரோத்ர ஸமுத்பவ: முநீந்த்ர:
படதி த்வயி பாதுகே தத: த்வம் நியதம் ராமபதாத் அபிந்ந பூமா

**பொருள்** - பாதுகையே! புற்றில் இருந்து தோன்றிய வால்மீகி மஹரிஷி, இராமாயணத்தில் பரதன் மக்களைச் சமாதானப்படுத்தக் கூறிய சொற்களில், உன்னைப் பற்றிக் கூறும்போது திருவடி என்ற பதத்தையே பயன்படுத்துகிறார். இதன் மூலம் உனக்கும் இராமனின் திருவடிகளுக்கும் உள்ள பெருமைகளில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்று புரிகிறது.

**விளக்கம்** - பரதன் மக்களிடம், “இந்தப் பாதுகைகளை இராமனின் திருவடிகளாகவே எண்ணவேண்டும்”, என்றான். இதன் மூலம் பாதுகைக்கு இராமனின் திருவடிகளுக்குச் சமமான பெருமை உள்ளது என்று அறியலாம்.

71 மகுடேஷு நிவிச்ய திக்பதீநாம் பதம் ஏவ ப்ரதிபத்ய தைத்யஹந்து:
பரிரக்ஷஸி பாதுகே பதம் த்வம் க்வநு பித்யேத கரீயஸாம் ப்ரபாவ:

**பொருள்** - பாதுகையே! இந்திரன் முதலான எட்டுத்திக்கிலும் உள்ள பாலர்களின் தலையில் இருந்தபடி அவர்களின் பதவிகளை நீயே காப்பாற்றுகிறாய். அசுரர்களை வதம் செய்யும் பெரியபெருமாளின் திருவடிகளில் நீ அமர்ந்து கொண்டு, அந்தத் திருவடிகளின் பெருமைகளையும் நீயே காப்பாற்றுகிறாய். உன் போன்ற பெரியோர்கள், அனைவரிடத்திலும் ஒன்று போன்று அல்லவா இருப்பார்கள்?

**விளக்கம்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பதிலிருந்து, பாதுகைகளைத் தலைகளில் ஏற்கும் தேவர்களின் பதவியைக் காப்பதுவரை, பாதுகையானது ஒரே போன்று செயல்படுகிறாள். பெரியவர்கள் எப்போதும் அனைவரிடத்திலும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் பழகுவது புதுமையா என்ன?

72 ஜகதாம் அபிரக்ஷேண த்ரயாணாம் அதிகாரம் மணிபாதுகே வஹந்த்யோ:
யுவயோ: பரிகர்ம கோடி லக்நம் சரணத்வந்தம் அவைமி ரங்கபர்த்து:


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள் -** உயர்ந்த இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! மூன்று உலகங்களையும் காப்பாற்றுபவள் என்ற பெருமை உடையவளாக நீ உள்ளாய். நீ நம்பெருமாளின் இரண்டு திருவடிகளையும் ஆபரணம் போன்று உனது தலையில் சூட்டியுள்ளாய் போலும்.

**விளக்கம் -** இங்கு யுவயோ: என்று பன்மையில் கூறுவது காண்க. இதன் காரணம் இரண்டு பாதுகைகளையும் கூறுகிறார். ஒரு நாட்டு அரசனுக்கு அவனது மணிமகுடம் பாரமாக இருக்குமா? அது போன்று, மூன்று உலகங்களுக்கும் அரசி போன்று உள்ள பாதுகைக்கு, பெரியபெருமாளின் திருவடிகள் பாரம் அல்லவே.

73 பதரக்ஷிணி வத்ஸலா நிகாமம் ரகுவீரஸ்ய பத அம்புஜாதபி த்வம்
யத் அஸௌ பரத: த்வயா அம்சவத்வாந் ந புந: தாத்ருசம் நாந்வபூத் வியோகம்

**பொருள் -** பெரியபொருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! தாமரை போன்று உள்ள இராமனின் மென்மையான திருவடிகளைவிட உனக்கு மக்கள் மீது ப்ரியம் அதிகம் போலும். அதனால்தான் பரதன் உன்னை ஏற்று வந்த பின்னர், இராமனைப் பிரிந்த துன்பத்திலும், நீ அருகில் உள்ளதால், அந்தத் துன்பத்தை மறந்தான் போலும்.

**விளக்கம் -** திருவடிகளைக் காட்டிலும் வாத்ஸல்யம் அதிகமாக உள்ளது பாதுகையிடமே என்றார். பரதன் இராமனை எத்தனையோ கெஞ்சியபோதிலும், இராமனும் அவனது திருவடிகளும் இரக்கம் கொள்ளவில்லை. ஆனால், பரதன் அழைத்தவுடன் பாதுகைகள் அல்லவோ ஓடி வந்தன? அயோத்தி மக்கள் மீதும், பரதன் மீதும் பாதுகைக்கு இருந்த வாத்ஸல்யம் காரணமாக அல்லவா பாதுகைகள் அயோத்தி திரும்பின? பாதுகைகளுக்குத் திருவடிகள் மீது பற்று அதிகமே; இருப்பினும் நாட்டு மக்கள் மீது பாதுகைகளுக்கு மேலும் பற்று அதிகம் எனலாம்.

74 அபிகம்ய முகுந்த பாதுகே த்வாம் அபநீத ஆதபவாரணை: சிரோபி:
ஹரிதாம் பதய: துராபம் அந்யை: அநக சாயம் அவாப்நுவந்தி போகம்

**பொருள் -** முகுந்தனாகிய க்ருஷ்ணனின் பாதுகையே! உன்னைத் தனது திருவடிகளில் அணிந்தபடி திருவரங்கன் சஞ்சாரம் செய்யும்போது, அவன் பின்னே, தங்களது வெண்கொற்றக்குடைகள் வேண்டாம் என்று ஒதுக்கிய இந்த்ரன் முதலானவர்கள் வருகின்றனர். ஆனால் அவர்களுக்குக் கிட்டுவது என்ன? மற்றவர்களால் எளிதில் அடைய இயலாததும், தோஷங்கள் ஏதும் இல்லாததும், ஒளியை உடையதும் ஆகிய உனது நிழலை அடைந்து, சுகம் பெறுகின்றனர்.

**விளக்கம் -** நம்பெருமாள் திருவீதி சஞ்சாரம் செய்யும்போது, அவன் பின்னே வெயில், மழை என்று குடைகள் பிடித்தபடி செல்வது, க்ரீடம் முதலானவை அணிந்து செல்வது ஆகியவை கூடாது. அவ்விதம் சென்றால் மட்டுமே பாதுகைகளின் நிழலில் நம்மால் ஒதுங்க இயலும்.

75 அபிகம்ய முகுந்த பாதுகே த்வாம் அபநீத ஆதபவாரணை: சிரோபி:
ஹரிதாம் பதய: துராபம் அந்யை: அநக சாயம் அவாப்நுவந்தி போகம்

**பொருள் -** முகுந்தனாகிய க்ருஷ்ணனின் பாதுகையே! உன்னைத் தனது திருவடிகளில் அணிந்தபடி திருவரங்கன் சஞ்சாரம் செய்யும்போது, அவன் பின்னே, தங்களது வெண்கொற்றக்குடைகள் வேண்டாம் என்று ஒதுக்கிய இந்த்ரன் முதலானவர்கள் வருகின்றனர். ஆனால் அவர்களுக்குக் கிட்டுவது என்ன? மற்றவர்களால் எளிதில் அடைய இயலாததும், தோஷங்கள் ஏதும் இல்லாததும், ஒளியை உடையதும் ஆகிய உனது நிழலை அடைந்து, சுகம் பெறுகின்றனர்.

**விளக்கம் -** நம்பெருமாள் திருவீதி சஞ்சாரம் செய்யும்போது, அவன் பின்னே வெயில், மழை என்று குடைகள் பிடித்தபடி செல்வது, க்ரீடம் முதலானவை அணிந்து செல்வது ஆகியவை கூடாது. அவ்விதம் சென்றால் மட்டுமே பாதுகைகளின் நிழலில் நம்மால் ஒதுங்க இயலும்.

76 அபஹாய ஸிதாஸிதாந் உபாயாந்
அரவிந்த ஈக்ஷண பாதுகே மஹாந்த:
த்வத் அநந்யதயா பஜந்தி வ்ருத்திம்
த்வத் அஸாதாரண போக ஸாபிலாஷா:

**பொருள் -** தாமரை போன்று அழகாகவும் சிவந்தும் உள்ள கண்களைக் கொண்ட பெரியபெருமாளின் பாதுகையே! கர்மயோகம் போன்ற உபாயங்கள், மோக்ஷம் முதலான பலன்களை அளிக்கவல்லதா என்ற ஐயம் உள்ளது. இதனால் பெரியவர்கள் இவற்றைக் கைவிடுகின்றனர். உனக்கு மட்டுமே அடிமையாக உள்ள சுகம் அனுபவித்து, உனது கைங்கர்யத்தில் மட்டுமே ஆசை கொண்டு, வேறு யாரையும் நினைக்காமல் உள்ள வைராக்யம் பெறுகின்றனர்.

**விளக்கம் -** எம்பெருமானை அடைய ஆசார்யனே வழி என்பதை இங்கே கூறுகிறார். பாதுகைகள் ஆசார்யனையே குறிக்கும் என்பதால், பாதுகையை அண்டி, அதற்குக் கைங்கர்யம் செய்யும்போது, மோக்ஷ உபாயம் தானே ஸித்திக்கிறது என்று கருத்து.


**Email:**sridharan_book@yahoo.co.in

76 ப்ரணமந்தி ந வா விதே: விபாகாத் ய இமே ரங்கநரேந்த்ர பாதுகே த்வாம்
உபஜாதம் அநுத்தமாங்கம் ஏஷாம் உபயேஷாம் அபி சித்ரம் உத்தமாங்கம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தங்கள் கர்மபலன் காரணமாக உன்னைப் பலர் வணங்குகின்றனர், பலர் வணங்காமல் உள்ளனர். வணங்கியவர்களின் தலைகள் உயர்ந்தும், வணங்காதவர்களின் தாழ்ந்தும் போகின்றன. இது என்ன ஒரு வியப்பான செயல்!

**விளக்கம்** - இங்கு அநுத்தமாங்கம் என்பது இரு பொருள்படும் - உயர்ந்த உடல் உறுப்பு, தாழ்ந்த உடல் உறுப்பு - என்பதாகும். இதன் கருத்து என்ன? தலையானது உடலிலேயே மிகவும் உயர்ந்த உறுப்பாகும். ஆனால், அது தன்னைத் தாழ்த்திக் கொள்ளவில்லை என்றால், தாழ்ந்த மற்ற உறுப்புக்களைவிட தாழ்ந்துவிடும்.
எம்பெருமானின் திருவடி நிலைகளை (சடாரி) ஏற்கும்போது தலை சற்றே சாய்ந்தாலும், அது தற்காலிகமானதே; சடாரி பெற்ற பின்னர் மற்றவர்களைவிட உயர்ந்த நிலை உண்டாகிவிடும். ஆனால், அப்போது தலை வணங்கவில்லை என்றால், அதன் பின்னர் குனிந்த தலை நிமிர இயலாமல் போகும்.

77 தவ கேசவ பாதுகே ப்ரபாவ: மம துஷ்கர்ம ச நநு அநந்தஸாரே
நியமேந ததாபி பச்சிமஸ்ய ப்ரதமேந ஏவ பராபவம் ப்ரதீம:

**பொருள் -** அழகான கேசம் கொண்ட க்ருஷ்ணனின் பாதுகையே! உனது பெருமைகள் மற்றும் நான் செய்யும் பாவங்கள் ஆகிய இரண்டிற்கும் எல்லை காண இயலாது. ஆயினும் முதலாவதாகக் கூறப்பட்ட உனது பெருமைகளின் மூலம், இரண்டாவதாகக் கூறப்பட்ட எனது பாவங்களுக்கு தோல்வி நிச்சயம் என்று கருதுகிறேன்.

**விளக்கம்** - பாதுகையால் முதலில் பாவங்கள் கழிந்து விடுகின்றன. அதன் பின்னர் மோக்ஷம் உறுதியாகிறது. பாதுகைகள் ஆசார்யனாகவே கருதப்படுவதால், ஆசார்யனால் நமது பாவங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு, அவராலேயே மோக்ஷ மார்க்கம் ஸித்திக்கிறது என்று கருத்து.

78 அஸ்த்ர பூஷணதயா ஏவ கேவலம் விச்வம் ஏதத் அகிலம் பிபர்த்தி ய:
அகிலம் ஏந மணிபாதுகே த்வயா ஸ: அபி சேகரதயா ஏவ தார்யதே

**பொருள்** - உயர்ந்த இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பெற்ற பாதுகையே! பெரியபெருமாள் செய்வது என்ன? இந்த உலகங்கள் முழுமையையும் தனது ஆயுதம் போன்றும், ஆபரணம் போன்றும் எந்தவிதமான சிரமமும் இன்றி தரிக்கின்றான். அப்படிப்பட்ட பெரியபெருமாளை நீயும் அதே போன்று, உனது தலையில் எந்தவிதமான சிரமமும் இன்றி, மலர் போன்று வைத்துக் கொள்கிறாய்.

**விளக்கம்** - அனைத்து உலகங்களையும் பெரியபெருமாள் சிரமம் இன்றித் தாங்குகிறான். அப்படிப்பட்ட அவனை, நீ எந்த சிரமும் இன்றித் தாங்குகிறாய். இதன் மூலம் பாதுகைகள், உலகையும் சேர்த்துத் தாங்குகின்றன என்று கருத்து. பெரியபெருமாளை அண்டி இந்த உலகம் இருப்பது போன்று, அவன் பாதுகைகளை அண்டி இருக்கிறான் என்றும் கூறலாம்.

79 ராம பாத ஸஹ தர்ம சாரிணீம் பாதுகே நிகில பாதகச்சிதம்
த்வாம் அசேஷ ஜகதாம் ஈச்வரீம் பாவயாமி பரதாதி தேவதாம்

**பொருள்** - பாதுகையே! நீ பரதன் ஆராதனை செய்வதற்கு ஏற்ற இராமனின் பாதுகையாக உள்ளாய். உன்னை இராமன் எப்போதும் தனது திருவடிகளில் வைத்துள்ளான். அனைத்து பாவங்களையும் நீ (இராமனின் தொடர்பு உள்ளதால்) போக்குகிறாய். இப்படியாக நீ இந்த உலகத்தின் எஜமானியான மஹாலக்ஷ்மி போன்று உள்ளாய்.

**விளக்கம்** - எம்பெருமான் எடுக்கும் திருஅவதாரங்களிலே அவனுடன் பெரியபிராட்டியும் அவதரிப்பது வழக்கம் ஆகும். அவ்விதமாக அவள் தோன்றும்போது, இந்த உலகில் உள்ளவர்களின் பாவங்களை விலக்குவதும் வழக்கம் ஆகும். இதனையே பாதுகையும் செய்வதால், பாதுகைக்கு பெரியபிராட்டியாரை உவமையாகக் கூறுகிறார்.
இங்கு ஒரு கேள்வி எழலாம் - பாதுகையை மஹாலக்ஷ்மியுடன் உவமித்துக் கூறியது சரியா? இது சரியே, பாதுகையின் செயலானது பெரியபிராட்டியின் செயலைக் காட்டிலும் உயர்ந்தே இருந்தது. எப்படி என்றால் - அவனை விட்டுப் பிரியாதவர்கள் பெரியபிராட்டியும் பாதுகையும் ஆவர். ஆனால், நாட்டு மக்களின் நலன் கருதியும், பரதன் மீது கொண்ட வாத்ஸல்யம் காரணமாக, இராமனைப் பிரிந்து பாதுகையன்றோ பரதனுடன் வந்தாள்?

80 சூடா கபால வ்யதிஷங்க தோஷம்
விமோசயிஷ்யந்நிவ விஷ்ணுபத்யா:
க்ருத ஆதர: கேசவ பாதரக்ஷே பிபர்த்தி
பாலேந்து விபூஷண: த்வாம்

**பொருள் -** அழகான கேசம் கொண்ட க்ருஷ்ணனின் திருவடிகளைக் காக்கின்ற பாதுகையே! அழகான சந்திரனைத் தலையில் ஆபரணம் போன்று சூடியுள்ள சிவனின் தலையில், ப்ரம்மனின் அசுத்தமான மண்டை ஓடும் உள்ளது. இதனால் சிவனின் தலையில் உள்ள கங்கையும் அசுத்தமாகிறது. இந்த அசுத்தத்தை நீக்கவே சிவன் உன்னைத் தனது தலையில் வைத்துக் கொண்டு மகிழ்வு கொள்கிறார் போலும்.

**விளக்கம் -** சிவன் தனது தலையில் பாதுகையை ஏற்றது எதற்காக? தான் ப்ரம்மனின் தலையைத் துண்டித்த பாவமானது, பாதுகையைத் தரித்தால் நீங்கும் என்பதாலா? அல்ல. பின்னர் எதற்கு? ப்ரம்மனின் மண்டை ஓடு சிவனின் தலைக்கு வந்து சேர்ந்தவுடன், அங்கிருந்த கங்கையானது தனது மனதில், "நாம் த்ரிவிக்ரமனின் திருவடி ஸம்பந்தம் பெற்றோம். அதனால் நம்மிடம் வருபவர்களின் பாவங்களை நீக்கலாம் என்று எண்ணியிருந்தோம். ஆனால், இவ்விதம் புதிய அசுத்தம் வந்துவிட்டதே", என்று வருத்தம் கொண்டாளாம். இந்த வருத்தத்தை உணர்ந்த பாதுகையானது, அந்த வருத்தம் நீங்கும் விதமாக சிவனின் தலையில் அமர்ந்தாள் என்று கருத்து.

81 த்வயைவ நித்யம் மணிபாதரக்ஷே
ராஜந்வதீ ஸ்ருஷ்டி: இயம் ப்ரஜாநாம்
ஸ்த்ரீ ராஜ்ய தோஷ ப்ரசமாய நூநம்
நிர்த்திச்யஸே நாத விசேஷணேந

**பொருள் -** உயர்ந்த கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகமானது உன் மூலம் நல்ல ஓர் ஆட்சியாளனைக் கொண்டுள்ளது. ஆனால் நீ இவ்வாறு இருந்தால் பெண் அரசாளும் ஸ்த்ரீ ராஜ்யம் என்று குற்றம் சொல்லக்கூடும். அதனால்தான் உன்னைப் பெரியபெருமாள் திருநாமத்துடன் இணைத்துக் கூறுகிறார்கள் போலும்.

**விளக்கம் -** பொதுவாக இந்த உலகில் ஒரு பெண்ணைக் குறிப்பிடும்போது, "இன்னாரின் பத்தினி", என்று கூறுவதே வழக்கமாகும். இதே போன்று இங்கு பாதுகையானது, "ரங்கநாத பாதுகை" என்று பெரியபெருமாளை முன்னிட்டுக் கூறப்படுவதை உணர்த்துகிறார்.

82 பிபர்ஷி நித்யம் மணிபாதுகே த்வம்
விச்வம்பரம் தாம நிஜேந பூம்நா
தவ அனுபாவ: சுளகீக்ருத: அயம்
பக்தை: அஜஸ்வரம் பவதீம் ததாநை:

**பொருள்** - உயர்ந்த இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகம் முழுவதையும் தாங்கி நிற்கின்ற பெரியபெருமாளையே நீ தாங்குகிறாய். இப்படிப்பட்ட உனது உயர்ந்த பெருமை என்பது, உன்னைத் தங்கள் தலைகளில் ஏற்றுக் கொள்ளும் பக்தர்களின் பெருமைக்கு முன்பாக, உள்ளங்கையில் அடக்கப்படும் அளவாகி விடுகிறது.

**விளக்கம்** - பாதுகைகள் நம்பெருமாளைத் தாங்கி நிற்பது கடினமே, அதனால் அவளுக்குப் பெருமை அதிகம் என்று ஒப்புக் கொள்ளவேண்டும். ஆனால்,பாதுகைகளையும் தங்கள் தலைகளில் ஏற்பவர்கள், பாதுகைகள் மீது உள்ள நம்பெருமாளையும் சேர்த்துச் சுமந்து நிற்கின்றனர் என்றல்லவா ஆகிறது? அப்படிப்பட்டவர்களின் பெருமையானது பாதுகைகளின் பெருமையைக் காட்டிலும் உயர்ந்தது என்று கூறவேண்டும் அல்லவா?

83 பரஸ்யபும்ஸ: பத ஸந்நிகர்ஷே
துல்ய அதிகாராம் மணிபாதுகே த்வாம்
உத்தம்ஸயந்தி ஸ்வயம் உத்தமாங்கை:
சேஷாஸமம் சேஷகருத்மதாத்யா:

**பொருள்** - உயர்ந்த இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! பரம்பொருளான பகவானின் திருவடிகளின் கீழே நீயும் ஆதிசேஷன், கருடன் முதலானோர்களும் ஒரே போன்றுதான் கைங்கர்யம் செய்து வருகின்றீர்கள். ஆயினும் ஆதிசேஷன், கருடன் போன்றவர்கள் உன்னைப் பரிவட்டம் போன்று தங்கள் தலைகளில் ஏற்றுக் கொள்கின்றனர். இது உனக்குப் பெருமை அல்லவா?

**விளக்கம்** - பாதுகையானது நித்யஸூரிகளை ஒத்த கைங்கர்யமே எம்பெருமானுக்குச் செய்தாலும், அவர்களை விட இவளுக்கு ஏற்றம் உண்டு என்றார். இதனை, அவர்கள் தங்கள் தலையில் பாதுகையை ஏற்பதன் மூலமும் அறியலாம்.


**Email:**sridharan_book@yahoo.co.in

84 முகுந்த பாதாம் புஜதாரிணி த்வாம்
மோஹாத் அநுத்தம்ஸயதாம் ஜநாநாம்
மூர்த்நி ஸ்திதா துர்லிபயோ பவந்தி
ப்ரசஸ்த வர்ண அவளய: ததீயா:

**பொருள்** - க்ருஷ்ணனின் தாமரை போன்ற மென்மையாக உள்ள திருவடிகளைத் தாங்கும் பாதுகையே! உன்னைத் தங்கள் தலையில் ஏற்பதால் நிகழும் நன்மை என்ன என்று தெரியாமல் சிலர் தங்கள் தலையில் உன்னை ஏற்காமல், புறக்கணித்து விடுகின்றனர். அப்படிப்பட்டவர்களின் தலையில் உள்ள நல்ல எழுத்துக்கள் அனைத்தும் கெட்ட எழுத்துக்களாக மாறிவிடுகிறன.

**விளக்கம்** - அனைவரின் தலைகளில் நல்ல எழுத்துக்களும் உண்டு, தீய எழுத்துக்களும் உண்டு. நம்பெருமாள் செய்வது என்ன? பாதுகையைத் தலையில் ஏற்காதவர்களின் நல்ல எழுத்தை மட்டும் தீய எழுத்தாக மாற்றிவிடுகிறான், தீய எழுத்தை அப்படியே விட்டுவிடுகிறான்.

85 பூமி: ச்ருதீநாம் புவநஸ்ய தாத்ரீ
குணை: அநந்தா விபுலா விபூத்யா
ஸ்திரா ஸ்வயம் பாலயிதும் க்ஷமா ந:
ஸர்வம் ஸஹா சௌரிபதாவநி த்வம்

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ அனைத்து வேதங்களுக்கும் இருப்பிடம் ஆவாய்; உலகம் முழுவதையும் ஆதரித்துக் காப்பாற்றுகிறாய்;தயை முதலிய பலவிதமான எல்லையற்ற குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளாய்; ஐச்வர்யம் நிரம்பப் பெற்றவளாக உள்ளாய்; உனது இயல்பாகவே நன்மையான விஷயங்களில் உறுதியாக உள்ளாய்; எங்களைக் காப்பாற்றுவதிலும், எங்கள் குற்றங்களைப் பொறுப்பதிலும் ஏற்றவளாக உள்ளாய்.

**விளக்கம்** - இந்தச் ச்லோகத்தில் கவிச்சிம்மத்தின் சொற்திறனை சற்று ஆராயலாம். இந்தச் ச்லோகத்தில் உள்ள பூமி, தாத்ரீ, அநந்தா, விபுலா, ஸ்திரா, க்ஷமா மற்றும் ஸர்வம்ஸஹா என்னும் பதங்கள் காண்க. இவை அனைத்தும் பூமியின் வெவ்வேறு பெயர்கள் ஆகும். இதனை மிகவும் லாவகமாகக் கையாண்டதைக் காண்க.

86 ஸ்தைர்யம் குலக்ஷோணி ப்ருதாம் விதத்ஸே
சேஷாதய: த்வாம் சிரஸா வஹந்தி
பதப்ரஸூதா பரமஸ்ய பும்ஸ:
ப்ருத்வீ மஹிம்நா மணிபாதுகே த்வம்

**பொருள்** - உயர்ந்த இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! உயர்ந்த குலத்தில் பிறந்த அரசர்கள் தங்கள் பதவியில் நிலையாக உள்ளதற்கு நீயே காரணமாக உள்ளாய். உன்னைத் தங்கள் தலையில் ஆதிசேஷன் போன்றவர்கள் ஏற்கின்றனர். நீ பரமபுருஷனாகிய நம்பெருமாளின் திருவடிகளுக்குக் கட்டுப்பட்டுள்ளாய். இப்படிப்பட்ட பல பெருமைகள் மூலம் பருத்துள்ளாய் போலும்.

**விளக்கம்** - கடந்த ச்லோகம் போன்றே இங்கும் பாதுகைக்கு பூமியின் தன்மைகளை ஸ்வாமி தேசிகன் ஏற்றிக் கூறுவதைச் சற்று காணலாம். பூமி குல பர்வதங்களை அசையாமல் வைத்துள்ளது; ஆதிசேஷனால் தாங்கப்படுவது; எம்பெருமானின் திருவடிகளிலிருந்து வெளிப்பட்டது (புருஷ ஸூக்தம் காண்க) - இதே தன்மைகளைப் பாதுகைக்கும் கூறியது காண்க.

87 தைத்யாதிபாநாம் பலிநாம் க்ரீடா:
நிக்ஷேபணம் தே யதி நாப்யனந்தந்
ரங்கேச பாதாவநி ரங்கதாம்ந:
ஸோபாநதாம் ப்ராப்ய வஹந்தி அமீ த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! பலம் மிகுந்தவர்களான அசுரர்கள் உன்னைத் தங்கள் தலையில் வைத்துக் கொள்வதை மகிழ்வுடன் ஏற்கவில்லை என்றால் நடப்பது என்ன? அவர்களுடைய க்ரீடங்கள் ஸ்ரீரங்கவிமானத்திற்கு படிகளாக அமைந்து விடுகின்றன.

**விளக்கம்** - உன்னைத் தங்கள் தலைகளின் ஏற்காமல், கர்வம் கொண்ட அசுரர்கள் இருக்கக்கூடும். அவர்களை நம்பெருமாள் செய்வது என்ன? மிகுந்த வலிமை கொண்டவர்களாக இருந்தாலும், அவர்களது க்ரீடங்களை அவன் பறித்துவிடுகிறான். அந்தக் க்ரீடங்களில் உள்ள இரத்தினக் கற்களைத் தனது ஸன்னதியில் உள்ள படிகளில் பதித்துவிடுகிறான். பின்னர், அவற்றின் மீது உன்னை சாற்றிக் கொண்டு கம்பீரமாக நடந்து செல்கிறான்.

88 சேஷ: கருத்மாந் மணிபாதபீட
த்வம் சேதி பாதாவநி விச்வமாந்யா:
துல்யாதிகாரா யதி கிந்து ஸந்த:
த்வாம் ஏவ நித்யம் சிரஸா வஹந்தி

**பொருள்** - பெரியபெருமாள் திருவடியைக் காப்பாற்றும் பாதுகையே! அனைவராலும் போற்றப்படும் கருடன், ஆதிசேஷன், நம்பெருமாள் அவனது ஸிம்ஹாஸனத்தின் மீது அமரும்போது அவன் திருவடிகள் வைக்கின்ற கற்கள் இழைக்கப்பட்ட மேடை, பாதுகையான நீ - ஆகிய அனைவருக்கும் பெரியபெருமாளின் திருவடிகள் மீது சமமான உரிமை உள்ளது. இருப்பினும் பெரியவர்கள் ஏன் உன்னை மட்டும் தங்கள் தலையில் ஏற்கிறார்கள்? உனக்கு உள்ள உயர்வால் அல்லவா?

**விளக்கம்** - ஆதிசேஷன் மீது தனது திருவடிகளை எப்போதும் வைத்தபடி உள்ளான்; கருடனின் திருக்கரங்களின் தன்னுடைய திருவடிகளை வைத்தபடி உள்ளான்; கற்கள் பதிக்கப்பட்ட மேடையில் தனது திருவடிகளை வைத்துள்ளான். இந்த இடங்களில் திருவடிகள் உள்ளதைக் காட்டிலும் பாதுகையின் மீது திருவடிகள் உள்ளபோது, மேலும் அழகும் மேன்மையும் பெறுகின்றன. ஆகவே பாதுகைக்கு சிறப்பு அதிகம் என்றார்.

89 பரஸ்ய பும்ஸ: பரமம் பதம் தத்
பிபர்ஷி நித்யம் மணிபாதுகே த்வம்
அந்யாத்ருசாம் வ்யோமஸதாம் பதாநி
த்வயி ஆயதந்தே யதிதம் ந சித்ரம்

**பொருள்** - உயர்ந்த இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! மிகவும் உயர்ந்ததும், புகழை உடையதும் ஆகிய பரமபுருஷனின் திருவடிகளை எப்போதும் நீ கொண்டுள்ளாய். அப்படி உள்ள பகவானுக்கு அடங்கிய அனைத்து தேவர்களின் ஸ்தானங்களும் உன்னை அண்டியே உள்ளதில் வியப்பு என்ன உள்ளது?

**விளக்கம்** - நம்பெருமாளின் திருவடிகளே பாதுகையைச் சார்ந்து உள்ளபோது, நம்பெருமாளின் திருவடிகளைச் சார்ந்துள்ள தேவர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

90 பாதௌ முராரே: சரணம் ப்ரஜாநாம்
தயோ: தத் ஏவ அஸி பதாவநி த்வம்
சரண்யதாயா: த்வம் அநந்ய ரக்ஷா
ஸம்த்ருச்யஸே விச்ரம பூமி: ஏகா

**பொருள்** - முரன் என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் திருவடிகளைக் காக்கும் பாதுகையே! இந்த உலகம் முழுவதையும் காப்பாற்றும் திறன் உள்ளது பெரியபெருமாளின் திருவடிகளே ஆகும். அப்படிப்பட்ட உயர்ந்த திருவடிகளையே காப்பாற்றுபவளாக நீ உள்ளாய். உன்னைக் காப்பாற்ற வேறு யாரும் அவசியம் இல்லை. ஆகவே “காப்பாற்றுதல்” என்ற செயல் உன்னிடம் தங்கிவிட்டது போலும்.

**விளக்கம்** - நம் போன்றவர்களுக்கு ரக்ஷையாக உள்ளது நம்பெருமாளின் திருவடிகளே ஆகும். ஆனால் அந்தத் திருவடிகளையே பாதுகாதேவி காக்கிறாள் என்றால், அவளைக் காப்பதற்கு யாரும் அவசியம் இல்லை என்றாகிறது அல்லவா? ஆக, பாதுகாப்பு என்பது பாதுகையிடம் அடிமையாக உள்ளது எனலாம்.

91 அந்யேஷு பத்மா கமலாசந அத்யை:
ரங்கேஷு ரங்காதிபதே: ச்ரிதேஷு
பதாவநி த்வாம் அதிகம்ய ஜாதம்
பதம் முராரே: அதிதைவதம் ந:

**பொருள்** - உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தவிர்த்து அவனது மற்ற உறுப்புக்களில் மஹாலக்ஷ்மி, ப்ரம்மன் போன்றோர் உள்ளனர். இவர்கள் அனைவரும் அடைந்து, வணங்கும் அவனது திருவடிகளோ உன்னை அடைந்தது. இதனால் நீ எங்களுக்கு ஆராதிக்க ஏற்றவளாக உள்ளாய்.

**விளக்கம்** - பெரியபெருமாளின் பல்வேறு அவயவங்களில் (உடல் உறுப்புகள்) மஹாலக்ஷ்மி, ப்ரம்மன், ருத்ரன் என்று பலரும் உள்ளனர். ஆயினும் அவர்களை அண்டிய அந்த அவயவங்களுக்கு எந்தப் பெருமையும் உண்டாகவில்லை. ஆனால் அவன் திருவடியானது பாதுகையை அண்டியது. அதன் விளைவு - மற்ற அவயவங்களைவிட மிகவும் உயர்வு பெற்றது. ஆக, பாதுகையை அண்டியவர்கள் தாமாகவே உயர்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

92 க்ஷணம் ஸரோஜ ஈக்ஷண பாதுகே ய:
க்ருதாதர: கிம்குருதே பவத்யா:
அகிஞ்சநஸ்யாபி பவந்தி சீக்ரம்
ப்ரூகிங்கரா: தஸ்ய புரந்தராத்யா

**பொருள்** - தாமரை போன்று அழகாக மலர்ந்த திருக்கண்களை உடைய பெரியபெருமாளின் பாதுகையே! யார் ஒருவன் மிகவும் மகிழ்வுடன் உனக்கு சிறிது நேரம் கைங்கர்யம் செய்தானோ அவன் ஒன்றுமே அறியாத மனிதனாக இருந்தாலும் - அவனது புருவ அசைவைக் கண்டு அவனுக்கு அடிமைத் தொழில் செய்பவர்களாக இந்திரன் முதலானோர் ஆகின்றனர்.

**விளக்கம்** - யார் இருவன் மிகவும் மகிழ்ந்து பாதுகைக்குக் கைங்கர்யம் செய்கிறானோ, அவனுக்கு இந்த்ரன் உட்பட தேவர்கள் அனைவரும் பணி புரிகின்றனர். அவனது புருவம் அசைவதைக் கண்டு, குறிப்பறிந்து நடக்கின்றனர்.

93 வஹந்தி யே மாதவ பாதுகே த்வாம்
ஊஹ்யந்த ஏதே திவி நிர்விகாதா:
ஹம்ஸேந நித்யம் சரதப்ர பாஸா
கைலாஸ கௌரேண ககுத்மதா வா

**பொருள்** - மாதவனின் பாதுகையே! உன்னை யார் தங்கள் தலையில் மிகுந்த பக்தியுடன் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் எந்தவிதமான தடையும் அடைவதில்லை. ஆகாயத்தில் உள்ள சரத் கால மேகம் போன்ற நிறம் உடைய ஹம்ஸம் அல்லது கைலாயம் போன்ற வெண்மையான நிறம் கொண்ட ரிஷபம் மீது ஏறியபடி செல்கின்றனர்.

**விளக்கம்** - பாதுகைக்குத் தங்கள் தலையை யார் ஒருவன் வாஹனமாக அளிக்கிறானோ, அவனது நிலை கூறப்படுகிறது. ஹம்ஸம் என்பது ப்ரம்மனின் வாஹனம் ஆகும். ரிஷபம் என்பது ருத்ரனின் வாஹனம் ஆகும். ஆக, பாதுகையைத் தலையில் ஏற்றவன் ப்ரம்ம பதவியோ, ருத்ரப் பதவியோ அடைந்துவிடுகிறான் என்று கருத்து. ஹம்ஸம் ஆகாயத்தில் உள்ளதால் ஆகாயத்தையும், ரிஷபம் கைலாயத்தில் உள்ளதால் கைலாயத்தையும் ஸ்வாமி தேசிகன் கூறுகிறார்.

94 ருத்ரம்: ச்ரித: தேவகண: ஸருத்ர:
பத்மாஸநம் ஸ: அபி ச பத்மநாபம்
ஸ த்வாம் அநந்த: ந புந: த்வம் அந்யம்
க ஏஷ பாதாவநி தே ப்ரபாவ:

**பொருள்** - பாதுகையே! தேவர்களின் கூட்டம் தங்களின் பாதுகாப்புக்காக சிவனை அடைந்தது. சிவன் ப்ரம்மனை அடைந்தார், ப்ரம்மன் தாமரை மலரைத் திருநாபியில் வைத்த பெரியபெருமாளை அடைந்தார். அனைத்து இடத்திலும் எப்போதும் உள்ள பெரியபெருமாள் உன்னை அடைந்தான். நீ உனது பாதுகாப்புக்காக யாரையும் அடையவில்லை. இப்படிப்பட்டது அல்லவா உனது பெருமை?

**விளக்கம்** - தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் சிவன். சிவனைக் காட்டிலும் உயர்ந்தவன் ப்ரம்மன். ப்ரம்மனைக் காட்டிலும் மேன்மை பெற்றவன் பெரியபெருமாள். அந்தப் பெரியபெருமாள் அண்டுவது பாதுகை என்பதால், பாதுகைக்கு மேன்மை மிகவும் அதிகம் என்றார்.

95 பரஸ்ய தாம்ந: ப்ரதிபாதந அர்ஹாம்
வதந்தி வித்யாம் மணிபாதுகே த்வாம்
யத: தவ ஏவ அதிகமே ப்ரஜாநாம்
தூரீபவதி உத்தர பூர்வம் அம்ஹ:

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! பெரியவர்கள் உன்னையே மிகவும் உயர்ந்த தேஜஸ் என்னும் பெரியபெருமாள் அனைவருக்கும் அளிக்கத் தகுதியான ஞானம் என்று (பக்தி , ப்ரபத்தி) கூறுகின்றனர். உன் மூலமாக பத்தி-ப்ரபத்திக்கு முன்பு செய்த பாவங்களும், பின்னே செய்ய உள்ள பாவங்களும் விலகி ஓடுகின்றன.

**விளக்கம்** - ஒருவன் பக்தி அல்லது ப்ரபத்தி செய்யும்போது அவனது பாவங்கள் அனைத்தையும் பெரியபெருமாள் நீக்கிவிடுவதாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆனால், பக்தி-ப்ரபத்தி போன்ற உபாயங்கள் அவசியமில்லை; பாதுகையைத் தலையில் ஏற்பதால் ஒருவன் பாவங்கள் அழிந்து விடுகின்றன என்றார்.

96 தந்யா முகுந்தஸ்ய பத அநுஷங்காத்
தநீயதா யேந ஸமர்ச்சிதா த்வம்
வாஸ: ததீய: மணிபாதரக்ஷே
லக்ஷ்ம்யா அளகாமபி அதரீகரோதி

**பொருள்** - இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! நீ பெரியபெருமாளின் தொடர்பு கொண்ட காரணத்தினால் அனைத்துச் செல்வங்களும் பெற்றுள்ளாய். இப்படிப்பட்ட உன்னை ஆராதிக்கும் ஒருவனின் வீடானது, அனைத்து செல்வங்களையும் பெற்று, குபேரனின் பட்டணத்தையும் விட மேம்பட்டு உள்ளது.

**விளக்கம்** - யார் எதனை வேண்டுகிறார்களோ அதனைப் பாதுகைகள் அளித்துவிடுவதாகக் கூறுகிறார். செல்வத்தை விரும்புபவர்களுக்கு, போதுமான செல்வம் அளிக்கிறது. இதனால் அவர்களின் வீடுகள் குபேரபுரியையே தாழச்செய்யும் அளவிற்கு செல்வத்தால் உயர்கின்றன.

97 பதேந விஷ்ணோ கிமுத இதரேஷாம்
விஸ்ருஜ்ய ஸங்கம் ஸமுபாஸ்தே த்வாம்
கரோஷி தாந் கிம் த்வம் அபேத காமாந்
காலேந பாதாவநி ஸத்யகாமாந்

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஒரு சிலர் பெரியபெருமாளின் திருவடிகளை அண்டிய பின்னர், மற்ற பலன்களை (பெரியபெருமாள் கூட வேண்டாம் என்று எண்ணி) கை விட்டு, உன்னை மட்டுமே ஆராதிக்கக்கூடும். இப்படியாக அனைத்து ஆசைகளையும் துறப்பவர்களுக்கு என்றும் நிலை பெற்றிருக்கும்படியாக உள்ள பொருள்களை (பரமபதத்தில்) அனுபவிக்கும்படியாக நீ ஏன் செய்கிறாய்?

விளக்கம் (பாவம் இல்லை) பரமபதத்தை அடைந்தவர்களுக்கு அபஹதபாப்மா -, விஜர: (கிழட்டுத்தன்மை இல்லை(, விம்ருத்யு(மரணம் இல்லை) :, விசோகேசோகம்) : இல்லை(, விஜிதத்ஸபசி) :, தாகம் இல்லை(, அபிபாஸஅனுபவிக்கும் பொருள்) : அழிவதில்லை(, ஸத்யகாம : - :மற்றும் ஸத்யஸங்கல்ப (வேண்டுவது நிறைவேறுகிறது) என்ற எட்டு தன்மைகளும் வந்து சேர்கின்றனஆசைகளை ஒழித்து இங்கு வந்தவர்கள் . ஸத்யகாமந் எனப் பெயர் பெறுவது வேடிக்கையாக உள்ளதுஇப்படி நீ ஏன் . செய்கிறாய்?

98 அப்யாஸ யோகேந நிக்ருஹ்யமாணை:
அந்தர்முகை: ஆத்மவித: மநோபி:
மாத: த்வயா குப்த பதம் ப்ரபாவாத்
அந்வேஷயந்தி ஆகமிகம் நிதாநம்

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஆத்மாவைக் குறித்த ஞானம் உள்ளவர்கள், அன்றாடம் செய்யப்பட்ட த்யானம் மூலம் நன்கு வசப்படுத்தப்பட்ட மனம் கொண்டு ஜீவ-பரமாத்மாவையே த்யானித்தபடி உள்ளானர். இதன் மூலம் - உனது சக்தியால் மட்டுமே காப்பாற்றப்படும் திருவடிகளைக் கொண்டவனும், வேதங்களில் கூறப்பட்டுள்ள புதையல் போன்றும் உள்ள பெரியபெருமாளைத் த்யானிக்கின்றனர்.

**விளக்கம்** - ஆத்மாவின் ஸ்வரூபம் பற்றி நன்கு உணர்ந்தவர்கள் பாதுகையைத் தங்கள் சிந்தையில் வைத்து எப்போதும் த்யானித்தபடி உள்ளனர்இதன் விளைவாக ., அவர்கள் சிந்தனையில், அந்தப் பாதுகையால் காப்பாற்றப்படும் திருவடிகளைக் கொண்ட பெரியபெருமாள் தானாகவே வந்து நிற்கிறான்அவனைத் த்யானம் . செய்கின்றனர்.

99 மூர்த்நா ததாநாம் மணிபாதுகே த்வாம்
உத்தம்ஸிதம் வா புருஷம் பவத்யா
வதந்தி கேசித் வயமாமநாம:
த்வாம் ஏவ ஸாக்ஷாத் அதிதைவதம் ந:

**பொருள்** - உயர்ந்த இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஒரு சிலர் பெரியபெருமாளைச் சுமந்து கொண்டுள்ள உன்னை ஆராதிக்கவேண்டும் என்று கூறுகின்றனர். வேறு சிலர் உன்னை அணிந்துள்ள பெரியபெருமாளை ஆராதிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் நாங்கள் உன்னையே அனைத்துப் பலன்களும் அளிக்க வல்லவளாக ஏற்கிறோம்.

**விளக்கம்** - பாதுகை என்பது ஆசார்யனுக்குச் சமானம் என்பது பொதுவான கருத்து. இங்கு ஆசார்யனுக்கு முக்யத்வமா அல்லது பெரியபெருமாளுக்கு முக்யத்வமா என்னும் சந்தேகம் எழுகிறது. இதற்குத் தெளிவான விடையை மதுரகவியாழ்வார் - தேவு மற்று அறியேன் - என்று முன்பே கூறியுள்ளார். இதனை அடியொட்டி ஸ்வாமி தேசிகனும் தான் பாதுகையையே ஏற்பதாகக் கூறுகிறார்.

100 மூர்த்நா ஸதாம் அதஸ்தாத் உபரி ச விஷ்ணோ: பதேந ஸங்கடிதாம்
அதவீயஸீம் விமுக்தே: பதவீம் அவயந்தி பாதுகே பவதீம்

**பொருள் -** பாதுகையே! நீ உனது கீழ்ப்பகுதியில் பெரியவர்களின் தலைகளுடன் சேர்க்கப்படுகிறாய். மேற்புறம் நம்பெருமாளின் திருவடிகளுடன் சேர்க்கப்படுகிறாய். இப்படிப்பட்ட உன்னை மோக்ஷத்திற்கு உண்டாகிய மிகவும் எளிய வழியாகவே கொள்கிறார்கள்.

**விளக்கம் -** நல்லவர்களின் தலைக்கும் நம்பெருமாளின் திருவடிகளுக்கும் பாதுகையானது பாலமாக உள்ளது. உடலை விட்டு ஜீவன் பிரியும்போது, தலை மூலமாக வெளியேறும் ஜீவன், அர்ச்சிராதி மார்க்கமாக மோக்ஷம் அடைகிறது என்பது பொதுவான கருத்து. இங்கு மோக்ஷம் என்பதைத் திருவடிகள் எனக் கூறுகிறார். ஆக, ஜீவன் தலை வழியாகப் பிரிந்து, மோக்ஷமாகிய நம்பெருமாளின் திருவடிகளை அடைவதற்குப் பாலமாக பாதுகை உள்ளது என்று மறைமுகமாகக் கூறியதாகவும் கொள்ளலாம்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
# ப்ரபாவ பத்ததி ஸம்பூர்ணம்

# தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (4.ஸமர்ப்பண பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

*101 பஜாம: பாதுகே யாப்யாம் பரதஸ்ய அக்ரஜ: ததா*
*ப்ராய: ப்ரதிப்ரயாணாய ப்ராஸ்தாநிகம் அகல்பயத்*

**பொருள்-** பரதனின் தமையனான இராமன், தான் அயோத்திக்கு மீண்டும் வருவதற்கான ஏற்பாடுகளை, பரதனுக்குத் தனது பாதுகையை அளித்ததன் மூலம் செய்தான். அப்படிப்பட்ட பாதுகைக்கு எங்கள் த்யானம் உரித்தாக வேண்டும்.

**விளக்கம் -** ஒருவன் ஊருக்குக் கிளம்பும்போது, அன்று ஏதோ ஒரு காரணத்தினால் புறப்படாமல் இருந்து விடக்கூடும். மீண்டும் ஊருக்குச் செல்ல வேறு நல்ல நாள் கிட்டாமல் போகக்கூடும். ஆகவே அவன் செய்வது - தன்னுடைய முக்கியமான பொருள்களை, தான் முன்பே குறித்திருந்த நாளில், வேறு இடத்தில் வைத்துவிட்டு வந்து விடுவான். பின்னர் வேறு ஒரு நாளில், நாள்-கிழமை ஆராயாமல் புறப்பட்டு விடுவான். இவ்விதம் இராமன் தனக்கு முன்பாக பாதுகையை அயோத்திக்கு மீண்டும் அனுப்பினான் என்றார்.

*102 ராஜ்யம் விஹாய ரகுவம்ச மஹீபதீநாம்*
*பௌராந் ச பாதரஸிகாந் ப்ருதிவீம் ச ரக்தாம்*
*த்வாம் ஏவ ஹந்த சரணாவநி ஸம்ப்ரயாஸ்யந்*
*ஆலம்பத ப்ரதமம் உத்தர கோஸலேந்த்ர:*

**பொருள் -** சரணம் என்று அடைபவர்களைக் காக்கும் திருவடிகளைக் காப்பவளே! வடக்கில் உள்ள கோசலை நாட்டின் சக்ரவர்த்தியான இராமன் செய்து என்ன? ரகுவம்சம் என்ற பட்டம், தனது திருவடிகளின் மீது மிகவும் அன்புவைத்த ஜனங்கள், தனது நாடு ஆகியவற்றைத் துறந்து காட்டிற்குச் சென்றான். ஆயினும் அவன் உன்னை விடாமல் அணிந்து கொண்டு போனான். அவனுக்கு உன் மீது அத்தனை ப்ரியம் போலும்.

**விளக்கம் -** இராமன் காட்டிற்குச் செல்லும்போது தன்னுடன் தனது படைகள் இல்லை, தனது நாட்டு மக்கள் இல்லை, பரிவாரங்கள் ஏதும் இல்லை என்று உணர்ந்தான். ஆயினும், இவற்றைக் காட்டிலும் மேலான பாதுகைகள் உண்டே என்று எண்ணியபடி, பாதுகையுடன் சென்றான்.

*103 ப்ராப்தே ப்ரயாண ஸமயே மணிபாதரக்ஷே*
*பௌரான் அவேக்ஷ்ய பவதீ கருண ப்ரலாபாந்*
*மஞ்ஜுப்ரணாத முகரா விநிவர்த்தநார்த்தம்*
*ராமம் பதக்ரஹண பூர்வம் அயாசதேவ*

**பொருள்** - உயர்ந்த இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப் பெற்ற பாதுகையே! இராமன் காட்டிற்குக் கிளம்பியபோது அயோத்தி மக்கள் அனைவரும் மிகவும் வருத்தம் கொண்டு புலம்பியபடி நின்றனர். அந்த நேரத்தில் உன்னில் பதிக்கப்பட்ட கற்கள் ஓசை எழுப்பின. அந்த ஓசை எவ்விதம் இருந்தது என்றால் - நீ இராமனின் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, "இந்த மக்களைக் காக்கும் பொருட்டு என்னை மீண்டும் அயோத்திக்கு அனுப்பவேண்டும்", என்று கேட்பது போன்று இருந்தது.

**விளக்கம்** - தன்னைக் கெஞ்சும் மக்களைக் கண்டு இராமன் நெகிழாமல், தனது உறுதி குலையாமல் நின்றான். ஆனால், பாதுகையோ மக்களின் நிலை கண்டு துடித்துப் போனது. இராமனின் திருவடிகளைப் பிடித்தபடி, "என்னைப் பரதனுடன் மீண்டும் இவர்களுக்காக அனுப்புவாயா?", என்று கேட்பது போன்று, அதனுள் இருந்த இரத்தினக்கற்கள் ஒலித்தன.

104 *மத்வா த்ருணாய பரத: மணிபாதரக்ஷே*
*ராமேண தாம் விரஹிதாம் ரகுராஜதாநீம்*
*த்வாம் ஏவ ஸப்ரணயம் உஜ்ஜயிநீம் அவந்தீம்*
*மேநே மஹோதயமயீம் மதுராம் அயோத்யாம்*

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இராமனைப் பிரிந்த பரதன் அயோத்தியை துச்சமாகவே எண்ணினான். ஆனால் இராமனின் பாதுகையான உன்னை - உஜ்ஜயிநி, அவந்தி, மதுரா, அயோத்தி என்று மிகவும் உயர்த்தியான புண்ணிய இடங்களாகவே அறிந்து கொண்டான்.

**விளக்கம்** - இராமன் இல்லாத அயோத்தியை பரதன் ஒரு துரும்பாகவே எண்ணினான். ஆனால், பாதுகையை மிகவும் உயர்ந்த, மோக்ஷம் அளிக்கவல்ல ஸ்தலங்களாகவே எண்ணினான்.

105 *ராமாத்மந: ப்ரதிபதம் மணிபாதரக்ஷே*
*விச்வம்பரஸ்ய வஹநேந பரீக்ஷிதாம் த்வாம்*
*விச்வஸ்ய தேவி வஹநே விநிவேசயிஷ்யந்*
*விஸ்ரப்த ஏவ பரத: பவதீம் யயாசே*

**பொருள்** - உயர்ந்த இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகத்தை இராமனாகிய பெரியபெருமாள் தூக்கி ஆதரித்தபடி உள்ளான். பாதுகையாகிய நீ அவன் நடக்கும்போது அவனைத் தூக்கியபடியே செல்கிறாய். ஆக நீ மறைமுகமாக உலகையும் தூக்குகிறாய் அல்லவா? இத்தனை உயர்த்தி உன்னிடம் உள்ளதால் பரதன் உன் மீது நம்பிக்கை கொண்டு உன்னை வேண்டி நின்றான் போலும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம் -** சக்ரவர்த்தியாகப் போகிற ஒருவனுக்கு, அதற்கான தகுதி இருக்கவேண்டும் அல்லவா? இந்த உலகையே தாங்கும் இராமனை, பாதுகை தாங்குவதால், பாதுகையின் மீது பரதனுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டானது. அதனால் இராமனிடம் பாதுகையை வேண்டிப் பெற்றான்.

*106 பக்த்யா பரம் பவது தத் பரதஸ்ய ஸாதோ:*
*த்வத் ப்ரார்த்தநம் ரகுபதௌ மணிபாதரக்ஷே*
*கேந அசயேந ஸ முநி: பரமார்த்த தர்மீ*
*பத்ராய தேவி ஜகதாம் பவதீம் அவாதீத்*

**பொருள் -** பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பவளே! இராமனிடம் மிகுந்த பக்தியும் அன்பும் கொண்டிருந்த பரதன், அந்தக் காரணத்தால் மட்டுமே உன்னை ஆராதித்தான் என்று கூற இயலாது. உண்மையை நன்கு அறிந்த வசிஷ்ட மகரிஷி , நீ உலக நன்மைகளை அளிப்பவள் என்று கூறினார் அல்லவோ? வெறும் பக்தி காரணமாக பரதன் உன்னை ஆராத்தித்தான் என்றால், வசிஷ்டர் புகழ்ந்தது என்ன காரணத்தினால்?

**விளக்கம் -** நம்மிடம் ப்ரியமானவர்களின் பொருள்களை நாம் பாதுகாத்துப் போற்றுவது இயல்பே ஆகும். இதன் மூலம், வெறும் பக்தி, ப்ரியம் காரணமாக மட்டுமே பரதன் பாதுகையைப் போற்றினான் என்று கூற இயலாது. ஏன் என்றால் - வசிஷ்டர் பாதுகையைப் போற்றினார் என்பதை நாம் காணலாம். உண்மையான பெருமை பாதுகைக்கு உள்ளதால் அல்லவோ அவர் போற்றியிருக்கக்கூடும்?

*107 ராமே வனம் வ்ரஜேதி பங்க்திரதே ப்ரஸுப்தே*
*ராஜ்யாபவதா சகிதே பரதே ததாநீம்*
*ஆச்வாஸயேத் க இவ கோஸலவாஸிந: தாந்*
*ஸீதேவ சேத் த்வம் அபி ஸாஹஸவிருத்தி: ஆஸி:*

**பொருள் -** இராமன் கானகம் சென்று விட்டான்; தசரதர் இதன் காரணமாக இறந்து விட்டார். இப்படிப்பட்ட நேரத்தில் பரதன் நாட்டைஆளும் பட்டத்தை ஏற்றான் என்று பலர் ஏசக்கூடும். அந்த நேரத்தில் சீதை போன்று நீயும் இராமனுடன் காட்டில் வசித்தால், கோசல நாட்டில் உள்ள மக்களுக்கு யார் ஆதரவு கூற இயலும்? இதனால் நீ மட்டும் வந்தாய் போலும்.

**விளக்கம் -** இராமனின் பிரிவுத்துன்பம் காரணமாக தசரதன் மறைந்தார். அந்த நேரத்தில் பரதன் பட்டாபிஷேகம் செய்துகொண்டால், பலரும் அவனை ஏசக்கூடும். அந்தப் பழியானது பாதுகையால் மட்டுமே நீங்கும். மேலும் இராமனுடன் சீதையும் சென்றுவிட்டாள். இந்த நேரத்தில் அயோத்தியின் மக்களுக்கு ஆறுதல் யார் உள்ளனர்? இதனை உணர்ந்த பாதுகை மீண்டும் திரும்பியது போலும்.

*108 பாதாவநி ப்ரபவத: ஜகதாம் த்ரயாணம்*
*ராமாதபி த்வமதிகா நியதம் ப்ரபாவாத்*
*நோ சேத் கதந்நு பரதஸ்ய தம் ஏவ லிப்ஸோ:*
*பரத்யாயநம் பரிபணம் பவதீ பவித்ரீ*

**பொருள் -** பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மூன்று உலகங்களுக்கும் தலைவனாக உள்ள இராமனைக் காட்டிலும் உன்னுடைய மேன்மைகள் நிச்சயம் அதிகமாகவே இருக்கவேண்டும் எப்படி? இவ்விதம் இல்லை என்றால் இராமனையே அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பரதன், இராமனுக்குப் பதிலாக உன்னை ஏற்றுக் கொள்ளும்படியாக, அவனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கக் கூடிய அடகுப் பொருளாக நீ எப்படி ஆக முடியும்?

**விளக்கம் -** அடகு வைக்கப்படும் பொருளானது, அதன் மீது வழங்கப்படும் கடன் தொகையைக் காட்டிலும் அதிக மதிப்பு உள்ளதாக இருந்தால் மட்டுமே கடன் வழங்குவார்கள் அன்றோ? ஆக இராமனை வேண்டி நின்ற பரதனுக்கு, பாதுகை கிட்டியவுடன் அவன் த்ருப்தி அடைந்தான் என்றால், இராமனைக் காட்டிலும் பாதுகைக்கு மதிப்பு உள்ளது என்றுதானே ஆகிறது? இவ்விதம் இல்லை என்றால், இராமனுக்குப் பதிலாகப் பாதுகையை அடகுப் பொருள் போன்று பரதன் எப்படி ஏற்பான்?

*109 மந்யே நியுஜ்ய பவதீம் மணிபாதரக்ஷே*
*பார்ஷ்ணிக்ரஹஸ்ய பரதஸ்ய நிவாரணார்த்தம்*
*ரத்னாகரம் ஸபதி கோஷ்பதயந் விஜிக்யே*
*ராம: க்ஷணேந ரஜநீசர ராஜதாநீம்*

**பொருள் -** உயர்ந்த இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இராமன் கடலைக் கலக்கியபடி சென்று அரக்கர்கள் வாழ்ந்து வந்த இலங்கைக்குச்செல்வதற்காக எழுந்தான். அப்போது பரதன் இராமனின் கால்களைப் பற்றியபடி இருந்தான். அவனைத் திசை திருப்புவதற்காக உன்னை அளித்தான் போலும்.

**விளக்கம் -** அழும் குழந்தையைச் சமாதானம் செய்து, அதன் கவனத்தைத் திசை திருப்ப எண்ணும் தாயானவள், அதன் கைகளில் விளையாட்டுப் பொருள்களைக் கொடுப்பது வழக்கம் அல்லவா? இது போன்று இங்கு இராமனின் செய்கை இருந்ததாகக் கூறுகிறார். பரதன் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் தனது அவதார நோக்கம் நிறைவேறாது என்று இராமன் எண்ணி, இவ்விதமாகச் செய்தான்.

*110 பாதாவநி ப்ரபுதராந் அபராதவர்க்காந்*
*ஸோடும் க்ஷமா த்வம் அஸி மூர்த்திமதீ க்ஷமைவ*
*யத் த்வாம் விஹாய நிஹதா: பரிபந்தி நஸ்தே*
*தேவேந தாசரதி நா தசகண்டமுக்யா*


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பவளே! அனைத்துக் குற்றங்களையும் பொறுத்துக் கொள்ளும் அளவிற்கு சரீரம் பெற்றவளாக, பொறுமையே வடிவமாக நீ உள்ளாய். ஆகையால்தான் இராமன் உன்னைப் பரதனிடம் அளித்து விட்டு, இராவணன் போன்றவர்களை அழித்தான் போலும்.

**விளக்கம்** - பாதுகைக்குப் பொறுமை அதிகம் என்பதால், எப்படிப்பட்ட குற்றத்தையும் மன்னித்துவிடுவாள் என்று இராமன் அறிந்திருந்தான்.ஆகையால், தன்னுடன் அவள் இருந்தால் இராவணன் போன்றோரையும் மன்னித்துவிடுவாள் என்பதால், பரதனுடன் அனுப்பிவிட்டான். அதன் பின்னரே அவனால் இராவணனை அழிக்க இயன்றது என்று கருத்து.

111 *வாக்யே கரீயஸி பிது: விஹிதே அபி அத்ருப்த்யா*
*மாது: மனோரதம் அசேஷம் அவந்த்யயிஷ்யந்*
*மந்யே ததா ரகுபதி: பரதஸ்ய தேநே*
*மாத: த்வயைவ மணி மௌளி நிவேச லக்ஷ்மீம்*

**பொருள்** - தாயான பாதுகையே! இராமன் தனது தந்தையான தசரதனின் சத்யத்திற்கு இணங்கக் கானகம் சென்றான். இப்படியாகத் தனது தந்தையின் கட்டளையை நிறைவேற்றிய பின்னரும், இராமனுக்குத் த்ருப்தி உண்டாகவில்லை. தனது தாயான கைகேயியின் ஆசைக்கு ஏற்ப பரதனுக்கு முடிசூட்ட எண்ணினான். அதனால் அல்லவோ இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட உன்னைப் பரதன் தலைகளில் சூட்டி அழகு பார்த்தான்?

**விளக்கம்** - தசரதனின் சொல்லில் ஒன்றைக் காப்பாற்றியாகி விட்டது. அடுத்த வாக்கான பரத பட்டாபிஷேகம் நிகழ்த்தவேண்டுமே! ஆகையால் மிகவும் தந்திரமாக இராமன் செய்தது என்ன? பரதனின் தலையில், பாதுகைகளை ஏற்றி, பட்டாபிஷேகம் செய்தான்.

112 *பாதாம் புஜாத் விகளிதாம் பரமஸ்ய பும்ஸ:*
*த்வாம் அதரேண விநிவேச்ய ஜடாகலாபே*
*அங்கீசகார பரத: மணிபாதரக்ஷே*
*கங்காதீரூட சிரஸ: கரிசஸ்ய காந்திம்*

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மிகவும் உயர்ந்த புருஷனாகிய இராமனிடமிருந்து உன்னைப் பரதன் பெற்றபோது, தாமரை மலர்கள் போன்ற திருவடிகளில் இருந்த உன்னை, மிகவும் அன்புடன் தனது தலையில் ஏற்றான். அப்போது அவன், கங்கையைத் தனது சடையில் வைத்துள்ள காரணத்தால் மேலும் அழகு பெற்ற சிவன் போன்று அழகு பெற்றான்.

**விளக்கம்** - எம்பெருமானின் திருவடிகளில் இருந்து கங்கை வெளிப்பட்டது. அந்தக் கங்கையைத் தனது தலையில் சூடியதால் சிவன் அழகு பெற்றார். இங்கு இராமனின் திருவடிகளில் இருந்து பாதுகை பரதனால் பெறப்பட்டது. அதனைத் தலையில் ஏற்றதால் பரதன் அழகு பெற்றான். ஆக

எம்பெருமானின் திருவடித் தொடர்பு பெற்றவையுடன் நமக்குத் தொடர்பு உண்டானால், நமது வாழ்வும் மணம் வீசும் என்று கருத்து.

113 *அவிகலம் அதிகர்த்தும் ரக்ஷமே ஸப்தலோக்யா:*
*ரகுபதி சரணேந ந்யஸ்த திவ்ய அநுபாவாம்*
*பஜத பரத: த்வாம் அஞ்ஜஸா பாதரக்ஷே*
*மணிமகுட நிவேச த்யாக தந்யேந மூர்த்நா*

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பவளே! ஏழு உலகங்களையும் எந்தவிதமான குறையும் இன்றிக் காப்பாற்றும் தகுதியை அடைய பரதன் எண்ணினான். ஆகவே இராமனின் திருவடிகளின் தொடர்பு என்ற பெருமை உடைய உன்னைத் தனது தலையில் ஏற்றான். அவன் தலையில் க்ரீடம் வைக்காமல், நேரடியாகவே உன்னை ஏற்றதனால் பரிசுத்தி அடைந்தான்.

**விளக்கம்** - அனைத்தையும் காத்து நிற்கும் இராமனின் திருவடித் தொடர்பு கிட்டப் பெற்ற பாதுகையானது, ஏழு உலகங்களையும் ஆளும் வல்லமையை ஒருவனுக்கு அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை. இதனை அறிந்த காரணத்தினாலேயே பரதன் பாதுகையிடம் தஞ்சம் புகுந்தான்.

114 *இயம் அவிகல யோக க்ஷேம ஸித்யை ப்ரஜாநாம்*
*அலம் இதி பரதேந ப்ரார்த்திதாம் ஆதரேண*
*ரகுபதி: அதிரோஹந் அப்யஷிஞ்சத் ஸ்வயம் த்வாம்*
*சரணநக மணீநாம் சந்த்ரிகா நிர்ஜ்ஜரேண*

**பொருள்** - பாதுகையே! பரதன் இராமனிடம், "உனது பாதுகைகள் மக்களிடம் இல்லாதவற்றை அளிப்பதும் (யோக), இருப்பதைக் காப்பதற்கும் (க்ஷேம) ஏற்றதாகும். ஆகவே அவற்றை என்னிடம் அளிக்கவேண்டும்", என்று யாசித்தான். உடனே இராமன் செய்தது என்ன? உன் மீது ஏறி நின்று, தனது நகங்கள் என்னும் இரத்தினக்கற்கள் ஒளி கொண்டு உனக்குப் பட்டாபிஷேகம் செய்தான் அல்லவா?

**விளக்கம்** - ஒருவருக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு முன்பாக அபிஷேகம் செய்தல் வேண்டும். இங்கு பாதுகைக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு முன்பாக, அதன் மீது தனது திருவடிகளை வைத்து, தனது திருநகத்தின் ஒளி கொண்டு அபிஷேகம் செய்தான்.

115 *ப்ரணயிநி பதபத்மே காடம் ஆச்லிஷ்யதி த்வாம்*
*விதிஸுத கதிதம் தத் வைபவம் தே விதந்த:*
*அநுதிநம் ருஷய: த்வாம் அர்ச்சயந்தி அக்ந்ய காரே*
*ரகுபதி பதரக்ஷே ராமகிரி ஆச்ரமஸ்தா:*

**பொருள் -** ரகு குலத்தின் நாயகனான இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ பரதனுடன் செல்லப்போகிறாய் என்று அறிந்த முனிவர்கள் செய்தது என்ன? ப்ரம்மனின் புத்திரரான வசிஷ்டர் மூலம் உனது பெருமைகளை அறிந்தவர்களுக்கும், சித்திர கூட ஆஸ்ரமத்தில் உள்ளவர்களும் ஆகிய முனிவர்கள் தங்கள் தங்கள் இடத்திற்கு உன்னை எழுந்தருளச் செய்து, அக்னி ஹோத்ரம் போன்றவை நடைபெறும்படியாக, யாக சாலைகளில் வைத்து வழிப்பட்டனர். மேலும் பிறந்த வீடு செல்லும் மனைவியைக் கணவன் கட்டி அணைத்து விடை கொடுப்பது போன்று, இராமனின் திருவடிகள் உன்னைக் கட்டி அணைத்தன.

**விளக்கம் -** இந்தச் ச்லோகத்திற்கு வேறு விதமாகவும் பொருள் உரைக்கலாம். இராமனின் திருவடிகள் - கணவனானவன் மனைவியை அணைத்துக் கொள்வது போன்று, பாதுகையிடம் மிகவும் ப்ரியமாக இருந்தன. இதனைக் கண்ட முனிவர்கள், "இந்தப் பாதுகையை நாம் வழிபட்டால், நம்மீது இராமனின் திருவடிகள் மிகவும் ப்ரியமாக இருக்கும். இதன் மூலம் இராமனும் நம்மீது அளவற்ற பாசம் கொள்வான்", என்று எண்ணினர். இதனால் பாதுகையை மிகவும் போற்றிக் கொண்டாடினார்கள்.

116 நியதம் அதிருரோஹ த்வாம் அநாதேய சக்திம்
*நிஜசரண ஸரோஜ சக்திம் ஆதாது காம:*
*ஸ கதம் இதரதா த்வாம் ந்யஸ்ய ராம: விஜஹ்ரே*
*த்ருஷத் உபசித பூமௌ தண்டகாரண்ய பாகே*

**பொருள் -** பாதுகையே! இராமன் உன்னைப் பரதனிடம் அளிப்பதற்கு முன்பு உன் மீது எழுந்தருளி நின்றான். ஏன் தெரியுமா? உன்னிடம் இயற்கையாகவே உள்ள சக்தியைத் தனது தாமரை போன்ற திருவடிகளுக்கு ஏற்றுவதற்காகவே ஆகும். இவ்விதம் அவன் செய்யவில்லை என்றால் உன்னைப் பரதனிடம் அளித்த பின்னர், கற்கள் போன்று கருமையான பாதைகள் நிறைந்து தண்டகாரண்யத்தில் அவன் எவ்விதம் நடந்திருக்க முடியும்? அவன் திருவடிகள் எவ்விதம் தாங்கியிருக்கும்?

**விளக்கம் -** பாதுகையிடம் இயல்பாகவே சக்தி உள்ளதால்தான் இராமனால் கானகத்தில் எளிதாக நடக்க முடிந்தது. பாதுகையைப் பரதனிடம் அளிக்கவேண்டிய சூழ்நிலையில், தனது திருவடிகளுக்குப் பாதுகையிடமிருந்து சக்தியைப் பெற இராமன் எண்ணினான். அதனால்தான், அதன் மீது சற்று நேரம் எழுந்தருளிவிட்டு, பின்னர் பரதனிடம் அளித்தான்.

117 *ரகுபதி பதபத்மாத் ரத்னபீடே நிவேஷ்டும்*
*பரத சிரஸி லக்நாம் ப்ரேக்ஷ்ய பாதாவநி த்வாம்*
*பரிணத் அபுருஷார்த்த: பௌரவர்க்க: ஸ்வயம் தே*
*விதிம் அபஜத ஸர்வ: வந்தி வைதாளிகாநாம்*

 Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - பாதுகையே! இராமனின் தாமரை போன்ற திருவடிகளில் இருந்து, உயர்ந்த இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட ஸிம்ஹாசனத்தில் அமர்வதற்கு நீ புறப்பட்டாய். பரதன் உன்னைத் தனது தலையில் ஏற்றுச் சென்றான். அப்போது அனைத்து மக்களும் தங்களுக்கான நான்கு புருஷார்த்தங்களும் (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ - அறம், பொருள், இன்பம், வீடு) தங்கள் கைகளில் கிட்டிவிட்டதாகவே எண்ணினர். உன்னைப் புகழ்ந்து துதித்தபடி நின்றனர்.

**விளக்கம்** - பெருமாளோ அல்லது அரசனோ ஓர் ஆசனத்திலிருந்து மற்றோர் ஆசனத்திற்குச் செல்லும்போது, கட்டியம் கூறுவது வழக்கமாகும். இங்கு பாதுகை முதலில் இராமனின் திருவடிகளில் இருந்து, பரதனின் தலையில் எழுந்தருளினாள். பின்னர், அயோத்தியில் ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருள வந்தபோது, அந்த நாட்டு மக்கள் கட்டியம் கூறியபடி நின்றனர்.

118 *அநந்ய ராஜந்ய நிதேசநிஷ்ட்டாம்*
*சகார ப்ருத்வீம் சதுரர்ணவாந்தாம்*
*ப்ராது: யியாஸோ: பரத: ததா த்வாம்*
*மூர்த்நா வஹந் மூர்த்திமதீம் இவ ஆஜ்ஞாம்*

**பொருள்** - பாதுகையே! இராமன் கானகம் சென்ற பின்னர், அவனது உத்தரவு என்பதே ஒரு வடிவம் எடுத்தது போன்று நீ இருந்தாய். உன்னைத் தனது தலையில் ஏற்றிக் கொண்ட பரதன் செய்தது என்ன? நான்கு கடல்களையும் எல்லையாகக் கொண்ட தனது நாட்டை வேறு யாருடைய உத்தரவுக்கும் கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லாமல், உன்னால் வழி நடத்தப்பட்டு, ஆட்சி செய்தான்.

**விளக்கம்** - பாதுகையின் துணையுடன் பரதன் எந்தவிதமான இடையூறுகளும் இன்று, யாருக்கும் அச்சம் கொள்ளாமல், நீதி தவறாத "இராம ராஜ்ஜியம்" அமைத்தான் என்று கருத்து.

119 *யத் ப்ராத்ரே பரதாய ரங்கபதிநா ராமத்வம் ஆதஸ்துஷா*
*நித்ய உபாஸ்ய நிஜ அங்கிரி நிஷ்க்ரயதயா நிச்சித்ய விச்ராணிதம்*
*யோக க்ஷேம வஹம் ஸமஸ்த ஜகதாம் யத் கீயதே யோகிபி:*
*பாதத்ராணம் இதம் மிதம்பச கதாம் அஹ்நாய மே நிநுதாம்*

**பொருள்** - ஸ்ரீ ரங்கநாதனே இராமனாக அவதரித்து, தனது திருவடிகளுக்குப் பதிலாக, அதனைவிட உயர்ந்த தனது பாதுகைகளை, தனது தம்பியான பரதனிடம் அளித்தான். அந்தப் பாதுகைகளை எப்போதும் உபாஸிக்கும்படி அளித்தான். இந்தப் பாதுகைகள் உள்ளதைக் காப்பாற்றும், இல்லாதவற்றை அளிக்கவும் செய்யும் என்று பெரியோர்களால் கூறப்படுகின்றன. அப்படிப்பட்ட இந்தப் பாதுகைகள் எனது அற்பத்தன்மையை நீக்க வேண்டும்.

**விளக்கம்** - நமது அற்பமான தன்மைகள் என்ன என்பது நாமே அறியமாட்டோம். அவற்றைப் பாதுகைகள் அறிந்து, அவற்றை நீக்கியும் விடுகிறாள் என்றார்.

*120 பரதஸ்யேவ மாம் அபி ப்ரசமித விச்வ அபவாத துர்ஜ்ஜாதா*
*சேஷேவ சிரஸி நித்யாம் விஹரது ரகுவீர பாதுகே பவதீ*

**பொருள்** - வீரனாகிய இராமனின் பாதுகையே! "இராமனைக் கானகம் அனுப்பிய கைகேயின் மகன்" என்ற அபவாதங்கள் பரதன் மீது விழாமல் அவன் காப்பாற்றப்பட்டான் - எப்படி? உன்னைத் தனது தலையில் ஏற்ற காரணத்தினால் ஆகும். இது போன்று எனது தலையிலும் நீ எப்போதும் தங்கி நின்று, எனது அபவாதங்களையும் போக்க வேண்டும்.

**விளக்கம்** - எப்படிப்பட்ட த்ருஷ்டிகள், பழிகள் ஆகியவற்றை நீக்கக்கூடிய வல்லமை பாதுகையிடம் உண்டு என்றார்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த

## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## ஸமர்ப்பண பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


Email:sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (5.ப்ரதிப்ரஸ்தான பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

121 *ப்ரசஸ்தே ராம பாதாப்யாம் பாதுகே பர்யுபாஸ்மஹே*
*ஆந்ருசம்ஸ்யம் யயோ: ஆஸீத் ஆச்ரிதேஷு அநவக்ரஹம்*

**பொருள் -** இராமனின் திருவடிகளை விட மிகவும் உயர்ந்த அவனுடைய பாதுகையை நாங்கள் த்யானம் செய்கிறோம் - காரணம், அயோத்தி நாட்டின் மீது இராமனுக்கு இல்லாத தயை பாதுகைக்கு இருந்த காரணத்தால் அல்லவா பாதுகை மீண்டும் வந்தாள்?

**விளக்கம் -** பரதன் இராமனைப் பலமுறை கெஞ்சியபோதும், அவன் மனம் மாறவில்லை. ஆனால் பாதுகையின் மனம் துடித்தது. தனக்கு மிகவும் ப்ரியமான இராமனின் திருவடிகளை உதறி, பரதனுடன் மக்களின் பொருட்டு மீண்டும் ஓடி வந்தாள். ஆக இராமனோ, அவனது திருவடிகளோ இங்கு உதவவில்லை; பாதுகையே உதவினாள். "அவன் தூரஸ்தன் ஆனாலும் இது கிட்டி நின்று உதவும்" என்று திருநாமத்தின் மேன்மையைப் பிள்ளை லோகாசார்யர் தனது முமுக்ஷுப்படியில் அருளிச்செய்தது ஒப்பு நோக்குக.

122 *ப்ருசாம் ஆதுர ஸஹோதர ப்ரணய கண்டந ஸ்வைரிணா*
*பதேந கிம் அநேந மே வநம் இஹ அவநாத் இச்சதா*
*இதீவ பரிஹாய தந்நிவவ்ருதே ஸ்வயம் யத்புரா*
*பதத்ரம் இதம் ஆத்ரியே த்ருத ஜகத் த்ரயம் ரங்கிண:*

**பொருள் -** இராமன் கானகம் சென்ற வருத்தத்தில் இருந்த பரதன், இராமனிடம் சென்று அவனை மீண்டும் நாட்டிற்குத் திரும்புமாறு அழைத்தான். அப்போது பரதனை இராமன் கண்டித்து, மறுத்து விடுகிறான். இப்படியாக இந்த உலகைக் காப்பாற்றுவதற்காக வந்த இராமன், நாட்டை விட்டுக் கானகம் புகுவதையே பெரிதும் விரும்பியது கண்ட பாதுகை, "இவன் (இராமன்) திருவடிகளால் நமக்கு ஆவது என்ன?" , என்று மனம் வருந்தினாள். ஆதலால் அந்தத் திருவடிகளை விட்டு, தான் மட்டும் நாட்டிற்கு வந்தாள். மூன்று உலகையும் காக்கும் அந்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளை வணங்கிறேன்.

**விளக்கம் -** இராமனின் திருவடிகளை விட்டுப் பாதுகைகள் பிரிந்தமைக்குப் பல காரணங்களைக் கூறுகிறார் - இராமன் பரதனைக் கடிந்து கொண்டது, நாட்டை ஆளவேண்டிய கடமை இருக்கக் கானகம் விரும்பியது - என்ற காரணங்களைக் காட்டுகிறார்.

.

123 *தசவதந விநாசம் வாஞ்சத: யஸ்ய சக்ரே*
*தசரதம் அநகோக்திம் தண்டகாரண்ய யாத்ரா*
*ஸ ச பரத விமர்த்தே ஸத்ய ஸந்த: த்வயா ஆஸீத்*
*ரகுபதி பதரக்ஷே ராஜதாநீம் ப்ரயாந்த்யா*


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள் -** இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இராவணனை வதம் செய்யும் விருப்பம் கொண்டிருந்த இராமன், தண்டகாரண்யம் என்ற கானகம் புகுந்தான். இதன் மூலம் தசரதனின் வாக்கு சத்யவாக்கே என்று நிலைத்தது. இது போன்று பரதன் இராமனை அயோத்தி திரும்புமாறு வற்புறுத்தினான். அப்போது இராமன் பரதனிடம் உன்னை அளித்தான். நீ அயோத்திக்குப் புறப்பட்டதன் மூலம், "மக்களைக் காப்பேன்", என்ற இராமனின் சத்தியமும் நிலைத்தது.

**விளக்கம் -** இராமன் கானகம் சென்றதால், தசரதனின் வாக்கு நிறைவேற்றப்பட்டது. இராமனுக்குத் தனது நாட்டு மக்களைக் காப்பாற்றும் கடமை இருந்தது. பாதுகைகளை அவன் மீண்டும் அனுப்பியதன் மூலம் அவனது வாக்கும் காப்பாற்றப்பட்டது. ஆக, தசரதனின் வாக்கை இராமன் காப்பாற்றினான், இராமனின் வாக்கை பாதுகை காப்பாற்றினாள்.

*124 அப்யுபேத விநிவ்ருத்தி ஸாஹஸா தேவி ரங்கபதி ரத்நபாதுகே*
*அத்யசேத பவதீ மஹீயஸா பாரதந்த்ர்ய விபவேந மைதிலீம்*

**பொருள் -** இரத்தினங்களால் இழைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமனின் திருவடிகளை விட்டுப் பிரிந்து, அயோத்தி செல்வது என்னும் தீரச்செயலுக்கு நீ உடன்பட்டாய். இப்படியாக மிகவும் உயர்ந்த செயலாகிய இராமனின் சொற்படி நடத்தல் என்னும் தன்மையில் சீதையை நீ விஞ்சி நிற்கிறாய்.

**விளக்கம் -** இராமன் சீதையிடம் கானகம் வரவேண்டாம் என்று கூறினான். ஆனால் சீதையோ இராமனின் சொல் கேளாமல் கானகம் வந்தாள். பாதுகையிடம் இராமன் அயோத்திக்குத் திரும்புமாறு கூறினான். அதனை உடனே ஏற்ற பாதுகை, பரதனுடன் அயோத்தி வந்தாள். இதன் மூலம் பாதுகை, சீதையை விட மேம்பட்டவள் ஆனாள். அயோத்தி மக்கள் மீது சீதையை விட பாதுகைக்குப் ப்ரியம் அதிகம் எனலாம்.

*125 அவ்யாஹதாம் ரகுபதேர் வஹத: ப்ரதிஜ்ஞாம்*
*அம்சாதிரோஹண ரஸே விஹதே தரண்யா:*
*ப்ராதாந் நிவ்ருத்ய பவதீ மணிபாதரக்ஷே*
*ஸ்பர்சம் பதே ந விகத வ்யவதாந கேதம்*

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைத்த பாதுகையே! பூமாதேவி இராமனின் தோளில் ஏறுவதற்கு பெருமுயற்சி எடுத்தாள். ஆயினும், தான் கானகம் செல்வேன் என்ற சபதத்தில் இராமன் இருந்ததால், அந்த விருப்பம் நிறைவேறவில்லை. இவ்வாறு அவள் மகிழ்வு போக்கடிக்கப்பட்டது. அப்போது நீ அயோத்திக்குத் திரும்பினாய். இதன் மூலம் பூமாதேவிக்கு இராமனின் திருவடித் தொடர்பை ஏற்படுத்தி, இழந்த மகிழ்வை மீண்டும் கொணர்ந்தாய்.

**விளக்கம் -** தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போவதாக அறிவித்தவுடன் பூமாதேவி மிகவும் மகிழ்ந்தாள். தான் இராமனின் தோள்களில் அமர வாய்ப்பு கிட்டியதை எண்ணி

மகிழ்ந்தாள் (ஒரு நாட்டு அரசன் அந்த நாட்டைத் தனது தோள்களில் வைத்துக் காப்பதாகவே கூறுவர்). ஆனால் இராமன் கானகம் சென்றதால், பூமாதேவியின் அந்த மகிழ்ச்சி பறிபோனது. இதனைப் பார்த்த பாதுகை பூமாதேவி இழந்த மகிழ்வை மீண்டும் பெறும் விதமாக, இராமனின் திருவடிகளை விட்டு அகன்றாள். இதன் மூலம், இராமனின் திருவடிகள் நேரடியாகப் பூமியில் பட, பூமாதேவிக்கு அவனது திருவடித் தொடர்பு கிட்டியதால் மகிழ்ச்சி உண்டானது.அல்லது, இராமனின் ஸிம்ஹாஸனத்தில் பாதுகை அமர்ந்து ஆண்டதால், பூமாதேவி மீண்டும் மகிழ்ச்சி அடைந்தாள் என்றும் பொருள் கொள்ளலாம்.

*126 மந்த்ர அபிஷேக விரஹாத் பஜதா விசுத்திம்*
*ஸம்ஸ்கார வர்ஜ்ஜநவசாத் அபிஸம்ஸ்க்ருதேந*
*மூர்த்நா நிநாய பரத: மணிபாதுகே த்வாம்*
*ராம ஆஜ்ஞயா விநிஹிதம் இவ ராஜ்யலக்ஷ்மீம்*

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னை இராமன் பரதனின் தலையில் சூட்டினான். இயல்பாகவே தூய்மையான பரதன் - மந்த்ரங்கள் ஓதுவது, தலையை வாருவது முதலான சடங்குகள் ஏதும் இன்றி தனது தலையில், இராமனின் கட்டளையால் அமர்த்தப்பட்ட உன்னை ராஜ்யலக்ஷ்மி போன்று எழுந்தருளச் செய்தான்.

**விளக்கம் -** இந்த உலகில் ஒருவனுக்குப் பட்டம் கட்டுவதற்கு முன்பாக மந்திரங்கள் உரைக்கப்பட்டு, புண்ணிய நீரைத் தெளித்து பின்னரே பட்டம் கட்டுவார்கள். இது சாதாரண அரச பதவிகளுக்கு மட்டுமே ஆகும். உன்னை இராமன் பரதனின் தலையில் சூட்டினான். இயல்பாகவே தூய்மையான பரதன், இது போன்ற சடங்குகள் ஏதும் இன்றி உன்னை ஏற்றான்.

*127 ரக்ஷார்த்தம் அஸ்ய ஜகத: மணிபாதரக்ஷே*
*ராமஸ்ய பாதகமலம் ஸமயே த்யஜந்த்யா:*
*கிம் துஷ்கரம் தவ விபூதி பரிக்ரஹ: வா*
*கிம் வா விதேஹ துஹிது: க்ருபணா தசா ஸா*

**பொருள் -** இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஒரு காலகட்டத்தில் இராமனின் தாமரை போன்ற திருவடிகளை விட்டுப் பிரிந்து ராஜ்ய பாரத்தையும் நீ ஏற்றாய். இந்தச் செயல் அரியதா அல்லது இராமனை விட்டுப் பிரிந்த சீதையின் வருத்தத்துடன் கூடிய நிலை கடினமானதா?

**விளக்கம் -** இந்த உலகைக் காப்பாற்றும் பொருட்டு, ஒரு காலகட்டத்தில் சீதையும் இராமனை விட்டுப் பிரிந்தாள்; நீயும் அவனது தாமரை போன்ற திருவடிகளை விட்டுப் பிரிந்தாய். சீதை மிகவும் வருந்தியபடி இருந்தாள். நீயோ - அந்த வருத்தத்துடன் நாட்டை ஆட்சி செலுத்தியபடியும் இருந்தாய். இந்தச் செயல் அல்லவா (சீதையின் செயலைவிட) கடினமானது?


**Email:**sridharan_book@yahoo.co.in

*128 ஸீதா ஸகஸ்ய ஸஹஸா சரணாரவிந்தாத்*
*பக்த்யா நதே க்ருதபதா பரத உத்தமாங்கே*
*ஆருஹ்ய நாகம் அபித: பவதீ விதேநே*
*மாயூர சாமர பரம் மணிரச்மி ஜாலை:*

**பொருள் -** பாதுகையே! சீதைக்கு மிகவும் பிரியமான இராமனின் தாமரை மலர் போன்ற திருவடிகளில் இருந்து, இராமனைப் பக்தியுடன் வணங்கி நின்ற பரதனின் தலையில் விரைவாக ஏறினாய். உன்னைப் பரதன் யானை மீது ஏற்றி அமர்த்தினான். உன்னில் பதிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் யானையின் இரு பக்கமும் ஒளி வீச, அதனைக் காணும்போது மயில் தோகை கொண்டு செய்யப்பட்ட சாமரம் வீசுவது போன்று இருந்தது.

**விளக்கம் -** யானை மீது பாதுகை பேரரசியாக அமர்ந்தாள். அப்போது அந்தப் பாதுகைகளில் பதிக்கப்பட்ட உயர்ந்த கற்கள் பேறொளி வீசின. இந்த ஒளியானது இரு பக்கங்களிலும் சாமரம் வீசுவது போன்று இருந்தது.

*129 மூர்த்நா முகுந்த பதரக்ஷிணி பிப்ரத: த்வாம்*
*ஆவிர் மதஸ்ய ரகுவீர மதாவளஸ்ய*
*ஆமோதிபி: ஸபதி தாநஜல ப்ரவாஹை:*
*லேபே சிராத் வஸுமதி ருசிரம் விலேபம்*

**பொருள் -** முகுந்தனின் பாதுகையே! அவனது திருவடிகளைக் காப்பாற்றுபவளே! உன்னைத் தன் மீது ஏற்றிக் கொண்ட இராமனின் யானைக்கு மதஜலம் வெகுவாகப் பெருகியது. அந்த மதஜலம் மிகுந்த வாசனையுடன் விளங்கிற்று. அவை பூமி மீது சந்தனம் பூசுவது போன்று விழுந்தன.

**விளக்கம் -** பாதுகைகள் யானை மீது அமர்ந்தவுடன், அந்த மகிழ்ச்சியால் யானைக்கு மதநீர் பெருகி நின்றது. அந்த மதநீரானது பூமியில் ஓடியது. இதனைக் காணும்போது சந்தனப் பூசியது போன்று உள்ளது.

*130 ஆசா: ப்ரஸாதயிதும் அம்ப ததா பவத்யாம்*
*தைவாத் அகாண்ட சரதீவ ஸமுத்திதாயாம்*
*ஸ்தோகாவசேஷ ஸலிலா: ஸஹஸா பபூவு:*
*ஸாகேத யௌவத விலோசந வாரிவாஹா:*

**பொருள் -** தாயே! பாதுகையே! இராமன் கானகம் புகுந்தவுடன் நீ அயோத்திக்கு மீண்டும் வந்தாய். மக்களின் விருப்பங்களை நிறைவேற்றவல்ல சரத் காலம் போன்று நீ வந்தாய். உன்னைக் கண்டவுடன் அயோத்தி நகரத்தில் இருந்த பெண்களின் கண்கள் என்ற மேகங்கள், தங்கள் மழை நீரை நிறுத்தின.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம் -** சரத் காலம் என்பது மழை நிற்கும் காலம் ஆகும். சரத் காலமாகிற பாதுகை மீண்டும் வந்தவுடன், பெண்களின் கண்கள் என்னும் மேகங்கள் இராமனைப் பிரிந்து சிந்திய கண்ணீர் என்னும் மழையை நிறுத்தின என்று கருத்து.

*131 அந்தே வஸந் அசரமஸ்ய கவே: ஸ யோகீ*
*வந்யாந் ப்ரக்ருஹ்ய விவிதாந் உபதாவிசேஷாந்*
*ஆதஸ்துஷீம் ரகுகுல உசிதம் ஔபவாஹ்யம்*
*ப்ரத்யுஜ்ஜகாம பவதீம் பரத உபநீதாம்*

**பொருள் -** பாதுகையே! அனைத்துக் கவிகளுக்கும் முதன்மையானவரான வால்மீகி முனிவரின் சிஷ்யரான பரத்வாஜ முனிவர் செய்தது என்ன? காட்டில் கிடைத்த பலவிதமான காணிக்கைப் பொருள்களை எடுத்துக் கொண்டு - பரதனால் அழைத்து வரப்பட்டவளும் , ரகுகுலத்தின் அரசர்கள் மட்டுமே ஏறத் தகுதி உடைய யானையில் அமர்ந்து வந்தவளும் ஆகிய உன்னை எதிர் கொண்டு வணங்கினார்.

**விளக்கம் -** ரகுவம்சத்தினர் மட்டுமே ஏறி அமர்வதற்கு உரிமையான யானை மீது பாதுகை கம்பீரமாக அமர்ந்து வந்தாள். ஆக இராமனுக்கு முன்பாகவே பாதுகை அந்நாட்டு யானையின் மீதும் அமர்ந்து செல்லும்படியான பெருமை பெற்றாள்.

*132 மாத: த்வத் ஆகமந மங்கள தர்சநீநாம்*
*ஸாகேதபக்ஷ்மளத்ருசாம் சடுல அக்ஷி ப்ருங்கை:*
*ஜாதாநி தத்ர ஸஹஸா மணிபாதரக்ஷே*
*வாதாய நாநி வதநை: சதபத்ரிதாநி*

**பொருள் -** இராமனின் திருவடிகளை அவனது தாய் போன்று பாதுகாக்கும் பாதுகையே! அயோத்தி நகரத்திற்குள் வருகை தந்த உனது வரவைத் திருமணம் போன்று, மங்களகரமான நிகழ்வாகவே கண்டார்கள். யார்? அந்த நகரத்தின் பெண்கள், தங்கள் மாளிகைகளின் ஜன்னல்கள் வழியே கண்டனர். அவர்கள் முகம் உன்னைக் கண்டதும் மலர்ந்தன. இதனைக் காண்பதற்கு - எவ்வாறு இருந்தது என்றால், ஜன்னல் தோறும் தாமரை பூத்தது போன்று இருந்தன. அவர்களது கண்கள், அந்த மலர்களின் மொய்க்கும் வண்டுகள் போன்று விளங்கின.

**விளக்கம் -** பாதுகைகள் வருவதை அந்த நகரத்தின் பெண்கள் தங்களது மாளிகைகயின் ஜன்னல்கள் வழியே பார்த்தனர். அவர்களது முகம் தாமரை போன்று மலர்ந்தன. அந்த முகத்தில் உள்ள அவர்களது கண்கள், முகமாகிய தாமரையை மொய்க்கும் வண்டுகள் போன்று காணப்பட்டன. இப்படியாக ஒவ்வொரு மாளிகையின் ஜன்னல்களிலும் தாமரை மலர்ந்தது போன்று இருந்தது.

.

*133 ஸாகேதஸீம்நி பவதீ மணிபாதரக்ஷே*
*மாங்கல்ய லாஜநிகரை: அவகீர்யமாணா:*
*கீர்த்தி ஸ்வயம் வரபதே: பரதஸ்ய காலே*
*வைவாஹிகீ ஜநநி வஹ்நி சிகேவ ரேஜே*

**பொருள் -** எங்கள் தாய் போன்ற பாதுகையே! நீ பரதனுடன் அயோத்திக்குள் வந்தாய். அப்போது அங்கிருந்த பெண்கள், மங்களத்தின் அடையாளமாக பொரியை வாரி உன் மீது இரைத்தனர். அவை உன் மீது விழுந்தவுடன், உன்னில் பதிக்கப்பட்டுள்ள இரத்தினக்கற்கள் காரணமாக அக்னி போன்று தோன்றின. இதனைக் காண்பதற்கு எவ்விதம் இருந்தது - கீர்த்தி என்ற பெண் தனது கணவனான பரதனுடன் வந்தது போன்று இருந்தது.

**விளக்கம் -** லாஜஹோமம் என்றால் பொரியைத் தூவி நிகழ்த்துவதாகும். பரதனுடன் பாதுகை மட்டும் வரவில்லை; பாதுகை வந்த காரணத்தால் பரதனுடன் கீர்த்தியும் சேர்ந்தே நாட்டிற்குள் வந்ததாகக் கருத்து.

*134 சத்ர இந்து மண்டலவதீ மணிபாதுகே த்வம்*
*வ்யாதூத சாமர கலாப சரப்ரஸூநா*
*ஸத்ய: பபூவித ஸம்க்ர விகாஸஹேது:*
*ஸாகேத பௌரவநிதா நயந உத்பலாநாம்*

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! வெண்குடைகள் என்னும் சந்த்ர மண்டலம் உடையவளும், வரிசையாக வீசப்படும் சாமரம் என்னும் நாணல் மலர்களை உடையவளும் ஆக நீ அயோத்திக்கு வந்தாய். இப்படியாக நீ அங்கிருந்த பெண்களின் நெய்தல் மலர் போன்ற கண்கள் மகிழ்வதற்குக் காரணமானாய்.

**விளக்கம் -** அயோத்தி நகரத்திற்கு வந்தபோது உனக்குப் பிடிக்கப்பட்டிருந்த வெண்மையான குடைகளைக் கண்டால் சந்திரன் போன்று இருந்தன. உனக்கு வீசப்பட்ட சாமரங்கள் அனைத்தும் நாணல் மலர்கள் போன்று இருந்தன. நீ சரத் காலம் போன்று காணப்பட்டாய். இப்படியாக நீ வந்தபோது - உன்னைக் கண்ட அயோத்தியில் இருந்த பெண்களின் கண்கள், கருநெய்தல் மலர்கள் போன்று மலர்ந்தன..

*135 ப்ரைக்ஷந்த வக்த்ரை: மணிபாதரக்ஷே*
*சத்ருஞ்ஜயம் சைலம் இவ அதிரூடாம்*
*ராமாபிதாந ப்ரதிபந்ந ஹர்ஷை:*
*உத்தாநிதை: உத்தரகோஸலா: த்வாம்*

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! சத்ருஞ்ஜயம் என்று அழைக்கப்பட்ட மலை போன்ற யானை மீது அமர்ந்து வந்த உன்னை, வடக்குக் கோஸல

தேசத்தில் உள்ளவர்கள் இராமன் என்றே பார்த்தனர். மிகுந்த மகிழ்வுடன் தங்கள் தலை நிமிர்த்தி உன்னைக் கண்டனர்.

**விளக்கம் -** மலை போன்ற யானை மீது அமர்ந்து நீ வந்தாய். இப்படி வந்த உன்னைக் கோஸல தேசத்தில் இருந்த அனைவரும் நோக்கினார்கள். அவர்கள் உன்னை இராமனாகவே கண்டனர். அவர்கள் முகம் இராமனைக் கண்டது போன்றே மகிழ்ந்து காணப்பட்டது.

*136 த்ரஷ்டும் ததா ராகவ பாதரக்ஷே*
*ஸீதாம் இவ த்வாம் விநிவர்த்தமாநாம்*
*ஆஸந் அயோத்யாபுர ஸுந்தரீணாம்*
*ஔத்ஸுக்ய லோலாநி விலோசநாநி*

**பொருள் -** இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ மீண்டும் அயோத்திக்கு வந்தபோது அங்கிருந்த பெண்களுக்குச் சீதையைப் போன்றே தோன்றினாய். உன்னை இவ்விதம் காண்பதற்கு அந்தப் பெண்களின் கண்கள் ஆசை கொண்டு, அங்கும் இங்கும் அசைந்தன.

**விளக்கம் -** உத்தமமான பெண்கள் வீதி வழியாகச் செல்லும்போது அவர்களைக் காண்பதற்கு அனைத்துப் பெண்களும் போட்டியிடுவது இயல்பே ஆகும். இங்கு பாதுகாதேவி அல்லவோ செல்கிறாள்? சீதையைக் காட்டிலும் உயர்ந்தவள் ஆயிற்றே! ஆக இவளைக் காண்பதற்குப் பெண்கள் கூடி நின்றதில் வியப்பில்லை.

137 *ஆஸ்த்தாய தத்ர ஸ்புட பிந்து நாதம்*
*ஸ்தம்பேரமம் தாத்ருச ஸந்நிவேசம்*
*அதசயஸ் த்வம் புரமத்யபாகே*
*பாதாவநி த்வத் ப்ரணவாச்ரயத்வம்*

**பொருள் -** எம்பெருமானின் திருவடியைக் காப்பாற்றும் பாதுகையே! நீ கம்பீரமாக யானை மீது அமர்ந்து அயோத்தியின் நடுவில் வந்து நின்றாய். அந்த யானை எப்படி இருந்தது - பிந்து என்ற புள்ளிகள் மிகவும் நேர்த்தியாகவும், ஸ்வரம் போன்று இனிய பிளிறுதலை உடையதுமாக இருந்தது. இவ்விதமாக நீ ப்ரணவாகார விமானத்தை வெளிப்படுத்துவதாக இருந்தாய்.

**விளக்கம் -** ப்ரணவாகாரம் என்பது ஸ்ரீரங்கம் கோவில் விமானம் ஆகும். அதனைப் போன்று இங்கு யானை விளங்கிற்று. அதில் கம்பீரமாகப் பாதுகை வீற்றிருந்தாள். அங்கு ப்ரணவாகாரம் போன்ற யானையில் வீற்றிருந்தாள், இங்கு (திருவரங்கத்தில்) ப்ரணவாகாரத்தின் உள்ளே கண்வளரும் அழகியமணவாளனின் திருவடிகளில் வீற்றிருக்கிறாள்.

138 *தசக்ரீவ ஸ்தம்பேரம தளந துர்த்தாந்த ஹ்ருதயே*
*விஹார ஸ்வாச்சந்த்யாத் விசதி ரகுஸிம்ஹே வநபுவம்*
*ஸ்வ வாத்ஸல்ய க்ரோடீக்ருத பரத சாபேவ பவதீ*
*நிராபாதம் பாதாவநி ந விஜஹௌ கோஸல குஹாம்.*

 Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** இராவணன் என்ற யானையை அழிப்பதில் வேகம் கொண்ட சிங்கமாக இராமன் அடர்ந்த கானகத்தில் புகுந்தான். நீ செய்தது என்ன? பரதன் என்ற குட்டி மீது உள்ள வாத்ஸல்யம் காரணமாக, நீ அந்தக் குட்டியுடன் கோசல நாடு என்னும் குகைக்குத் திரும்பிவிட்டாய்.

**விளக்கம் -** ஆண் சிங்கமாகிய இராமன் வெளியே கிளம்பியவுடன், பெண் சிங்கமாகிய பாதுகை செய்தது என்ன? தனது குட்டிச் சிங்கமான பரதனைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு, அயோத்தி என்ற தனது குகைக்குள் புகுந்தாள்.

139 *கைகேயீ வரதாந துர்த்திந நிராலோகஸ்ய லோகஸ்ய யத்*
*த்ராணார்த்தம் பரதேந பவ்யமநஸா ஸாகேதம் அநீயத*
*ராம த்யாக ஸஹைரஸஹ்ய விரஹம் ரங்கக்ஷிதீந்த்ரஸ்ய தத்*
*பாதத்ராணாம் அநந்ய தந்த்ர பணி தே: ஆபீடம் இடீமஹி*

**பொருள் -** எந்த ஒரு பாதுகையானது - தசரதன் கைகேயிக்கு வரம் கொடுத்த நாளன்று துக்கம் என்ற இருள் மூடிய உலகுக்காக, நல்ல மனம் படைத்த பரதனால் மீண்டும் அயோத்திக்கு அழைத்து வரபபட்டதோ; இராமனைப் பிரிய நேரிட்டாலும் சகித்துக் கொண்ட மக்களால், இதன் பிரிவைத் தாங்க இயலாமல் உள்ளனவோ; யாராலும் இயற்றப்படாமல் உள்ள வேதங்களின் தலைக்கு மகுடம் போன்று உள்ளதும் ஆகிய - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றியபடி இருக்கும் பாதுகையை நாங்கள் துதிக்கிறோம்.

**விளக்கம் -** இங்கு பாதுகையின் பலவிதமான மேன்மையைப் பட்டியல் இடுகிறார். இராமனின் பிரிவைத் தாங்க முடிந்த அயோத்தி மக்களால், பாதுகையின் பிரிவைத் தாங்க இயலவில்லை என்னும் இந்தக் கருத்தை சற்றே மாற்றி - அயோத்தி மக்களைப் பிரிந்து இராமனால் இருக்க முடிந்தது, ஆனால் பாதுகையால் இருக்க முடியவில்லை - என்று கொள்ளலாம் - இதன் மூலம் பாதுகையின் வாத்ஸல்யத்தை உணரலாம்.

*140* *ஸமுபஸ்திதே ப்ரதோஷே*
*ஸஹஸா விநிவ்ருத்ய சித்ரகூட வநாத்*
*அபஜத புந: ஜநபதம்*
*வத்ஸம் தேநு: இவ பாதுகே பவதீ*

**பொருள்**மேய்வதற்காகச் செல்லும் பசுவானது அஸ்தமன நேரத்தில் !பாதுகையே - கன்றுக்குட்டியிடம் வந்து விடுகிறது அது போன்று .நாட்டிற்கும் பரதனுக்கும் கவலை ஏற்பட்டபோது, நீ சித்திரகூடத்தில் இருந்து மிகவும் விரைவாக கோசலத்திற்குத் திரும்பினாய் போலும்.

**விளக்கம்**தாய்ப்பசுவானது மேய்ச்சலுக்குக் கிளம்பிச் சென்று - , சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில், கன்றின் ஞாபகம் உண்டாகிவிட, விரைவாக கன்றிடம் ஓடிவரும்இது போன்று பாதுகைக்கு .

.அயோத்தியின் நினைவு வந்தது போலும் ஆகையால் மிகவும் விரைவாக அயோத்திக்கு ஓடிவந்தாள்.

# ப்ரதிப்ரஸ்தாந பத்ததி ஸம்பூர்ணம்

# ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
# ப்ரதிப்ரஸ்தான பத்ததி ஸம்பூர்ணம்

# தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (6.அதிகார பரிக்ரஹ பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

141 அபீஷ்டே பாதுகா ஸா மே யஸ்யாஸ் ஸாகேதவாஸிபி:
அந்வய வ்யதிரேகாப்யாம் அந்வயமீயத வைபவம்

**பொருள்** - பாதுகை இல்லாதபோதும், அவள் உள்ள போதும் எப்படிப்பட்ட தாழ்வுகளும், பெருமைகளும் ஏற்படுகிறது என்பதை அயோத்தி மக்கள் அறிந்து கொண்டனர். இப்படிப்பட்ட பாதுகை எனக்கு எஜமானியாக உள்ளாள்.

**விளக்கம்** - அந்வயம் என்பது மழைக்குப் பின்னர் பயிர் விளையும் என்பது போன்றதாகும். வ்யதிரேகம் என்பது மழை இல்லையானால் பயிர் இல்லை என்பதாகும். இது போன்று பாதுகை இருந்ததால் பரதன் ராஜ்ஜியம் ஆண்டான்; பாதுகை இல்லாத காரணத்தினால் இராமனுக்கு ராஜ்யம் கிட்டவில்லை, கானகத்தில் இருந்தான்

142 மோசித ஸ்திர சராந் அயத்நத:
கோஸலாந் ஜநபதாந் உபாஸ்மஹே
யேஷு காம்ச்சந பபூவ வத்ஸராந்
தைவதம் தநுஜ வைரிபாதுகா

**பொருள்** - இந்தக் கோசல நாட்டில், அசுரர்களின் சத்ருவான இராமனின் பாதுகைகள் ஆராதிக்கப்பட்டு ஆட்சி செய்து வந்தன. அப்போது அந்த நாட்டில் உள்ள பலரும் மிகவும் எளிதாக, எந்த விதமான யோகங்களும் பெறாமல், ஸம்ஸாரத்தைக் கடந்து மோக்ஷம் பெற்றனர். அப்படிப்பட்ட கோசல நாட்டைத் த்யானிப்போமாக.

**விளக்கம்** - பாதுகைகள் நாட்டை ஆட்சி செய்தபோது, அந்த நாட்டில் வாழ்ந்தவர்கள் எவ்வித மோக்ஷ உபாயங்களும் இன்றி, மோக்ஷம் கைகூடப் பெற்றனர். இப்படிப்பட்ட அந்தப் புண்ணிய பூமியான கோசல நாட்டை வணங்குவோம் என்றார்.

143 ஸாம்ராஜ்ய ஸம்பதிவ தாஸஜநோசிதா த்வம்
ராமேண ஸத்யவசஸா பரதாய தத்தா
ஸ த்வாம் நிவேச்ய சரணாவநி பத்ரபீடே
ப்ருத்வீம் புபோஜ புபுஜே ச யச: விபூதிம்

**பொருள்** - எம்பெருமானின் திருவடிகளை காப்பாற்றும் பாதுகையே! ஸத்ய வாக்கு கொண்டவனாகிய இராமனால், அடியார்களுக்கு அளிக்கப்படத் தகுந்தவளாகிய நீ, ராஜ்யலக்ஷ்மியாகப் பரதனிடம் அளிக்கப்பட்டாய். இப்படியாக வந்த உன்னைப் பரதன் உயர்ந்த ஸிம்ஹாசனத்தில் எழுந்தருளச் செய்தான். இதன் மூலம் இந்த உலகைக் காத்தான். இதனால் ஒப்பற்ற புகழ் பெற்றான்.

**விளக்கம்** - இங்கு பரதன் புகழ் பெற்றான் என்று கூறுவதன் கருத்து என்ன? பாதுகையை இராமனிடம் பெற்று, அவளை அரியணையில் பரதன் அமர்த்தவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படியென்றால் - இராமனின் அரியணையைப் பரதன் அபகரித்தான் என்னும் பழி அல்லவா வந்திருக்கும்? ஆனால் பாதுகையை அரியணையில் எழுந்தருளச் செய்ததால், இங்கு புகழ் அல்லவா கிட்டியது!

144 போகாந் அநந்ய மநஸாம் மணிபாதுகே த்வம்
புஷ்ணாஸி ஹந்த பஜதாம் அநுஷங்கஸித்தாந்
தேநைவ நூநம் அபவத் பரதஸ்ய ஸாதோ
அப்ரார்த்திதம் தத் இஹ ராஜ்யம் அவர்ஜ்ஜநீயம்

**பொருள்** - இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னை விட்டு வேறு எங்கும் தங்கள் மனதைத் திருப்பாமல், உன்னை மட்டுமே த்யானிப்பவர்களுக்கு நீ செய்வது - அவர்கள் கேட்காமலேயே பல நன்மைகளை ஏற்படுத்துகிறாய். என்ன வியப்பு இது! இதனால்தான் மிகவும் உத்தமனான பரதனுக்கு அவன் கேட்காமலேயே, உலகைக் காப்பாற்றும் ராஜ்யப் பொறுப்பு வந்து சேர்ந்தது அல்லவா?

**விளக்கம்** - எந்தப் பலனையும் எதிர்பாராமல் பாதுகையைத் த்யானித்தபடி உள்ளவர்கள் மிகவும் உயர்ந்த பலனை, அவர்கள் கேட்காமலேயே அடைந்துவிடுகின்றனர். இதற்கு ஏதேனும் சான்று உண்டா? உண்டு, பரதன் விஷயத்திலேயே இது நடந்தது என்றார்.

145 ராமப்ரயாண ஜநிதம் வ்யபநீய சோகம்
ரத்நாஸநே ஸ்திதவதீ மணிபாதரக்ஷே
ப்ருத்வீம் நிஜேந யசஸா விஹித உத்தரீயாம்
ஏகாதபத்ர திலகாம் பவதீ விதேநே

**பொருள்** - இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! நீ இராமனை விட்டுப் பிரிந்து வந்த துக்கத்தை அடக்கிக் கொண்டாய். ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்து இராமனைப் பிரிந்த உலகின் துக்கத்தை நீக்கினாய் . உனது கீர்த்தி என்பதையே பூமிக்கு உடையாக உடுத்தி விட்டாய். உனது ஆட்சி என்ற வெண்கொற்றக் குடையை, நெற்றியில் பொட்டு போன்று பூமியை இட்டுக் கொள்ளச் செய்தாய்.

**விளக்கம்** - இங்கு இராமனைப் பிரிந்த துன்பம் தாங்காமல் அயோத்தி மண்ணானது வருந்துவதைக் கூறுகிறார். பூமியாகிய இவள் அந்தத் துன்பம் தாளாமல் சரியாக ஆடை உடுத்துவதில்லை, நெற்றியில் பொட்டும் வைத்துக் கொள்வதில்லை. பாதுகையும்

இராமனைப் பிரிய நேரிட்டபோது, இதே துன்பங்களை அடைந்தாள். ஆயினும் தனது துயரத்தை மறைத்துக் கொண்டு அயோத்திக்கு உதவினாள்.

146 ராம ஆஜ்ஞயா பரவதீ பரிக்ருஹ்ய ராஜ்யம்
ரத்நாஸநம் ரகுகுல உசிதம் ஆச்ரயந்தீ
சுத்தாம் பதாவநி புந: பவதீ விதேநே
ஸ்வாதந்த்ர்யலேச கலுஷாம் பரதஸ்ய கீர்த்திம்

**பொருள்** - எம்பெருமானின் திருவடிகளைக் காப்பவளே! பாதுகையே! இராமனின் ஆணையை ஏற்றுக் கொண்ட நீ, ரகுவம்சத்திற்கு மட்டுமே உரித்தான ஸிம்ஹாஸனத்தை அடைந்து, பட்டத்தை ஏற்றுக் கொண்டாய். இராமனின் சொல்லையும் சமாதானங்களையும் கேட்காமல் இருந்த பரதன் சற்று கலக்கம் அடைந்திருந்தான். அந்தக் கலக்கம் நீங்கும்படியாகவும், கீர்த்தி பெறும்படியாகவும் நீ செய்தாய்.

**விளக்கம்** - இராமனின் ஆணையை பரதன் மீறினான், பரதன் தன் விருப்பப்படி ஸ்வதந்திரமானவனாக செயல்பட்டான் என்ற பழிச்சொல் பரதனுக்கு வராமல், புகழை வந்து சேரும்படியாகப் பாதுகை செய்தாள்.

147 பௌலஸ்த்ய வீர வதந ஸ்தபகாவஸாநாத்
புஷ்பாணி தண்டகவநேஷு அபசேதும் இச்சோ:
ரக்ஷாதுரம் த்ருதவதீ மணிபாதுகே த்வம்
ராமஸ்ய மைதில ஸுதா ஸஹிதே ப்ரசாரே

**பொருள்**இராவணனின் தலைகள் என்ற !இரத்தினக்கற்கள் கொண்ட பாதுகையே - மலர்களைப் பறிக்க இராமன் எண்ணினான்இதனால் அல்லவா அவன் சீதையுடன் . தண்டகாரண்யம் புகுந்து, அங்கிருந்த மலர்களைக் கொய்தபடி இருந்தான்? அந்த நேரத்தில் நீ பூமியின் பாரத்தைச் சுமக்கும் வகையில் ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தாய் . .இதனால்தான் இராமன் கவலை இன்றி கானகத்தில் ஸஞ்சாரம் செய்தான்

**விளக்கம்**மலரைக் கொய்வதற்கு எந்தவிதமான பெரும் முயற்சியும் அவசியம் - இல்லை, மிகவும் எளிதாகவே கொய்யலாம்இங்கு இராமன் இராவணனின் தலைகளை அது . போன்று எளிதாகக் கொய்ய எண்ணினான் என்று கூறுவதன் மூலம் இராமனின் - வலிமையை உணர்த்தினார்இராமன் தனது நாட்டுப் பொறுப்புகளை ப .ாதுகையிடம் ஒப்படைத்ததால், எந்தவிதமான கவலையும் இன்றி இருந்தான்இராமனுக்கு இப்படி . என்றால், நாமும் நமது சுமைகள் பாதுகையிடம் ஒப்படைக்கலாம் அல்லவோ

148 பாதாவநி ப்ரசல சாமரப்ருந்த மத்யே
பத்ராஸந ஆஸ்தர கதா பவதீ விரேஜே
ஆகீர்ண திவ்ய ஸலிலே கடகே ஸுமேரோ:
அம்போஜிநீவ கலஹாயித ஹம்ஸயூதா

**பொருள்**அசைந்து !எம்பெருமானின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே - கொண்டுள்ள சாமரங்களின் நடுவில் ஸிம்ஹாஸனம் உள்ளதுஅதன் மீது இருந்த . மெத்தையில் நீ அமர்ந்துள்ளாய்இதனைக் காணும்போது எவ்விதம் இருந்தது . என்றால் - தங்கமயமாக உள்ள மேரு மலையின் அடிவாரத்தில் உள்ள குளத்தில், தாமரை மலர்கள் அசைந்தபடி உள்ளன; அவற்றின் மீது உள்ள அன்னங்கள் சண்டையிடுவதைப் போன்று இருந்தது.

**விளக்கம்**இங்கு மேருமலையை ஸிம்ஹாஸனம் என்றும் - , குளத்தின் நீர்ப்பரப்பு என்பதை மெத்தை என்றும், தாமரை என்பதைப் பாதுகை என்றும், அன்னம் என்பதை பாதுகைக்கு வீசப்படும் சாமரங்கள் என்றும் கொண்டார்.

149 மாந்யே ரகூத்வஹபதே மணி த்வாம்
விந்யஸ்ய விக்ரஹவதீம் இவ ராஜ்ய லக்ஷ்மீம்
ஆலோலம் அக்ஷவலயீ பரத: ஜடாவாந்
ஆலம்ப்ய சாமரம் அநந்ய மநா: ஸிஷேவே

**பொருள்** - மாணிக்கக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இராமானின் இடத்தில் உன்னைப் பரதன் அமர வைத்தான். இதனைக் காணும்போது, ராஜ்யலக்ஷ்மியே உருவம் எடுத்து ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தது போன்று நீ காணப்பட்டாய். அந்த நேரத்தில் தலையில் ஜடாமுடியும், கையில் ஜப மாலையும் உள்ள பரதன், தனது மனதை வேறு எங்கும் செலுத்தாதபடி, உன்னைத் த்யானித்தபடி சாமரம் வீசினான்.

**விளக்கம்** - இராமன் பூண்ட தவக்கோலத்தைப் பரதனும் உடனேயே கொண்டான் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறார்.

150 ப்ராப்தே திவம் தசரதே பரதே விலக்ஷே
பர்யாகுலேஷு ப்ருசம் உத்தர கோஸலேஷு
த்வம் சேத் உபேக்ஷிதவதீ க இவ அபவிஷ்யத்
கோபாயிதும் குசகஸ்ய விபோ: பதம் தத்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - தசரதன் ஸ்வர்க்கலோகம் அடைந்தார். அவர் உயிர் நீங்க, தானே காரணம் என்று வெட்கப்பட்ட பரதன், ஸிம்ஹாஸனம் ஏற்காமல் இருந்தான். இதனைக் கண்ட அயோத்தி மக்கள் அனைவரும் கலங்கி நின்றனர். அப்போது நீயும் ஸிம்ஹாஸனத்தில் அமராமல் இருந்திருந்தால், குகனின் நண்பனான இராமனின் ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்து, அயோத்தியை யார்தான் காப்பாற்ற இயலும்?

**விளக்கம்** - இங்கு பாதுகையின் பெருந்தன்மை வெளிப்படுகிறது. பரதன் தனது வெட்கம் என்னும் சுயநலம் கருதி நாட்டைக் கைவிட்டான். ஆனால் பாதுகையோ, இராமனைப் பிரிவது மிகவும் கடினமான செயலாக இருந்தபோதிலும், நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு, தனது சுயநலத்த எண்ணாமல், அயோத்திக்கு வந்தாள்.

151 ப்ராது: யதம்ப வரஹாத் பரதே விஷ்ண்ணே
தாக்ஷிண்யம் ஆச்ரிதவதீ மணிபாதுகே த்வம்
ஆஸீத் அசேஷ ஜகதாம் ச்ரவண அம்ருதம் தத்
வாசால காஹளஸஹம் பிருதம் ததா தே

**பொருள்** - இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! தாயே! தனது தமையனான் இராமனின் பிரிவு காரணமாகப் பரதன் மிகவும் துயரம் கொண்டான். அவனுக்காக நீ மீண்டும் அயோத்தி வந்தாய். இவ்விதம் வந்த நீ ஸிம்ஹாஸனம் ஏற்றாய். அப்போது எக்காளம் போன்ற வாத்தியங்கள் முழங்கின. இவை உலகினர் அனைவருக்கும், அவர்கள் காதுகளுக்கு இன்பம் அளிப்பதாகவும், உனது புகழைப் பறை சாற்றுவதாகவும் அமைந்தன.

**விளக்கம்** - பரதனுக்காகவே பாதுகைகள் அயோத்திக்கு வந்ததாகக் கூறுகிறார். இந்த வரவைக் கொண்டாடும் பொருட்டு, சக்ரவர்த்திகளுக்கு அளிக்கும் மரியாதைகளான எக்காளம் முழங்குதல் முதலானவை காணப்பட்டதாகக் கூறுகிறார்.

152 ராஜ்யம் ததா தசரதாத் அநு ராமத: ப்ராக்
பிப்ராணயா சரணரக்ஷிணி வீதகேதம்
துல்யாதிகார பஜநேந பபூவ தந்ய:
வம்ச: த்வயா அம்ப மநுவம்ச மஹீபதிநாம்

**பொருள்** - சரணம் என்று புகுந்தவர்கள் அடையும் இடமான திருவடிகளைக் காப்பவளே! தாயே! பாதுகையே! தசரதனுக்கு பின்னால் இராமன் ஸிம்ஹாஸனம் அமரவில்லையே என்ற வருத்தத்தை நீ போக்கினாய். அந்த ஸிம்ஹாஸனத்தை இராமனுக்கு முன்பாக நீ

அலங்கரித்தாய். இராமனுக்குப் பின் வந்த மனுகுலத்து அரசர்கள் அனைவரும், நீ அமர்ந்து ஆண்ட ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்ததால் மிகவும் பெருமை பெற்றனர்.

**விளக்கம்** - இங்கு பாதுகையால் இக்ஷ்வாகு குலத்தின் ஸிம்ஹாஸனத்திற்குப் பெருமை உண்டானது என்றார். இக்ஷ்வாகு குலத்தில் உதித்த இராமனால் அந்த குலத்திற்குப் பெருமை, இராமனின் பாதுகைகளால் அந்த ஸிம்ஹாஸனத்திற்குப் பெருமை, இக்ஷ்வாகு குலதனமான ஸ்ரீரங்கநாதனுக்கு இராமனால் ஆராதிக்கப்பட்டவன் என்பதால் பெருமை - ஆக, இப்படியாக இராமனாலேயே இக்ஷ்வாகு குலத்திற்குப் பல பெருமைகள் உண்டாயின. அந்த இராமனின் ஸிம்ஹாஸனத்தின் மூலம், பின்னே வந்த அரசர்களுக்குப் பெருமை ஏற்பட்டது.

153 வர்ஷாணி தாநி வ்ருஷளோ ந தபாம்ஸி தேபே
பாலோ ந கச்சித் அபி ம்ருத்யுவசம் ஜகாம
ராஜ்யே தவ அம்ப ரகுபுங்கவ பாதரக்ஷே
ந ஏவ அபரம் ப்ரதி விதேயம் அபூத் ப்ரஸக்தம்

**பொருள்**நீ !இராமனின் திருவடிகளை அவனது தாய் போன்று பாதுகாப்பவளே - அயோத்தியை ஆண்ட போது மற்ற வர்ணத்தினர்கள் யாரும் தவம் இயற்றவில்லை - (அந்தணன் தவிர(; எந்தக் குழந்தையும் இறந்து போகவில்லை; ப்ராயச்சித்தம் தேடும் அளவிற்கு எந்தவிதமான குற்றமும் நிகழவில்லை.

**விளக்கம்**பாதுகையின் ஆட்சியில் எந்தவிதமான குற்றங்களோ அல்லது - தோஷங்களோ அயோத்தியைத் தீண்டவில்லை என்றார்மக்கள் நிறைவாக இருந்தால் ., நாட்டில் குற்றங்கள் குறைவது இயல்பே ஆகும்இந்த நிலை பாதுகைகள் நாட்டை . ஆண்டபோது காணப்பட்டதாகக் கூறுகிறார்.

154 விச்வம் த்வத் ஆச்ரித பதாம்புஜ ஸம்பவாயாம்
யஸ்யாம் ப்ரதிஷ்ட்டிதம் இதம் மணிபாதரக்ஷே
ஆஸீத் அநந்ய சரணா ஸமயே யதாவத்
ஸ அபி த்வயா வஸுமதீ விஹித ப்ரதிஷ்ட்டா

**பொருள்** - இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! இந்தப் ப்ரபஞ்சம் மிகவும் பெரியது. ஆயினும் இது, இப்போது உன்னால் காக்கப்படும் திருவடிகளில் இருந்து தோன்றிய பூமியில், பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டது. ஏன் ? இராமன் கானகம் சென்றபோது உன்னைத் தவிர காக்க ஆளில்லாமல் நின்ற பூமியை நீ காப்பாற்றி வந்தாய். அதனால் அல்லவோ ப்ரபஞ்சமானது இந்தப் பூமியில் அடைக்கலமாக வைக்கப்பட்டது?

**விளக்கம்** - ப்ரபஞ்சத்தில் ஒரு பகுதியாக உள்ள பூமியை நாடி, ப்ரபஞ்சமே வந்தது என்றார். இதன் காரணம் பாதுகையின் பாதுகாப்பு இங்கு மட்டுமே உள்ளது என்பதால் ஆகும்.

155 ப்ராயேண ராம விரஹ வ்யதிதா ததாநீம்
உத்ஸங்கம் ஆச்ரிதவதீ தவ ராஜ்யலக்ஷ்மீ:
தாம் ஏவ தேவி நநு ஜீவயிதும் ஜலார்த்ராம்
அங்கீசகார பவதீ பரதோபநீதாம்

**பொருள்** - தாயே! பாதுகாதேவீ ! இராமன் கானகம் புறப்பட்டவுடன் அயோத்தி என்ற ராஜ்யலக்ஷ்மி மயக்கம் அடைந்து சாய்ந்தாள். அவள் உன் மடி மீது வந்து சேர்ந்தாள். அப்போது பரதன் உனக்கு வீசிய விசிறியின் ஈரம் மூலமாகவே ராஜ்யலக்ஷ்மியின் மயக்கம் தெளிய வைத்தாய் அன்றோ?

**விளக்கம்** - உன்னைச் சரணம் புகுந்த ராஜ்யலக்ஷ்மியை நீ காக்க எண்ணினாய். இதனால்தான் நீ, பரதனின் விசிறியை ஏற்க முன்வந்தாய் அல்லவா? "பரதனின் விசிறியை ஏற்க முன்வந்தாய்" - என்பதன் கருத்து என்ன? பொதுவாக மன்னர்களுக்கு விசிறி வீசுவது வழக்கமாகும். இங்கு பாதுகை அரியணையில் அரசியாக அமர முன்வந்தாள் என்பதை இவ்விதம் சூசகமாகக் கூறுகிறார்.

156 வீர வ்ரத ப்ரணயிநி ப்ரதமே ரகூணாம்
ப்ராப்தே சிராய பரதே வ்ரதம் ஆஸிதாரம்
த்யக்த்வா பதாவநி ததா விவிதாந் விஹாராந்
ஏகாஸிகா வ்ரதம் அபூர்வம் அவர்த்தய: த்வம்

**பொருள்** - பாதுகையே! இராமன் தனது தந்தையின் வாக்கைக் காப்பாற்றவும், உலகைக் காப்பதற்காக அசுரர்களை அழிக்கவும் சபதம் மேற்கொண்டான். இவற்றை முடிக்கும்வரை அயோத்தி திரும்புவதில்லை என்ற விரதம் பூண்டான். அனைத்து விஷயங்களும் அருகில் உள்ளபோதும், அவற்றை அனுபவிக்கப் போவதில்லை என்று பரதன் விரதம் பூண்டான். நீ செய்தது என்ன - இராமனின் திருவடிகள் மீது மிகவும் ப்ரியம் உள்ள நீ, அவற்றைத் துறந்து, ஒரே இடத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றுதல் என்ற விரதம் பூண்டாய்.

**விளக்கம்** - இங்கு இராமன் பூண்ட விரதமும், பரதன் பூண்ட விரதமும் எப்படிப்பட்டது என்றால் - தங்களுக்குப் ப்ரியமான எதனையும் இழக்காமலேயே பூண்ட விரதமாகும். ஆனால் பாதுகையின் விரதம் அப்படிப்பட்டது அல்ல. தனக்கு மிகவும் விருப்பமான


**Email:**sridharan_book@yahoo.co.in

திருவடிகளை விட்டுப் பிரிந்த பின்னரே, பாதுகை அயோத்திக்கு வந்தாள். ஆக இவளது விரதம் அல்லவோ மேலானது?

157 காகுத்ஸ்த்த பாத விரஹ ப்ரதிபந்ந மௌநாம்
நிஷ்ப்பந்ததாம் உபகதாம் மணிபாதரக்ஷே
ஆச்வாஸயந் இவ முஹு: பரதஸ் ததாநீம்
சீதை: அவீஜயத் சாமரமாருதை: த்வாம்

**பொருள்** - இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இராமனின் பிரிவைத் தாங்க இயலாமல் நீ மிகவும் சோகம் அடைந்தாய் போலும். அதனால்தான் அசையாமல், மௌனமாக நீ அமர்ந்தாய் போலும். இப்படியாக உள்ள உன்னைச் சமாதானம் செய்யும் பொருட்டு, பரதன் சாமரம் கொண்டு அடிக்கடி குளிர்ந்த காற்றை வீசியபடி இருந்தான்.

**விளக்கம்** - இராமனி விட்டுப் பிரிந்த சோகத்தைப் பாதுகையால் தாங்க இயலவில்லை. எனவே அடிக்கடி மூர்ச்சையாகி நின்றாள். அப்போது பரதன் சாமரம் கொண்டு குளிர்ந்த காற்று வீசி, மூர்ச்சையைத் தெளிய வைத்தபடி இருந்தான்.

158 யத்ர க்வசித் விஹரத: அபி பதாரவிந்தம்
ரக்ஷ்யம் மயா ரகுபதே: இதி பாவயந்த்யா
நிச்ஷேமேவ ஸஹஸா மணிபாதரக்ஷே
நிஷ்கண்டகம் ஜகதிதம் விததே பவத்யா

**பொருள்** - இரத்தின கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! "இராமன் எந்த இடத்தில் சஞ்சாரம் செய்தாலும் அவனது திருவடிகளைக் காக்கும் பொறுப்பு என்னுடையது", என்று நீ எண்ணுகிறாய் போலும். அதனால்தான் இந்த உலகம் முழுவதும் விரோதிகள் இல்லாமல் உள்ளனர்.

159 ராமம் த்வயா விரஹிதம் பரதம் ச தேந
த்ராதும் பதாவநி ததா யத் அபூத் ப்ரதீதம்
ராமாநுஜஸ்ய தவ ச அம்ப ஜகத் ஸமஸ்தம்
ஜாகர்த்தி தேந கலு ஜாகரண வ்ரதேந

**பொருள்** - இராமனின் திருவடிகளை அவனது தாய் போன்று பாதுகாக்கும் பாதுகையே! உன்னைப் பிரிந்த இராமனை, இலட்சுமணன் எப்போதும் விழித்துக் கொண்டு காப்பது என்ற விரதம் பூண்டான். இராமனைப் பிரிந்த உள்ள பரதனையும், நாட்டையும் காப்பது


**Email:**sridharan_book@yahoo.co.in

என்று நீ உறுதி பூண்டாய். இதனால் அன்றோ இந்த உலகங்கள் அனைத்தும் மிகவும் பாதுகாப்பாக உள்ளன?

**விளக்கம்** - இராமனைக் கானகத்தில் கண் உறங்காமல் இலட்சுமணன் காத்தான். இது அவனுடைய தாயின் ஆணையாகும். அவள் இலட்சுமணனிடம், "இராமனின் நடை அழகில் மயங்கி நின்றுகூட நீ அவனைக் காக்காமல் இருந்துவிடாதே", என்றாள். இராமனை இலட்சுமணன் எப்படிக் காத்தானோ, அதைவிட அதிகமாகப் பாதுகை பரதனைக் காக்க முடிவுசெய்தாள். பரதனை மட்டும் அல்லாமல், அவனது நாட்டையும் காப்பாற்றினால் அல்லவோ, முழுமையான காப்பாற்றுதல் ஆகும்?

160 அந்த:புரே பரிஜநை: ஸமய உபயாதை:
அபி அர்ச்சிதா பவஸி யா விநயோபபந்நை:
ஸா கோஸலேச்வர பாதாவநி பூபதீநாம்
ஸங்கட்டநம் மகுடபங்க்திபி: அந்வபூ: த்வம்

**பொருள்** - கோஸல தேசத்தின் ராஜாவாகிய இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ அந்தப்புரத்தில் உள்ள நேரங்களில், அங்கு உள்ள வேலையாட்களால் மிகவும் மரியாதையுடன் நடத்தப்படுகிறாய். ஸிம்ஹாஸனத்தில் வந்து அமர்ந்தவுடன், பல அரசர்களின் க்ரீடங்கள் உன் மீது இடித்தபடி (தலைசாய்த்தபடி) நிற்க, நீ கம்பீரமாக வீற்றுள்ளாய்.

**விளக்கம்** - பாதுகையிடம் உள்ள மரியாதை மற்றும் பயம் காரணமாகப் பல அரசர்களும் மிகவும் வேகமாக ஓடி வந்து, மென்மையாகப் பாதுகையில் விழுவதற்குப் பதிலாக, வேகமாக வந்து விழுகின்றனரே! பாதுகைக்குத் துன்பம் ஏற்படப் போகிறதே என்று வருத்தம் கொள்கிறார்.

161 ப்ராப்ய அதிகாரம் உசிதம் புவநஸ்ய குப்த்யை
பத்ராஸநம் பரதவந்திதம் ஆச்ரயந்த்யா
மத்யே அவதீர்ணம் இவ மாதவ பாதரக்ஷே
மாத: த்வயாபி மநுவம்சமஹிபதீ நாம்

**பொருள்** - தாய் போன்ற பாதுகையே! இந்த உலகைக் காப்பாற்றும் பொருட்டு நீ இராமனால் நியமிக்கப்பட்டாய். பரதனால் ஆராதிக்கப்பட்டு ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தாய். உன்னை இவ்விதம் காணும்போது மநுகுலத்தில் உதித்த பேரரசி போன்று, அந்தக் குலத்திற்குப் பொருத்தமாகவே உள்ளாய்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாமல் வேறு யாரும் ஸிம்ஹாஸனத்தில் அமர இயலாது. ஆனால், பாதுகைக்கு இராமனின் தொடர்பு உள்ளது, பரதனின் ஆராதனை உள்ளது. ஆகவே இவள் அரியணையில் அமர்வது பொருத்தமே என்றார்.

162 ராஜாஸநே ரகுகுலோத்வஹ பாதரக்ஷே
நீராஜநம் ஸம்பவத் ஸம்யோசிதம் தே
ச்லாகா வசேந பஹுச: பரிகூர்ணிதாபி:
ஸாமந்த மௌளி மணி மங்கள தீபிகாபி:

**பொருள்** - ரகு குலத்தில் உதித்த இராமனின் பாதுகையே! உன்னைக் கொண்டாடுவதற்காக உனது ஸிம்ஹாஸனத்தைச் சுற்றி பல அரசர்கள் நின்றனர். அப்போது அவர்கள் க்ரீடங்களில் உள்ள இரத்தினக்கற்களின் ஒளியானது உன் மீது அசைந்தபடி காணப்பட்டது. இதனைக் காணும்போது உனக்கு மங்கல ஹாரத்தி எடுப்பது போன்று இருந்தது.

**விளக்கம்** - பாதுகை அயோத்தி நகரத்தை ஆட்சி செய்து வந்த நேர்த்தியைக் கண்டு பல அரசர்களும் மயங்கி நின்றனர். இதனை ஆமோதித்தபடி அவர்கள் தங்கள் தலைகளை அசைத்தனர். இதனால் அவர்களின் க்ரீடங்களில் பதிக்கப்பட்ட கற்களின் ஒளியானது பாதுகைக்கு ஹாரத்தி எடுப்பது போன்று காணப்பட்டது.

163 ப்ருத்வீபதீநாம் யுகபத் க்ரீடா:
ப்ரத்யர்த்திநாம் ப்ராணிதும் அர்த்திநாம் ச
ப்ராபு: ததா ராகவ பாதரக்ஷே
த்வதீயம் ஆஸ்த்தாநிக பாதபீடம்

**பொருள்** - இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ அயோத்தி நாட்டின் ஸிம்ஹாஸனத்தில் விற்றிருந்தபோது உன்னை எதிர்க்க முயன்ற அரசர்கள் தோற்றனர். ஒரு சில அரசர்கள் உன்னை வணங்கி நின்றனர். இவ்வாறு உள்ள இருவகையான அரசர்களின் க்ரீடங்களும் ஒரே போன்று உனது ஆஸ்தானத்தை அடைந்தன.

**விளக்கம்** - ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்து, கால்கள் வைக்கும் இடம் என்பது ஆஸ்தானம் எனப்படும். எதிர்த்துத் தோற்ற அரசர்களையும், "அவர்கள் அரசர்கள்" என்னும் மரியாதை அளித்து, அவர்களையும் மற்றவர்களைப் போன்றே நடத்திய விதம் வெளிப்படுவது காண்க. இந்தப் பண்பு மிகவும் முக்கியமானதாகும்.

164 ப்ரணம்ய ரங்கேச்வர பாதரக்ஷே
தூரோபநீதை: உபதாவிசேஷை:
ஸபாஜயந்தி ஸ்ம ததா ஸபாயம்
உச்சைஸ்தராம் உத்தரகோஸலா: த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பாதுகாக்கும் பாதுகையே! நீ அயோத்தியில் ஸிம்ஹாஸனம் ஏறி கம்பீரமாக ஆட்சி செய்து சொண்டிருந்தாய். அப்போது வடக்கு கோசல நாட்டில் உள்ள மக்கள் பலரும் அயோத்தி வந்தனர். வெகுதூரத்தில் இருந்து வந்த அவர்கள், தாங்கள் கொண்டு வந்திருந்த உயர்ந்த காணிக்கைகளை உன்னிடம் சமர்ப்பித்து வணங்கி நின்றனர்.

165 அபாவ்ருத த்வாரம் அயந்த்ரிதாச்வம்
ரங்கேச பாதாவநி பூர்வம் ஆஸீத்
த்வயா யத்ருச்சா ஸுகஸுப்த பாந்த்தம்
ராமே வநஸ்த்தே அபி பதம் ரகூணாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பாதுகாப்பவளே! பாதுகையே! இராமன் கானகம் புகுந்தவுடன் நீ ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருந்தபோது நிகழ்ந்தது என்ன? பகைவர்கள் யாரும் வருவது இல்லாமல் உள்ளதால் அயோத்தியின் கோட்டைக் கதவுகள் திறந்தே கிடந்தன. யானைப்படை, குதிரைப்படை ஆகியவற்றில் உள்ள யானைகளும் குதிரைகளும் கட்டி வைக்கப்படாமல், அயோத்தியின் வீதிகளில் சுற்றின. அந்த நாட்டின் அரசனான இராமன் கானகத்தில் உள்ளபோதிலும், பாதுகா இராஜ்ஜியம் காரணமாக, எந்தவிதமான கவலையும் இன்றி வழிப்போக்கர்கள் வந்து உறங்கிச் சென்றபடி நாடு இருந்தது.

166 அநந்ய பக்தி: மணிபாதுகே த்வாம்
அபி அர்ச்சயந் தாசரதி: த்வீதீய:
விகல்ப்யமாந: ப்ரதமேந கீர்த்யா
வந்த்ய: ஸ்வயம் வ்யோமஸதாம் பபூவ

**பொருள்** - இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! எந்த ஒரு பயனும் எதிர்பார்க்காமல், உன்னிடம் மட்டுமே பக்தி கொண்டு, பரதன் உன்னை மட்டுமே வணங்கி நின்றான். இதனால் தசரதனின் இரண்டாவது புத்திரனான அவனை, முதல் பிள்ளையான இராமனுக்குச் சமமாகவே அனைவரும் கருதினர். இப்படியாகப் பரதன் தேவர்களுக்குச் சமமானவனாகவே வணங்கப்பட்டான்.

167 அரண்ய யோக்யம் பதம் அஸ்ப்ருசந்தீ
ராமஸ்ய ராஜார்ஹ பதே நிவிஷ்டா
ஆஸ்த்தாந நித்யாஸிகயா நிராஸ்த்த:
ஸ்வர்கௌகஸாம் ஸ்வைரகதே: விகாதம்

**பொருள்** - பாதுகையே! இராமனின் திருவடிகளை நீ தொடாதவளாக, ஸிம்ஹாசனத்தில் அமர்ந்துவிட்டாய். இவ்வாறு நீ எங்கும் நகராமல் இருந்த காரணத்தினால், தேவர்களுக்கு அசுரர்களிடம் இருந்த பயம் நீங்கப்பெற்று எங்கும் சஞ்சரிக்க இயன்றது.

168 ராஜாஸநே சேத் பவதீ நிஷண்ணா
ரங்கச பாதாவநி தந்ந சித்ரம்
யத்ர அதிரூடா: க்ரமஸ: புரா த்வாம்
உத்தம்ஸயந்தே ரகுஸார்வபௌமா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பாதுகாக்கும் பாதுகையே! இக்ஷ்வாகு போன்ற அரசர்கள் அமர்ந்த ஸிம்ஹாசனத்தில் நீ அமர்ந்த காரணத்தில் எந்த ஒரு வியப்பும் இல்லை - காரணம், அவர்கள் உன்னைத் தங்கள் தலையில் தாங்கியபடி ஸிம்ஹாசனத்தில் அமர்ந்தனர். உன்னையே தங்கள் தலைக்கு அலங்காரமாக வைத்துக் கொண்டனர். அப்படி அவர்கள் தலையில் அமராமல் நேரடியாக ஸிம்ஹாசனத்தில் நீ அமர்வதில் என்ன வியப்பு உள்ளது?

169 பத்ராஸநம் சேத் பரிவ்ருத்தம் ஆஸீத்
தேவி க்ஷணம் தக்ஷிணதோமுகம் தே
கதம் பவேத் காஞ்சந பாதரக்ஷே
ராமஸ்ய ரக்ஷ: ம்ருகயா விஹார;

**பொருள்** – பொன்மயமான பாதுகாதேவியே! நீ உனது ஸிம்ஹாசனத்தை ஒரு நொடிப்பொழுது தெற்குத் திசை பார்த்தபடி இட்டிருந்தால் போதுமானது. இவ்வாறு நீ செய்திருந்தால் இராமன் இலங்கை சென்று அரக்கர்களை அழிப்பது என்ற லீலையே இல்லாமல் போய் இருக்கும் அல்லவா? (இராமனின் செயலை பாதுகையே செய்திருப்பாள் என்றார்).

170 யாவத் த்வயா ராகவ பாதரக்ஷே
ஜிகீஷிதா ராக்ஷஸ ராஜதாநீ
மாலேவ தாவத் லுளிதா மதாந்தை:
உத்யாந சாகாம்ருக யூதபைஸ்தே

**பொருள்** - இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இரு காலகட்டங்களில் இலங்கை நகரத்தை வெல்லவேண்டும் என்று நீ விரும்பினாய். அப்போது கொழுத்த வானரவீரர்கள் மூலமாக இலங்கை நகரமானது, மலர்கள் போன்று கசக்கி வெல்லப்பட்டது (இராவணன் சீதையை அபகரித்தான் என்று அறிந்தவுடன் நீ பரதனின் சேனையை அனுப்ப எண்ணினாய். ஆனால் உனது எண்ணம் காரணமாகவே வானரவீரர்கள் அச்செயலை முடித்துவிட்டனர் என்று கருத்து).

171 மஹீக்ஷிதாம் ராகவபாதரக்ஷே
பத்ராஸநஸ்த்தாம் பவதீம் ஸ்ப்ருசந்த:
பூர்வம் ததாத்வே நியதே அபி பூய:
கல்யாணதாம் ஆநசிரே கிரீடா:

**பொருள்** - இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ சிம்மாசனத்தில் வீற்றிருந்தபோது, உன்னை அரசர்களின் தலையில் உள்ள கிரீடங்கள் (அவர்கள் உன்னை வணங்கும்போது) தொட்டன. அவை முன்பே தங்கமாக உள்ளபோதிலும், உன்னைத் தொட்ட பின்னர் மட்டுமே உயர்ந்த பலனைப் பெற்றன.

172 அநிச்சத: பாண்டரம் ஆதபத்ரம்
பித்ரா விதீர்ணம் மணிபாதரக்ஷே
ஆஸீத் த்வத் அர்த்தம் வித்ருதேந தேந
சாயா ஸமக்ரா பரதஸ்ய மௌளௌ

**பொருள்** - இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! தனது தந்தையான தசரதன் தனக்கு அளித்த வெண்மையான குடையை பரதன் மறுத்தான். ஆயினும் உனக்காக அவன் அந்த வெண்கொற்றக் குடையைப் பிடித்தபடி உள்ளான். அந்தக் குடையின் நிழல் அவன் தலை மீது அழகாக விழுந்தபடி உள்ளது.

173 பாதுகே ரகுபதௌ யத்ருச்சயா
ப்ரஸ்திதே வனவிஹார கௌதுகாத்
ஆதி ராஜ்யம் அதிகம்ய தே யுவாம்
அக்ஷதம் வஸுமதீம் அரக்ஷதம்

**பொருள் -** ஏ பாதுகே! இராமன் எந்தவிதமான முன்னேற்பாடும் இல்லாமல், காட்டில் வாசம் செய்யும் மகிழ்வு கொண்டு புறப்பட்டான். அந்த நேரத்தில் நீயும் பரதனும் அயோத்தியை அடைந்து, இந்தப் பூமிக்கு எந்தவிதமான குறையும் இன்றி பார்த்துக் கொண்டீர்கள்.

174 ரகுவீர பதாநுஷங்கமாத்ராத்
பரிபர்ஹேஷு நிவேசிதா யதி த்வம்
அதிகாரதிநே கதம் புந: தே
பரிவாரா: தவ பாதுகே பபூவு:

**பொருள் -** பாதுகையே! இராமனுடைய திருவடித் தொடர்பு உனக்குக் கிட்டியது. இதனால் உன்னை அவனுடைய குடை, சாமரம் போன்று பொருள்களுடன் ஒப்பிட இயலாது. இவ்விதம் ஒப்பிடலாம் என்றால், நீ சிம்மாசனம் அமர்ந்தபோது அந்தக் குடை, சாமரம் போன்றவை உனக்கு ஏவல் செய்யும் பொருள்களாக எவ்விதம் வந்தன?

175 புருஷார்த்த சதுஷ்டயார்த்தீநாம்
பரிஷத் தே மஹிநா வஸிஷ்டமுக்யை:
க்ரய விக்ரய பட்டணம் ப்ரஜாநாம்
அபவத் காஞ்சந பாதுகே ததாநீம்

**பொருள் –** பொன்மயமான பாதுகையே! நீ சிம்மாசனத்தில் அமர்ந்தபோது உனது அரச சபையானது வசிஷ்டர் முதலான பல மஹரிஷிகளால் பெரிதும் போற்றப்பட்டது. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கு பலன்களையும் விரும்பும் மக்கள், அவை மிகவும் எளிதாக உனது சபையில் கிட்டியது என்று வந்தனர். இதனால் உனது சபை வியாபார ஸ்தலம் போன்று காணப்பட்டது.

176 மநுஜத்வ திரோஹிதேந சக்யே
வபுஷா ஏகேந விரோதிநாம் நிராஸே
அபஜத் பரதாதி பேதம் ஈச:
ஸ்வயம் ஆராதயிதும் பதாவநி த்வாம்

**பொருள் -** திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மனிதனாகப் பிறந்து, ஒரே உடல் எடுத்து மட்டுமே இராவணன் போன்றோரை இராமன் வதம் செய்வது இயலும். ஆயினும் ஏன் பரதன் போன்று பல உடல்கள் எடுத்துத் தோன்றினான்? ஸ்ரீரங்கநாதனின் பாதுகையான உன்னை ஆராதிக்க அல்லவா இவ்விதம் பகவான் தோன்றினான்

(பகவானே பாதுகையை ஆராதித்தான் என்று கருத்து. எப்படி? தனது பக்தையான பாதுகையை, தானே ஆராதித்துக் கொண்டாடினான்)?

177 மகத அங்க களிங்க வங்க முக்யாந்
விமதாந் ரந்த்ரகவேஷிண: ஸஸைந்யாந்
ரகுபுங்கவ பாதுகே விஜிக்யே
பரத: சாஸநம் உத்வஹந் பவத்யா:

**பொருள்** - இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இராமன் கானகம் புகுந்தவுடன் அயோத்தியைக் கைப்பற்ற மகதம், அங்கம், போன்ற நாட்டின் அரசர்கள் முனைந்தனர். அப்போது சிம்மாசனம் அமர்ந்த உனது ஆணை மூலமாக அவர்களைப் பரதன் தனது படைகளுடன் சென்று வென்றான்.

178 அநிதரவஹநீயம் மந்த்ரி முக்யை: யதா தத்
த்வயி விநிஹிதம் ஆஸீத் ஸூர்ய வம்சாதி ராஜ்யம்
ரகுபதி பதரக்ஷே ரத்நபீடே ததாநீம்
ச்ரியம் இவ தத்ருசு: த்வாம் ஸாதரம் லோகபாலா:

**பொருள்** - இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இராமன் கானகம் புகுந்த பின்னர் அயோத்தியை அந்நாட்டு உயர்ந்த மந்திரிகளால் கூட ஆள முடியவில்லை. யாராலும் சுமக்க இயலாத ராஜ்யபாரத்தை உன்னிடம் வைத்தனர். சூரிய வம்சத்தின் அரச சிம்மாசனத்தில் நீ அமர்ந்தபோது தேவர்களும் அரசர்களும், இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் நீ அமர்ந்ததைக் கண்டு மகிழ்ந்தனர். மஹாலக்ஷ்மி திருப்பாற்கடலில் உதித்தபோது அவளைப் போற்றியது போன்று, உன்னைப் போற்றி நின்றனர்.

179 பரிஹ்ருத தண்டகாத்வ கமநம் பதரக்ஷிணி தத்
பரிணத விச்வ ஸம்பத் உதயம் யுவயோ: த்விதயம்
ரகுபதி ரத்னபீடம் அதிருஹ்ய ததா விததே
வ்யபகத வைரிபூப நிலயம் வஸுதாவலயம்

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைப் பாதுகாக்கும் பாதுகையே! இராமன் தண்டகாரண்ய வனத்திற்கு வந்தபோது, நீங்கள் இருவரும் (இரு பாதுகைகள் – ஒரு ஜோடி) அவனுடன் சஞ்சாரம் செய்யாமல் அயோத்திக்குத் திரும்பினீர்கள். இராமனின் கற்கள் இழைத்த சிம்மாசனத்தில் அமர்ந்த நீங்கள் இருவரும், அனைத்து உலகங்களையும் விருத்தி அடையும்படிச் செய்தீர்கள்.

180 ப்ராப்த உதயா ததாநீம்
கிம் அபி தம: தத் நிராகரோத் பவ்தீ
தநுரிவ மனுகுல ஜநுஷாம்
ப்ரஸவித்ரீ ரத்நபாதுகே ஸவிது:

**பொருள்** – இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இராமன் கானகம் புகுந்தபோது நீ அரசபதவி ஏற்கும் உதயம் என்பதை அடைந்தாய். ஆக மநுகுலத்தின் அரசர்களுக்கு ஆதாரமாக உள்ள சூரியன் போன்று நீ ஆனாய். இதன் மூலம் எங்கும் உள்ள இருளை நீக்கினாய்.

## அதிகார பரிக்ரஹ பத்ததி ஸம்பூர்ணம்

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## அதிகார பரிக்ரஹ பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (7.அபிஷேக பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

181. பாஹி ந: பாதுகே யஸ்யா விதாஸ்யந் அபிஷேசநம்
ஆபிஷேசநிகம் பாண்டம் சக்ரே ராம: ப்ரதக்ஷிணம்.

பொருள் – பாதுகையே! இராமன் கானகம் புகுதற்கு முன்பாக, தனது பட்டாபிஷேகத்திற்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களை ஒருமுறை வலமாக வந்து பார்வை இட்டான். இதன் மூலம் உனக்கு அப்போதே இராமனால் பட்டாபிஷேகம் நடத்தப்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட பாதுகையே! எங்களைக் காக்கவேண்டும்.

182. ராகவஸ்ய சரணௌ பதாவநி ப்ரேக்ஷிதும் த்வத் அபிஷேகம் ஈஷது:
ஆபிஷேசநிக பாண்ட ஸந்நிதௌ யத் ப்ரதக்ஷிணகதி: சநை: யயௌ.

பொருள் – பாதுகையே! இவ்விதமாகப் பட்டாபிஷேகத்திற்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களை இராமன் மெதுவாக வலம் வந்தான். ஏன்? அவனுடைய திருவடிகள் உனது பட்டாபிஷேகத்தைக் காண மிகவும் ஆவல் கொண்டன. ஆகவே அவனது திருவடிகள், உனது பட்டாபிஷேகம் வரை காலதாமதம் செய்யவே மெதுவாக நடந்தன போலும்.

183. மூர்த்தாபிஷிக்தை: நியமேந வாஹ்யௌ
விசிந்த்ய நூநம் ரகுநாத பாதௌ
ரத்ன ஆஸநஸ்த்தாம் மணிபாதுகே த்வாம்
ராமாநுஜந்மா பரத: அப்யஷிஞ்சத்.

பொருள் - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இராமனின் தம்பியான பரதன் எண்ணியது என்ன? தகுந்த பட்டாபிஷேகம் செய்யப்பட்ட ஒருவர் மட்டுமே இராமனின் திருவடிகளைச் சுமந்து, அதன் தொடர்பு பெற இயலும் என்பதாகும். இதன் காரணமாகவே மாணிக்கக்கற்கள் இழைக்கப்பட்ட ஸிம்ஹாசனத்தில் உன்னை அமர வைத்து, உனக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தான் போலும்.

184. ப்ராது: நியோகே அபி அநிவர்த்தமாநம்
ராஜ்ய அபிஷேகம் ச பரித்யஜந்தம்
ராமாநுஜௌ தௌ நநு பாரதந்த்ர்யாத்
உபௌ உபாப்யாம் பவதீ ஜிகாய.


Email:sridharan_book@yahoo.co.in

பொருள் - பாதுகையே! இராமனின் ஆணைகளை அவனது தம்பிகளான இலட்சுமணனும், பரதனும் மீறாதவர்களே ஆவார்கள். ஆயினும் இராமனின் ஆணைக்கு ஏற்ப அவர்கள் இருவரும் பட்டாபிஷேகம் ஏற்கவில்லை. ஆனால், நீ ஏற்றுக் கொண்டாய். இதன் மூலம் அவர்கள் இருவரையும் நீ வென்றாய்.

185. நிவேச்ய ரங்கேச்வர பாதரக்ஷே
பத்ராஸநே ஸாதரம் அப்யஷிஞ்சத்
வசீ வஸிஷ்ட்ட: மனு வம்ச ஜாநாம்
மஹீக்ஷிதாம் வம்ச புரோஹித: த்வாம்.

பொருள் – ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மனுவம்சத்தில் வந்த அனைத்து அரசர்களுக்கும் குருவாக உள்ளவரும், இந்த்ரியங்களை வென்றவரும் ஆகிய வசிஷ்ட்டர் செய்தது என்ன? உன்னை ஸிம்ஹாசனத்தில் எழுந்தருளச் செய்து, மிகவும் ஆசையாக உனக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

186. க்ருத அபிஷேகா பவதீ யதாவத்
ரங்கேச பாதாவநி ரத்நபீடே
கங்கா நிபாத ஸ்நபிதாம் ஸுமேரோ:
அதித்யகாபூமிம் அதச்சகார.

பொருள் – ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட ஸிம்ஹாசனத்தில் உன்னை எழுந்தருளச் செய்து, சாஸ்திர முறைப்படி பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டாய். அப்போது உன் மீது புனித நீர் சேர்க்கப்பட்டது. இதனைக் காணும்போது மேரு மலையை விட நீ உயர்ந்தும், உன் மீது விடப்பட்ட நீர், கங்கையை விடப் புனிதமானதாகவும் தோன்றியது.

187. வசிஷ்ட முக்யை: விஹித அபிஷேகாம்
ராஜ்யாஸநே ராம நிவேச யோக்யே
துஷ்டாவ ரங்கேச்வர பாதரக்ஷே
ப்ராசேதஸ: த்வாம் ப்ரதம: கவீநாம்

பொருள் – ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பாதுகாக்கும் பாதுகையே! இராமன் எழுந்தருள வேண்டிய ஸிம்ஹாசனத்தில் வசிஷ்டர் போன்றவர்கள் உன்னை அமர்த்தி,

உனக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தனர். உன்னைத் துதிப்பவர்களில் முதன்மையான வால்மீகி முனிவர், இவ்விதம் நீ அமர்ந்தவுடன், உன்னைத் துதித்து நின்றார்.

188. ரக்ஷோவதார்த்தம் மணிபாதரக்ஷே
ராமாத்மந: ரங்கபதே: ப்ரவாஸே
ரக்ஷோபகாராத் பவதீ விதேநே
ராஜந்வதீம் கோஸல ராஜதாநீம்.

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! அரக்கர்களை வதம் செய்வதற்காகவே ஸ்ரீரங்கநாதன் இராமனாக திருஅவதாரம் செய்தான். அவன் தண்டகாரண்ய வனம் சென்றான். அப்போது நீ கோஸல நாட்டைக் காக்க முடிவெடுத்தாய். அதனால் கானகத்தை விட்டு அயோத்திக்கு வந்த நீ, அந்த நாட்டை நல்ல ஓர் அரசன் உடையதாகச் செய்தாய்.

189. ப்ராப்த அபிஷேகா மணிபாதரக்ஷே
ப்ரதாபம் உக்ரம் ப்ரதிபத்யமாநா
சசாஸ ப்ருத்வீம் பவதீ யதாவத்
ஸாகேத ஸிம்ஹாஸந ஸார்வபௌமீ.

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! நீ பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டு, அயோத்தியின் ஸிம்ஹாசனத்தில் அமர்ந்தாய். மிகவும் கடுமையான பராக்ரமம் அடைந்தாய். எந்தவிதமான குறைவும் இன்றி இந்தப் பூமியைச் சரியான முறையில் காப்பாற்றினாய்.

190. தசாநநாதீந் மணிபாதரக்ஷே
ஜிகீஷதோ தாசரதே: வியோகாத்
ஜாதோபதாபா த்வயி ஸம்ப்ரயுக்தை:
தீர்த்தோதகை: உச்ச்வஸிதா தரித்ரீ.

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இராமனால் ஆளப்படவேண்டும் என்ற ஆவல் பூமிக்கு இருந்தது. ஆனால், இராமன் இராவணனை வெல்லவேண்டும் என்ற ஆவல் மேலிட கானகம் சென்றான். இதனால் வருத்தம் கொண்ட பூமியானது, உன் மீது பட்டாபிஷேகத்தின்போது சேர்க்கப்பட்ட புண்ணிய நீர் தன் மீது விழுந்தவுடன் சமாதானம் அடைந்தது.

191. அத்யாஸிதம் மநுமுகை: க்ரமசோ நரேந்த்ரை:
ஆரோப்ய தேவீ பவதீம் தபநீய பீடம்
ராஜ்ய அபிஷேகம் அநகம் மணிபாதரக்ஷே
ராம உசிதம் தவ வசம் பரத: விதேநே.

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! மனு முதலான அரசர்கள் வரிசையாக அமர்ந்து ஆட்சி செய்த தங்க ஸிம்ஹாசனத்தில், உன்னைப் பரதன் அமர வைத்தான். இராமனுக்குச் செய்ய வேண்டிய பட்டாபிஷேகத்தை, அதே போன்ற முறையில் எந்தவிதமான குறைவும் இன்றி உனக்குச் செய்தான்.

192. ஸ்நேஹேந தேவி பவதீம் விஷயே அபிஷிஞ்சந்
த்விஸ்ஸப்தஸங்க்ய புவநோதர தீபரேகாம்
ஜாதம் ரக்ஷத்வஹ திவாகர விப்ரயோகாத்
அந்தம் தமிஸ்ரம் அஹரத் பரத: ப்ரஜாநாம்.

**பொருள்** - பாதுகாதேவியே! அனைத்து உலகங்களுக்கும் நடுவே, அவற்றுக்கு ஒளி அளிக்கும் விளக்கு போன்று நீ உள்ளாய். இப்படியாக உள்ள உனக்கு, பரதன் தனது அன்பு என்னும் எண்ணெய் கொண்டு, அயோத்தி என்னும் திரியிட்டு, பட்டாபிஷேகம் என்ற விளக்கு ஏற்றி வைத்தான். இதன் மூலம் இராமன் என்ற சூரியன் அகன்றதால் சூழ்ந்த இருள் என்னும் பிரிவை அந்நாட்டு மக்கள் அறியாமல் இருக்கச் செய்தான்.

193. ஹஸ்தாபசேய புருஷார்த்த பல ப்ரஸூதே:
மூலம் பதாவநி முகுந்த மஹீருஹ: த்வம்
சாயா விசேஷம் அதிமசத் யத் அஸௌ ப்ரஜாநாம்
ஆவர்ஜிதை: த்வயி சுபை: அபிஷேகதோயை:

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு பழங்களும் பெரியபெருமாள் என்ற வ்ருக்ஷத்தில் (மரம்) கனிந்துள்ளன. இந்த மரத்தின் வேராக நீயே உள்ளாய். உன் மீது சேர்க்கப்பட்ட பட்டாபிஷேகத்தின் தூய நீரால் அல்லவா இந்த மரம் இவ்விதம் வளர்ந்து, மக்களுக்கு நல்ல நிழல் அளித்தபடி உள்ளது?

194. அஹ்நாய ராமவிரஹாத் பரிகிந்ந வ்ருத்தே:
ஆச்வாஸநாய பவதீ மணிபாதரக்ஷே
தீர்த்த அபிஷேகம் அபதிச்ய வஸுந்தராயா:
சக்ரே ததா ஸமுசிதம் சிசிரோபசாரம்.

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இராமனுடைய பிரிவைத் தாங்க இயலாமல் இந்தப் பூமி மிகவும் வருந்தியபடி இருந்தது. அப்போது நீ செய்தது என்ன? பூமியைச் சமாதானம் செய்வதற்காகப் பட்டாபிஷேகம் என்பதன் மூலம், புண்ணிய தீர்த்தங்களை, இந்தப் பூமி மீது விழும்படிச் செய்தாய். குளிர்ந்த அவை மூலம், பூமியின் வருத்தம் நீக்கினாய்.

195. மாலிந்யம் ஆச்ரிதவதீ மணிபாதரக்ஷே
பங்கேந கேகயஸுதா கலஹ உத்திதேந
சுத்திம் பராம் அதிஜகாம வஸுந்தரேயம்
த்வத்த: க்ஷணாந் நிபதிதை: அபிஷேகதோயை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! கேகய நாட்டு மன்னனின் மகளான கைகேயி செய்த கலகம் காரணமாக, இந்த உலகம் பாவம் என்ற அழுக்கை (துக்கம்) அடைந்துவிட்டது. ஆனால் உனக்கு பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டபோது விழுந்த புண்ணிய நீரால் இந்தப் பூமி கழுவப்பட்டு, உயர்ந்த மகிழ்வை அடைந்து விட்டது.

196. ஆவர்ஜிதம் முநிகணேந ஜகத்விபூத்யை
தோயம் பதாவநி ததா த்வயி மந்த்ரபூதம்
மூலாவஸே கஸலிலம் நிகம த்ருமாணாம்
சாபோதகம் ச ஸமபூத் க்ஷணதாசராணாம்.

**பொருள்** – பாதுகையே! இந்த உலகத்தின் ஐச்வர்யத்தின் பொருட்டு முனிவர்கள் உன் மீது புண்ணிய நீரைச் சேர்த்தனர். அப்படிப்பட்ட நீரானது, வேதம் என்ற மரம் வளர அவற்றின் வேர்களில் சேர்க்கப்பட்டதாகியது. மேலும் அந்த நீர், அசுரர்களுக்குச் சாபம் அளிக்க முனிவர்கள் தங்கள் கமண்டலங்களில் இருந்து தெளித்தது போன்றதாகிறது.

197. விப்ரோஷிதே ரகுபதௌ பவதீ யதார்ஹம்
மாந்யே பதே ஸ்த்திதிமதீ மநுவம்ச ஜாநாம்
ஆத்மநி அதர்வ நிபூணை: ப்ரஹிதை: ப்ரஜாநாம்
அச்ரூணி அபாஸ்யத் அபிஷேக ஜல ப்ரவாஹை:

**பொருள்** – பாதுகையே! இராமன் கானகம் சென்ற பின்னர் நீ செய்தது என்ன? மனு குலத்தில் வந்த அரசர்களின் போற்றத் தகுந்த உயர்ந்த ஸிம்ஹாஸனத்தில் நீ அமர்ந்தாய். உனது பெருமைக்கு ஏற்றபடி நீ வீற்றிருந்தாய். அதர்வண வேதத்தில் சிறந்தவர்களால் உன் மீது புண்ணிய நீர் சேர்க்கப்பட்டது. அந்த நீர்வெள்ளம் மூலம், நீ இந்த உலகில் உள்ளவர்களின் கண்களில் வரும் நீரைப் போக்கினாய்.

198. ப்ராயோ விசோஷிதரஸா பதிவிப்ரயோகாத்
பர்யாகுலீக்ருத ஸமுத்ர பயோதரா கௌ:
அம்ப! த்வதீயம் அபிஷேகபய: பிபந்தீ
தேநு: பபூவ ஜகதாம் தந தான்ய தோக்த்ரீ.

**பொருள்** – தாயே! பாதுகையே! தனது கணவனான இராமன் தன்னை விட்டுப் பிரிந்ததால் பூமி என்ற பசுவிற்கு நேர்ந்தது என்ன? அதன் ஸமுத்திரங்கள் என்னும் மடிகள் கலங்கின. இதனால் மகிழ்ச்சி என்னும் பாலைச் சொரியாமல் நின்றது. அந்த நேரத்தில் உனது பட்டாபிஷேகத்தில் விடப்பட்ட புண்ணிய நீரைப் பருகியது. உடனே அனைத்து உலகங்களுக்கும் தேவையான செல்வம், தானியங்களை அள்ளி வழங்கியது.

199. வ்ருத்தே யதாவத் அபிஷேக விதௌ பபாஸே
பச்சாத் தவ அம்ப பரதேந த்ருத: க்ரீட:
ஆகஸ்மிக ஸ்வகுல விப்லவ சாந்தி ஹர்ஷாத்
ப்ராப்த: த்விஷாம் இவ பதி மணிபாதுகே த்வாம்.

**பொருள்** - இராமனின் திருவடிகளை, அவனது தாய் போன்று பாதுகாக்கும் பாதுகையே! உனதுப் பட்டாபிஷேகம் என்பது பரதனால் மிகவும் நேர்த்தியாக நடத்தபட்டு, உனக்கு அழகான க்ரீடம் சூட்டப்பட்டது. இராமன் கானகம் சென்றதால் சூரிய வம்சத்திற்கு திடீரென்று துன்பம் ஏற்பட்டது. இத்தகைய துயரம் உன்னால் நீங்கியது. ஆக உன்னைக் காணும்போது சூரியன் வந்தது போன்றே இருந்தது.

200. மநுவம்ச புரோஹிதேந மந்த்ரை: அபிமந்தரய த்வயி பாதுகே ப்ரயுக்தம்
அபிஷேக ஜலம் க்ஷணேந ராஜ்ஞாம் சமயாமாஸ ஸமுத்திதாந் ப்ரதாபாந்.

**பொருள்** – பாதுகையே! மனுவம்சத்தின் குலகுருவான வசிஷ்டர் உன் மீது மந்திரங்கள் கொண்டு ஜபிக்கப்பட்ட புண்ணிய நீரை, பட்டாபிஷேகத்தின்போது சேர்த்தார். இந்த நீர் செய்தது என்ன? விரோதிகளான அனைவருடைய வீரம் என்ற தீயை அணைத்துவிட்டது.

201. பாதபாத் உபஹ்ருதா ரகூத்வஹாத் ஆலவாலமிவ பீடம் ஆச்ரிதா
அப்யஷேசி பவதீ தபோதநை: பாரிஜாதலதிகேவ பாதுகே.

**பொருள்** - பாதுகையே! இராமன் என்ற பெரிய மரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட கற்பகக் கொடி போன்று நீ உள்ளாய். உன்னை ஸிம்ஹாஸனத்தில் அமர்த்தி உயர்ந்த ரிஷிகள் பட்டாபிஷேகம் செய்வித்தனர்.

202. அலகுபி: அபிஷேக வ்யாப்ருதை: அம்புபி: தே
திநகரகுல தைந்யம் பாதுகே க்ஷாளயிஷ்யந்
ஸ கலு கமலயோநே: ஸூநுராதத்த மந்த்ரேஷு
அதிக நியம யோகாம் சக்திம் ஆதர்வணேஷு.

**பொருள்** – பாதுகையே! உனது பட்டாபிஷேகத்தில் சேர்க்கப்பட்ட புண்ணிய நீர் அனைத்தும் மிகுந்த பெருமை அடைந்தன. இவற்றை ப்ரம்மனின் புத்திரரான வசிஷ்டர் என்ன செய்தார்? இராமன் நாட்டை விட்டு அகன்றதால் சூரிய குலத்திற்குப் பெரும் துன்பம் ஏற்பட்டது. இந்த அழுக்கை, அந்தப் புண்ணிய நீர் கொண்டு அவர் விலக்கினார். இதன் மூலம் அதர்வண வேதங்களில் கூறப்பட்ட மந்திரங்கள் அனைத்தையும் ஓதி, மிகவும் அதிகமான சக்தி ஏற்படுத்தினார்.

203. திநகரகுலஜாநாம் தேவி ப்ருத்வீபதீநாம்
நிருபதிம் அதிகாரம் ப்ராப்நுவத்யாம் பவத்யாம்
அஜநிஷத ஸமஸ்தா: பாதுகே தாவகீந:
ஸ்நபந ஸலில யோகாந் நிம்நகா: துங்கபத்ரா:

**பொருள்** - பாதுகையே! சூரிய குலத்தில் வந்த அரசர்களுக்கே உரித்தான அதிகாரத்தை நீ அடைந்தாய். அப்போது உன் மீது சேர்க்கப்பட்ட புண்ணிய நீரின் தொடர்பு காரணமாக

அனைத்து ஆறுகளும் உயர்ந்தன. வற்றிக் கிடந்த ஆறுகள் கூட, துங்கபத்திரை நதி போன்று பெருக்கெடுத்து, உலகிற்கு நன்மை ஏற்படுத்தும்படி ஆயின.

204. தவ விதிவத் உபாதே ஸார்வபௌம அபிஷேகே
பரத ஸமயவித்பி: பாதுகே மந்த்ரி முக்யை:
த்வதவதி நிஜகர்மஸ்த்தாயிநீநாம் ப்ரஜாநாம்
ப்ரதமயுக விசேஷா: ப்ராதுராஸந் விசித்ரா:

**பொருள்** – பாதுகையே! பரதனின் வேண்டுகோளுக்கு ஏற்றபடி அனைத்து மந்திரிகளும் இணைந்து, சாஸ்திர முறைப்படி உனக்குப் பட்டாபிஷேகம் நடத்தி வைத்தனர். அப்போது அந்த நாட்டு மக்கள் யாவரும் ஒன்று கூடி, தங்கள் செயல்கள் அனைத்தையும் உனக்கு அர்ப்பணித்தபடி நின்றனர். இதனைக் காணும்போது அந்த யுகம் (த்ரேதாயுகம்) பல யுகங்களுக்கு முன்னாலிருந்த க்ருதயுகம் போன்று விளங்கியது (நாம் நல்ல செயல்கள் செய்துவிட்டு, "கிருஷ்ணார்ப்பணம்" என்பது போன்று இங்கு "பாதுகா அர்ப்பணம்" என்றனர்).

205. அவஸித ரிபுசப்தாந் அந்வபூ: த்வம் ததாநீம்
ரகுபதி பதரக்ஷே லப்த்த ராஜ்ய அபிஷேகா
சலித புஜலதாநாம் சாமரக்ராஹிணீநாம்
மணிவலய நிநாதை: மேதுராந் மந்த்ரகோஷாந்

**பொருள்** - இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உனக்குப் புண்ணிய தீர்த்தம் கொண்டு பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டபோது நிகழ்ந்தது என்ன? காற்றில் கொடிகள் அசைவது போன்று, சாமரம் வீசிக் கொண்டிருந்த பெண்களின் கைகள் மெள்ள அசைந்தன. அவர்கள் கைகளில் இருந்த இரத்தின வளையல்களின் ஒலி எங்கும் ஒலித்தது. மேலும், அங்கு வேத மந்திரங்களின் ஒலியும் சூழ்ந்திருந்தது. இதனால் அந்த இட்த்தி “சத்துரு” என்ற சொல், எங்கும் கேட்காமல் விளங்கியது. இதனை நீ மகிழ்வுடன் அனுபவித்தாய்.

206. ஸமுசிதம் அபிஷேகம் பாதுகே ப்ராப்நுவத்யாம்
த்வயி விநிபதிதாநாம் தேவி தீர்த்த உதகாநாம்
த்வநி: அநுகத மந்திர: ஸீததாம் கோஸலாநாம்
சமயிதும் அலம் ஆஸீத் ஸங்குலாந் ஆர்த்தநாதாந்


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள்** - பாதுகை தேவியே! இராமன் கானகம் சென்ற பின்னர் அயோத்தி எங்கும் மக்களின் புலம்பல் ஒலியே கேட்டபடி இருந்தது. ஆயினும் உனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட நேரத்தில், உன் மீது சேர்க்கப்பட்ட நீரின் ஓசையாலும், அப்போது ஓதப்பட்ட மந்திரங்களின் ஒலியாலும் மக்களின் புலம்பல் நீக்கப்பட்டது.

207. திவிஷத் அநுவிதேயம் தேவி ராஜ்ய அபிஷேகம்
பரத இவ யதி த்வம் பாதுகே நாந்வமம்ஸ்த்தா:
கதம் இவ ரகுவீர: கல்பயேத் அல்பயத்ந:
த்ரிசதுர சரபாதை: தாத்ருசம் தேவகார்யம்

**பொருள்** - பாதுகாதேவியே! அனைத்து தேவர்களாலும் கொண்டாடப்பட்ட பட்டாபிஷேகத்தை நீ பரதன் போன்று ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாய் என்று வைத்துக் கொள்வோம். அப்படி என்றால் தேவர்களுக்காக இராமன், மூன்று நான்கு அம்புகள் மூலமே இராவணனை எந்தவிதமான சிரமமும் இன்றி வதம் செய்ததை எவ்விதம் முடித்திருக்க இயலும் (பாதுகை அரசப் பொறுப்பை ஏற்ற நிம்மதி காரணமாக அல்லவா இராமன் நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் சென்றான்?)?

208. கதிசந பதபத்ம ஸ்பர்ச ஸௌக்யம் த்யஜந்தீ
வ்ரதம் அதுலம் அதா: த்வம் வத்ஸராந் ஸாவதாநா
ரகுபதி பதரக்ஷே ராக்ஷஸை: த்ராஸிதாநாம்
ரணரணக விமுக்தம் யேந ராஜ்யம் ஸுராணாம்.

**பொருள்** – ரகுகுலத்தின் நாயகனான இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இராமனுடைய திருவடிகளின் சுகத்தை நீ எப்போதும் அனுபவித்து வந்தாய். ஆயினும் நாட்டிற்காக அந்தச் சுகத்தை ஒதுக்கி விரதம் மேற்கொண்டாய். இது நாள் வரை அசுரர்களால் அச்சம் கொண்டு விளங்கிய தேவர்களின் உலகம், உனது விரதம் காரணமாகத் தனது துக்கம் நீங்கி நின்றது.

209. அதர்வோபஜ்ஞம் தே விதிவத் அபிஷேகம் விதததாம்
விஸிஷ்டாதீநாமபி உபசித சமத்கார பரயா
த்வத் ஆஸ்தாந்யா ரங்கக்ஷிதி ரமண பாதாவநி ததா
ஸகீயஸ்ய: ஜாதா ரகு பரிஷத் ஆஹோ புருஷிகா:


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! அதர்வ வேதத்தில் கூறப்பட்ட முறை தவறாமல் உனக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. அந்த நேரத்தில் வசிஷ்டர் போன்றவர்கள் பெரும் வியப்பு அடைந்தனர். என்ன காரணம் ? உன் மீது அந்த நாட்டினர் வைத்த பத்தியே காரணம் ஆகும். இதனால் நேர்ந்தது என்ன? தங்களுக்கு மட்டுமே இத்தகைய மரியாதையை மக்கள் செய்து வந்தனர் என்று கர்வம் கொண்டிருந்த ரகு வம்சத்து அரசர்களின் இறுமாப்பு ஒடுங்கி விட்டது.

210. அபிஷேசயது ஸ ராம: பதேந வா ஸ்ப்ருசது பாதுகே பவதீம்
அவிசேஷித மஹிமா த்வம் கிம் வா விசேஷ: க்ஷமா ஸமேதாநாம்

**பொருள் -** பாதுகையே! இராமன் உனக்கு உயர்ந்த அரச பதவி என்ற பட்டாபிஷேகம் அளித்தாலும், தனது திருவடிகளில் உன்னை வைத்தாலும் – உனது பொறுமை காரணமாக, நீ குறைவற்ற பெருமை மாறாமலேயே உள்ளாய். பூமியின் பொறுமையை ஒத்தபடி உள்ளவர்களுக்கு இது போன்று ஏற்றத்தாழ்வுகளில் பேதம் என்ன உள்ளது?

## அபிஷேக பத்ததி ஸம்பூர்ணம்

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## அபிஷேக பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (8.நிர்யாதனா பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

211. அபிஷேகோத்ஸவாத் தஸ்மாத் யஸ்யா நிர்யாதநா உத்ஸவ:
அத்யரிச்யத தர்ம வந்தே பவ்யாம் பரத தேவதாம்

**பொருள்** - அனைவராலும் போற்றுபடியாக பாதுகையின் பட்டாபிஷேகம் விளங்கியது. அந்த விழாவைக் காட்டிலும் இராமன் வனவாசம் முடிந்து அயோத்தி திரும்பியவுடன், இராமனிடம் பாதுகையை பரதன் மீண்டும் சமர்ப்பித்த விழா மிகவும் கோலாகலமாக இருந்தது. அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை நான் ஆராதிக்கிறேன்.

212. உபாஸ்ய வர்ஷாணி சதுர் தச த்வாம் உத்தாரிகாம் உத்தர கோஸலஸ்தா:
ஸநந்தநாத்யைரபி துர்விகாஹம் ஸந்தாநிகம் லோகம் அவாபுர அக்ர்யம்

**பொருள்** – பாதுகையே! வடக்கு கோஸலை நாட்டில் உள்ள மக்கள் உன்னை பதினான்கு வருடங்கள் வணங்கி வந்தனர். இதனால் அவர்களுக்குக் கிட்டியது என்ன? ஸநந்தனர் போன்ற உயர்ந்தவர்களாலும் அடைய இயலாத ஸாந்தாநிக லோகத்தை அவர்கள் எளிதாக அடைந்தனர்.

213. பாதாவநி ப்ரத்யயித: ஹநூமாந் ஸீதாம் இவ த்வாம் சிரவிப்ரயுக்தாம்
ப்ரணம்ய பௌலஸ்த்ய ரிபோ: உதந்தம் விஜ்ஞாபயாமாஸ விநீதவேஷ:

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! சீதையைப் போன்றே நீயும் இராமனை வெகுகாலம் பிரிந்திருந்தாய். இதனை உணர்ந்த இராமன் உன்னிடம் (பரதனிடம்) அனுமானை அனுப்பினான். இராமனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அனுமான், உன்னிடம் வந்து சீதையைப் போன்றே உன்னை வணங்கி, இராவணனின் சத்ருவான இராமன் கூறியனுப்பியதைக் கூறினார்.

214. தவ அபிஷேகாந் மணிபாதரக்ஷே மூலே நிஷேகாதிவ வ்ருத்தி யோக்யாத்
ஜஹு: ததைவ த்ரிதசாங்கநாநாம் ப்ரம்லாநதாம் பத்ர லதாங்குராணி

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இலைகள் வளர்வதற்கு ஆதாரமாக வேரில் ஊற்றப்பட்ட நீர் உள்ளது. உன் மீது உனது பட்டாபிஷேகத்தின் போது சேர்க்கப்பட்ட நீர் எவ்விதம் உள்ளது என்றால் – அசுரர்களின் தொல்லை இன்றி தேவர்கள் தங்கள் தேவலோக மங்கையர் உடலில் எழுதும் சித்திர இலைகள் மீண்டும் தோன்ற வழி செய்தது.


Email:sridharan_book@yahoo.co.in

215. ஸர்வத: த்வத் அபிஷேக வாஸரே ஸம்யக் உத்த்ருத ஸம்ஸத கண்டகே
ராகவஸ்ய விபிநேஷு பாதுகே யத்ர காமகமதா வ்யவஸ்திதா

**பொருள்** – பாதுகையே! உனக்கு எப்போது பட்டாபிஷேகம் செய்வித்தனரோ, அந்த நேரத்தில் இருந்து, அனைத்து இடங்களிலும் இருந்த விரோதிகள் அனைவரும் முள் போன்று நீக்கப்பட்டனர். அவர்கள் அளித்து வந்த துன்பங்களும் நீக்கப்பட்டன. இதனால்தான், நீ இல்லாவிட்டாலும், இராமன் கானகத்தில் தன் விருப்பப்படி எங்கும் சஞ்சாரம் செய்ய முடிந்தது (இதன் கருத்து – பாதுகை நாட்டை ஆண்ட காரணத்தால், நாட்டைப் பற்றிய கவலை இல்லாமல் இராமன் சென்றான்).

216. கிம் சதுர்தசபி: ஏவ வத்ஸரை: நித்யம் ஏவ மணிபாதுகே யுவாம்
பாதயோ: த்ரிபுவந ஆதிராஜ்யோ: யௌவராஜ்யம் அதிகச்சதம் ஸ்வயம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! பதினான்கு வருடங்கள் மட்டுமா நீங்கள் (இரண்டு பாதுகைகள்) அரசாளப் போகிறீர்கள்? இராமனின் திருவடிகள் அனைத்து உலகங்களுக்கும் சக்ரவர்த்தியாக உள்ளன. ஆகவே, நீங்கள் எப்போதும் இளவரசர்களாக இருந்து வருவீர்கள்.

217. ராமஸ்ய ராக்ஷஸ வதத்வரிதஸ்ய காலே
பாதாவநி ப்ரகடயந் இவ பார்ஷ்ணி குப்தம்
ஆசித்ரகூடம் அதிகம்ய சசம்ஸ வார்த்தாம்
அவ்யாஹத த்வத் அபிஷேக ம்ருதங்க நாத:

**பொருள்** - திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உனது பட்டாபிஷேகத்தின்போது ஏற்பட்ட மத்தளங்களின் ஓசை தடையில்லாமல், இராமன் அப்போது இருந்த சித்ரகூடம் வரை சென்று கேட்டது. அரக்கர்களை அழிப்பதில் முனைந்துள்ள இராமனிடம் அந்த ஓசையானது, "நாம் இங்கு நாட்டைப் பாதுகாப்போம். நீவிர் முன் சென்று உமது செயல்களைத் தொடரலாம்", என்று கூறுவது போன்று இருந்தது.

218. பத்ராணி தேவி ஜகதாம் ப்ரதிபாதயிஷ்யந்
ப்ராகேவ யேந பவதீம் பரதோ அப்யஷிஞ்சத்
மந்யே கபீச்வர விபீஷணயோர் யதாவத்
ஸந்தந்யதே ஸ்ம தத ஏவ கிலாபிஷேக:

**பொருள் -** பாதுகையே! இந்த உலகம் முழுவதற்குமான நன்மைகளை, அவற்றுக்கு அளிக்க விரும்பிய காரணத்தினால், பரதன் உனக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தான். அதனால் அல்லவோ சுக்ரீவன், விபூஷணன் போன்றவர்களுக்கு முறைப்படி பட்டாபிஷேகம் நிறைவேறியது. இதனால், உலகின் நன்மைகளும் பெருகின.

219. ஸம்பித்யமாந தமஸா ஸரயூ உபநீதை:
ஸம்வர்த்திதை: தவ சுபை: அபிஷேகதோயை:
மந்யே பபூவ ஜலதி: மணிபாதரக்ஷே
ராம அஸ்த்ர பாவக சிகாபி: அசோஷணீய:

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! தமஸா என்னும் நதி, ஸரயூ என்னும் நதி ஆகிய இரண்டின் நீரும் சேர்த்து உனக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. இந்த நதிகள் இரண்டும் கடலில் சென்று கலக்கின்றன. இதனால்தான் இராமன் தனது அக்னி போன்ற அஸ்திரங்களைக் கடலில் செலுத்திய போதிலும் கடல் வற்றாமல் உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

220. பாதாவநி த்வத் அபிஷேசந மங்களார்த்தம்
பேரீசதம் ப்ருசம் அதாட்யத யத் ப்ரதீதை:
ஆகர்ண்ய தஸ்ய ஸஹஸா துமுலம் நிநாதம்
லங்கா கவாட நயநாநி நிமீலிதாநி

**பொருள் -** பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய பட்டாபிஷேகம் என்னும் மங்கலகரமான நிகழ்வின்போது, நூற்றுக்கணக்கானவர்கள் பெரிதாக வாத்தியம் ஒலித்தனர். இந்த ஓசை இலங்கை வரை கேட்டது. இதனைக் கேட்ட இலங்கையின் கதவுகள் மூடப்பட்டன.

221. தாப உத்கம: த்வத் அபிஷேக ஜலப்ரவஹை:
உத்ஸாரித: த்வரிதம் உத்தர கோஸலேப்ய:
லேபே சிராய ரகு புங்கவ பாதரக்ஷே
லங்காவரோத ஸுத்ருசாம் ஹ்ருதயேஷு வாஸம்

**பொருள் -** பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன் மீது பட்டாபிஷேகத்தின்போது சேர்க்கப்பட்ட புனித நீரானது, வடக்குக் கோஸலை நாட்டில் இராமனின் பிரிவால் ஏற்பட்டிருந்த தாபத்தைத் தீர்த்தது. பின்னர் அந்த வெள்ளம்

அங்கிருந்து கிளம்பி, இலங்கையை அடைந்து, அங்குள்ள பெண்களின் மனதை அடைந்து, நீண்ட காலம் இருந்தது.

222. ஆவர்ஜிதம் விதிவிதா மணிபாதரக்ஷே
பத்மாஸந ப்ரியஸுதேந புரோஹிதேந
ஆஸிந்நிதாநம் அபிஷேக ஜலம் த்வதீயம்
நக்தஞ்சர ப்ரணயிநீ நயநோதகாநாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து சாஸ்திரங்களை அறிந்தவரும், நான்முகனின் ப்ரியமான புத்திரரும், குலகுருவும் ஆகிய வசிஷ்டர் மூலம், உன் மீது புனிதமான நீர் பட்டாபிஷேகத்தின்போது சேர்க்கப்பட்டது. இந்த நீரே, அரக்கர்களின் மனைவிகளின் கண்களில் இருந்து வெளிவரும் கண்ணீராக மாறியது.

223. தேவி த்வயா ஸ்நபந ஸம்பதி ஸம்ச்ரிதாயாம்
தக்தே புரே தசமுகஸ்ய வலீமுகேந
ஆஸித் தத: ப்ரப்ருதி விச்வ ஜந ப்ரதீதம்
அத்ப்ய: அக்நி: இதி அவிததம் வசநம் முநீநாம்

**பொருள்** – பாதுகாதேவியே! உனது பட்டாபிஷேகத்தின்போது சேர்க்கப்பட்ட புனித நீர் முதலானவை இலங்கைவரை சென்றது. இராவணனின் இலங்கை நகரம், அனுமனால் தீயிட்டு எரிக்கப்பட்டது. வேதங்களின் கூறப்பட்ட “நீரில் இருந்து நெருப்பு உண்டானது” என்னும் வரியானது, இந்த நிகழ்வுகள் மூலம் மக்களுக்குத் தெளிவாக உணர்த்தப்பட்டது.

224. ஆயோத்யகை: த்வத் அபிஷேக ஸமித்த ஹர்ஷை:
ஆத்மாபிதா: ச்ருதி ஸுகம் நநு தே ததாநீம்
ராமஸ்ய ராக்ஷஸ சிர: லவநே அபி அசாம்யந்
யேஷாம் த்வநி: விஜய சங்க ரவ: பபூவ

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது பட்டாபிஷேகத்தின்போது முழங்கப்பட்ட சங்குகளின் நாதம், அயோத்தி மக்களின் காதுகளில் இன்பமாகப் புகுந்து, அவர்களுக்கு பெரும் மகிழ்வு உண்டாக்கியது. ஆனால் அதே சங்குகளின் ஒலியானது, இராமன் அரக்கர்களின் தலையை அறுக்கும் காலம்வரை இலங்கையில் ஓயாமல் ஒலித்து நின்று, இராமனின் வெற்றியை அறிவிப்பதாக இருந்தன.

225. ப்ரதயிதும் அபிஷேகம் பாதுகே தாவகீநம்
துரித சமநதக்ஷே துந்துபௌ தாட்யமாநே
ஸபதி பரிக்ருஹீதம் ஸாத்வஸம் தேவி நூநம்
தசவதந வதூநாம் தக்ஷிணை: நேத்ர கோசை:

**பொருள்** – பாதுகாதேவியே! உன்னுடைய பட்டாபிஷேகம் பற்றி அனைவருக்கும் தெரியப்படுத்தவேண்டும் என்பதால், அயோத்தி முழுவதும் வாத்தியங்கள் முழங்கின. இவை மூலம் அனைத்து இடங்களிலும் உள்ள பாவங்கள் அகன்றன. இலங்கையில் உள்ள இராவணனின் மனைவிமார்களுடைய வலது கண்கள் அந்த ஒலிக்கேற்றாப்போல் துடித்தபடி நின்றன (பெண்களின் வலது கண் துடிப்பது தீமைக்கு அறிகுறி என்று கருத்து).

226. ரகுபதி பதரக்ஷே ரத்நபீடே யதா த்வாம்
அகில புவந மாந்யம் அப்யஷிஞ்சத் வஸிஷ்ட:
தஸமுக மஹிஷீபி: தேவி: பாஷ்பாயிதாபி:
ஸ்தநயுகம் அபிஷேக்தும் தத் க்ஷணாத் அந்வமம்ஸ்தா:

**பொருள்** – ரகு குலத்தின் நாயகனான இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகாதேவியே! அனைத்து உலகங்களும் போற்றும்படியான தகுதி உள்ளவள் நீ ஆவாய். இப்படிப்பட்ட உன்னை வசிஷ்டர் இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தில் அமர வைத்து, பட்டாபிஷேகம் செய்து வைத்தார். அந்த நேரத்திலேயே இராவணனின் மனைவிமார்களின் கண்ணீர், அவர்களின் ஸ்தனங்களை நனைத்தபடி நின்றன.

227. ராம அஸ்த்ராணி நிமித்த மாத்ரம் இஹ தே லப்த அபிஷேகா ஸதீ
ரக்ஷ: தத் க்ஷபயாஞ்சகார பவதீ பத்ர ஆஸநஸ்தாயிநீ
யத்தோஷ்ணாம் அதிவேல தர்பதவது ஜ்வாலா ஊஷ்மளாநாம் ததா
நிஷ்பிஷ்டை: கலதௌதசைல சிகரை: கர்ப்பூர சூர்ணாயிதம்

**பொருள்** – நம்பெருமாளின் பாதுகையே! இராவணனின் புஜங்கள் இரண்டும் அக்னியின் ஜ்வாலை போன்று இருந்தன. அவன் கைலாய மலையை அப்படிப்பட்ட புஜங்களால் உயர்த்தியபோது, தீயில் இட்ட கர்ப்பூரம் போன்று, கைலாய மலையின் சிகரங்கள் பொடியாகிவிட்டன. இப்படிப்பட்ட வலிமை உடைய இராவணனை இராமன் தனது அஸ்திரம் மூலம் அழித்தான் என்பது பெயரளவில் மட்டுமே! உண்மையாக நடந்தது

என்ன? ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தபடி நீயல்லவா இராமனின் பாணங்கள் கொண்டு இராவணனை அழிந்தாய்?

228. ச்ருத்வா ஏவம் ஹநுமந் முகாத் ரகுபதே: ப்ரத்யாகதிம் தத் க்ஷணாத்
ஆஸீதத் பரத அநுவர்த்தன வசாத் ஆரூட கும்பஸ்தலாம்
கால உந்நித்ர கதுஷ்ண தாந மதிரா மாத்யத் த்விரேப த்வநி
ச்லாகாசாடுபி: அஸ்துதேவ பவதீம் சத்ருஞ்ஜய: குஞ்ஜர:

**பொருள்** – பாதுகையே! இராமனின் வருகை குறித்து அனுமன் மூலமாகப் பரதன் அறிந்து கொண்டான். இந்தச் செய்தியை உன்னிடம் கூறிய பரதன், நீ உடனே இராமனிடம் எழுந்தருளவேண்டும் என்று விண்ணப்பம் செய்தான். இதனைக் கேட்ட நீ, உடனே பட்டத்து யானை மீது அமர்ந்தாய். நீ அமர்ந்தவுடன் அந்த யானைக்கு ஏற்பட்ட மகிழ்வு காரணமாக மெதுவான உஷ்ணத்துடன் கூடிய மதநீர் பெருகியது. அந்த மதநீரில் வந்து அமர்ந்த வண்டுகள் பெரும் ரீங்காரம் செய்தன. இதனைக் காணும்போது யானை உன்னைத் துதித்தது போன்று காணப்பட்டது.

229. ப்ரத்யாகதஸ்ய பவதீம் அவலோக்ய பர்த்து:
பாதாரவிந்த ஸவிதே பரதோபநீதாம்
பூர்வ அபிஷேக விபவ அப்யுசிதாம் ஸபர்யாம்
மத்யே ஸதாம் அக்ருத மைதிலராஜகன்யா

**பொருள்** - பெரியபெருமாளின் பாதுகையே! இராமன் அயோத்தி திரும்பியவுடன் அவனுடைய தாமரை போன்ற அழகான திருவடிகளின் அருகே பரதன் உன்னைச் சமர்ப்பணம் செய்தான். தனது கணவனான இராமனின் திருவடிகளின் அருகில் வைக்கப்பட்ட உன்னை ஜனகனின் மகளான சீதை பார்த்தாள். இராமனுக்கு முன்பாகவே பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட உன்னைப் பெருமையுடன் கண்ட அவள், அங்கிருந்த அனைத்துப் பெரியவர்களும் பார்த்து நிற்க, உனக்கு ஏற்ற மரியாதைகளைச் செய்தாள் (சீதையும் பாதுகையும் இராமனைச் சேர்ந்தவர்கள் என்றாலும், சீதைக்கு முன்பாக பாதுகைகள் ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்ததால் பாதுகைக்கு ஏற்றம் அதிகம். ஆகையால் சீதை வணங்கினாள் என்று கருத்து).

230. ஸம்ப்ரேக்ஷ்ய மைதிலி ஸுதா மணிபாதரக்ஷே
ப்ரத்யுத்கதஸ்ய பவதீம் பரதஸ்ய மௌளௌ
நிர்திச்ய ஸா நிப்ருதம் அஞ்ஜலிநா புரஸ்தாத்
தராதிகா: ப்ரியஸகீ: அசிஷத் ப்ரணந்தும்

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! இராமன் முன்பாக பரதன் உன்னைத் தனது தலையில் எழுந்தருளிப் பண்ணிக்கொண்டு வந்தான். இதனைப் பார்த்த சீதை தனது கைகள் குவித்து உன்னை வணங்கி, தனது கண் ஜாடை மூலம் தன் தோழிகளான தாரை போன்றவர்களையும் உன்னை வணங்குமாறு கூறினாள்.

231. துல்யே அபி தேவி ரகுவீர பத ஆச்ரயத்வே
பூர்வ அபிஷேகம் அதிகம்ய கரீயஸீ த்வம்
தேநைவ கல்வபஜதாம் மணிபாதரக்ஷே
ரக்ஷ: ப்லவங்கம் அபதீ பவதீம் ஸ்வமூர்த்நா

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமனின் திருவடிகளை மட்டுமே அண்டி உள்ளவள் நீ ஆவாய். ஆனாலும் இராமனுக்கு முன்பாகவே பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டு, அவன் ஸிம்ஹாஸனத்தில் நீ அமர்ந்தாய். இதனால் நீ பெரிதும் உயர்ந்தவள் ஆனாய். அதனால்தான் உன்னை விபீஷணன் போன்றவர்கள் போற்றி நின்றனர், தங்கள் தலைகளில் உன்னை ஏற்றனர்.

232. நிர்வ்ருத்த ராக்ஷஸசமூ ம்ருகயா விஹார:
ரங்கேச்வர: ஸ கலு ராகவ வம்ச கோப்தா
வம்சக்ரமாத் உபநதம் பதம் ஆததாந:
மாந்யம் புநஸ்த்வயி பதம் நிததே ஸ்வகீயம்

**பொருள் –** அழகியமணவாளனின் பாதுகையே! ரகு வம்சத்தை நிலை நிறுத்தவும், அரக்கர்களின் படையை வேட்டை ஆடுவது போன்று எளிதாக ஒரு விளையாட்டாக அழிப்பதற்காகவும் இராமனாக அவதரித்தவன் ஸ்ரீரங்கநாதன் ஆவான். அவன் உன்னிடம் இருந்து தனது பட்டத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு, மிகவும் உயர்ந்த தனது திருவடிகளை உன்னிடம் மீண்டும் அளித்தான்.

233. தத்தாத்ருசோ: சரணயோ: ப்ரணிபத்ய பர்த்து:
பௌராஸ்த்வயா வித்ருதயோ: ப்ரதிபந்ந ஸத்த்வா:
ப்ராப்த அபிஷேக விபவாம் அபி பாதுகே தவாம்
ஆனந்தபாஷ்ப ஸலிலை: புந: அப்யஷிஞ்சந்


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னைத் தனது திருவடிகளில் மீண்டும் தரிக்கப்பெற்ற இராமன் அழகு பெற்றான். இப்படியாக உள்ள தங்கள் சக்ரவர்த்தியான இராமனின் திருவடிகளில் அந்த நாட்டு மக்கள் விழுந்து வணங்கி, மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். உனக்கு பட்டாபிஷேகத்தின்போது புண்ணிய நீர் சேர்க்கப்பட்டபோதிலும், இப்போது தங்கள் ஆனந்தக் கண்ணீர் கொண்டு மக்கள் மீண்டும் உனக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தனர்.

234. மாத: த்வயைவ ஸமயே விஷமே அபி ஸம்யக்
ராஜந்வதீம் வஸுமதிம் அவலோக்ய ராம:
ஸஞ்ஜீவநாய பரதஸ்ய ஸமக்ர பக்தே:
ஸத்ய ப்ரதிச்ரவதயா ஏவ சகார ராஜ்யம்

**பொருள்** - இராமனின் திருவடிகளை அவனது தாய் போன்று பாதுகாக்கும் பாதுகையே! இராமன் கானகம் சென்ற காலகட்டமானது மிகவும் இக்கட்டானது ஆகும். அந்த நேரத்தில் நாட்டை ஆள்வதற்கு ஏற்றவள் நீ என்று அறிந்து, உனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டது. கானகத்தில் இருந்து மீண்டும் நாடு திரும்பிய இராமன், தன்னை விட நீயே உயர்ந்தவள் என்று அறிந்திருந்தான். ஆயினும், தான் பட்டம் சூட்டிக் கொள்ளவில்லை என்றால், உறுதியான சபதம் கொண்ட பரதன், தன்னை மாய்த்துக் கொள்வான் என்று உணர்ந்து, அவனைப் பிழைக்க வைப்பதற்காக அல்லவோ பட்டம் ஏற்றுக் கொண்டான்?

235. பாதாவநி ப்ரதிகதஸ்ய புரீம் அயோத்யாம்
பௌலஸ்த்யஹந்து: அபிஷேக ஜல அர்த்ர மூர்த்தே:
அம்ஸே யதார்ஹம் அதிவாஸ்ய நிஜை: யசோபி:
கஸ்தூரிகேவ நிஹிதா வஸுதா த்வயைவ

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! அயோத்தியை மீண்டும் அடைந்த இராமனின் திருமேனி, உனது பட்டாபிஷேக நீரால் நனைக்கப்பட்டது. இராவணனை வதம் செய்து முடித்த இராமனின் தோள்கள் மீது, நீ இத்தனை நாட்கள் உனது பெருமை விளங்கத் தாங்கி நின்ற பூமியை, எளிதான கஸ்தூரி போன்று இறக்கி வைத்தாய் (பூமியை ஆள்வது என்பது இராமனுக்கும் பாதுகைக்கும் ஓர் அலங்காரம் போன்று அழகுக்கு மட்டுமே ஆகும், பாரம் ஆகாது. இதனால்தான் கஸ்தூரி என்றார்).


**Email:**sridharan_book@yahoo.co.in

236. யா அளௌ சதுர் தச ஸமா: பதிவிப்ரயுக்தா
விச்வம்பரா பகவதீ வித்ருதா பவத்யா
விந்யஸ்ய தாம் ரகுபதே: புஜசைல ச்ருங்கே
பூய: அபி தேந ஸஹிதாம் பவதீ பபார

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அயோத்தியானது தனது கணவனான இராமனை பதினான்கு ஆண்டுகள் பிரிந்து இருந்தது. அப்போது நீ அந்த நாட்டை ஆறுதலாகத் தாங்கி நின்றாய். இராமன் அயோத்தி திரும்பியதும் அவனது மலைகள் போன்ற தோள்களில் அந்த நாட்டை மீண்டும் ஏற்றினாய். அதன் பின்னர் அவனுடன் சேர்ந்து நின்று காணப்பட்ட பூமியைத் தாங்கி நின்றாய்.

237. நிஸ்தீர்ண துங்க ஜலதே: அநகஸ்ய தேவி
த்வத் ஸம்ப்ரயுக்த ரகுநாத பதாந்வயேந
ஸத்ய ஸநந்தன முகை: அபி துர்நிரீக்ஷா
ஸாம்ராஜ்ய ஸம்பத் அபரா பரதஸ்ய ஜஜ்ஞே

**பொருள்** - பாதுகாதேவியே! உன்னுடன் தொடர்பு கொண்டதால் உயர்ந்த இராமனின் திருவடிகள் மூலமாகப் பரதன் தனது துக்கம் என்ற பெரிய கடலை எளிதாகக் கடந்தான். இதன் மூலம் தூய்மை அடைந்த பரதன், ஸநந்தர் போன்றவர்கள் கூடக் காண இயலாத தேஜஸ் அடைந்தான். இதனால் பக்தர்களுக்குச் சக்ரவர்த்தி போன்றவன் என்ற பட்டம் பெற்றான்.

238. நிகர்த்ய தேவி பரத அஞ்ஜலி பத்ம மத்யாத்
பூய: ஸமாகதவதீ புருஷோத்தமேந
பத்மேவ பத்ரம் அகிலம் மணிபாதரக்ஷே
ப்ராதுச்சகார பவதீ ஜகதாம் த்ரயாணாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பெரியபெருமாளின் பாதுகா தேவியே! பரதனின் கைகள் தாமரை மலர் போன்று குவித்து இருந்தன. அதன் நடுவில் இருந்து நீ வெளிக் கிளம்பி இராமனின் திருவடிகளை அடைந்தாய். இப்படியாக தாமரையில் இருந்து வெளிப்பட்ட மஹாலக்ஷ்மி போன்று மூன்று உலகங்களுக்கும் ஏற்ற நன்மைகளைச் செய்தாய்.

239. ரகுபதிம் அதிரோப்ய ஸ்வோசிதே ரத்நபீடே
ப்ரகுணம் அபஜதாஸ்த்வம் பாதுகே பாதபீடம்
ததபி பஹுமதி: தே தாத்ருசீ நித்யம் ஆஸீத்
க்வ நு கலு மஹிதாநாம் கல்ப்யதே தாரதம்யம்

பொருள் – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமன் அயோத்தி திரும்பியவுடன் அவனுக்கு ஏற்ற இடமாகிய இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அவனுக்கு அளித்தாய். ஆயினும் உனக்கு முன்பிருந்த மரியாதைகளும் கொண்டாட்டங்களும் எப்படி மாறுபடும். உன்னை அண்டியவர்களுக்கு ஏற்றத்தாழ்வு எவ்விதம் உண்டாகும்?

240. அநுவ்ருத்த ராமபாவ: சங்கே நிர்விஷ்ட சக்ரவர்த்தி பதாம்
அதுநா அபி ரங்கநாத: ஸ சமத்காரம் பதேந பஜதி த்வாம்

**பொருள்** - பெரியபெருமாளின் பாதுகையே! நீ உயர்ந்த சக்ரவர்த்திப் பதவியை வகித்தவள் ஆவாய். அதனால்தான் இராமனாகப் பிறந்த ஸ்ரீரங்கநாதன் மிகவும் புத்திகூர்மையுடன் உன்னை எப்போதும் தனது திருவடிகளில் வைத்துள்ளான் என்று எண்ணுகிறேன் (அர்ச்சையில் உள்ள விக்ரஹங்களில் திருவடிகளில் பாதுகை இருப்பதில்லை. ஆயினும் ஸ்ரீரங்கநாதன் மட்டுமே தனது திருவடிகளில் பாதுகையுடன் உள்ளதைக் காணலாம். இதனை முதல் பக்கத்தில் உள்ள படத்தில் தெளிவாகக் காணலாம்).

## நிர்யாதனா பத்ததி ஸம்பூர்ணம்

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## நிர்யாதனா பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (9.வைதாளிக பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

241. நமஸ்தே பாதுகே பும்ஸாம் ஸம்ஸார அர்ணவே ஸேதவே
யதாரோஹஸ்ய வேதாந்தா: வந்தி வைதாளிகா: ஸ்வயம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உயிர்கள் பிறந்து இறப்பதையே தனது இயல்பாக உடையது ஸம்ஸாரம் என்ற கடல் ஆகும். இந்தக் கடலில் அணை போன்றுள்ள உனக்கு என் நமஸ்காரங்கள். உபநிஷத்துக்கள் செய்வது என்ன? பெரியபெருமாளைத் துயில் எழுப்பி, உன்னைச் சாற்றிக் கொள்ளவேண்டும் என்பது அல்லவா? (வைதாளிகர்கள் என்பவர்கள் எம்பெருமானைத் துயில் எழுப்புபவர்கள் ஆவர். இங்கே வைதாளிகர்களாக உபநிஷத்துக்கள் உள்ளன என்றார்).

242. உசிதம் உபசரிஷ்யந் ரங்கநாத ப்ரபாதே
விதிசிவ ஸநக ஆத்யாந் பாஹ்ய கக்ஷ்யா நிருந்தாந்
சரண கமல ஸேவா ஸௌக்ய ஸாம்ராஜ்ய பாஜாம்
ப்ரதம விஹித பாகாம் பாதுகாம் ஆத்ரியேதா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! உனது திருப்பள்ளியெழுச்சிக்கு முன்பாக வந்து விட்ட சிவன், நான்முகன், ஸநகர் போன்றவர்கள் முன் வாயிலில் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை நீ தகுந்த வழியில் உபசாரம் செய்யவேண்டும். ஆகவே உனது திருவடிகள் என்னும் தாமரைகளின் சுகம் பெறுபவர்களில் முதல் இடம் பிடித்துள்ள பாதுகையை, இதன் மூலம் சக்ரவர்த்தி என்ற பட்டம் பெற்ற பாதுகையை, நீ சாற்றிக் கொண்டு எழ வேண்டும்.

243. பத்மா ஜுஷ்டம் பஜது சரணம் பாதுகா லப்தவாரா
ப்ரத்யாஸந்நா: தவ பரிஜநா: ப்ராதராஸ்தாந யோக்ய:
அர்த்த உந்மேஷாத் அதிகஸுபகாம் அர்த்த நித்ராநுஷங்காம்
நாபீ பத்மே தவ நயநயோ: நாத பச்யந்து சோபாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! காலை வேலையில் உனக்குத் தொண்டு புரியும் பணியாளர்கள் வந்து விட்டனர். உனது தாமரை போன்ற கண்களில் உள்ள உறக்கம் பாதி கலைந்தும் கலையாமலும் உள்ளதால், உனது இமை பாதி மூடியும் திறந்தும் உள்ளது. இந்த அழகைக் கண்டு, நாபிக் கமலத்தில் உள்ள தாமரை மலர், உனது கண்கள் போல மலர்ந்தும் மலராமலும் உள்ளது. இந்த அழகை அவர்கள் அனுபவிக்கவேண்டும். இரவு முழுவதும் உனது திருவடிகளை வணங்கி வருடிய மஹாலக்ஷ்மியின் சேவையை இனிப் பகலில் பாதுகை ஏற்றுக் கொள்ள வேண்டும் (ஆகவே துயில் எழுவாயாக).

244. உபநமதி முஹுர்த்தம் சேஷ ஸித்தாந்த ஸித்தம்
தத் இஹ சரணரக்ஷா ரங்கநாத த்வயைஷா
ம்ருதுபதம் அதிரூடா மஞ்ஜுபி: சிஞ்ஜிதை: ஸ்வை:
உபதிசது ஜநாநாம் உத்ஸவ ஆரம்பவார்த்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! சுபமான முஹுர்த்த காலம் வந்துவிட்டது. ஆதிசேஷனின் அவதாரமாகிய உடையவரின் "எம்பெருமானார் தரிசனம்" என்னும் முறைப்படிச் செய்ய வேண்டியவைகள் நடைபெற வேண்டும். உனது திருவடிகளைக் காப்பதில் குறியாக உள்ள உனது பாதுகைகள் மீது உனது திருவடிகளை மெதுவாக எடுத்து வைப்பாயாக. பின்னர் நீ அழகாக நடந்து வரும்போது ஒலிக்கின்ற பாதுகைகளின் ஒலி, மக்களுக்கு அன்றைய உற்சவம் தொடங்கியதை அறிவிக்கட்டும்.

245. ரங்காதீச மருத்கணஸ்ய மகுடா ஆம்நாய ப்ருந்தஸ்ய வா
ப்ரத்யாநீய ஸமர்ப்பிதா விதிமுகை: வாரக்ரமாத் ஆகதை:
வாஹா அரோஹண ஸம்ப்ருதம் ச்ரமபரம் ஸம்யக்விநேதும் க்ஷமா
சீலா ஸஞ்சரண ப்ரியா ஸ்ப்ருசது தே பாதாம்புஜம் பாதுகா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! உன்னுடைய பாதுகையை நான்முகன் முதலான தேவர்கள் வரிசையாக நின்று தங்கள் தலையில் ஏற்கின்றனர். வேதங்களும் தங்கள் தலைகளில் ஏற்றுக் கொள்கின்றன. இவ்விதம் சஞ்சரித்த பாதுகை, இப்போது மீண்டும் உன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக பலவிதமான வாகனங்கள் மீது ஏறி சஞ்சாரம் செய்த காரணத்தினால் பாதுகைக்கு மிகுந்த களைப்பு ஏற்பட்டிருக்கும். இவ்விதம் அமர்ந்தபடி சென்ற பின்னர், சற்று நேரம் நீ பாதுகையை அணிநது கொண்டு உல்லாசமாக நடப்பதை அல்லவோ பாதுகை விரும்பி நின்றது? ஆகவே உனது திருவடிகளை அவை தொடவேண்டும்.

246. வ்ருத்தம் க்ரமேண பஹுதா நியுதம் விதீநாம்
அர்த்தம் த்வதீயம் இதம் அங்குரிதம் தவாஹ்ந:
நீளாஸகீபி: உபநீய நிவேச்யமாநா
மங்த்தும் ப்ரபோ த்வரயதே மணிபாதுகே த்வாம்

**பொருள்** – ப்ரபோ! ஸ்ரீரங்கநாதா! வரிசையாகப் பல லட்சம் நான்முகன்களின் ஆயுள் காலம் முடிந்து விட்டது. இதோ பார்! உனது தினத்தின் பிற்பகல் வந்து விட்டதை இது உணர்த்துகிறது. நப்பின்னை பிராட்டியின் தோழிகள் மூலம் கொண்டு வந்து

சமர்ப்பிக்கப்பட்ட பாதுகையானது, உன்னைத் திருமஞ்சனம் செய்து கொள்ள அழைக்கிறது.

247. திவ்ய அப்ஸரோபி: உபதர்சித தீப வர்கே
ரங்காதிராஜ ஸுபகே ரஜநீமுகே அஸ்மிந்
ஸம்ரக்ஷிணீ சரணயோ: ஸவிலாஸ வ்ருத்தி:
நீராஜநாஸநம் அஸௌ நயது ஸ்வயம் த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனே! பரமபதத்தில் உள்ள அப்ஸரஸ்கள் பலரும் ஸந்த்யா காலம் ஆகி விட்டபடியால் தீபம் ஏந்தி, உனக்கு மங்கள ஆலத்தி எடுக்க வந்துள்ளனர். உன்னுடன் எப்போதும் உல்லாசமாக நடக்க வேண்டும் என்ற எண்ணமும், உனது திருவடிகளை எப்போதும் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணமும் கொண்ட பாதுகையானது, உன்னை ஆலத்திக்கான ஆஸனத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டும்.

248. ஆஸநாத் உசிதம் ஆஸநாந்தரம் ரங்கநாத யதி கந்தும் ஈஹஸே
ஸந்நதேந விதிநா ஸமர்ப்பிதாம் ஸப்ரஸாதம் அதிரோஹ பாதுகாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! நீ ஓர் ஆசனத்தில் இருந்து மற்றோர் ஆசனத்திற்குச் செல்ல விரும்புகின்றாய் போலும். அதனால்தான் நான்முகன் தனது கைகளில் உனது பாதுகையைத் தயாராக வைத்துக்கொண்டு நிற்கிறான் போலும். அவற்றைச் சாற்றிக் கொள்வாயாக.

249. பரிஜநவநிதாபி: ப்ரேஷித: ப்ராஞ்ஜலிஸ்த்வாம்
ப்ரணமதி மதநோ அயம் தேவ சுத்தாந்ததாஸ:
பணிபதி சயநீயம் ப்ராபயித்ரீ ஸலீலம்
பதகமலம் இயம் தே பாதுகா பர்யுபாஸ்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! அந்தப்புரத்தில் வேலைக்காரர்கள் மூலம் மன்மதன் அனுப்பப்பட்டுள்ளான். அவன் உன் முன்பாக குவிந்த கைகளுடன் நின்று கொண்டு வணங்கியபடி உள்ளான். ஆதிசேஷன் என்ற படுக்கைக்கு உன்னை எழுந்தருளிச் செய்ய பாதுகை தயாராக உள்ளது. ஆகவே தாமரை போன்ற உனது திருவடிகள் பாதுகையை விரைந்து அடைய வேண்டும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

250. இதி நிகமவந்திவசஸா ஸமயே ஸமயே க்ருஹீதஸங்கேத:
அபி ஸரதி ரங்கநாத: ப்ரதிபதபோகாய பாதுகே பவதீ

**பொருள்** - நம்பெருமாளின் பாதுகையே! இப்படியாக அந்தந்த காலத்தில் இவற்றைச் செய்யவேண்டும் என்று வேதங்களாகிய வந்திகள் (துதி செய்பவர்கள் எனலாம்) மூலம் ஸ்ரீரங்கநாதன் உணர்கிறான். அந்தந்த காலத்தில் சுகங்களை அனுபவிக்கும் பொருட்டு உன்னை அடைகிறான்.

## வைதாளிக பத்ததி ஸம்பூர்ணம்

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## வைதாளிக பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (10.ச்ருங்கார பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

251. சௌரே: ச்ருங்கார சேஷ்டாநாம் ப்ரஸூதிம் பாதுகாம் பஜே
யாம் ஏஷ புங்க்தே சுத்தாந்தாத் பூர்வம் பச்சாத் அபி ப்ரபு:

**பொருள்** – பெரியபெருமாளின் ச்ருங்கார ரஸத்திற்கு ஏதுவாக உள்ள பாதுகையை நான் வணங்குகிறேன். பாதுகை எவ்விதம் ஏதுவாக உள்ளது என்றால் - அவன் அந்தப்புரம் செல்வதற்கும், அங்கிருந்து மீண்டு வருவதற்கும் பாதுகையைச் சாற்றிக் கொண்டு அல்லவோ செல்கிறான்?

252. ப்ரணத த்ரிதசேந்த்ர மௌளிமாலா மகரந்த அர்த்ர பராக பங்கிலேந
அநுலிம்பதி பாதுகே ஸ்வயம் த்வாம் அநுரூபேண பதேந ரங்கநாத:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தேவர்கள் அனைவரும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் தலை சாய்த்து வணங்குகின்றனர். அப்போது அவர்கள் அணிந்துள்ள மாலைகளில் உள்ள தேன், அவனது திருவடிகளில் உள்ள தூசிகளுடன் கலந்து, சேறு போன்று ஆகிறது. இப்படிப்பட்ட உயர்ந்த திருவடிச் சேற்றை உன் மீது சந்தனம் போன்று ஸ்ரீரங்கநாதன் எப்போதும் பூசுகிறான் (நாயகன் நாயகிக்கு சந்தனம் பூசுவதைக் கூறுகிறார்).

253. அவதாத ஹிமாம் ஸுக அநுஷக்தம் பதரக்ஷே த்வயி ரங்கிண கதாசித்
கிம் அபி ஸ்திதம் அத்வதீய மால்யம் விரளாவஸ்தித மௌக்திகம் ஸ்மராமி

**பொருள்** - ஒரு நேரத்தில் ஸ்ரீரங்கநாதன் வெளுத்த ஈர வஸ்திரத்துடனும், நெருக்கம் இல்லாமல் அங்கும் இங்குமாக உள்ள முத்துமாலையுடனும் அழகாக உன் மீது எழுந்தருளியிருப்பான். அப்போது அவன் திருவடிகளில் மலர்மாலையும் சாற்றப்பட்டிருக்கும். இதனைக் காணும்போது, சந்தனப் பூச்சிற்குப் பின்னர் (கடந்த ச்லோகம் காண்க) உனக்கு இடப்பட்ட மாலை என்றே நான் எண்ணுகிறேன்.

254. அஸஹாய க்ருஹீத ரங்கநாதாம் அவரோதாங்கணஸீம்நி பாதுகே த்வாம்
ஸுத்ருஸ: ஸ்வயம் அர்ச்சயந்தி தூராத் அவதம் ஸோத்பல வாஸிதை: அபாங்கை:

**பொருள்** – நம்பெருமாளின் பாதுகையே! நம்பெருமாள் உன்னைத் தனது திருவடிகளில் சாற்றிக் கொண்டு அந்தப்புரத்திற்குச் செல்கிறான். அப்போது அங்குள்ள பெண்கள் செய்வதென்ன? அவர்கள் தங்கள் காதுகளில் அலங்காரமாக வைத்துள்ள நெய்தல் மலரின் நறுமணம் நிறைந்த கண்களால் உன்னைத் தங்கள் கடைக்கண் பார்வை கொண்டு பார்த்து

வணங்கி நிற்கின்றனர் (இங்கு நாயகனான நம்பெருமாளுடன் வரும் ப்ரதான நாயகியாக பாதுகை கூறப்பட்டது காண்க).

255. நிர்விச்யமாநம் அபி நூதந ஸந்நிவேசம்
கைவல்ய கல்பித விபூஷண காயகாந்திம்
காலேஷு நிர்விசஸி ரங்கயுவாநம் ஏகா
ச்ருங்கார நித்ய ரஸிகம் மணிபாதரக்ஷே

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! எத்தனை அனுபவித்தாலும் புதியவனாகவே ஸ்ரீரங்கநாதன் உள்ளான். அத்தனை அழகான திவ்யமான திருமேனி கொண்டவனாக உள்ளான். எந்தவித ஆபரணங்களும் அணியாமல் இருக்கின்ற போதும், ஆபரணங்கள் அணித்தவன் போலத் தோன்றுகிறான். இவ்விதமாக அந்தந்த காலகட்டங்களில் நீ அவனுடனே இருந்து கொண்டு அவனைத் தனியாக அனுபவித்தபடி உள்ளாய்.

256. நித்ராயிதஸ்ய கமிது: மணிபாதுகே த்வம்
பர்யங்கிகா பரிஸரம் ப்ரதிபத்யமாநா
ச்வாஸாநில ப்ரசலிதேந புஜஸ்ய பீக்ஷ்ணம்
நாபீ ஸரோஜரஜஸா நவம் அங்கராகம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப் பெற்ற பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறான். அப்போது அவன் கட்டிலில் அருகில் நீ உள்ளாய். அவன் விடும் மூச்சுக்காற்றில், அவனது நாபிக்கமலத்தில் உள்ள மகரந்தத் துளிகள் உன் மீது வந்து படிந்தபடி உள்ளன. இவ்விதம் உனக்கு சந்தனப் பூச்சு நடைப்பெறுகிறது போலும்.

257. சயிதவதி ரஜந்யாம் பாதுகே ரங்கபந்தௌ
சரணகமல பார்ச்வே ஸாதரம் வர்த்தஸே த்வம்
பணிபதிசயநீயாத் உத்திதஸ்ய ப்ரபாதே
ப்ரதமநய பாதம் பாவநம் ப்ராப்து காமா

**பொருள் –** பெரியபெருமாளின் பாதுகையே! பெரியபெருமாள் இரவில் தனது படுக்கையில் சயனித்துள்ளபோது, தாமரை மலர் போன்ற அவனது அழகான திருவடிகளின் அருகிலேயே நீ உள்ளாய். ஏன் என்றால் - பெரியபெருமாள் காலைப்பொழுதில் தனது ஆதிசேஷன் என்ற படுக்கையில் இருந்து துயில் எழும்போது,

அவனது முதல் பார்வையை நீ பெற்றுவிட வேண்டும் என்ற ஆசை காரணமாக அல்லவோ?

258. சரணகமல ஸங்காத் ரங்கநாதஸ்ய நித்யம்
நிகமபரிமளம் த்வம் பாதுகே நிர்வமந்தீ
நியதம் அதிசயாநா வர்த்தஸே ஸாவரோதம்
ஹ்ருதயம் அதிவஸந்தீம் மாலிகாம் வைஜயந்தீம்

**பொருள்** – அழகியமணவாளனின் பாதுகையே! பெரியபெருமாளின் திருமார்பில் உள்ள மஹாலக்ஷ்மியுடன் தொடர்பு கொண்டுள்ளதால், அவன் அணிந்துள்ள வைஜயந்தி என்கிற மாலைக்கு நறுமணம் அதிகமே ஆகும். ஆயினும் அவனது திருவடிகளின் தொடர்பு உனக்கு மட்டுமே அல்லவா உள்ளது? இதன் மூலம் நீ எப்போதும் வேதங்களின் நறுமணத்தை பரப்பியபடி உள்ளாய். ஆக ஸ்ரீரங்கநாச்சியாரின் தொடர்பு பெற்ற அந்த மாலையை விட, அவனது திருவடிகளின் தொடர்பு பெற்ற நீ உயர்ந்தே உள்ளாய்.

259. உபநிஷத் அபலாபி: நித்யம் உத்தம்ஸநீயம்
கிம் அபி ஜலதிகந்யா ஹஸ்த ஸம்வாஹநார்ஹம்
தவ து சரணரக்ஷே தேவி லீலாரவிந்தம்
சரண ஸரஸிஜம் தத் சாரு சாணூரஹந்து:

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உபநிஷத்துக்கள் என்னும் பெண்கள், பெரியபெருமாளின் திருவடித் தாமரைகளைத் தங்கள் தலைகளில் சூட்டிக் கொள்கின்றனர். திருப்பாற்கடலில் அவதரித்த மஹாலக்ஷ்மி அந்த திருவடிகளைத் தனது திருக்கைகளால் பிடித்தபடி உள்ளாள். சாணூரனை மாய்த்த க்ருஷ்ணனாகிய பெரியபெருமாளின் திருவடிகள், உனக்கு ஒரு விளையாட்டுப் பொருளாக உள்ள தாமரையாக உள்ளது.

260. அகிலாந்த: புரவாரேஷு அநேகவாரம் பதாவநி ஸ்வைரம்
அநுபவதி ரங்கநாத: விஹாரவிக்ராந்தி ஸஹசரீம் பவதீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் தனது அந்தப்புரங்களில் நுழைவதற்கு “இந்த இந்த நாள், இந்த இந்த அறை” என்று முறை வைத்துள்ளான். ஆனால் உன்னை மட்டும் அவன் எப்போதும் விடாமல் உல்லாஸ நடையில் அனுபவித்தபடி உள்ளான்.


**Email:**sridharan_book@yahoo.co.in

ச்ருங்கார பத்ததி ஸம்பூர்ணம்

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ச்ருங்கார பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (11.ஸஞ்சார பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

261. அக்ரஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குசகண்டகாந்
இதி சீதா அபி யத்வ்ருத்திம் இயேஷ ப்ரணமாமி தாம்

**பொருள் -** பாதுகையே! இராமன் கானகம் புறப்பட்டபோது, நீ அவன் முன்பாகச் சென்று தர்ப்பைப் புற்கள், முள் ஆகியவற்றை மிதித்தபடி, நான் செல்கிறேன் என்று புறப்பட்டாய். உனது இந்தக் கைங்கர்யத்தைக் காண்பதற்குச் சீதை மிகவும் ஆசைப்பட்டாள். அப்படிப்பட்ட உன்னை நான் வணங்குகிறேன்.

262. சரத: சதம் அம்ப பாதுகே ஸ்யாம்
ஸமய ஆஹூத பிதாமஹ ஸ்துதாநி
மணிமண்டபிகாஸு ரங்கபர்த்து:
த்வததீநாநி கதாகதாநி பச்யந்

**பொருள் -** இராமனின் திருவடிகளை அவனது தாய்போன்று பாதுகாக்கும் பாதுகையே! உற்சவ காலத்தில் ப்ரம்மன் உட்பட அனைத்து தேவதைகளும் இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட மண்டபத்தில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாதனைத் துதிக்கக் காத்து நிற்கின்றனர். உன்னைத் தனது திருவடிகளில் சாற்றிக் கொண்டு அரங்கன் வருகிறான். இவ்விதமாக உள்ள இந்த ஸ்ரீரங்கநாதனின் சஞ்சாரத்தை நான் நூறு வருடங்கள் திருவரங்கத்தில் இருந்து காண வேண்டும்.

263 த்வத் அதீந பரிக்ரமோ முகுந்த:
தத் அதீந: தவ பாதுகே விஹார:
இதரேதர பாரதந்த்ர்யம் இத்தம்
யுவயோ: ஸித்தம் அநந்ய தந்த்ர பூம்நோ:

**பொருள் –** பாதுகையே! நீயும் ஸ்ரீரங்கநாதனும் எதற்காகவும், யாரையும் நாடி இருப்பதில்லை. அதனால் உங்கள் இருவர் விஷயத்தில் நடப்பது என்ன தெரியுமா? தான் அங்கும் இங்கும் ஸஞ்சாரம் செய்வதற்கு உன்னையே ஸ்ரீரங்கநாதன் நாடி உள்ளான். இது போன்று அதே விஷயத்தின் மூலம், உனது கம்பீரம் வெளிப்பட நீ அவனை நாடி இருக்க வேண்டியுள்ளது. இப்படி ஒருவரை ஒருவர் சார்ந்து உள்ளீர்கள்.

264. ரஜஸா தமஸா ச துஷ்ட ஸத்த்வே
கஹநே சேதஸி மாமகே முகுந்த:
உசிதம் ம்ருகயா விஹாரம் இச்சந்
பவதீம் ஆத்ருத பாதுகே பதாப்யாம்


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள்** - பாதுகையே! என்னுடைய மனமானது ரஜோகுணத்தாலும், தமோ குணத்தாலும் கெட்டுப் போய், இருண்ட காடு போன்று உள்ளது. இந்த மனதில் ஸத்வ குணத்தைச் சேர்ந்த ஏதும் உண்டாவதில்லை. இவ்விதம் என் மனம் இருள் மற்றும் புழுதி அடைந்து உள்ளது. இந்த இருண்ட கானகத்தில் வேட்டையாடி, அதில் உள்ள விலங்குகளைத் துரத்த ஸ்ரீரங்கநாதன் விருப்பம் கொண்டான். ஆகையால் உன்னைத் தனது திருவடிகளில் சாற்றியபடி எனது மனதிற்குள் வந்தான் போலும்.

265. க்ஷமயா ஜகதாம் அபி த்ரயாணாம்
அவநே தேவி பதாவநி த்வயைவ
அபிகம்யதம: அபி ஸம்ச்ரிதாநாம்
அபிகந்தா பவதி ஸ்வயம் முகுந்த:

**பொருள்** - பாதுகாதேவீ! அனைத்து அடியார்களும் தனது இருப்பிடத்திற்கு வந்து தன்னை வணங்கும்படியாக இருக்கும் ஸ்வபாவம் உடையவன் பெரியபெருமாள் ஆவான். நீயோ மூன்று உலகங்களையும் பாதுகாப்பதில் சிந்தனை கொண்டவளாக உள்ளாய். ஆக உன்னால்தான் ஸ்ரீரங்கநாதன், தனது இருப்பிடத்தை விட்டுக் கிளம்பி, அடியார்கள் உள்ள இடத்தை, தானே தேடிப் போகிறான்.

266. சிரஸா பவதீம் ததாதி கச்சித்
வித்ருத: கோ அபி பதஸ்ப்ருசா பவத்யா
உபயோ: மதுவைரி பாதரக்ஷே
த்வத் அதீநாம் கதிம் ஆமநந்தி ஸந்த:

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த கண்ணனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! பெரியபெருமாள் சஞ்சாரம் செய்ய வேண்டும் என்று விருப்பம் கொண்டவுடன், உன்னைத் தனது தலையில் ஏற்றியபடி ஒருவர் வருகிறார். பெரியபெருமாளின் திருவடிகளைத் தாங்கி நிற்கும் ஒருவர் உன்னால் தாங்கப்படுகிறார். ஆக இந்த இரண்டு கதிக்கும் நீயே ஆதாரம் என்று பெரியவர்கள் கூறுகின்றனர்.

267. ஸ்ப்ருசத: சிரஸா பதேந ச த்வாம்
கதிம் உத்திச்ய முகுந்த பாதுகே த்வெள
அவரோஹதி பச்சிம: பதாத் ஸ்வாத்
அத்ரோஹத்யநக: ததேவ பூர்வ:

**பொருள்** - க்ருஷ்ணனின் பாதுகையே! உன்னை இருவர் தொடுகின்றனர். ஒருவர் உன்னைத் தனது கால்கள் கொண்டு தொடுகிறார், மற்றோருவர் உன்னைத் தனது

தலையால் தாங்குகிறார். தலையால் தொட்டவர் மேலே (பரமபதம்) ஏறியபடி உள்ளார். காலால் தொட்டவர் (நம்பெருமாள் ஆசனத்தில் இருந்து இறங்க எண்ணி, பாதுகை மீது திருவடி வைக்கிறான்) கீழே இறங்குகிறார்.

268. ஸமயேஷு அபதிச்ய ஜைத்ரயாத்ராம்
விவிதாந்த: புர வாகுரா வ்யதீத:
நியதம் மணிபாதுகே பவத்யா
ரமதே வர்த்மநி ரங்க ஸார்வபௌம:

**பொருள் -** இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் தனது அந்தப்புரத்தில், மஹாலக்ஷ்மி போன்ற பலவிதமான வலைகளில் அகப்பட்டு உள்ளான். ஆயினும் உன்னுடன் விளையாடும் ஆவல் கொள்ளும் அவன், பல்வேறு காலங்களில், "ஏதோ அரக்கனை அழிக்கப் போகிறேன்", என்று தனது வெற்றிக்கான காரணத்தைக் கூறியபடி வெளிவந்து விடுகிறான் .

269. நிஜ ஸம்ஹநந ப்ரஸக்த லாஸ்யம்
சரதி த்வாம் அதிருஹ்ய ரங்கநாத:
பதரக்ஷிணி பாவநத்வம் ஆஸ்தாம்
ரஸிக ஆஸ்வாதம் அத: பரம் ந வித்ம:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் உன் மீது ஏறிக்கொண்டு, தனது அழகிய திருமேனியில் நேர்த்தியான நாட்டியம் ஏற்படுவது போன்று, ஒய்யாரமாக நடக்கிறான். இத்தகைய திவ்யமான நடையழகைக் காண்பவர்களுக்கு அனைத்துப் பாவங்களும் நீங்குகின்றன என்பது ஒரு புறம் இருக்கட்டும், இது போன்ற மற்றோர் அழகை நாம் அறியவில்லை.

270. பதயோரநயோ: பரஸ்ய பும்ஸ:
தத் அநுக்ராஹ்ய விஹார பத்ததேர் வா
சிரஸோ மணிபாதுகே ச்ருதீநாம்
மநஸோ வா மம பூஷணம் த்வம் ஏகா

**பொருள் -** இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! பரமபுருஷனாகிய ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்கு ஏற்ற அலங்காரமாக நீ உள்ளாய். அந்தத் திருவடிகள் சஞ்சாரம் செய்யத் தகுந்ததாக உள்ள வழி முழுவதற்கும் நீயே அலங்காரமாக உள்ளாய். வேதங்களின் தலையில் உள்ள ஒப்பற்ற ஆபரணமாக உள்ளாய். என்னுடைய மனதிலும் நீ அலங்காரமாக உள்ளாய்.

271. க்ருபயா மதுவைரி பாதரக்ஷே
கடிநே சேதஸி மாமகே விஹார்த்தும்
மகுடேஷு திவௌகஸாம் விதத்தே
பவதீ ரத்ந விஸம்ஸ்துலேஷு யோக்யாம்

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! எனது மனம் மிகவும் கடினமான கல் போன்றதாகும். அந்த மனதுடன் பழக நீ செய்வது என்ன? தேவர்களின் க்ரீடங்களில் மேடு பள்ளங்களாக உள்ள இரத்தினக் கற்றளுடன் நீ பழகிக் கொள்கிறாய் போலும் (அப்போது என் மனதுடன் பழகுவதற்கு எளிதாகிவிடும் அல்லவா).

272. சரணத்வயம் அர்ப்பகஸ்ய சௌரே:
சரத் அம்போருஹ சாதுரீ துரீணம்
சகடாஸுர தாடநே அபி குப்தம்
தவ சக்த்யா கில பாதுகே ததாஸீத்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் க்ருஷ்ணனாக அவதரித்தபோது அவனது திருவடிகளானவை, சரத்காலத்தில் மலரும் தாமரை போன்று முழு அழகையும் பெற்றிருந்தன. அப்படிப்பட்ட மென்மையான திருவடிகளைக் கொண்ட அந்தக் குழந்தை, தனது திருவடிகளால் சகடாசுரனை உதைக்கும் வலிமையை எங்கிருந்து பெற்றது? உனது சக்தியால் அல்லவோ?

273. உத்தஸ்துஷ: ரங்கசயஸ்ய சேஷாத்
ஆஸ்தாந ஸிம்ஹாஸநம் ஆருருக்ஷோ:
மத்யே நிசாந்தம் மணிபாதுகே த்வாம்
லீலா பதந்யாஸ ஸகீம் ப்ரபத்யே

**பொருள்** – இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஆதிசேஷன் என்னும் தனது படுக்கையிலிருந்து துயில் எழுகின்ற ஸ்ரீரங்கநாதன், தனது சபையை அடைந்து, ஸிம்ஹாஸனத்தில் அமரவேண்டும் என்று விரும்புகிறான். இதற்காக உன்னைத் தனது திருவடிகளில் சாற்றிக் கொண்டு நடந்தான். இப்படிப்பட்ட உன்னையே எனக்கு உபாயம் என்று கொள்கிறேன்.

274. ப்ராப்த அதிகாரா: பதய: ப்ரஜாநாம்
உத்தம்ஸிதாம் இத்தம் பாதுகே த்வாம்
ரங்கேசிது: ஸ்வைர விஹார காலே
ஸம்யோஜயந்தி அங்கிரி ஸரோஜ யுக்மே

**பொருள்** - மிகவும் உயர்ந்த பாதுகையே! பிரம்ம பதவியை அடைபவர்கள் தங்கள் தலைகளில் உன்னை அலங்காரமாக வைத்துக் கொள்கின்றனர். ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்யும் நேரம் வந்தவுடன், உன்னைத் தங்கள் தலையில் இருந்து எடுத்து, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் அவர்கள் சேர்த்து விடுகின்றனர்.

275. த்வயா அநுபத்தாம் மணிபாதரக்ஷே
லீலா கதிம் ரங்கசயஸ்ய பும்ஸ:
நிசாமயந்த: ந புநர்பஜந்தே
ஸம்ஸார காந்தார கதாகதாநி

**பொருள்** - இரத்தினக் கற்கள்கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கத்தில் சயனித்துள்ள பரமபுருஷனாகிய பெரியபெருமாள், உன்னைச் சாற்றிக் கொண்டு சஞ்சாரம் செய்கிறான். இதனைக் காண்பவர்கள், இந்த உலகில் பிறப்பது-இறப்பது என்ற சுழற்சியை இனி மேற்கொள்வதில்லை.

276. வ்யூஹ அநுப்பூர்வீ ருசிராந் விஹாராந்
பதக்ரமேண ப்ரதிபத்யமாநா
பிபர்ஷி நித்யம் மணிபாதுகே த்வம்
முரத்விஷ: மூர்த்திரிவ த்ரிலோகீம்

**பொருள்** - இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! வாஸுதேவன், ஸங்கர்ஷணன் போன்று பல வ்யூஹ வரிசை மூலமாகவும், அழகாக அடி எடுத்து ஒய்யார நடை நடக்கும் ஸ்ரீரங்கநாதனின் சஞ்சாரத்தின் மூலமாகவும் இந்த உலகத்தைப் பெரியபெருமாளின் திருமேனி எவ்விதம் காப்பாற்றுகிறதோ, அதுபோல் நீயும் செய்கிறாய்.

277. பதேஷு மந்தேஷு மஹத்ஸ்வபி த்வம்
நீரந்த்ர ஸம்ச்லேஷவதீ முராரே:
ப்ரத்யாயநார்த்தம் கில பாதுகே ந:
ஸ்வாபாவிகம் தர்சயஸி ப்ரபாவம்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - பாதுகையே! பெரியபெருமாள் நம்பெருமாளாக நிற்கும்போது அவன் திருவடிகள் மிகவும் சிறியதாக உள்ளன. சயனித்தவனாக உள்ளபோது பெரிதாக உள்ளன. ஆனால் நீ அவனது திருவடிகளுக்கு ஏற்றபடி உன்னை, சிறிதும் இடைவெளி இன்றி மாற்றிக் கொள்கிறாய். எங்களுக்கு உன் மீது நம்பிக்கை எற்படுவதற்காக அல்லவா உனது இயற்கையாக உள்ள இந்தப் பெருமைகளை நீ வெளிப்படுத்துகிறாய்?

278. க்ருபாவிசேஷாத் க்ஷமயா ஸமேதாம்
ப்ரவர்த்தமாநாம் ஜகத: விபூத்யை
அவைமி நித்யம் மணிபாதுகே த்வாம்
ஆகஸ்மகீம் ரங்கபதே: ப்ரஸத்திம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! பூமியுடன் ஒத்த பொறுமை உடையவளும், இந்த உலகின் நன்மைக்காக அங்கும் இங்கும் உலவியபடி உள்ளவளுமாக நீ உள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் அனுக்ரஹம் என்பதே வடிவம் எடுத்தவளாக நீ உள்ளாய். வேறு எந்தக் காரணத்தினாலும் நீ இல்லை என்றே நான் எண்ணுகிறேன்.

279. உபாகதாநாம் உபதாப சாந்த்யை
ஸுகாவகாஹாம் கதிம் உத்வஹந்தீம்
பச்யாமி சௌரே: பதவாஹிநீம் த்வாம்
நிம்நேஷு துங்கேஷு ச நிவிசேஷாம்

**பொருள்** - பாதுகையே! துன்பம் கொண்டவர்களின் துயரம் நீங்கும்படி ஸ்ரீரங்கநாதன் அழகாக நடந்து வருகிறான். அப்படி அவன் சஞ்சாரம் செய்யும்போது உயர்ந்த இடங்கள், தாழ்ந்த இடங்கள் என்று பாராமல், அவன் திருவடிகளைத் தாங்கியபடி நீ வருகிறாய். இதனால் நீ உயந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று வேற்றுமை காணாமல் உள்ளவள் என்று அனைவரும் கூறுகின்றனர்.

280. ஸஹப்ரயாதா ஸததம் ப்ரயாணே
ப்ராப்தாஸநே ஸம்ச்ரித பாத பீடா
அலங்கநீயா ஸஹஜேந பூம்நா
சாயேவ சௌரேர் மணிபாதுகே த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் நடந்து செல்லும்போது, நீ அவன் கூடவே செல்கிறாய். அவன் தனது ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்துவிட்டால், அவன் பாதபீடங்களில் நீயும் அமர்ந்து விடுகிறாய். உனது

இயல்பாகவே அமைந்துவிட்ட பெருமை காரணமாக, தனது நிழலை விட்டுப் பிரிய இயலாதமல் ஸ்ரீரங்கநாதனின் நிழலாக நீ உள்ளாய்.

281. பதஸ்ப்ருசா ரங்கபதிர் பவத்யா
விசக்ரமே விச்வம் இதம் க்ஷணேந
ததஸ்ய மந்யே மணிபாதரக்ஷே
த்வயைவ விக்யாதம் உருக்ரமத்வம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! நீ தனது (எம்பெருமானுடைய) திருவடிகளில் இருக்கிறாய் என்ற காரணத்தினால், உன்னால்தான், இந்த உலகம் முழுவதையும் த்ரிவிக்ரமனாக ஸ்ரீரங்கநாதன் அளந்தான். ஆக, உன்னால் அல்லவோ பெரியபெருமாளுக்கு "உருக்கிரமன்" என்னும் திருநாமம் கிடைத்தது என்று கூறலாம்.

282. ஸஞ்சாரயந்தீ பதம் அந்வதிஷ்ட:
ஸஹாய க்ருத்யம் மணிபாதரக்ஷே
மாத: த்வம் ஏகா மனு வம்சகோப்து:
கோபாயதோ கௌதம தர்மதாராந்

**பொருள்** – பெரியபெருமாளின் திருவடிகளைத் தாய் போன்று பாதுகாப்பவளே! நீ அல்லவா இராமனின் திருவடிகளை நடக்கும்படிச் செய்தாய்? இதனால் அல்லவா இராமனின் திருவடிகள், கௌதமரின் பத்தினியாகிய அகலிகையின் சாபத்தைத் தீர்த்தன? ஆக, உன்னால் அல்லவா மனுவம்சத்தில் வந்த இராமனுக்கு இந்தப் பெருமை ஏற்பட்டது?

283. தவத்தஸ் த்ரிவிஷ்டபசராந் அஸபத்நயிஷ்யந்
ஆருஹ்ய தார்க்ஷ்யம் அவருஹ்ய ச தத்க்ஷணேந
சுத்தாந்த பூமிஷு புநர் மணிபாதரக்ஷே
விக்ராம்யதி த்வயி விஹாரவசேந சௌரி:

**பொருள்** - இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்வர்க்கத்தில் உள்ள தேவர்களுக்கு அசுரர்கள் மூலம் எழுந்த துயரத்தை நீக்குவதற்காக, பெரியபெருமாள் உன்னை விட்டு, கருடன் மீது ஏறிச் சென்று அவர்களைக் காத்தான். அதன் பின்னர் அவன் மீண்டும் வந்து, அந்தப்புரத்தில் சஞ்சாரம் செய்தபோது உன்னை சாற்றிக் கொண்டான். அப்போது அல்லவா அவனது களைப்பு நீங்கியது?

284. விக்ரம்ய பூமிம் அகிலாம் பலிநா ப்ரதிஷ்டாம்
தேவே பதாவநி திவம் பரிமாதுகாமே
ஆஸீததோ திநகரஸ்ய கரோபதாபாத்
ஸம்ரக்ஷிதும் பத ஸரோஜம் உபர்ய பூஸ்த்வம்

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! பெரியபெருமாள், மஹாபலி மூலம் தானமாக அளிக்கப்பட்ட மூன்று உலகங்களையும் அளந்து எடுக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டான். அப்போது ஆகாயத்தை அளப்பதற்காகத் தனது திருவடியை உயரத் தூக்கினான். அந்த நேரம், தாமரை போன்ற அவன் திருவடிகளின் மீது சூரியன் பட்டு, அவை வாடாமல் இருக்கும்படி, அவன் திருவடியை நீ காத்தாய்.

285. த்வத் ஸங்கமாத் நநு ஸக்ருத் விதிஸம்ப்ரயுக்தா
சுத்திம் பராம் அதிஜகாம சிவத்வ ஹேதும்
ரங்காதிராஜ பதரக்ஷிணி கீத்ருசீ ஸா
கங்கா பபூவ பவதீய கதாகதேந

**பொருள்** - திருவரங்கத்தின் சக்ரவர்த்தியான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! த்ரிவிக்ரமனாக உலகம் அளந்தபோது அவனது திருவடிகளில் ப்ரம்மனால் சேர்க்கப்பட்ட கங்கை, நீ அவன் திருவடிகளில் இருந்ததால், பெயரில் மட்டும் சிவனாக (தூய்மை) இல்லாமல் உண்மையாகவே தூய்மை பெற்றது. இப்படி உள்ளபோது நீ அந்த கங்கையின் மீது இருமுறை பயணித்தாய் (இராமாவதாரத்தில்). அப்படி எனில் கங்கை பெற்ற பேறு என்ன?

286. வ்ருத்திம் கவாம் ஜநயிதும் பஜதா விஹாராந்
க்ருஷ்ணேந ரங்கரஸிகேந க்ருதாச்ரயாயா:
ஸஞ்சாரதஸ் தவ ததா மணிபாதரக்ஷே
ப்ருந்தாவநம் ஸபதி நந்தநதுல்யம் ஆஸீத்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! பசுக்களைப் பெருக்கவும், அவற்றைக் காக்கவும் உறுதி செய்த பெரியபெருமாள், க்ருஷ்ணனாகச் சஞ்சாரம் செய்தான். அப்போது அவன் உன்னைச் சாற்றியபடி சஞ்சாரம் செய்தான். இதனால் அவன் உலவிய ப்ருந்தாவனம் முழுவதும் இந்திரனின் தோட்டம் போன்று அழகு பெற்றது.

287. மாத: த்ரயீ மயதயா சரணப்ரமாணே
த்வே விக்ரமேஷு விவிதேஷு ஸஹாயபூதே
நாதஸ்ய ஸாது பரிரக்ஷண கர்மணி த்வம்
துஷ்க்ருத் விநாஸந தசாஸு விஹங்கராஜ:

**பொருள் -** இராமனின் திருவடிகளை அவனது தாய் போன்று பாதுகாக்கும் பாதுகையே! வேதமயமாகவே இருந்து, ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளின் சஞ்சாரத்திற்குக் காரணமாக இரண்டு கூறப்பட்டன. அவை என்ன? ஸ்ரீரங்கநாதன் நல்லவர்களைக் காக்கும்போது, அவன் நடந்து செல்ல நீ உதவுகிறாய். நீ தீயவர்களை அழிக்க விரைவாகச் செல்ல கருடன் உதவுகிறான்.

288. பாதாவநி க்வசந விக்ரமணே புஜாநாம்
பஞ்சாயுதீ கரருஹைர் பஜதே விகல்பம்
நித்யம் த்வம் ஏவ நியதா பதயோர் முராரே:
தேநாஸி நூநம் அவிகல்ப ஸமாதி யோக்யா

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் புஜங்கள் ஒரு சில காலகட்டங்களில், ஆயுதம் என்பது இல்லாமல் நகங்கள் கொண்டு, தங்கள் செயலை நிறைவேற்றி விடுகின்றன (ஹிரண்யகசிபு வதம்). ஆனால் திருவடிகள் கொண்டு சஞ்சாரம் செய்யும் காலத்தில் நீ எப்போதும் உள்ளாய். ஆக உனக்குப் பதிலாக வேறு ஒன்று உள்ளது என்ற நிலை இல்லவே இல்லை.

289. அக்ஷேத்ரவித்பி: அதிகந்தும் அசக்யவ்ருத்தி:
மாதஸ்த்வயா நிரவதி: நிதி: அப்ரமேய:
ரத்யாந்தரேஷு சரணாவநி ரங்கஸங்கீ
வாத்ஸல்ய நிக்நமநஸா ஜநஸாத் க்ருதோ அஸௌ

**பொருள் -** பெரியபெருமாளின் பாதுகையே! சரீரத்தில் ஆத்மா உள்ளது என்ற உண்மை அறியாமல் உள்ளவர்களால் அடைவதற்குக் கடினமாக உள்ளது; அளவற்று உள்ளது; இப்படிப்பட்டது என்று அறிய இயலாததாக உள்ளது; திருவரங்கத்தின் பெரிய நிதியாக உள்ளது - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனை, அபாரமான கருணை உள்ளத உனது குணம் காரணமாகவே, திருவரங்க வீதிகளில் அனைவரும் காணும்படிச் செய்கிறாய்.

 **Email:**sridharan_book@yahoo.co.in

290. ஸம்பத்யதே ஸமுசிதம் க்ரமம் ஆச்ரயந்த்யா
ஸத்வர்த்மநா பகவத: அபி கதிர்பவத்யா
ஈஷ்டே பதாவநி புந: க இவேதரேஷாம்
வ்யாவர்த்தநஸ்ய விஷமாத் அபத ப்ரசாராத்

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் நல்ல வழியில் சென்று சஞ்சாரம் செய்வது என்பது, உனது அடிவைப்பு மூலமே உண்டாகிறது. இப்படி உள்ளபோது, மற்றவர்களைத் தீயவழிகளில் நடக்காமல் திசை திருப்பும் திறன் வேறு யாரிடம் உள்ளது?

291. ரங்கேச்வரேண ஸஹ லாஸ்யவிசேஷ பாஜோ
லீலோசிதேஷு தவ ரத்ந சிலாதலேஷு
மத்யே ஸ்திதாநி கசிசிந் மணிபாதரக்ஷே
ஸப்யாந் விசேஷம் அநுயோக்தும் இதி ப்ரதீம:

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் சஞ்சாரத்தின்போது, அவன் அங்காங்கு இரத்தினக்கற்கள் பதித்த இடங்களில் சற்றே நிற்கிறான். இவ்விதம் அவனுடன் நாட்டியம் செய்வது போல் செல்லும் நீ, அவனை நிறுத்த என்ன காரணம்? அந்தக் கோஷ்டியில் உள்ளவர்களிடம், “என்னில் பதிக்கப்பட்ட இரத்தினங்களா, இந்த மேடையில் பதிக்கப்பட்ட இரத்தினங்களா - இதில் எவை அழகாக உள்ளன?” என்று கேட்டு அறிவதற்கே என்று எண்ணுகிறோம்.

292. நித்யம் பதாவநி நிவேச்ய பதம் பவத்யாம்
நிஷ்பந்த கல்ப பரிமேய பரிச்சதாநி
ச்ருங்கார சீதலதராணி பவந்தி காலே
ரங்கேச்வரஸ்ய லலிதாநி கதாகதாநி

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பற்றும் பாதுகையே! ஏகாந்த சேவையின்போது உன் மீது திருவடிகளை வைத்து, அழகியமணவாளன் நிற்கிறான். அப்போது குடை, சாமரம் போன்றவை அசையாமல், ஓசை எழுப்பாமல் உள்ளன. இவ்விதம் உள்ள ஸ்ரீரங்கநாதனின் சஞ்சாரம் மிகவும் இன்பம் அளிப்பதாகவும், குளிர்ந்தும் உள்ளது.

293. போக அர்ச்சநாநி க்ருதிபி: பரிகல்பிதாநி
ப்ரீத்யைவ ரங்கந்ருபதி: ப்ரதிபத்யமான:
பச்யத்ஸு நித்யம் இதரேஷு பரிச்சதேஷு
ப்ரத்யாஸநம் பஜதி காஞ்சநபாதுகே த்வம்

**பொருள் -** தங்கம் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! புண்ணியம் நிறைந்தவர்களால் அடியார்கள் ஸ்ரீரங்கநாதனின் சஞ்சாரத்தின்போது ஆங்காங்கு வழிநடை உபயம் நடத்தப்படுகிறது. அப்போது அந்த மண்டபங்களில் உள்ள குடை, சாமரம் போன்றவைகள் அந்த மண்டபங்களில் அப்படியே உள்ளன. ஆனால் உன்னை மட்டும் திருவடிகளில் சாற்றியபடி அவன் ஒவ்வொரு ஆசனத்தையும் சென்று சேர்கிறான்.

294. அந்த: த்ருதீய நயநை: ஸ்வயம் உத்தமாங்கை:
ஆவிர்ப பவிஷ்யத் அதிரிக்த முக அம்புஜைர்வா
ந்யஸ்யந்தி ரங்கரஸிகஸ்ய விஹாரகாலே
வாரக்ரமேண க்ருதிநோ மணிபாதுகே த்வாம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! புண்ணியம் செய்தவர்கள் தங்கள் புண்ணியத்தின் விளைவாக மூன்றாவது கண்ணையோ (சிவபதவி) அல்லது மூன்று தலைகளையோ (ப்ரம்மபதவி) அடைந்து விடுவார்கள். இவர்கள் ஸ்ரீரங்கநாதன் சஞ்சாரம் செய்யும்போது, தங்கள் தலைகளில் உன்னை ஏந்தியபடி, அவனிடம் சேர்க்கின்றனர்.

295. ரங்கேச்வரே ஸமதிரூட விஹங்கராஜே
மாதங்கராஜ வித்ருதாம் மணிபாதுகே த்வாம்
அந்வாஸதே வித்ருதசாரு ஸிதாதபத்ரா:
ஸ்வர்கௌகஸ: ஸுபக சாமர லோல ஹஸ்தா:

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் கருடன் மீது எழுந்தருளுகிறான். அப்போது உன்னைத் தேவர்கள், ஐராவதத்தின் மீது அமர வைத்தபடியும், சாமரங்கள் வீசியபடியும், வெண்குடை கவிழ்த்தபடியும் எழுந்தருளச் செய்கின்றனர்.

296. விஷ்ணோ: பதம் கதிவசாத் அபரித்ய ஜந்தீம்
லோகேஷு நித்ய விஷமேஷு ஸம்ப்ரசாராம்
அந்வேதும் அர்ஹதி த்ருதாம் அகிலை: ஸுரேந்த்ரை:
கங்கா கதம் நு கருடத்வஜ பாதுகே த்வாம்

**பொருள்** - கருடனைத் தனது கொடியில் கொண்ட பெரியபெருமாளின் பாதுகையே! கங்கை நதியானது மேடு பள்ளங்களில் ஓடும்போது, பெரியபெருமாளின் திருவடிகளை விட்டுப் பிரிந்து ஓட வேண்டியுள்ளது. ஆனால் நீயோ எப்போதும் அவன் திருவடிகளை விட்டுப் பிரியாமல் உள்ளாய். மேலும் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று வேறுபாடு காணாமல் அனைவரின் தலையிலும் சமமாகவே ஆதரித்தபடி உள்ளாய். ஆகவே கங்கை உனக்கு எவ்விதம் ஒப்பாகும்?

297. பிக்ஷாம் அபேக்ஷ்ய தநுஜேந்த்ர க்ருஹம் ப்ரயாது:
குப்த்யை கவாம் விஹரதோ வஹதச் ச தூத்யம்
தத்தாத்ருசாநி சரணாவநி ரங்கபர்த்து:
த்வத் ஸங்கமேந ஸுபகாநி விசேஷ்டிதாநி

**பொருள்** - திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மஹாபலியிடம் யாசகம் சென்றான், பசுக்களைக் காப்பாற்றும் விதமாக அவற்றுடன் திரிந்தான், பண்டவர்களுக்காகத் தூது சென்றான் – இத்தனை தாழ்வான செயல்களைச் செய்தபோதும், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் ஏன் தாழ்ந்து போகவில்லை என்றால் - உன்னுடைய தொடர்பினால் ஆகும்.

298. நிர்வ்யஜ்யமாந நவதாள லயப்ரதிம்நா
நிர்யந்த்ரணேந நிஜஸஞ்சரண க்ரமேண
ம்ருத்நாஸி ரங்கந்ருபதே: மணிபாதுகே த்வம்
துக்காத் மகாந் ப்ரணமதாம் துரித ப்ரரோஹாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னால் பிரகாசம் பெற்ற ஸ்ரீரங்கநாதனின் நடை எவ்விதம் உள்ளது என்றால் - அனைவரும் காணும்படியும், வியப்பு அளிக்கும்படியும், தாளம் மற்றும் லயம் இணைந்ததாகவும், எந்தத் தடையும் இல்லாமலும் உள்ளது. இப்படிப்பட்ட நம்பெருமாளின் நடை அழகைக் கண்டு வணங்குபவர்களின் பாவம் அனைத்தையும் நீ நசுக்கிவிடுகிறாய்.

299. நித்யம் ய ஏவ ஜகதோ மணிபாதரக்ஷே
ஸத்தாஸ்திதி ப்ரயதநேஷு பரம் நிதாநம்
யோ அபி ஸ்வதந்த்ர சரித: தவத் அதீந வ்ருத்தி:
கா வா கதா ததிதரேஷு மிதம்பசேஷு

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகைப் படைப்பது, இந்த உலகில் உள்ள அனைத்தைக் காட்டிலும் உயர்ந்திருப்பது ஆகிய

தன்மைகளை உடைய ஸ்ரீரங்கநாதனே உன் வசப்பட்டுள்ளான். இப்படி உள்ளபோது இந்த உலகில் உள்ள மற்ற அற்பர்கள் உனக்கு அடிமை என்று கூறவும் வேண்டுமா?

300. நிர்விஷ்ட நாக சயநேந பரேண பும்ஸா
நயஸ்தே பதே த்வயி பதாவநி லோகஹேதோ:
ஸ்வர்கௌகஸாம் த்வத் அநுதாவந அதத் பராணாம்
ஸத்ய: பதாநி விபதாம் அபதம் பவந்தி

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஆதிசேஷனில் சயனித்துள்ள பெரியபெருமாள், இந்த உலகின் நன்மைக்காக எழுந்து, உன் மீது தனது திருவடிகளை வைக்கிறான். இதனால் உன் பின்னே வரும் ஆசை கொண்ட தேவர்களின் பதவிகள் எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றப்படுகின்றன.

301. சரத் உபகமகாலே ஸந்த்யஜந் யோகநித்ராம்
சரணம் உபகதாநாம் த்ராணஹேதோ: ப்ரயாஸ்யந்
ஜலதி துஹிது: அங்காத் மந்தம் ஆதாய தேவி
த்வயி கலு நிததாநி ஸ்வம் பதம் ரங்கநாத:

**பொருள்** - பாதுகாதேவியே! சரத் காலம் வந்தவுடன் பெரியபெருமாள் தனது யோக நித்திரையில் இருந்து எழுகின்றான். தன்னைச் சரணம் புகுந்தவர்களைக் காப்பாற்றும் பொருட்டு எழுகின்றான். ஸ்ரீரங்கநாச்சியாரின் மடி மீது வைத்திருந்த தனது திருவடிகளை, மெதுவாக உன் மீது வைத்தபடி எழுகிறான்.

302. ஸ்ப்ருசஸி பதஸரோஜம் பாதுகே நிர்விகாதம்
ப்ரவிசஸி ச ஸமஸ்தாம் தேவி சுத்தாந்த கக்ஷ்யாம்
அபரமபி முராரே: பூர்வம் ஆபீரகந்யாஸு
அபிஸரண விதீநாம் அக்ரிமா ஸாக்ஷிணீ த்வம்

**பொருள்** - பாதுகாதேவியே! பெரியபெருமாளின் தாமரை போன்ற அழகிய திருவடிகளை நீ எந்தவிதமான தடங்கலும் இன்றி, மிகவும் எளிதாகத் தொடுகிறாய். அவனது அந்தப்புரங்களிலும் எளிதாகப் புகுந்து செல்கிறாய். அவன் க்ருஷ்ணனாக அவதாரம் செய்தபோது, இடைப்பெண்களுடன் விளையாடி மகிழ்ந்த நிலைக்கு நீயே முதல் சாட்சியாக உள்ளாய்.

303. ப்ரதிபவநம் அநந்யே பாதுகே த்வத் ப்ரபாவாத்
விவிதவபுஷி தேவே விப்ரமத் யூதகாலே
அபிலஷித ஸபத்நீ கேஹயாத்ரா விகாதம்
க்லஹயதி ரஹஸி த்வம் ஷோடச ஸ்த்ரீ ஸஹஸ்ரம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது மகிமை காரணமாகக் க்ருஷ்ணன் பல உருவங்கள் எடுத்து, தனது பதினாறாயிரம் தேவிகளின் இல்லங்களில் ஒரே நேரத்தில் நின்றான். அவ்விதம் உள்ளபோது, ஒவ்வொரு இல்லத்திலும் இருந்த க்ருஷ்ணன் மற்றவள் பற்றி நினைக்காமல் இருந்தான். இவ்விதம் அந்தந்த தேவிமார்கள், க்ருஷ்ணன் தனது இல்லத்தை விட்டு அகன்று விடக்கூடாது என்பதற்காக உன்னைப் பந்தயமாக வைத்தனர் (பந்தயம் என்றால் சொக்கட்டான் ஆட்டத்தில் பயன்படும் காய் ஆகும். ஆக, பாதுகை இல்லாமல் க்ருஷ்ணன் செல்ல மாட்டான் என்று உறுதி).

304. தடபுவி யமுநாயா: சந்ந வ்ருத்தௌ முகுந்தே
முஹு: அதிகமஹேதோ: முஹ்யதாம் யௌவதாநாம்
சமயிதும் அலம் ஆஸீத் சங்கசக்ராதி சிஹ்நா
ப்ரதிபத விசிகித்ஸாம் பாதுகே பத்ததி: தே

**பொருள்** – நம்பெருமாளின் பாதுகையே! யமுனை ஆற்றின் கரையில் ஒருநாள் க்ருஷ்ணன் கோபிகைகளுடன் விளையாடி நின்றபோது, திடீரென மறைந்து விட்டான். அவனைக் காணாமல் அந்தப் பெண்கள் திகைத்து நின்றனர். அங்கு இருந்த திருவடித் தடங்கள் யாருடையது என்ற ஐயம் அவர்களுக்கு எழுந்தது. சங்கு சக்ரத்துடன் கூடிய உனது அடையாளங்கள், அவை க்ருஷ்ணனின் அடிச்சுவடுகளே என்று அவர்களுக்குக் காண்பித்தன.

305. அதிகத பஹுசாகாந் மஞ்ஜுவாச: சுகாதீந்
ஸரஸிஜ நிலயாயா: ப்ரீதயே ஸங்க்ரஹீதும்
ப்ரகடித குணஜாலம் பாதுகே ரங்கபந்தோ:
உபநிஷத் அடவீஷு க்ரீடிதம் த்வத் ஸநாதம்

**பொருள்** – பெரியபெருமாளின் பாதுகையே! அனைத்து வேதங்களின் சொற்களையும் கொண்ட சுகர் போன்ற மஹரிஷிகளை, தாமரை மலரில் அமர்ந்துள்ள ஸ்ரீரங்கநாச்சியாரின் மகிழ்வுக்காக ஸ்ரீரங்கநாதன் பிடிக்க முயல்கிறான். இதனால் அவர்களைத் தேடி உபநிஷத்துக்கள் என்ற காட்டில், தனது உயர்ந்த கல்யாண குணங்கள் என்ற வலை விரித்து, அவர்களைப் பிடிக்க எத்தனிக்கிறான். இந்தச் செயல் உன்னுடன் இணைந்தே நடைபெறுகிறது.

306. முநி பரிஷதி கீதம் கௌதமீ ரக்ஷணம் தே
முஹு: அநுகலயந்த: மஞ்ஜுவாச: சகுந்தா:
உஷஸி நிஜ குலாயாத் உத்திதா: தண்டகேஷு
ஸ்வயம் அபி பதரக்ஷே ஸ்வைரம் ஆம்ரேடயந்தி

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! தண்டகாரண்யத்தில் உள்ள முனிவர்கள், பர்ண சாலைகளில் நீ செய்த அஹல்யை ரக்ஷணம் குறித்துக் கூறியபடியே இருந்தனர். இதனைக் கேட்ட அங்குள்ள கிளிகள், அதே சொற்களைக் காலையில் தங்கள் கூடுகளில் இருந்து விழித்து எழும்போது, மீண்டும் மீண்டும் கூறியபடியே திரிகின்றன.

307. யம நியம விசுத்தை: யம் ந பச்யந்தி சித்தை:
ச்ருதிஷு சுளகமாத்ரம் த்ருச்யதே யஸ்ய பூமா
ஸுலப நிகில பாவம் மாம்ஸ த்ருஷ்டே: ஜநஸ்ய
ஸ்வயம் உபஹரஸி த்வம் பாதுகே தம் புமாம்ஸம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ப்ரம்மசர்யம், அஹிம்சை, ஸத்யம், திருடாமல் உள்ள தன்மை, சொத்து சேர்க்காமல் உள்ள தன்மை ஆகிய ஐந்தும் யமம் எனப்படும். வேதம் ஓதுதல், ஆசாரம், மனநிறைவு, தவம், எப்போதும் பகவத் நினைவு ஆகிய ஐந்தும் நியமம் எனப்படும். இவை இரண்டும் உள்ள தூய்மையான மனம் கொண்ட யோகிகளால் கூட எம்பெருமானைக் காண இயலாது; அவனுடைய பெருமை என்பது அனைத்து வேதங்களின் மூலம் கூட, உள்ளங்கை அளவு மட்டுமே கூறப்பட்டது; இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனை மனிதர்களின் மாமிசக் கண்ணாலேயே காணும்படி, நீ அவனை எழுந்தருளப் பண்ணி வருகிறாய்.

308. நிதிம் இவ நிரபாயம் த்வாம் அநாத்ருத்ய மோஹாத்
அஹம் இவ மம தோஷம் பாவயந் க்ஷுத்ரம் அர்த்தம்
மயி ஸதி கருணாயா: பூர்ணபாத்ரே த்வயா கிம்
பரம் உபகமநீய: பாதுகே ரங்கநாத:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பெரியபெருமாள் என்ற பெரிய நிதியை உடையவளாக நீ உள்ளாய். உன்னை அலட்சியம் செய்துவிட்டு, நான் அற்பமான பொருள்களின் பின்னே செல்கிறேன். ஸ்ரீரங்கநாதனின் தயை முழுவதும் வந்து நிரம்பும் இடமாக நான் உள்ளபோதும், அவன் என்னிடம் உள்ள குற்றத்தை மட்டுமே காண்கிறானே! இப்படி உள்ளபோது நீ அவனை, என்னை விட்டு வேறு நல்லவர்களிடம் அழைத்துச் சென்றுவிடுவது சரியா? (என்னிடம் கொண்டுவந்தால் அல்லவா நான் பிழைப்பேன்)

309. கமபி கநகஸிந்தோ: ஸைகதே ஸஞ்சரந்தம்
கலச ஜலதி கந்யா மேதிநீ தத்த ஹஸ்தம்
அநிசம் அநுபவேயம் பாதுகே த்வயி அதீநம்
ஸுசரித பரிபாகம் ஸூரிபி: ஸேவநீயம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! காவேரியின் மணல்திட்டில் ஸ்ரீரங்கநாதன் சஞ்சரிக்கிறான். அவன் ஸ்ரீதேவியாலும் பூதேவியாலும் சூழப்பட்டு உள்ளான். சிறந்த புண்ணியங்களின் பயனாக உள்ளான். நித்யசூரிகளால் என்றும் போற்றப்பட்டபடி உள்ளான். உன்னிடம் எப்போதும் வசப்பட்டு உள்ளான். இப்படிப்பட்ட இந்த ஸ்ரீரங்கநாதனை நான் எப்போதும் வணங்கியபடி இருப்பேனாக.

310. பரிஸரம் உபயாதா பாதுகே பச்ய மாத:
கரண விலயகேதாத் காந்திசீகே விவேகே
புருஷம் உபநயந்தீ புண்ணரீகாக்ஷம் அக்ரே
புந: உதர நிவாஸ க்லேச விச்சேதநம் ந:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! கண் முதலான புலன்கள் ஒடுங்கும் மரண காலத்தில், அந்த வேதனை தாங்காமல் எனது விவேகம் குறையக்கூடும். அந்த நேரத்தில் நீ செய்ய வேண்டியது என்ன? தாமரை மலர் போன்ற அழகான கண்கள் உடையவனும், மீண்டும் கர்ப்பவாசம் (பிறவி) ஏற்படாமல் தடுக்கும் திறன் உள்ளவனும் ஆகிய ஸ்ரீரங்கநாதனை என் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி, என்னைக் காண்பாயாக.

311. ஸா மே பூயாத் ஸபதி பவதீ பாதுகே தாபசாந்த்யை
யாமாரூடோ திவமிவ சுபை: சேவ்யமாநோ மருத்பி:
ஸௌதாமிந்யா ஸஹ கமலயா ஸஹ்யஜா வ்ருத்தி ஹேது:
காலே காலே சரதி கருணாவர்ஷுக: க்ருஷ்ண மேக:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஆகாயம் போன்ற உன் மீது ஸ்ரீரங்கநாதன் ஏறுகிறான். தேவர்கள் என்ற காற்றின் மூலம் ஆராதிக்கப்படுகிறான். காவிரியின் பெருமையை அதிகப்படுத்தும் விதமாக, அவள் மீது கருணை என்ற மழையைப் பொழிகிறான். மஹாலக்ஷ்மி என்ற மின்னலால் அணைக்கப்பட்ட க்ருஷ்ணன் என்ற அந்தக் கரிய மேகம், இவ்விதமாக சஞ்சாரம் செய்தபடி உள்ளது. இப்படிப்பட்ட இந்த சஞ்சாரத்திற்கு உதவும் நீ, எனது தாபத்தைத் தீர்க்கவேண்டும்.

312. ஸத்யாத் லோகாத் சகல மஹிதாத் ஸ்தாநதோ வா ரகூணாம்
சங்கே மாத ஸமதிக குணம் ஸைகதம் ஸஹ்யஜாயா:
பூர்வம் பூர்வம் சிரபரிசிதம் பாதுகே யத் த்யஜந்த்யா
நீத: நாத: ததிதம் இதரத் நீயதே ந த்வயா அஸெள

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகை! தாயே! அனைவராலும் புகழப்படும் இடமாக உள்ள ஸத்யலோகம், ரகுவம்சத்தினரின் உரிமையான அயோத்தி ஆகியவற்றைக் காட்டிலும் திருவரங்கத்தில் உள்ள காவேரியின் கரையானது மிகவும் மேன்மை பெற்றது என்று நான் நினைக்கிறேன். ஏன் என்றால் – தான் நீண்ட காலம் இருந்து வந்த இடங்களை விட்டு, உன்னால் இந்தக் கரைக்கு அல்லவோ திருவரங்கன் கொண்டு வரப்பட்டான். இங்கிருந்து அவன் வேறு எங்கும் செல்லவில்லை அல்லவா?

313. அக்ரே தேவி த்வயி ஸுமநஸாம் அக்ரிமை அந்தரங்கை:
விந்யஸ்தாயாம் விநயகரிம் ஆவர்ஜிதாத் உத்தமாங்காத்
தத்தே பாதம் தரமுகுளிதம் த்வத் ப்ரபாவாதி சங்கீ
தேவ: ஸ்ரீமாந் தநுஜமதந: ஜைத்ரயாத்ராஸு அநந்ய:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! அசுரர்களை வெற்றி கொள்ளும் பொருட்டு திருவரங்கன் புறப்படுகிறான். அப்போது தேவர்களில் முதல்வர்களாக உள்ள கிங்கரர்கள், மிகவும் வணக்கத்துடன், தங்கள் தலை மீது வைத்திருந்த உன்னை மிகவும் மெதுவாக திருவரங்கன் முன்பாக வைக்கின்றனர். தேவர்களின் தலைவனும், ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியவனும், அசுரர்களின் சத்ருவும் ஆகிய ஸ்ரீரங்கநாதன் உனது பெருமையை முழுவதுமாக அறிவான் அல்லவா?ஆகவே உன் மீது தனது திருவடியை வைக்கவேண்டும் என்று சங்கோஜம் அடைந்து, மெதுவாகத் தனது திருவடி விரல்களை தயக்கத்துடன் மடக்கியபடி வைக்கிறான் .

314. பெளர உதந்தாத் பரிகலயிதும் பாதுகே ஸஞ்சரிஷ்ணோ:
வ்யக்தா வ்யக்தா வசிக விசிகா வர்த்தநீ ரங்கபர்த்து:
வேலாதீத ச்ருதி பரிமளை: வ்யக்திம் அப்யேதி கால்யே
விந்யாஸை: தே விபுதபரிஷத் மெளளி விந்யாஸ த்ருச்யை:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! திருவரங்கத்தில் உள்ள மக்களின் குறை நிறைகளை அறிந்து கொள்ளும்விதமாக திருவரங்கன் சஞ்சாரம் செய்கிறான். அவன் சென்று விட்டுப் போன வழி எங்கும் உனது அடையாளங்கள் புலப்பட்டும்,

புலப்படாமலும் உள்ளன. வேதவாஸனை உடைய தேவர்கள், அந்தச் சுவடுகளை வணங்கியபோது, அவர்களது க்ரிடங்களின் சுவடுகளும் அங்கு படிந்து விடுகிறது. இதன் மூலம் அந்தச் சிறு சிறு வீதிகளிலும், மறுநாள் காலையில் உனது சுவடுகள் மிகவும் ப்ரகாசமாகத் தெரிகின்றன.

316. பவதீம் பரஸ்ய புருஷஸ்ய ரங்கிணோ
மஹிமாநமேவ மணிபாது மந்மஹே
கதம் அந்யதா ஸ்வ மஹிம ப்ரதிஷ்டித:
ப்ரதி திஷ்டதி த்வயி பதாத் பதம் ப்ரபு:

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! மிகவும் உயர்ந்தவனும், பரமபுருஷனும் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் பெருமைகளே உனது வடிவம் எடுத்து வந்ததாகவே நாங்கள் எண்ணுகிறோம். அப்படி இல்லையென்றால், நிலை பெற்று நிற்கும் திருவரங்கன் எவ்விதம் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போதும் உன்னிடம் உள்ளான்?

317. திதி: அஷ்டமீ யத் அவதார வைபவாத்
ப்ரதமா திதி: த்ரிஜகதாம் அஜாயத
மணிபாதுகே தம் உபநீய வீதிகாஸு
அதிதீகரோஷி தத் அநந்ய சக்ஷுஷாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! திருவரங்கன் க்ருஷ்ணனாக அவதரித்த காரணத்தினால் அஷ்டமி திதி என்பது மூன்று உலகங்களுக்கும் மிகவும் முக்கியமான திதியானது. இப்படிப்பட்ட நம்பெருமாளை நீ திருவீதிகளில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவதன் மூலம், அவனை மட்டுமே பார்த்து, மற்ற எதனையும் பார்க்காமல் உள்ள பரமைகாந்திகளுக்கு, அவனை நீ அதிதி ஆக்குகின்றாய் (அதிதி என்றால் விருந்தினர்).

318. அபார ப்ரக்யாதே: அசரண சரண்யத்வ யசஸா
நநு த்வம் ரங்கேந்தோ: சரண கமல்ஸ்யாபி சரணம்
யயாலப்ய: பங்குப்ரப்ருதிபி: அஸௌ ரங்கநகர
ப்ரதோளீ பர்யந்தே நிதி: அநகவாசாம் நிரவதி:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! திருவரங்கனின் திருவடித்தாமரைகள், வேறு எந்தவிதமான கதி அற்றவர்களையும் காப்பாற்றும் புகழ் கொண்டதாகும். அத்தகைய திருவடிகளுக்கும் அடைக்கலம் அளிப்பது நீ அல்லவா? மிகவும் உயர்ந்த வேதங்களுக்கும் நிதி போன்று உள்ளவன் நம்பெருமாள் ஆவான். அவன் திருவரங்கத்தில் உள்ள உடல்

ஊனமுற்றவர்கள் இடம் தேடி வந்து, அவர்களாலும் அடையத்தக்கவனாக உள்ளது உன்னால் அல்லவா?

319. தத் தத் வாஸக்ருஹ அங்கண ப்ரணயிந: ஸ்ரீரங்க ச்ருங்காரிண:
வால்லப்யாத் அவிபக்த மந்தர கதி: த்வம் மே கதி: பாதுகே
லீலா பங்கஜ ஹல்லக உத்பல களத் மாத்வீக ஸேக உத்திதா
யத்ர ஆமோத விகல்பநா விவ்ருணுதே சுத்தாந்த வாரக்ரமம்.

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! திருவரங்கன் அந்தந்த பிராட்டிகளின் இல்லத்திற்குச் சென்று வரும்போது, ஒவ்வொரு மலரின் நறுமணம் அவன் மீது உண்டாகிறது. ஸ்ரீமஹாலக்ஷ்மியின் இல்லம் சென்றபோது தாமரைமலரின் மணம், பூமாதேவியின் இல்லம் சென்று வரும்போது செங்கழுநீர்மலரின் மணம், நீளாதேவி இல்லம் சென்று வரும்போது கருநெய்தல் மலரின் மணம் ஆகியவை அவன் மீது வீசுகிறது. இதன் மூலம் அவன் எங்கு சென்று வந்தான் என்று அறிய இயல்கிறது. இவ்விதம் அவனுக்கு அந்தரங்க சேவை செய்பவளாக, அவனுடன் மெதுவாக நடந்து செல்லும் நீயே எனக்குச் சரணம் ஆகிறாய்; எனக்கு அனைத்து நன்மைகளும் அளிப்பாயாக.

320. ஸம்பவது பாதரக்ஷே ஸத்ய ஸுபர்ண: ஆதி: ஔபவாஹ்ய கண:
யத்ராஸு ரங்கபர்த்து: ப்ரதம பரிஸ்பந்த காரணம் பவதீ

**பொருள்** - பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் சஞ்சாரம் செல்வதற்கு அவனுக்கு வாகனங்களாக ஸத்யன், கருடன் என்று பலரும் இருக்கக்கூடும். ஆனால் இவர்களுக்கு முன்பாக அவன் முதல் அடி எடுத்து வைப்பதற்கு நீ அல்லவோ காரணமாக உள்ளாய்?

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## ஸஞ்சார பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (12.புஷ்ப பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

321. சௌரே: ஸஞ்சார காலேஷு புஷ்பவ்ருஷ்டி: திவ: ச்யுதா
பர்யவஸ்யதி யத்ர ஏவ ப்ரபத்யே தாம் பதாவநீம்

**பொருள்** - திருவரங்கன் ஸஞ்சாரம் செய்யும்போது அவன் மீது பூமாரி பொழிந்தபடி உள்ளது. இத்தகைய மலர்கள் அவனது திருவடிகளில் உள்ள பாதுகையைச் சென்று அடைகின்றன. அத்தகைய பாதுகையை நான் சரணம் அடைகிறேன்.

322. தைவதம் மம ஜகத்ரய அர்ச்சிதா
திவ்யதம்பதி விஹார பாதுகா
பாணிபாத கமல அர்ப்பணாத் தயோ:
யா பஜத்யநுதினம் ஸபாஜனம்

**பொருள்** - மூன்று உலகங்களாலும் வணங்கப்படுகிற ஸ்ரீரங்கநாச்சியாரும் ஸ்ரீரங்கநாதனும் தங்கள் திருக்கரங்கள் மற்றும் திருவடிகள் என்ற தாமரை மலர்கள் கொண்டு பாதுகையை அன்றாடம் பூஜித்து வருகின்றனர். இப்படிப்பட்ட பாதுகை எனக்கு மட்டும் இன்றி அனைவராலும் வணங்கத்தகுந்தது ஆகும்.

323. தவ ரங்கராஜ மணிபாது நதோ
விஹிதார்ஹணா: ஸுரஸரித்பயஸா
அவதம்ஸ சந்த்ரகலயா கிரிசோ
நவ கேதகீதளம் இவ அர்ப்பயதி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! சிவன் தனது தலையில் உள்ள கங்கை நீரைக் கொண்டு உனக்கு அர்க்யம் அளிக்கிறார். தனது தலையில் உள்ள பிறைச்சந்திரன் மூலம் அழகாக அமைந்துள்ள தாழம்பூவை உனக்கு அளிக்கின்றார்.

324. குஸுமேஷு ஸமர்ப்பிதேஷு பக்தை:
த்வயி ரங்கேச பதாவநி ப்ரதீம:
சடகோபமுநே: த்வத் ஏகநாம்ந:
ஸுபகம் யத் ஸுரபி த்வம் அஸ்ய நித்யம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னிடம் பக்தர்கள் மலர்களைச் சாற்றியபடி உள்ளனர். உன்னுடைய திருநாமத்தைக் கொண்ட நம்மாழ்வாருக்கு எத்தகைய நறுமணம் (மகிழம்பூ நறுமணம்) உள்ளதோ, அதனை உன்னிடம் இப்போது காண்கிறோம்.

325. பதே பரஸ்மிந் புவநே விதாது:
புண்யை: ப்ரஸூநை: புளிநே ஸரய்வா:
மத்யே ச பாதாவநி ஸஹ்யஸிந்தோ
ஆஸீத் சது: ஸ்தாநமிவ அர்ச்சநம் தே

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனக்குப் பரமபதம், ப்ரம்மனின் ஸத்ய லோகம், ஸரயு நதியின் கரையில் உள்ள அயோத்தி மற்றும் காவேரியின் நடுவில் உள்ள திருவரங்கம் ஆகிய நான்கு இடங்களிலும் மலர்கள் கொண்டு அர்ச்சனம் நடைபெறுகிறது. இது எம்பெருமானுக்கு நான்கு இடங்களில் (கும்பம், அக்னி, ஸ்தண்டிலம், பிம்பம்) நடைபெறும் அர்ச்சனம் போன்றுள்ளது

326. தவைவ ரங்கேச்வர பாதரக்ஷே
ஸௌபாக்யம் அவ்யாஹதம் ஆப்துகாமா:
ஸுரத்ருமாணாம் ப்ரஸவை: ஸுஜாதை:
அப்யர்ச்சயந்தி அப்ஸரஸோ முஹு: த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! எந்தக் காலத்திலும் குறைவு என்பதே இல்லாத உன்னைப் போன்ற நிலை, தங்களுக்கும் ஏற்பட வேண்டும் என்று அப்ஸரஸ் பெண்கள் நினைக்கிறார்கள். இதனால் அவர்கள் கற்பக மரத்தின் மலர்கள் கொண்டு உன்னை அர்ச்சித்தபடி உள்ளனர்.

327. நிவேசிதாம் ரங்கபதே: பதாப்ஜே
மந்யே ஸபர்யாம் மணி பாதரக்ஷே
த்வத் அர்ப்பணாத் ஆபதிதாம் அபச்யத்
காண்டீவதந்வா கிரிசோத்தமாங்கே

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! காண்டீபம் என்ற வில்லை உடைய அர்ஜுனன், ஸ்ரீரங்கநாதனாகிய க்ருஷ்ணனின் தாமரை போன்ற திருவடிகளில் மலர்களை இட்டான். இவை சிவன் தலையில் உள்ளதைக் கண்டான். இதன் மூலம் நான் நினைப்பது என்னவென்றால் – உன்னைச் சிவன் தனது தலையில் சூட்டிக்கொண்டபோது, அந்த மலர்கள் அங்கு வந்திருக்க வேண்டும் – என்பதாகும்.

328. பத்ராணி ரங்கந்ருபதேர் மணிபாதரக்ஷே
த்வத்ராண்யபி த்வயி ஸமர்ப்ய விபூதிகாமா:
பர்யாய லப்த புருஹூதபதா: சசீநாம்
பத்ராங்குராணி விலிகந்தி பயோதரேஷு

**பொருள்** - இரத்தினக்கற்களால் பதிக்கப் பெற்ற பாதுகையே! உயர்ந்த ஐச்வர்யம் விரும்புவர்கள் இரண்டு அல்லது மூன்று துளசி இலைகளை உன்னிடம் சமர்ப்பித்து விட்டால் போதுமானது. அவர்கள் வரிசையாக நின்று அடைய வேண்டிய இந்திர பதவியை நேரடியாகவே அடைந்து விடுகின்றனர். இந்த்ராணிகளின் ஸ்தனங்களில் ஓவியம் தீட்டும் நிலையை அடைகின்றனர்.

329. நிவர்த்தயந்தி தவ யே நிசிதாநி புஷ்பை:
வைஹாரிகாணி உபவநாநி வஸுந்தராயாம்
காலேந தே கமலலோசந பாதரக்ஷே
க்ரீடந்தி நந்தநவநே க்ருதிந: புமாம்ஸ:

**பொருள்** - தாமரை போன்ற அழகான கண்கள் கொண்ட க்ருஷ்ணனின் பாதுகையே! நீ நடந்து செல்வதற்காக, உனது விளையாட்டிற்காக, இந்த உலகில் ஒரு சிலர் மலர்கள் நிறைந்த தோட்டங்களை உருவாக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் நாளடைவில் இந்திரனின் தேவலோக நந்தவனத்தில் விளையாடி மகிழ்கின்றனர் (அதாவது அவர்கள் இந்த்ர பட்டம் அடைகின்றனர்).

330. அர்ச்சந்தி யே மதுபிதோ மணிபாதரக்ஷே
பாவாத்மகைரபி பரம் பவதீம் ப்ரஸூநை:
மந்தாரதாம ஸுபகை: மகுடை: அஜஸ்ரம்
ப்ருந்தாரகா: ஸுரபயந்தி பதம் ததீயம்

**பொருள்** - மது என்ற அரக்கனை அழித்த க்ருஷ்ணனின் இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! தங்களுடைய மனதின் மூலம் நினைக்கப்பட்ட மலர்கள் மட்டுமே கொண்டு ஒரு சிலர் உன்னை அர்ச்சிக்கக்கூடும். இப்படிப்பட்டவர்களின் திருவடிகளைத் தேவர்கள் தங்கள் தலைகளில் ஏற்கின்றனர். இதன் மூலம் தங்கள் தலைகளில் சூடியுள்ளதும், மந்தாரமலர்கள் நிறைந்ததும் ஆகிய க்ரீடங்கள் கொண்டு நறுமணம் வீசும்படிச் செய்கின்றனர்.

331. அஸ்ப்ருஷ்ட தோஷ பரிமர்சம் அலங்க்யம் அந்யை:
ஹஸ்தாபசேயம் அகிலம் புருஷார்த்த வர்கம்
சித்ரம் ஜநார்த்தந பதாவநி ஸாதகாநாம்
த்வயி அர்ப்பிதா: ஸுமநஸ: ஸஹஸா பலந்தி

**பொருள்** - ஜனார்த்தனனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னிடம் மலர்களைச் சமர்ப்பணம் செய்பவர்களுக்குக் கிட்டுவது என்ன? எந்தவிதமான

தோஷங்களும் இல்லாததும், மற்றவர்களுக்கு எட்டாததும், இவர்களுக்குக் கையினால் பறிக்கக்கூடியதும் ஆகிய உயர்ந்த புருஷார்த்தங்கள் மிகவும் எளிதாகக் கிட்டுகின்றன.

332. வந்தாரூபி: ஸுரகணை: த்வயி ஸம்ப்ரயுக்தா
மாலா விபாதி மதுஸூதன பாதரக்ஷே
விக்ரந்த விஷ்ணுபத ஸம்ச்ரய பத்த ஸக்யா
பகீரதீவ பரிரம்பண காங்க்ஷிணீ தே

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் பாதுகையே! உன்னை வணங்கிப் போற்றியபடி உள்ள தேவர்களின் கூட்டங்கள், உன் மீது மலர் மாலைகளைச் சமர்ப்பணம் செய்கின்றனர். அந்த மாலையைப் பார்க்கும்போது, ஸ்ரீரங்கநாதன் த்ரிவிக்ரமனாக உயர்ந்தபோது, அவனது திருவடிகளின் தொடர்பு ஏற்படவேண்டும் என்ற ஆவல் கொண்டு உன்னை கட்டித் தழுவிய கங்கை போன்று உள்ளது.

333. யே நாம ரங்கந்ருபதேர் மணிபாதுகே த்வாம்
அபி அர்ச்சயந்தி கமலை: அதிகர்த்துகாமா:
ஆரோபயதீ அவஹிதா நியதி: க்ரமாத் தாந்
கல்பாந்தரீய கமலாஸந பத்ரிகாஸு

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளைக் காப்பாற்றும் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உயர்ந்த பதவி பெற விரும்பும் எண்ணம் உள்ளவர்கள் உன்னைத் தாமரை மலர்கள் கொண்டு அர்ச்சனை செய்தால் போதுமானது. அந்தப் புண்ணியமானது மிகவும் எச்சரிக்கையுடன் அவர்களின் பெயர்களை ப்ரம்ம பட்டத்திற்கான பட்டியலில் சேர்த்து விடுகிறது. (அதாவது, அவர்கள் ஏதோ ஒரு காலகட்டத்தில் ப்ரம்ம பதவியை அடைவர்)

334. த்வயி அர்ப்பிதாநி மநுஜைர் மணிபாதரக்ஷே
தூர்வாங்குராணி ஸுலபாநி அதவா துளஸ்ய:
ஸாராதிகா: ஸபதி ரங்கநரேந்த்ர சக்த்யா
ஸம்ஸார நாக தமந ஔஷதயோ பவந்தி

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மனிதர்கள் உன் மீது மிகவும் எளிதாகக் கிடைக்கவல்ல அருகம்புல்லையோ அல்லது துளசி இலைகளையோ சாற்றக்கூடும். இவை விஷத்தை முறிக்கவல்ல வைத்தியனாகிய ஸ்ரீரங்கநாதனின் சக்தியால் மிகவும் வீர்யம் அடைந்து, ஸம்ஸாரம் என்ற பாம்புகளையும் அடக்கி விடுகின்றன.

335. ஆராத்ய நூநம் அஸுரார்த்தந பாதுகே த்வாம்
ஆமுஷ்மிகாய விபவாய ஸஹஸ்ரபத்ரை:
மந்வந்தரேஷு பரிவர்த்திஷு தேவி மர்த்யா:
பர்யாயத: பரிணமந்தி ஸஹஸ்ர நேத்ரா:

**பொருள்** - அசுரர்களை அழிக்கும் எம்பெருமானின் பாதுகையே! ஸ்வர்க்கம் முதலான உயர்ந்த செல்வங்களை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, ஒரு சிலர் உனக்கு ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலர்களால் அர்ச்சனை செய்யக்கூடும். அவர்கள் தகுந்த காலகட்டங்களில் ஆயிரம் கண்கள் கொண்ட இந்திர பதவியை அடைவது உறுதியே ஆகும்.

336. தந்யை: த்வயி த்ரிதச ரக்ஷக பாதரக்ஷே
புஷ்பாணி காஞ்சநமயாநி ஸமர்ப்பிதாநி
விஷ்ரம்ஸிநா விநமதோ கிரிச உத்தமாங்காத்
ஆரக்வதேந மிலிதாநி அப்ருதக் பவந்தி

**பொருள்** - தேவர்களைக் காப்பாற்றும் ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! புண்ணியம் செய்தவர்கள் உன் மீது தங்கத்தால் செய்யப்பட்ட மலர்களை இட்டு வழிபடுகின்றனர். அதே நேரம் உன் மீது சிவனின் தலையில் உள்ள கொன்றை மலர்களும் விழுந்து, இரண்டும் ஒன்றாகின்றன.

337. விச்வ உபஸர்க சமநம் த்வயி மந்யமாநை:
வைமாநிகை: ப்ரணிஹிதம் மணிபாதரக்ஷே
பத்மா ஸஹாய பதபத்ம நக அர்ச்சிஷு: தே
புஷ்ப உபாஹார விபவம் புநருக்தயந்தி

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகிற்கு ஏற்படும் அனைத்து உபத்திரவங்களும் உன்னால் மட்டுமே நீங்கும் என்று தேவர்கள் எண்ணுகின்றனர். ஆகவே அவர்கள் உன்னிடம் மலர்களைச் சமர்ப்பிக்கின்றனர். இந்த மலர்களின் வரிசைகள் அனைத்தும், ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனின் திருவடி விரல் நகங்களின் ஒளியால் மேலும் ஒளி பெறுகின்றன.

338. நாகௌகஸாம் சமயிதும் பரிபந்திவர்காந்
நாதே பதம் த்வயி நிவேசயிதும் ப்ரவ்ருத்தே
த்வத் ஸம்ச்ரிதாம் விஜஹத: துளஸீம் வமந்தி
ப்ரஸ்தாந காஹள ரவாந் ப்ரதமம் த்விரேபா:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தேவர்களின் விரோதிகளை அழிப்பதற்காக ஸ்ரீரங்கநாதன் தனது திருவடிகளை உன் மீது மெதுவாக வைக்கின்றான். அப்போது உன் மீது சாற்றப்பட்ட துளசி மாலைகளில் உள்ள வண்டுகள் ரீங்காரம் செய்யத் தொடங்குகின்றன. இதனைக் கேட்கும்போது, ஸ்ரீரங்கநாதன் புறப்படுகையில் ஒலிக்கப்படுகின்ற காஹளம் என்ற எக்காளம் போன்று உள்ளது.

339. ரங்கேச பாத பரிபோக ஸுஜாத கந்தாம்
ஸம்ப்ராப்ய தேவி பவதீம் ஸஹ திவ்ய புஷ்பை:
நித்யம் உபதர்சித ரஸம் ந கில ஆத்ரியந்தே
நாபீ ஸரோஜம் அபி நந்தன சஞ்சரீகா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தேவலோகத்தில் உள்ள வண்டுகள், தேவர்கள் திருவரங்கனின் திருவடிகளில் பொழிகின்ற மலர்களுடன் இணைந்தபடி திருவரங்கம் வந்து சேர்ந்து விடுகின்றன. அவை நறுமணம் வீசும் உன்னிடம் வந்து சேர்ந்து விடுகின்றன. அதன் பின்னர் எப்போதும் தேன் பெருகும் ஸ்ரீரங்கநாதனின் நாபிக் கமலத்தைக் கூட அடைய முனைவது இல்லை.

340. ப்ராகேவ காஞ்சந பதாவநி புஷ்பவர்ஷாத்
ஸம்வர்த்திதே சமித தைத்ய பயை: ஸுரேந்த்ரை:
பத்மேக்ஷணஸ்ய பதபத்ம நிவேச லாபே
புஷ்ப அபிஷேகம் உசிதம் ப்ரதிபத்யஸே த்வம்

**பொருள்** - தங்கம் கொண்டு இழைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் மூலமாக அசுரர்கள் குறித்த பயம் நீங்கப் பெற்ற தேவர்கள், உன்னால் அல்லவோ ஸ்ரீரங்கநாதன் தனது பெரியகோயிலை விட்டு வெளிக்கிளம்பி, அசுரர்களை அழித்தான் என்று என்று எண்ணுகின்றனர். அதனால் அவர்கள் உனக்கு மலர்களைத் தூவி வருகின்றனர். ஆயினும் அதற்கு முன்பாகவே திருவரங்கனின் தாமரை போன்ற திருவடிகள் உன் மீது சாற்றப்பட்டு, உனக்கு ஏற்ற அபிஷேகம் நிறைவேறி விட்டது அல்லவோ (மற்றொரு விதமான பொருள் கூறலாம்) – அசுர பயம் நீங்கிய தேவர்கள், உனக்கு மலர் தூவி தங்கள் தலைகளில் உன்னைத் தாங்கியபடி திருவரங்கனின் முன்பாக

எழுந்தருளச் செய்கின்றனர். இப்படியாக அவன் திருவடிகளுக்கு முன்னரே உனக்கு மலர் தூவி அபிஷேகம் நிறைவேற்றப்பட்டது - என்றும் கூறலாம்).

341. திசி திசி முநிபத்ந்யோ தண்டகாரண்ய பாகே
ந ஜஹதி பஹுமாநாத் நூநம் அத்யாபி மூலம்
ரகுபதி பதரக்ஷே த்வத் பரிஷ்கார ஹேதோ:
அபசித குஸுமாநாம் ஆச்ரமாநோகஹாநாம்

**பொருள்** - ரகுவம்சத்தின் பதியாக உள்ள இராமனின் பாதுகையே! இராமன் தண்டகாரண்ய வனத்தில் இருந்தபோது, அங்கு இருந்த ரிஷிபத்னிகள், உனக்கு ஏற்ற அலங்காரம் செய்யும் பொருட்டு, அங்கு இருந்த மலர்களில் இருந்து மலர்கள் பறித்து, உனக்குச் சாற்றினர். அந்த மரங்கள் உனக்காக மலர்கள் அளித்தன என்று மரியாதையை மனதில் இன்னமும் நினைத்தபடியே, இன்றளவும் அந்த மரங்களின் அடியில் அமர்ந்துள்ளனர்.

342. கடயஸி பரிபூர்ணாந் க்ருஷ்ணமேக ப்ரசாரே
க்ருதிபி: உபஹ்ருதை: த்வம் கேதகீ கர்ப்ப பத்ரை:
வரதநு பரிணாமாத் வாமத: ச்யாமளாநாம்
ப்ரணதி ஸமய லக்நாந் பாதுகே மௌளி சந்த்ராந்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீர் கொண்ட மேகம் போன்ற திருமேனி உடைய ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்யப் புறப்படும்போது, புண்ணியம் நிறைந்தவர்களால் வெண்மையான தாழை மடல்கள் உன் மீது சாற்றப்படுகிறது. அப்போது இடது பக்கத்தில் கறுத்த நிறமுள்ள பார்வதியைக் கொண்ட அர்த்தநாரீச்வரன், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் தலை சாய்த்து வணங்குகின்றான். அவன் தலையில் உள்ள பிறைச்சந்திரன் உன் மீது பட்டதால், அந்த தாழை மடல்களின் ஒளியால் முழுச்சந்திரனாகி விடுகிறான்.

343. பரிசரண நியுக்தை: பாதுகே ரங்கபர்த்து:
பவந தநய முக்யை: அர்ப்பிதாம் த்வத் ஸமீபே
விநத விதி முகேப்ய: நிர்விசேஷாம் த்விரேபா:
கதம் அபி விபஜந்தே காஞ்சநீம் பத்மபங்க்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்று சுக்ரீவனால் ஏவப்பட்ட அனுமன் முதலானோர், உன் மீது தங்கமயமான மலர்களை இடுகின்றனர். அதே நேரம் அங்கு வந்த ப்ரம்மன், தனது தாமரை போன்று ஒளி வீசும்

முகங்களைத் தாழ்த்தி வணங்குகின்றான். அந்த நேரத்தில் அங்கு வரும் வண்டுகள் ப்ரம்மனின் முகங்கள் எது, தாமரை மலர்கள் எது என்று அறியாமல் வெகு நேரம் சிரமப்பட்டு , பின்னர் கண்டு பிடித்து அறிகின்றன.

344. விதிசிவ புருஹூத ஸ்பர்சிதைர் திவ்யபுஷ்பை:
த்வயி ஸஹ நிபதந்த: தத்ததுத்யாந ப்ருங்கா:
மதுரிபு பதரக்ஷே மஞ்ஜுபி: ஸ்வைர்நிநாதை:
அவிதித பரமார்த்தாந் நூநம் அத்யாபயந்தி

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் பாதுகையே! ப்ரம்மன், சிவன், இந்திரன் முதலானவர்கள் தேவலோக மலர்கள் பலவற்றையும் கொணர்ந்து உனக்குச் சமர்ப்பணம் செய்கின்றனர். அவரவர்களின் பூந்தோட்டங்களில் இருந்த வண்டுகளும், அந்த மலர்களுடன் வந்து விடுகின்றன. அவை ரீங்காரம் செய்தபடி உள்ளன. இதனைக் காணும்போது, அவை உன்னுடைய பெருமையை அறியாதவர்களுக்கு அதனைப் பறை சாற்றி, உண்மையை அறிவிப்பது போல் உள்ளது.

345. ப்ரசமயதி ஜநாநாம் ஸஞ்ஜ்வரம் ரங்கபர்த்து:
பரிஸர சலிதாநாம் பாதுகே சாமராணாம்
அநுதினம் உபயாதை: உத்திதம் திவ்யபுஷ்பை:
நிகம பரிமளம் தே நிர்விசந் கந்தவாஹ:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அன்றாடம் தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மலர்கள் உன் மீது பரவப்படுவதால், உன்னிடம் வேதவாசனை எப்போதும் சூழ்ந்துள்ளது. ஸ்ரீரங்கநாதனுக்கு வீசப்படும் சாமரங்களில் இருந்து எழும் காற்றானது, இந்த வேதவாசனையை எடுத்து வந்து, இங்கு உள்ள மக்களின் ஸம்ஸார துன்பத்தை நீக்கி விடுகிறது .

346. அகில புவந ரக்ஷா நாடிகாம் தர்சயிஷ்யந்
அநிமிஷ தரு புஷ்பை: அர்ச்சிதே ரங்கமத்யே
அபிநயம் அநுரூபம் சிக்ஷயதி ஆத்மநா த்வாம்
ப்ரதம விஹித லாஸ்ய: பாதுகே ரங்கநாத:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! கற்பக மரத்தின் மலர்கள் கொண்டு ஸ்ரீரங்கம் என்ற நாடகமேடை (ரங்கம் என்றால் நாடகம் நடத்தும் மேடை என்பதாகும்) அலங்கரிக்கப்பட்டுள்ளது. அந்த மேடையில் நாயகனாக ஸ்ரீரங்கநாதன் (நாடக எஜமான்), இந்த உலகத்தினைக் காப்பாற்றுதல் என்ற ஒரு சிறிய நாடகத்தை அரங்கேற்றுகிறான்.

அதற்காக, தான் ஒரு நாட்டியம் ஆடி, அதற்கான அபிநயம் பிடிக்கும்போது, அவனுக்கு நீ எவ்விதம் செயல்பட வேண்டும் என்று கற்றுத் தருகிறாய் போலும்.

347. அகளித நிஜ ராகாம் தேவி விஷ்ணோ: பதம் தத்
த்ரிபுவந மஹநீயாம் ப்ராப்ய ஸந்த்யாம் இவ த்வாம்
பவதி விபுதமுக்தை: ஸ்பஷ்ட தாரா அநுஷங்கம்
பரிஸர பதிதை: தே பாரிஜாதப் ப்ரஸூநை:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னிடம் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் மிகவும் அன்புடன் உள்ளன. அவனது திருவடிகள் சிவந்த வானம் போன்றுள்ளன. மூன்று உலகில் உள்ளவர்களாலும் வணங்கப்படுகின்றன. நீ ஸந்த்யாகாலம் போன்று உள்ளாய். ஆக அவனது திருவடிகள் உன்னை வந்து அடைகின்றன. ஸந்த்யா காலம் அனைவராலும் தொழத்தக்கது என்பது முறை; அது போன்று உன்னை அனைவரும் தொழுகின்றனர். அந்த இரவுப் பொழுதில் தோன்றும் நட்சத்திரங்கள் போன்று தேவர்கள் உன் மீது சேர்த்த கற்பக மரத்தின் மலர்கள் உள்ளன.

348. வ்யஞ்ஜந்தி ஏதே விபவம் அநகம் ரஞ்ஜயந்த: ச்ருதீர்ந:
ப்ராத்வம் ரங்கக்ஷிதிபதி பதம் பாதுகே தாரயந்த்யா:
நாதை: அந்தர் நிஹித நிகமை: நந்ததோத்யாந ப்ருங்கா:
திவ்யை: புஷ்பை: ஸ்நபித வபுஷோ தேவி ஸௌஸ்நாதிகா: தே

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளைத் தரித்துக் கொண்டும், தேவலோகத்து மலர்களால் ஸ்நானம் செய்விக்கப்பட்டும் நீ உள்ளாய். அந்த மலர்களில் உள்ள வண்டுகள் செய்யும் ரீங்காரம் உன்னிடம் அவை, “ஸ்நானம் நல்லபடியாக ஆனதா?”, என்று கேட்பது போன்று உள்ளது. இப்படிப்பட்ட நந்தனம் என்ற வண்டுகளின் வேத ஒலிகள் போன்ற நாதம் எங்கள் காதுகளை மகிழவித்தபடி உள்ளது. இவை தோஷம் இல்லாத உனது பெருமையை மேன்மேலும் ப்ரகாசப்படுத்துகின்றன.

349. கிம் புஷ்பை: துளஸீ தளை: அபி க்ருதம் தூர்வாபி தூரே ஸ்திதா
த்வத் பூஜாஸு முகுந்தபாது க்ருபயா த்வம் காமதேநு: ஸதாம்
ப்ரத்யக்ராஹ்ருத தர்ப்பல்லவ தல க்ராஸ அபிலாஷ உந்முகீ
தேநு: திஷ்டது ஸா வஸிஷ்ட பவந த்வார உபகண்ட ஸ்தலே

**பொருள்** - முகுந்தனின் பாதுகையே! உனக்காகச் செய்யப்படும் ஆராதனங்களில் மலர்கள் கொண்டு ஆவது என்ன? துளசிதளங்கள் கூட வேண்டியதில்லை. அருகம் புல் கூட


**Email:**sridharan_book@yahoo.co.in

தூரத்தில் வைக்கப்படலாம். இவ்விதம் உன் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர்களிடம் எதனையும் எதிர்பாராமல், அவர்களுக்கு உனது கருணை காரணமாக அனைத்தையும் அளிப்பவளாக நீ உள்ளாய். வசிஷ்டரின் காமதேனுப்பசுவும் கூட, புதிதாகக் கொண்டு வரப்பட்ட தளிர் இலைகளுக்காகத் தனது முகத்தை நீட்டியபடி அல்லவா உள்ளது? எதனையும் எதிர்பராமல் உள்ள காமதேனு போன்று நீ உள்ளபோது வசிஷ்டரின் அந்தப் பசுவானது, அவரது வீட்டு வாசலிலேயே இருக்கட்டும் (நீ எங்களுக்கு இருந்தால் போதும்).

350. சூடாரக்வத ரஜஸா சூர்ண ஸ்நபனம் விதாய தே பூர்வம்
ரங்கேச பாதுகே த்வம் அபிஷிஞ்சதி மௌளிகங்கயா சம்பு:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! சிவன் தனது தலையில் உள்ள கொன்னை மலர்கள் கொண்டு உனக்கு சூர்ணாபிஷேகம் செய்கிறார். அதன் பின்னர் தனது தலையில் உள்ள கங்கையைக் கொண்டு உனக்கு திருமஞ்சனம் செய்து வைக்கிறார்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
புஷ்ப பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (13.பராக பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

351. பாந்து வ: பத்மநாபஸ்ய பாதுகா கேளிபாம்ஸவ:
அஹல்யாதேஹ நிர்மாண பர்யாய பரமாணவ:

**பொருள்** - அழகான தாமரை மலர் போன்ற திருநாபிக்கமலம் உடைய இராமன் ஸஞ்சாரம் செய்தபோது, அவனது பாதுகைகளில் இருந்து தூசிகள் கிளப்பின. அவை அகலிகையின் உடலை மீண்டும் உண்டாக்கும் பரமாணுக்கள் போன்று தோன்றின. இப்படிப்பட்ட தூசிகள் உங்களையும் காப்பாற்றுவதாக.

352. தவ ஸஞ்சரணாத் ரஜோ விதூதம்
யதிதம் ரங்கநரேந்த்ர பாதரக்ஷே
அலம் ஏதத் அநாவிலாநி கர்த்தும்
கதக க்ஷோத இவாசு மாநஸாநி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தேத்தாங்கொட்டையின் துகள்கள் தண்ணீரை எவ்விதம் தூய்மைப்படுத்துகின்றனவோ அது போன்று, உனது ஸஞ்சாரத்தின் போது எழும் தூசிகள் மனதைத் தூய்மைப்படுத்திவிடுகின்றன.

353. புநருக்த பிதாமஹ அனுபாவா:
புருஷா: கேசித் அமீ புநந்தி விச்வம்
மதுவைரி பதாரவிந்த பந்தோ:
அபராகாஸ்தவ பாதுகே பராகை:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மதுசூதனனின் திருவடிகளுடைய பந்துவாக உள்ள உனது தூசிகள், இந்த உலகில் உள்ள சிலர் மீது விழுகின்றன. அப்படிப்பட்டவர்கள் ப்ரம்மபதவி பெறவும் தகுதி உள்ளவர்கள் ஆகின்றனர் என்றாலும், அவர்கள் அதனை விரும்பாமல் உள்ளனர். இப்படிப்பட்ட உயர்ந்தவர்களே இந்தப் பூமியைத் தூய்மைப்படுத்துகின்றனர்.

354. அபியுக்தஜநோ நிஜார்ப்பகாணாம்
பஹுசோ ரங்கநரேந்த்ர பாதரக்ஷே
அவலேப பிசாச மோசநார்த்தம்
ரஜஸா லிம்பதி தாவகேந தேஹாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உனது பெருமைகளை உணர்ந்த பெரியவர்கள் செய்வது என்ன? அஹங்காரம் போன்ற பல

பிசாசுகள் பீடித்துள்ள தங்கள் குழந்தையின் உடம்பை உனது துகள்கள் கொண்டு பூசி, அந்தப் பிசாசுகளை விரட்டுகின்றனர்.

355. சிரஸா பரிக்ருஹ்ய லோகபாலா:
தவ ரங்கேச்வர பாதுகே ரஜாம்ஸி
விஷமேஷு பலேஷு தாநவாநாம்
வ்யபநீத அந்யசிரஸ்த்ரம் ஆவிசந்தி

**பொருள் -** ஸ்ரீரங்கத்தின் நாயகனாகிய திருவரங்கனின் பாதுகையே! இந்திரன் முதலான தேவர்கள் உனது தூசிகளைத் தங்கள் தலைகளில் பூசிக்கொள்கின்றனர். அதன் பின்னர் அவர்கள் தங்கள் தலைக்கு எந்தவிதமான கவசமும் அணியாமலேயே அசுரர்களுடன் யுத்தம் செய்யப் புறப்பட்டு, அவர்கள் கூட்டத்தில் புகுந்து விடுகின்றனர்.

356. க்ருதிந: சிரஸா ஸமுத்வஹந்த:
கதிசித் கேசவ பாதுகே ரஜஸ்தே
ரஜஸ: தமஸ: அபி தூரபூதம்
பரிபச்யந்தி விசுத்தமேவ ஸத்வம்

**பொருள் –** அழகான கேசத்தைக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய துகள்களைத் தங்கள் தலைகளில் கொள்கின்ற புண்ணியம் செய்தவர்களின் நிலை என்ன? அப்படிப்பட்டவர்கள் ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இரண்டிற்கும் அப்பாற்பட்ட ஸத்வகுணம் நிறைந்த பரமபரமபதத்தைக் காண்கின்றனர்.

357. அதிகம் பதம் ஆச்ரித: அபி வேதா:
ப்ரயத: ரங்கதுரீண பாதரக்ஷே
அபிவாஞ்சதி ஸங்கமம் பராகை:
அபி ஜாதை: தவ தேவி நாபிஜாத:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ப்ரம்மன் மிகவும் உயர்ந்த பதவியில் உள்ளவனே என்றாலும், அவன் சிறந்த குலப்பெருமை உள்ள உன்னுடைய தூசிகளின் தொடர்பு அடைய விரும்புகிறான் (இதனால்தான் நல்கதி பெறலாம் என்று எண்ணினான்).

 Email:sridharan_book@yahoo.co.in

358. சுத்தஸ்த்த்வ வபுஷா ஏவ பவத்யா
பாதுகே விரஜஸௌ ஹரிபாதௌ
அஸ்து கிம் புநரிதம் ரஜஸா தே
சுத்த ஸத்த்வமயதா மனுஜாநாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ரஜோகுணம், தமோ குணம் இல்லாத தூய்மையான ஸத்வகுணம் மட்டுமே மேலிட்ட திருமேனி கொண்டவளாக நீ உள்ளாய். உன் காரணமாகவே நம்பெருமாளின் திருவடிகளில் தூசி ஒட்டாமல் உள்ளது. இது ஒருபுறம் இருக்கட்டும். நம்பெருமாள் பின்னே செல்பவர்களுக்கு உனது ரஜஸ் (தூசி) மூலம், அந்த ரஜஸ் (தூசி) அவர்கள் மீது பட்டவுடன், அவர்களது ரஜோ குணம் போய்விடுகிறதே, இது எப்படி? (ரஜஸ் மூலம் ரஜோ குணம் எப்படி நீங்குகிறது என்று வியக்கிறார்)

359. தத் ரஜ: தவ தநோதி பாதுகே
மாநஸாநி அகடிநாநி தேஹிநாம்
ப்ரஸ்தரஸ்ய பதவீக தஸ்ய யத்
வ்யாசகார முநிதர்ம தாரதாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய தூசிகளுக்கு மனிதர்களின் மனதை மென்மையாக்கும் தன்மை உண்டு போலும். காரணம் – உனது தூசியினால் இராமன் சென்ற வழியில் இருந்த கல் ஒன்று மஹிரிஷியின் மனைவி என்ற மென்மையாக பெண்ணாக ஆனது அல்லவா?

360. ரங்கேசயஸ்ய புருஷஸ்ய ஜகத் விபூத்யை
ரத்யா பரிக்ரம விதௌ மணிபாதரக்ஷே
ஸீமந்த தேசம் அநவத்ய ஸரஸ்வதீநாம்
ஸிந்தூரயந்தி பவதீ சரிதா பராகா:

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! பரமபுருஷனாகிய ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீரங்கத்தில் சயனித்தபடி உள்ளான். அவன் இந்த உலகின் நன்மையை மனதில் கொண்டு வீதி வலம் வருகிறான். அப்போது உன்னிடம் இருந்து கிளம்பின தூசிகள், பெண்களின் தலையில் உள்ள வகுடில் வைக்கப்படும் குங்குமம் போன்று மாறின.

361. மாந்யேந ரங்கந்ருபதே : மணிபாதரக்ஷே
சூடாபதாநி ரஜஸா தவ பூஷயந்த:
காலக்ரமேண பஜதாம் கமலாஸநத்வம்
நாபி ஸரோஜ ரஜஸாம் நிவஸந்தி மத்யே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மிகவும் பெருமை உடையதும், போற்றத்தக்கதும் ஆகிய உன்னுடைய தூசிகளை ஒரு சிலர் தங்கள் தலையில் ஏற்றுக் கொள்ளக்கூடும். அவர்கள் காலம் கழியக்கழிய வரிசையாக பகவானின் திருநாபிக்கமலத்தில் அமரவல்ல ப்ரம்மபட்டம் அடைகின்றனர்.

362. மாதர் முகுந்த சரணாவநி தாவகீநா:
சிந்தாவசீகரண சூர்ண விசேஷ கல்பா:
ஸஞ்சார பாம்ஸுகணிகா: சிரஸா வஹந்தோ
விச்வம் புநந்தி பதபத்ம பராகலேசை:

**பொருள் -** கண்ணனின் திருவடிகளை அவனது தாயான யசோதை போன்று காப்பாற்றும் பாதுகையே! இந்த உலகில் உள்ளவர்களின் மனம் முழுவதும் உன் பக்கம் ஈர்க்கும் வண்ணம் உள்ள சொக்குப் பொடியாக உனது தூசிகள் உள்ளன. அவற்றை ஒரு சிலர் தங்கள் தலைகளில் ஏற்றுக்கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் திருவடித்தூசி மூலமாக அவர்கள் இந்த உலகத்தைத் தூய்மைப்படுத்துகின்றனர்.

363. ஆயோஜிதாநி அமலதீபி: அநந்யலப்யே
பாதாவநி ச்ருதி வதூ படவாஸக்ருத்யே
த்வத் ஸஞ்சர ப்ரசலிதாநி ரஜாம்ஸி சௌரே:
ப்ரக்யாபயந்தி பதபத்ம பராக சோபாம்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னிடமிருந்து கிளம்பும் தூசிகள் அனைத்தும், ஸ்ரீரங்கநாதனின் திருவடித் துளிகள் தவிர மற்ற ஏதும் சென்றடைய இயலாத, வேதங்கள் என்ற பெண்ணுக்கு ஏற்ற வாசனைப் பொடிகளாக உள்ளன. இவ்விதம் மிகவும் கற்றவர்கள் கூறுகிறார்கள். அந்தத் தூசிகள் ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளிலிருந்து கிளம்பும் தூசிகள் என்று கூறுகிறோம்.


**Email:**sridharan_book@yahoo.co.in

364. மூர்த்தாநம் அம்ப முரபிந் மணி பாதரக்ஷே
யேஷாம் கதாபி ரஜஸா பவதீ புநாதி
த்வாம் ஏவ தே ஸுக்ருதிந: ஸ்நபயந்தி காலே
மந்தாரதாம் ரஜஸா மகுட ச்யுதேந

**பொருள்** - முரன் என்ற அரக்கனை வீழ்த்திய கண்ணனின் திருவடிகளை அவன் தாய் போன்று பாதுகாக்கும் பாதுகையே! நீ ஒரு சிலரின் தலைகளை உன் மீது உள்ள தூசி கொண்டு தெளித்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக்கூடும். அப்படிப்பட்ட புண்ணிய சாலிகள் சரியான காலம் வந்தவுடன் இந்திரபதவி பெற்று விடுகின்றனர். அப்போது தங்கள் க்ரீடங்களிலுள்ள மந்தார மாலை கொண்டு உன்னை நீராட்டுகின்றனர்.

365. ரத்யா விஹார ரஹஸா பரிதூஸராங்கீம்
ரங்கேச்வரஸ்ய லலிதேஷு மஹோத்ஸவேஷு
ப்ரஸ்போடயதி அவநத: மணிபாதுகே த்வாம்
கௌரீபதி: ஸவயம் இபாஜின பல்லவேந

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் உத்ஸவ காலங்களில் உன்னைச் சாற்றிக் கொண்டு திருவரங்கத்தின் திருவீதிகளில் ஸஞ்சாரம் செய்கிறான். அப்போது அந்த வீதிகளில் உள்ள புழுதி உன் மீது முழுவதுமாகப் படிந்துவிடுகிறது. இதனைக் கண்ட சிவன், உன்னை வணங்கியபடி, தனது தளிர் போன்ற யானைத்தோல் கொண்டு உன்னைத் துடைத்து வைக்கிறார்.

366. நேதீயஸாம் நிஜபராக நிவேச பூர்வம்
ஸ்ப்ருஷ்ட்வா சராம்ஸி பவதீ பவரோக பாஜாம்
காடம் நிபீட்ய கருடத்வஜ பாதரக்ஷே
மாநக்ரஹம் சமயதீவ பரைரஸாத்யம்

**பொருள்** - கருடனைக் கொடியில் உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸம்ஸாரம் என்ற நோயால் பீடிக்கப்பட்டவர்களின் தலைகள் உன் அருகில் வந்தவுடன், உன் மீது உள்ள தூசிகளை முதலில் அந்தத் தலைகள் மீது படியச் செய்கிறாய். பின்னர் அவற்றைத் தொட்டு, (சடாரி) அழுத்தமாகப் பிடித்துக் கொள்கிறாய். இதன் மூலம் யாராலும் ஓட்ட இயலாத அஹங்காரம் என்ற பிசாசை நீ ஓட்டிவிடுகிறாய்.

367. ஆபாதவல்லவதநோ அகுமாரயூந:
பாதாவநி ப்ரவிசதோ யமுநா நிகுஞ்ஜாந்
ஆஸீத் அநங்கஸமராத் புரத: ப்ரவ்ருத்த:
ஸேநாபராக இவ தே பதவீபராக:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! காண்பதற்குக் குழந்தை போன்று உள்ளவனும், உண்மையில் இது போன்ற பருவங்கள் ஏதும் அற்றவனும் ஆகிய பரமபுருஷனாகிய கண்ணன், ராஸலீலைக்காக யமுனை ஆற்றின் கரைக்கு வந்தான். அப்போது உன்னிடமிருந்து தூசிகள் பறந்தன. இவற்றைக் காணும்போது, நடக்க உள்ள மன்மத யுத்த்த்திற்கு முன்பாக சேனை கிளம்புவது போன்று உள்ளது.

368. கங்காபகா தட லதாக்ருஹம் ஆச்ரயந்த்யா:
பாதாவநி ப்ரசலிதம் பதவீ ரஜஸ்தே
ப்ராயணே பாவநதமம் ப்ரணதஸ்ய சம்போ:
உத்தூளநம் கிம் அபி நூதநம் ஆதநோதி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமன் உன்னைச் சாற்றிக் கொண்டு கங்கையின் கரையோரமாக நடந்தான். அப்போது உன் மீதுள்ள தூசிகள் அனைத்தும் அந்தக் கரையில் உள்ள புதர்களில் படிந்தன. அந்தப் புதர்கள் அவற்றை எடுத்துத் தனது உடல் முழுவதும் பூசிக் கொள்ளும்படியாக உள்ள ஒரு பூச்சை அந்தத் தூசிகள் ஏற்படுத்துகின்றன.

369. அந்தே ததா த்வம் அவிலம்பிதம் ஆநயந்தீ
ரங்காத் புஜங்கசயநம் மணிபாதரக்ஷே
காமம் நிவர்த்தயிதும் அர்ஹஸி ஸம்ஜ்வரம் மே
கர்ப்பூர சூர்ணபடலை: இவ தூளிபி: தே

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! என்னுடைய மரணம் ஏற்படும் நேரத்தில் நீ சிறிதும் தாமதம் செய்யாமல், ஸ்ரீரங்க விமானத்தில் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டுள்ள பெரியபெருமாளை அந்த இடத்திற்கு அழைத்து வரவேண்டும். அப்போது கர்ப்பூரத்தின் துகள்கள் போன்ற உன்னுடைய தூசிகள் என் மீது விழுந்தால், எனது வேதனைகள் முற்றிலுமாக மறைந்துவிடும்.

370. ரங்கேச பாதஸஹதர்மசரி த்வதீயாந்
மௌளௌ நிவேச்ய மஹிதாந் பதவீபராகாந்
ஸந்த: த்ரிவர்க்க பதவீம் அதிலங்கயந்த:
மௌளௌ பதம் விதத்தே விபுதேச்வரணாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடன் எப்போதும் சேர்ந்ததே சஞ்சாரம் செய்யும் பாதுகையே! நன்கு அறிந்தவர்கள் உனது தூசிகளைத் தங்கள் தர்மம், அர்த்தம், காலம் (அறம், பொருள், இன்பம்) ஆகியவற்றைக் கடந்து செல்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தேவர்களின் தலைகளில் தங்கள் கால்களை வைக்கும்படி ஆகின்றனர். (தேவர்கள் கூட இவர்கள் கால்களில் விழுகின்றனர் என்று கருத்து)

371. மாதஸ் ததா மாதவ பாதரக்ஷே
த்வயி ப்ரஸக்தம் த்வரயா உபயாந்த்யாம்
பராம்ருசேயம் பதவீபராகம்
ப்ராணை: ப்ரயாணாய ஸமுஜ்ஜிஹாநை:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! எனது உயிர் பிரிகின்ற நேரத்தில் நீ மிகவும் வேகமாக அரங்கனை அழைத்துக் கொண்டு வருவாய். அப்போது உன் மீது படிந்துள்ள தூசிகள் அனைத்தையும், மேலே கிளம்பும் எனது ப்ராணன் நன்றாகத் துடைத்து உனக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும்.

372. ததாகதா ராகவ பாதரக்ஷே
ஸம்பச்யமாநேஷு தபோதநேஷு
ஆஸீத் அஹல்யா தவ பாம்ஸுலேசை:
அபாம்ஸுலாநாம் ஸ்வயம் அக்ரகண்யா

**பொருள் -** ரகுவம்சத்தில் அவதரித்த இராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! கல்லாகக் கிடந்த அகலிகை என்ற பெண்ணை, அனைத்து முனிவர்களும் பார்த்து கொண்டிருக்கும்போதே உனது சிறிய தூசிகள், மீண்டும் பெண்ணாக மாற்றின. இதன் மூலம் இவளே சிறந்த பெண்களுக்குள் முதல் பெண்ணாகக் கருதப்பட்டாள்.

373. பச்யாமி பத்மேக்ஷண பாதரக்ஷே
பாவாம்புதிம் பாதும் இவ ப்ரவ்ருத்தாந்
பக்த உபயாந த்வரயா பவத்யா:
பர்யஸ்ய மாநாந் அதவீபராகாந்

**பொருள் -** தாமரை மலர் போன்ற அழகான கண்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது அடியார்களுக்கு உண்டாகும் துன்பத்தை நீக்க நீ விரைவாகச் செல்லும்போது பெரும்புழுதி எழுகின்றது. அவை ஸம்ஸாரம் என்ற கடல் மீது படிந்து, அந்தக் கடலை மூடி, வற்றும்படிச் செய்வதை நான் காண்கிறேன்.


**Email:**sridharan_book@yahoo.co.in

374. பஞ்சாயுதீ பூஷணம் ஏவ சௌரே:
யதஸ் தவைதே மணிபாதரக்ஷே
விதந்வதே வ்யாப்ததிச: பராகா:
சாந்த உதயாந் சத்ரு சமூ பராகாந்

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனிடம் சங்கு, சக்கரம், கதை, வில்,வாள் என்னும் ஐந்து ஆயுதங்கள் வெறும் அலங்காரத்திற்காக மட்டுமே உள்ளன. அவை ஆயுதங்களாக இல்லை. இதன் காரணம், அனைத்துத் திசைகளிலும் சென்று பரவுகின்ற உன் தூசிகள், ஆங்காங்கு உள்ள விரோதிகள் என்ற தூசிகளை மேலே கிளம்ப இயலாமல் செய்துவிடுகின்றன அல்லவோ?

375. பரிணதிம் அகடோரம் ப்ராப்தயா யத்ப்ரபாவாத்
அலபத் அசிலயா ஸ்வாந் கௌதமோ தர்மதாராந்
புந: உபஜநி சங்கா வாரகம் பாதுகே தத்
ப்ரசமயதி ரஜஸ்தே ராகயோகம் ப்ரஜாநாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது தூசிகள் மூலம் ஒரு கல்லானது, சிறிதும் கடினத்தன்மை இல்லாததும் மென்மையானதும் ஆகிய அகலிகை என்ற பெண்ணக மாறியது. இதன் மூலம் கௌதம முனிவர் தனது தர்மபத்தினியை மீண்டும் அடைந்தார். இப்படி உள்ள இந்தத் தூசிகள், எங்கள் போன்ற மக்களுக்கு மறுபிறப்பை ஏற்படுத்தவல்ல உலக விஷயங்களின் மீது உள்ள ஆசை என்பதை நீக்குகின்றன.

376. ரஜநி விகமகாலே ராமகாதாம் படந்த:
குசிகதநயமுக்யா: பாதுகே பாவயந்தே
உபலசகல ஸக்தை: த்வத் பராகை: அகாண்டே
ஜநிதமுநி களத்ராந் தண்டகாரண்ய பாகாந்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! விடியற்காலை நேரத்தில் இராமனுக்கு ஸுப்ரபாதம் போன்ற துதிகளைக் கூறுபவர்களான விச்வாமித்திரர் போன்ற முனிவர்கள் செய்வது என்ன? அவர்கள் உனது தூசிகள் திடீரென ஒரு கல் மீது விழுந்து, அந்தக் கல் ஒரு பெண்ணாக மாறிய இடமாகிய தண்டகாரண்யத்தையே நினைத்தபடி உள்ளனர்.

377. சுப ஸரணி ரஜோபி: சோபயந்தீ தரித்ரீம்
பரிணதி ரமணீயாந் ப்ரக்ஷரந்தீ புமர்த்தாந்
பவஸி புவந வந்த்யா பாதுகே ரங்கபர்த்து:
சரணம் உபகதாநாம் சாச்வதீ காமதேநு:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைவர்களாலும் வணங்கத் தகுந்தவளாக உள்ள நீ, அனைவருக்கு நன்மை ஏற்படுத்தவல்ல மங்களகரமான உனது தூசிகள் மூலம், இந்தப் பூமியை ஏற்றத்துடன் வைக்கிறாய். அனைவருக்கும் இன்பம் அளிக்கவல்ல புருஷார்த்தங்களை நீ அளிக்கவல்லவளாக உள்ளாய். இந்த உலகில் உள்ளவர்கள் சரணம் என்று உன்னை அடைந்துவிட்டால், அழியாமல் உள்ள அனைத்தையும் கொடுக்கவல்ல காமதேனு போன்றாகிறாய்.

378. பவந தரளித: தே பாதுகே ரங்கபர்த்து:
விஹரண ஸமயேஷு வ்யாப்த விச்வ: பராக:
விஷம விஷய வர்த்தம் வ்யாகுலாநாம் ஜஸ்ரம்
வ்யபநதி ஜநாநாம் வாஸநா ரேணு ஜாலம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் சஞ்சாரம் செய்யும்போது உனது தூசிகள் காற்றினால் அனைத்து இடங்களிலும் பரவுகின்றன. இவை செய்வது என்ன? மேடு பள்ளங்கள் என்ற ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த உலகவிஷயங்களின் பொருட்டு அலைகின்ற மக்களின் தவறான வாஸனை என்னும் புத்தியை நீக்கிவிடுகின்றன.

379. நிஷ்ப்ரத்யூஹம் உபாஸிஷீமஹி முஹு: நிச்சேஷதோஷச்சித:
நித்யம் ரங்கதுரந்தரஸ்ய நிகம ஸ்தோம அர்ச்சிதே பாதுகே
தத்தே மூர்த்தபி: ஆதி பத்ம ஜநிதா தத்தாத்ருசீ ஸந்ததி:
யத் ஸஞ்சார பவித்ரித க்ஷிதி ரஜ: பங்க்திம் சது: பஞ்சஷை:

**பொருள்** - அனைத்துவிதமான பாவங்களையும் போக்குபவனாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள், வேதங்கள் அனைத்தாலும் உயர்வாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றை நாம், நம்முடைய செயல்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இருப்பதற்காக உபாஸிப்போமாக. இவற்றின் சஞ்சாரத்தால் இந்தப் பூமி தூய்மை அடைகிறது. இந்த உலகின் காரணமாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் நாபியில் உள்ள தாமரை மலரில் இருந்து தோன்றிய உபாஸகனின் பரம்பரையில் வந்த நான்கு, ஐந்து, ஆறு தலைகளால் பாதுகை தாங்கப்பட்டபடி உள்ளது.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – பாதுகையை ஆராதிப்பவர்களின் குடும்பத்தில் பிள்ளை, தந்தை, தாத்தா, கொள்ளுத்தாத்தா என பல தலைமுறையினர் ஒரே நேரத்தில் இருந்து பாதுகையை ஆராதனை செய்தபடி வாழ்வார்கள் என்று கருத்து.

380. ரஜஸா பரோரஜ: தத்
 ந கலு ந லங்க்யேத பகவத: அபி பதம்
 சமுத ஹ்ருதயம் மதீயம்
 பவதீ யதி நாம பாதுகே ந ஸ்யாத்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீ இல்லாமல் போனால் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்கும் ரஜஸ் (ரஜோ குணம், தூசிகள் என்று இரு பொருள் கொள்ளலாம்) வந்துவிடும். அப்படி உள்ளபோது என்னுடைய இதயம், ரஜோ குணத்தை அடைவது பற்றிக் கேட்பானேன்?

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## பராக பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (14.நாத பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

381. ச்ருதீநாம் பூஷணாநாம் தே
சங்கே ரங்கேந்த்ர பாதுகே
மித: ஸங்கர்ஷ ஸஞ்ஜாதம்
ரஜ: கிம் அபி சிஞ்ஜிதம்

**பொருள் -** ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! உன் மீது பலவிதமான இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. நம்பெருமாள் சஞ்சாரம் செய்யும்போது, அவை ஒன்றன் மீது ஒன்று மோதியபடி, உருண்டு சப்தம் எழுப்புகின்றன. இதனைக் காணும்போது, வேதங்கள் ஒன்றுடன் ஒன்று உரைதலால் ஏற்படும் தூசிகள் போன்று உள்ளன.

**விளக்கம் -** நம்பெருமாள் வீதியில் சஞ்சாரம் செய்யும்போது, அதனைக் காண நிற்பவர்கள் மீது பாதுகையின் தூசிகள் விழுந்து நன்மை அளிக்கின்றன. ஆனால் ஒரு சிலர் வீட்டை விட்டு வெளியில் வர இயலாத சூழ்நிலை இருக்கலாம். அவர்களுக்கு பாதுகையின் ஒலியானது நன்மை அளிக்கிறது.

382. முரபித் மணிபாதுகே பவத்யா:
ஸ்துதிம் ஆகர்ணயதாம் மயா நிபத்தாம்
அவதீரயஸீவ மஞ்ஜுநாதை:
அசமத்காரவசாம்ஸி துர்ஜநாநாம்

**பொருள் -** முரன் என்ற அரக்கனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னைப் பற்றிய இந்த ஸ்துதியை நான் கூறும்போது, ஒரு சில துர்மதி கொண்டவர்கள் இதனை தூஷித்துப் பேசக்கூடும். அந்தச் சொற்களை நீ உனது அழகான இசை போன்று எழும் சப்தம் கொண்டு அடக்குகிறாய் போலும்.

383. விஹிதேஷு அபிவாதநேஷு வேதை:
கமந உதீரித கர்ப்பரத்ந நாதா
மதுரம் மதுவைரி பாதரக்ஷே
பவதீ ப்ரத்யபிவாதநம் விதத்தே

**பொருள் –** மது என்னும் அரக்கனின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்திற்கு முன்பாக வேதங்கள் உனக்கு அபிவாதநம் (சிறியவர்கள் பெரியவர்களை வணங்கும்போது, தான் இன்ன கோத்ரம், தனது பெயர் இன்னது போன்ற விவரங்களைக் கூறுதல்) செய்தபடி உள்ளன. அப்போது உனது இரத்தினக்கற்களின் இனிமையான நாதம் மூலம், அவர்களுக்கு ப்ரதிஅபிவாதநம் (ஆசி கூறுதல்) செய்கிறாய் போலும்.

384. ஸ்வததே கிம் இஹ ஏவ ரங்கநாத:
மயி திஷ்டந் யதி வா பதே பரஸ்மிந்
இதி ப்ருச்சஸி தேவி நூநம் அஸ்மாத்
மதுரை: த்வம் மணிபாதுகே நிநாதை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இனிமையான நாதம் எப்படி உள்ளது என்றால் – என் மீது உறைகின்ற ஸ்ரீரங்கநாதன் உங்களுக்குப் பிடித்தபடி உள்ளானா அல்லது ஸ்ரீரங்கவிமானத்தில் உள்ள அவன் உங்களுக்குப் பிடித்தபடி உள்ளானா அல்லது பரமபதத்தில் உள்ளவன் உங்களுக்குப் பிடித்தபடி உள்ளானா - என்று நீ அனைவரிடமும் கேட்பது போன்று உள்ளது.

385. அவரோகதஸ்ய ரங்கபர்த்து:
கதிஷு வ்யஞ்ஜித கர்ப்பரத்ந நாதா
ப்ரதி ஸம்ல்லபஸீவ பாதுகே த்வம்
கமலா நூபுர மஞ்ஜு சிஞ்ஜிதாநாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரின் அந்தப்புரத்திற்கு ஸ்ரீரங்கநாதன் சஞ்சாரமாக வருகிறான். அப்போது உன்னிடமிருந்து இனிய ஒலி எழுகிறது. இதனைக் கேட்கும்போது எவ்விதம் உள்ளது என்றால் - அந்தப்புரத்தில் உள்ள ஸ்ரீரங்கநாச்சியாரின் திருவடிகளில் உள்ள தண்டைகள் எழுப்பும் ஒலிக்கு, நீ பதில் அளிப்பது போன்று உள்ளது.

386. முரபித் சரணாரவிந்த ரூபம்
மஹித ஆனந்தம் அவாப்ய பூருஷார்த்தம்
அநகை: மணிபாதுகே நிநாதை:
அஹமந் நாத: இதீவ காயஸி தவம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளின் வடிவுக்கு ஏற்றபடி நீ உள்ளாய். அவனது திருவடிகளின் தொடர்பு மூலம் பேரானந்தம் கொண்டு விளங்குகிறாய். இதன் மூலம் நீ பெரும் பேறு பெற்றாய் . உன்னுடைய இனிமையான ஒசை மூலம், "நான் ப்ரஹ்மம் என்ற அன்னத்தை அனுபவிப்பவள்", என்று பாடுகிறாய் போலும்.

387. மதுவைரி பதாம்புஜம் பஜந்தீ
மணிபாதாவநி மஞ்ஜு சிஞ்ஜிதேந
படஸீவ முஹு: ஸ்வயம் ப்ரஜாநாம்
அபரோபஜ்ஞம் அரிஷ்டசாந்தி மந்த்ரம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளை நீ அடைந்து, இன்பமாக உள்ளாய். அப்போது உன்னிடம் இனிமையான நாதம் எழுகிறது. இது எப்படி உள்ளது என்றால் – இந்த உலகில் உள்ள மக்களின் அனைத்துத் துன்பங்களை நீக்கி, யாருக்கும் தெரியாத ஒரு மந்திரத்தை நீ உச்சரிப்பது போன்று உள்ளது.

388. ச்ருதிபி: பரமம் பதம் முராரே:
அநிதங்காரம் அநேவம் இதி உபாத்தம்
இதம் இத்தம் இதி ப்ரவீஷி நூநம்
மணிபாதாவநி மஞ்ஜுபி: ப்ரணாதை:

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் எப்படிப்பட்டவை என்று வேதங்கள் கூற முற்பட்டபோது, அவை அந்தத் திருவடிகள் இது எனக் கூற இயலாது, இப்படிப்பட்டது என்று கூற இயலாது - என்றே கூறுகின்றன. ஆனால் உனது இனிய நாதங்கள் மூலம் நீ அவன் திருவடிகள் இவை, இப்படிப்பட்டது - என்று தெளிவாகக் கூறுவது உண்மையே.

389. முநய: ப்ரணிதாந ஸந்நிருத்தே
ஹ்ருதி ரங்கேச்வர ரத்ந பாதுகே த்வாம்
விநிவேச்ய விபாவயந்தி அநந்யா:
ப்ரணவஸ்ய ப்ரணிதிம் தவ ப்ரணாதம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் இரத்தினமயமான பாதுகையே! யோகிகள் தங்கள் மனதை, தங்களது யோகாப்யாஸம் மூலம் மற்ற விஷயங்களில் செல்லாதபடி நிலை நிறுத்துகின்றனர். அப்படிப்பட்ட மனதில் உன்னை த்யானிக்கின்றனர். மற்ற தேவதைகளையோ, மற்ற பலன்களையோ நாடாமல், ப்ரணவத்திற்கு ஆதாரமாக உள்ள உனது நாதத்தை மட்டுமே த்யானிக்கின்றனர்.

390. மதுரம் மணிபாதுகே ப்ரவ்ருத்தே
பவதீ ரங்கந்ருபதே விஹாரகாலே
அபயார்த்த்நயா ஸமப்யுபேதாந்
அவிஸம்வாதயதீவ மஞ்ஜுநாதை:

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சார காலத்தில் பலரும் அவன் அருகில் வந்து, தங்களுக்கு அபயம் அளிக்க வேண்டி நிற்கின்றனர். அப்போது நீ செய்வது என்ன? உன்னுடைய இனிமையான நாதம் மூலம், “அபயம் அளிக்கப்பட்டது”, என்று கூறுகிறாய் அல்லவோ?

391. ச்ரவஸோ: மம பாரணம் திசந்தீ
மணிபாதாவநி மஞ்ஜுலை: பரணாதை:
ரமயா க்ஷமயா ச தத்தஹஸ்தம்
ஸமயே ரங்கதுரீணம் ஆநயேதா:

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! என்னுடைய அந்திம காலத்தில் நீ செய்யவேண்டியது என்னவென்றால் - மஹாலக்ஷ்மியாலும், பூமாதேவியாலும் கைகள் தாங்கப்பட்டுள்ள ஸ்ரீரங்கநாதனை உனது இனிமையான நாதம் என் காதுகளில் இதமாக ஒலிக்கும்படி அழைத்து வரவேண்டும்.

392. அநுயாதி நித்யம் அம்ருதாத்மிகாம் கலாம்
தவ ரங்கசந்த்ர மணிபாது ஜங்க்ருதம்
ச்ரவஸா முகேந பரிபுஜ்ய யத் க்ஷணாத்
அஜராமரத்வம் உபயாந்தி ஸாதவ:

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! சந்த்ரகலை என்ற அமிர்தத்தை ஒக்கும்படி உன்னுடைய ஜம் என்ற சப்தம் உள்ளது. சந்த்ரகலை என்னும் அமிர்தத்தைப் பருகினால் மூப்பு மற்றும் மரணம் ஆகிய நிலைகள் ஏற்படாது. அது போன்றே உன்னுடைய நாதத்தைக் காது என்ற முகம் கொண்டு பருகினால், கிழட்டுத்தன்மையையும் மரணம் அற்ற தன்மையையும் நொடிப்பொழுதில் அளிக்கிறது.

393. பருஷை: அஜஸ்ரம் அஸதாம் அநர்த்தகை:
பரிவாத பைசுந விகத்தந ஆதிபி:
மதுகைடபாரி மணிபாதுகே மம
ச்ருதி துஷ்க்ருதாநி விநிவாரய ஸ்வநை:

**பொருள்** - மது மற்றும் கைடபன் ஆகிய இரண்டு அசுரர்களையும் அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மற்றவர்கள் பற்றிக் கூறப்படும் புறங்கூறும் சொற்கள், தற்புகழ்ச்சி, மற்றவர்களைத் தூஷிக்கும் சொற்கள் ஆகியவை போன்று எந்தப் பலனும் இல்லாத சொற்களின் ஓசைகள் காரணமாக எனது காதுகள் பாவம் நிறைந்துள்ளன. உனது இனிமையான நாதம் மூலம் இந்தப் பாவங்களை நீ நீக்கவேண்டும்.

394. பாதுகே பரிஜநஸ்ய தூரத:
ஸூசயந்தி கலு தாவகா: ஸ்வநா:
லீலயா புஜகதல்பம் உஜ்ஜத:
ஸ்ரீமத: த்ரிசதுராந் பதக்ரமாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நம்பெருமாள் உன்னைச் சாற்றிக் கொண்டு எழுந்தருளுகிற சமயத்தில், உனது இனிமையான நாதமானது அவனுக்குக் கைங்கர்யம் செய்பவர்களின் காதுகளில் விழுகின்றன. தனது லீலைக்காக ஆதிசேஷனை விட்டு எழுந்து ஸஞ்சரிக்கும் ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தை இவ்விதமாக உனது ஒலி தெரிவிக்கிறது அல்லவா?

395. தேவி தைத்ய தமநாய ஸத்வரம்
ப்ரஸ்திதஸ்ய மணிபாதுகே ப்ரபோ:
விச்வமங்கள விசேஷ ஸூசகம்
சாகுநம் பவதி தாவகம் ருதம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அனைத்து அசுரர்களை அழிக்கும் எண்ணத்துடன் நம்பெருமாள் புறப்படுகிறான். அப்போது அவனுக்கு அனைத்து வெற்றியையும் உண்டாக்கவல்ல சுபமான சகுனங்களை எழுப்பும் பறவைகளின் ஒலியானது, உனது சப்தம் மூலமாக வெளிப்படுகிறது.

396. தாதும் அர்ஹஸி ததா மம ச்ருதெள
தேவி ரங்கபதி ரத்ந பாதுகே
விஹ்வலஸ்ய பவதீய சிஞ்ஜிதம்
ஸ்வாது கர்ண ரஸநா ரஸாயநம்


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகாதேவியே! மரண காலத்தில் வேதனையுடன் உள்ள எனது காதுகள் என்ற நாக்கில், இனிமை அளிக்கும் விதமாக, மருந்து போன்ற உன்னுடைய நாதத்தை அளிக்கவேண்டும்.

397. அஹம் உபரி ஸமஸ்த தேவதாநாம்
உபரி மம ஏஷ: விபாதி வாஸுதேவ:
தத் இஹ பரதரம் ந கிஞ்சித் அஸ்மாத்
இதி வதஸீவ பதாவநி ப்ரணாதை:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து தேவதைகளுக்கும் நான் (பாதுகை) மேலானவளாக உள்ளேன். எனக்கு மேல் வாஸுதேவனாகிய நம்பெருமாள் உள்ளான். இந்த உலகில் நம்பெருமாளை விட உயர்ந்த வஸ்து வேறு எதுவும் இல்லை – என்று நீ உனது இனிய நாதங்களால் கூறுகிறாய் போலும்.

398. அவநத விபுதேந்த்ர மௌளிமாலா
மது மத சிக்ஷித மந்த்ர ப்ரயாதா
ப்ரதயஸி பரிரப்த சௌரி பாதா
மணிகலஹேந வியாத ஜல்பிதாநி

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை வணங்கிப் பணியும் தேவர்களின் தலைகளில் உள்ள மாலைகளின் மதுவை நீ பருகுகிறாய் போலும். அதனால் ஏற்பட்ட மயக்கம் காரணமாக நீ மெதுவாக நடக்கிறாய். நம்பெருமாளின் திருவடிகளை எப்போதும் அணைத்தபடி, உன் மீது உள்ள இரத்தினக்கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ள, இப்படியாக மது உண்ட மயக்கத்தில் பேசுகிறாய் போலும்.

399. ஆஸ்தாநேஷு த்ரிதச மஹிதாந் வர்த்தயித்வா விஹாராந்
ஸ்தாநே ஸ்தாநே நிஜபரிஜநம் வாரயித்வா யதார்ஹம்
வாஸாகாரம் ஸ்வயம் உபஸரந் பாதுகே மஞ்ஜுநாதாம்
ஆபர்யங்காத் ந கலு பவதீம் ரங்கநாத: ஜஹாதி

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! சபா மண்டபங்களில் தனக்கு நடத்தப்படும் உபசாரங்களை ஏற்றபடி உள்ள ஸ்ரீரங்கநாதன், மீண்டும் அந்தப்புரம் திரும்பும்போது செய்வது என்ன? அவர்களில் யார் யாரை எந்த எந்த இடங்களில் நிறுத்த வேண்டுமோ

அங்கங்கு நிறுத்தியபடி செல்கிறான். இனிமையான நாதம் உடைய உன்னை மட்டும் தன்னுடன் தனது கட்டிலைச் சென்று அடையும்வரை அவன் விடுவதில்லை.

400. அந்தர் ந்யஸ்தைர் மணிபிருதிதம் பாதுகே ரங்கபந்தௌ
மந்தம் மந்தம் நிஹிதசரணே மஞ்ஹுளம் தே நிநாதம்
பச்யந்த்யாதி க்ரம பரிணதே: ப்ராக்தநீம் தாம் பராயா:
மன்யே மித்ரா வருண விஷயாத் உச்சரந்தீம் அவஸ்தாம்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் வெதுவாகத் தனது திருவடியை வைக்கும்போது, உன்னுள்ளே இருக்கின்ற இரத்தினக்கற்கள் சப்தம் செய்கின்றன. இந்த இனிய நாதம் எப்படி உள்ளது என்றால், பச்யந்தீ என்ற முதல் அவஸ்தையை உடைய சப்தங்களைக் கொண்ட, நாபிக்கமலத்தில் இருந்து வெளியே எழும் முதல் அவஸ்தை போன்று உள்ளது.

**விளக்கம் -** நாபியில் இருந்து கிளம்பும் காற்றானது சப்தமாக வெளிவருகிறது. இந்தச் சப்தம் நான்கு நிலைகளில் உள்ளது – பரா, பச்யந்தி, மத்யமா மற்றும் வைகரி என்பதாகும். முதல் மூன்றும் நமது காதுகளால் நாம் கேட்கக்கூடிய சப்தங்கள் ஆகும்.

401. ப்ரக்யாதாநாம் பரிஷதி ஸதாம் காரயித்வா ப்ரதிஜ்ஞாம்
ப்ராயேண த்வாம் ப்ரதித விபவாம் வர்ணயந்தீ மயா த்வம்
பாதந்யாஸக்ரமம் அநுகுணாம் ப்ராப்ய ரங்காதிராஜாந்
பத்ய ஆரம்பாந் கணயஸீ பரம் பாதுகே ஸ்வைர் நிநாதை:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் புகழுடைய பெரியவர்கள் நிறைந்த கூட்டத்தில் உன்னைப் பற்றிய ஆயிரம் ச்லோகங்களை இயற்றுகிறேன் என்று என்னைச் சபதம் செய்ய வைத்தாய். இதன் மூலம் எங்கும் புகழ் கொண்ட நீ, என் மூலமாக உனது புகழை மேலும் புகழ்ந்து கொண்டாய். ஒவ்வொரு ச்லோகமும் இயற்ற இயற்ற, நம்பெருமாள் திருவடிகளை எடுத்து வைப்பதற்கு ஏற்றபடி உள்ள உனது நாதம் கொண்டு ஒன்று, இரண்டு என்று ச்லோகங்களின் தொடக்கத்தை எண்ணுகிறாய் போலும்.

402. விஷ்ணோரா: அஸ்மிந் பதஸரஸிஜே வ்ருத்திபேதைர் விசித்ரை:
ஐதம்பர்யம் நிகமவசஸாம் ஐககண்ட்யேந ஸித்தம்
இத்தம் பும்ஸாம் அநிபுணதியாம் பாதுகே த்வம் ததேவ
ஸ்ப்ருஷ்ட்வா ஸத்யம் வதஸி நியதம் மஞ்ஜுநா சிஞ்ஜிதேந


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து உபநிஷத்துக்களும் சேர்ந்து நின்று ஒரே குரலாக, தங்களது வெவ்வேறு ஆற்றல்கள் மூலமாக, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பற்றியே பேசுகின்றன. இந்தச் சப்தமானது உனது இனிய நாதத்தை ஒத்துள்ளது. இதனை இவ்விதம் அறியாமல் உள்ளவர்களுக்கு, தாமரை மலர் போன்ற நம்பெருமாளின் திருவடிகளைத் தொட்டு, உனது நாதம் மூலமாகவே சத்தியம் செய்கிறாய் போலும்.

403. ஆம்நாயை: த்வாம் அநிதரபரை: ஸ்தோதும் அப்யுத்யதாநாம்
மந்யே பக்த்யா மதுவிஜயிந: பாதுகே மோஹ பாஜாம்
சிக்ஷா தத்த்வ ஸ்கலித வசஸாம் சிக்ஷயஸ்யேவ பும்ஸாம்
மாத்ராதீநி ஸ்வயம் அநுபதம் மஞ்ஜுபி: ஸ்வைர் நிநாதை:

**பொருள் -** மது என்ற அசுரனை வெற்றி கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வேதங்கள் அனைத்தும் உன்னைத் தவிர மற்ற யாரையும் உயர்வாகக் கூறுவதில்லை. அப்படிப்பட்ட வேதங்கள் கொண்டு உன்னைக் கூறியபடி வரும்போது, நடுவில் உன் மீது கொண்டுள்ள ப்ரியம் காரணமாக வார்த்தைகள் வெளிவராமல் தடுமாறியபடி உள்ளன. அப்போது அவர்களுக்கு எழுத்துக்களில் உள்ள குறில், நெடில் முதலானவற்றைப் பற்றிய விளக்கத்தை உனது இனிமையான நாதம் மூலம் புரிய வைக்கிறாய் போலும்.

404. லக்ஷ்மீ காந்தம் கமபி தருணம் ரத்யாய நிஷ்பதந்தம்
ராகாத் த்ரஷ்டும் த்வரிதமநஸாம் ராஜதாதீ வதூநாம்
ப்ரத்யாதேசம் பஜதி மதுரை: பாதுகே சிஞ்ஜிதைஸ்தே
சேதோஹாரீ குஸுமதநுஷ: சிஞ்ஜிநீ மஞ்ஜுநாத:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான நம்பெருமாள் உன்னைச் சாற்றிக்கொண்டு திருவரங்கத்தின் வீதிகளில் ஸஞ்சாரமாக வருகிறான். மிகவும் அழகான இளைஞனாக உள்ள அவனைக் காண ஆசை கொண்டு, திருவரங்கத்தின் பெண்கள் ஓடி வருகின்றனர். அவர்களது மனதை இவ்விதம் காமதேவன் தனது வில் கொண்டு சப்தம் செய்கிறான். அவனது வில்லின் ஓசையானது, உன் இனிமையான நாதத்தின் மூலம் தள்ளப்பட்டுவிடுகிறது.

405. ரங்காதீசே ஸஹ கமலயா ஸாதரம் யாயஜூகை:
ஸாரம் திவ்யம் ஸவநஹ விஷாம் போக்தும் ஆஹூயமாநே
நேதீயோபி: நிகமவசஸாம் நித்யம் அம்ஹ: ப்ரதீபை:
ப்ரத்யாலாபம் திசதி பவதீ பாதுகே சிஞ்ஜிதை: ஸ்வை:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! யாகம் இயற்றுபவர்கள் அந்த வேள்வியின் அவிர்பாகத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீரங்கராச்சியாருடன் கூடியுள்ளவனான ஸ்ரீரங்கநாதனை அழைக்கின்றனர். அப்போது நீ செய்வது என்ன? அனைத்து வேதங்களுக்கும் ஒப்பாக உள்ளவையும், கேட்ட மாத்திரத்தில் அனைத்துப் பாவங்களையும் தொலைப்பதாக உள்ளதும் ஆகிய உனது இனிய நாதம் மூலம், அவர்களிடம், “இதோ! நம்பெருமாள் வந்து விட்டான்”, என்று அறிவிப்பதாக உள்ளாய்.

406. உபாஸ்ய நூநம் மணிபாதுகே த்வம்
ரங்கேச பாதாம்புஜ ராஜஹம்ஸீம்
பத்யு: ப்ரஜாநாம் அலபந்த பூர்வம்
மஞ்ஜுஸ்வநம் வாஹந ராஜஹம்ஸா:

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! நம்பெருமாளின் திருவடிகளில் நீ ராஜஹம்ஸமாகத் திகழ்கிறாய். உனது இனிமையான நாதத்தின் மூலம், உன்னை உபாஸனம் செய்த ப்ரம்மனின் அன்னங்கள், அழகான குரலைப் பெற்றன போலும்.

407. அநாதிமாயா ரஜநீவசேந
ப்ரஸ்வாபபாஜாம் ப்ரதிபோதநார்ஹம்
பச்யாமி நித்யாதி வாஸரஸ்ய
ப்ரபாதநாந்தீமிவ பாதுகே த்வாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தொடக்கம் என்பதே இல்லாத மாயை போன்றும், எப்போதும் இரவு என்னும்படியாக உள்ளதும் ஆகிய ஸம்ஸாரத்தில் துன்பம் அடைந்தபடி அனைவரும் உள்ளனர். இவர்கள் விழித்துக் கொள்ள வேண்டிய காலை நேரம் என்னும் மோக்ஷத்தை அறிவிக்கும் சுப்ரபாதம் போன்று உனது நாதம் உள்ளது.

408. ச்ருணோது ரங்காதிபதி: ப்ரஜாநாம்
ஆர்த்தத்வநீம் க்வாபி ஸமுஜ்ஜிஹாநம்
இதீவ மத்வா மணிபாதுகே த்வம்
மந்த ப்ரசாரை: ம்ருது சிஞ்ஜிதாஸி

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! நம்பெருமாளை நீ உன் மீது எழுந்தருளப் பண்ணிக்கொண்டு செல்கிறாய். அப்போது ஒரு சிலர் மிகுந்த வருத்தத்தில் இருந்தபடி நம்பெருமாளிடம் தங்கள் குறைகளைக் கூறக்கூடும். அவர்கள் கூறுவது அவன் செவிகளில் விழாமல் போய்விடுமோ என்று எண்ணி, மெதுவாக சப்தம் எழுப்பியபடி நீ செல்கிறாய்.

409. அந்தே மம ஆர்த்திம் சமயிஷ்யதஸ்தாம்
அக்ரே ஸராணி ஆபதத: முராரே:
ச்ரமோபபந்ந: ச்ருணுயாம் பவத்யா:
சீதாநி பாதாவநி சிஞ்ஜாதாநி

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது அந்திம காலத்தில் மிகவும் களைப்புடன் நான் உள்ளபோது, அந்தத் துன்பத்தை நீக்க நம்பெருமாள் மிகவும் வேகமாக ஓடிவருவான். அப்போது அவனுக்கும் முன்பாக ஓடிவரும் உனது இனிமையான நாதத்தை நான் கேட்பேனாக.

410. ஸ்வாதூநி ரங்கேச்வர பாதரக்ஷே
ச்ரோத்ரை: பிபந்தஸ்தவ சிஞ்ஜிதாநி
பசந்தி அவித்யா உபசிதாந் அசேஷாந்
அந்தர்கதாந் ஆத்மவித: கஷாயாந்

**பொருள் -** ஸ்ரீரங்கநதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! சிறந்த ருசியுடன் கூடிய உன்னுடைய மருந்து போன்ற நாதங்களை, தங்களை முழுவதுமாக உணர்த்தவர்கள் தங்கள் காதுகளால் பருகுகின்றனர். இதனால் தங்களது அறியாமையால் உள்ளே வளர்ந்துள்ள உலக விஷயங்களின் மீதுள்ள ஆசை என்பதை அவர்கள் எரித்து விடுகின்றனர்.

411. அவைமி ரங்காதிபதே: ஸகாசாத்
அவேக்ஷமாணேஷு ஜநேஷு ரக்ஷாம்
உதார நாதாம் மணிபாதுகே த்வாம்
ஓம் இதி அநுஜ்ஞாக்ஷரம் உத்கிரந்தீம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! மிகவும் கம்பீரமான முறையில் நம்பெருமாள் உன்னைச் சாற்றிக் கொண்டு எழுந்தருளுகிறான். அப்போது ஏற்படும் உனது சப்தம் எவ்விதம் உள்ளது தெரியுமா? தங்கள் துன்பத்தை நீக்க வேண்டும் என்று நம்பெருமாளிடம் வேண்டுபவர்களிடம், “அப்படியே ஆகட்டும்”, எனக் கூறுவது போல் உள்ளன.

412. மதுத்விஷ: ஸ்வைர விஹாரஹேது:
மஞ்ஜுஸ்வநாந் சிக்ஷயஸீவ மாத:
பர்யந்த பாஜோர் மணிபாதரக்ஷே
பத்மாதரண்யோர் மணிநூபுராணி

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! தாயே! மது என்ற அரக்கனின் சத்ருவாகிய நம்பெருமாளின் இருபக்கமும் அமர்ந்துள்ள ஸ்ரீதேவி மற்றும் பூதேவி ஆகிய இருவரின் தண்டைகள் இனிமையான ஒலி எழுப்புகின்றன. நம்பெருமாளுடன் உன் விருப்பப்படி ஸஞ்சாரம் செய்யும் நீ, உனது இனிய நாதத்தை அந்தத் தண்டைகளுக்குக் கற்றுக் கொடுத்தாய் போலும்.

413. ப்ராஸ்தாநிகேஷு ஸம்யேஷு ஸமாகதேஷு
ப்ராப்தா பதம் பரிசிதம் த்விஜபுங்கவேந
புஷ்ணாஸி ரங்கந்ருபதே: மணிபாதுகே த்வம்
புண்யாஹ கோஷம் இவ கர்ப்பமணி ப்ரணாதை:

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்யவேண்டிய காலகட்டங்களில், பறவைகளில் உயர்ந்தவனான கருடனால் அடிக்கடி அடைப்படும் திருவடிகளை நீ அடைகிறாய். உன்னுள் இருக்கும் இரத்தினக்கற்கள் அப்போது இனிமையான நாதம் ஏற்படுத்துகின்றன. இதனைக் காணும்போது க்ஷேமம் அளிக்கவல்ல மந்திரங்களை நீ கூறுவது போன்று உள்ளது.

414. ஆர்த்தத்வநே: உசிதம் உத்தரம் அந்தகாலே
கர்ணேஷு மஞ்ஜுநிநதேந கரிஷ்யஸீதி
வாஸம் பஜந்தி க்ருதிநோ மணிபாதரக்ஷே
புண்யேஷு தேவி புளிநேஷு மருத்வ்ருதாயா:

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகையே! தங்களது இறுதி காலத்தில் பெரியவர்கள், மிகவும் தூய்மையான காவேரியின் மணல்கள் நிறைந்த ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்கின்றனர். ஏன் தெரியுமா? தங்களது முடிவு காலத்தில் ஏற்படவுள்ள வேதனை காரணமாக எழுப்பும் துன்ப ஒலிகளை, உன்னுடைய செவிகளில் உள்வாங்கி, அவர்களுக்கான மறுமொழியை உனது நாதத்தினால் அளிப்பாய் என்பதால் ஆகும்.

415. தூத்யே பலேர்விமதநே சகடஸ்ய பங்கே
யாத்ரா உத்ஸவேஷு ச விபோ: ப்ரதிபந்நஸங்க்யா
வீராயிதாநி பிருதோபஹிதாநி நூநம்
மஞ்ஜுஸ்வனை: ப்ரதயஸே மணிபாதுகே த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் பாண்டவர்களுக்காகத் தூது சென்றான்; மஹாபலிச்சக்ரவர்த்தியின் கர்வத்தை அடக்கினான்; சகடாஸுரனை முறித்தான். இப்படியாக அவன் நடந்திய வீரச்செயல்கள் காரணமாக அவனுக்கு ஏற்பட்ட பட்டப்பெயர்களை, அவன் திருவடிகளை விட்டு எப்போதும் பிரியாமல் உள்ள நீ, உனது இனிய நாதங்கள் மூலம் கூறியபடி உள்ளாய் போலும்.

416. ஸ்தோதும் ப்ரவ்ருத்தம் அபி மாம் நிகம ஸ்துதாம் த்வாம்
வ்யாஸஜ்யமாந கரணம் விஷயேஷு அஜஸ்ரம்
அந்தர்மணி த்வநிபி: அச்யுத பாதரக்ஷே
ஸம்போதயஸி அநுகலம் ஸஹஜ அநுகம்பா

**பொருள்** - அடியார்களை நழுவ விடாத ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வேதங்களில் துதிக்கப்பட்ட உன்னை நான் துதிக்கத் தொடங்குகிறேன். ஆயினும் நான் அந்தத் துதிகளில் கவனம் செலுத்தாமல், உலக விஷயங்களில் நாட்டம் கொண்டபடி உள்ளேன். இதனைக் கண்ட நீ, என் மீது இயல்பாகவே தயையுடன் உள்ளவளான நீ, செய்வது என்ன - உன்னுடைய இரத்தினக்கற்களின் இனிமையான நாதம் மூலம் எனது கடமையை நினைவுபடுத்தியப்படி உள்ளாய்.

417. தேவஸ்ய தாநவரிபோ: மணிபாதரக்ஷே
ப்ரஸ்தாந மங்கள விதௌ ப்ரதிபந்த நாதாம்
மா பைஷ்ட ஸாதவ இதி ஸ்வயம் ஆலபந்தீம்
ஜாநே ஜகத் த்ரிதய ரக்ஷண தீக்ஷிதாம் த்வாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அசுரர்களுக்கு சத்ருவாக நம்பெருமாள் உள்ளான். அவனுடைய ஸஞ்சாரம் என்ற சுப செயலின் இனிமையான நாதத்தை நீ அடைகிறாய். மூன்று உலகங்களையும் காப்பதில் நீ உறுதியுடன் உள்ளாய் போலும். அதனால்தான் உனது நாதம் மூலம், "நல்லவர்களே! நீங்கள் அஞ்சவேண்டாம்", என்று கூறுகிறாய் என நான் எண்ணுகிறேன்.

418. ஸ்வச்சந்த விப்ரமகதௌ மணிபாதுகே த்வம்
பாதாரவிந்தம் அதிம்கம்ய பரஸ்ய பும்ஸ:
ஜாதஸ்வநா ப்ரதிபதம் ஜபஸீவ ஸூக்தம்
வித்ராவணம் கிமபி வைரிவரூதிநீநாம்

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! நம்பெருமாள் தனது விருப்பத்தின்படி ஸஞ்சாரம் என்ற விளையாட்டைச் செய்தபடி உள்ளான். நீ அப்போது அவனது திருவடிகளை அடைந்து, இனிமையான நாதம் உண்டாகப் பெற்றாய். அவன் அருகில் வர முயற்சிக்கும் அவனது சத்ரு சேனைகளை, அவன் அருகில் வர விடாமல், உனது நாதம் மூலம் ஏதோ ஒரு மந்திரத்தை ஜபிக்கிறாய் போலும்.

419. ரக்ஷார்த்தம் ஆச்ரித ஜநஸ்ய ஸமுஜ்ஜிஹாநே
ரங்கேச்வரே சரதி சேஷபுஜங்க தல்பாத்
நாதாஸ்தவ ச்ருதிஸுகா மணிபாதரக்ஷே
ப்ரஸ்தாந சங்கநி நதாத் ப்ரதமே பவந்தி

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் சரத் காலத்தின்போது (ஐப்பசி மாதம்) தன்னை அண்டியவர்களைக் காப்பதற்காக ஆதிசேஷன் என்ற படுக்கையை விட்டு எழுகிறான். அப்போது அனைவரின் காதுகளுக்கும் இனிமையாக உள்ள உனது நாதங்கள், அவனது புறப்பாடு நேரத்தில் ஊதப்படும் சங்கின் ஒலியை விட முந்தியதாக ஒலிக்கின்றன.

420. நித்யம் பதாம்புருஹயோ: இஹ கோபிகாம் த்வாம்
கோபீஜநப்ரியதமோ மணிபாதரக்ஷே
ஸம்பந்ந கோஷ விபவாம் கதிபி: நிஜாபி:
ப்ரீத்யேவ ந த்யஜதி ரங்கஸமாச்ரிதோபி

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! கோபிகைகளுக்கு மிகவும் ப்ரியமானவனாகிய நம்பெருமாள், தனது ஸஞ்சாரங்கள் முடிந்து ஸ்ரீரங்க விமானத்தை அடைந்த பின்னரும் உன்னை விடுவதில்லை. மிகவும் இனிமையான நாதம் கொண்ட உன்னை அவன் கோபிகை என்றே கருதியுள்ளான் போலும்.

421. ப்ராய: பதாவநி விபோ: ப்ரணதார்த்தி ஹந்து:
ப்ரஸ்தாந மங்கள விதௌ ப்ரதம உத்யதாநி
த்வத் சிஞ்ஜிதாநி ஸபதி ஸ்வயம் ஆரபந்தே
காலோசிதாந் கனக காஹள சங்கநாதான்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தன்னை வணங்கி நிற்பவர்களின் துயரம் அனைத்தையும் நீக்குபவனாகிய நம்பெருமாள் ஸஞ்சாரம் செய்யத் தயாராகிறான். அந்த சுபநேரத்தை குறிக்கும் வகையில் உனது இனிமையான நாதங்கள் எழுகின்றன. இதனைக் கேட்ட எக்காளம், சங்கு ஆகிய வாத்தியங்கள் ஒலிக்கத் தொடங்குகின்றன.

422. ஆம்ரேடித ச்ருதிகணை: நிநதை: மணீநாம்
ஆம்நாய வேத்யம் அனுபாவம் அபங்குரம் தே
உத்காஸ்யதம் நியதம் இச்சஸி ஸாமகாநாம்
காந ப்ரதாநம் இவ சௌரி பதாவநி த்வம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வேதங்களால் அறியக்கூடிய உன்னுடைய மேன்மையைக் குறித்து சாமவேதம் அறிந்தவர்கள் கூறியபடி உள்ளனர். நீ அவர்களின் வேதத்திற்கு ஏற்ப, அவர்களுக்கு மேலும் சங்கீதம் கற்றுக் கொடுக்க விரும்புகிறாய் போலும். அதனால்தான் உனது இரத்தினக்கற்கள் கொண்டு இனிய ஒலி எழுப்பியபடி உள்ளாய் போலும்.

423. ரத்யாஸு ரங்கந்ருபதே மணிபாதரக்ஷே
த்வத் கர்ப்ப ரத்ந ஜநித: மதுர: ப்ரணாத:
ஸந்தர்சந உத்ஸுக தியாம் புரஸுந்தரீணாம்
ஸம்பத்யதே ச்ரவணமோஹன மந்த்ரகோஷ:

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! நம்பெருமாள் உன்னைச் சாற்றிக் கொண்டு திருவரங்கத்தின் திருவீதிகளில் ஸஞ்சாரம் செய்கிறான். அப்போது உன்னுள்ளே இருக்கும் இரத்தினக்கற்கள் இனிமையான நாதம் செய்கின்றன. இதனைக் கேட்ட அங்கிருந்த பெண்களின் காதுகள், எதிரில் நிற்கும் நம்பெருமாளையும் மறந்து, அந்தச் சப்தத்தில் மயங்கி நின்றன.

424. ஆகஸ்மிகேஷு ஸமயேஷு அபவார்ய ப்ருத்யாந்
அந்த:புரம் விசதி ரங்கபதௌ ஸலீலம்
வ்யாமோஹநேந பவதீ ஸுத்ருசாம் அதீதே
மஞ்ஜுஸ்வநேந மதநோபநிஷத் ரஹஸ்யம்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! திருவீதிகளில் ஸஞ்சாரமாகச் சென்று கொண்டிருக்கும் நம்பெருமாள் திடீரென அதனை நிறுத்திவிட்டு, தனது அந்தப்புரத்தில் நுழையக்கூடும். அந்த நேரத்தில் அவன் அவ்வாறு வருவதை, நீ முன்கூட்டியே உனது

நாதந்தினால் அறிவிக்கிறாய். இதனால் அங்குள்ள பிராட்டிகளுக்கு மன்மத சாஸ்த்ரங்களை ஓதி, அவர்களை மயங்க வைக்கிறாய் போலும்.

425. யாத்ரா விஹார ஸமயேஷு ஸமுத்திதம் தே
ரங்காதிபஸ்ய சரணாவநி மஞ்ஜுநாதம்
பர்யாகுல இந்த்ரிய ம்ருக க்ரஹணாய பும்ஸாம்
ஸம்மோஹநம் சபரகீதம் இவ ப்ரதீம:

**பொருள்** - ஸ்ரீரங்ககநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மான்களைப் பிடிப்பதற்காகக் கானகத்தில் வேடர்கள் இனிய இசையை எழுப்புவது வழக்கம் ஆகும். இது போன்று நம்பெருமாள் வீதிகளில் ஸஞ்சாரம் வரும்போது நீ செய்வது என்ன? எங்கள் போன்றவர்களின் புலன்கள் என்னும் மானைப் பிடிக்க, உனது நாதம் என்னும் இனிய இசையை எழுப்பியபடி வருகிறாய் என்றே நாங்கள் கருதுகிறோம்.

426. ப்ராயேண ஸஹ்ய துஹிது: நதராஜ கன்யா:
ஜாமாது: ஆகமந ஸூசநம் ஈஹமாநா
மஞ்ஜுப்ரணாத ஸுபகை: மணிபாதுகே த்வாம்
அந்தர்யுதாம் அக்ருத யௌதக ரத்ந கண்டை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! காவேரியின் மாப்பிள்ளையான நம்பெருமாள், காவேரியின் கரைக்கு வருவதை, காவேரிக்கு அறிவிக்க ஸ்ரீரங்கநாச்சியார் விரும்பினாள். இதனால் தனக்குச் சீதனமாக வந்த உயர்ந்த இரத்தினக் கற்கள் பலவற்றையும் உனது குமிழுக்குள் வைத்து, நீ வரும்போது இனிமையான நாதம் ஏற்படும்படிச் செய்தாள் போலும்.

427. நித்யம் விஹாரஸம்யே நிகம அநுயாதை:
விக்ஷேப தாண்டவித கர்ப்பமணி ப்ரஸூதை:
நாதை: ஸ்வயம் நரகமர்த்தந பாதரக்ஷே
நாத அவஸாந நிலயம் வதஸீவ நாதம்

**பொருள்** - நரகாசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸஞ்சார காலங்களில் நம்பெருமாள் வேதங்கள் தன்னைப் பின் தொடர வருகிறான். அந்த வேதங்கள் மூலமாக, உனது உள்ளே இருக்கும் இரத்தினங்கள் அசைகின்றன. அப்போது எழும் இனிய நாதம் மூலம், ஸ்ரீரங்கநாதன் அந்த நாதத்தின் முடிவில் உள்ளவன் என்று கூறுகிறாய் போலும்.

428. ஸாதாரணேஷு யுவயோர் மணிபாதரக்ஷே
தேவஸ்ய தாநவ ரிபோ: த்ரிஷு விக்ரமேஷு
அத்யாபி சிஞ்ஜிதமிஷாத் அநுவர்த்தமாநம்
ந்யூநாதிகத்வ விஷயம் கலஹம் ப்ரதீம:

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உங்கள் இரண்டு பேருக்கும் (இரண்டு பாதுகைகள்) அசுரர்களின் சத்ருவான ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகள் பொதுவாகவே உள்ளன. அப்படி இருந்தும், அவன் த்ரிவிக்ரமனாக உயர்ந்தபோது வைத்த மூன்று அடிகள் விஷயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு காரணமாக, உங்கள் இருவருக்கும் அடிக்கடி சச்சரவு உள்ளது போலும். இதனையே உனது நாதமாக நாங்கள் எண்ணியபடி உள்ளோம் .

429. ப்ராய: பதாவநி விபோ: ப்ரணய அபராதே
மாந க்ரஹம் சமயிதும் மஹிஷீ ஜநாநாம்
உச்சாரயந்தி நிநதை: தவ கர்ப்பரத்நாநி
உத்காதம் அக்ஷரம் உபாச்ரய பாரதீநாம்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நம்பெருமாள் ஸ்ரீரங்கநாச்சியாரிடம் சரியாகப் பழகாமல் இருந்தால் அவளுக்குக் கோபம் வந்துவிடுகிறது. இந்தக் கோபம் என்னும் பிசாசை எது விரட்டுகிறது? உன்னுடையை இனிய நாதங்களே ஆகும். எப்படி? அந்த நாதங்கள் மூலம், உன்னையே அண்டியுள்ள வேதங்களின் தொடக்க எழுத்தான ப்ரணவம் உச்சரிக்கப்படுகிறது. இதனாலேயே அந்தப் பிசாசு ஓடி விடுகிறது.

430. அந்த: சரேஷு பவநேஷு ஜுஷ்தேஷு அபிஜ்ஞா:
ப்ருத்யங்முகீம் பரிணமய்ய மந:ப்ரவ்ருத்திம்
ஆஸ்வாதயந்தி ஸரஸம் மணிபாதரக்ஷே
நாத அவஸாந ஸமயே பவதீ நிநாதம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! யோகம் செய்பவர்கள் தங்களுக்குள் இருக்கும் ப்ராணவாயுவை வசப்படுத்திய பின்னர், அந்தப் ப்ராணவாயு இயங்கும் சப்தமானது சற்றே நிற்கிறது. அந்த நேரத்தில் அவர்கள் உனது இனிய நாதத்தைக் கேட்டு மிகவும் அனுபவித்தபடி உள்ளனர்.

431. தாக்ஷிண்யம் அத்ர நியதம் நியதா ஸுதாஸ்மிந்
இதி உத்கத: நியதம் அச்யுத பாதரக்ஷே
ப்ரத்யேக ஸம்ச்ரித பதஸ்துதயே பவத்யோ
ஸங்கர்ஷ வாத இவ மத்ய மணிப்ரணாத:

**பொருள் -** அடியார்களை நழுவவிடாத ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உங்களுக்குள் இருக்கும் இரத்தினக்கற்கள் ஒன்றுடன் மோதிக் கொள்ளும்போது எழும் நாதம் எவ்விதம் உள்ளது என்று தெரியுமா? நம்பெருமாளின் இடது திருவடியில் அமிர்தம் உள்ளது என்று இடது பாதுகையும், வலது திருவடியில் அளவு கடந்த தாக்ஷிண்யம் (வேண்டுவதை மறுக்க இயலாத தன்மை) உள்ளது என்று வலது பாதுகையும் கூறி, போட்டி இடுவது போன்று உள்ளது.

432. ஸஞ்சார கேளி கலஹாயித கர்ப்ப ரத்நா
ஸாம்ஸித்திகம் ஸகல ஜந்துஷு ஸார்வபௌமம்
ரக்ஷார்த்திநாம் ப்ரதயஸீவ பதாவநி த்வம்
ரங்கேச்வரஸ்ய நிரவக்ரஹம் ஆந்ருசம்ஸ்யம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸஞ்சாரம் என்றும் விளையாட்டு மூலம் தன்னுள் இருக்கும் இரத்தினக்கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதும்படியாக , இவ்விதம் அந்தக் கற்களை உன்னுள் இயற்கையாக வைத்துள்ளவளே! இந்தச் சப்தம் மூலம் – அனைவரும் அறிந்ததும், தடங்கல் இல்லாமல் உள்ளதும், அனைத்து உயிர்களிடத்தில் வெளிப்படுவதும் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் கருணையை, அனைவருக்கும் கூறுகிறாய் போலும் .

433. ப்ராப்தும் பரம் புரிசயம் புருஷம் முநீநாம்
அப்யஸ்யதாம் அநுதினம் ப்ரணவம் த்ரிமாத்ரம்
ஸ்ரீரங்கநாஜ சரணாவநி சிஞ்ஜிதம் தே
சங்கே ஸமுந்நயன ஸாம விசேஷ கோஷம்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய இனிமையான நாதம் எவ்விதம் உள்ளது என்றால் - அனைவரிலும் உயர்ந்தவனாகவும், நம் இதயத்தில் அந்தர்யாமியாக உள்ளவனும் ஆகிய ஸ்ரீரங்கநாதனை அடைய மூன்று மாத்திரைகள் அளவுள்ள ப்ரணவத்தை அன்றாடம் ஜபிக்கிறார்கள் அல்லவா, அந்த யோகிகளை அவனிடம் அழைத்துப் போகும் ஸாமங்களின் இனிய நாதமாக உள்ளது என்று நான் எண்ணுகிறேன்.

434. நித்யம் ஸமாஹிததியாம் உபதர்சயந்தீ
நாகேசயம் கிமபி தாம் நிஜ ஊர்த்வபாகே
ஹ்ருத் கர்மணிகாம் அநுகதா மணிபாதுகே த்வம்
மஞ்ஜுஸ்வநா ஸ்புரஸி வாக் ப்ரமரீ பரேவ

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மற்ற விஷயங்களில் தங்கள் புத்தியைத் திருப்பாமல், தங்கள் வசப்பட்டுள்ள புத்தியுடன் உள்ளவர்களுக்கு நீ செய்வது என்ன? அவர்களது இதயத்தின் நடுவில் உள்ள ஹ்ருதய கமலத்தில், ஆதிசேஷன் மீது சயனித்துள்ளபடி இருக்கும் தேஜஸ்ஸான பெரியபெருமாளை, உன் மீது அவன் உள்ளபடி காண்பிக்கிறாய். இப்படியாக நீ வேதங்கள் என்னும் வாக்கை இடைவிடாமல் ஒலிக்கின்ற பெண்வண்டு போன்றுள்ளாய்.

435. மாநேஷு தானவ ரிபோ: மணிபாதரக்ஷே
த்வாம் ஆச்ரிதேஷு நிகமேஷு அவதீரிதேஷு
மஞ்ஜு ஸ்வநை: வதஸி மா ஏவம் இதி இவ மாத:
வேலாம் விலங்கயிஷத: மநுஜாந் நிரோத்தும்

**பொருள்** – தாயே! அசுரர்களின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இனிமையான ஒலியைக் கேட்கும் ஒரு சிலர், ப்ரமாணங்களாக உள்ள வேதங்களையே ஒதுக்க நினைக்கின்றனர். இப்படியாகக் கட்டுப்பாட்டை மீறும் அவர்களை தடுப்பதற்காக, உன்னுடைய இனிமையான நாதம் மூலம், “இது போன்று செய்தல் கூடாது”, என்று உணர்த்துகிறாய் போலும்.

436. க்ரந்தத்ஸு காதர தயா கரண வ்யபாயே
ரங்க உபசல்ய சயிதேஷு ஜநேஷு அலக்ஷ்யம்
ஆஸீதஸி த்வரிதம் அஸ்கலித அநுகம்பா
மாதேவ மஞ்ஜு நிநதா மணிபாதுகே த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! திருவரங்கத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள், தங்களது இந்திரியங்கள் உடலை விட்டு நீங்கும் காலத்தில், பயம் காரணமாக அழக்கூடும். அப்போது என்றும் தவறாத தயை குணம் உடைய நீ, அவர்களது தாய் போன்று, இனிமையான ஒலியுடன் கூடியவளாக மிகவும் வேகமாக, அவர்கள் அருகில் ஓடிவருகிறாய்.

437. பாஸ்வத் ஸுவர்ண வபுஷாம் மணிபாதரக்ஷே
பத்மா ஸஹாய பதபத்ம விபூஷணாநாம்
மஞ்ஜீர சிஞ்ஜித விகல்பித மஞ்ஜுநாதா
மஞ்ஜூஷிகேவ பவதீ நிகமாந்த வாசாம்

**பொருள் -** உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் ஸ்வர்ணமயமாக உள்ளன. ஸ்ரீரங்க நாச்சியாரின் நாயகனான அவனது தாமரை போன்ற மென்மையான அந்த திருவடிகளுக்கு ஆபரணங்கள் போன்று வேதாந்த வாக்கியங்கள் உள்ளன. அப்படிப்பட்ட வேதாந்த வாக்கியங்களை வைக்கும் பெட்டி போன்று நீ உள்ளாய். இப்படிப்பட்ட உன்னுடைய இனிமையான நாதம், அவனது திருவடிச் சிலம்பின் தண்டை போன்று இனிமையாக ஒலிக்கின்றன.

438. ரங்கேச பாதகமலாத் த்வத் அதீந வ்ருத்தே:
அந்யேஷு கேஷுசித் அலக்ஷ்யம் அநந்யவேத்யம்
ஆம்நாய கூடம் அபஹிர் மணிபி: க்வணத்பி:
நேதீலஸாம் ப்ரதயஸிவ நிஜாநுபாவம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய பெருமைகள் என்பது உனக்கு, உன்னுடன் மிகுந்த நட்புடன் உள்ள ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளுக்கு மட்டுமே தெரியும். இதனை மற்ற எந்த வஸ்துக்களாலும் அறிய இயலாது. இதனை யாரும் காண இயலாதபடி, வேதங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட உனது பெருமையை ஸ்ரீரங்கநாதனிடம் தலைவணங்கி நிற்பவர்கள் தலையில் உன்னை வைக்கும்போது, உன் உள்ளே இருக்கின்ற இரத்தினக்கற்களின் நாதம் மூலமாக அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறாய் போலும்.

439. கால உபபந்ந கரண அத்யய நிர்விசேஷ்டே
ஜாத ச்ரமே மயீ ஜநார்த்தன பாதரக்ஷே
ஆச்வாஸநய புரத: ப்ரஸரந்து மாத:
வார்த்தா ஹரா: தவ ரவா: சமித ஆர்த்தய: மே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! என்னுடைய அந்திம காலத்தில் புலன்களின் தளர்ச்சி காரணமாக நான் அசைவில்லாமல் துன்பத்துடன் கிடக்கக்கூடும். அப்போது என்னை சமாதாநம் செய்வதற்காக நீ வருவாய். ஆனால் உனக்கு முன்பாக உன்னுடன் இனிமையான சப்தங்கள், "இதோ! ஸ்ரீரங்கநாதனைப் பாதுகைகள் கொண்டு வருகின்றன", என்று எனக்கு ஆறுதலாக முன்னே கேட்கவேண்டும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

440. ஸம்ரக்ஷணாய ஸமயே ஜகதாம் த்ரயாணாம்
யாத்ராஸு ரங்கந்ருபதே: உபதஸ்துஷீஷு
ஸம்பத்ஸ்யதே ச்ருதி ஸுகை: மணிபாதரக்ஷே
மங்கல்ய ஸூக்தி: அநகா தவ மஞ்ஜுநாதை:

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளே! இந்த மூன்று உலகங்களையும் காப்பதற்காக ஸ்ரீரங்கநாதன் அவ்வப்போது, ஆங்காங்கு ப்ரயாணம் செய்கிறான். அப்போது வேதங்களை விட இனிமையாக உள்ள உன்னுடைய நாதங்கள் எழுகின்றன. இவை, தோஷங்கள் இல்லாத சுப சகுனத்தை விளக்குகின்ற சொற்களாக உள்ளன.

441. கர்போபலை: கமன வேகவசாத் விலோலை:
வாசாலிதா மதுபிதோ மணிபாதுகே த்வம்
ப்ரஸ்தௌஷி பாவித தியாம் பதி தேவயாநே
ப்ரஸ்தாந மங்களம் ம்ருதங்க விசேஷ கோஷம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் அழகான நடையின் வேகத்தால் உன் உள்ளே இருக்கின்ற இரத்தினக் கற்கள், அங்கும் இங்கும் அசைந்து, ஓசை எழுப்புகின்றன. இந்த ஓசை எப்படி உள்ளது என்றால் – ஸ்ரீரங்கநாதனிடம் கொண்டு செல்லும் அர்ச்சிராதி மார்க்கத்தில் புத்தியை வைத்துள்ளவர்கள், அந்த வழியில் கிளம்புவதற்கான சிறந்த மிருதங்கத்தின் ஓசையை நீ உண்டாக்குவது போல் உள்ளது.

442. பர்யங்கம் ஆச்ரிதவதோ மணிபாதுகே த்வம்
பாதம் விஹாய பரிகல்பித மௌந முத்ரா
ச்ரோதும் ப்ரபோ: அவஸரம் திசஸீவ மாத:
நாபீ ஸரோஜ சயித அர்ப்ப: ஸாமகீதிம்

**பொருள் -** உயர்ந்த கற்கள் கொண்டு பதிக்கப்பட்ட பாதுகை தாயே! சயனிப்பதற்கான கட்டிலை அடைந்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை விட்டு, பேசாமல் உள்ள நிலையை நீ அடைகிறாய். ஏன் என்றால் ஸ்ரீரங்கநாதனின் திருநாபியில் உள்ள தாமரையில் படுத்துள்ள அவனது குழந்தையான நான்முகனின் ஸாமகானத்தை ஸ்ரீரங்கநாதன் கேட்பதற்கான சந்தர்ப்பத்தை நீ அளிக்கிறாய் போலும்.

443. போகாய தேவி பவதீ மணிபாதரக்ஷே
 பத்மா ஸஹாய அதிரோப்ய புஜங்க தல்பே
 விச்வஸ்ய குப்திம் அதிக்ருத்ய விஹார ஹீநா
 வாசம்யமா கிமபி சிந்தயதீவ கார்யம்

**பொருள் -** இரத்தினமயமான பாதுகா தேவியே! தாமரையில் உதித்த ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனை, ஆதிசேஷன் என்ற படுக்கையில் சுகமாக சயனிப்பதற்காக எழுந்தருளச் செய்தாய். அதன் பின் மௌனமாக இருந்து கொண்டு, இந்த உலகத்தை எப்படிக் காப்பது என்று, ஏதோ ஒரு செயலைப் பற்றி எண்ணுகிறாய் போலும்.

444. நித்ய ப்ரபோத ஸுபகே புருஷே பரஸ்மிந்
 நித்ராம் உபேயுஷி தத் ஏக விஹாரசீலா
 மஞ்ஜு ஸ்வநம் விஜஹதீ மணிபாதுகே த்வம்
 ஸம்வேசம் இச்சஸி பரம் சரண அந்திகஸ்தா

**பொருள் -** இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! எப்போதும் விழித்தபடி உள்ள உயர்ந்தவனான, பரம்பொருளான ஸ்ரீரங்கநாதன் உறங்கும்போது, நீ செய்வது என்னவென்றால் - அவன் ஸஞ்சாரம் செய்யும்போது அந்த நடைக்கு ஏற்றாப்போல் இனிமையான நாதம் எழுப்பி நிற்பவள், அவனது திருவடியின் அருகில் நின்று உறங்குவதையும் ரசிக்கிறாய் போலும்.

445. லாஸ்யம் விஹாய கிமபி ஸிதிதம் ஆச்ரயந்தீ
 ரங்கேச்வரேண சஹிதா மணிமண்டபேஷு
 மஞ்ஜு ஸ்வநேஷு விரதேஷு அபி விச்வம் ஏதத்
 மௌநேந ஹந்த பவதீ முகரீ கரோதி

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடன் கூடியவளாக, அவனது அழகான நடை என்னும் நாட்டியத்தைக் கொண்டவளாக நீ செல்கிறாய். அப்போது உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட மண்டபங்களில் ஸ்ரீரங்கநாதன் சற்றே நிற்கிறான். அந்த நேரத்தில் இனிமையான ஓசைகள் எழுகின்றன. அந்த ஓசைகள் ஓய்ந்த பின்னர், சில நொடிகள் உண்டாகும் மௌனத்தினால், உலகத்தினரை அதிகமாகப் பேச வைக்கிறாய் போலும். என்ன வியப்பு!

**விளக்கம் -** நம்பெருமாள் பெரியகோவிலில் ஸஞ்சாரம் செய்யும்போது, ஆங்காங்குள்ள மண்டபங்களில் சற்று நிற்கிறான். நின்ற வேகத்தில், பாதுகைகளின் உள்ளே இருக்கின்ற

இரத்தினக்கற்கள் பலத்த ஒலியை எழுப்பி அடங்குகின்றன. அப்போது அந்த மண்டபத்தைச் சுற்றி நிற்கின்ற மக்கள், அரங்கனையும் பாதுகைகளையும் வெகுவாகப் புகழ்ந்து கூறுகின்றனர்.

446. விஸ்மாபிதேவ பவதீ மணிபாதரக்ஷே
வைரோசநே: விதரணேந ததாவிதேந
ஏதாவதா அலமிதி தேவி க்ருஹீத பாதா
நாதம் த்ரிவிக்ரமம் அவாரய தேவ நாதை:

**பொருள் –** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகாதேவியே! விரோசனன் என்பவனின் புத்திரனாகிய மஹாபலியின் தாராள குணம் கண்டு நீ வியப்பு அடைந்தாய். மூன்று அடிகளால் உலகம் அளந்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை நீ பிடித்துக் கொண்டு, உனது நாதத்தால், "போதும் போதும்", என்றாய்.

**விளக்கம்** - மூன்றாவது அடியால் மஹாபலியின் தலையில் திருவடியை வைத்து அழுத்தியவுடன், இத்தனை தாராள குணம் படைத்தவனை மேலும் துன்புறுத்தக்கூடாது என்று எண்ணி, ஸ்ரீரங்கநாதனின் திருவடியைப் பாதுகை தடுத்தது என்று கருத்து.

447. ஸாமாநி ரங்கந்ருபதி: ஸரஸம் ச கீதம்
லீலா கதேஷு விநிவாரயதி ஸ்வதந்த்ர:
ச்ரோதும் தவ ச்ருதி ஸுகாநி விசேஷவேதீ
மஞ்ஜூநி காஞ்சந பதாவநி சிஞ்ஜிதாநி

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! அனைத்து வஸ்துக்களின் தன்மைகளை அறிந்துள்ள ஸ்ரீரங்கராஜன், தனது விருப்பப்படி உற்சாகமாக ஸஞ்சாரம் செய்கிறான். அப்போது தனது பின்னே கேட்கின்ற ரசம் நிறைந்த ஸாம கானங்களையும், ஸங்கீதத்தையும் சற்றே நிறுத்துகிறான். ஏன் என்றால் - கேட்பதற்கு இனிமையாகவும், காதுகளுக்கு இன்பம் அளிக்கவல்லதாகவும் இருக்கின்ற உனது இனிமையான நாதம், எங்கும் கேட்பதற்காக ஆகும்.

448. தத்தாருசீம் ப்ரதயதா ருசிராம் ஸ்வரேகாம்
வர்ண அதிகேந மதுஸூதன பாதரக்ஷே
பச்யந்தி சித்தநிகஷே விநிவேச்ய ஸந்தோ
மஞ்ஜு ஸ்வநேந தவ நைகமிகம் ஸுவர்ணம்

**பொருள் -** மது என்று அரக்கனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நன்மை விரும்பும் சாதுக்கள் தங்களது மனதில் வேதங்களால் போற்றப்படும் ஸ்ரீரங்கநாதனையும், உன்னுடைய இனிமையான நாதங்களையும், சாதாரண எழுத்துக்களில் இருந்து மாறுபட்டதான எழுத்துக்கள் கொண்ட வேதங்களையும் மனம் என்னும் உரைகல்லில் வைக்கின்றனர். இப்படிப்பட்ட மனம் என்ற உரைகல்லில், இந்த மூன்றில் எது சிறந்தது என்று ஆராய்ந்து பார்க்கின்றனர். அப்படிப் பார்க்கும்போது உயர்ந்த எழுத்துக்களை விட மாறுபட்டதான வேதங்களைக் காட்டிலும், ஸ்ரீரங்கநாதனைக் காட்டிலும், மாறுபட்ட உனது இனிய நாதத்தையே மிகவும் உயர்ந்ததாகக் கொள்கின்றனர்.

449. முக்தஸ்ய ஹந்த பவதீம் ஸ்துவதோ மம ஏதாநி
ஆகர்ணய நூநம் அயதாயத ஜல்பிதாநி
இத்தம் வத த்வம் இதி சிக்ஷயிதும் ப்ரணாதாந்
மஞ்ஜூந் உதீரயஸீ மாதவ பாதுகே த்வம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியுள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஏதும் அறியாதவனாகிய, முட்டாளாகிய எனது பிழை நிறைந்த சொற்கள் கொண்டு உன்னைத் துதிக்கிறேன். உன்னுடைய இனிமையான நாதங்கள் மூலம் என்னிடம், ”இந்தச் சொற்களை நீ இவ்விதம் கூறுவாயாக”, என்று என்னைத் திருத்தும் பொருட்டு இனிமையான நாதம் எழுப்புகிறாய் போலும்.

450. ஆதௌ ஸஹஸ்ரம் இதி யத் ஸஹஸா மயா உக்தம்
துஷ்டுஷதா நிரவதிம் மஹிம அர்ணவம் தே
ஆம்ரேடயஸி அத கிம் ஏதத் ம்ருஷ்யமாணா
மஞ்ஜு ஸ்வநேந மதுஜித் மணிபாதுகே த்வம்

**பொருள் -** மது என்ற அரக்கனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! முன்பு ஒரு காலத்தில் உன்னைப் பற்றித் துதிக்க ஒப்புக்கொண்டேன். எல்லையற்ற கடல் போன்ற உன்னுடைய பெருமைகளைத் துதிக்க வேண்டும் என்ற எண்ணத்தால், சட்டென்று 1000 ச்லோகம் கொண்டு துதிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். இதனைக் கேட்ட நீ உன்னுடைய இனிமையான நாதம் கொண்டும், “எனது பெருமை ஆயிரம்தானா, ஆயிரம்தானா”, என்று மீண்டும் மீண்டும் கேட்கிறாய் போலும்.

451. பரிமித பரிபர்ஹம் பாதுகே ஸஞ்சரிஷ்ணௌ
த்வயி விநிஹித பாதே லீலயா ரங்கநாதே
நியமயதி விபஞ்சீம் நித்யம் ஏகாந்த ஸேவீ
நிசமயிதும் உதாராந் நாரதஸ்தே நிநாதாந்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் தன்னுடைய திருவடிகளை உன் மீது வைத்து, குடை முதலான தன்னுடைய வஸ்துக்களுடன் உல்லாசமாக ஸஞ்சாரம் செய்கின்றான். நாரதர் எப்போதும் ஸ்ரீரங்கநாதனை, அவன் ஏகாந்தமாக உள்ளபோது சேவிப்பவர் ஆவார். அப்படிப்பட்ட நாரதர், ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சார நேரத்தில், தன்னுடைய வீணையை நிறுத்திவிடுகிறார். இதன் காரணம் - உன்னுடைய கம்பீரமான நாதத்தைக் கேட்பதற்கே ஆகும்.

452. விஹரதி விசிகாயாம் ரங்கநாதே ஸலீலம்
கமந வச விலோலை: கர்ப்பரத்நை: க்வணந்த்யா:
மணி வலய நிநாதை: மஞ்ஜுலை: தே திசந்தி
ப்ரதி வசநம் உதாரம் பாதுகே பௌரநார்ய:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் திருவரங்கத்தின் மாட வீதிகளில் மகிழ்ச்சியுடன் வலம் வருகிறான். அப்போது உன்னுடைய உள்ளே இருக்கின்ற இரத்தினங்கள், “நம்பெருமாள் வந்தான்”, என்று அறிவிப்பதாக ஒலித்தபடி உள்ளன. அப்போது அங்கு ஓடி வரும் திருவரங்கத்தின் பெண்களின் கைகளில் இருக்கின்ற அழகான கற்கள் பதிக்கப்பட்ட வலையல்களின் உள்ளே இருக்கின்ற மணிகள் இன்பமாக ஓசை எழுப்புகின்றன. இவை உன்னிடம், “இதோ வந்தோம்”, என்று மறுமொழி கூறுவது போல் உள்ளன.

453. அநுக்ருத ஸவநீய ஸ்தோத்ர சஸ்த்ராம் நிநாதை:
அநுகத நிகமாம் த்வம் ஆஸ்திதோ ரங்கநாத:
அநிதர விபுதார்ஹம் ஹவ்யம் ஆஸ்வாத இஷ்யந்
விசதி சரணரக்ஷே யஞ்ஜவாடம் த்விஜாநாம்

**பொருள் -** சரணம் அடைவதற்கு ஏற்றதாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மற்ற தேவதைகளுக்கு ஏற்க இயலாத அவிர்பாகத்தைச் சுவைப்பதற்காக, அந்தணர்கள் யாகம் செய்கின்ற இடத்திற்கு ஸ்ரீரங்கநாதன் வருகிறான். அப்படி அவன் வரும்போது, அந்த யாகங்களுக்கு ஏற்ற சஸ்த்ரம் என்னும் மந்த்ரம் ஆகியவை ஒலிப்பது போன்று, உன்னுடைய இனிமையான நாதமும் கேட்கின்றன.

**விளக்கம் -** ஸர்வேச்வரன் யாகங்களின் அளிக்கப்படும் அவிர்பாகத்தை, அங்கு முழங்கப்படும் வேத ஒலிகள் கொண்டு ஏற்கிறான் என்று கருத்து. இங்கு வேத ஒலிகளுடன் பாதுகை உள்ளது. ஆக பாதுகையே வேதம் என்றாகிறது. இப்படிப்பட்ட வேதமாகிய பாதுகையில் நின்று அவிர்பாகத்தை ஏற்கிறான்.

454. சரண கமலம் ஏதத் ரங்கநாதஸ்ய நித்யம்
சரணம் இதி ஜநாநாம் தர்சயந்தீ யதாவத்
ப்ரதிபதம் அபி க்ருத்யம் பாதுகே ஸ்வாது பாவாத்
அநுவததி பரம் தே நாதம் ஆம்நாய பங்க்தி:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற இந்தத் திருவடிகளே அனைவருக்கும் எப்போதும் ரக்ஷகம் என்று மக்களுக்கு வேதங்கள் உணர்த்துகின்றன. ஆனால் இதனை வேதங்கள் தாமாகவே கூறுவது அல்ல. ஸ்ரீரங்கநாதனின் ஒவ்வொரு அடி வைப்பிலும் உண்டாகும் இனிமையான உன்னுடைய நாதம் கொண்டு, இந்தக் கருத்தை நீ கூறுகிறாய். இதனையே வேதங்கள் அனுவாதம் செய்கின்றன.

**விளக்கம் -** ஒருவர் கூறுவதை மீண்டும் கூறுதல் என்பது அனுவாதம் எனப்படும். இங்கு ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளே தஞ்சம் என்பதைப் பாதுகைகள் கூற, அதனையே வேதங்கள் மீண்டும் கூறுகின்றன என்று கருத்து.

455. ரஹித புஜக தல்பே த்வத் ஸநாதே ப்ரஜாநாம்
ப்ரதிபய சமநாய ப்ரஸ்திதே ரங்கநாதே
ப்ரதம உதயமாந: பாதுகே தூர்ய கோஷாத்
ப்ரதிபலதி விநாத: பாஞ்சஜந்யே த்வதீய:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஆதிசேஷன் மீது சயனிப்பதை விடுத்து, மக்களின் பயத்திற்கான காரணங்களை நீக்குவதற்காக ஸ்ரீரங்கநாதன் உன்னுடன் புறப்படுகிறான். அப்போது எழுகின்ற வாத்திய ஒலிகளுக்கும் முன்பாக உன்னுடைய இனிமையான நாதம் எழுகிறது. அந்த நாதம், ஸ்ரீரங்கநாதனின் திருக்கரத்தில் உள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கின் மீதும் எதிரொலிக்கிறது.

456. வகுள தர தநு: த்வம் ஸம்ஹிதாம் யாம் அபச்ய:
ச்ருதி பரிஷதி தஸ்யா: சௌரபம் யோஜயந்தீ
ஹரி சரண ஸரோஜ ஆமோத ஸம்மோதிதாயா:
ப்ரதிபத ரமணீயா: பாதுகே தே நிநாதா:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் எழுகின்ற வாசனை காரணமாக நீ மிகுந்த மகிழ்ச்சி அடைகிறாய். அந்த இன்பம் காரணமாக, உன்னுடைய ஒவ்வொரு அடிவைப்பிலும் இனிமையான நாதங்கள் உண்டாகின்றன. நீ வகுளாபரரான நம்மாழ்வாராக அவதரித்து எந்தத் திருவாய்மொழியை

அருளிச்செய்தாயோ, அவைகளின் சாரத்தையே அல்லவோ வேதங்கள் கூறுகின்றன (திருவாய்மொழி வேதங்களின் சாரம் அல்ல, வேதங்களே திருவாய்மொழியின் சாரங்கள் என்னும் நயம் காண்க).

457. தநு தநய நிஹந்து: ஜைத்ர யாத்ரா அநுகூலே
சரத் உபகமகாலே ஸஹ்யஜாம் ஆபதந்தி
ச்ருதி மதுரம் உதாரம் சிக்ஷிதும் தே நிநாதம்
பரிஹ்ருத நிஜ வாஸா: பாதுகே ராஜஹம்ஸா:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தனு என்பவளின் பிள்ளைகளான அசுரர்களை அழிக்கின்ற வெற்றி ஸஞ்சாரம் செய்வதற்கான சரத் ருது காலம் வந்துவிட்டது. அப்போது உயர்ந்த அன்னப் பறவைகள் தம்முடைய இருப்பிடத்தை விட்டு, காவிரிக்குப் பறந்து வருகின்றன. ஏன் என்றால் - ஸ்ரீரங்கநாதன் உன்னைச் சாற்றிக்கொண்டு நடக்கின்ற அந்த நேரத்தில் எழுகின்ற, இனிமையானதும் கம்பீரமானதும் ஆகிய உன்னுடைய நாதத்தைக் கற்றுக் கொள்வதற்கு ஆகும்.

458. விஹரண ஸமயேஷு ப்ரத்யஹம் ரங்கபர்த்து:
சரண நக மயூகை: ஸோத்தரீயா விசுத்தை:
பரிணமயஸி நாதம் பாதுகே கர்ப்ப ரத்நை:
தமயிதுமிவ சிஷ்யாந் தீர்க்கிகா ராஜஹம்ஸாந்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் அன்றாடம் ஸஞ்சாரம் செய்யும்போது, தூய்மையாக உள்ள அவனது திருவடி நகங்களின் ஒளியானது உன் மீது வெண்மையான மேல் ஆடையைப் போன்று விழுகிறது. இதனைக் காணும்போது ஆசார்யன் போன்று நீ உள்ளாய். யாருக்கு என்றால் – பெரியகோவிலில் இருக்கின்ற திருச்சுற்றுக்களில் காணப்படும் அன்னங்களுக்கு, நல்ல விஷயங்களை உன் உள்ளே இருக்கின்ற இரத்தக்கற்களின் நாதம் மூலம் கற்பிக்கிறாய் போலும்.

459. பரிஷதி விரதாயாம் பாதுகே ரங்கபர்த்து:
பரிஜநம் அபவார்ய ப்ரஸ்திதஸ்ய அவரோதாந்
மணி நிகர ஸமுத்யந் மஞ்ஜுநாத உபதேசாத்
அபிலபஸி யதார்ஹம் நூநம் ஆலோக சப்தம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் தன்னுடைய திருமண்டபத்திலிருந்து புறப்பட்டவுடன் அங்குள்ள ஊழியர்களை உன்னுடைய நாதத்தின் ஒலி மூலம் புறப்பட்டச் சொல்லுகிறான். அதன் பின்னர் அந்தப்புரத்திற்குப் புறப்படும் ஸ்ரீரங்கநாதனுக்கு உனது இரத்தினக்கற்களின் மூலம் எழுகின்ற இனிமையன நாதம் கொண்டு, "ஸ்ரீரங்கநாத விபோ ஜய விஜயீ பவ", என்று கூறுகிறாய்.

460. குரு ஜந நியதம் தத் கோபிகாநாம் ஸஹஸ்ரம்
திநகர தநயாயா: ஸைகதே திவ்யகோப:
வசம் அநயதீ அயத்நாத் வம்ச நாத அநுயாதை:
தவ கலு பதரக்ஷே தாத்ருசை: மஞ்ஜுநாதை:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! யமுனையில் மணல் குன்றுகளில், பெரியோர்களால் அடக்கப்பட்ட ஆயிரம் கோபியர்களைக் கண்ணன் தன்னுடைய புல்லாங்குழலின் நாதத்தால் பின் தொடர வைத்தான் என்று கூறுகின்றனர். ஆனால் அவர்களை உன்னுடைய இனிமையான நாதத்தால் அல்லவோ கண்ணன் எளிதாக வசப்படுத்திக் கொண்டான்?

**விளக்கம்** – இதுவரை பாதுகைகளின் நாதத்தை வர்ணிக்கின்ற ப்ரகரணம் (context) முடிந்தது. இந்த ச்லோகம் முதல், ஸ்ரீரங்கநாதன் அளிக்கின்ற ஹிதம் என்னும் மோக்ஷ உபாயம் குறித்துக் கூறப்படும் ப்ரகரணம் தொடங்குகிறது. மோக்ஷ உபாயத்தைக் கண்ணனாக நின்று சரமச்லோகத்தில் ஸ்ரீரங்கநாதன் உபதேசித்ததால் இந்த ச்லோகத்தில் க்ருஷ்ணாவதாரத்தைக் கூறுகிறார்.

461. நிஜபத விநிவேசாத் நிர்விசேஷ ப்ரசாராந்
பரிணமயதி பக்தாந் ரங்கநாதோ யதா மாம்
இதி விஹரண காலே மஞ்ஜு சிஞ்ஜா விசேஷை:
ஹிதம் உபதிசஸீவ ப்ராணிநாம் பாதுகே த்வம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீ அனைவரிடமும், "ஸ்ரீரங்கநாதன் என் (பாதுகை) போன்றவர்களைத் தன்னுடைய திருவடியில் வைப்பதன் மூலம், அவர்களுக்கும் என்னைப் போன்று அவனுடன் சேர்ந்து ஸஞ்சாரம் செய்யும்படியான நிலையை அளிக்கிறான்", என்று உன்னுடைய இனிமையான நாதங்கள் மூலம் நன்மையை உபதேசிக்கிறாய் போலும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

462. அயமயமிதி தைஸ்தை: கல்பிதாந் அத்வ பேதாந்
ப்ரதிபதம் அவலோக்ய ப்ராணிநாம்
சடுல மணி கலாபை: சௌரி பாதாவநி த்வம்
முகரயஸி விஹாரை: முக்தி கண்டாப தாக்ர்யம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! முக்தி அடைவதற்கு இதுவே சிறந்த வழி, இதுவே சிறந்த வழி என்று பல மதங்களால் அடிக்கடிக் கூறப்படும் பல்வேறு முரணான மார்க்கங்களைக் கண்டு மக்கள் கலங்கி நிற்கின்றனர். உன்னுடைய அசைகின்ற இரத்தினங்களின் நாதம் மூலமாக மோக்ஷத்திற்கான ராஜமார்க்கம், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளே என்று கூறுகிறாய் போலும்.

463. பத கமலம் உதாரம் தர்சயந்தீ முராரே:
கல மதுர நிநாதா கர்ப்ப ரத்நை: விலோலை:
விஷம விஷய த்ருஷ்ணா வ்யாகுலாநி ப்ரஜாநாம்
அபிமுகயஸி நூநம் பாதுகே மாநஸாநி

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அசைகின்ற உன்னுடைய இரத்தினக்கற்களின் இனிமையான நாதம் மூலம் ஸ்ரீரங்கநாதனின் கருணை மிகுந்த திருவடித் தாமரைகளை மக்களுக்குக் காண்பிக்கிறாய். இதன் மூலம் உலக விஷயங்களில் கொண்ட ஆசை என்னும் கானல்நீர் காரணமாக கலங்கி நிற்கும் மனிதர்களின் மனம் என்னும் விலங்குகளை, உன்னைக் காணும்படிச் செய்கிறாய்.

464. மதுரிபு பதரக்ஷே மந்த புத்தௌ மயீத்வாம்
அநவநி மஹிமாநம் த்வத் ப்ரஸாதாத் ஸ்துவாநே
மணி நிகர ஸமுத்தை: மஞ்ஜுநாதை: கவீநாம்
உபரமயஸி தாம்ஸ்தாந் நூநம் உத்ஸேக வாதாந்

**பொருள் -** மது என்ன அரக்கனின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அற்பமான அறிவுள்ள நான், எல்லையற்ற பெருமை நிறைந்த உன்னை, உன்னுடைய அருள் காரணமாகத் துதிக்கிறேன். அந்த நேரத்தில் எனது சொற்களைத் தூஷிக்கின்ற பல கவிஞர்களின் கர்வம் நிறைந்த சொற்களை உனது இரத்தினக்கற்கள் மூலம் ஏற்படும் இனிமையான நாதம் கொண்டு நீ அடக்குறாய் என்பது உண்மை.

465. சரணம் உபகதே த்வாம் சார்ங்கிண: பாதரக்ஷே
ஸக்ருதிதி விதிஸித்தம் த்யக்துகாமே விமோஹாத்
ப்ரசலித மணிஜால வ்யஞ்ஜிதை: சிஞ்ஜிதை: ஸ்வை:
அலமலம் இதி நூநம் வாரயஸி ஆதரேண


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள் -** சார்ங்கம் என்னும் வில்லை உடைய ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை ஒருமுறை சரணாகதி செய்தாலே போதுமானது என்று விதிக்கப்பட்ட சாஸ்திரம் அறியாமல் சரணாகதி செய்தவன், மீண்டும் சரணாகதி செய்ய முனைகிறான். அப்போது வேகமாக அவனைத் தடுக்க நீ முயலும்போது அசைகின்ற உனது இரத்தினக்கற்களின் நாதம் கொண்டு, “போதும் போதும்”, என்று மிகுந்த ஆசையுடன் தடுக்கிறாய் என்பது நிச்சயம்.

466. விகல கரண வ்ருத்தெள விஹ்வல அங்கே விலக்ஷம்
விலபதி மயி மோஹாத் பிப்ரதீ செளரி பாதம்
பரிசரம் அதிகந்தும் பச்ய பாதாவநி த்வம்
ப்ரதி பயம் அகிலம் மே பர்த்ஸயந்தீ நிநாதை:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! என்னுடைய புலன்கள் அனைத்தும் தளர்ந்து, உடல் முழுவதும் குன்றி, அறிவு இழந்து, யாரைக் குறித்து எதனைக் கூறுவது என்று புரியாமல், எதனையோ கூறி அழும் காலம் உண்டாகலாம். அப்போது ஸ்ரீரங்கநாதனின் திருவடியை நீ தரித்துக் கொண்டு, உன்னுடைய இனிமையான நாதங்கள் மூலம் எனக்கு உண்டாகின்ற அனைத்து விதமான பயத்தின் காரணங்களை, அவை பயந்து ஓடும்படியாக விரட்டியவாறு நீ எனக்கு அருகில் வரவேண்டும்.

467. கரண விகம காலே கால ஹுங்கார சங்கீ
த்ருதபதம் உபகச்சந் தத்த ஹஸ்த: ப்ரியாப்யாம்
பரிணமயது கர்ணே ரங்கநாத: ஸ்வயம் ந:
ப்ரணவம் இவ பவத்யா: பாதுகே மஞ்ஜுநாதம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! என்னுடைய புலன்கள் அடங்குகின்ற அந்திம காலத்தில் யமன் என்னிடம் வந்து ”ஹும்” என்று அதட்டுவானே என்ற சந்தேகம் ஸ்ரீரங்கநாதனுக்கு எழுகிறது. அதனால், அந்த நேரத்தில் தன்னுடைய இரண்டு பிராட்டிகளும் கை கொடுக்க, மிகவும் வேகமாக என்னிடம் ஓடி வந்து, எனது காதில் ப்ரணவத்தின் ஓசை போன்ற உன்னுடைய அழகான நாதத்தைக் கேட்கும்படிச் செய்யவேண்டும்.

468. கமல வந ஸகீம் தாம் கெளமுதீம் உத்வஹந்தம்
ஸவிதம் உபநயந்தீ தாத்ருசம் ரங்கசந்த்ரம்
ப்ரளய தின ஸமுத்தாந் பாதுகே மாமகீநாந்
ப்ரசமய பரிதாபாந் சீதளை: சிஞ்ஜிதை: ஸ்வை:


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மரணம் சம்பவிக்கின்ற நேரத்தில் என்னுடைய வேதனைகளை நீ போக்கவேண்டும். எப்படி என்றால் – தாமரைக் காட்டின் தோழியாக உள்ள ஸ்ரீரங்கநாச்சியார் என்னும் நிலவை வைத்துக்கொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாதனை என் அருகில் எழுந்தருளப் பண்ணவேண்டும். இதன் மூலம் குளிர்ந்த உன்னுடைய நாதங்கள் மூலமாக எனது வேதனைகளை நீக்கவேண்டும்.

469. ப்ரசமயது பயம் ந: பச்சிம ச்வாஸகாலே
ரஹஸி விஹரணம் தே ரங்கநாதேந ஸார்த்தம்
நியதம் அநுவிதத்தே பாதுகே யத் நிநாத:
நிகில புவந ரக்ஷா கோஷணா கோஷலீலாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தின்போது உண்டாகும் உன்னுடைய நாதங்கள், “ நிச்சயம் அனைத்து உலகங்களையும் காப்பேன் ”, என்று பறைசாற்றுவது போல் உள்ளது. இப்படிப்பட்ட இந்த சப்தமானது, என்னுடைய இறுதி மூச்சு வெளியில் கிளம்பும்போது, யாரும் அறியாதபடி அங்கு வருகின்ற ஸ்ரீரங்கநாதனுடன் கூடியபடி இருந்து, எனது பயத்தை நீக்கி விடுகிறது.

**விளக்கம் -** சரணாகதி செய்தவன் இறக்கின்ற காலத்தில், அங்கு வேறு யார் கண்ணிலும் புலப்படாத வகையில் ஸ்ரீரங்கநாதனைப் பாதுகை அழைத்து வந்து சேவை சாதிப்பாள் என்பதைக் கூறுகிறார்.

470. த்ரிக விநிஹித ஹஸ்தம் சிந்தயித்வா க்ருதாந்தம்
கதவதி ஹ்ருதி மோஹம் கச்சதா ஜீவிதேந
பரிகலயது போதம் பாதுகே சிஞ்ஜிதம் தே
த்வரயிதும் இவ ஸஜ்ஜம் த்வத் விதேயம் முகுந்தம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உடலை விட்டு ப்ராணனுடன் கூடிய மனம், எனது கழுத்தில் கையை வைத்து அழுத்துகின்ற யமனை எண்ணி மயக்கம் அடைந்துவிடும். அப்போது உன் வசப்பட்டுள்ள ஸ்ரீரங்கநாதனை வேகமாக வரச்செய்கின்ற உன்னுடைய நாதம், எனக்கு நல்ல ஞானத்தை அளிக்கவேண்டும்.

471 உபக்நம் ஸம்வித்தே: உபநிஷத் உபோத்காத வசநம்
தவ ச்ராவம் ச்ராவம் ச்ருதி ஸுபகம் அந்த: மணிரவம்
விஜ்ரும்பந்தே நூநம் மது மதந பதாவநி மம
த்ரவீபூத த்ராக்ஷா மதுரிம துரீணா: ப்ரணிதய:

**பொருள் -** மது என்ற அரக்கனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அறிவு என்ற கொடியானது படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பாக உபநிஷத்துக்கள் உள்ளன. அந்த உபநிஷத்துக்களின் முன்னுரையாக, செவிக்கு இனிய உன்னுடைய உள்ளே இருக்கின்ற இரத்தினக்கற்களின் நாதங்கள் உள்ளன. அதனைக் கேட்டுக்கேட்டு நன்கு கரைந்த திராக்ஷை பழத்தின் இனிமையைச் சுமக்கின்ற சொற்கள் மேலும்மேலும் வெளிவருகின்றன என்பது நிச்சயம்.

472. விலாஸை: க்ரீணந்தோ நிகிலஜந சேதாம்ஸி விவிதா:
விஹாரா: தே ரங்கக்ஷிதி ரமண பாதாவநி முஹு:
விகாஹந்தாம் அந்தர்மம விலுடத் அந்தர் மணிசிலா
கலாத்கார வ்யாஜ க்ஷரத் அம்ருத தாரா தமநய:

**பொருள் -** திருவரங்கத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ற ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் உள்ளே இருக்கின்ற இரத்தினக்கற்கள் தங்களது விளையாட்டுக்கள் மூலம் அனைவரது மனதையும் வசப்படுத்தி விடுகின்றன. அவை எழுப்புகின்ற, “களுக், களுக்”, என்ற ஒலியின் இனிமையால் அம்ருத ப்ரவாஹம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட உனது ஸஞ்சாரங்கள் என் மனதில் புகவேண்டும்.

473. ச்ருதி ச்ரேணீ ஸ்தேய ச்ருதி ஸுபக சிஞ்ஜா முகரிதாம்
பஜேம த்வாம் பத்மா ரமண சரணத்ராயிணி பரம்
ந முத்ரா நித்ராண த்ரவிணகண விச்ராண நதசா
விசால அஹங்காரம் கமபி கந ஹுங்கார பருஷம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாச்சியாருக்கு மகிழ்வை ஏற்படுத்தும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! வேதவரிகளுக்கு, பலரும் முரண்பட்ட பொருளைக் கூறி விவாதம் செய்ய முற்படும்போது, உன்னுடைய நாதம் மூலம் செவிக்கினிய தீர்ப்பை நீயே அளிக்கிறாய். இப்படிப்பட்ட உன்னையே நாங்கள் வணங்கி நிற்போம். அற்பமான சிறு பொருளைக்கூட ஒரு சிலர் அரக்கு முத்திரை இட்டு, பாதுகாத்து வைத்தபடி, அதனை ஏதோ ஓர் அற்பமான காரணத்தினால் மற்றவர்களுக்குச் சிறிது வழங்கக்கூடும். அந்த நேரத்தில், “தான்தாம் செய்கிறோம்”, என்று கர்வம் காரணமாக, அனைவரையும் அதட்டி, பயத்தை உண்டாக்குகின்ற மனிதர்களை நாங்கள் அண்டமாட்டோம்.

474. தவ ஏதத் ஸ்ரீரங்கக்ஷிதிபதி பதத்ராயிணி ந்ருணாம்
பவதி ஆக: சிந்தா ரண ரணக பங்காய ரணிதம்
சரீரே ஸ்வம் பாவம் ப்ரதயதி யதாகர்ணநவசாத்
ந ந: கர்ணே பாவீ யம மஹிஷ கண்டா கண கண:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடியைக் காப்பாற்றும் பாதுகையே! மனிதர்கள் தாங்கள் செய்த தவறுகளை எண்ணி மிகுந்த அச்சம் கொள்ளும்போது, உன்னுடைய இனிய நாதம் அவர்களது பயத்தைப் போக்க ஏதுவாக உள்ளது. இந்த உடலானது தனது இயல்பான அழிவை அடையும் காலத்தில், உன்னுடைய இந்த நாதத்தைக் கேட்பதன் காரணமாக, எங்கள் காதுகளில் யமனின் வாகனமாக உள்ள எடுமையின் கழுத்தில் கட்டப்பட்ட மணியின் கண கண என்னும் ஓசை கேட்காமல் போய்விடும் .

**விளக்கம் -** பாதுகையை அண்டியவர்கள் வாழும் காலத்தில் மற்றவர்களை எதிர்பார்த்து வாழாமல், எந்தவிதமான அச்சமும் இன்றி வாழ்வார்கள் என்று கடந்த ச்லோகத்தில் கூறினார். இங்கு, உயிர் பிரியும் நேரத்திலும் பயம் அற்று இருப்பார்கள் என்றார்.

475. பரித்ரஸ்தா புண்யத்ரவ பதந வேகாத் ப்ரதமத:
க்ஷரத்பி: ஸ்ரீரங்கக்ஷிதிரமண பாதாவநி ததா
விதாமாஸு: தேவா: பலிமதந ஸம்ரம்பம் அநகை:
ப்ரணாதை: தே ஸத்ய: பதகமல விக்ராந்தி பிசுநை:

**பொருள் -** ஸ்ரீரங்கத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடியைக் காப்பாற்றும் பாதுகையே! த்ரிவிக்ரம அவதாரம் செய்த காலத்தில், மஹாபலியின் புண்ணிய காலம் கழிந்து அவன் மண்ணுலகில் விழும் காலம் வந்ததை, த்ரிவிக்ரமனாக அறிவிக்கும் வகையில், அவனது திருவடித் தாமரையில் உள்ள குற்றமற்ற உனது இனிய நாதம் மூலம் தெரிவித்தாய். இதனால் தேவர்கள், ஸ்ரீரங்கநாதன் த்ரிவிக்ரமான நின்று மஹாபலியை அடக்குகின்ற செயலை அறிந்தனர்.

**விளக்கம் -** மனிதர்கள் மட்டும் அல்லாமல், தேவர்களுக்கும் பயம் உண்டு. அவர்களின் பயத்தையும் நீக்குவதாகப் பாதுகைகளின் செயல்கள் உள்ளதைக் காண்பிக்கிறார்.

476. ஸ்வேஷு ஸ்வேஷு பதேஷு கிம் நியமயஸி அஷ்டௌ திசாம் ஈச்வராந்
ஸ்வைராலாபகதா: ப்ரவர்த்தயஸீ கிம் த்ரய்யா ஸஹாஸீநயா
ரங்கேசஸ்ய ஸமஸ்தலோகமஹிதம் ப்ராப்தா பத அம்போருஹம்
மா பைஷீதி மாம் உதீரயஸி வா மஞ்ஜுஸ்வநை: பாதுகே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து உலகங்களும் போற்றுகின்ற ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற அழகிய திருவடிகளை அடைந்து நீ வீற்றுள்ளாய். அங்கு இருந்தபடியே இனிமையான நாதம் எழுப்பியபடி உள்ளாய். இதன் மூலம் – இந்த்ரன் உள்ளிட்ட எட்டுத் திசையின் காவலர்களை, அவர்களின் இருப்பிடங்களுக்குச்

சென்று பணியாற்றும்படி உத்தரவு இட்டபடி உள்ளாயோ? அல்லது ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் எப்போதும் அமர்ந்துள்ள வேதங்களுடன் உரையாடியபடி உள்ளாயோ? அல்லது என்னிடம், "அஞ்சவேண்டாம்", என்று கூறுகிறாயோ?

477. ரங்கே தேவி ரதாங்கபாணி சரண ஸ்வச்சந்த லீலாஸகி
ஸ்தோக ஸ்பந்தித ரம்ய விப்ரம கதி ப்ரஸ்தாவகம் தாவகம்
கால உபாகத காலகிங்கர சமூ ஹுங்கார பாரம்பரீ
துர்வார ப்ரதிவாவதூகம் அநகம் ச்ரோஷ்யாமி சிஞ்ஜாரவம்

**பொருள் -** சக்கரத்தைத் திருக்கரத்தில் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடன் இனிமையாக விளையாடி மகிழும் அதன் தோழியான பாதுகையே! ஸ்ரீரங்கத்தில் எப்போதும் உல்லாஸமாக ஸஞ்சாரம் செய்கின்ற நம்பெருமாளின் ஸஞ்சாரத்தை சிறுகச்சிறுக அசைந்தபடி நீ அறிவிக்கிறாய். இப்படிப்பட்ட உனது நாதம் என்ன செய்யவேண்டும் தெரியுமா - எனது அந்திம காலத்தில் எண்ணற்ற யமதூதர்கள் தொடர்ந்து என்னை அதட்டியபடி இருப்பார்கள். அவர்களால் மறுமொழி கூற இயலாதபடி, குற்றமற்றதாக ஒலிக்கவேண்டும். இதனை நான் கேட்டபடி இருப்பேனாக.

**விளக்கம்** – தனது அந்திம காலம் திருவரங்கத்திலேயே கழியவேண்டும் என்று விண்ணப்பிக்கிறார். யம தூதர்கள் வரும்போது, பாதுகைகளின் ஓசைகள் நம்பெருமாள் வருவதை அறிவிக்க வேண்டும் என்று விண்ணம்பம் செய்கிறார்.

478. த்வத் சிஞ்ஜாரவ சர்க்கரா ரஸ ஸதாஸ்வாதாத் ஸதாம் உந்மதா
மாத: மாதவ பாதுகே பஹுவிதாம் ப்ராய: ச்ருதி: முஹ்யதி
ஸாராஸார ஸக்ருத் விமர்சந பரிம்லந அக்ஷர க்ரந்திபி:
க்ரந்தை: த்வாம் இஹ வர்ணயாமி அஹம் அத: த்ராஸ த்ராபா அபவர்ஜித:

**பொருள் -** ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருமார்பில் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! பல சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த அறிஞர்களின் காதுகள், அவற்றை விட மிகவும் இனிமையானதும், சர்க்கரைப்பாகு போன்றதும் ஆகிய உனது நாதத்தின் சுவையை விடாமல் பருகி, மயக்கம் அடைந்து நிற்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட நான், எவ்விதமான அச்சமோ அல்லது நாணமோ இல்லாமல், "இந்தச் சொற்கள் நல்லவையா தகாதவையா", என்று மீண்டும் ஒருமுறை ஆராயாமல், எழுத்துக்களின் சேர்க்கை கொண்ட ச்லோகங்களால் உன்னைத் துதித்து விடுகிறேன்.

**விளக்கம் -** இங்கு "விமர்சந பரிம்லாந" என்ற பதத்திற்கு – "மீண்டும் ஒருமுறை சரிபார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல்" , " விமர்சிக்க முயன்றாலே வாடிவிடும் சொற்கள்" -

என்று இரு பொருள் கொள்ளலாம். முதல் பொருளில் மேலே உள்ள கருத்து உள்ளது. இரண்டாவது பொருளில் – தன்னுடைய எழுத்துக்கள் மிகவும் அற்பமானவை என்றும், அவற்றை ஒருமுறை யாராவது விமர்சிக்க முயன்றாலே அவை வாடிவிடும்படியான தன்மை கொண்டவை என்றும் கூறுவதாகக் கொள்ளலாம்.

479. தவ அம்ப கில கேலதாம் கதிவசேந கர்ப்பாச்மநாம்
ரமா ரமண பாதுகே கிமபி மஞ்ஜுபி: சிஞ்ஜிதை:
பதிஸ்துதி விதாயிபி: த்வதநு பாவ ஸித்தாந்திபி:
ஸயூத்ய கலஹாயிதம் ச்ருதிசதம் ஸமாபத்யதே

**பொருள் -** ஸ்ரீரங்கநாச்சியாருக்கு இனிமையானவனாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரம் காரணமாக ஒலிக்கின்ற இனிமையான இரத்தினக்கற்கள் கொண்ட உனது பெருமை என்பது, அவனது திருவடிகளைக் காட்டிலும் உயர்ந்தவையே என்று வேதங்கள் முழங்குகின்றன. ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பாராட்டித் துதிப்பவர்களுடன் இந்தச் சூழ்நிலையில், வேதங்கள் ஏனோ முரணாகப் பேசி, கலகம் செய்கின்றன.

**விளக்கம் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் புகழ்ந்து ச்லோகம் இயற்றுவதாக ஒருவர் கூற, ஸ்வாமி தேசிகன் பாதுகைகளைப் புகழ்ந்து ச்லோகம் இயற்றுவதாகக் கூற – இப்படித்தான் ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் உண்டானது. இங்கு திருவடிகளைப் பற்றிப் புகழ்ந்து ச்லோகம் இயற்ற முயன்றவரால் சில நூறு ச்லோகம் கூட இயற்ற முடியவில்லை. ஆகவே வேதங்கள் கூட அவருக்குக் கைக்கொடுக்காமல், கலகம் செய்ததோ என்று வியக்கிறார்.

480. க்ஷிபதி மணிபாதரக்ஷே நாதை: நூதம் ஸமாச்ரித த்ராணே
ரங்கேச்வரஸ்ய பவதீ ரக்ஷாபேக்ஷா ப்ரதீக்ஷண விளம்பம்

**பொருள் -** இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! தனது அடியார்கள் தன்னிடம், ” என்னைக் காக்கவேண்டும்”, என்று விண்ணப்பம் செய்யவேண்டும் என்று ஸ்ரீரங்கநாதன் எதிர்பார்க்கிறான். இத்தகைய அவனது எண்ணத்தை உனது நாதங்களால் நீக்கி, அவன் காப்பாற்றும் காலதாமதத்தைக் குறைத்து விடுகிறாய்.

**விளக்கம் -** எம்பெருமான் கருணை உள்ளவன் என்றாலும், ”என்னைக் காப்பாய்” என்று ஒருவன் கூறாதவரையில் அவன் ஏதும் செய்யமாட்டான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனைக் கண்ட பாதுகை, “இது என்ன விபரீதம்! அவர்கள் கேட்டாலும்


**Email:**sridharan_book@yahoo.co.in

கேட்காவிட்டாலும் காப்பது நம் கடமை அல்லவோ?", என்று திருவரங்கனைத் துரிதப்படுத்தி விடுகிறாள் என்கிறார்.

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## நாத பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (15.ரத்ந ஸாமான்ய பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** – இந்தப் பத்ததியில், பாதுகையில் பதிக்கப்பட்ட இரத்தினக்கற்களில் இருந்து வெளிவரும் ஒளிக்கற்றைகளை வர்ணிக்கிறார்.

481. உத் அர்ச்சிஷ: தே ரங்கேந்த்ர பாதாவநி பஹிர் மணீந்
அந்தர்மணி ரவம் ச்ருத்வா மந்யே ரோமாஞ்சித ஆக்ருதீந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன் மீது இழைக்கப்பட்டுள்ள இரத்தினங்களின் ஒளியானது, ஒளிக்கம்பிகள் போன்று காணப்படுகின்றன. இதனைக் காணும்போது உன் உள்ளே இருக்கின்ற இரத்தினங்களின் நாதத்தைக் கேட்டு இவை மயிர்க்கூச்சல் எடுத்தது போன்று தோன்றுகிறது.

482. விதேஹி சௌரே: மணிபாதுகே த்வம்
விபத்யமாநே மயி ரச்மிஜாலை:
ஆஸீததாம் அந்தக கிங்கராணாம்
வித்ராஸநாத் வேத்ரலதா விசேஷாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது அந்திம காலத்தில், எனது அருகில் யம தூதர்கள் வந்து என்னை அச்சுறுத்தக்கூடும். அப்போது அவர்களை அச்சம் செய்யும் வகையில் விரட்டக்கூடிய பிரம்புகளாக உன்னில் இருந்து ஒளிக்கற்களை உண்டாக்க வேண்டும்.

483. முகுந்த பாதாவநி மத்ய நாட்யா
மூர்த்தந்யயா நிஷ்பதத: முமுக்ஷோ:
ஆப்ரஹ்ம லோகத் அவலம்பநார்த்தம்
ரத்நாநி தே ரச்மிகணம் ஸ்ருஜந்தி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தலையின் நடுவில் உள்ள நாடியின் மூலம் வெளிக்கிளம்பி, பரமபதம் செல்கின்ற முமுக்ஷுவிற்கு உனது ஒளிக்கற்றைகள் அனைத்தும் கயிறுகள் போன்று பிடித்துக் கொண்டு செல்வதற்காக உண்டாகின்றன.

484. அஸூர்யபேத்யாம் ரஜநீம் ப்ரஜாநாம்
ஆலோகமாத்ரேண நிவாரயந்தீ
அமோக வ்ருத்தி: மணிபாதரக்ஷே
முரத்விஷ: மூர்த்திமதீ தயா த்வம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மக்களின் ஸம்ஸார பந்தம் என்னும் இரவுப்பொழுதை நீக்க சூரியனால் இயலாது. இந்த இருளை உன்னுடைய ஒளி மூலம் மிகவும் எளிதாக நீ விலக்குகிறாய். ஆக, தடை இன்றி ஸஞ்சாரம் செய்கின்ற ஸ்ரீரங்கநாதனின் கருணை என்பது வடிவம் எடுத்ததோ என்று எண்ணும்படியாகவே நீ உள்ளாய்.

**விளக்கம் –** இங்கு பாதுகையை ஸ்ரீரங்கநாதனின் தயாதேவி என்று உருவகம் செய்கிறார். ஸ்ரீநிவாஸனின் தயாதேவியைக் குறித்து தயாசதகம் அருளிச்செய்த ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரங்கநாதனின் தயாதேவியைக் குறித்து பாதுகாஸஹஸ்ரம் அருளியதாகக் கொள்ளலாம்.

485. ரங்கேச பாதாவநி தாவகாநாம்
ரத்ந உபலாநாம் த்யுதய: ஸ்புரந்தி
ச்ரேய: பலாநாம் ச்ருதி வல்லரீணாம்
உபக்நசாகா இவ நிர்வ்யபாயா:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மக்களுக்கு வேண்டிய புருஷார்த்தம் என்னும் பழங்களை அளிக்கின்ற கொடிகளாக வேதங்கள் உள்ளன. அந்த வேதங்கள் படர்வதற்கு ஏற்ற கொழுகொம்புகளாக உனது இரத்தினக் கற்களின் ஒளிக்கீற்றுகள் உள்ளன.

486. கஸ்யாபி பும்ஸ: கநகாபகாயா:
புண்யே ஸலீலம் புளிநே சயாளோ:
ஸமீப வ்ருத்திர் மணிபாதுகே த்வம்
ஸம்வாஹயந்தீவ பதம் கரை: ஸ்வை:

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! தூய்மையான மணல் மேட்டைக் கொண்டுள்ள காவிரியின் கரையில் மிகவும் உல்லாஸமாக, தனித்து விளங்கும் அழகிய மணவாளன் சயனித்துள்ளான். அவனது திருவடிகளை உனது ஒளி என்னும் திருக்கரங்களால் பிடித்து விட்டபடி நீ அவன் அருகில் உள்ளாய்.

487. தித்ருக்ஷமாணஸ்ய பரம் நிதானம்
ஸ்நேஹாந் விதே யோகதசா விசேஷே
ஸம்வித் ப்ரதீபம் மணிபாதரக்ஷே
ஸந்துக்ஷயந்தீவ மரீசய: தே

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மிகவும் உயர்ந்த செல்வமாகிய ஸ்ரீரங்கநாதனைக் காணவேண்டும் என்று விரும்பும் யோகி ஒருவன், தனது பக்தியை நெய்யாக்கி, யோகம் என்னும் திரியை இட்டு, ஞானம் என்னும் விளக்கை ஏற்ற முயல்கின்றான். உன்னுடைய ஒளியானது, அந்த விளக்கு நன்றாக எரியும்படித் தூண்டிவிடுகிறது.

488. ஸமாதிபாஜாம் தநுதே தவ்தீயா
ரங்கேச பாதாவநி ரத்நபங்க்தி:
ஸ்தானம் ப்ரயாதும் தமஸ: பரம் தத்
ப்ரதீபக்ருத்யாம் ப்ரபயா மஹத்யா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காக்கும் பாதுகையே! ப்ரக்ருதி மண்டலம் என்னும் இருளுக்கு அப்பால் உள்ள பரமபதம் செல்வதற்கு யோகிகள் முனைகின்றனர். அப்படி அவர்கள் செல்வதற்கு உதவும் தீவட்டிகளின் செயலை உனது இரத்தினக் கற்களில் இருந்து வெளிப்படும் கதிர்கள் செய்கின்றன.

489. பத்நாஸி ரங்கேச்வர பாதரக்ஷே
மந்யே யதார்ஹம் மணிரச்மிஜாலை:
ஸேவாநதாநாம் த்ரிதசேச்வராணாம்
சேஷாபடீம் சேகர ஸந்நிக்ருஷ்டாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் தங்கள் தலை சாய்ந்து, அதனைத் தொடுவதற்காக வணங்கியபடி தேவர்கள் நிற்கின்றனர். இவர்களது தலையில் உனது இரத்தினக்கற்களின் ஒளிக்கீற்றுகள் மூலமாக பரிவட்டத்தை நீ கட்டுகிறாய் என எண்ணுகிறேன்.

490. பஜந்தி ரங்கேச்வர பாதரக்ஷே
ப்ரகல்பயந்த: விவிதாந் புமர்த்தாந்
உத் அர்ச்சிஷச் சிந்தயதாம் ஜநாநாம்
சிந்தாமணி த்வம் மணய: த்வதீயா:


**Email:**sridharan_book@yahoo.co.in

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காக்கும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனையே எப்போதும் த்யானித்தபடி உள்ளவர்களுக்கு, அவர்களுக்கு ஏற்ற புருஷார்த்தங்களை அளிக்கவல்லதாக உனது இரத்தினங்கள் உள்ளன. இதனால் இவை சிந்தாமணியின் தன்மையை அடைகின்றன. (சிந்தாமணி என்பது ஸ்வர்க்கத்தில் உள்ள பொருளாகும். இது கேட்பதையும் நினைப்பதையும் அளிக்கவல்லதாகும்)

491. நாதஸ்ய தத்தே நதராஜகந்யா
பாதும் சுபாந் பாத நக இந்து ரச்மீந்
மணிப்ரபாபி: ப்ரதிபந்ந பக்ஷாம்
லீலாசகோரீம் இவ பாதுகே த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளின் நகக்கண்கள் சந்த்ரன் போன்று குளிர்ந்த வெண்மையான ஒளியை வீசுகின்றன. நதிகளின் தலைவனாகிய ஸமுத்திரராஜனின் புத்ரியான ஸ்ரீரங்கநாச்சியார், சிறந்த இரத்தினங்களின் ஒளியை வீசுகின்ற உன்னை, தான் விளையாட வைத்துள்ள சகோரபக்ஷி போன்று அவனது திருவடிகளில் அணிவிக்கிறாள்.

**விளக்கம்** - சகோர பக்ஷி என்பது சந்திரனின் குளிர்ந்த ஒளியை மட்டுமே உண்ணும் தன்மை கொண்டதாகும். இங்கு பாதுகையை இந்தப் பறவைக்கு உருவகம் செய்கின்றார். இந்தப் பாதுகை என்ற பறவையை, ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்கள் என்னும் சந்த்ரனில் இருந்து வெளிவரும் ஒளியைப் பருகும் பொருட்டு, ஸ்ரீரங்கநாச்சியார் அணிவிக்கிறாள் என்றார்.

492. ஜநஸ்ய ரங்கேச்வர பாதுகே த்வம்
ஜாத அநுகம்பா ஜநயஸி அயத்நாத்
ஆக்ருஷ்ய தூராத் மணிரச்மிஜாலை:
அநந்ய லக்ஷ்யாணி விலோசநாநி

பொருள் - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனை தரிசிக்க வரும் அடியார்களின் கண்களை, உன்னுடைய கருணையை வெளிப்படுத்தும் இரத்தினக்கற்களின் ஒளி மூலமாக, மிகவும் எளிதாக, தூரத்தில் இருந்தே கவர்ந்து இழுக்கிறாய். இதனால் அவர்கள் ஸ்ரீரங்கநாதனின் திருமேனி உட்பட வேறு எதனையும் காணாமல், உன்னை மட்டும் காணும்படிச் செய்கிறாய்.

493. ரங்கேச பாதாவநி தாவகீநை:
ஸ்ப்ருஷ்டா: கதசித் மணிரச்மிபாசை:
காலஸ்ய கோரம் ந பஜந்தி பூய:
காராக்ருஹ அந்தேஷு கச அபிகாதம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! உன்னுடைய இரத்தினக் கற்களின் ஒளிக்கீற்றுகள் என்னும் கயிறுகளால் ஒரு முறை தீண்டப் பெற்றவர்கள், யமனின் சிறைச்சாலையில் பயங்கரம் சூழ்ந்த சாட்டை அடிகளை எப்போதும் பெறுவதில்லை.

494. ரத்நாநி ரங்கேச்வர பாதரக்ஷே
த்வத் ஆச்ரிதாநி அப்ரதிகை: மயூகை:
ஆஸேதுஷீணாம் ச்ருதி சுந்தரீணாம்
விதந்வதே வர்ண நிசோள லக்ஷ்மீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் அருகில் எப்போதும் வேதங்கள் என்னும் பெண்கள் சூழ்ந்து நின்றபடி உள்ளனர். அவர்களது பல நிறங்களுடன் கூடிய ரவிக்கைகள் போன்ற அழகை, தடை இல்லாத உனது இரத்தினக்கற்களின் ஒளிக்கீற்றுகள் உண்டக்குகின்றன.

495. நித்ரா ரஸ ப்ரணயிநோ மணிபாதரக்ஷே
ரங்கேச்வரஸ்ய ஸ்விதம் ப்ரதிபத்யமாநா
சய்யாபணீந்த்ரம் அபித: பவதீ விதத்தே
ரத்ந அம்சுபி: யவநிகாம் தர்சநீயாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் சயனிக்கும் நேரம் வருகிறது. அப்போது நீ செய்வது என்ன? அவனது அருகில் சென்று, அவனது படுக்கையாக உள்ள ஆதிசேஷனுக்கு நான்கு பக்கங்களிலும், உன்னுடைய இரத்தினக் கற்களின் ஒளி மூலமாக, ஒளி வீசும் திரையைக் கட்டுகிறாய் போலும்.

496. ஸத்ய: த்வத் உத்க்ரஹதசா நமித ஆக்ருதீநாம்
ஸ்ரஸ்த அம்சுகம் நிஜருசா மணிபாதுகே த்வம்
பத்மா ஸஹாய பரிவாரவிலாஸி நீநாம்
பட்டாம் சுகை: இவ பயோதரம் ஆவ்ருணோஷி


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அதிகாலைப் பொழுதில் ஸ்ரீரங்கநாதன் திருக்கண் விழித்தவுடன், உன்னை ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான அவனது திருவீதிகளில் சேர்ப்பதற்காக, உன்னை எடுப்பதற்கு அங்குள்ள பணிப்பெண்கள் வேகமாகக் குனிகின்றனர். அப்போது அவர்களின் மேல் ஆடைகள் விலக, அவர்களின் ஸ்தனங்களை மறைக்கும் பட்டுத்துணி போன்று, உனது ஒளியை அவர்கள் மீது வீசுகிறாய் போலும்.

497. தேவஸ்ய ரங்கவஸதே: புரத: ப்ரவிருத்தை:
உத்தூத விச்வ திமிராம் மணிரச்மிஜாலை:
மந்யே மதீய ஹ்ருதய ஆயதந ப்ரவேச
மங்கள்ய தீபகணிகாம் மணிபாதுகே த்வாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் முன்பாக எழுந்தருளியுள்ள நீ, எங்கும் பரவுகின்ற உனது இரத்தினக்கற்களின் ஒளி மூலமாக, சுற்றியுள்ள அனைத்து இருளையும் நீக்குகிறாய். எனது மனம் என்னும் வீட்டில் ப்ரவேசம் செய்யும் ஸ்ரீரங்கநாதனுக்கு ஏற்றும் சிறு விளக்காகவே நான் உன்னை எண்ணுகிறேன்.

498. ஆகீர்ண ரத்ந நிகராம் மணிபாதுகே த்வாம்
ரங்கேச்வரஸ்ய லலிதாம் விபணிம் ப்ரதீம:
யத் ஸம்ச்ரயேண பவதி ஸ்திர பக்திமூல்யம்
கைவல்யம் அத்ர ஜகதாம் க்ரய விக்ரயார்ஹம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இரத்தினக் குவியலைப் பரப்பி வைத்துள்ள உன்னை ஸ்ரீரங்கநாதனின் அழகான கடைத்தெரு என்றே எண்ணுகிறோம். இந்தக் கடைத்தெருவை அடைவதன் மூலமாக, நழுவாத பக்தி என்னும் விலையைக் கொடுத்து, மோக்ஷம் என்பதை வாங்க இந்த உலகினரால் இயல்கிறது. இப்படியாக கொடுத்து - வாங்கும் இடமாக நீ உள்ளாய்.

499. வ்யங்க்தும் க்ஷமம் பகவத: ஜகத் ஈச்வரத்வம்
வஜ்ராங்குச த்வஜ ஸரோருஹ சக்ரசிஹ்நம்
ஆச்லிஷ்ய நிர்ப்ரருசிம் மணிபாதுகே த்வாம்
ஆஸீத் அநாபரண ஸுந்தரம் அங்க்ரிபத்மம்

**பொருள்** - இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அனைத்து உலகங்களுக்கும் ஈச்வரனாக உள்ளவன் ஸ்ரீரங்கநாதனே ஆவான் என்பதை அனைவருக்கும் வெளிப்படுத்தும் விதமாக, அவனது திருவடிகளில் வஜ்ராயுதம், அங்குசம், கொடி, தாமரை சக்ரம் போன்ற அடையாளங்கள் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட அவனது இணைந்த திருவடிகள் உன்னை அணைத்துக்கொண்டு, உன்னில் இருந்து வெளிவரும் ஒளி மூலம், வேறு எந்த ஆபரணமும் அணியாமலேயே மிகுந்த அழகாக உள்ளன.

500. ரத்ந ப்ரபா படல சக்ர மநோஹரா த்வம்
பத்ம ஆருணம் பதம் இதம் த்வயி ரங்கபர்த்து:
மந்யே தத் ஏதத் உபயம் மணிபாதரக்ஷே
சக்ராப்ஜமண்டலம் அகிஞ்சந ரக்ஷணார்ஹம்

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! இரத்தினக்கற்களில் இருந்து வெளிவரும் ஒளி என்னும் வட்டம் மூலம் நீ மிகவும் அழகாக உள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற சிவந்த அழகான திருவடிகள் எப்போதும் உன் மீது உள்ளன. இதனைக் காணும்போது வேறு கதியில்லாதவர்களுக்குச் சாஸ்திரங்கள் கூறும் சக்ராப்ஜ மண்டலம் என்றே நான் எண்ணுகிறேன்.

**விளக்கம்** - கதியில்லாதவர்களுக்கு உபாயமாக சாஸ்திரத்தில் சக்ராப்ஜ மண்டலம் என்பது கூறப்பட்டுள்ளது. வட்டம் ஒன்றை வரைந்து, அந்தச் சக்ர வடிவத்தில் கோடுகள் கிழித்து, அதன் நடுவில் தாமரை மலர்களை எழுதி, அதனைப் பூஜிக்க வேண்டும் என்பர். இதனை இங்கு உருவகம் செய்கிறார்.

501. த்ராஸாத் ஸ்வயம் ப்ரணமதாம் தநுஜேச்வராணாம்
ஸங்க்யே அவலூந சிரஸம் அபி மௌளிரத்நை:
ஆயோஜயதி அநுகலம் மணிபாதுகே த்வாம்
ஸைரந்த்ரிகேவ முரவைரி க்ருபாண தாரா

**பொருள்** - உயர்ந்த மணிகள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் நந்தகம் என்னும் வாளுக்குப் பயந்து பல அசுர அரசர்கள் தாங்களாகவே பணிந்து நிற்பர். ஒரு சிலர் தங்களாகவே பணியாமல், யுத்த பூமியில் தலை அறுக்கப்பட்டுப் பணிவர். இவர்கள் இருவருடைய க்ரீடங்களில் உள்ள இரத்தினக்கற்கள் உனக்கு அலங்காரமாக வைக்கப்படும். இந்தச் செயலைச் செய்யும் பணிப்பெண் போன்று ஸ்ரீரங்கநாதனின் வாள் உள்ளது.

502. ஆஸ்கந்தநாநி விபுதேந்த்ர சிகாமணீநாம்
த்வாம் ஆச்ரிதாநி அஸுரஸூதந பாதரக்ஷே
ரத்நாநி தே ஸ்துதி ஸுவர்ண பரீக்ஷணார்த்தே
நூநம் பஜந்தி நிகஷோபலதாம் கவீநாம்

**பொருள் -** அசுரர்களின் சத்ருவான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனை வந்து வணங்கும் தேவர்களின் க்ரீடங்களில் உள்ள இரத்தினக்கற்களை, உன்னில் பதிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் கவர்ந்து இழுக்கின்றன (அல்லது அந்த இரத்தினங்களைப் பாதுகையில் உள்ள இரத்தினங்கள் மிதிக்கின்றன என்றும் கொள்ளலாம்). இந்த இரத்தினங்கள் மேலும் செய்வது என்னவென்றால் – உன்னைப் பற்றிய துதிகள் இயற்றும் கவிஞர்களின் அக்ஷரங்கள் (சொற்கள்) என்னும் தங்கத்தைச் சோதிக்கும் உரைகல்லாகவும் உள்ளன என்பது நிச்சயம்.

503. பாதாவநி ப்ரணயிநாம் ப்ரதிபாதித அர்த்தாம்
க்ரீடா ஸரோஜம் இவ சௌரிபாதம் வஹந்தீம்
ப்ரத்யுப்த ரத்நநிகர ப்ரதிபந்த சோபாம்
பச்யாமி ரோஹணகிரே: அதிதேவதாம் த்வம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனை அண்டி நிற்பவர்களுக்கு ஏற்றத்தை நீ அளிக்கிறாய். அவனுடைய தாமரை போன்ற அழகான திருவடிகளை, தாமரை மலர் போன்று உனது விளையாட்டின் பொருட்டு வைத்துள்ளாய். எண்ணற்ற இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட அழகுடன் விளங்குகின்றாய். இப்படியாக உன்னைக் காணும்போது இரத்தின மலைக்கு அதிபதி தேவதை என்றே எண்ணுகிறேன்.

**விளக்கம் –** இரத்தின மலைக்கு ரோஹணம் என்று பெயர் உண்டு. வெள்ளி மலையானது கைலாயம் என்னும், தங்க மலை மேரு என்று பெயர் பெற்றது போன்றதாகும். இந்த இரத்தின மலையின் தேவதை என்று பாதுகையைக் கொண்டாடுகிறார்.

504. யாமேவ ரத்நகிரணைர் மணிபதரக்ஷே
சூடாபதே தநு ப்ருதாம் பவதீ விதத்தே
சக்ராதி தைவத சிகாமணி ரஜ்யமாநை:
தாமேவ தே ப்ரகடயந்தி பதை: அபிக்யாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! நீ மனிதர்களின் தலையில் சிறந்த அழகை ஏற்படுத்துகிறாய். அந்த மனிதர்களை வணங்கும் இந்திரன் முதலான தேவர்களின் க்ரீடங்களில் உள்ள இரத்தினங்கள், அந்த அழகைத் தாங்கள் பெற்று, அவற்றை வெளிப்படுத்துகின்றனர். (ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை ஆராதிப்பவர்களை தேவர்களும் வந்து வணங்குகின்றனர் என்று கருத்து).

505. ரத்ந அங்குரை: அவிரளா மணிபாதரக்ஷே
பாகோந்முகை: பரிகதா புருஷார்த்த ஸஸ்யை:
தேவேந ரங்கபதிநா ஜகதா விபூத்யை
கேதாரிகேவ க்ருபயா பரிகல்பிதா த்வம்

**பொருள்** - உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இரத்தினங்கள் என்னும் முளைகள் நிறைந்துள்ளதும், நான்குவிதமான புருஷாத்தங்கள் என்னும் பயிர்களால் சூழப்பட்டுள்ளதும் ஆகிய நிலையில் நீ உள்ளாய். இப்படியாக உன்னைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதன் என்ற அரசன், தன் நாட்டின் மக்கள் வாழ்விற்காகக் கருணையுடன் பயிரிட்ட வயல் போன்று காணப்படுகிறாய்.

506. நிர்தூத மோஹதிமிரா: தவ ரத்நதீபை:
நிர்விச்யமாந விபவம் நத ராஜபுத்ர்யா
ப்ரத்யக்ஷயந்தி நிகமாந்த நிகூடம் அர்த்தம்
பாதாவநி த்வயி நிவேசித பவபந்தா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் மீது அன்பு வைத்தவர்கள், உன்னில் காணப்படும் இரத்தினக்கற்களின் ஒளி மூலம் தங்களது அறியாமை என்னும் இருள் நீங்கப் பெறுகின்றனர். இதனால் அவர்களுக்கு மேலும் கிட்டுவது என்னவென்றால் – திருப்பாற்கடலின் பெண்ணாகிய ஸ்ரீரங்கநாச்சியாரால் அனுபவிக்கப்படும் பெருமைகள் கொண்டவனும், வேதாந்தங்களில் மறைபொருளாக உள்ளவனும் ஆகிய ஸ்ரீரங்கநாதனைக் காண்கின்றனர்.

507. ரத்நோபல ப்ரகர ஸம்பவ ஏஷ தூராத்
ரங்காதி ராஜ சரணாவநி தாவகீந:
ஆர்த்ர அபராத பரிகிந்ந தியாம் ப்ரஜாநாம்
ஆச்வாஸநார்த்த இவ பாதி கரப்ரஸார:


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! அன்றாடம் புதிதாகக் குற்றம் செய்து விட்டு, அதற்காக வருந்தி, ஸ்ரீரங்கநாதனின் அருகில் வந்து வணங்கித் தயங்கியபடி சிலர் நிற்கிறார்கள். அவர்களைத் தேற்றி, அவர்களை அருகில் அழைப்பதற்காக நீட்டும் கரங்கள் போன்று உன்னுடைய இரத்தினக் கற்களின் ஒளி உள்ளது.

508. வ்யாமுஹ்யத: விஷயி பாலம்ருகாந் மதீயாந்
ஸம்ஸார கர்ம ஜநிதாஸு மரீசிகாஸு
பாதாவநி ப்ரகுண ரத்ந மரீசி ஜாலை:
ஆக்ருஷ்ய விச்ரம்ய கேசவ காந்தி ஸிந்தெள

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸம்ஸாரம் என்பது கோடை காலமாகத் தோன்றுகிறது; இதில் உலக விஷயங்கள் என்பவை கானல் நீராக உள்ளன. இந்தக் கானல் நீரை உண்மை என்று மயங்கிக் கிடக்கும் புலன்கள் என்ற மான் குட்டிகளை, உனது இரத்தினக்கற்களின் ஒளி என்னும் கயிறு கொண்டு நீ கட்ட வேண்டும். அதன் பின்னர், அந்தப் புலன்களை இழுத்துச் சென்று, ஸ்ரீரங்கநாதனின் திருமேனி அழகு என்னும் கடலில் இளைப்பாறும்படிச் செய்ய வேண்டும்.

509. அந்தர் நிதாய முநிபி: பரிரக்ஷ்யமாணாம்
ஆத்மீய ரச்மிகுணிதாம் மணிபாதரக்ஷே
ரங்கேச பாதகமல ப்ரதிபந்ந முத்ராம்
நீவீம் அவைமி பவதீம் நிகமாந்தவாசாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை முனிவர்கள் தங்கள் மனதிலேயே எப்போதும் பாதுகாப்பாக வைத்துள்ளனர். உன்னுடைய இரத்தினங்களில் இருந்து வெளிவரும் ஒளிக்கீற்றுகள், உன்னை அவ்விதம் கட்டி வைக்கும் கயிறுகள் போன்று உள்ளன. அந்தக் கயிற்றில் வைக்கப்படும் முத்திரை போன்று ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் உள்ளன. இப்படியாக உள்ள உன்னைக் கண்டால் வேதாந்தங்கள் என்னும் இரத்தினக்குவியல் நிறைந்த மூட்டை என்றே தோன்றுகிறது.

510. ராமஸ்ய ரங்கவஸதே: சரண அநுஷங்காத்
காஷ்டாம் கதாம் புவநபாவநதாம் ததாநா
பாதாவநி ப்ரசுர ரத்நசிலா நிபத்தா
ஸம்ஸார ஸந்தரண ஸேது: அஸி ப்ரஜாநாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கவிமானத்தைத் தனது இருப்பிடமாக உடைய இராமனின் திருவடித் தொடர்பு என்னும் உயர்த்தியை நீ அடைந்துள்ளாய். இதற்கு மேல் வேறு எந்தவிதமான உயர்வும் இல்லை என்று நிலையை அடைந்து, மிகவும் தூய்மையான நிலையை அடைந்துள்ளாய். பலவிதமான இரத்தினக்கற்களால் நீ கட்டப்பட்டுள்ளாய். இப்படியாக உள்ள நீ ஸம்ஸாரத்தில் உள்ள மக்கள் தங்கள் துன்பங்களைக் கடக்க உதவும் அணையாக உள்ளாய்.

**விளக்கம் -** இங்கு பாதுகையை சேதுவாகக் கூறுகிறார். சேது அணை அயோத்திவாஸியான இராமனின் திருவடித் தொடர்பு உள்ளதாகும், பாதுகை ஸ்ரீரங்கவாஸியான இராமனின் திருவடித் தொடர்பு கொண்டது; அது கற்களால் கட்டப்பட்டது, பாதுகை இரத்தினக்கற்களால் கட்டப்பட்டது; சேதுபாலம் கடலைக் கடக்க உதவியது, பாதுகை ஸம்ஸாரக் கடலை கடக்க உதவுகிறது.

511. திவிஷந் மகுடேஷு ஸஞ்சரந்த்யா:
ப்ரசுர: தே மணிபாதுகே ப்ரகாச:
திவி ரங்கபதே: மஹோத்ஸவார்த்தம்
விததா வந்தந மாலிகேவ பாதி

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் திருவீதி வலம் வரும்போது, அவனை அனைத்து தேவர்களும் வானத்தில் நின்றபடி வணங்குகின்றனர். அப்போது உன்னுடைய ஒளியானது அவர்களின் க்ரீடங்களில் இருந்து வெளிப்படுகின்றது. இதனை காணும்போது, வானத்தில் அரங்கனுக்குக் கட்டப்பட்ட தோரணம் போன்று உள்ளது.

512. ப்ரபவந்தி தவீயஸாம் ஸ்வபாவாத்
தவ ரத்நாநி முகுந்த பாதரக்ஷே
அயஸாமிவ ஹந்த லோஹகாந்தா:
கடிநாநாம் மநஸாம் விகர்ஷணாய

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காக்கும் பாதுகையே! ஒரு சிலர் ஸ்ரீரங்கநாதன் வீதியில் வலம் வரும்போது, வீட்டை விட்டு வராமல் இருப்பார்கள். அவர்களது இரும்பு போன்ற மனங்களை, தூரத்தில் இருந்தே இழுக்கவல்ல காந்தம் போன்று உன்னுடைய இரத்தினக் கற்கள் சாமர்த்தியம் கொண்டவையாக உள்ளவனவே!

513. பரிபச்யதி தேவி ரங்கநாதே
ரஹஸி த்வம் ஸவிதே நிவிச்ய லக்ஷ்ம்யா:
பரிபுஷ்யஸி ரத்நதாமபி: ஸ்வை:
அநஸூயேவ மநோஜ்ஞம் அங்கராகம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாதன் இரவில் ஸ்ரீரங்கநாச்சியாருடன் ஏகாந்தமாக எழுந்தருளி உள்ளான். அப்போது உன்னுடைய அழகான இரத்தினக்கற்களின் ஒளி கொண்டு, ஸ்ரீரங்கநாச்சியாரின் திருமேனியில் அழகான பூச்சைப் பூசுகிறாய். இதனைக் காணும்போது, இராமன் பார்த்திருக்க சீதைக்கு அநஸூயை சந்தனம் பூசியது போன்று உள்ளது.

514. தவ ரத்ந கர அர்ப்பிதம் நவீநம்
பரிக்ருஹ்ய ஸ்திரம் அம்சுகம் மநோஜ்ஞம்
ஜரதம் சுகவத் ஸுக்ருதே தோஹம்
க்ருதிந: கேசவ பாதுகே த்யஜந்தி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! புண்ணிய ஆத்மாக்கள் உன்னுடைய இரத்தினக் கற்களின் ஒளி என்னும் கைகளால் நீ கொடுத்துள்ள புதியதும் நிலையாக உள்ளதும் ஆகிய அழகான திவ்ய சரீரத்தை (உயிர் பிரியும்போது) எடுத்துக் கொள்கின்றனர். இவர்கள், தங்களது மனித உடலைக் கிழிந்த துணி போன்று கவலைப்படாமல் விடுகின்றனர்.

515. அபிதோ மணிபாதுகே நிபத்தை:
க்ருத ஸம்ஸ்கார விசேஷம் ஆத்மரத்நை:
குருதே பவதீ பதம் முராரே:
கடிநே அஸ்மிந் ஹ்ருதி மே நிவேசயோக்யம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய நான்கு பக்கங்களிலும் கடினமான இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது ஸ்ரீரங்கநாதனின் திருவடியை வைத்துப் பழக்கப்படுத்துகிறாய். ஏன் என்றால் - அப்போதுதான் அவன் எனது கடினமான மனதில் தனது திருவடியை வைக்க இயலும். இப்படியாகவே நீ அவன் திருவடிகளை பழக்கப்படுத்துகிறாய்.

516. நிஜ ரத்ந கர அஞ்சலை: மதீயாந்
அபராதாந் அவதூய தத்தஸாம்யா
ரமயா ஸஹிதஸ்ய ரங்கபர்த்து:
பதயோ: அர்ப்ய பாதுகே ஸ்வயம் மாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளி என்னும் கைகள் கொண்டு எனது குற்றங்களை நீக்கி, என்னை உன் போன்று ஆக்கவேண்டும். அதன் பின்னர் ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியுள்ளவனான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் என்னை நீயே சமர்ப்பிக்கவேண்டும்.

517. ரச்மிஜால பரிவேஷ பந்துரா
ரங்கபூமதி ரத்நபாதுகே
விச்வலோசந விஹங்கஹாரிணீ
வாகுரேவ விததா விராஜஸே

**பொருள் -** ஸ்ரீரங்கராஜனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இரத்தினக்கற்களில் இருந்து வரும் ஒளி என்னும் கயிறுகளால் நீ இருக்கமாகக் கட்டப்பட்டு உள்ளாய். இப்படியாக இன்பமாக உள்ள நீ, இந்த உலகத்தினரின் கண்கள் என்னும் பறவைகளைப் பிடிக்க உதவும் பொறி போன்று உள்ளாய்.

**விளக்கம் -** பறவைகளைப் பிடிக்க ஒரு கூண்டைத் தயாரித்து, அதனை நன்றாகக் கட்டி வைத்திருப்பார்கள். இங்கு பாதுகையை அந்தக் கூண்டு என்றார். நமது கண்களைப் பறவைகள் எனவும், இரத்தினங்களில் இருந்து வெளிவரும் ஒளிகள் கயிறுகள் என்றும் கூறுகிறார்.

518. மானஸ அம்புஜ விகாஸஹேதுபி:
ஸேவிதா மணிகணை: ப்ரபாகரை:
பாதுகே வஹஸி ஸத்பி: ஆச்ரிதாம்
தேவி விஷ்ணுபத ஸம்பதம் நவாம்

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாதனை அடைந்தவர்களின் மனம் என்னும் தாமரை மலர்வதற்குக் காரணமாக உன்னுடைய இரத்தினக்கற்கள் சூரியன்கள் போன்று உள்ளன. இத்தகைய சூரியனை வணங்கியபடி உள்ள அந்த அடியார்கள் அனைவரும், நக்ஷத்ரங்கள் போன்று ஒளியுடன் உள்ளனர். இப்படியாக ஸ்ரீரங்கநாதனின் ஆகாயம் போன்ற திருவடிகளின் அழகை நீ அடைகிறாய்.

519. அதிசயித பணீச்வரஸ்ய சௌரே:
ஸ்வயம் அதிரூடே பதோபதாந பார்ச்வா
மணிவலயஜுஷா கரேண மந்தம்
ஸ்ப்ருசஸி பதாவநி பாதயோர் யுகம் தத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஆதிசேஷன் மீது சயனித்துள்ள பெரிய பெருமாளின் திருவடிகளை நீ அடைந்து, அந்தத் திருவடிகளின் அருகிலே அமர்கிறாய். உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளி என்ற வளையல்களை அணிந்த திருக்கரங்களால், அவனது திருவடிகள் இரண்டையும் மெதுவாக வருடுகிறாய்.

520. பவத்யந்தே த்வம் ப்ரணதஸ்ய ஜந்தோ:
ததோகோ: அக்ரஜ்வலநம் த்வத் ப்ரகாசை:
யதோ நாட்யா மத்யமயா விநிர்யந்
கதிம் விந்தேத் சேசவ பாதரக்ஷே

**பொருள்** – அழகான கேசங்களைக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னை ஆராதித்தபடி உள்ள மனிதனின் இதயம் என்ற பகுதியானது, அந்திம நேரத்தில் உன்னுடைய இரத்தினங்களின் ஒளி மூலமாக மிகவும் பிரகாசமாக உள்ளது. இந்த வெளிச்சம் காரணமாக, அதன் நடுவில் உள்ள நாடி மூலம் வெளியே கிளம்பும் ஜீவன், அர்ச்சிராதி மார்க்கத்தை அடைகிறான்.

**விளக்கம்** - இதயத்தில் இருந்து பல நாடிகள் தலைக்குச் செல்கின்றன. அவற்றில் ஒன்று மட்டும் உச்சந்தலைக்குச் செல்கிறது. இதற்கு ஸுஷும்நா நாடி என்று பெயர். இந்த நாடி வழியே வெளிக்கிளம்பும் ஜீவன் மட்டுமே அர்ச்சிராதி மார்க்கமாக, ஸ்ரீவைகுண்டம் அடைகிறான். பல நாடிகள் இதயத்தில் உள்ளதால், வெளிக்கிளம்பும் ஜீவனுக்கு இந்த குறிப்பிட்ட நாடி எது என்று அறிவதற்கு, பாதுகையின் இரத்தினக்கற்கள் ஒளியிட்டுக் காண்பிக்கின்றன என்றார்.

521. அசிதில பரிணத்தா ரச்மிஜாலை: மணீநாம்
துரதிகம் தமம் ந: பாரம் ஆரோபயந்தீ
கமல நயநம் ஆத்யம் கர்ணதாரம் ததாநா
பவஸி பவ பயோத: பாதுகே போதபாத்ரீ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளிக்கீற்றுகள் என்னும் கயிறு மூலம் நீ கொட்டியாகக் கட்டப்பட்டிருக்கிறாய். ஸம்ஸாரம்

என்ற கடலில் அக்கரையாகவும், அடைவதற்குக் கடினமாக உள்ளதும் ஆகிய ஸ்ரீவைகுண்டத்திற்கு எங்களை நீ இட்டுச் செல்கிறாய். அனைத்திற்கும் முன்பாக உள்ள, தாமரை போன்ற கண்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதனை கப்பலின் மாலுமியாகக் கொண்டுள்ளாய். இப்படியாக உள்ள நீ ஸம்ஸாரம் என்ற கடலைக் கடக்க உதவும் கப்பல் போன்று உள்ளாய்.

522. மணிகண கிரணை: தே கல்ப்பிதே குல்மபேதே
ம்ருகயு: இவ குரங்கீம் த்வாம் புரஸ்க்ருத்ய பவ்யாம்
ஊரதி சரண ரக்ஷே பக்தி பாச அவருத்தம்
ஹ்ருதய ஹரிணயூதம் ப்ராணிநாம் ரங்கநாத:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்டுள்ள இரத்தினக்கற்களின் ஒளியானது ஒரு புதர் போன்று உள்ளது. அந்தப் புதரில் அமர்ந்துள்ள வேடன் போன்று ஸ்ரீரங்கநாதன் உள்ளான். அவன் செய்வது என்ன? பெண் மான் போன்ற அழகான உன்னை முன்னே நிறுத்துகிறான். இதன் மூலம், பக்தி என்னும் கயிறு கொண்டு கட்டப்பட்ட மக்களின், இதயங்கள் என்னும் மான்களை பிடித்துக்கொண்டு போகிறான்.

523. பரிசித பதமூலா பாதுகே ரங்கிண: த்வம்
ப்ரபவதி புஜமத்யே கௌஸ்துப: அயம் ததாபி
பவதி ப்ருசம் அதஸ்தாத் தேஜஸா பவ்ய பூமநா
சலபித துரிதாநாம் தாவகாநாம் மணீநாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே ! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளின் கீழே நீ எப்போதும் உள்ளாய். ஆனால் கௌஸ்துப மணியோ அவனது திருமார்பில் உயர்ந்த இடத்தில் உள்ளது. ஆயினும், கௌஸ்துப மணி என்பது அழகான ஒளி பரப்புவதை மட்டுமே செய்கிறது. உனது கற்களில் இருந்து வெளிப்படும் ஒளியானது, அனைவரின் பாவங்களையும் போக்குவதாக உள்ளது. ஆகவே உயர்ந்த இடத்தில் உள்ளபோதிலும் கௌஸ்துப மணியானது, உன்னுடைய இரத்தினக்கற்களைக் காட்டிலும் தாழ்வான தாகவே உள்ளது.


Email:sridharan_book@yahoo.co.in

524. கல்பச்ரேணீ திந பரிணதௌ ஜந்து ஜாலே ப்ரஸுப்தே
விஷ்வக் வ்யாப்தே ஜகதி தமஸா பாதுகே தாத்ருசேந
ஸ்த்யாந ஆலோகை: தவ மணிகணை: வாஸகேஹ ப்ரதீபா
ஸம்பத்யந்தே ஸஹ கமலயா ஜாகரூகஸ்ய யூந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பல கல்ப காலங்களின் வரிசையான ஒரு பகல் பொழுதின் முடிவில் ஜீவராசிகள் அனைத்தும் துன்பம் அடைந்தபோது, இந்த உலகம் முழுவதும் இருளால் எங்கும் சூழப்பட்டு காணப்படும். அப்போது உணர்வற்றுக் கிடக்கும் ஜீவராசிகளின் அருகில், அவற்றின் தாய் தகப்பன் போன்று ஸ்ரீரங்கநாச்சியாருடன் ஸ்ரீரங்கநாதன் விழித்தபடி இருப்பான். இப்படியாக அவர்கள் உள்ள இடத்தில் ஒளி வீசும் விளக்குகளாக, உன்னில் பதிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் ஒளிர்ந்தபடி இருக்கின்றன.

525. ஸ்ரீரங்க இந்தோ: சரண கமலத்வந்த்வ ஸேவா வலேபாத்
ஆரூடாயாம் த்வயி மகபுஜாம் ஆநதாந் மௌளிபாகாந்
தேஷாம் சூடாமணிபி: அநகை: தாவகாநாம் மணீநாம்
கேசாகேசி ப்ரபவதி மித: த்ராஸ லேச உஜ்ஜிதாநாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளின் தொடர்பு காரணமாகக் கர்வம் கொள்ளும் நீ, அவனது திருவடிகளை வணங்கும் தேவர்களின் தலைகளில் அச்சம் கொள்ளாமல் ஏறுகிறாய். அப்போது சற்றும் தோஷம் இல்லாத உன்னுடைய இரத்தினக்கற்களுக்கும், தேவர்களின் தோஷம் இல்லாத க்ரீடங்களில் உள்ள இரத்தினக்கற்களுக்கும் தலைமுடியைப் பிடித்த சண்டை ஏற்படுகிறது. (இரத்தினங்களில் புள்ளிகள் இருந்தால் அந்த தோஷத்திற்கு த்ராஸம் என்று பெயர். அந்த தோஷம் இங்கு பாதுகையில் உள்ள இரத்தினங்களுக்கு இல்லை என்கிறார்).

526. த்வத் ரத்ன உபல ரச்மி பஞ்ஜர தநுத்ராணம் ஸ்திரம் பிப்ரத:
மாத: மாதவ பாதுகே ந து புநர்ஹஸ்தை: ஸ்ப்ருசந்தி ஆகுலை:
தூர உத்ஸிக்த துராட்ய ஜிஹ்மக பில த்வா: பால கோபாநல
ஜ்வாலாமித்ர கடோர வேத்ரலதிகா தத்த அர்த்தசந்த்ரம் வபு:

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருமார்பில் கொண்ட பெரியபெருமாளின் பாதுகையே! தாயே! உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளி என்னும் உறுதியான கலசத்தை ஒரு சிலர் தரித்து நிற்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் – கர்வம் போன்ற தாழ்வான குணங்கள் கொண்டுள்ள பணக்காரர்கள் என்னும் பாம்புகள் வசிக்கின்ற, மாளிகைகள் எனப்படும்

பொந்தின் அருகில் சென்று, அந்தப் பொந்தின் வாயில் காப்போனின் கோபம் என்னும் தீயைக் கக்குகின்ற பிரம்பினால், சந்த்ரகலை போன்ற கழுத்தில் கை வைத்துத் தள்ளப் படுகின்ற உடலைத் தொடமாட்டனர்.

527. ஸம்வர்த்த உதித ஸூர்யகோடி ஸத்ருசீம் ரங்கேச பாதாவநி
ப்ரஸ்தௌஷி ப்ரதியத்ந ரத்நநிகர ஜ்யோதி: சடாம் உத்படாம்
தந் மந்யே ததநந்ய ஸூரி பரிஷந் மத்யே நிவேசாய ந:
தாத்ருக் வாஸரஸே அபி பேத்தும் அசிராத் அஸ்மாகம் அந்தம் தம:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ப்ரளய காலத்தில் உதிக்கின்ற கோடி சூரியன்களைக் காட்டிலும், உனக்கு அலங்கரமாக உள்ள இரத்தினக்கற்களின் ஒளியானது அதிகமாகவே உள்ளது. இப்படியாக உனது ஒளியை எங்கும் பரவச் செய்கிறாய். இதற்குக் காரணம் என்னவென்றால் – மனிதர்களாகிய எங்களுக்கு, இந்த உலக வாழ்க்கையில் மட்டுமே அதிகமான மகிழ்ச்சி உள்ளது. ஆனாலும் உன்னைத் தவிர வேறு எதனையும் கருத்தில் கொள்ளாத ஆதிசேஷன், கருடன் போன்ற நித்யசூரிகளின் நடுவில் எங்களையும் நிலை நிறுத்த நீ முடிவு செய்தாய் போலும். இதற்கு இருக்கவேண்டிய தகுதிகளை உண்டாக்கும் பொருட்டு, எங்களுக்குள் இருக்கும் அறியாமை என்னும் இருளை நீக்குவதற்காகவே நீ இப்படி ஒளிர்கிறாய் என்று எண்ணுகிறேன்.

528. ஸலீலம் விந்யஸ்ய த்வயி சரணரக்ஷே நிஜபதம்
யத்ருச்சா நிஷ்க்ராந்தே விஹரதி ஹரௌ ரங்கரஸிகே
திசா ஸௌதாந் அஷ்டௌ ஜநயஸி ததா நிர்ப்பரமிளந்
மணிச்சாயா மாயா கந கடித கேது வ்யதிகராந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! ஸ்ரீரங்கத்தில் எப்போதும் வசிப்பதை இன்பமாக எண்ணும் ஸ்ரீரங்கநாதன், உன் மீது தனது திருவடிகளை வைத்தபடி ஸஞ்சாரம் செய்வதை உல்லாசமாகவே செய்கிறான். சில நேரங்களில் திடீரென்று உன்னைச் சாற்றிக்கொண்டு நம்பெருமாள் வெளியில் வரும்போது, உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளியானது எட்டுத் திசைகளிலும் உள்ள மாட மாளிகைகளில் பரவி நிற்கிறது. இப்படி நெருக்கமாக உள்ள அந்த ஒளி வெள்ளத்தைக் காணும்போது, நம்பெருமாள் எழுந்தருளும் நேரத்தில் கட்டப்படும் கொடிகள் போன்று தோன்றுகிறது.

529. மஹார்க்கை: ஆச்லிஷ்டாம் மணிபிரவதூத த்யுமணிபி:
கதம் சித் க்ஷேத்ரஜ்ஞை: அதிகதபதாம் அம்ப! பவதீம்
முகுந்தேந த்ராதும் பத கமல மூலே விநிஹிதாம்
நிராபாதாம் மந்யே நிதிம் அநக வாசாம் நிரவதிம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! மிகவும் விலை உயர்ந்ததாகவும், சூரியனையும் தாழச்செய்கின்ற ஒளியுடன் கூடிய இரத்தினக்கற்களைக் கொண்டதாகவும், பெருமை அறிந்தவர்களால் மிகவும் கடினத்துடன் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், இதனைப் பாதுகாப்பதற்காகவே ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளில் வைக்கப்பட்டதாகவும் உள்ள நிதி போன்று நீ உள்ளாய். மற்றவர்களால் எளிதில் கவர இயலாத நிதியாக உள்ள உன்னை, வேதவாக்குகள் என்கிற நிதியாகவே எண்ணுகிறேன்.

530. தாபத்ரயம் நிருந்தே
பசதி கஷாயாந் விசோஷயதி பங்கம்
தேஜஸ்த்ரிதயம் இதம் தே
சங்கே ரங்கேந்த்ர பாதுகே தேஜ:

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! சந்திரன், சூரியன் மற்றும் அக்னி ஆகிய மூன்றும் சேர்ந்தது போன்று உனது ஒளி உள்ளது. இந்த ஒளியானது - மக்களின் மூன்று விதமான துன்பங்களையும் நீக்குகிறது; மனதின் அறியாமையை எரித்து விடுகிறது; பாவங்களை உலர வைக்கிறது. இப்படியாகவே உனது ஒளி உள்ளதாக நான் எண்ணுகிறேன்.

**விளக்கம்** – மூன்று விதமான துன்பங்கள் என்பது ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம் மற்றும் ஆதிபௌதிகம் என்பதகும். இதில் ஆத்யாத்மிகம் என்பது உடலில் உண்டாகும் நோய் போன்றவை; ஆதிதைவிகம் என்பது மழை, காற்று போன்ற இயற்கை அழிவுகள்; ஆதிபௌதிகம் என்பது மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் ஆகும். பாதுகையின் ஒளியானது இவற்றை நீக்குவதால் சந்திரன்; அறியாமையை எரிப்பதால் அக்னி; பாவங்களை உலர்த்துவதால் சூரியன் என்று கொள்ள வேண்டும்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ரத்ந ஸாமான்ய பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (16.பஹுரத்ந பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - கடந்த பத்ததியில் நம்பெருமாளின் திருவடிகளில் உள்ள பாதுகையில் பதிக்கப்பட்ட இரத்தினக்கற்களைத் தூரத்தில் நின்று பார்க்கும்போது, அவை ஒளிர்கின்றன என்றார். நம்பெருமாளுக்குச் சற்று அருகில் சென்றால், அந்த இரத்தினங்கள் வெண்மை, சிகப்பு, பச்சை மற்றும் நீல வர்ணங்களாகத் தோன்றும். இவை இந்த பத்ததி தொடங்கி ஒவ்வொரு வர்ணத்திற்கும் ஒவ்வொரு பத்ததியாகக் கூறுகிறார். முதலில் நான்கு வர்ணங்களின் சேர்க்கையை இந்த பத்ததியில் கூறிவிட்டு, அடுத்து நான்கு பத்ததியில் தனித்தனியாகக் கூறுகிறார்.

531. முகபாஹுரு: பாதேப்யோ
வர்ணாந் ஸ்ருஷ்டவத: ப்ரபோ:
ப்ரபத்யே பாதுகாம் ரத்நை:
வ்யக்தவர்ண வ்யவஸ்திதிம்

**பொருள்** – தன்னுடைய திருமுகம், புஜங்கள், தொடைகள், திருவடிகள் ஆகியவற்றில் இருந்து நான்கு வர்ணங்களைப் (அந்தணன் முதலானவை) படைத்த ஸ்ரீரங்கநாதனின் – பலவிதமான இரத்தினக்கற்களால் வர்ணங்கள் (நிறங்கள்) என்பது இன்னவை என்று விளக்கியபடி உள்ள பாதுகையை நான் சரணம் அடைகிறேன்.

532. மணிபி: ஸித ரக்த பீத க்ருஷ்ணை:
பவதீ காஞ்சந பாதுகே விசித்ரா
யுகபேத விகல்பிதம் முராரே:
யுகபத் தர்சயதீவ வர்ணபேதம்

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! வெண்மை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய பலவிதமான இரத்தினக்கற்களின் நிறம் மூலமாக, ஸ்ரீரங்கநாதன் பல்வேறு யுகங்களில் நிற்கும் நிற வேற்றுமையை ஒரே நேரத்தில் நீ காண்பிக்கிறாய் போலும்.

**விளக்கம்** - எம்பெருமான் க்ருதயுகத்தில் வெண்மையாகவும், த்ரேதாயுகத்தில் சிவப்பாகவும், த்வாபரயுகத்தில் மஞ்சளாகவும், கலியுகத்தில் கறுப்பாகவும் உள்ளதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவை அனைத்தையும் ஒன்றாகப் பாதுகை காண்பிக்கிறது.


**Email:**sridharan_book@yahoo.co.in

533. நவரத்ந விசித்ரிதா முராரே:
பதயோ: த்வம் மணிபாதுகே விபாஸி
நவகண்டவதீ வஸுந்தரேவ
ப்ரணயாத் ஜந்மபுவம் ஸமாச்ரயந்தீ

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட ஒன்பது விதமான இரத்தினக்கற்கள், பலவிதமான வர்ணங்களுடன் கூடியதாக ஒளிர்ந்தபடி நீ உள்ளாய். இப்படியாக நீ, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்னும் பிறப்பிடத்தை அடைத்துள்ள, ஒன்பது கண்டங்களுடன் கூடிய பூமி போன்று உள்ளாய்.

**விளக்கம் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இருந்து பூமி வெளிப்பட்டது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தப் பூமியில் பாரத, கிம்புருஷ, ஹரிவர்ஷ, இளாவ்ருத, பத்ராச்வ, கேதுமால, ரம்ய, ஹிரண்மய மற்றும் குரு என்னும் ஒன்பது கண்டங்கள் உள்ளன. இது போன்று பாதுகையில் முத்து, சிவப்பு, பச்சை, நீலம், வைடூரியம், கோமேதகம், வைரம், பவழம் மற்றும் தங்கம் ஆகிய ஒன்பது விதமான நிறங்கள் உள்ளன. இதனால் ஒற்றுமை கூறுகிறார்.

534. ஸஹஸா விநிவேத்ய ஸாபராதாந்
த்வத் ஆதீந ஸ்வபதே முகுந்த பாதே
அருணோபல ஸக்த மௌக்திக ஸ்ரீ:
ஸ்மயமாநேவ விபாஸி பாதுகே த்வம்

**பொருள் -** ஸ்ரீரங்ககநாதனின் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட சிவப்புக் கற்களின் மீது முத்துக்களின் வெண்மையாக ஒளியானது பரவியபடி உள்ளது. இது எப்படி உள்ளது என்றால் – உனக்கு வசப்பட்டு உன் விருப்பத்தின்படி நடக்கின்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில், குற்றங்கள் பல செய்தவர்களை வெகுவேகமாகக் கொண்டு சேர்த்து, மகிழ்ந்து புன்னகை வீசுவது போன்று உள்ளது.

535. பஹு ரத்ந ஸமுத்பவம் மயூகம்
தவ மந்யே மணிபாதுகே முராரே:
சரண உபகதம் மயூரபிஞ்சம்
மகுட ஆரோஹண ஸாஹஸம் ப்ரமார்ஷ்டும்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! பலவிதமான இரத்தினக்கற்களின் ஒளியால், பல வர்ணங்களில் நீ காணப்படுகிறாய். உன்னைக் காணும்போது- முன்பு கண்ணனின் தலையில் அமர்ந்த மயில் பீலியானது, அந்தச் செயலுக்காக மன்னிப்புக் கேட்டு, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் விழுந்து கிடப்பது போன்று உள்ளது (பாதுகையை மயில் பீலியாகக் கூறுகிறார்).

536. ப்ரபயா ஹரி நீல மௌக்திகாநாம்
விகஸந்த்யா திசஸீவ பாதுகே த்வம்
மதுபித் சரணாரவிந்த லக்ஷ்ம்யா:
ஸ்ரஜம் இந்தீவர புண்டரீக பத்தாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் மஹாலக்ஷ்மி போன்று உள்ளன. உன்னில் பரவுகின்ற இந்திரநீலக் கற்கள், முத்துக்கள் ஆகியவற்றின் ஒளி மூலமாக, இந்த மஹாலக்ஷ்மிக்கு விருப்பமான கருநெய்தல் மற்றும் செந்தாமரை ஆகிய மலர்கள் கொண்டு நீ மாலை தொடுக்கிறாய் போலும்.

537. தவ மாதவ பாதுகே மணீநாம்
ப்ரபயா தேவி ஸித ஆஸித ஆருணாநாம்
வஹதே கிரிசஸ்ய மௌளிகங்கா
குமுத இந்தீவர பத்ம காநநாநி

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாச்சியாரைத் தரித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய வெண்மை, கருப்பு மற்றும் சிவப்பு ஆகிய இரத்தினக்கற்களின் ஒளி காரணமாக, சிவனின் தலையில் உள்ள கங்கையானது ஆம்பல், கருநெய்தல் மற்றும் செந்தாமரை போன்ற மலர்கள் நிறைந்த காடுகளை அடைகிறது போலும் (பாதுகையை சிவன் தனது தலையில் ஏற்பதால், அந்த நிறங்கள் சிவனின் தலையில் மலர்கள் போன்று காணப்படுகின்றன என்றார்).

538. ப்ருதக் விதாநாம் த்யுதிபி: மணீநாம்
த்வாம் பாதுகே லோஹித சுக்ல க்ருஷ்ணாம்
விஹரஹேதோ: இஹ ரங்கபர்த்து:
பாத அநுஷக்தாம் ப்ரக்ருதிம் ப்ரதீம:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பலவிதமான இரத்தினக்கற்களின் ஒளி காரணமாக சிவப்பு, வெண்மை, கறுப்பு ஆகிய நிறங்களை நீ வெளிப்படுத்துகிறாய். இப்படியாக உன்னைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை வந்தடைந்த ப்ரக்ருதி போன்று உள்ளாய்.

**விளக்கம்** - உலகில் உள்ள பலவிதமான பொருள்களுக்கும் மூல காரணமாக உள்ள ஜடப்பொருளை மூலப்ரக்ருதி என்றும், ப்ரக்ருதி என்றும் கூறுவர். இதற்கு ரஜஸ், தமஸ் மற்றும் ஸத்வம் ஆகிய குணங்கள் உண்டு. ஸத்வம் வெண்மையாகவும், தமஸ் கறுப்பாகவும், ரஜஸ் சிவப்பாகவும் கூறப்படும். ஆக இந்த மூன்றும், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உள்ள பாதுகையில் இருந்து வெளிபடும் நிறங்களால் உண்டாவதாகக் கூறுகிறார்.

539. தமால நீல த்யுதிம் இந்த்ர நீலை:
முக்த அநுவித்தாம் மணிபாதுகே த்வாம்
அவைமி ரங்கேச்வர காந்தி ஸிந்தோ:
வேலாம் அவிச்ராந்த கதா கதார்ஹம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இரத்தினக்கற்களின் நீல நிறமான ஒளி காரணமாக, தமால மரம் போன்று உள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் திருமேனியில் இருந்து வெளிவரும் ஒளியாகிய கடல் அலைகளை வரவேற்கின்ற கரை போன்று நீ உள்ளாய். அந்தக் கரையில் காணப்படும் முத்துச்சிப்பிகள் போன்று உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்கள் உள்ளன.

**விளக்கம்** - கடலின் கரையில் அடர்ந்த பச்சை நிறத்தில் இலைகள் கொண்ட தமால மரங்கள் உள்ளதால், அங்கு நீலநிறமாகக் காணப்படும். அந்தக் கரையில், அலைகளால் இழுத்து வரப்பட்ட முத்துச்சிப்பிகள் மற்றும் முத்துக்கள் காணப்படும். இந்தக் கடலில் இடைவிடாமல் வீசும் அலையாக, ஸ்ரீரங்கநாதனின் திருமேனியில் இருந்து வெளிவரும் ஒளியைக் கூறுகிறார்.

540. அவைமி ரங்கேச்வர பாதுகாப்யாம்
அகால கால்யம் விபவம் விதாதும்
வஜ்ரேந்த்ர நீல வ்யபதேச த்ருச்யம்
பந்தீக்ருதம் நூநம் அஹஸ்த்ரியாமம்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் வஜ்ஜிரக்கல் என்றும், இந்திர நீலக்கல் என்றும் இருவிதமான இரத்தினங்கள் உள்ளன. இவை பகல் போன்றும், இரவு போன்றும் தோன்றுகின்றன. இதனைக் காணும்போது, மோக்ஷம் என்னும் தடை இல்லாத ஐச்வர்யத்தை, எங்களைப் போன்றவர்களுக்கு இரவுபகல் பாராமல் அளிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு, இவை உன்னில் சிறை வைக்கப்பட்டதாகவே நான் எண்ணுகிறேன்.

541. பதஸ்ய கோப்த்ரீ பவதீ முராரே:
மணிஸ்ப்ருசா மௌக்திக ரத்நபாஸா
அந்தர் த்ருசம் ஸாஞ்சநயா முநீநாம்
அநக்தி கர்ப்பூர சலாகயேவ

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் நீ, உன்னுடைய இந்திரநீலக் கல்லைத் தொடுகின்ற முத்தின் ஒளி என்னும் மையுடன் சேர்ந்த குச்சி கொண்டு, முனிவர்களின் ஞானக் கண்களுக்கு மை தீட்டுகிறாய் போலும்.

**விளக்கம் -** முத்தின் வெண்மையான ஒளியானது நீலக்கற்களின் மீது விழுகிறது. அப்போது அதனைக் காண்பதற்கு, நுனியில் மை தடவப்பட்ட குச்சி போன்று தோற்றம் அளிக்கிறது. இந்த மையை முனிவர்களின் ஞானக்கண்களில் தீட்டி, அவர்கள் ஸ்ரீரங்கநாதனைக் காண உதவுவதாகக் கூறுகிறார்.

542. முக்தா மயூக ப்ரகரை: ஸுபத்ரா
க்ருஷ்ணா மஹோந்த்ரோபல ரச்மிஜாலை:
மாந்யா முராரேர் மணிபாதுகே த்வம்
விஹார யுக்தா விஜயம் வ்ருணோஷி

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளியால் வெண்மையாக உள்ள நீ, கண்ணனின் தங்கையான சுபத்ரை போன்று உள்ளாய். இந்த்ரநீலக் கற்களின் ஒளியால் கருமையான திரௌபதி போன்று உள்ளாய். இப்படியாக நீ முரன் என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனுக்கு ப்ரியமானவளாக உள்ளாய். எங்கு சென்றாலும் வெற்றியுடன் உள்ள நீ, அர்ஜுனனைத் திருமணம் செய்து கொண்டாய் போலும்.

543. விசித்ர வர்ணாம் மணிபாதுகே த்வாம்
சந்தோமயீம் ஸாம நிபத்த கீதிம்
முநீந்த்ர ஜுஷ்டாம் த்விபதாம் முராரே:
ப்ரத்யாயிகாம் காஞ்சித் ருசம் ப்ரதீம:

**பொருள்** - இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உனது இரத்தினங்களின் பலவிதமான நிறங்களைக் காணும்போது அக்ஷரங்கள் (எழுத்துக்கள்) போன்று உள்ளன. இவை மூலம் நீ வேதமயமாகவே உள்ளாய். உன்னைக் கண்டவுடன் மக்கள் அனைவரும், "எங்கள் குற்றங்களைப் பொறுப்பாய்", என்று பாடுகின்றனர். இப்படியாக நீ முனிவர்களால் வணங்கப்பட்டும், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைந்து, அவனை உணர்த்துபவளாகவும் உள்ளாய். இப்படியாக உள்ள உன்னை ரிக் மந்த்ரம் என்றே கொள்கிறோம்.

544. ப்ரஸேதுஷீ கோத்ரபித: ப்ரணாமை:
புஷ்ணாஸி ரங்கேச்வர பாதுகே த்வம்
மணிப்ரபா ஸம்வலந உபதேசாத்
ப்ராயஸ் ததர்ஹாணி சராஸநாநி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மலைகளைப் பிளந்தவனான இந்திரன் உன்னை வணங்குகிறான். இந்த நமஸ்காரம் கண்டு நீ மகிழ்ந்து, உன்னுடைய பலவிதமான இரத்தினங்களுடைய ஒளியின் சேர்க்கை மூலம் இந்த்ரனுக்கு ஏற்ற வில்லை உண்டாக்குகிறாய் போலும்.

545. சோணாச்மநாம் தவ ஹரிந்மணி ரச்மி பிந்நம்
பாலாதபம் பலிவிமர்தந பாதரக்ஷே
ச்யாமீக்ருதம் சுகசகுந்த கணப்ரவேசாத்
சங்கே ஸதாம் கிமபி சாலி வநம் விபக்வம்

**பொருள்** - மஹாபலியை அடக்கிய ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய சிவப்புக் கற்களின் ஒளியில், பச்சைக் கற்களின் ஒளியானது கலந்து நிற்கிறது. இதனைக் காணும்போது, இளம் வெயில் சூழ்ந்துள்ள சிறந்த நெற் பயிர்கள் கொண்ட வயல் ஒன்று பச்சைக்கிளிகள் புகுந்ததால் எங்கும், மேலும் பசுமையாகக் காட்சி அளிப்பதாக உள்ளது.


**Email:**sridharan_book@yahoo.co.in

546. ஸம்பித்யமாந மணிவித்ரும மௌக்திக ஸ்ரீ:
ஸைரந்த்ரிகேவ பவதீ மணிபாதரக்ஷே
ப்ரஸ்தௌதி ரங்கந்ருபதே: சரணாரவிந்தே
கஸ்தூரிகா குஸ்ருண சந்தன பங்க சர்ச்சாம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட கற்களில் இந்த்ரநீலம், பவளம், முத்து ஆகியவை சிறப்பாக, ஒன்றுடன் ஒன்று கலந்தபடி ஒளி வீசுகின்றன. இதனைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளில் கஸ்தூரி, குங்குமப்பூ, சந்தனம் ஆகியவை கலந்த குழம்புப் பூச்சைப் பூசுகின்ற அலங்கார பணிப்பெண் போன்று நீ உள்ளாய்.

547. ஆதந்வதீம் அஸுரமர்தந பாதரக்ஷே
சுத்தாந்தபக்ஷ்மள த்ருசாம் மதந இந்த்ர ஜாலம்
வைஹாரிகீம் விவித ரத்ந மயூக லக்ஷ்யாத்
மந்யே ஸமுத்வஹஸி மோஹந பிஞ்சிகாம் த்வம்

**பொருள் -** அசுரர்களுக்கு விரோதியாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட பலவிதமான இரத்தினக்கற்களில் இருந்து, பல வர்ணங்கள் கொண்ட ஒளியின் சேர்க்கை ஏற்படுகிறது. இதனைக் காணும்போது நீ மயில்தோகை ஒன்றை வைத்திருப்பது போல் உள்ளது. இந்த மயில் தோகையானது, அந்தப்புரத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதனின் நாயகிகளுக்கு காமத்தை ஏற்படுத்தி, இப்படியாக இந்த்ரஜாலம் செய்யும் விளையாட்டுக் கருவியாகவே உள்ளது.

548. ரத்நைர் வ்யவஸ்தித ஸித அஸித சோணை வர்ணை:
ஆலோகவத்பி: அஜஹத் ச்ருதி ஸந்நிகர்ஷை:
த்ரஷ்டும் முகுந்த சரணௌ அநிமேஷ த்ருச்யெள
ஸந்த்ருச்யஸே ஜநநி ஸம்ப்ருத நேத்ர பங்க்தி:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! உன்னில் உள்ள இரத்தினங்கள் வெண்மை, கறுப்பு, சிவப்பு என்று பலவிதமான நிறங்கள் கொண்டுள்ளன; பலவிதமான ஒளியை உடையதாக உள்ளன; வேதங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக உள்ளன (அதாவது காதுவரை நீண்டதாக உள்ளன); இப்படியாக இவற்றைக் காணும்போது, உனது பல வரிசையில் அமந்துள்ள கண்கள் போன்று அவை உள்ளன.

இப்படியாக உள்ள கண்கள் மூலம் நீ ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை இமைக்காமல் பார்த்தபடி உள்ளாய்.

549. காருத்மத அந்தரித மௌக்திக பங்க்தி லக்ஷ்யாந்
துர்வா மதூக ரசிதம் துரிதோபசாந்த்யை
மாத: ஸ்வயம் வஹஸி முக்த்ததியாம் ப்ரஜாநாம்
மங்கள்யமால்யம் இவ மாதவ பாதுகே த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரைத் தரித்தவனான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! உன்னிடத்தில் பதிக்கப்பட்ட இரத்தினங்களில் பச்சை இரத்தினங்களும், முத்துக்களும் வரிசையாக உள்ளன. இதனைக் காணும்போது – இந்த உலகில் உள்ளவர்களுடைய பாவம் நீங்குவதற்காக, அருகம்புல் மற்றும் இலுப்பைமலர் கொண்டு கட்டப்பட்ட மாலையை, அவர்களுக்காக நீயே அணிந்துள்ளதாகத் தோன்றுகிறது.

550. ரங்காதிராஜ பதரக்ஷிணி ராஜதே தே
வஜ்ர உபஸங்கடித மௌக்திக வித்ருமஸ்ரீ:
ஸக்தா சிரம் மநஸி ஸம்யமிநாம் நிவாஸாத்
ஸூர்ய இந்து அஹ்நிமய மண்டல வாஸநேவ

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! வைரத்துடன் சேர்த்துப் பதிக்கப்பட்ட முத்து, பவழம் ஆகியவற்றின் ஒளியானது - நீண்டகாலமாக யோகிகளின் மனதில் நீ இருந்து வருவதால், அங்குள்ள சூரியன், சந்திரன், அக்னி மண்டலங்களின் வாசனையுடன் கூடியதாக உன்னில் காணப்படுகிறது.

**விளக்கம்** - யோகிகள் த்யானம் செய்யும்போது சூரியமண்டலம், சந்திரமண்டலம், அக்னி மண்டலம் என்பவற்றை த்யானித்து, அதன் நடுவில் பாதுகையுடன் கூடிய ஸ்ரீரங்கநாதனை த்யானிப்பார்கள். ஆக அந்த மண்டலங்களின் தன்மைகள் பாதுகையில் காணப்படுகின்றன என்று கருத்து.

551. ஆஸக்த வாஸவசிலா சகலா: த்வதீயா:
பத்மா ஸஹாய பதரக்ஷிணி பத்மராகா:
ப்ரத்யக்ஷயந்தி கமபி ப்ரமர ஆபிலீநம்
பாதாரவிந்த மகரந்த ரஸப்ரவாஹம்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** தாமரையில் அமர்ந்துள்ள ஸ்ரீரங்கநாச்சியாரை விட்டுப் பிரியாத ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! இந்த்ரநீலக் கற்களின் துணுக்குகள் கொண்ட சிவந்த பத்மராகக்கற்கள், ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் வண்டுகள் போன்று காணப்படுகின்றன. இதனைக் காணும்போது அவனது திருவடிகளில் தேன் பெருகி நிற்பதைக் உணர முடிகிறது.

552. அந்த: புராணி ஸம்யேஷு அபிகந்து மேகா
ரங்கேசிது: ஜ்ஞுபயஸீவ பதாவநி த்வம்
முக்தா அம்சுஜால மிளநாத் ருசிரை: ப்ரவாளை:
பிம்பாதரம் ஸ்மிதவிசேஷயுதம் ப்ரியாணாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடன் நீ சில நேரங்களில் தனித்து இருக்கிறாய். அப்போது உன்னில் பதிக்கப்பட முத்துக்களின் ஒளியுடன் கூடிய பவழங்கள் மிகவும் அழகாகத் தோற்றம் அளிக்கின்றன. இவை ஸ்ரீரங்கநாச்சியாரின் புன்னகையுடன் கூடிய கோவைப்பழம் போன்ற உதடுகளை ஸ்ரீரங்கநாதனுக்கு நினைவுபடுத்துவது போன்று உள்ளது.

553. ரங்கேச்வரஸ்ய ம்ருகயோ: சரணாவஸக்தாம்
ரக்ஷ: கபீந்த்ர மகுடேஷு நிவேச யோக்யாம்
மந்யே பதாவநி நிபத்த விசித்ர ரத்நாம்
மாயாம்ருகஸ்ய ரசிதாம் இவ சர்மணா த்வாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மாரீசனை வேட்டை ஆடிய ஸ்ரீரங்கநாதனின் திருவடியிலும் நீ உள்ளாய்; அரக்கர்களின் தலைவன் விபீஷணன், குரங்குகளின் தலைவன் சுக்ரீவன் ஆகியவர்களின் தலைகளிலும் நீ உள்ளாய். பலவிதமான இரத்தினங்கள் கொண்டு இழைக்கப்பட்ட உன்னைக் காணும்போது, மாரீசன் என்னும் மாயமானின் தோலால் செய்யப்பட்டவளோ என்று நான் நினைக்கிறேன்.

554. பத்த்நாஸி ரங்கபதி விப்ரம பாதுகே த்வம்
மாயாகிராத மகுடேஷு நவபர்ஹமாலாம்
ஆக்ருஷ்ட வாஸவ தநு: சகலை: மணீநாம்
அந்யோந்ய ஸங்கடித கர்புரிதை: மயூகை:

**பொருள் -** ஸ்ரீரங்கத்தின் நாயகனான நம்பெருமாளின் பாதுகையே! ஒன்றுடன் ஒன்று இணைந்து பலவிதமான வானவில்லின் துணுக்குகள் போன்று உனது இரத்தினங்களின் ஒளி உள்ளது. இதனைக் காணும்போது, வேடன் போன்று வேஷம் பூண்ட சிவனின்

தலையில் புதிய மயில்இறகு மாலையைக் கட்டுவதாக உள்ளது (அதாவது ஸ்ரீரங்கநாதனின் திருவீதிகளில் சிவன் வந்து வணங்கும்போது, அவன் தலையில் மயில்இறகு கட்டுவது போன்று பல வர்ணங்களுடன் இரத்தினங்களின் ஒளி படுகிறது).

555. அந்யோந்ய பந்துர ஹரிந்மணி பத்மராகா
ரங்கேச்வரஸ்ய சரணாவநி ராஜஸே த்வம்
ஆத்ம உபமாந விபவாத் சரிதார்த்தயந்தீ
சைலாத்மஜா கிரிசயோ: இவ மூர்த்திம் ஏகாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் இருக்கும் பச்சை மற்றும் சிவப்பு இரத்தினங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டுள்ளன. இதனைக் காணும்போது, ஹிமவத் என்ற பர்வதத்தின் பெண்ணாகிய பார்வதியும் சிவனும் ஒன்றாக உள்ள நிலையை நீ வெளிப்படுத்துகிறாய் என்று தோன்றுகிறது. இதன் மூலம், அந்த உருவத்திற்கு மேன்மை உண்டாக்குகிறாய் போலும்.

556. தாபத்ரய ப்ரசமநாய ஸமாச்ரிதாநாம்
ஸந்தர்சித ஆருண ஸிதாஸிரத்ந பங்க்தி:
புஷ்ணாஸி ரங்கந்ருபதே: மணிபாதுகே த்வம்
ப்ராய: ஸரோஜ குமுத உத்பவ காநநாநி

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் இருக்கின்ற இரத்தினக்கற்கள் சிவப்பு, வெண்மை மற்றும் கருநீலம் ஆகிய வர்ணங்களின் ஒளியை வீசியபடி உள்ளன. இதனைக் காணும்போது ஸ்ரீரங்கநாதனை அண்டியவர்களின் துன்பங்களை நீக்க நீ தாமரை, அல்லி மற்றும் நெய்தல் மலர்கள் நிறந்த காடுகளை உண்டாக்குவது போன்று உள்ளது.

557. தேஹத்யுதிம் ப்ரகடயந்தி மஹேந்த்ரநீலா:
சௌரே: பதாம்புஜ ருசிம் தவ பத்மராகா:
அந்யோந்ய லப்த பரமாகதயா து அமீஷாம்
ஆபாதி காந்தி: அபரா மணிபாதரக்ஷே

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இந்திரநீல இரத்தினங்கள் ஸ்ரீரங்கநாதனின் அழகான திருமேனியின் ஒளியைப் போன்று உள்ளன. பத்மராகக் கற்கள் அவனது சிவந்த அழகான திருவடித் தாமரைகளின் ஒளியை

உணர்த்துவதாக உள்ளன. இப்படியாக இந்தக் கற்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, மற்றொரு விதமான ஒளியை வீசுவதாக உள்ளன.

558. ஆகீர்ண மௌக்திக ஹரிந் மணிபத்மராகம்
அம்போக லோசந பதாவநி பாவயே த்வம்
தத்பாத விச்ரமஜுஷாம் ச்ருதி ஸுந்தரீணாம்
வர்ண உபதாநம் இவ மௌளி நிவேச யோக்யம்

**பொருள்** - தாமரை போன்ற அழகான கண்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இளைப்பாறியபடி வேதங்கள் உள்ளன. இவை அழகான பெண்கள் போன்று உள்ளன். இவை தங்கள் தலைகளுக்கு வைத்துக் கொள்வதற்காக வர்ணம் நிறைந்த தலையணைகளை - உனது முத்துக்கள், பச்சைக்கற்கள், சிவப்புக்கற்கள் கொண்டு நீ அமைப்பதாக நான் எண்ணுகிறேன்.

559. ஆஸந்ந வாஸவசிலா ருசிரா: த்வதீயா:
பத்மேக்ஷணஸ்ய பதரக்ஷிணி பத்மராகா:
ஸம்பாவயந்தி ஸமயே க்வசித் உஷ்ண பாநோ:
ஸத்ய: ப்ரஸூத யமுநா ஸுபகாம் அவஸ்த்தாம்

**பொருள்** - தாமரை போன்ற நீண்ட கண்கள் கொண்ட பெரியபெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஊனில் பதிக்கப்பட்ட இந்த்ரநீலக் கற்களின் அருகில், சிவந்த பத்மராகக்கற்கள் உள்ளன. இது எப்படி உள்ளது என்றால் - அப்போதுதான் பிறந்த யமுனை நதியால் அழகு பெற்ற சூரியனின் தோற்றத்தை மனதில் உண்டாக்குகிறது.

560. முக்தா இந்த்ரநீல மணிபி: விஹிதே பவத்யா:
பங்க்தீ த்ருடே பரமபூருஷ பாதரக்ஷே:
மந்யே ஸமாச்ரித ஜநஸ்ய தவ அநுபாவாத்
உந்மோசிதே ஸுக்ருத துஷ்க்ருத ச்ருங்கலே த்வே

**பொருள்** - பரமபுருஷனாகிய ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னை ஆராதிக்கும் அடியவர்களின் புண்ணியம் மற்றும் பாவம் என்ற இரண்டு சங்கலிகளும் கழற்றப்படுகின்றன. இந்தச் சங்கிலிகளே உன்னில் அமைக்கப்பட்ட முத்துக்கள் மற்றும் இந்த்ரநீலக் கற்களின் வரிசைகள் என்று நான் எண்ணுகிறேன்.

561. உத்கீர்ண காட தமஸ: ஹரி நீலபங்கா:
தாராவிசேஷ ருசிராணி ச மௌக்திகாநி
த்வத் ஸங்கமாத் ஸரஸிஜேக்ஷண பாதரக்ஷே
ஸம்யோஜயந்தி நிசயா பவ மௌளி சந்த்ரம்

**பொருள்** – சிவந்த தாமரை மலர் போன்ற கண்கள் கொண்ட நம்பெருமாளின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னில் காணப்படும் இந்த்ரநீலக் கற்கள் பெரும் இருளுடன் கூடிய மேகங்கள் போன்று உள்ளன. முத்துக்கள் அனைத்தும் நக்ஷத்ரங்கள் போன்று அழகாக உள்ளன. இப்படியாக இவை இரண்டும் உன்னுடைய தொடர்பு மூலமாக சிவனின் தலையில் உள்ள சந்திரனை உன்னுடன் சேர்க்கின்றன.

562. விஷ்ணோ: பதேந கடிநா மணிபாதுகே த்வம்
வ்யக்த இந்த்ரநீல ருசி: உஜ்ஜவல மௌக்திகச்ரீ:
கலேஷு தீவ்யஸி மருத்பி: உதீர்யமாணா
காதம்பிநீவ பரித: ஸ்ப்புட வாரிபிந்து:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்னும் ஆகாயத்துடன் சேர்ந்தவளாகவும்; இந்த்ரநீலக் கற்களின் ஒளி பெற்று, அவற்றால் நீல நிறமாக உள்ளவளாகவும், முத்துக்களின் வெண்மையான ஒளி மூலம் மழைத்துளி என்னும் அழகு சேர்க்கப்பட்டவளாகவும்; அந்தந்த காலங்களில் தேவர்கள் என்னும் காற்று மூலம் துதிக்கப்பட்டவளாகவும் நீ உள்ளாய். இப்படியாக நான்கு நிலைகளிலும் காணப்படும் நீர் கொண்ட மேகங்களின் வரிசை போன்று நீ உள்ளாய்.

563. பாஸா ஸ்வயா பகவதோ மணிபாதரக்ஷே
முத்தாந்விநா மரதகோபல பத்ததி: தே
நித்யாவகாஹந ஸஹம் ஸகலஸ்ய ஜந்தோ:
கங்காந்விதம் ஜநயதீவ ஸமுத்ரம் அந்யம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! முத்துக்களுடன் சேர்ந்த உன் பச்சைக்கற்களின் வரிசையில் தோன்றும் ஒளி எப்படி உள்ளது என்றால் - அனைத்து மக்களும் அன்றாடம் வணங்கி நீராடத் தகுந்ததாக உள்ள கங்கையுடன் கூடிய ஸமுத்திரத்தை ஏற்படுத்துவது போன்று உள்ளது.

**விளக்கம்** - பச்சைக்கற்களின் ஒளியானது ஸமுத்திரத்தின் மேற்பரப்பு போன்று உள்ளது. முத்துக்களின் ஒளியானது கங்கைநதி அந்த ஸமுத்திரத்தில் கலப்பது போன்று உள்ளது.

இந்த ஸமுத்திரம் ஏன் உருவாக்கப்பட்டது என்றால், மற்ற ஸமுத்திரங்களில் குறிப்பிட்ட காலங்களில் நீராடக்கூடாது என்ற விதி உள்ளது. இந்த விதி இல்லாமல் எப்போதும் நீராடலாம்படி இந்த ஸமுத்திரம் உள்ளது.

564. ஸூர்ய ஆத்மஜா ஹரி சிலாமணி பங்க்தி லக்ஷ்யாத்
த்வாம் நித்யம் ஆச்ரிதவதீ மணிபாதரக்ஷே
அதௌ ஜநார்தநபதே க்ஷணமாத்ர லக்நாம்
ஆஸந்த மௌக்திக ருசா ஹஸதீவ கங்காம்

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! உன் இந்த்ரநீலக் கற்களின் வரிசையைக் காணும்போது, உன்னை எப்போதும் யமுனை அண்டியே உள்ளாள் என்பது போன்று இருக்கிறது. இந்த யமுனை, தொடக்கத்தில் மட்டும் ஒரு சில நொடிகளே எம்பெருமானின் திருவடித் தொடர்பு கொண்டுள்ள கங்கையைப் பார்த்து சிரிப்பது போன்று, உன்னுடைய முத்துக்களின் ஒளி உள்ளது.

**விளக்கம்** - த்ரிவிக்ரமனாக ஸ்ரீரங்கநாதன் நின்ற சிறிது காலம் மட்டுமே அவனுடைய திருவடித் தொடர்பு கங்கைக்கு உள்ளது. ஆனால் யமுனைக்கு எப்போதுமே கண்ணனின் தொடர்பு உள்ளது. ஆகவே, யமுனை கங்கையைப் பார்த்து ஏளனம் செய்வதாகக் கூறுகிறார்.

565. பர்யந்த ஸங்கடித பாஸுர பத்மராகா:
பத்ம உதர ப்ரமர காந்திமுஷ: த்வதீயா:
த்வத் ஸம்ச்ரயேண சரணாவநி சக்ரநீலா:
பீதாம்பரேண புருஷேண துலாம் லபந்தே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னைச் சுற்றிலும் சிவந்து ப்ரகாசிக்கின்ற பத்மராகக் கற்கள் இழைக்கப்பட்டுள்ளன. இதன் நடுவில், தாமரை மலரின் நடுவில் உள்ள வண்டுகளின் அழகு போன்ற இந்த்ரநீலக் கற்கள் உள்ளன. இதனைக் காணும்போது, பீதாம்பரம் உடுத்தியபடி நிற்கும் ஸ்ரீரங்கநாதனின் தோற்றம் போன்ற ஒற்றுமை உள்ளது.

**விளக்கம்** - இங்கு பத்மராகம் = தாமரை, நீலக்கற்கள் = வண்டு; பத்மராகம் = பீதாம்பரம், நீலக்கற்கள் = ஸ்ரீரங்கநாதன்.


**Email:**sridharan_book@yahoo.co.in

566. சங்கே பதாவநி ஸதா பரிசிந்வதீ த்வம்
ரங்கேசிது: சரணபங்கஜ ஸௌகுமார்யம்
அக்ரே மஹோபி: அருணோபல மௌக்திகாநாம்
ப்ராஜ்யாம் விநிக்ஷிபஸி பல்லவ புஷ்பபங்க்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ எப்போதும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடைய மென்மையை அனுபவித்தபடி உள்ளாய். இதனால் உன்னுடைய பத்மராகம், முத்து ஆகிய கற்களின் ஒளியால் அதிகமான துளிர்கள் மற்றும் மலர்கள் கொண்ட விரிப்பை ஏற்படுத்திகிறாய் போலும்.

**விளக்கம்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் எத்தனை மென்மையானது என்று பாதுகைக்கு மட்டுமே தெரியும். ஆகவே அவன் ஸஞ்சாரம் செய்யும்போது, அந்தத் திருவடிகள் நோகக்கூடாது என்று தனது ஒளி மூலம் மலர்படுக்கை அமைக்கிறாள். பத்மராகக்கற்களின் ஒளியானது, மிகவும் துளிர்களான சிவந்த இலைகள் போன்றும், முத்துக்களின் ஒளி அவற்றின் வெண்மையான மலர்கள் போன்றும் உள்ளன.

567. நிர்கச்சதா சரண ரக்ஷிணி நீயமாநா
ரங்கேச்வரேண பவதீ ரணதீக்ஷிதேந
ஸூதே ஸுராரி ஸுபட நயந அம்புஜாநாம்
ஜ்யௌத்ஸ்நீம் நிசாம் இவ ஸித ஆஸித ரத்நபாஸா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! யுத்தம் செய்யும் உறுதியுடன் ஸ்ரீரங்கநாதன் புறப்படும்போது நீயும் அவனுடன் செல்கிறாய். உன்னுடைய வெளுப்பு, கருப்பு ஆகிய இரத்தினங்களின் ஒளி மூலமாக, அசுரர்களுடைய மனைவிமார்களின் தாமரை போன்ற கண்களுக்கு நிலவுடன் சூழ்ந்த இரவுப்பொழுதை உண்டாக்குகிறாய்.

**விளக்கம்** - தங்கள் கணவன்மார்களுடன் யுத்தம் செய்ய வந்துள்ள ரத்ன பாதுகையில் நிற்கும் ஸ்ரீரங்கநாதனை அசுரர்களின் மனைவிமார்கள் பார்க்கின்றனர். தங்கள் மனதில், ”என்ன நடக்குமோ”, என்று அச்சம் கொண்டு கண்களை மூடிக்கொள்கின்றனர். இரவு மற்றும் சந்திரனைக் கண்டவுடன் தாமரைகள் மூடிக்கொள்ளும் அல்லவா? இதனை இங்கு தாமரை போன்ற கண்கள் மூடுகின்றன என்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

568. மரதக ஹரித அங்கீ மேதுரா பத்மராகை:
அபிநவ ஜலபிந்து வ்யக்த முக்தாபலச்ரீ:
கலயஸி பதரக்ஷே க்ருஷ்ண மேகப்ரசாராத்
கநகஸரித அநூபே சாத்வலம் ஸேந்த்ரகோபம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மரகத இரத்தினங்களால் பச்சையான திருமேனி கொண்டவளாகவும், பத்மராகக் கற்களால் பருத்தவளாகவும், புதிதாகத் தோன்றும் நீர்த்துளிகள் போன்ற ப்ரகாசத்துடன் கூடிய முத்துகளின் அழகை உடையவளாகவும் நீ இருக்கிறாய். இப்படியாக உன்னைப் பார்த்தால் எப்படி உள்ளது என்றால் – நம்பெருமான் என்னும் மேகத்தினுடைய ஸஞ்சாரத்தின்போது, காவேரியின் சதுப்பு நிலத்தில், இந்த்ரகோபம் என்னும் பூச்சிகள் நிறைந்த புல் தரையை உண்டாக்கியது போன்று உள்ளாய்.

**விளக்கம்** - மழைக்கால மேகம் கூடும்போது, உலகில் பசுமையான புல் அதிகமாகத் தோன்றி, அவற்றில் சிவந்த நிறம் கொண்ட இந்த்ரகோபம் என்னும் பூச்சிகள் அமர்ந்திருக்கும். பாதுகையில் உள்ள மரகதங்கள் புல் போன்றும், பத்மராகங்கள் இந்திரகோபம் என்றும் வர்ணிக்கப்பட்டன. இவற்றைக் கூட்டும் மழைக்கால மேகமாக நம்பெருமாள் கூறப்பட்டான்.

569. விரசித ஸுரஸிந்தோ: விஷ்ணு பாதாரவிந்தாத்
ஸமதிகம் அநுபாவம் பாதுகே தர்சயந்தீ
வலபிதுபல முக்தா பத்மராக ப்ரகாசை:
பரிணமயஸி நூநம் ப்ராப்த சோணம் ப்ரயாகம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்கள், முத்துக்கள், பத்மராகம் ஆகியவையின் ஒளி மூலமாக கருப்பான யமுனை, வெண்மையான கங்கை மற்றும் சிவந்த சோணம் என்னும் நதிகளை நீ உண்டாக்குகிறாய். ஆகவே கங்கை என்னும் ஒரே ஒரு நதியை மட்டுமே உண்டாக்கிய ஸ்ரீரங்கநாதனின் திருவடியைக் காட்டிலும், மூன்று நதிகளை உண்டாக்கியதால் அதிகமான பெருமை உனக்கு உண்டு எனக் காண்பிக்கிறாய்.

570. விவித மணிமயூகை: வ்யக்த பக்ஷாம் விசித்ரை:
ஜலநிதி துஹிது: த்வாம் வேத்மி லீலா சகோரீம்
அநிசம் அவிகலாநாம் பாதுகே ரங்கபர்த்து:
சரண நக மணீநாம் சந்த்ரிகாம் ஆபிபந்தீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடைய நகக்கண்கள் எப்போதும் தேயாத நிலவு போன்று, பூர்ணமான முத்துக்களாக உள்ளன. உன்னில் உள்ள பலவிதமான இரத்தினங்களின் ஒளிகளானவை உனக்கு இருபுறத்திலும் சிறகுகள் போன்று உள்ளன. ஆக மேலே கூறப்பட்ட நிலவைப் பருகுகின்றதும், ஸ்ரீரங்கநாச்சியாரின் விளையாட்டுப் பொருளாக உள்ளதும் ஆகிய சகோரபக்ஷியாகவே நீ உள்ளாய்.

571. சரண கமல ஸேவா ஸங்கிநாம் ரங்கபர்த்து:
விநயகரிம பாஜாம் வர்ஜிதை: ஆதபத்ரை:
புநரபி பதரக்ஷே புஷ்யஸி த்வம் ஸுராணாம்
பஹுவித மணி காந்த்யா பர்ஹி பிஞ்சாதபத்ரம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் மீது மிகுந்த ஆடை உள்ளவர்களாக இருக்கும் தேவர்கள், தங்கள் வணக்கம் காரணமாகத் தங்கள் பதவிகளை உணர்த்துவதாக உள்ள குடைகளைத் தள்ளி வைத்து விட்டு, உன் முன்பாக நிற்கின்றனர். உன்னுடைய இரத்தினக்கற்களின் பலவிதமான ஒளியால் அவர்களுக்கு மயில்தோகை போன்ற வர்ணங்களுடன் கூடிய குடையை மீண்டும் நீ அமைக்கிறாய்.

572. மரதக ருசி பத்ரா மௌக்திக ஸ்மேர புஷ்பா
ஸ்புட கிஸலய சோபா பாஸுரை: பத்மராகை:
பலம் அகிலம் உதாரா ரங்கநாதஸ்ய பாதே
கலயஸி பவதீ ந: கல்பவல்லீவ காசித்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மரகதங்களின் பச்சை நிற ஒளியானது இலைகள் போன்றும், முத்துக்கள் அனைத்தும் துளிர்கள் போன்றும் உள்ளன. இப்படியாக உள்ள நீ எப்படி இருக்கிறாய் என்றால் - ஸ்ரீரங்கநாதன் என்னும் கற்பக மரத்தின் திருவடிகளில் சுற்றிக் கொண்டிருக்கும் கற்பகக்கொடி போன்று உள்ளாய். இதனால்தான் எங்களுக்கு அனைத்துவிதமான பலன்களையும் நீ அளிக்கிறாய் போலும்.


Email:sridharan_book@yahoo.co.in

573. பஹு மணி ருசிர அங்கீம் ரங்கநாதஸ்ய பாதாத்
நிஜசிரஸி கிரீசோ நிக்ஷிபந் பாதுகே த்வாம்
ஸ்மரதி லளிதம் அந்த: லாளநீயம் பாவாந்யா:
தரள கந கலாபம் ஷண்முகஸ்ய ஔபவாஹ்யம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பல நிறங்களுடன் கூடிய அழகான உருவத்துடன் உள்ள உன்னை, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இருந்து எடுத்து, சிவன் தனது தலையில் வைத்துக் கொள்கிறான். அப்போது – பார்வதியால் கொண்டாடப்படுவனும், அசைகின்றதும், அடர்த்தியானதும் ஆகிய தோகையைக் கொண்ட மயிலை வாகனமாக உடையவனும் ஆகிய தனது புத்திரனாகிய முருகனின் நினைவு சிவனுக்கு உண்டாகிறது.

**விளக்கம்** - பாதுகையின் பலவிதமான நிறங்கள் மயில் தோகை போன்று உள்ளது. இதனைக் கண்டதும் சிவனுக்குத் தனது புத்திரனின் வாகனமாக மயில் உள்ளதால், அந்தப் புத்திரனின் ஞாபகம் உண்டாகிறது.

574. விவிதமணி ஸமுத்தை: வ்யக்தம் ஆபாதயந்தீம்
திவஸ ரஜநி ஸந்த்யா யௌகபத்யம் மயூகை:
உபநிஷத் உபகீதாம் பாதுகே ரங்கிண: த்வாம்
அகடித கட நார்ஹம் சக்திம் ஆலோசயாம:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் இருக்கின்ற பலவிதமான இரத்தினக்கற்களின் ஒளி காரணமாக, பகல்-இரவு-ஸந்த்யாகாலம் ஆகிய மூன்று காலங்களும் ஒரே நேரத்தில் தோன்றுவது போன்று தோற்றம் அளிக்கிறது. இப்படிப்பட்ட நிலையைக் காணும்போது - மற்ற யாராலும் செய்ய இயலாதவற்றையும் செய்யும் திறன், மற்றவர்களால் சேர்க்க இயலாதவற்றைச் சேர்க்கும் திறன் ஆகியவை ஸ்ரீரங்கநாதனுக்கு மட்டுமே உள்ளது என்று உபநிஷத்துக்கள் கூறுவதற்கு ஏற்ப உள்ள ஸ்ரீரங்கநாதனின் சக்தியே இதற்குக் காரணம் என்றாகிறது.

575. ஸகலம் இதம் அவந்த்யே சாஸநே ஸதாபயந்தீ
முரமதந பதஸ்தா மௌக்திகாதி ப்ரகாரா
ப்ரகடயஸி விசுத்த ச்யாம ரக்தாநி ரூபாந்
பல பரிணதி பேதாந் ப்ராணிநாம் பாதுகே த்வம்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இந்த உலகங்கள் அனைத்தையும், தவறாமல் இருக்கின்றதான ஸ்ரீரங்கநாதனின் கட்டளைக்கு ஏற்ப நீ நிலை நிறுத்துகிறாய்; அவனுடைய திருவடிகளில் எப்போதும் அமர்ந்துள்ளாய்; முத்து முதலான பலவிதமான இரத்தினங்களுடன் காணப்படுகிறாய்; வெண்மை, கருப்பு, சிவப்பு ஆகிய பல வர்ணங்களை வெளிப்படுத்தும் நீ, மனிதர்களின் அந்தந்த நிறமுள்ள பலன்களை அளிக்கிறாய் போலும்.

**விளக்கம் -** பொதுவாக புண்ய பலன்கள் வெண்மை என்றும், பாவ பலன்கள் கருப்பு என்றும், மத்யம பலன்கள் சிவப்பு என்றும் கூறுவது வழக்கம் ஆகும்.

576. ப்ரதிசதி முதம் அக்ஷ்ணோ: பாதுகே தேஹ பாஜாம்
சதமகமணி பங்க்தி: சார்ங்கிண: துல்யவர்ணா
பரிஸர நிஹிதை: தே பத்மராக ப்ரதீபை:
கநதர பரிணத்தா கஜ்ஜல ச்யாமிகேவ

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருமேனி நிறத்திற்குச் சமமான நிறம் கொண்ட இந்த்ரநீலக் கற்களின் அருகே சிவந்த பத்மராகக் கற்களும் உள்ளன. இவற்றைக் காணும்போது தீபங்கள் போன்று உள்ளன. ஆனால் அவற்றின் இடையே உள்ள நீலக்கற்கள் சற்றே கருமையை ஏற்படுத்துவதால், அந்த தீபங்களின் ஒளி மக்களின் கண்களை உறுத்தாமல் ஆனந்தம் அளிக்கிறது.

577. கலயாபி ஹாநிரஹிதேஷு ஸதா
தவ மௌக்தீகேஷு பரித: ப்ரத்தே
உபரஜ்யமாந ஹரிணாங்க துலா
ஹரிபாதுகே ஹரிசில மஹஸா

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்கள் எப்போதும் சந்திரன் போன்று தேயாமல் உள்ளன. ஆனாலும் அனைத்துப் பக்கங்களிலும் அவை இந்திரநீலக் கற்களால் சூழப்பட்டதால், க்ரஹண காலத்துச் சந்த்ரர்கள் போன்று உள்ளன (அதாவது நீலக்கற்களால் முத்துக்கள் சற்றே இருண்டு உள்ளன என்றார்).

578. மரதக பத்ரளா ருசிர வித்ரும பல்லவிதா
ப்ருதுதர மௌக்திக ஸ்தபகிதா நிகமை: ஸுரபி:
உபவந தேவதேவ சரணாவநி ரங்கபதே :
அபிலஷதோ விஹாரம் அபிகம்ய பதம் ஸ்ப்ருசஸி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மரகதக்கற்களின் ஒளியானது இலைகள் போன்றும், அழகான பவழங்களின் ஒளியானது தளிர்கள் போன்றும், முத்துக்களின் ஒளியானது வெண்மையான மலர்கள் போன்றும் உள்ளன. இப்படியாக நீ உத்யான தேவதை (உலகில் உள்ள பூமி, காடு, மலை போன்றவற்றின் அபிமான தேவதை) போன்று உள்ளாய். வேதங்களும் உன்னிடம் விரும்பி வந்து வசிப்பதால், அவற்றின் நறுமணமும் நீ கொண்டுள்ளாய். உல்லாஸமாகச் ஸஞ்சாரம் செய்ய விரும்பும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை நீ தொடுகிறாய்.

579. ஸதா உத்துங்கே ரங்கக்ஷிதி ரமண பாத ப்ரணயிநி
த்வத் ஆலோகே தத்தந் மணிகிரண ஸம்பேத கலுஷே
ப்ரதி ஸ்ரோதோ வ்ருத்த்யா ப்ரதித ருசி பேதம் ந ஸஹதே
நவாம்ப: ஸ்வாச்சந்த்யம் நமதமர கோடீர மகர:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் மாறாத ஆசையுள்ள பாதுகையே! ஸ்ரீரங்கநாதனை வந்து வணங்கும் தேவர்களின் க்ரீடங்களில் அழகான மீன் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அந்த மீன்களின் நிலை என்ன என்றால் – உன்னில் பதிக்கப்பட்ட அந்தந்த இரத்தினக் கற்களின் உயர்ந்த ஒளியானது ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, கலங்கிய ஒளி வெள்ளமாக நிற்கின்றன; இவற்றின் எதிரே மீன்களின் ஒளியானது சற்று தணிந்தே உள்ளது. இதனை காணும்போது மீன்கள் பாதுகையில் இருந்து எழும் ஒளி வெள்ளத்தை எதிர்த்துச் செல்லத் தடுமாறியபடி மெதுவாகச் செல்வதாகத் தோன்றுகிறது.

580. ஜநயஸி பதாவநி த்வம்
முக்தா சோண மணி சக்ர நீலருசா
நகருசி ஸந்ததி ருசிராம்
நந்தக நிஸ்த்ரிம்ச ஸம்பதம் சௌரே:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது முத்துக்களின் ஒளி, பத்மராகக் கற்களின் ஒளி மற்றும் இந்த்ரநீலக் கற்களின் ஒளி ஆகியவை ஸ்ரீரங்கநாதனின் திருவடியின்

நகங்களில் புதிய ஒளியை ஏற்படுத்துகின்றன. இதனைக் காணும்போது நீ அவனுடைய நந்தகம் என்னும் கத்தியின் தோற்றத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## பஹுரத்ன பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


Email:sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (17. பத்மராக பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - கடந்த பத்ததியில் பல இரத்தினங்களின் சேர்க்கையை வர்ணித்தார். இந்த பத்ததி தொடங்கி அடுத்து உள்ள நான்கு பத்ததிகளில், நான்கு இரத்தினங்களின் வர்ணனையை தனித்தனியே அருளிச்செய்கிறார். முதலில் பத்மராகம் பற்றிக் கூறுகிறார். இங்கு பத்மராகம் என்பது இரத்தினங்களையும், ச்லேடையாக பிராட்டியையும் குறிப்பதாக உள்ளது. ஆனால் பிராட்டி அவனது திருமார்பில் இருக்க வேண்டுமே என்ற சந்தேகம் தோன்ற, இந்தப் பிராட்டி அவன் திருவடிகளில் இருக்கும் மற்றோரு பிராட்டி என்கிறார்.

581. ப்ரபத்யே ரங்கநாதஸ்ய பாதுகாம் பத்மராகிணீம்
பதைக நியதாம் தஸ்ய பத்ம வாஸாம் இவ அபராம்

**பொருள்** - பத்மராகக்கற்கள் கொண்டவளும், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை விட்டு எப்போதும் அகலாமல் உள்ள மற்றோரு மஹாலக்ஷ்மி போன்றவளும் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் பாதுகைப் பிராட்டியைச் சரணம் அடைகிறேன்.

582. அதிவாங்மநஸாம் விசிந்த்ய சௌரே:
பதரக்ஷே பதபத்ம ஸௌகுமார்யம்
பரிஷ்யஸி பத்மராக பாஸா
பதவீம் ஆஹித பல்லவாம் இவ த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளின் மென்மை என்பது சொற்களாலும், மனதாலும் நினைக்க இயலாதபடி உள்ளன. இப்படிப்பட்ட மென்மையான திருவடிகள் ஸஞ்சாரம் செய்யும்போது நீ செய்வது என்ன? உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளி மூலமாக, ஸ்ரீரங்கநாதன் செல்கின்ற வழி முழுவதும் தளிர்களால் ஆகிய விரிப்பை உண்டாக்குகிறாய் போலும்.

583. பத பல்லவ ஸங்கிபி: ப்ரதீப்தை:
அதிகோல்லாஸிபி: அம்ப பத்மராகை:
அநலே சயநம் க்வசிந் முராரே:
அவிஸம்வாதயஸீவ பாதுகே த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் துளிர்கள் போன்று மென்மையாகவும், சிவந்தும் உள்ளன. அதில் நீ சேர்ந்து காணப்படுகிறாய். உன்னில் பதிக்கப்பட்ட பத்மராகக் கற்கள் காரணமாக, அவனது திருவடிகள் மேலும் சிவந்த நெருப்பு போன்று காணப்படுகின்றன. இதனை காணும்போது, பாஞ்சராத்ர


**Email:**sridharan_book@yahoo.co.in

ஆகமத்தில் எம்பெருமான் நெருப்பால் ஆன படுக்கையில் சயனித்துள்ளான் என்பதைக் காண்பிப்பதாக உள்ளது.

584. விஂவ்ருணோதி ரங்கபதி ரத்ந பாதுகே
த்வயி பத்மராக மணிபத்ததி: சுபா
நிபிட ஊரு ஸங்கடந பீடந க்ஷரத்
மதுகைடப க்ஷதஜ பங்க வாஸநம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மது மற்றும் கைடபன் ஆகிய இரண்டு அசுரர்களைச் சேர்த்து வைத்து, தனது உறுதியான தொடைகளில் நெருக்கி, ஸ்ரீரங்கநாதன் வதம் செய்தான். அப்போது பெருகிய ரத்தச் சேற்றினை உனது பத்மராகக் கற்கள் காண்பிப்பது போன்று உள்ளன.

585. ப்ரதியந்தி ரங்கபதி பாதுகே ஜநா:
தவ பத்மராகமணி ரச்மி ஸந்ததிம்
அபிஜக்முஷாம் த்வத் அநுபாவ கண்டிதாத்
ஆக ஸஞ்சயத் விகளிதாம் அஸ்ருக்ச்சடாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை அடைந்தவர்களின் பாவக் கூட்டங்களை, உனது பெருமை மற்றும் மேன்மையால் வெட்டுகிறாய். அந்த கூட்டத்தின் இரத்தப்பெருக்கு போன்று உன்னில் பதிக்கப்பட்ட பத்மராகக் கற்களின் ஒளியானது உள்ளது.

586. பச்யந்தி ரங்கேச்வர பாதுகே த்வாம்
பௌராங்கநா: ஸ்பர்சித ராகபந்தாம்
ச்ருங்காரயோநே: ஜ்வலநஸ்ய தீப்தை:
அங்கார ஜாலைரிவ பத்மராகை:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கத்துப் பெண்கள் உன்னில் பதிக்கப்பட்ட பத்மராகக் கற்கள் ஏற்படுத்தும் சிவந்த ஒளியைக் காண்கின்றனர். உடனே அவர்கள் தங்கள் மனதில், "நம்மை வாட்டும் மன்மதனுடைய அக்னியின் தணல்கள் இவையோ?", என்று எண்ணுகின்றனர்.

587. அவைமி தோஷாபகமஸ்ய ஹேதும்
தம: அபஹாம் ஸம்ப்ருத பத்மராகாம்
அசேஷ வந்த்யாம் மணிபாதுகே த்வாம்
ரங்கேச ஸூர்யோதய பூர்வஸந்த்யாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அனைத்து விதமான பாவங்கள் என்னும் இரவுப் பொழுது போக்குவதாகவும், அந்தப் பாவங்களுக்குக் காரணமான தமோ குணம் என்னும் இருள் நீங்குவதாகவும், பத்மராகக் கற்கள் என்னும் தாமரை மலர்வதாகவும், ஸ்ரீரங்கநாதன் என்னும் சூரியன் உதிப்பதாகவும் நான் காண்கிறேன். இவற்றுக்குக் காரணமாக உள்ள உன்னை, நான் காலை வேளையாகவே எண்ணுகிறேன்.

588. அவாப்ய பாதாவநி ரங்கபர்த்து:
பாதாம்புஜே பல்லவ ஸம்ஸ்தராபம்
த்வத் பத்மராக த்யுதயோ பஜந்தே
காலாநலத்வம் கலுஷாம்புதே: ந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியானது, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் மென்மையான தளிர்கள் போன்று காணப்படுகின்றன. ஆனால் அவையே எங்களது பாவம் என்ற பெரும் ஸமுத்திரத்தை வற்றச் செய்கின்ற ப்ரளய காலத்து அக்னி போன்று உள்ளது.

589. நிஸர்க ஸித்தம் மணிபாதரக்ஷே
தேவஸ்ய ரங்காவஸத ப்ரியஸ்ய
பாலார்க்கவர்ணா: பத பத்மராகம்
த்வத் பத்மராகா: புநருக்தயந்தி

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய பத்மராகக் கற்களின் ஒளியானது இளம் சூரியனின் நிறம் போன்று சிவந்துள்ளது. ஸ்ரீரங்கத்தில் மிகவும் சந்தோஷத்துடன் வாசம் செய்யும் நம்பெருமாளின் திருவடித்தாமரைகளின் அழகை இந்தச் சூரிய ஒளி மேலும் அதிகப்படுத்துகிறது.

 Email:sridharan_book@yahoo.co.in

590. பதேந விச்வம் மணிபாதரக்ஷே
பத்ந்யா ஸமம் பாலயதோ முராரே:
யச: பயோதௌ பரிகல்பயந்தி
ப்ரவாள சோபாம் தவ பத்மராகா:

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! தனது திருவடிகள் மற்றும் ஸ்ரீரங்கநாச்சியார் ஆகிய துணையுடன், ஸ்ரீரங்கநாதன் இந்த உலகத்தைக் காப்பாற்றுகிறான். அவனது கீர்த்தியானது பெரும் ஸமுத்திரம் போன்று உள்ளது. உனது பத்மராகக் கற்கள், இந்த ஸமுத்திரத்தை மேலும் அழகுபடுத்தும் பவழங்கள் போன்று உள்ளன.

591. அர்ச்சிஷ்மதீ காஞ்சந பாதரக்ஷே
ப்ரஸ்தௌதி தே பாடலரத்ந பங்க்தி:
ரேகா ரதாங்கஸ்ய மஹ: ப்ரபஞ்சம்
ரங்கேச பாதாம்புஜ மத்ய பாஜ:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பொன்மயமான பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய தாமரை மலர் போன்ற அழகிய திருவடியின் நடுவில், ரேகை வடிவத்தில் சக்கரம் உள்ளது. உன்னுடைய பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியானது, அந்தச் சக்கரத்தின் ஒளியைப் போன்று காணப்படுகிறது.

592. த்வயைவ பாதாவநி சோண ரத்நை:
பாலாதபம் தூநம் உதீரயந்த்யா
பத்மாபதே: பாததல ப்ரரூடம்
ரேகாம்புஜம் நித்யம் அபூத் அநித்ரம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது பத்மராகக்கற்களின் சிவந்த ஒளியானது இளம் வெய்யில் போன்று காணப்படுகிறது. இந்த வெய்யிலின் காரணமாகவே, ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில், ரேகை வடிவில் உள்ள தாமரையானது, எப்போது மூடாமல், மலர்ந்தே காணப்படுகிறது.

593. நித்யம் நிஜா லோகபதம் கதாநாம்
ச்ரேயோ திசந்தீம் ச்ரித பத்மராகாம்
மஹீயஸிம் மாதவ பாதரக்ஷே
மந்யாமஹே மங்கள தேவதாம் த்வாம்


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரைத் தரித்த பெரியபெருமாளின் பாதுகையே! உன்னுடைய ப்ரகாசம் என்னும் வழியில் செல்பவர்களுக்கு நீ மிகுந்த நன்மையை அளித்தபடி உள்ளாய். பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியால் நீ தாமரை மலரில் விருப்பம் உடையவளாகத் தோன்றுகிறாய். மிகவும் மேன்மையுடன் விளங்குகிறாய். இப்படியாக உள்ள உன்னை அனைத்துவிதமான மங்களங்களுக்கும் தேவதையான மஹாலக்ஷ்மி என்றே எண்ணுகிறோம் (திருவடியில் உள்ளதால் பாதுகையும் மஹாலக்ஷ்மியும் ஒன்றே எனக் கூறுகிறார்).

594. தேவஸ்ய ரங்கரஸிகஸ்ய விஹார ஹேதோ:
ஆத்மாநம் அங்க்ரி கமலே விநிவேத்ய பூர்வம்
ப்ராயோ நிவேதயஸி சோண மணிப்ரகாசை:
ப்ரத்யூஷ பதம் கலிகாம் பதரக்ஷிணி த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கத்தின் மீது மிகவும் ஆசை கொண்டவனான ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தின் பொருட்டு, அவனது திருவடித் தாமரைகளில், நீ உன்னை முதலில் சமர்ப்பணம் செய்து கொள்கிறாய். அதன் பின்னர் உனது சிவந்த பத்மராகக் கற்களின் ஒளி மூலம், காலை நேரத்து தாமரை மலர்களைச் சமர்ப்பிக்கிறாய் போலும்.

**விளக்கம்** - இங்கு கூத்தாடும் ஒரு பெண், சபையில் உள்ள தலைவனை வணங்கி, அவனுக்கு மலர்களை வாரி இறைத்தல் என்பது கூறப்படுகிறது.

595. ப்ரத்யங்கயஸ்ய ஹவிஷ: ப்ரணவேன தேவி
ப்ரக்ஷேபணாய பரமார்த்தவிதாம் முநீநாம்
ப்ராஜ்யாம் முகுந்த சரணாவநி பத்மராகை:
பர்யாய பாவக சிகாம் பவதீம் ப்ரதீம:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகா தேவியே! பத்மராகங்களுடன் கூடிய நீ, ஒரு விதமான அக்னியின் ஜ்வாலை போன்றே உள்ளாய். இந்த அக்னியில், ப்ரணவத்தை உச்சரித்தபடி, முனிவர்கள் தங்கள் ஆத்மஸ்வரூபம் என்ற அவிர்பாகத்தை அளிக்கின்றனர்.

596. ஸம்பத்யதே தவ பாதாவநி பத்மராகை:
ப்ரஸ்தாந மாங்களிக ஹோம ஹுதாசநச்ரீ:
க்ஷிராஹுதி: பவதி யத்ர விகல்பகங்கா
ரங்கேச்வரஸ்ய ருசிரா நகரச்மி தாரா

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் உற்சவ காலங்களில் யாக சாலையில் இயற்றப்படும் ஹோமத்தில் உள்ள மங்களகரமான அக்னியோ என்னும்படி உனது பத்மராகக் கற்கள் தோன்றுகிறன. அப்போது அங்கு எழுந்தருளும் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடி நகங்கள், கங்கை போன்று வெண்மையாகக் காணப்படுகின்றன. இந்த வெண்மையைக் காணும்போது, அந்த ஹோமத்தில் இடப்படும் பால் போன்று உள்ளது.

597. ஆமுஞ்சதாம் அருண யாவக பங்க லக்ஷ்மீம்
சோணாச்மநாம் தவ பதாவநி சாந்தி யோகாத்
பத்மாஸஹாய பத பத்ம நகா: ச்ரயந்தே
ஸந்த்யா அநுரஞ்ஜித ஸுதாகர பிம்ப சோபாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளின் நகங்கள் அனைத்தும், செம்பஞ்சுக் குழம்பு பூசப்பட்டது போன்ற அழகை, உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளி மூலம் அடைகின்றன. அவற்றைக் காணும்போது ஸந்த்யா கால நேரத்தில் சிவந்துள்ள வானத்தில் காணப்படும் சந்த்ரன் போன்று உள்ளன.

598. ஸ்தாநே தவ அச்யுத பதாவநி பத்மராகா:
தேஜோமயா: ப்ரசமயந்தி தமோ மதீயம்
சித்ரம் தத் ஏதத் இஹ யத் ஜநயந்தி நித்யம்
ராகாத்மகேந மஹஸா ரஜஸோ நிவ்ருத்திம்

**பொருள் -** அடியார்களை நழுவவிடாத ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் பிரகாசமாக உள்ள உனது பத்மராகக் கற்களின் ஒளி மூலமாக, எனது தமோ குணம் என்ற இருள் அகன்றுவிடுகிறது. இது பொருத்தமான நிகழ்வே ஆகும். ஆனால் விஷயப் பற்றுதல்கள் என்னும் சிவந்த நிறம் கொண்ட ரஜோ குணத்தை, உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியே நீக்குகின்றனவே! இது மிகவும் வியப்பே ஆகும்.

**விளக்கம் -** பத்மராகத்தின் ஒளியால் இருண்ட தாமஸ குணம் நீங்குவதாகக் கூறுகிறார். இது நியாயமே ஆகும். பாதுகையின் பத்மராகக் கற்களின் வெளிச்சம் ராகமாக, அதாவது

சிவப்பாக உள்ளது. இது சிவந்த நிறம் கொண்ட ரஜோ குணத்தை நீங்குகிறதே என்று வியக்கிறார்.

599. பத்மா கர அந்தர விகாஸிநி ரங்கபர்த்து:
பீத்வா பதாவநி மதூநி பதாரவிந்தே
சோணோபல த்யுதி மயீம் ஸூபக ப்ரசாராம்
மந்யே பிபர்ஷி மஹதீம் மதராக சோபாம்

**பொருள்-** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரின் திருக்கரங்கள், தாமரைத் தடாகம் போன்று உள்ளன. அங்கு ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகள் மலர்ந்து காணப்படுகின்றன. அந்தத் தாமரையில் பெருகி நிற்கும் தேனைப் பருகிய நீ, மிகவும் வேகமும் அழகும் கூடிய நடையைக் கொண்டவளாகிறாய். கள் குடித்தவன் முகம் முழுவதும் சிவந்து காணப்படுவது போன்று, உனது பத்மராகக் கற்கள் சிவந்து காணப்பட்டு, உனது அழகை மேலும் கூட்டுகிறது என்று நான் எண்ணுகிறேன்.

**விளக்கம்** – இங்கு நம்பெருமாளின் திருவடித் தாமரைகளில் பெருகும் மதுவைப் பாதுகை குடித்து, அதனால் கள் குடித்தவன் போன்று வேகமாக நடப்பதாகக் கூறுகிறார். மதுவைப் பருகியவன் சிவந்த நிறம் கொண்டு இருப்பது போன்று, பாதுகையும் பத்மராகக் கற்களின் ஒளியால் சிவந்துள்ளாள் என்றார்.

600. பாதாவநி ப்ரஸ்ருமரஸ்ய கலே: யுகஸ்ய
ப்ராயேண ஸம்ப்ரதி நிவாரயிதும் ப்ரவேசம்
ஸ்ரீரங்கஸீம்நி தவ சோண மணிப்ரஸூத:
ப்ராகாரம் அக்நிமயம் ஆரபதே ப்ரகாச:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இந்தப் பூமி எங்கும் கலிபுருஷன் பரவியபடி வருகிறான். ஆனால், அவன் ஸ்ரீரங்கத்தின் எல்லைக்குள் புகாதபடி உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியானது, நெருப்பால் ஆகிய ஒரு கோட்டையை உண்டாக்குகிறது போலும்.

601. லீலா க்ருஹ அந்தர விஹாரிணி ரங்கநாதே
லாக்ஷாரஸை: அருண ரத்ந மயூக லக்ஷ்யை:
ப்ராயேண ரஞ்ஜயதி பாதஸரோஜ யுக்மம்
ஸைரந்த்ரிகேவ பவதீ மணிபாதரக்ஷே


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் இன்பமாக விளையாடி மகிழ்வதற்காக உள்ள அறையில், எளிதாகப் புகும் தாதிப்பெண் போன்று நீ உல்லாஸமாகச் செல்கிறாய். உன்னுடைய பத்மராகக் கற்களின் சிவந்த ஒளி மூலமாக, அவனது இரண்டு திருவடிகளுக்கும் செம்பஞ்சுக் குழம்பைப் பூசச் செல்கிறாய் போலும்.

602. ரங்கேசிது: விஹரதோ மணிபாதரக்ஷே
ரத்யாந்தரே ஸுமநஸ: பரிகீர்யமாணா:
த்வத் பத்மராக கிரணாச்சுரணாத் பஜந்தே
ஸந்த்யாதப அந்தரித தாரக பங்க்தி லக்ஷ்மீம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்கின்ற காலத்தில், அவன் மீது மலர்களை வாரி இறைக்கின்றனர். அந்த மலர்கள் மீது உனது பத்மராகக் கற்களின் ஒளியானது விழுகிறது. இதனைக் காணும்போது, மாலை நேரத்து வெய்யிலுடன் கூடிய நக்ஷத்திரங்கள் போன்று அந்த மலர்கள் காணப்படுகின்றன.

603. ரங்காதிராஜ பதரக்ஷிணி பிப்ரத: த்வாம்
கங்கா தரங்க விமலே கிரிசஸ்ய மௌளௌ
ஸம்வர்த்தயந்தி மஹஸா தவ பத்மராகா:
சைலாத்மஜா சரண யாவக பங்கலக்ஷ்மீம்

**பொருள் -** ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னைச் சிவன் தனது தலையில் வைத்துக் கொள்கிறான். அப்போது, அவனது தலையில் உள்ள தூய்மையான கங்கை நீரில் உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளி பரவுகின்றது. இதனைக் காணும்போது, ஹிமவத் என்னும் மலையின் மகளான பார்வதியின் கால்களில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பானது, சிவனின் தலையில் உள்ளதைப் போன்ற தோற்றம் அளிக்கிறது.

604. சரணம் உபகதாநாம் சர்வரீம் மோஹரூபாம்
சமயிதும் உதயஸ்தாந் மந்மஹே பாலஸூர்யாந்
பதஸரஸிஜ யோகாத் ரங்கநாதஸ்ய பூய:
பரிணமத் அருணிம்ந: பாதுகே பத்மராகாந்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளின் சிவந்த நிறம் காரணமாக உனது பத்மராகக்கற்கள் மேலும் சிவந்து காணப்படுகின்றன.

இவற்றைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதனின் திருவடிளைச் சரணம் அடைந்தவர்களின் அஜ்ஞானம் என்ற இருளைப் போக்க வந்த இளம் சூரியன் போன்றே உள்ளது.

606. ப்ரதி விஹரணம் ஏதே பாதுகே ரங்கபர்த்து:
பதகமல ஸுகந்தா: பத்மராகா: த்வதீயா:
தருண தபந மைத்ரீம் உத்வஹத்பி: மயூகை:
ஸ்தல கமல விபூதிம் ஸ்தாபயந்தி அவ்யவஸ்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரைகளின் சிவந்த ஒளியானது, பால சூரியன் போன்று உள்ளது. உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியானது, ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்யும்போது, அனைத்து இடங்களிலும் அந்தச் சிவந்த ஒளியைத் தாமரை போன்று தரையில் பதித்தபடியே சென்று விடுகிறது. ஆக, திருவடியின் ஒளி என்னும் சூரிய ஒளி மூலம், வழி எங்கும் தாமரை மலர்ந்தது போன்று உள்து.

607. அயம் அநிதர போகாந் ரஞ்ஜயந் வீதராகாந்
அருணமணி கணாநாம் தாவகாநாம் ப்ரகாச:
மதுரிபு பதரக்ஷே மங்க்ஷு ஜாஜ்வல்யமாந:
சலபயதி ஜநாநாம் சாச்வதம் பாபராசிம்

**பொருள்** – மது என்னும் அரக்கனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வேறு எதன் மீதும் ஆசை கொள்ளாமல், உன் மீதும் ஸ்ரீரங்கநாதன் மீதும் மட்டுமே ஆசை கொண்டவர்களை உனது பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியானது, மிகவும் சந்தோஷத்தில் ஆழ்த்தியபடி உள்ளது. இதே ஒளியானது, பாவம் செய்பவர்களின் பாவக்குவியலை விளக்கைத் தேடிவரும் விட்டில்பூச்சி போன்று எரிப்பதாகவும் உள்ளது.

608. ப்ரசுர நிகம கந்தா: பாதுகே ரங்கபர்த்து:
பதகமல ஸம்ருத்திம் ப்ரத்யஹம் பாவயந்த:
தததி சகலயந்தோ காடமந்த: தமிஸ்ரம்
ஸமுசிதம் அருணத்வம் தாவகா: பத்மராகா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய பத்மராகக் கற்களின் சிவந்த ஒளியானது வேதவாசனையுடன் உள்ளது; ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளை அன்றாடம் மலரும்படிச் செய்கின்றது; அறியாமை என்ற இருளை நீக்குவதாக உள்ளது. இப்படியாக உனது பத்மராகக்கற்கள், சூரியனின் தன்மையை கொண்டபடி உள்ளன.

609. லாக்ஷா லக்ஷ்மீம் அதரரூசகே ரங்கிண: பாதரக்ஷே
வக்த்ர அம்போஜ மதபரிணதிம் பத்மராக த்யுதிஸ்தே
கர்ண உபாந்தே கிஸலய ருசிம் தேவி ஸேவாநதாநாம்
ஸீமந்தே ச த்ரிதச ஸுத்ருசாம் ஸௌதி ஸிந்தூர சோபாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! உன்னைத் தேவலோகப் பெண்கள் வந்து வணங்குகின்றனர். அப்போது உனது பத்மராகக்கற்களின் சிவந்த ஒளியானது – அவர்கள் உதடுகளில் செம்பஞ்சுக் குழம்பு தடவிய அழகையும், தாமரை போன்ற முகங்களின் கள் குடித்தது போன்ற சிவந்த தன்மையையும், காதின் அருகில் தளிர்களின் சிவப்பையும், தலை வகுட்டில் குங்குமத்தையும் சேர்த்து விடுகிறது.

610. அருணமய: தவ ஏதே
ஹரி பத ராகேண லப்த மஹிமாந:
கமயந்தி சரண ரக்ஷே
த்யுமணிகணம் ஜ்யோதிரிங்கணதாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது பத்மராகக்கற்கள், ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரைகளின் சிவந்த ஒளியைப் பெறுகின்றன. இதனால் அவை, மற்ற சூரியன்கள் அனைத்தையும், ஒளி குறைந்த, மின்மினிப்பூச்சிகள் போன்று மாற்றி விடுகின்றன.

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## பத்மராக பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (18. முக்தா பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - இங்கு உள்ள முக்தா என்ற பதம் முத்துக்களைக் குறிக்கும். அதாவது, பாதுகையில் உள்ள முத்துக்கள் பற்றிக் கூற உள்ளார். அல்லது, முக்தா என்றால் முக்தி பெற்ற ஆத்மாக்கள் என்றும் கொள்ளலாம். இவர்கள் நித்யமாக நின்று ஸ்ரீரங்கநாதனுக்குக் கைங்கர்யம் செய்வதைக் கூறுவதாகவும் கொள்ளலாம்.

611. பத்தாநாம் யத்ர நித்யாநாம்
முக்தாநாம் ஈச்வரஸ்ய ச
ப்ரத்யக்ஷம் சேஷ சேஷித்வம்
ஸா மே ஸித்த்யது பாதுகா

**பொருள்** - எந்த ஒரு பாதுகையில் இழைக்கப்பட்டுள்ள அழிவற்ற முத்துக்களின் சேஷத்வமும் (அடிமைத்தன்மையும்), எந்த ஒரு பாதுகையின் மீது எப்போதும் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதனுக்கு சேஷித்வமும் (எஜமானத்தன்மை) வெளிப்படுகிறதோ, அந்தப் பாதுகை எனக்குக் கைக்கூட வேண்டும்.

612. தவ ரங்கதுரீண பாதரக்ஷே
விமலா மௌத்திக பத்ததி: விபாதி
ஸுஹ்ருதி த்வயி ஸாதித அபவர்க்கை:
ஸமயே ஸங்க்ரமிதேவ ஸாதுக்ருத்யா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! தூய்மையாக உள்ள உனது முத்துக்களின் வரிசை வெண்மையாகக் காணப்படுகிறது. இதனைக் காணும்போது, மோக்ஷம் பெற்றவர்கள், மோக்ஷம் செல்லும் நேரத்தில் மிகவும் அன்புடன் உன்னிடம் அளித்துவிட்டுச் சென்று அவர்களது புண்ணியங்கள் போன்று உள்ளன.

**விளக்கம்** - மோக்ஷம் செல்பவர்கள் தங்கள் பாவ புண்ணியங்களைக் கைவிட்ட பின்னரே மோக்ஷம் செல்கிறார்கள். சாட்யாயநசாகையில் – தஸ்ய புத்ரா தாயம் உபாஸந்தி ஸுஹ்ருத ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம் – மோக்ஷம் செல்லும் உபாஸகனின் புத்திரர்கள் அவனது செல்வத்தையும், நண்பர்கள் புண்ணியத்தையும், பகைவர்கள் பாவத்தையும் அடைகின்றனர் – என்று கூறியது. இங்கு மோக்ஷம் செல்பவர்களின் நண்பனாக பாதுகை உள்ளதால், அவர்களின் புண்ணியங்கள் பாதுகையிடம் சேர்ந்து விடுகின்றன. புண்ணியத்தின் நிறம் வெண்மை என்பதால், அவை முத்துக்கள் போன்று உள்ளன என்றார்.

613. சரணாகத ஸஸ்ய மாலிநீ இயம்
தவ முக்தாமணி ரச்மி நிர்ஜ்ஜரௌகை:
நநு ரங்கதுரீண பாதரக்ஷே
ஜகதீ நித்யம் அதைவ மாத்ருகா அபூத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இந்த உலகம், ஸ்ரீரங்கநாதனே கதி என்றபடி உள்ள ப்ரபன்னர்களைப் பயிர்களாகக் கொண்டுள்ளது. உனது முத்துக்களின் ஒளியானது, மலை அருவிகளின் ப்ரவாஹங்களுடன் ஓடி வந்து இந்தப் பயிர்களில் பாய்கிறது. ஆக இந்தப் பூமி மழையை எதிர்பாராமல் உள்ளதாயிற்று.

614. அதி விஷ்ணு பதம் பரிஸ்புரந்தீ
தவ முக்தாமணி நிர்மல ப்ரகாசா
பரிபுஷ்யஸி மங்களாநி பும்ஸாம்
ப்ரதிபத் சந்த்ரகலா இவ பாதுகே த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உள்ள நீ, உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்களின் ஒளியினால் வெண்மையாகக் காட்சி அளிக்கிறாய். இப்படியாக உள்ள நீ, ப்ரதமையில் உதிக்கும் சந்திரன் போன்று, அனைத்து உயிர்களுக்கும் நன்மை அளித்தபடி இருக்கிறாய் (ப்ரதமை என்பது பௌர்ணமிக்கு மறுநாள் ஆகும். அந்த நாளில் சந்த்ரன் பிறையாக இருக்கும். சந்த்ரனின் பிறையைக் கண்டால் நன்மை உண்டாகும்).

615. நிஹிதா நவ மௌத்திகாவளி: த்வாம்
அபித: காஞ்சந பாதுகே முராரே
நக சந்த்ரமஸாம் பத ஆச்ரிதாநாம்
ப்ரதிமா சந்த்ர பரம்பரேவ பாதி

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! உன்னுடைய அனைத்துப் பக்கங்களிலும் வெண்மையான முத்துக்கள் வரிசையாக இழைக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்ற ஆகாயத்தை அடைந்துள்ள அவனது திருவடி நகங்கள் என்னும் சந்திரன்களின் ப்ரதிபிம்பம் போன்று உள்ளது.

616. ஸமதாம் உபைதி வபுஷாபி ஸதா
பவதீய மௌத்திக மஹ: சுரிதா
ஹரிபாதுகே ஹரிபத: உத்பவயா
கநகாபகா ஸுரபுராபகயா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய வெண்முத்துக்களுடன் எப்போதும் காவேரி கலந்துள்ளது. இதனால் வெண்மையாகக் காணப்படும் காவேரி, ஸ்ரீரங்கநாதனின் திருவடியில் இருந்து வெளிப்பட்ட கங்கையை, தனது நிறத்திலும் ஒத்துள்ளது.

617. தவ ரங்க சந்த்ர தபநீய பாதுகே
விமலா ஸமுத்வஹதி மௌக்திகாவளி:
சரணாரவிந்த நகசந்த்ர மண்டல
ப்ரணய உபயாத நவ தாரக ருசிம்

**பொருள்** - ஸ்ரீரங்க விமானத்தில் சந்திரன் போன்று விளங்கும் ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்கள் சந்திரன் போன்று உள்ளன. அந்த சந்த்ர மண்டலத்தின் மீது மிகவும் ப்ரியத்துடன் வந்து நிற்கும் புதிய நக்ஷத்ரங்கள் போன்று வெண்மையான உனது முத்துக்களின் வரிசை காணப்பட்டது.

618. சந்த்ரசூட மகுடேந லாளிதா
சாரு மௌக்திக மயூக பாண்டரா
ரங்கநாத பதபத்ம ஸங்கிநீ
லக்ஷ்யஸே ஸுரதுநீவ பாதுகே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீ சிவனால் பூஜிக்கப்படுகிறாய். உனது முத்துக்களின் வெண்மையான ஒளி காரணமாக, நீயும் வெண்மையாகத் தோற்றம் அளிக்கிறாய். ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளை எப்போதும் உன்னிடம் வைத்துள்ளாய். ஆக, உன்னைப் பார்த்தால் கங்கை போன்றே உள்ளாய்.

619. யே பஜந்தி பவதீம் தவைவ தே
மௌக்திக த்யுதி விகல்பகங்கயா
வர்த்தயந்தி மதுவைரி பாதுகே
மௌளி சந்த்ர சகலஸ்ய சந்த்ரிகாம்

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! யார் உன்னை எப்போதும் ஆராதித்தபடி உள்ளனரோ, அவர்கள் தங்கள் தலைகளில் உன்னுடைய முத்துக்களின் வெண்மையை, கங்கையைத் தலையில் ஏந்தியது போன்று நிற்கிறார்கள். இப்படியாக அவர்கள் தலையில் கங்கையும், போலியாக ஒரு சந்த்ரனும் உள்ளதாகத் தோன்றுகிறது (அதாவது அவர்கள் சிவன் பட்டம் பெறுகின்றனர்).

620. முக்தா மயூகைர் நியுதம் த்வதீயை:
ஆபூரயிஷ்யந் அவதம்ஸ சந்த்ரம்
பிபர்தி ரங்கேச்வர பாதரக்ஷே
தேவோ மஹாந் தர்சித ஸந்நதி: த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தன்னுடைய தலையில் சந்த்ரனை ஆபரணமாக அணித்த சிவன், அந்தச் சந்த்ரனின் வெண்மையை முழுமையாக்கும் பொருட்டு, உன்னை வணங்கியபடி உள்ளான். உனது முத்துக்களின் வெண்மையான ஒளி மூலம், சிவனின் தலையில் உள்ள அந்தச் சந்திரன் முழுமை அடைகிறது.

621. பரிஷ்க்ருதா மௌக்திக ரச்மிஜாலை
பதஸ்ய கோப்த்ரீ பவதீ முராரே:
பவதீ அநேகோர்மி ஸமாகுலாநாம்
பும்ஸாம் தம: ஸாகர போதபாத்ரீ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றியபடி உள்ள நீ, உனது முத்துக்களின் ஒளி என்னும் கயிறு மூலம் கட்டப்பட்டவள் போன்று உள்ளாய். எல்லையற்ற துன்ப அலைகளால் வருந்தும் பக்தர்களுக்கு, அந்த ஸம்ஸாரக்கடலில் இருந்து கரையேற உதவும் கப்பல் போன்று நீ உள்ளாய்.

**விளக்கம்** – இங்கு "எல்லையற்ற துன்ப அலைகள்" என்பது பசி, தாகம், துக்கம், அறியாமை, வயோதிகம், மரணம் என்ற ஆறும் ஆகும்.

622. ரங்கேசபாத ப்ரதிபந்த போகாம்
ரத்நாநு வித்தைர் மஹிதாம் சிரோபி:
முக்தா அவதாநாம் மணிபாதுகே த்வாம்
மூர்த்திம் புஜங்காதிபதே ப்ரதீம:

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியின் மென்மையை நீ அனுபவித்தபடி சுகமாக உள்ளாய். இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட க்ரீடங்களை உடைய தேவர்களால் எப்போதும் கொண்டாடப்பட்டபடி உள்ளாய். உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்களின் ஒளி காரணமாக வெண்மையாகவும் உள்ளாய். இப்படியாக உன்னைக் காணும்போது, நாகங்கள் அனைத்திற்கும் அரசனாகிய ஆதிசேஷனின் திருமேனி என்றே எண்ணுகிறோம்.

623. முகுந்தபாதாவநி மௌக்திகை: தே
ஜ்யோத்ஸ்நாமயம் விச்வம் இதம் திவாபி
வைமாநிகாநாம் ந பஜந்தி யேந
வ்யகோசதாம் அஞ்ஜலி பத்மகோசா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்களின் ஒளி காரணமாக, இந்த உலகத்தின் பகல் நேரத்திலும் சந்த்ரன் உள்ளது போன்றே தோற்றம் உள்ளது. இதனை எப்படி உணர முடிகிறது என்றால் - தேவர்களின் கைகுவித்தல் என்ற தாமரை மொட்டுக்கள், மலராமலேயே உள்ளதன் மூலம் அறியலாம் (அதாவது, தேவர்கள் பாதுகையை நோக்கிக் குவித்த கையை எடுப்பதே இல்லை, எப்போதும் அஞ்ஜலி முத்திரையில் உள்ளனர்).

624. ஸமாச்ரிதாநாம் அநகாம் விசுத்திம்
த்ராஸ வ்யபாயம் ச விதந்வதீ த்வம்
ஸாயுஜ்யம் ஆபாதயஸி ஸ்வகீயை:
முக்தாபலை: மாதவ பாதுகே ந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரைத் தரித்த ஸ்ரீ ரங்கநாதனின் பாதுகையே! உன்னையே அண்டியபடி நிற்கின்ற எங்களுக்கு, பாவங்களின் தொடர்பு இல்லாத தன்மையையும் (வெண்மை), பயம் இல்லாத தன்மையையும் நீ ஏற்படுத்துகிறாய். இதன் மூலம் உன்னுடைய முத்துக்கள் போன்றே எங்களையும் நீ மாற்றி, இன்பமாக இருக்கும்படிச் செய்கிறாய்.

625. அவைமி பாதாவநி மௌக்திகாநாம்
கீர்ணாம் உதக்ரை: கிரண ப்ரரோஹை:
யாத்ரா உத்ஸவார்த்தம் விஹிதாம் முராரே:
அபங்குராம் அங்குரபாலிகாம் த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளியானது மேல் முகமாய் எழுந்து நிற்கிறது. இதனைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதனின் உற்சவ காலங்களில் உண்டாக்கப்படும் உறுதியான நவதானிய முளைகள் கொண்ட பாலிகைகள் போன்று நீ உள்ளாய்.

626. சிவத்வஹேதும் ஸகலஸ்ய ஜந்தோ:
ஸ்ரோதோ விசேஷை: ஸுபகாம் அஸங்க்யை:
முக்தா மயூகை: ஸுரஸிந்தும் அந்யாம்
புஷ்ணாஸி ரங்கேச்வர பாதுகே த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளி மூலமாக அனைத்து உயிர்களுக்கும் தூய்மையை அளிக்கிறாய், மங்களங்களை அளிக்கிறாய் (இதனையே, சிவனாய் இருக்கும் தன்மையை அடைவிப்பாய் என்று கூறுவர்). ஆக எண்ணற்ற அலைகள் வீசுகின்ற புதியதான ஒரு கங்கையை நீ திருவரங்கத்திலே உண்டாக்குகிறாய் போலும்.

627. ரங்கே சயாநஸ்ய பதாவநி த்வாம்
லாவண்யஸிந்தோ: ஸவிதே நிஷண்ணாம்
பரிஸ்புரத் மௌக்திக ஜால த்ருச்யாம்
ப்ரஸூதிபிந்நாம் ப்ரதியந்தி சுக்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கத்தில் சயனித்துள்ள பெரியபெருமாள் அழகான கடல் போன்றுள்ளான். அந்தக் கடலின் அருகில் காணப்படும் முத்துக்களின் கூட்டங்களால் நீ ப்ரகாசிக்கிறாய். இப்படியாக உள்ள உன்னைக் காணும்போது, ப்ரசவம் காரணமாகப் பிளந்த முத்துச்சிப்பி போன்று உள்ளாய்.

628. அவைமி ரங்கேச்வர பாதரக்ஷே
முக்தா பலாநி த்வயி நிஸ்துலாநி
தேநைவ கல்பாந்தர தாரகாணாம்
உப்தாநி பீஜாநி ஜகத் விதாத்ரா

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட வெண்மையான வட்டமான முத்துக்கள் காண்பதற்கு எப்படி உள்ளன என்றால் – அடுத்து வர உள்ள கல்பங்களில் தோன்றவுள்ள நக்ஷத்ரங்களுக்கு, ஸ்ரீரங்கநாதனால் விதைக்கப்பட்ட விதைகள் என்றே தோன்றுகின்றன.

629. விக்ரம்யமாணம் அபவத் க்ஷணம் அந்தரிக்ஷம்
மாயாவிநா பகவதா மணிபாதரக்ஷே
வ்யோமாபகா விபுல புத்புத தர்சநீயை:
முக்தாபலை: தவ சுபை: புநருக்ததாரம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! வியக்கத்தக்க செயல்கள் செய்யும் ஸ்ரீரங்கநாதனால் முன்பு இந்த உலகம் அளக்கப்பட்டபோது, அவன் தனது திருவடியை மேல் நோக்கி உயர்த்தினான். அப்போது உனது முத்துக்கள் ஆகாயத்தில் காணப்படும் கங்கையின் நீர்க்குமிழிகள் போன்று ப்ரகாசித்தன. அந்த ஒரு நேரத்தில், விண்ணில் இருந்த நக்ஷத்ரங்கள், உன்னுடைய முத்துக்களுடன் சேர்ந்து கொண்டு, இருமடங்காக உள்ள நக்ஷத்ரக்கூட்டம் போன்று தோன்றின.

630. லக்ஷ்மீ விஹார ரஸிகேந பதாவநி த்வம்
ரக்ஷாவிதௌ பகவதா ஜகதோ நியுக்தா
ஸத்த்வம் ததர்ஹம் இவ தர்சயஸி ப்ரபூதம்
முக்தா மயூக நிகரேண விஸ்ருத்வரேண

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தான் ஸ்ரீரங்கநாச்சியாருடன் விளையாடும் பொருட்டு, ஸ்ரீரங்கநாதன் இந்த உலகைக் காப்பாற்றும் பொறுப்பை உன்னிடம் அளித்து, உன்னை நியமித்தான். அந்தச் செயலுக்கு ஏற்ற தகுதியான அதிகமான ஸத்வ குணம் உனக்கு உள்ளது என்பதை, எங்கும் பரவி நிற்கும் உனது முத்துக்களின் ஒளி மூலமாக உணர்த்துகிறாய் போலும்.

631. பாத அர்ப்பணேந பவதீம் ப்ரதிபத்யமாநே
ஸ்ரீரங்க சந்த்ரமஸி ஸம்ப்ருத மௌக்திக ஸ்ரீ:
அங்கீகரோஷி சரணாவநி காந்திம் அக்ர்யாம்
உத்பித்யமாந குமுதேவ குமத்வதீ த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கத்தின் சந்த்ரனாகிய ஸ்ரீரங்கராஜன், தனது திருவடிகளில் உன்னைச் சேர்த்துக் கொள்ளும்போது, அவனது திருவடிகளின் ஒளியானது சந்த்ரனின் ஒளி போன்று உன் மீது விழுகிறது. அப்போது உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்கள் அனைத்தும், ஆம்பல் மலர் போன்று மலர்கின்றன. இதனைக் காணும்போது நீ ஆம்பல் தடாகம் போன்ற அழகை அடைகிறாய்.

632. த்ரயந்த ஹர்ம்யதல வர்ண ஸுதாயிதேந
ஜ்யோத்ஸ்நா விகல்பித ருசா மணிபாதுகே த்வம்
முக்தாமயீ முரபித் அங்க்ரி ஸரோஜ பாஜாம்
வர்ணேந தே சமயஸீவ ஸதாம் அவர்ணம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உனது முத்துக்களின் ஒளி காரணமாக வேதாந்தங்கள் என்னும் உப்பரிகைகளுக்கு வெள்ளை அடிக்கும் சுண்ணாம்பு போன்று உள்ளாய். உன்னை வணங்குபவர்கள் மீது இந்த நிறமானது, நிலவின் ஒளி போல் பரவுகிறது. இப்படியாக ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் பணிகின்றவர்களுடைய தோஷங்களை நீ விலக்குகிறாய் போலும்.

633. வைகுண்ட பாத நக வாஸநயேவ நித்யம்
பாதாவநி ப்ரஸுவதே தவ மௌக்திகாநி
அச்சிந்ந தாபசமநாய ஸமாச்ரிதாநாம்
ஆலோக மண்டல மிஷாத் அம்ருத ப்ரவாஹம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இருந்து கங்கை உண்டானது. அந்தத் திருவடிகளின் நகங்களுடன் உனக்கும் உன்னில் காணப்படும் முத்துக்களுக்கும் பழக்கம் உண்டானது. இதனால் நீ செய்வது என்ன - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைபவர்களுடைய, யாராலும் விலக்க இயலாமல் உள்ள வேதனைகளை தீர்ப்பதற்காக, உனது முத்துக்களின் ஒளியை அமிர்த வெள்ளம் போன்று எங்கும் பரவச் செய்கிறாய் போலும்.

634. ராமாநுவ்ருத்தி ஜடிலே பரதஸ்ய மௌளௌ
ரங்காதிராஜ பதபங்கஜ ரக்ஷிணி த்வம்
ஏகாதிபத்ரித ஜகத் த்ரிதயா த்விதீயம்
முக்தாம்சுபி: க்ருதவநீ நவம் ஆதபத்ரம்


**Email:**sridharan_book3yahoo.co.in

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் தாமரை போன்ற திருவடிகளைக் காப்பவளே! மூன்று உலகங்கள் முழுவதும் ஒரே குடையின் கீழ் இருந்தன. இராமனைப் போன்றே ஜடை தரித்த பரதனின் தலையில், உனது முத்துக்களின் ஒளி மூலமாக, புதிதான இரண்டாவதாக ஒரு குடையை நீ அமைத்தாய்.

**விளக்கம்** - உலகம் முழுவதும் பரதனால் "பாதுகையின் ஸாம்ராஜ்யம்" என்ற குடையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதனைக் கண்டு பாதுகைக்குப் பொறுக்கவில்லை. தன்னைக் காட்டிலும் பரதனுக்கு அதிகமான பெருமை உண்டாக வேண்டும் என்று எண்ணி, தனது முத்துக்களின் ஒளி மூலமாகவே பரதனுக்கு வெண்கொற்றக் குடையை அமைத்தாள்.

635. பாதாவநி ஸ்புடமயூக மதுப்ரவாஹா
முக்தா பரிஸ்புரதி மௌக்திக பத்ததி: தே
ரூடஸ்ய ரங்கபதி பாதஸரோஜ மத்யே
ரேகாத்மந: ஸுரதரோ: இவ புஷ்ப பங்க்தி:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடியின் நடுவில் உள்ள மெல்லிய கோடு (ரேகை) கற்பக மரம் போன்று உள்ளது. தாமரைமலர் போன்ற சிவந்த அந்தத் திருவடியில் காணப்படும் கற்பக மரத்தின் மலர்கள் போன்று, உனது முத்துக்கள் உள்ளன. இவற்றிலிருந்து பெருகும் ஒளி வெள்ளமானது மிகவும் அழகாகவும், தேன் போன்று இனிமையாகவும் உள்ளன.

636. ஆம்ரேடிதை: பத நக இந்து ருசா மநோஜ்ஞை:
முக்தாம்சுபி: முரபிதோ மணிபாதுகே த்வம்
ஸாபாவிகீம் ஸகலஜந்துஷு ஸார்வபௌமீம்
ப்ராய: ப்ரஸத்திம் அமலாம் ப்ரகடீகரோஷி

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளியானது, ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்களுடைய ஒளியால், மேலும் அழகாகவும் ஒளியுள்ளதாகவும் ஆக்கப்படுகின்றன. இதனைக் காணும்போது அனைத்து உயிர்களிடத்திலும் இயல்பாகவே ஸ்ரீரங்கநாதன் கொண்டுள்ள, எந்தவிதமான களங்கமும் இல்லாத உயர்ந்த அநுக்ரஹத்தை வெளிப்படுத்துவது போன்று உள்ளது.


**Email:**sridharan_book3yahoo.co.in

637. நிஸ்ஸீம பங்கமலிநம் ஹ்ருதயம் மதீயம்
நாதஸ்ய ரங்கவஸதே: அதிரோடும் இச்சோ:
மாத: தவ ஏவ ஸஹஸா மணிபாதரக்ஷே
முக்தாம்சவ: ஸ்படிகஸௌத துலாம் நயந்தி

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! தாயே! என்னுடைய மனதில் எல்லையற்ற காலமாக அழுக்கு படிந்தபடி உள்ளது. இப்படிப்பட்ட சேற்றில் இறங்க ஸ்ரீரங்கநாதன் எண்ணுகிறான். இதனைக் கண்டவுடன் உனது முத்துக்களின் ஒளி எனது மனதில் புகுந்து, அங்கு ஸ்படிகத்தால் செய்த உப்பரிகையுடன் கூடிய மாளிகையை ஏற்படுத்தி விடுகின்றது.

638. ச்யாமா தநுர் பகவத: ப்ரதிபந்ந தாரா
த்வம் சந்த்ரிகா விமல மௌக்திக தர்சநீயா
ஸ்தாநே தத் ஏதத் உபயம் மணிபாதரக்ஷே
போதம் க்ஷணாந் நயதி புத்தி குமுத்வதீம் ந:

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! உனது முத்துக்களின் ஒளியுடன் காணும்போது, ஸ்ரீரங்கநாதனின் திருமேனியானது, இரவு போன்று உள்ளது. உன்னுடைய வெண்மையான முத்துக்களின் ஒளியால் நீ அந்த இரவில் உதிக்கும் சந்த்ரன் போன்று உள்ளாய். இப்படியாக இரவுப்பொழுதும், சந்த்ரனுமாக என்று உள்ள நீங்கள் இருவரும், எங்கள் புத்தி என்னும் ஆம்பல் ஓடையை மலரச் செய்யவேண்டும் (ஆம்பல் மலரானது இரவில் மலரும். இதனைப் போன்று நம் மனம் மலரவேண்டும் என்றார்).

639. உத்காட பங்கமநை: மணிபாதரக்ஷே
முக்தா அம்சுபி: முரபித: நக ரச்மிபிந்நை:
சூடாபதேஷு நிஹிதா த்ரிதச ஈச்வரணாம்
தீர்த்த உதகை: ஸ்நபயஸீவ பதார்த்திந: தாந்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! தேவர்களின் தலைகளில் வைக்கப்பட்ட நீ உனது முத்துக்களின் ஒளியால் செய்வது என்ன - அதிகமாகக் கெட்டியாகி, சேறு போன்றுள்ள பாவங்களை, ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்களின் ஒளியுடன் சேர்ந்தபடி நின்று, உனது முத்துக்களின் ஒளி மூலம் விலக்குகிறாய். இப்படியாக அந்த முத்துக்களின் ஒளி என்னும் புண்ணிய நீர் கொண்டு, உயர்ந்த பதவிகளை வேண்டி நிற்கும் தேவர்களுக்கு பட்டாபிஷேகம் செய்து வைக்கிறாய் போலும்.

640. ரங்கேச பாத நக சந்த்ர ஸுதா அநுலேபம்
ஸம்ப்ராப்ய ஸித்தகுளிகா இவ தாவகீநா:
ஸம்ஸார ஸம்ஜ்வரஜுஷாம் மணிபாதரக்ஷே
ஸம்ஜீவநாய ஜகதாம் ப்ரபவந்தி முக்தா:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய முத்துக்கள் அனைத்தும் ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்களில் இருந்து வெளிவரும் ஒளி என்னும் அமிர்தப் பூச்சை அடைகின்றன. இதனால் அவற்றின் ஒளியானது, சித்தர்கள் செய்கின்ற மாத்திரைகள் போன்று மாறுகின்றன. இந்த முத்துக்களின் ஒளியானது, கடுமையான ஸம்ஸார நோயை நீக்கி, அனைத்து உலகங்களையும் பிழைக்கவல்ல சக்தி பெறுகின்றன.

641. பாவோத்தரை ரதிகதா ப்ரத ப்ரதாநை:
ப்ரத்யுப்த மௌக்திக மிஷேண விகீர்ணபுஷ்பா
ரங்கேச்வரஸ்ய நியதம் த்வயி லாஸ்யபாஜ:
ரங்கஸ்தலீவ லளிதா மணிபாதுகே த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மிகுந்த பக்தி கொண்ட பரதன் முதலானவர்களால் (இதனை - மிகுந்த அபிநய திறன் கொண்ட நாட்டியக்காரர்கள் என்று கூறினார்) அடையப்பட்டது; முத்துக்கள் என்னும் மலர்களால் வாரி இறைக்கப்பட்டது - இப்படிப்பட்ட நாடக மேடை போன்று உள்ள உன் மீது நடனம் செய்வதற்குத் தயாராக உள்ள ஸ்ரீரங்கநாதனுக்கு ஏற்ற அழகான மேடையாக நீ உள்ளாய்.

642. மந்யே முகுந்த சரணாவநி மௌளி தேசே
விந்யஸ்ய தேவி பவதீம் விநதஸ்ய சம்போ:
ஆபாத யந்தி க்ருதா: ப்ரதிபந்நதாரம்
சூடா துஷாரகிரணம் தவ மௌத்திகௌகை:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னை வணங்கி நிற்கும் சிவனுடைய தலையில் உன்னை அர்ச்சகர்கள் வைக்கின்றனர். சிவனுடைய தலையில் உள்ள சந்திரனுடன் சேர்ந்து, உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்களும் அவன் தலையில் அப்போது காணப்படுகின்றன. இதனால் அவன் தலையில் சந்த்ரனுடன் விண்மீன்களும் சேரும்படிச் செய்கின்றனர் என்று எண்ணுகிறேன்.

643. பத்மாபதே: விஹரத: ப்ரியம் ஆசரந்தீ
முக்தா மயூக நிவஹை: புரதோ விகீர்ணை:
கந்தாநி காஞ்சந பதாவநி பத்மநீநாம்
மந்யே விநிக்ஷிபஸி மந்திர தீர்க்கிகாஸு

**பொருள்** - தங்கத்தால் செய்யப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகன் ஸஞ்சாரம் செய்யும் காலங்களில் அவன் முன்பாக உனது முத்துக்களின் ஒளி பாய்ந்து செல்கிறது. அவற்றின் மூலம் அவன் நடக்கும் இடம் எங்கும், தாமரைக் கொடிகளின் கிழங்குகளை நீ புதைத்து வைக்கிறாய் போலும். இதன் மூலம் அவனுக்கு நீ மகிழ்வையும் ப்ரியத்தையும் ஏற்படுத்துகிறாய்.

644. ஆசாஸ்ய நூநம் அநகாம் மணிபாதரக்ஷே
சந்த்ரஸ்ய வாரிதிஸுதா ஸஹஜஸ்ய வ்ருத்திம்
தாத்ரீம் முகுந்தபதயோ: அநபாயிநீம் த்வாம்
ஜ்யோத்ஸ்நா ஸமாச்ரயதி மௌக்திக பங்க்தி லக்ஷ்யாத்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உனது முத்துக்களின் வரிசையானது வெண்மையான நிலவு போன்று உள்ளது. இந்த நிலவு செய்வது என்ன என்றால் – ஸ்ரீரங்கநாச்சியாரின் உடன் பிறந்தவனான சந்த்ரன் தேய்ந்து கொண்டே செல்லாதபடி, அவனுக்கு எப்போதும் பூர்ணத்வம் இருக்க வேண்டும் என்று எண்ணியது; இதனால் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளுக்குச் செவிலித்தாய் போன்று இருக்கும் உன்னை அடைகின்றது போலும்.

645. யே நாம கேபி பவதீம் விநய அவநம்ரை:
உத்தம்ஸயந்தி க்ருதிந: க்ஷணம் உத்தமாங்கை:
உச்சந்தி ரங்கந்ருபதே: மணிபாதரக்ஷே
த்வத் மௌக்திமௌக நியதாம் இஹ தே விசுத்திம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! புண்ணியம் செய்தவர்கள் உனக்கு வணக்கம் செலுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் தலை வணங்கி, உன்னை ஒரு நொடி தங்கள் தலையில் ஏற்றாலே போதுமானது. அவர்கள் இந்த உலகத்தின் வாழும்போது, உனது முத்துக்களின் ஒளி போன்ற தோஷம் அற்ற வெண்மையான தன்மையை அடைகின்றனர்.


**Email:**sridharan_book3yahoo.co.in

646. அநுதிநம் லளிதாநாம் அங்குளீ பல்லவநாம்
ஜநித முகுள சோபை: தேவி முக்தாபலை: த்வம்
ப்ரகடயஸி ஜநாநாம் பாதுகே ரங்கபர்த்து:
பதஸரஸிஜ ரேகா பாஞ்சஜந்ய ப்ரஸூதிம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகை தேவியே! அன்றாடம் புதுப்பொலிவுடனும் அழகுடனும் காணப்படும் ஸ்ரீரங்கநாதனின் திருவடி விரல்கள் என்னும் தளிர்களுக்கு மொட்டுக்கள் போன்று உனது முத்துக்கள் மேலும் அழகு சேர்க்கின்றன. தாமரை மலர் போன்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடியில் காணப்படும் ரேகை உருவில் உள்ள பாஞ்சஜந்யம் என்ற சங்கிலிருந்து இந்த முத்துக்கள் வெளிவந்தன என்று நீ அறிவிக்கிறாய் போலும்.

647. பலிவிமதன வேளா வ்யாபிந: தஸ்ய விஷ்ணோ:
பதஸரஸிஜ மாத்வீ பாவநீ தேவி நூநம்
ஜநநஸமய லக்நாம் ஜாஹ்நவீ தாவகாநாம்
வஹதி சரணரக்ஷே வாஸநாம் மௌக்திகாநம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! மஹாபலியை அடக்கிய காலத்தில் ஓங்கி வளர்ந்து நின்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் தேன் போன்று, அனைத்துவிதமான பாவங்களையும் போக்கவல்ல கங்கை உண்டானது. அப்போது உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்கள் அதனுடன் ஒட்டிக்கொண்டன. அப்போது இந்த முத்துக்களின் வாசனையை அந்தக் கங்கை பெற்றது என்பது உறுதி.

648. மதுரிபு பத மித்ரை: வைரம் இந்தோ: ஸரோஜை:
சமயிது இவ தாரா: ஸேவமாநா: சிரம் த்வாம்
ப்ரசுரகிரணபூரா: பாதுகே ஸம்ச்ரிதாநாம்
கலிகலுஷம் அசேஷம் க்ஷாளயந்தீவ முக்தா:

**பொருள்** - ஸ்ரீரங்கநதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியின் தோழர்களாக உள்ள தாமரை மலர்களுடன், சந்த்ரனுக்கு நீண்டகாலமாக இருந்து வரும் பகையை நீக்க எண்ணி, உன்னை வேண்டி நிற்கும் நக்ஷத்ரங்கள் போன்று உன் முத்துக்கள் உள்ளன. இந்த முத்துக்கள், அதிகமான ஒளியுடன், மிகுந்த வெள்ளத்துடன் பாயும் நிதி போன்று நின்று, உன்னை அடைந்தவர்களின் கலிகால பாவங்களைச் சிறிதும் மீதம் இல்லாமல் கழுவுகின்றன.

649. முகளித பரிதாபாம் ப்ராணிநாம் மௌக்திகை: ஸ்வை:
அம்ருதம் இவ துஹாநாம் ஆத்ரியே பாதுகே த்வாம்
விஷதரபண பங்க்தி: யத் ப்ரபாவேந மந்யே
லளித நடந யோக்யம் ரங்கம் ஆஸீத் முராரே:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளி மூலமாக நீ அனைத்து உயிர்களின் துன்பங்களை நீக்கி, அவர்களுக்கு இன்பம் அளிக்கவல்ல அமிர்தமாக உள்ளாய். இப்படிப்பட்ட அமிர்தமாக உள்ள உன்னைக் கொண்டாடுகிறேன். இப்படிப்பட்ட உனது அமிர்த சக்தியால்தான் கண்ணனுக்கு விஷம் நிறைந்த காளியனின் படம் எடுத்த தலைகள், நடனம் ஆடத் தகுந்த அரங்கம் போன்று ஆனது போலும் (இதனையே சற்று மாற்றி - உனது அமிர்த வெள்ளம் காரணமாகவே ஸ்ரீரங்கநாதன் எந்த விதமான பாதிப்பும் இன்றி ஆதிசேஷன் மீது சயனித்துள்ளான் போலும் - என்று ரஸமாகவும் பொருள் உரைக்கலாம்).

650. ஸக்ருதபி விநதாநாம் த்ராஸம் உந்மூலயந்தீம்
த்ரிபுவந மஹநீயாம் த்வாம் உபாச்ரித்ய நூநம்
ந ஜஹதி நிஹகாந்திம் பாதுகே ரங்கபர்த்து:
சரண நக மணீநாம் ஸந்நிதௌ மௌக்திகாநி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை யாரேனும் ஒருமுறை வணங்கி நின்றால், அவர்களின் பயத்தை நீக்குபவளாக உள்ளாய். மூன்று உலகங்களாலும் கொண்டாடத்தக்கவளாக நீ உள்ளாய். உன்னை அண்டி நின்ற காரணத்தினால் மட்டுமே உனது முத்துக்கள், ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளின் நகங்கள் என்னும் இரத்தினக்கற்கள் தங்கள் அருகில் உள்ளபோதிலும், தங்கள் (முத்துக்கள்) ஒளியை இழக்காமல் உள்ளன என்பது நிச்சயம்.

651. புவநம் இதம் அசேஷம் பிப்ரதோ ரங்கபர்த்து:
பதகமலம் இதம் தே பாதுகே தாரயந்த்யா:
சிரவிஹரண கேதாத் ஸம்ப்ருதாநாம் பஜந்தி
ச்ரமஜல கணிகாநாம் ஸம்பதம் மௌக்திகாநி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து உலகங்களையும் ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகள் தாங்கி நிற்கின்றன. அப்படிப்பட்ட அவனது திருவடிகளையும் நீ தாங்கி நிற்கின்றாய். ஆக, மூன்று உலகங்களுடன் சேர்த்து ஸ்ரீரங்கநாதனையும் தாங்கி

நிற்பதால் உனக்குக் களைப்பு காரணமாக வியர்வைத் துளிகள் தோன்றுகின்றன. இவையே உனது முத்துக்கள் போன்று அழகாகத் தோன்றுகின்றன போலும்.

652. ப்ரகடித யசஸாம் தே பாதுகே ரங்கபர்த்து:
த்விகுணித நக சந்த்ர ஜ்யோதிஷாம் மௌக்திகாநாம்
கரணவிலய வேளா காதரஸ்ய அஸ்ய ஜந்தோ:
சமயதி பரிதாபம் சாச்வதீ சந்த்ரிகேயம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய முத்துக்களானவை உனது புகழ் காரணமாக, மேலும் புகழ் பெற்று விளங்குகின்றன. இவை ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரையில் உள்ள நகங்கள் என்னும் சந்த்ரன்களின் ஒளியை மேலும் அதிகப்படுத்தியபடியே உள்ளன. இந்த நிலவானது (முத்துக்களின் ஒளி), எப்போதும் நிலையாக நின்று, மரண காலத்தில் என்ன நேருமோ என்று அச்சத்துடன் உள்ள அனைவரது பயத்தையும் வேதனைகளையும் நீக்கியபடி உள்ளது.

653. திவ்யம் தாம் ஸ்திரம் அபியதாம் தேவி முக்தா மணீநாம்
மத்யே கச்சித் பவதி மதுஜித் பாதுகே தாவகாநாம்
ந்யஸ்தோ நித்யம் நிஜகுண கண வியக்திஹேதோ: பவத்யாம்
ஆத்மஜ்யோதி: சமித தமஸாம் யோகிநாம் அந்தராத்மா

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தங்களுக்கு இயற்கையாகவே உள்ள வெண்மை முதலான குணங்களானவை, அறியாமை என்பது நீங்கி வெளிப்படும் பொருட்டு, உன்னிடத்தில் தங்களை ஒரு சிலர் சமர்ப்பணம் செய்கின்றனர். இவர்கள் ஜீவனின் ஸ்வரூபம், தங்களின் அந்தர்யாமியான பரமாத்மாவின் ஸ்வரூபம் ஆகியவற்றை அறிந்து கொள்கின்றனர். இந்த ஞானத்தால் அவர்களின் தமோ குணம் என்ற இருள் நீங்குகிறது. இதனால் மிகவும் உயர்ந்ததும், நித்யமான ஒளி கொண்டதும் ஆகிய உனது முத்துக்களின் நடுவே, அவர்களின் ஆத்மாவுக்கு ஒன்றாக நிற்கும்படியான நிலையை அடைகின்றனர்.

654. சுத்தே நித்யம் ஸ்திரபரிணதாம் தேவி விஷ்ணோ: பதே த்வாம்
ஆஸ்தாநீம் தாம் அமித விபவாம் பாதுகே தர்க்கயாமி
ஆலோகை: ஸ்வை: புவநம் அகிலம் தீபவத் வ்யாப்யகாமம்
முக்தா: சுத்திம் யத் உபஸநாத் பிப்ரதி த்ராஸ ஹீநா:

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகா தேவியே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் எப்போதும் தூய்மையாகவும் ஸ்திரமாகவும் உள்ளன. அந்தத் திருவடிகளில் நீ எப்போதும் நிலையாக, எல்லையற்ற பெருமையுடன் விளங்குகிறாய். இப்படியாக உள்ள உன்னை, வேதங்கள் ஆனந்தமயம் என்ற கூறுகின்ற மணிமண்டபமாகவே எண்ணுகிறேன். இப்படிப்பட்ட உன்னை அடைந்ததால், குற்றம் ஏதும் இல்லாத முத்துக்கள், தங்கள் ஒளி மூலமாக அனைத்து உலகங்களும் ஒளிரும் விதமாக எரிகின்ற விளக்குகள் போன்று, தோஷங்கள் அற்ற தன்மையை அடைகின்றன.

655. ப்ராப்தா சௌரே: சரண கமலம் பாதுகே பக்தி பாஜாம்
ப்ரத்யா தேஷ்டும் கிம் அபி வ்ருஜிநம் ப்ராபிதா மௌளிபாகம்
தேவந த்வம் தசச தத்ருசா தந்திராஜ்யஸ்ய தத்ஸே
மூர்த்நி ந்யஸ்தா முகபடருசிம் மௌக்திகாநாம் ப்ரபாபி:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் வந்து வணங்கும் அடியார்களின் ஸம்ஸார ரூபமான பாவங்களை நீக்கும் விதமாக உன்னை அவர்கள் தலைகளில் வைக்கின்றனர். இப்படிப்பட்ட உன்னை ஆயிரம் கண்கள் கொண்ட இந்தரன் தனது யானையான ஐராவதத்தின் தலையில் வைக்கிறான். அப்போது உனது முத்துக்களின் ஒளி மூலமாக யானையின் முகத்தில் தொங்கவிடப்படும் பட்டு வஸ்திரம் போன்று நீ விளங்குகிறாய்.

656. தவ ஹரிபாதுகே ப்ருதுள மௌக்திக ரத்ந புவ:
ப்ரசலத் அமர்த்ய ஸிந்து லஹரீ ஸஹ தர்மசரா:
பதம் ஜராமரம் விதத்தே கதம் அம்ப ஸதாம்
ப்ரணத ஸுரேந்த்ர மௌளி பலிதங்கரணா: கிரணா:

**பொருள் –** ஸ்ரீஹரியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! உன்னுடைய முத்துக்களின் ஒளியானது, அலைகள் வீசும் கங்கையின் அலைகள் போன்று காணப்படுகிறது. இந்த வெண்மையான ஒளியானது, தேவர்களின் தலைகளில் விழுந்து, அவர்களின் தலைகள் நரைத்தது போன்றே உள்ளன. இப்படி இருந்தும் அவர்கள், வயோதிகம் மற்றும் மரணம் அடையாமல் எப்படி உன்னால் செய்யப்படுகின்றனர்?

657. கபர்த்தே கஸ்யாபி க்ஷிதிதர பத த்ராயிணி ததா
முஹு: கங்காம் அந்யாம் க்ஷரதி தவமுக்தா மணிமஹ:
முதாரம்ப : கும்ப ஸ்தலம் அநுகலம் ஸிஞ்சதி யதா
நிராலம்போ லம்போதர களப சுண்டால சுளக:

**பொருள்** - பூமியைத் தூக்குகின்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பற்றும் பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளியானது, சிவன் உன்னைத் தனது தலையில் வைத்துக் கொள்ளும்போது, அங்கு மற்றொரு கங்கையைப் போலியாக உருவாக்கியது போன்று உள்ளது. இந்த ஒளியால் ஆகிய கங்கையை, உண்மையான கங்கை என்று எண்ணி, பிள்ளையார் தனது துதிக்கையை நீட்டி எடுக்க முயற்சி செய்கிறார். அங்கு எடுப்பதற்கு ஏதும் இல்லாமல் வீணான முயற்சியுடன் தனது தலையை அடிக்கடி நனைத்துக் கொள்கிறார்.

658. முகுந்த பதரக்ஷிணி ப்ரகுண தீப்தய: தாவகா
க்ஷரந்தி அம்ருத் நிர்ஜ்ஜரம் கமபி மௌக்திக க்ரந்தய:
மநாகபி மநீஷிணோ யத் அநுஷங்கிண: தத்க்ஷணாத்
ஜராமரண தந்துரம் ஜஹதி ஹந்த தாப த்ரயம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! மிகுந்த ஒளி கொண்ட உனது முத்துக்களின் வரிசைகள் அமிர்த வெள்ளத்தை உண்டாக்குகின்றன. அதில் யாரேனும் ஒரு நொடி நீராடினாலே போதுமானது - அவர்கள் கிழத்தன்மை, மரணம் ஆகியவற்றையும், மூன்று விதமான துன்பங்களையும் அதே நொடியில் கைவிட்டு விடுகின்றனரே! என்ன வியப்பான செயல் இது?

659. தேவ: ஸ்ரீபத லாக்ஷயா திலகித: திஷ்ட்டதி உபர்யேவ தே
கௌரீ பாதஸரோஜ யாவக தநீ மூலே ஸமாலக்ஷ்யதே
இத்தம் ஜல்பதி துர்மதாந் முரபித: சுத்தாந்த சேடீஜநே
ப்ராப்ய: த்வம் மணிபாதுகே ப்ரஹஸிதா முக்தா மயூக ச்சலாத்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரின் திருவடிகளில் உள்ள செம்பஞ்சுக் குழம்பு மூலம் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதன், உன் மீது எப்போதும் காணப்படுகிறான். பார்வதியின் தாமரை மலர் போன்ற திருவடிகளின் செம்பஞ்சுக் குழம்பைத் தனது செல்வமாகக் கொண்ட சிவன், உனது கீழே எப்போதும் உள்ளான் (அதாவது தனது தலையில் எப்போதும் தாங்கியபடி உள்ளான்). இப்படியாக

ஸ்ரீரங்கநாச்சியாரின் பணிப்பெண்கள், கர்வம் காரணமாகக் கூறும் சொற்களைக் கேட்டு நீ சிரிக்கிறாய் போலும்.

660. ரங்கேச சரணரக்ஷா
ஸா மே விததாது சாச்வதீம் சுத்திம்
யத் மௌக்திக ப்ரபாபி:
ச்வேத த்வீபம் இவ ஸஹ்யஜா த்வீபம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! நீ எனக்கு அழிவற்ற வெண்மையை (பாவங்கள் அற்ற தன்மை, ஞானம்) உண்டாக்க வேண்டும். உன்னுடைய முத்துக்களின் அந்த ஒளியால் அல்லவோ ஸ்ரீரங்கம் என்னும் காவேரியால் சூழப்பட்ட தீவானது, ச்வேத த்வீபம் போன்று வெண்மையாக உள்ளது?

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
முக்தா பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book3yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (19. மரதக பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - இங்கு பச்சைக் கற்களான மரதகக் கற்களைப் பற்றி மட்டுமே கூறுகிறார். மரகதம் என்றும் கூறுவது உண்டு.

661. வந்தே காருத்மதீம் வ்ருத்யா
மணி ஸ்தோமைச்ச பாதுகாம்
யயா நித்யம் துளஸ்யேவ
ஹரி தத்வம் ப்ரகாச்யதே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எழுந்தருளச் செய்தல் என்னும் தொழில் ரீதியாகவும், இரத்தினங்களின் ஒற்றுமை காரணமாகவும், கருடனின் தொடர்பு கொண்ட பாதுகையை நான் வணங்குகிறேன். துளசியானது எப்படி தன்னால் அர்ச்சிக்கப்படும் ஸ்ரீரங்கநாதனின் நிறமானது, தன் போன்று பச்சை நிறம் என்று உணர்த்துகிறதோ, அது போன்றே பாதுகையின் மரதகங்களும் பச்சையை உணர்த்துகின்றன.

662. ஸவிலாஸ கதேஷு ரங்கபர்த்து:
த்வத் அதீநேஷு பஹிஷ்க்ருதோ கருத்மாந்
அதி கச்சதி நிர்வ்ருதிம் கதம்சித்
நிஜ ரத்நை: த்வயி பாதுகே நிவிஷ்டை:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னால் ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரம் நடைபெறுகிறது. இதனால் கருடன் அந்த நேரங்களில் விலக்கப்பட்டவன் ஆகிறான். ஆனால் உன்னில் பதிக்கப்பட்ட தனது மரதக இரத்தினங்கள் கண்டு சற்றே நிம்மதி அடைகிறான்.

663. ஸமயே மணிபாதுகே முராரே:
முஹுரத்ந: புரமுக்த சேடிகாஸ்தே
ஹரிதாந் ஹரி தச்மநாம் மயூகாந்
துளஸீ பல்லவ சங்கயா க்ஷிபந்தி

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் அந்தப்புரத்தில் பணி புரியும் பெண்கள், அதிகாலை நேரத்தில் உன் மீது பதிக்கப்பட்டுள்ள மரதகக் கற்களை, முந்தைய நாள் உன் மீது இறைக்கப்பட்ட துளசிக் கொழுந்துகள் என்று எண்ணி, அவற்றைத் தள்ளியபடி இருக்கின்றனர்.

664. ஹரித: ஸஹஸா ஹரிந் மணீநாம்
ப்ரபயா ரங்க நரேந்த்ர பாதரக்ஷே
துளஸீ தள ஸம்பதம் ததாதி
த்வயி பக்தை: நிஹித: ப்ரஸூந ராசி:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் மீது ஸ்ரீரங்கநாதனின் அடியார்கள் மலர்களைத் தூவியபடி உள்ளனர். இந்த மலர்களின் மீது உனது மரதகக்கற்களின் ஒளியானது விழுகிறது. உடனே அந்த மலர்கள் அனைத்தும் பச்சை நிறமாக மாறி, துளஸியின் மேன்மையை அடைகின்றன. இதனைக் காணும்போது, அங்கு துளசி அர்ச்சனை போன்றே உள்ளது.

665. ப்ரஸாதயந்தீ மணிபாதுகே த்வம்
விக்ஷேபயோகேந விஹாரவேளாம்
ஹரிந் மநோஜ்ஞா ஹரிகாந்தி ஸிந்தோ:
ஸந்த்ருச்யஸே சைவல மஞ்ஜரீவ

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்கின்ற காலத்தில், அவனது திருவடிகளை உன் மீது வைக்கும் போது, உனது பச்சை நிறக் கற்கள் மூலமாக, அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குபவளாக நீ உள்ளாய். அவன் அழகின் ஸமுத்திரமாகவே உள்ளான். அந்த ஸமுத்திரத்தில் காணப்படும் பாசிக்கொத்து போன்று நீ உள்ளாய்.

666. பத்நாஸி ரங்கேச்வர பாதரக்ஷே
ஹரிந் மணீநாம் ப்ரபயா ஸ்புரந்த்யா
சூடாபதேஷு ச்ருதி ஸுந்தரீணாம்
மாங்கள்ய தூர்வாங்குர மால்ய பங்க்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! வேதங்களாகிய பெண்கள், ஸ்ரீரங்கநாதன் முன்பே விண்ணப்பம் செய்தபடி நிற்கின்றனர். உன்னுடைய மரதகக்கற்களின் ஒளி மூலமாக, மங்களகரமான இளம் அருகம்புல் கொண்டு தொடுக்கப்பட்டது போன்ற தோற்றம் அளிக்கும் ஒளி மாலையை, அந்தப் பெண்களின் தலையில் நீ சூட்டுகிறாய்.

667. அச்சேத்ய ரச்மி நியதை: கடிதா ஹரித்பி:
ஸத்வர்த்மநா கதிமதீ மணிபாதரக்ஷே
ஸந்த்ருச்யஸே ஸவித்ரு மண்டல மத்ய பாஜ:
ரங்கேச்வரஸ்ய ரத ஸம்பதிவ அபரா த்வம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உனது பச்சைக்கற்களானவை குதிரைகள் போன்றும், அவற்றின் ஒளியானது எப்போதும் அறுந்து போகாத கடிவாளக் கயிறுகள் போன்றும் உள்ளன. இப்படியாக, நல்ல வழியாகச் ஸஞ்சாரம் செய்கின்ற நீ, சூர்ய மண்டலத்தின் நடுவில் காணப்படும் ஸ்ரீரங்கநாதனுக்கு, அங்குள்ள சூரியனின் தேரைக் காட்டிலும் உயர்ந்த தேர்ச் செல்வமாக உள்ளாய்.

668. ச்யாமாயமாந நிகமாந்த வந உபகண்ட்டா:
ஸ்தாநே பதாவநி ஹரிந் மணய: த்வதீயா:
பர்யந்த சாத்வலவதீம் ப்ரதயந்தி நித்யம்
நாராயணஸ்ய ருசிராம் நக ரச்மி கங்காம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உபநிஷத்துக்கள் என்னும் சோலைகள் கறுத்து நின்று ஸ்ரீரங்கநாதனைச் சூழ்ந்தபடி உள்ளன. அவற்றை, உனது பச்சைக்கற்கள் மேலும் பச்சையாக மாற்றுகின்றன. ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்களைக் காணும்போது, அவற்றின் வெண்மையான ஒளியானது கங்கை போன்று உள்ளன. உனது மரதகக் கற்களின் ஒளி மூலம், அந்தக் கங்கையின் ஓரங்களில் பச்சைப்புல் தரை உள்ளது போன்று நீ அமைக்கிறாய்.

669. உத்திச்ய காமபி கதிம் மணிபாதரக்ஷே
ரங்கேச்வரஸ்ய சரணே விநிவேசிதாத்மா
பாயோ ஹரிந் மணிருசா த்ருடபக்தி பந்தா
ப்ராதுஷ்கரோதி பவதீ துளஸீ வநாநி

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னை ஸ்ரீரங்கநாதன் சாற்றிக் கொண்டு ஸஞ்சாரம் செய்கின்ற இடம் எங்கும் பச்சையாகத் தோற்றம் அளிக்கிறது. இதனைக் காணும்போது எப்படி உள்ளது என்றால் – மிகவும் உயர்ந்த கதியான மோக்ஷத்தை எண்ணி ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் ஒரு ஜீவன் சரணாகதி செய்கிறான்; அதன் பின்னர் அவன் கைங்கர்யமாகத் துளஸித் தோட்டங்களை அமைக்கிறான். இதனைப் போன்ற துளசித் தோட்டங்களை நீ அமைப்பது போன்று உள்ளது.

670. ஸேவார்த்தம் ஆகததவதாம் த்ரிதசேச்வராணாம்
சூடாமணி ப்ரகரசாலிஷு மௌளிஷு த்வம்
ஸம்வர்த்தயஸி அசுரமர்த்தந பாதரக்ஷே
ஸ்வேந ஆச்ம கர்ப்ப மஹாஸா சுக பங்க்தி சோபாம்

**பொருள்** - அசுரர்களை அழிக்கும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனை வணங்குவதற்காகத் தேவர்கள் பலரும் நிற்கின்றனர். அவர்களின் தலைகளில் உள்ள கிரீடங்களில், சிவந்த இரத்தினக்கற்கள் பல உள்ளன. உனது பச்சைக்கற்களின் ஒளியானது, அவர்களின் தலைகள் என்னும் நிலங்களில் உள்ள சிவந்த நெல் மணிகளைக் கொத்தித் தின்ன வந்த கிளிகளின் கூட்டம் போன்று அழகாக உள்ளது.

671. தரபரிணத தூர்வா வல்லரீ நிர்விசேஷை:
மரதக சகலாநாம் மாம்ஸளை: அம்சுஜாலை:
பசுபதி வித்ருதா த்வம் தஸ்ய பாணௌ நிஷண்ணம்
மதுரிபு பதரக்ஷே வஞ்சயஸி ஏண சாபம்

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை சிவன் தனது தலையில் தரித்துக் கொள்கிறான். அப்போது உனது மரதகக் கற்களின் ஒளியானது சற்றே தடித்தும், முதிர்ந்தும் உள்ள அருகம்புல் கொடி போன்று தோன்றுகின்றன. அந்த ஒளியின் மூலமாக நீ, சிவனின் கையில் உள்ள மான் குட்டியை ஏமாற்றுகிறாயோ?

672. ஹரி சரண ஸரோஜ ந்யாஸ யோக்யம் பவத்யா:
ப்ரகுணம் அபிலஷந்த்யோ வர்ண லாபம் துளஸ்ய:
ப்ரதி திநம் உபஹாரை: பாதுகே தாவகாநாம்
மரதக சகலாநாம் ஆச்ரயந்தே மயூகாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் வைக்கத் தகுந்ததாக உள்ள, உயர்ந்த உன்னுடைய பச்சை நிறத்தை அடைவதற்குத் துளசி மிகவும் ஆசைப்பட்டவளாக உள்ளாள். இதனால், தனது தளங்கள் பலவற்றையும் உனக்கு அன்றாடம் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறாள். இதன் மூலம், உனது மரதகக் கற்களின் பச்சை ஒளியைத் தனது தலையில் அடைந்து, என்றும் பசுமையாக நிற்கிறாள்.

673. ஹரிதமணி மயூகை: அஞ்சித அத்யாத்ம கந்தை:
திசஸி சரணரக்ஷே ஜாத கௌதூஹலா த்வம்
தநுஜமதந லீலா தாரிகாணாம் உதாராம்
தமநகதல பங்க்திம் தேவி மௌளௌ ச்ருதீநாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தொடர்பு உள்ளதால் எப்போதும் மகிழ்வாக உள்ள உனது மரதகக்கற்களின் ஒளியானது, உபநிஷத்துக்களின் நறுமணத்தை எப்போதும் தங்களிடம் கொண்டுள்ளன. ஸ்ரீரங்நாதனுக்கு விளையாட்டுப் பாவைகள் போன்றுள்ள வேதங்களின் தலையில், அந்த மரதகக் கற்களின் ஒளி மூலமாக, மருக்கொழுந்து மாலையைச் சூட்டி, உபநிஷத்துக்களின் வாசனை எங்கும் வீசும்படிச் செய்கிறாய்.

674. அதிகத பஹுசாகை: அச்மகர்ப்ப ப்ரஸூதை:
மதுரிபு பதரக்ஷே மேசகை: அம்சுஜாலை:
அநிதர சரணாநாம் நூநம் ஆரண்யகாநாம்
கிமபி ஜநயஸி த்வம் கீசகாரண்ய துர்க்கம்

**பொருள்** - மது என்ற அசுரனின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! பல கிளைகளை கொண்டவையாகவும், பச்சை நிறம் கொண்டவையாகவும் உனது மரதகக்கற்களில் இருந்து வெளிவரும் ஒளியானது உள்ளது. இந்த ஒளி மூலமாக, வேறு கதியில்லாமல் நிற்கும் உபநிஷத்துக்கள் என்னும் வனவாசிகள் வசிப்பதற்கு ஏற்ற பாதுகாப்பான மூங்கில் காடு ஒன்றை நீ அமைக்கிறாய் போலும்.

675. ப்ரசுர நிகமசாகாம் பாதுகே ரங்கிண: த்வாம்
சரணநக மயூகை: சாரு புஷ்ப அநுபந்தாம்
மரதக தள ரம்யாம் மந்மஹே ஸஞ்சரந்தீம்
கநகஸரித அநூபே காஞ்சித் உத்யாநலக்ஷ்மீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீ பல வேதங்களையும் கிளைகளாகக் கொண்டுள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்கள் என்னும் ஒளியால் அந்தக் கிளைகளில் மலர்கள் குவிந்துள்ளன (அதாவது, திருவடி நகங்களின் ஒளியானது மலர்கள் போன்று உள்ளன என்று கருத்து). உனது மரதகக் கற்களின் ஒளியானது, அந்தக் கிளைகளில் உள்ள இலைகள் போன்று உள்ளன. இப்படியாகக் காவேரியினுடைய கரையின் அருகில் ஸஞ்சாரம் செய்யும் நீ, உத்யான லக்ஷ்மி போன்று உள்ளாய் என்றே எண்ணுகிறோம்.

676. நக கிரண நிகாயை: நித்யம் ஆவி: ம்ருணாளே
மஹித ரஸவிசேஷே மேசகை: அம்சுபி: தே
பரிகலயஸி ரம்யாம் பாதுகே ரங்கபர்த்து:
பதகமல லமீபே பத்மநீ பத்ர பங்க்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளின் நகங்கள் தாமரைத் தண்டு போன்று உள்ளன. ஸ்ரீரங்கநாதனை அனுபவிப்பவர்கள், அந்தத் தண்டுகள் உள்ள நீர் போன்று உள்ளனர். ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள், தாமரை மலர்கள் போன்று உள்ளன. அந்தத் தாமரைக் கொடிகளின் இலைகளாக உனது மரதகக் கற்களின் ஒளியானது உள்ளது.

677. அநிமிஷ யுவதீநாம் ஆர்த்த நாதோபசாந்த்யை:
த்வயி விநிஹித பாதே லீலயா ரங்கநாதே
தததி சரண ரக்ஷே தைத்ய ஸௌதாநி நூநம்
மரதக ருசிபி: தே மங்க்ஷு தூர்வாங்குராணி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! தேவலோகப் பெண்களுடைய அழுகைக் குரலைக் கேட்ட ஸ்ரீரங்கநாதன் அவற்றை நீக்க எண்ணி, உல்லாஸமாக உன் மீது தனது திருவடிகளை வைக்கிறான். உடனேயே அசுரர்களின் மாட மாளிகைகளில் உனது மரதகக்கற்களின் ஒளியானது பரவி, எங்கும் புல் முளைத்த நிலை உண்டாவது நிச்சயம் என்று உணர்த்துகிறது.

678. விபுல தம மஹோபி: வீத தோஷ அநுஷங்கம்
விலஸத் உபரி நைல்யம் தேவி விஷ்ணோ: பதம் தத்
ப்ருது மரதக த்ருச்யாம் ப்ராப்ய பாதாவநி த்வாம்
ப்ரகடயதி ஸமந்தாத் ஸம்ப்ரயோகம் ஹரித்பி:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகா தேவியே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் அவனை அடைந்தவர்களுடைய பாவங்கள் அனைத்தையும் நீக்கியபடி உள்ளன. இவை இரவு நேர ஆகாயம் போன்று கறுத்த நிறம் (கருநீலம்) கொண்டதாக உள்ளன. அந்தத் திருவடிகள் உன்னை அடைந்த காரணத்தால், உனது அழகான பெரிய மரகதக்கற்களின் ஒளியை அனைத்துப் பக்கங்களிலும் பெறுகின்றன. இதனால் தங்கள் கறுமை நீங்கப்பெற்று, பகல் பொழுதின் ஆகாயம் போன்று எங்கும் ப்ரகாசித்தபடி உள்ளன.


**Email:**sridharan_book3yahoo.co.in

679. பத்மாபூம்யோ: ப்ரணய ஸரணி: யத்ர பர்யாய ஹீநா
யத் ஸம்ஸர்காத் அநக சரிதா: பாதுகே காமசாரா:
தார ஸக்தம் தமிஹ தருணம் ப்ரீணயந்தே ஜரத்ய:
நித்ய ச்யாமா: தவ மரதகை: நூநம் ஆம்நாய வாச:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரும், பூமிப்பிராட்டியும் ஸ்ரீரங்கநாதனிடம் எல்லை கடந்த ப்ரீதியுடன் எப்போதும் உள்ளனர். இவர்கள் போன்று இல்லாமல், தங்கள் விருப்பப்படி போபிகைகள் இவனுடன் இருந்தால் கூட, சிறிதும் தோஷம் அற்றவர்களாக இருந்தனர். ப்ரணவத்தில் எப்போதும் நிலைக்கின்ற இளமையான ஸ்ரீரங்கநாதனை, நீண்ட காலமாக வேதங்கள் என்னும் கிழவிகள் போற்றியபடி உள்ளனர். அவர்கள் மீது உனது மரகதக்கற்களின் ஒளியானது வீசியபடி நின்று, அவர்களைச் சிறுபெண்களாக மாற்றி, சந்தோஷம் அடையச் செய்கின்றன என்பது உறுதி.

680. ஸ்தல கமலநீவ காசித்
சரணாவநி பாஸி கமல வாஸிந்யா:
யத் மரதக தள மந்யே
ய: கச்சிதஸௌ ஸமீக்ஷ்யதே சௌரி:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாமரையில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாச்சியாருக்கு ஏற்ற ஒரு நிலத் தாமரை வனமாக நீ உள்ளாய். அந்தத் தாமரை வனத்தின் இலைகளாக உனது மரதகக் கற்களின் பச்சை ஒளி உள்ளது. அந்த இலைகளின் நடுவே ஸ்ரீரங்கநாதன் ஒரு இலை போன்று காணப்படுகிறான்.

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## மரதக பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (20. இந்த்ரநீல பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு -** இங்கு நீலக்கற்களைப் பற்றி மட்டுமே கூறுகிறார்.

681. ஹரிணா ஹரி நீலைச்ச ப்ரதியத்நவதீம் ஸதா
அயத்நலப்ய நிர்வாணாம் ஆச்ரயே மணிபாதுகாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனாலும், இந்த்ரநீலக்கற்களாலும் அலங்கரிக்கப்பட்டபடி பாதுகைகள் உள்ளன. அந்தப் பாதுகைகளை அண்டினால் எந்தவிதமான சிரமமும் இன்றி மோக்ஷம் கிட்டுகிறது. இப்படிப்பட்ட ரத்னமயமான பாதுகையை நான் அடைகிறேன்.

682. ஹரிரத்ந மரீசய: தவ ஏதே
நவ நீலீரஸ நிர்விசேஷ வர்ணா
ச்ருதி மூர்த்தநி சௌரி பாதரக்ஷே
பலித அநுத்பவ பேஷஜம் பவந்தி

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உனது இந்திர நீலக்கற்களின் ஒளியானது, அவிரிச்சாயம் போன்று, அந்தச் சாயத்திற்கும் ஒளிக்கும் வேறுபாடு இல்லாமல் உள்ளது. இந்த ஒளி என்னும் சாயம் மூலமாக, ச்ருதிகளின் தலைகள் நரைத்துப் போகாமல், மருந்து பூசப்பெற்றதாக ஆகின்றன.

683. அளகைரிவ பிம்பிதை: ச்ருதீநாம்
ஹரிநீலை: ஸ்ருஜஸி த்வம் உந்மயூகை:
கமலாதயிதஸ்ய பாதரக்ஷே
கருணா உதந்வதி சைவல ப்ரரோஹாந்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியைக் காணும்போது, வேதப் பெண்களின் அழகான தலைமுடிகள் உன் மீது படர்ந்துள்ளது போன்று தோற்றம் அளிக்கிறது. இவை மூலம், ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனின் கருணை என்னும் ஸமுத்திரத்தில் உள்ள பாசிமுளைகளை நீ உண்டாக்குகிறாய் போலும்.

684. அநகை: ஹரிநீல பத்த்தீநாம்
ப்ரதமாநை: மணிபாதுகே மயூகை:
அதரீகுருக்ஷே ரதாங்கபாணே:
அமிதாம் ஊர்த்த்வம் அவஸ்திதஸ்ய காந்திம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது அழகாக எங்கும் பரவியபடி உள்ளது. இந்த ஒளி மூலம் உன் மீது எழுந்தருளியுள்ள, சக்கரம் ஏந்திய ஸ்ரீரங்கநாதனின் அளவற்ற ஒளியை, சற்றே தாழ்ந்து காணும்படிச் செய்கிறாய்.

685. சரணாவநி பாதி ஸஹ்யகந்யா
ஹரிநீல த்யுதிபி: தவ அநுவித்தா
வஸுதேவ ஸுதஸ்ய ரங்கவ்ருத்தே:
யமுநேவ ஸ்வயம் ஆகதா ஸமீபம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்கள் ஒளியுடன் தொடர்பு கொண்ட காவேரி நதியானது, வஸுதேவரின் பிள்ளையான கண்ணனின் அருகாமையைத் தேடி வந்த யமுனை போன்று, கறுத்து காணப்படுகிறது.

686. அவதீரித தேவதாந்தராணாம்
அநகை: த்வம் மணிபாதுகே மயூகை:
ஹரிநீல ஸமுத்பவை: விதத்ஸே
ஹரிஸாரூப்யம் அயத்நத: ஜநாநாம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனைத் தவிர மற்ற தேவதைகளை அண்டாமல் உள்ள மக்களுக்கு, உனது இந்த்ரநீலக் கற்கள் செய்வது என்ன வென்றால் - ஸ்ரீரங்கநாதனின் கறுத்த நிறத்தை ஒத்த நிறமாக அவர்களை உனது இந்த்ரநீலக் கற்களின் ஒளி மாற்றுகிறது.

687. நேத்ரேஷு பும்ஸாம் தவ பாதரக்ஷே
நீலாச்ம பாஸா நிஹித அஞ்ஜநேஷு
ச்ரியா ஸமம் ஸம்ச்ரித ரங்ககோச:
நிதி: ஸ்வயம் வ்யக்திம் உபைதி நித்யம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது புதையலைக் காண உதவும் மை போன்று உள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த மை தடவப்பட்ட கண்களைக் கொண்ட மனிதர்களுக்கு, ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்ந்துள்ள ஸ்ரீரங்கவிமானம் என்னும் பெட்டியில் காணப்படும் ஸ்ரீரங்கநாதன் என்னும் புதையல், தானாகவே எப்போதும் புலப்பட்டபடி உள்ளது.

688. அபங்குராம் அச்யுத பாதரக்ஷே
மாந்யாம் மஹாநீல ருசிம் த்வதீயாம்
நி:ச்ரேய ஸத்வார கவாடிகாயா:
சங்கே ஸமுத்பாடந குஞ்சிகாம் ந:

**பொருள்** – அடியார்களை நழுவவிடாத ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது அழியாமல், ஒடியாமல், போற்றத்தக்கதாக உள்ளது. இந்த ஒளியானது தலையில் விழும்போது, அங்குள்ள ப்ரஹ்மதந்த்ரம் என்னும் த்வாரம் வழியாக மேல்நோக்கிக் கிளம்பும் ஆத்மாவானது மோக்ஷத்தை அடையும்போது, அந்த பரமபதத்தின் கோட்டை வாசல் கதவைத் திறக்கும் சாவி போன்று உள்ளது.

689. ஜீவயதி அம்ருத வர்ஷிணீ ப்ரஜா:
தாவகீ தநுஜவைரி பாதுகே
கோர ஸம்ஸரண கர்மநாசிநீ
காளிகேவ ஹரி நீல பத்ததி

**பொருள்** - அசுரர்களின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் வரிசையானது, மேகங்களின் வரிசை போன்று உள்ளது. இது மோக்ஷம் என்னும் அமிர்த மழையைப் பொழிவதாகவும், கடுமையான ஸம்ஸாரம் என்னும் கோடை காலத்தைப் போக்கச் செய்வதாகவும் உள்ளது. இப்படியாக இந்தக் கற்கள் மக்களைப் பிழைக்க வைக்கிறது.

690. சதம கோபல பங்க மநோஹரா
விஹரஸே முரமர்த்தந பாதுகே
மணிகிரீட கணேஷு திவௌகஸாம்
மதுகரீவ மநோரம பங்க்திஷு

**பொருள்** - முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் முன்பாக தேவர்களின் க்ரீடங்கள் அழகாக, வரிசையாகக் காணப்படுகின்றன. அந்தக் க்ரீடங்களில் உள்ள இரத்தினக்கற்களை மலர்கள் என்று எண்ணி மொய்க்கும் வண்டுகளாக, உனது இந்த்ரநீலக் கற்களின் வரிசைகள் உள்ளன. இப்படியாக பெண் வண்டு போன்று நீ விளையாடுகிறாய் போலும்.

691. அந்விச்சதாம் கிமபி தத்வம் அநந்ய த்ருச்யம்
ஸம்யக் ப்ரகாச ஜநநீ த்ருத க்ருஷ்ண ரூபா
பாதாவநி ஸ்புரஸி வாஸவ ரத்ந ரம்யா
மத்யே ஸமாதி நயநஸ்ய கநீநிகேவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இந்திரநீலக் கற்கள் மூலம் நீ இன்பமாகவும், மற்றவர்களுக்கு நல்ல அறிவை அளிப்பவளாகவும், ஸ்ரீரங்கநாதனின் திருமேனி நிறத்தை அடைந்தவளாகவும் உள்ளாய். ஸ்ரீரங்கநாதனைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும், மற்ற பலன்களையும் எண்ணிப் பார்க்காதவர்களால் காணக் கூடியவனாக உள்ள உயர்ந்தவனான ஸ்ரீரங்கநாதனை – த்யானம் செய்பவர்களின் த்யானம் என்ற கண்ணின் நடுவில் உள்ள கருப்பு விழி போல் நீ நின்று, காண்பிக்கிறாய்.

692. மாத: ஸலீலம் அதிகம்ய விஹாரவேலாம்
காந்திம் ஸமுத்வஹஸி காஞ்சந பாதுகே த்வம்
லக்ஷ்மீ கடாக்ஷ ருசிரை: ஹரி நீல ரத்நை:
லாவண்ய ஸிந்து ப்ருஷதைரிவ ரங்கதாம்ந:

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! தாயே! நீ உல்லாஸமாக ஸ்ரீரங்கநாதனுடன் ஸஞ்சாரம் செய்கின்ற காலத்தைப் பார்த்தால், ஸமுத்திரத்தின் கரையை அடைந்தது போன்று உள்ளது. உன்னுடன் இருக்கின்ற ஸ்ரீரங்கநாதனின் அழகு என்பதாகவே அந்த ஸமுத்திரம் உள்ளது. அங்கு வீசி எறிகின்ற அலைகள் போன்று ஸ்ரீரங்கநாச்சியாரின் கடாக்ஷம் உள்ளது. உன்னுடைய இந்த்ரநீலக் கற்கள், அந்த ஸமுத்திரத்தின் அலைகள் போன்று உள்ளன. இப்படியாக நீ ஓர் ஒப்பற்ற அழகைப் பெறுகிறாய்.

693. க்லுப்த அவகுண்டந விதி: மணிபாதரக்ஷே
நீலாம்சுகை: வலபிதச்ம ஸமுத்பவை: தே
ஸங்கச்சதே முநி ஜநஸ்ய மதி: ஸமாதௌ
ராத்ரௌ ஸமஸ்த ஜகதாம் ரமணேந லக்ஷ்ம்யா:

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனைத் த்யானித்தபடி உள்ள முனிவர்களின் புத்தியானது ஒரு பெண் போன்று உள்ளதாக வைப்போம். அவர்கள் த்யானிக்கும் நேரம் என்பது இரவு நேரம் போன்று உள்ளது. அந்த நேரத்தில், அந்தப் பெண், உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளி என்னும் கருப்புத் துணியால் தன்னை மூடிக்கொண்டு, ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனை அடைகிறாள்.

694. த்ரஷ்டும் கதாசந பதாவநி நைவ ஜந்து:
சக்நோதி சாச்வத நிதிம் நிஹிதம் குஹாயாம்
க்ருஷ்ண அநுரூப ஹரிநீல விசேஷ த்ருச்யா
ஸித்தாஞ்ஜநம் த்வம் அஸி யஸ்ய ந தேவி த்ருஷ்டே:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகை தேவியே! ஸ்ரீரங்கநாதனுடன் இருப்பதற்குத் தகுதி கொண்டதான இந்த்ரநீலக் கற்களுடன் கூடியவளாக நீ மிகவும் அழகாகக் காணப்படுகிறாய். மறைந்துள்ள புதையல்களைப் பார்ப்பதற்குக் கண்களில் தடவிக் கொள்ளும் மை போன்ற நீ, யார் ஒருவனுடைய கண்களில் பூசப்படாமல் உள்ளாயோ - அப்படிப்பட்ட மனிதர்களால், தங்கள் இதயம் என்ற குகைக்குள் அந்தர்யாமியாகப் புதையல் போன்றுள்ள ஸ்ரீரங்கநாதனை எப்போதும் காண இயலாது என்பது நிச்சயம்; அந்த நிதியைக் காண்பதற்கான சக்தி உள்ளவனாக அவன் ஆகவே மாட்டான்.

695. ப்ரத்யேமி ரங்கந்ருபதே: மணிபாதுகே த்வாம்
க்ருஷ்ண அந்தரங்க ருசிபி: ஹரி நீல ரத்நை:
விச்வ அபராத ஸஹநாய பதம் ததீயம்
விச்வ அம்பராம் பகவதீம் ஸமயே பஜந்தீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருமேனி நிறத்திற்கு ஒத்தபடியான இந்த்ரநீலக் கற்கள் கொண்டு நீ காணப்படுகிறாய். ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைந்தவர்கள் செய்த குற்றங்கள் அனைத்தையும் நீ பொறுத்துக் கொள்கிறாய். இப்படியாக நீ நிறத்தில் மட்டுமே அல்லாமல், குணத்திலும் ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளை அடைத்து நிற்கின்ற பூமிப்பிராட்டியே என்று நான் எண்ணுகிறேன்.

696. மத்வா மஷீம் பரிமிதாம் பவதீ ததந்யாம்
வைகுண்ட பாதரஸிகே மணிபாதுகே ஸ்வாந்
அங்க்தே ஸ்வயம் கிரண லேபிபி: இந்த்ரநீலை:
ஆசாதடேஷு லளிதாந் அபதாநவர்ணாந்

**பொருள்** - ஸ்ரீவைகுண்டநாதனான பெரியபெருமாளின் திருவடிகளுடைய சுவையை அறிந்த பாதுகையே! இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டவளே! உன்னுடைய மேன்மைகளை எழுதுவதற்கு இந்த்ரநீலக் கற்களின் ஒளி தவிர, மற்ற ஒளிகளாக உள்ள மை போதாது என்று எண்ணினாய் போலும். அதனால்தான் அனைத்துத் திசைகள் என்னும்

காகிதங்களில், இன்பமாக உள்ள உன் சரிதங்களை, உன்னில் பதிக்கப்பட்ட இந்த்ரநீலக் கற்களின் ஒளி என்னும் மை கொண்டு, நீயாகவே எழுதுகிறாய் போலும்.

697. வலமதந மணீநாம் தாமபி: தாவகாநாம்
மதுரிபு பதரக்ஷே வாஸரை: அவ்யபேதா
அபிஸரணபராணாம் வல்லவீநாம் ததாஸீத்
சமித குரு பயார்த்தி: சர்வரீ காசித் அந்யா

**பொருள்** - மது என்னும் அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! க்ருஷ்ணனாகிய ஸ்ரீரங்கநாதனிடம் போகத் துடித்த கோபிகைகள், அச்சப்பட்டு, மிகுந்த சிரமத்துடன் வீட்டிலேயே சிலர் அடங்கினர். அப்படிப்பட்ட அச்சத்தை நீங்குவதற்காக, பகலிலேயே உண்டான இரவுப் பொழுதை உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது உண்டாக்கியது (கண்ணனுடன் இருந்த அந்த இரவு கூட முடிந்து விடும், ஆனால் ஸ்ரீரங்கநாதனின் பாதுகை உண்டாக்கிய இந்த இரவு முடியாது, ஆகவே எப்போதும் ஸ்ரீரங்கநாதனுடன் இருக்கலாம் என்று கருத்து).

698. சதமகமணி பங்கை: உந்மயூகை: திசந்தீ
சரணம் உபகதாநாம் ரங்கநாதேந ஸாம்யம்
ப்ரதயஸி ஜகதி த்வம் பாதுகே ஹைதுகாநாம்
உபநிஷத் உபகீதாம் தத்க்ரது ந்யாய வார்த்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பெரியகோயிலுக்கு வந்து உன்னிடமும் ஸ்ரீரங்கநாதனிடமும் சரணாகதி செய்தவர்கள், உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளி காரணமாக, ஸ்ரீரங்கநாதனின் திருமேனியை ஒத்த நிறத்தை அடையும்படி நீ செய்கிறாய். இப்படியாக ஹேதுவாதம் செய்பவர்களுக்கு, உபநிஷத் கூறும் தத்க்ரது ந்யாயத்தை நீ உணர்த்தியபடி உள்ளாய்.

**விளக்கம்** - எம்பெருமானை நாம் எவ்விதம் உபாஸனை செய்கிறோமோ, அவ்விதமாகவே நாம் அடைவோம் என்பது உபநிஷத் கருத்து. இதற்கு தத்க்ரது ந்யாயம் என்று பெயர். இதனை ஒப்புக் கொள்ளாதவர்கள் ஹேதுவாதிகள் ஆவர்.

699. பரிசரதி விதௌ த்வாம் பாதுகே ரங்கபர்த்து:
பதஸரஸிஜ ப்ருங்கை: பாஸுரை: இந்த்ரநீலை:
ப்ரகடித யமுநா ஒளகா பக்தி நம்ரஸ்ய சம்போ:
பரிணமயஸி சூடாவிஷ்ணுபத்யா: ப்ரயாகம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை நான்முகன் வந்து வணங்கி நிற்கும்போது சிவனும் அப்படியே செய்கிறார். ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் மொய்க்கின்ற வண்டுகள் போன்று உன்னுடைய இந்த்ரநீலக் கற்கள் உள்ளன. இவை யமுனையின் ப்ரவாஹம் போன்று கறுத்து காணப்படுகின்றன. உன்னை வணங்கும் சிவனின் தலையில் இந்த யமுனை நதியும் பாய்ந்து, அங்குள்ள கங்கைக்கு யமுனையின் சேர்க்கையை நீ உண்டாக்குகிறாய் போலும்.

700. பதகிஸலய ஸங்காத் பாதுகே பத்ரளச்ரீ:
நகமணிபி: உதாரை நித்ய நிஷ்பந்ந புஷ்பா
சதமக மணி நீலா சௌரி லாவண்ய ஸிந்தோ:
நிபிடதம தமாலா காபி வேலாவநீ த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் சிறிய திருவடிகள் சிவந்த துளிர்கள் போன்று, இலைகள் நிரம்பியதாகத் தோன்றுகிறது; பெருமை மிகுந்த வைரங்கள் போன்று காணப்படும் அவன் திருவடி நகங்கள் – மலர்கள் எப்போதும் உள்ளதாகத் தோன்றுகிறது; உன்னுடைய இந்த்ரநீலக் கற்கள் கருமையாக உள்ளன. இப்படியாக ஸ்ரீரங்கநாதனின் அழகு என்ற ஸமுத்திரத்தின் கரையில் காணப்படும் காடு போன்று நீ உள்ளாய்.

701. த்வயி விநிஹிதம் ஏதத் கேபி பச்யந்தி மந்தா:
சதமகமணி ஜாலம் சார்ங்கிண: பாதரக்ஷே
வயம் இதம் இஹ வித்ம: ப்ராணிநாம் பாவுகாநாம்
ஹ்ருதய க்ருஹ குஹாப்ய: பீதம் அந்தம் தமிஸ்ரம்

**பொருள்** - சார்ங்கம் என்னும் வில் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை நன்றாக உணராதவர்கள், உன்னிடம் காணப்படும் கற்களை வெறும் இந்த்ரநீலக் கற்கள் என்றே காண்கின்றனர். ஆனால் நாங்கள் இவற்றை எப்படிப் பார்க்கிறோம் என்றால் – உன்னை உபாஸிப்பவர்களின் மனம் என்னும் குகையில் காணப்படும் அறியாமை

என்னும் இருளை நீ குடித்த காரணத்தால் உண்டான இருள் (கருமை) என்று எண்ணுகிறோம்.

702. க்லுப்த ச்யாமா மணிபி: அஸிதை: க்ருஷ்ணபக்ஷேண ஜுஷ்டா
ச்ரேய: பும்ஸாம் ஜநயஸி கதிம் தக்ஷிணாம் உத்வஹந்தீ
தேந ஆஸ்மாகம் ப்ரதயஸி பரம் பாதுகே தத்வ வித்பி:
மௌளௌ த்ருஷ்டாம் நிகம வசஸாம் முக்தி கால அவ்யவஸ்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது இந்த்ரநீலக் கற்களால் நீ கருத்த நிறம் கொண்டு, இரவுப்பொழுது போன்று உள்ளாய். க்ருஷ்ணனுக்கு வேண்டியவர்களால் வணங்கப்படுகிறாய் (க்ருஷ்ணபக்ஷத்தால் அடையப் பெற்றாய்). சிறந்த நடையைக் கொண்டுள்ளாய் (தக்ஷிணாயனம்). இப்படியாக உன்னைப் பற்றிய உண்மை அறிந்த அனைவருக்கும் மோக்ஷம் உண்டாக்குகிறாய். இதனால் உபநிஷத் கூறுவது போன்று முக்தி அடைவதற்கு பகல் நேரம், சுக்லபக்ஷம், உத்தராயணம் என்பது அவசியம் என்னும் விதிமுறைகள், உன்னை அடைந்தவர்களுக்கு இல்லை என்று எங்களுக்கு உணர்த்துகிறாய்.

703. ஸத்பி: ஜுஷ்டா ஸமுதித விது: ஜைத்ர யாத்ரா விநாதேஷு
ஆதந்வாநா ரஜநிம் அநகாம் இந்த்ரநீல அம்சுஜாலை:
சித்ரம் க்யாதா குமுதவநத: பாதுகே புஷ்யஸி த்வம்
வ்யாகோசத்வம் விபுதவநிதா வக்த்ர பங்கேருஹாணாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸாதுக்கள் என்னும் நக்ஷத்திரங்களால் அடையப்படுகிறாய்; வெற்றியை மட்டும் உண்டாக்கவல்ல உல்லாஸ ஸஞ்சாரம் செய்கின்ற ஸ்ரீரங்கநாதன் என்ற சந்த்ரனைக் கொண்டுள்ளாய்; இந்த்ரநீலக் கற்களின் குவியல் மூலமாக தோஷம் இல்லாத இரவுப்பொழுதை உண்டாக்குகிறாய்; இரவில் மலர்கின்ற ஆம்பல் மலர்களுக்கு நீ தேவதையாக உள்ளாய். இப்படியாக உள்ள நீ தேவலோகப் பெண்களின் முகங்கள் என்னும் தாமரை மலரையும் மலரச் செய்கிறாய். என்ன வியப்பான செயல் இது?

704. நித்யம் லக்ஷ்மீ நயநருசிரை: சோபிதா சக்ரநீலை:
ஸாளக்ராம க்ஷிதிரவ சுபை: சார்ங்கிண: தர்சயந்தீ
ஸாகேதாதே: ஸமதிககுணாம் ஸம்பதம் தர்சயந்தீ
முக்திக்ஷேத்ரம் முநிபி: அகிலை: கீயஸே பாதுகே த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்கள், ஸ்ரீரங்கநாச்சியாரின் அழகான திருக்கண்கள் போன்று காணப்படுகின்றன. அவை மூலம் நீ, ஸ்ரீரங்கநாதனின் ஒரு வித மூர்த்தியான ஸாளக்ராம உருவங்களைக் காண்பிக்கிறாய் (இந்த்ரநீலக் கற்கள் ஸாளக்ராமங்களைப் போன்று உள்ளன என்கிறார்). இதனால் நீ ஸாளக்ராம க்ஷேத்ரம் போன்று விளங்குகிறாய். மோக்ஷம் அளிக்கவல்ல அந்த க்ஷேத்ரத்தைக் காட்டிலும் நீ அதிகமான சிறப்புடையவளாக உள்ளாய். இதனால் அனைத்து முனிவர்களாலும் முக்திக்ஷேத்ரம் என்றே பாடப்படுகிறாய்.

**விளக்கம்** - நமது இல்லத்தில் பன்னிரண்டு ஸாளக்ராம மூர்த்திகள் இருந்தாலே அது ஸாளக்ராம க்ஷேத்ரம் எனப்படும். ஆனால் பாதுகையில் பல இந்த்ரநீலக் கற்கள் ஸாளக்ராமங்களாகவே உள்ளதால், பாதுகை உள்ள இடம் முக்திக்ஷேத்ரம் என்றே கொண்டாடப்படலாம்.

705. பாத ந்யாஸ ப்ரிய ஸஹசரீம் பாதுகே வாஸகேஹாத்
த்வாம் ஆருஹ்ய த்ரிசதுரபதம் நிர்கதே ரங்கநாதே
அந்த: ஸ்நிக்தை: அஸுர மஹிளாவேணி விக்ஷேப மித்ரை:
ச்யாமச்சாயம் பவதி பவநம் சக்ர நீல அம்சுபி: தே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் தனது திருவடிகளை எடுத்து வைக்கின்ற செயலுக்கு நீ ப்ரியமான தோழியாக உள்ளாய். தனது சயன அறையில் இருந்து எழுகின்ற ஸ்ரீரங்கநாதன், உன் மீது தனது திருவடிகளை வைத்து, மூன்று நான்கு அடிகள் நடக்கிறான். அப்போது, அழகான தேவலோகப் பெண்களின் அவிழ்ந்த, அலை போன்றுள்ள கூந்தல் போன்று காணப்படும் உனது இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது, திருவரங்கம் பெரியகோயில் முழுவதும் பரவி, எங்கும் நீல நிறமான ஒளி உள்ளதாகச் செய்கிறது.

706. யா தே பரிஹ்யாங்கணம் அபியத: பாதுகே ரங்கபர்த்து:
ஸஞ்சாரேஷி ஸ்புரதி விததி: சக்ரநீல ப்ரபாயா:
விஷ்வக்ஸேந ப்ரப்ருதிபி: அஸௌ க்ருஹ்தே வேத்ர ஹஸ்தை:
ப்ரூவிக்ஷேப: தவ திவிஷதாம் நூநம் ஆஹ்வாநஹேது:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சார காலங்களில் உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது எங்கும் பரவி நிற்கிறது. இதனைப் பார்த்தால் எப்படி உள்ளது என்றால் – கையில் பிரம்பு வைத்துக் கொண்டுள்ள

விஷ்வக்ஸேநர் போன்றவர்களால் ஸ்ரீரங்கநாதனை வந்து வணங்கும்படியாக, தேவர்களை அழைப்பதற்குக் காரணமாக உள்ள புருவ அசைவு போன்று உள்ளது.

**விளக்கம்** - இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது பாதுகையின் புருவ நெறிப்பு போன்று உள்ளது. இந்தச் செயல் மூலம் பாதுகை, விஷ்வக்சேநர் போன்றவர்களுக்குக் கட்டளை இடுகிறாள். உடனே விஷ்வக்சேநர் போன்றவர்கள், "நம்பெருமாள் புறப்பாடு ஆகிவிட்டது", என்று அறிந்து, தேவர்களை அழைக்கின்றனர்.

707. அக்ஷ்ணோ: அஞ்ஜநகல்பநா யவநிகா லாஸ்ய ப்ரஸூடே: கதே:
சித் கங்கா யமுநா முகுந்த ஜலதே வேலா தமாலாடவீ
காந்தா குந்தள ஸந்ததி: ச்ருதி வதூ கஸ்தூரி காலங்க்ரியா
நித்யம் ரத்நபாதாவநி ஸ்ப்புரதி தே நீலாமணி ச்ரேணிகா

**பொருள்** - இரத்தினமயமான பாதுகையே! உன்னுடைய இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது ஆறுவிதமான செயல்களைச் செய்கிறது. அவையாவன – ஸ்ரீரங்கநாதனை அண்டி நிற்பவர்களின் கண்களுக்கு மை தடவுகிறது; ஸ்ரீரங்கநாதனின் ஒய்யார நடை என்பதற்கு முன்பாக (புறப்பாட்டுத் திரை) இடப்படும் திரையாக உள்ளது; அறிவு என்ற கங்கைக்கு யமுனை போன்று உள்ளது; ஸ்ரீரங்கநாதனின் அழகு என்ற ஸமுத்திரத்தின் கரையில் உள்ள பாசி போன்று உள்ளது; ஸ்ரீரங்கநாச்சியார் முதலான பிராட்டிகளின் முன்நெற்றி முடி போன்று உள்ளது; ச்ருதிகள் என்னும் பெண்கள் இட்டுக் கொள்ளும் கஸ்தூரி திலகம் போன்று உள்ளது.

708. நிரந்தர புரந்தரோ பலபுவம் த்யுதிம் தாவகீம்
அவைமி மணிபாதுகே ஸரணி ஸங்கிநீம் ரங்கிண:
ததீய நவ யௌவந த்விரதமல்ல கண்டஸ்த்தலீ
களந் மதஜளஞ்ஜளா பஹுூள கஜ்ஜள ச்யாமிகாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மிகவும் நெருக்கமாக பதிக்கப்பட்ட உனது இந்த்ரநீலக் கற்களின் ஒளியானது ஸ்ரீரங்கநாதன் செல்லும் வழி எங்கும் பரவுகிறது. இதனைக் காணும்போது எப்படி உள்ளது என்றால் - ஸ்ரீரங்கநாதனின் இளமை என்னும் பெரியயானையின் கன்னங்களில் பெருகி நிற்கின்ற மதநீரானது, அங்கு உறைந்து கெட்டியாகக் காணப்படும் மை போன்று உள்ளது.

709. ப்ரதீம: த்வாம் பாதாவநி பகவதோ ரங்கவஸதே:
கநீபூதாம் இத்தம் பதகமல மாத்த்வீ பரிணதீம்
ஸ்புரந்த: பர்யந்தே மதகரிம நிஸ்பந்த மதுப
ப்ரஸக்திம் யத்ரைதே விதததி மஹாநீலமணய:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்க விமானத்தில் சயனித்துள்ள ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளில் பெருகும் தேன் கெட்டியாக நிற்பது போன்றே உனது உருவம் உள்ளது என்று எண்ணுகிறோம். இப்படிப்பட்ட உன்னிடம் காணப்படும் பல இந்திரநீலக் கற்கள், இந்தத் தேனின் சுவைக்காக வந்து மொய்த்தபடி, அசையாமல் உள்ள வண்டுகள் போன்றே காணப்படுகின்றன.

710. நமதாம் நிஜ இந்த்ரநீல ப்ரபவேந முகுந்த பாதுகே பவதீ
தமஸா நிரஸ்யதி தம: கண்டகம் இவ கண்ட கேநேவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! முள்ளைக் கொண்டு முள்ளை எடுப்பது போன்று, கருமையாகக் காணப்படும் உனது இந்த்ரநீலக் கற்களின் ஒளி மூலமாகவே நீ உன்னை வணங்குகின்றவர்களின் அறியாமை என்னும் இருளை நீக்குகிறாய்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
இந்த்ரநீல பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (21. பிம்ப ப்ரதிபிம்ப பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - கடந்த ஆறு பத்ததிகளில் பாதுகையில் உள்ள இரத்தினங்களைப் பற்றி விரிவாகக் கூறினார். இனி அந்த இரத்தினக்கற்களில் காணப்படும் பிரதிபிம்பங்கள் (images) பற்றிக் கூற உள்ளார்.

711. சௌரே: சுந்தாந்த நாரீணாம் விஹாரமணி தர்ப்பணம்
ப்ரஸத்தே: இவ ஸம்ஸ்தாநம் பதத்ராணம் உபாஸ்மஹே

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியார் உள்ளிட்ட ஸ்ரீரங்கநாதனின் பிராட்டிகள் விளையாட உதவுகின்ற இரத்தினக் கண்ணாடி போன்றும், தெளிவு என்பதே வடிவம் எடுத்தது போன்றும் உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை நாம் உபாஸிக்கிறோம்.

712. கமலாபதி பாதுகே கதாசித்
விஹகேந்த்ர: த்வயி பிம்பிதோ விபாதி
ஸவிலாஸ கதே அபி ரங்கபர்த்து:
நிஜம் ஆத்மாநம் இவ உபதாது காம:

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஒரு ஸமயம் கருடன் உனது இரத்தினக்கற்களின் முன்பாக நின்று, அதில் பிரதிபிம்பமாகத் தான் தெரிய வேண்டும் என்று எண்ணினான். இதன் காரணம் - ஸ்ரீரங்கநாதனின் ஒய்யார நடையில் கூட தனது சரீரம் அவனுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று எண்ணினான் போலும்.

**விளக்கம்** - தரையில் ஸஞ்சாரம் செய்யும்போது பாதுகைக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது, கருடனுக்குக் கிடையாது. அப்படிப்பட்ட காலங்களில் தானும் பயன்பட வேண்டும் என்ற எண்ணிய கருடன், தனது உருவம் பாதுகையில் உள்ள இரத்தினங்களில் பிரதிபிம்பமாக விழவேண்டும் என்று எண்ணினான்.

713. மணி பங்க்திஷு தே திசாம் அதீசா:
ப்ரதிபிம்பாதி நிஜாநி வீக்ஷமாணா:
அபியந்தி முகுந்த பாதுகே த்வாம்
அதிகாராந்தர ஸ்ருஷ்டி சங்கயேவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இரத்தினக்கற்களில் அஷ்டதிக் பாலகர்கள் தங்கள் பிரதிபிம்பத்தைக் காண்கின்றனர். இதனைக் கண்டவுடன் அவர்கள்

தங்கள் மனதில், ”ஸ்ரீரங்கநாதன் நம்மைப் போன்று மற்றோர் அஷ்டதிக் பாலகர்களைப் படைத்துவிட்டானோ”, என்று சந்தேகம் கொண்டபடி உன்னிடம் வருகின்றனர்.

714. மணி மௌளி சதேந பிம்பதேந
ப்ரணதாநாம் பரித: ஸுர அஸுராணாம்
முரபித் மணிபாதுகே மஹிம்நா
யுகபத் தேஷு ஸமர்ப்பிதேவ பாஸி

**பொருள்** - முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னை வணங்கும் தேவர்கள் நான்கு புறங்களிலும் நின்று, தங்கள் க்ரீடங்களைத் தாழ்த்தி வணங்குகின்றனர். அப்போது அவர்களின் க்ரீடங்கள் உன்னில் உள்ள இரத்தினங்களில் பிரதிபலிக்கின்றன. இதனைக் காணும்போது, உன்னுடைய எல்லையற்ற சக்தி காரணமாக, ஒரே நேரத்தில் அந்த க்ரீடங்கள் அனைத்திலும் வைக்கப்பட்டவள் போன்று விளங்குகிறாய்.

715. உபநீதம் உபாயநம் ஸுரேந்த்ரை:
ப்ரதிபிம்பச்சலத: த்வயி ப்ரவிஷ்டம்
ஸ்வயம் ஏவ கில ப்ரஸாத பூம்நா
ப்ரதி க்ருஹ்ணாஸி முகுந்த பாதுகே த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இந்த்ரன் உள்ளிட்ட தேவர்கள் மூலமாக உனக்குக் கொண்டு வரப்பட்ட உபஹாரங்கள் (பழம் முதலானவை), உன்னுடைய இரத்தினக்கற்களில் பிரதிபலிக்கின்றன. இதனைக் காணும்போது, உன்னுடைய கருணை காரணமாக அவர்களிடமிருந்து அந்தப் பொருள்களை நீ நேரடியாகவே பெற்றுக் கொள்வது போன்று உள்ளது.

716. ரங்கேச்வரஸ்ய நவ பல்லவ லோபநீயௌ
பாதௌ கதம் நு கடிநா ஸ்வயம் உத்வஹேயம்
இதி ஆகலய்ய நியதம் மணிபாதுகே த்வம்
பத்மாஸ்தரம் வஹஸி தத் ப்ரதிபிம்ப லக்ஷாத்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ”புதிய தளிர் போன்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் மென்மையாக உள்ளன. இவற்றை எனது கடினமான பரப்பு மீது (இரத்தினக்கற்கள் உள்ளதால் பாதுகையின் மேல்பரப்பு சற்றே கடினமாக உள்ளது) எப்படி வைத்துக் கொள்வேன்?”, என்று நீ யோசிக்கிறாய். இதனால்தான் அந்தந்த

திருவடிகளின் பிரதிபிம்பம் என்ற தாமரை மலர் போன்றுள்ள விரிப்பை, உன் மீது விரித்துக் கொண்டு , அதன் மீது ஸ்ரீரங்கநாதனை வைத்துக்கொள்கிறாய் போலும்.

717. பாதார்ப்பணத் ப்ரதம: ஹரிதச்ம ரம்யே
மத்யே தவ ப்ரதிபலந் மணிபாதரக்ஷே
மந்யே நிதர்சயதி ரங்கபதி: யுகாந்தே
ந்யக்ரோத பத்ர சயிதம் நிஜமேவ ரூபம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸஞ்சாரம் செய்வதற்காக உன் மீது திருவடியை வைத்து ஸ்ரீரங்கநாதன் எழுவதற்கு முன்பாக, உன்னில் இருக்கும் பச்சை நிற இரத்தினங்களில் பிரதிபலிக்கிறான். இதனைக் காணும்போது, ப்ரளய காலத்தில் ஆலிலை மீது சயனித்துள்ள தனது உருவம் இப்படித்தான் இருக்கும் என்று எங்களுக்கு அவன் காண்பிப்பதாக நான் எண்ணுகிறேன்.

718. யாத்ரா அவஸாநம் அதிகச்சதி ரங்கநாதே
விச்ராணயஸி அநுபதம் மணிபாதுகே த்வம்
ப்ராய: ப்ரயாண ஸமயே ப்ரதிபிம்பிதாநாம்
தீர்த்தாவகாஹம் அபரம் த்ரிதசேச்வராணாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய உத்ஸவங்களின் இறுதி நாளில், தேவர்கள் தங்கள் உலகிற்கு மீண்டும் புறப்படத் தொடங்குகின்றனர். அப்படி அவர்கள் புறப்படும்போது, அவர்களின் பிரதிபிம்பம் உன்னில் தெரிகிறது. இதனைக் காணும்போது, அவர்கள் மற்றோரு முறை நீராடிச் செல்வதை நீ உண்டாக்கிக் கொடுப்பதாகத் தோன்றுகிறது.

719. உச்சாவசேஷு தவ ரத்நகணேஷு மாத:
வேதா: ப்ரயாண ஸமயே ப்ரதிபிம்பித அங்க:
ஆசங்கதே மதுபிதோ மணிபாதுகே த்வாம்
ஆகாமி கல்ப்ப கமலாஸந பங்க்தி கர்ப்பாம்.

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! நான்முகனின் சரீரமானது, அவன் தனது உலகிற்குப் புறப்படும் நேரத்தில், எல்லையற்ற இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட உன்னில், பலவாகப் பிரதிபலிக்கிறது. இதனைக் கண்ட நான்முகன், இனி வரப்போகும் கல்பங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள நான்முகன்களின் வரிசையை நீ உனக்குள்

கொண்டுள்ளாயோ என்று எண்ணுகிறான் (ஒவ்வொரு கல்பத்திலும் ஒரு நான்முகன் ஏற்படுவான்).

720. ஆலோல ரச்மி நியதாம் மணிபாதுகே த்வாம்
ஆருஹ்ய ஸஞ்சரதி ரங்கபதௌ ஸலீலம்
அந்த: புரேஷு யுகபத் ஸுத்ருசோ பஜந்தே
டோளாதிரோஹண ரஸம் த்வயி பிம்பிதாங்க்ய:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இரத்தினக் கற்களின் ஒளி என்னும் கயிறுகளால் கட்டப்பட்ட ஊஞ்சல் போன்ற உன் மீது, ஸ்ரீரங்கநாதன் அந்தப்புரங்களில் ஸஞ்சரிக்கிறான். அப்போது உன்னிடம் பிரதிபலிக்கப்பட்ட பிராட்டிமார்களின் உருவங்களைக் காணும்போது, ஒரே நேரத்தில் அவர்கள் அனைவரும் ஊஞ்சல் ஆடும் இன்பத்தை அடைவதாகத் தோன்றுகிறது.

721. காலேஷு ராகவ பதாவநி பக்திநம்ர:
கார்யாணி தேவி பரத: விநிவேதயம்ஸ்தே
த்வத் ரத்ந பிம்பிததயா அபி முஹு: ஸ்வகீயாம்
ராஜாஸந ஸ்த்திதிம் அவேக்ஷ்ய ப்ருசம் லலஜ்ஜே

**பொருள்** - இராமனின் பாதுகையே! உனக்கு அந்தந்த காலங்களில் பக்தியினால் வணங்கியபடி, செய்ய வேண்டியவற்றைச் செய்தபடி பரதன் உள்ளான். உன்னிடம் அடுத்த வேலை என்ன என்று விண்ணப்பம் செய்வதற்காக உன் முன்பு பரதன் நிற்கும் போது, உனது இரத்தினக்கற்களில் தனது உருவத்தின் பிரதிபலிப்பைக் காண்கிறான். அதில் தான் ஸிம்ஹாஸனத்தில் உள்ளதை பிரதிபிம்பமாகக் காண்கிறான். இதனைக் கண்டு மிகவும் வெட்கம் அடைந்தான்.

722. ப்ரத்யாகதே விஜயிநி ப்ரதமே ரகூணாம்
விந்யஸ்யதி த்வயி பதம் மணிபாதரக்ஷே
ரத்நௌக பிம்பித நிசாசர வாநராம் த்வாம்
பூர்வக்ஷணஸ்த்தம் இவ புஷ்கரம் அந்வபச்யந்

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! அரக்கர்களை வென்று திரும்பிய ரகுகுலத்தின் சிகரமான இராமன், உன் மீது தனது திருவடிகளை மீண்டும் வைத்தான். அப்போது அங்கு சுற்றி நின்ற ராக்ஷஸர்கள், வானரர்கள் என்ற பலரும் உனது இரத்தினக்கற்களில் பிரதிபலித்தனர். இதனைக் காணும்போது, இராமன்

உன்னைச் சாற்றிக் கொள்வதற்கு முன்பு இருந்த புஷ்பக விமானம் போன்று காணப்பட்டாய் (இலங்கையில் இருந்து இராமனுடன் புஷ்பக விமானத்தில் ராக்ஷஸர்கள், வானரர்கள் போன்ற பலரும் வந்தனர். இதனைக் கூறுகிறார்).

723. வையாகுலீம் சமயிதும் ஜகத: வஹந்த்யா
ரக்ஷாதுராம் ரகுதுரந்தர பாதரக்ஷே
ப்ராஜ்யம் யச: ப்ரசுர சாமர பிம்பலக்ஷாத்
ப்ராய: த்வயா கபளிதம் ப்ரதிபூபதீநாம்

**பொருள்** - ரகு குலத்தினரால் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமன் கானகம் சென்று பின்னர் இந்த உலகைக் காப்பாற்றும் திறன் உள்ளவர்கள் இல்லாத காரணத்தினால் பெருங்குழப்பம் உண்டானது. அப்போது உலகைத் தாங்கும் பொறுப்பை நீ ஏற்றாய். அப்போது உன்னில் உள்ள இரத்தினக்கற்களில், உனக்கு வீசப்பட்ட சாமரங்களின் பிரதிபிம்பங்கள், பலவாகக் காட்சி அளித்தன. இதனைக் காணும்போது பல எதிரி அரசர்களின் புகழை நீ விழுங்கியது போன்று இருந்தது.

724. ப்ரதிதிசம் உபயாதே தேவி யாத்ரா உத்ஸவார்த்தம்
த்வயி விஹரணகாலே பிம்பிதே ஜீவலோகே
வஹஸி மணிகணை: த்வம் பாதுகே ரங்கபர்த்து:
கபளித ஸகலார்த்தம் காஞ்சித் அந்யாம் அவஸ்தாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகைதேவியே! ஸ்ரீரங்கநாதன் திருவீதிகளில் ஸஞ்சாரம் செல்வதற்காகப் புறப்பட்டவுடன், அவனை வணங்க அனைத்து திசைகளில் இருந்தும் பல உயிர்களும் வந்து நிற்கின்றன. அவற்றின் உருவங்கள், உன்னில் பதிக்கப்பட்ட இரத்தினக்கற்களில் ப்ரதிபலிக்கின்றன. இதனைக் காணும்போது, ஸ்ரீரங்கநாதன் அனைத்தையும் விழுங்கிய நிலையில் உள்ள தன்மையை நீ காண்பிக்கிறாய் (ப்ரளயகால நிலை) போலும்.

725. பகவதி கருட: தே வாஹநஸ்தா: ஸுரேந்த்ர:
த்வயி விநிஹிதபதே பூமிமேவ ஆச்ரயந்தி
தத் அபி சரணரக்ஷே ரத்நஜாலே த்வதீயே
ப்ரதிபலித நிஜங்கா: துல்ய வாஹா பவந்தி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் கருட வாகனத்தில் வீற்றுள்ளபோது, மற்ற தேவர்கள் தங்கள் தங்கள் வாகனங்களில்

அமர்ந்தபடி உள்ளனர். ஸ்ரீரங்கநாதன் உன் மீது திருவடிகள் வைத்து நின்றவுடன், அவர்கள் பூமியை அடைந்துவிடுகின்றனர் (வாகனங்களில் இருந்து இறங்கி விடுகின்றனர்). ஆனால் உனது இரத்தினக்கற்களில் அவர்களின் ப்ரதிபிம்பம் காணப்படுவதால், ஒரே போன்று வாகனம் உள்ளதாகத் தோன்றுகிறது.

726. ஸ்வச்ச ஆகாரம் ஸூரயுவதய: ஸ்வப்ரதிச்சந்த லக்ஷ்யாத்
காஹந்தே த்வாம் ப்ரணதி ஸமயே பாதுகே ஸாபிமாநா:
ஸ்த்ரீ ரத்நாநாம் பரிபவவிதௌ ஸ்ருஷ்டி மாத்ரேண தக்ஷாம்
நீசை: கர்த்தும் நரஸகமுநே: ஊர்வசீம் ஊரு ஜாதாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நரன் என்னும் முனிவரின் தோழரான நாராயண முனிவரின் தொடையில் இருந்து தோன்றியவள் என்ற உற்பத்திக் காரணத்தினால் ஊர்வசி என்பவள், மற்ற பெண்களை அவமானப்படுத்தியபடி நின்றாள். அவளது கர்வத்திற்குத் தாழ்மை ஏற்படுத்தும் பொருட்டு தேவலோகப் பெண்கள் உன்னை வணங்கி நின்றனர். அப்போது, தெளிந்த உருவம் கொண்ட உனக்குள் தங்களின் பிரதிபிம்பம் உண்டாகிறது என்ற பெருமையுடன் உன்னுள் புகுகின்றனர்.

727. ஸ்வேச்சாகேளி ப்ரிய ஸஹசரீம் ஸ்வச்ச ரந்த அபிராமாம்
ஸ்தாநே ஸ்தாநே நிஹிதசரணோ நிர்விசந் ரங்கநாத:
ஸஞ்சாராந்தே ஸஹ கமலயா சேஷசய்யாதிரூட:
த்யக்த்வாபி த்வாம் த்யஜதி ந புந: ஸ்வப்ரதிச்சந்த லக்ஷயாத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுக்கு மிகவும் அன்பான தோழியாகவும், தோஷங்கள் இல்லாத இரத்தினங்களால் அழகு சேர்க்கப்பட்டவளாகவும் நீ உள்ளாய். இப்படிப்பட்ட உன்னைச் சாற்றிக்கொண்டு ஸ்ரீரங்கநாதன், பல இடங்களில் ஸஞ்சாரம் செய்கின்றான். உன் மீது தனது திருவடிகளை வைத்தவனாக, தனது விருப்பப்படி லீலைகள் செய்கின்றான். முடிவில் உன்னை விட்டு, ஸ்ரீரங்கநாச்சியாருடன் தனது ஆதிசேஷன் என்ற படுக்கையில் ஏறிய போதிலும், உன்னில் காணப்படும் தனது பிரதிபிம்பம் காரணமாக, உன்னை விட்டுப் பிரியாதவனாகவே ஆகிறான்.

728. த்வாம் ஏவ ஏகாம் அதிகதவத: கேளி ஸஞ்சார காலே
பார்ச்வே ஸ்த்தித்வா விநிஹித த்ருசோ: பாதுகே அநந்ய லக்ஷ்யம்
த்வத் ரத்நேஷு ப்ரதிபலிதயோ: நித்ய லக்ஷ்ய ப்ரஸாதா
பத்மா பூம்யோ திசதி பவதீ பாதஸேவாம் முராரே:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தனது உல்லாஸமான ஸஞ்சார காலங்களில் மிகவும் தெளிவாக உள்ள உன்னை மட்டுமே பற்றியவனாக ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்கிறான். அப்படி அவன் ஸஞ்சரம் செய்கையில் அவன் அருகில் அமர்ந்தபடி, உன் மீது மட்டுமே தங்கள் கண்களை வைத்து, வேறு எதனையும் பாராமல், அவனது உபயநாச்சிமார்கள் வீற்றுள்ளனர். அப்போது அவர்களின் பிரதிபிம்பங்கள் உனது இரத்தினக்கற்களில் தெரிகிறது. இதன் மூலம், நீ ஸ்ரீரங்கநாதனுக்குச் செய்யும் திருவடி கைங்கர்யத்தை அவர்களுக்கும் அளிக்கிறாய் போலும் (அதாவது, அவர்களும் அந்தப் பாதுகையில் பிரதிபலிப்பதால், அவர்களும் ஸ்ரீரங்கநாதனுக்குப் பாதுகைகள் போன்றே நின்று கைங்கர்யம் செய்கின்றனர்).

729. ஏகாம் ஏக: கில நிரவிசத் பாதுகே த்வாரகாயாம்
க்ரீடா யோகீ க்ருதபஹுதநு: ஷோடச ஸ்த்ரீ ஸஹஸ்ரே
சுத்தே தேவி த்வத் உபநிஹிதே பிம்பித: ரத்ந ஜாலே:
புங்க்தே நித்யம் ஸ கலு பவதீம் பூமிகாம் ஸஹஸ்ரே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! துவாரகையின் பதியான க்ருஷ்ணன், இந்த உலகில் பல லீலைகள் செய்தவனாக, யோகியாக, பல சரீரங்களை எடுத்தவனாக, பதினாறாயிரம் பெண்களை, ஒருத்தியை ஒருவனாக நின்று அனுபவித்தான். அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதன் இங்கு உன் மீது இழைக்கப்பட்ட பலவிதமான இரத்தினங்களில், பல பிரதிபிம்பங்களாக நின்று, தனது பல்லாயிரம் உருவங்கள் மூலம், உன்னை அனைத்துக் காலங்களிலும் அனுபவித்து மகிழ்கிறான் போலும்.

730. ஹரி பத நகேஷு பவதீ ப்ரதிபலதி தவ ஏதத் அபி ரத்நேஷு
உசிதா மித: பதாவநி பிம்ப ப்ரதிபிம்பிதா யுவயோ:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்களை நீ பிரதிபலிக்கிறாய். அவனது திருவடியானது உன்னுடைய இரத்தினங்களில் பிரதிபலிக்கிறது. இப்படியாக நீங்கள் இருவரும் (திருவடி, பாதுகை) பிம்பமும், பிரதிபிம்பமாக உள்ள நிலையானது வெகு பொருத்தமாகவே உள்ளது.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
பிம்ப பிரதிபிம்ப பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (22. காஞ்சன பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு -** இந்தப் பத்ததியில் பாதுகையானது தங்கமயமாக உள்ளது என்பது பற்றிக் கூற உள்ளார்.

731. கல்யாணா ப்ரக்ருதிம் வந்தே பஜந்தீம் காஞ்சந ச்ரியம்
பத அர்ஹாம் பாதுகாம் சௌரே: பத ஏவ நிவேசிதாம்

**பொருள் -** அனைத்து உலங்களுக்கும் ஏற்ற நன்மையை அளிக்கவல்ல ஸ்வபாவம் கொண்டவளும், தனிப்பட்ட மேன்மையை அடைந்தவளும், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உள்ளதற்குத் தகுதி கொண்டவளும், எப்போதும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் வைக்கப்பட்டுள்ளவளும் ஆகிய பாதுகையை நான் வணங்குகிறேன்.

732. மதுஜித் தநு காந்தி தஸ்கராணாம்
ஜலதாநாம் அபயம் விதாது காமா
சபலேவ ததங்கிரிம் ஆச்ரயந்தீ
பவதி காஞ்சந பாதுகே விபாதி

**பொருள் -** தங்கமான பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் அழகான திருமேனி நிறத்தை அபஹரித்த மேகங்கள் பயந்து நின்றன. அவன் திருவடிகளில் வந்து அவை பணிகின்றன. அவற்றின் பயங்களை நீக்க எண்ணிய நீ, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைந்த மின்னல் போன்று காணப்படுகிறாய்.

733. நிகஷீக்ருத ரம்ய க்ருஷ்ணரத்நா
பவதீ காஞ்சந ஸம்பதம் வ்யநக்தி
பரிபுஷ்யதி பாதுகே யதீக்ஷா
ஸஹஸா ந: ஸம லோஷ்ட காஞ்சந த்வம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் என்னும் அழகான நீல நிற உரைகல்லை வைத்துக் கொண்டு, உன்னை இழைத்துக் காண்பித்து நிற்கிறாய். இதனால் எங்களுக்கு இந்தப் பூமியில் உள்ள தங்கம் அனைத்தும் ஓட்டாஞ்சில்லுக்குச் சமமாகவே தோன்றுகின்றன (பாதுகையின் தங்கம் மட்டுமே தங்கம், மற்றவை தங்கம் அல்ல எனத் தோன்றுகிறது. அதாவது பாதுகையே உயர்ந்தது, மற்ற அனைத்தும் ஒரே போன்று தாழ்ந்ததே எனறு கருத்து).


**Email:**sridharan_book3yahoo.co.in

734. ஸுரபி: நிகமை: ஸமக்ர காமா
கநக உத்கர்ஷவதீ பதாவநி த்வம்
திசஸி ப்ரதிபந்ந மாதவச்ரீ:
அநிசோந்நித்ரம் அசோக வைபவம் ந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! வேதங்களின் வாசனை நிரம்பியவளாக, உயர்ந்த குணங்கள் நிறைந்தவளாக, தங்கத்தின் மேன்மையைக் கொண்டவளாக, ஸ்ரீரங்கநாதனின் ஸம்பத்தைப் பெற்றவளாக நீ உள்ளாய். இதனால் நீ எப்போதும் மலர்ந்தபடி, துக்கம் என்பதே இல்லாத தன்மையை எங்களுக்கு அளிக்கிறாய்.

**விளக்கம்** – இங்கு வேதங்களின் வாசனை என்பதை வஸந்தகாலம் என்றும், ஸ்ரீரங்கநாதனின் ஸம்பத்து என்பதை வைகாசி மாதம் என்றும் பொருள் கொள்வர். இப்படிக் கொள்ளும்போது, துக்கம் இல்லாத தன்மை என்பதை அசோக (அசோக = அ + சோக = சோகம் இல்லாத) மரங்களின் செழிப்பு என்று பொருள் கொள்வர்.

735. ஸதி வர்ணகுணோ ஸுவர்ணஜாதே:
ஜகதி க்யாதம் அஸௌரபாத் அவர்ணம்
ச்ருதி ஸௌரப சாலிநா ஸ்வஹேம்நா
பவதீ சௌரி பதாவநி வ்யுதாஸ்த்த்தத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தங்கத்திற்கு உயர்ந்த பளபளப்பு என்னும் தன்மை உள்ள போதிலும், அதற்கு வாசனை இல்லை என்ற குறைபாடு உலகில் உண்டு. இந்தக் குறையை வேதங்களின் வாசனையுடன் கூடிய உனது தங்கம் கொண்டு நீ போக்கினாய் போலும்.

736. ப்ரதிபந்ந மயூர கண்ட தாம்நா
பரிசுத்தேந பதாவநி ஸ்வகேந
கமலா ஸ்தந பூஷணோசிதம் தத்
பவதீ ரத்நம் அலங்கரோதி ஹேம்நா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய தங்கம் என்பது மயில் கழுத்தின் நிறம் கொண்ட தூய்மையான தங்கமாக உள்ளது. இப்படிப்பட்ட தங்கத்தைக் கொண்டு நீ செய்வது என்ன? ஸ்ரீரங்கநாச்சியாரின் ஸ்தனங்களுக்கு ஆபரணமாக உள்ள இரத்தினக்கல்லை (இந்த இரத்தினக்கல் =

ஸ்ரீரங்கநாதன்) உன்னில் பதித்துக்கொண்டு, அந்த இரத்தினத்தை (ஸ்ரீரங்கநாதனை) மேலும் அழகுபடுத்துகிறாய்.

**விளக்கம்** - இரத்தினக்கல்லானது தங்கத்தில் பதிக்கப்பட்டால் மேலும் அழகாகக் காணப்படும். இங்கு ஸ்ரீரங்கநாதனை இரத்தினக்கல்லாகக் கூறுகிறார். அவன் தங்கமயமான பாதுகையில் மேலும் அழகாக உள்ளான் என்கிறார்.

737. காந்த்யா பரம் புருஷம் ஆப்ரணகாத் ஸுவர்ணம்
கர்த்தும் க்ஷமா த்வம் அஸி காஞ்சந பாதரக்ஷே
அந்யாத்ருசீம் திசஸி யா விநதஸ்ய தூராத்
ஆரக்வதஸ்பக ஸம்பதம் இந்து மௌளே

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! உன்னுடைய எல்லையற்ற ஒளி மூலமாக ஸ்ரீரங்கநாதனை, அவனது திருவடி நகம் முதல் தலை வரை தங்கமயமாக மின்னும்படிச் செய்யும் சக்தியைப் பெற்றுள்ளாய். சிவன் உன்னைத் தள்ளி நின்று வணங்கும்போது, அவனது தலையில் உள்ள சந்திரன் மீது உன் தங்கத்தின் ஒளி விழுகிறது. இதனால் அந்தச் சந்த்ரன் கொன்றை மலர்க்கொத்து போன்று காணப்படுகிறான்.

738. சந்த்ராக்ருதி: கதம் அகல்பயதா: ததாநீம்
வைமாநிக ப்ரணயிநீ நயந அம்புஜாநாம்
விக்ராந்தி கால விததேந நிஜேந தாம்நா
பாலாதபம் பலிவிமர்த்தந பாதுகே த்வம்

**பொருள்** - மஹாபலியை அடக்கிய ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தங்கமயமான (சந்திரன்) உருவம் கொண்ட நீ, ஸ்ரீரங்கநாதன் உலகம் அளந்தபோது, உலகம் முழுவதும் உனது ஒளியானது பரவும்படிச் செய்தாய். அப்போது தேவலோகப் பெண்களின் முகங்கள் என்னும் தாமரைகள் மலரும்படியான இளம் வெய்யிலை எப்படி உண்டாக்கினாய்? (சந்த்ர ஒளி தாமரையை மூடிவிடும். ஆனால் இங்கு முகத்தாமரைகள், சந்த்ர ஒளி கண்டதும் எப்படி மலந்தன? அதில் சூரிய ஒளி எப்படிக் கலந்தது? என்கிறார்).

739. லேபே ததாப்ரக்ருதி நூநம் இயம் பவத்யா:
காந்த்யா கவேரதநயா கநகாபகாத்வம்
யாவந் முகுந்தபத ஹேம பதாவநி த்வம்
புண்யம் விபூஷிதவதீ புளிநம் ததீயம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் தங்கமயமான பாதுகையே! நீ எப்போது காவேரியின் தூய்மையான மணற்குன்றான திருவரங்கத்தை அலங்கரித்தாயோ அது முதல், காவேரியானது உன்னுடைய தொடர்பு பெற்று, தங்கமயமான ஆறாக உள்ள தன்மையை அடைந்தது என்பது நிச்சயம்.

740. சித்ரம் ஸரோஜ நிலயா ஸஹிதஸ்ய ஸௌரே:
வாஸோ சிதாநி சரணாவநி ஸம்விதித்ஸோ:
ஸத்யோ விகாஸம் உபயாந்தி ஸமாதிபாஜாம்
சந்த்ராதபேந தவ மாநஸ பங்கஜாதி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியவனாகிய ஸ்ரீரங்கநாதன் வசிப்பதற்கு ஏற்ற இடமாக முனிவர்களின் மனம் என்னும் தாமரைகளை நீ அமைக்க விரும்புகிறாய். இதனால் உனது தங்கமயமான ஒளியை, நிலவின் ஒளி போன்று வீசுகிறாய். இதனால் அவர்களின் மனம் என்னும் தாமரைகள் உடனேயே மலர்ந்து விடுகின்றன. என்ன வியப்பு! (இங்கு வியப்பு என்றால் – சந்த்ரனின் ஒளியால் தாமரை மலர்தல் ஆகும்).

741. த்வயி ஏவ பாதம் அதிரோப்ய நவம் ப்ரவாஹம்
நாதே பதாவநி நிசாமயிதும் ப்ரவ்ருத்தே
ஆத்மீய காஞ்சநருசா பவதீ விதத்தே
ஹேமாரவிந்த பரிதாம் இவ ஹேமஸிந்தும்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! காவேரியில் வருகின்ற புது வெள்ளத்தைக் காண்பதற்கு (ஆடி 28) உன் மீது தனது திருவடிகளை வைத்தபடி ஸ்ரீரங்கநாதன் காவேரியின் கரைக்கு எழுந்தருளுகிறான். அப்போது உனது தங்கமயமான ஒளி மூலமாக நீ காவேரியை கடாக்ஷிக்கிறாய். இதனால் காவேரி எங்கும் பொற்றாமரைகள் நிரம்பியது போன்று செய்கிறாய்.

742. விஹரதி புளிநேஷு த்வத் ஸகே ரங்கநாதே
கநகஸரித் இயம் தே பாதுகே ஹேம தாம்நா
வஹதி ஸலிலகேளி ஸ்ரஸ்த சோள அவரோத
ஸ்தந கலச ஹரித்ரா பங்க பிங்காம் அவஸ்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடன் எப்போதும் சேர்த்தே காணப்படும் ஸ்ரீரங்கநாதன், காவேரியின் மணல்களில் ஸஞ்சாரம் செய்யும்போது, உனது தங்கமயமான ஒளியில் காவேரி ஜலக்ரீடை செய்கிறாள். அப்போது அந்த நிலையைக் காணும்போது – சோழநாட்டுப் பெண்களுடைய ஸ்தனங்களில் பூசப்பட்ட மஞ்சள் குழம்பானது கரைந்து, எங்கும் படர்ந்த நிலையைக் காவேரி கொண்டது போன்று உள்ளது.

743. ஸுரபி நிகமகந்தா ஸௌம்ய பத்மா கரஸ்தா
கநக கமலநீவ ப்ரேக்ஷ்யஸே பாதுகே த்வம்
ப்ரமர இவ ஸதா த்வாம் ப்ராப்த நாநாவிஹார
சதமகமணி நீல: ஸேவதே சார்ங்கதந்வா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியாரின் அழகிய திருக்கைகள் போன்று காணப்படும் சந்தரபுஷ்கரணியில் (தாமரைக்குளத்தில்) உள்ள பொன் தாமரைக் கொடி போன்று நீ உள்ளாய். உன் மீது எப்போதும் வேதங்களின் வாசனை வீசியபடி உள்ளது. அனைத்து இடங்களிலும் ஸஞ்சாரம் செய்கின்ற ஸ்ரீரங்கநாதன், இந்த்ரநீலம் போன்று கறுத்த திருமேனி உடையவனாக, ஒரு வண்டு போன்று, தாமரையாக உள்ள உன்னை அடைகிறான்.

744. கநகருசிர வர்ணாம் பாதுகே ஸஹ்ய ஸிந்து:
ச்ரியம் இவ மஹநீயாம் ஸிந்துராஜஸ்ய பத்நீ
ஸ்வயம் இஹ ஸவிதஸ்தா ஸௌம்ய ஜாமாத்ருயுக்தாம்
உபசிரதி ரஸேந த்வாம் அபத்யாபிமாநாத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதானின் பாதுகையே! தங்கம் போன்று அழகான தன்மைகள் கொண்டு, ஸ்ரீரங்கநாதன் என்னும் மாப்பிள்ளையுடன் கூடியவளாக நீ உள்ளாய். இப்படிப்பட்ட உன்னை, ஸ்ரீரங்கநாச்சியார் போன்றே, தன்னுடைய பெண்ணாகவே காவேரி எண்ணுகிறாள். ஸமுத்ரராஜனின் பத்னியாகிய காவேரி, ஸ்ரீரங்கத்தில் இருந்தபடி உன்னைத் தனது பெண்ணாகக் கருதி உபசரிக்கிறாள்.


Email:sridharan_book3yahoo.co.in

745. அநுகலம் உபஜீவ்யா த்ருச்யஸே நிர்ஜராணாம்
த்ரிபுர மதந மௌளௌ சேகரத்வம் தததாஸி
ப்ரதிபதம் அதிகம்ய ப்ராப்த ச்ருங்காஸி சௌரே:
தத்பி சரணரக்ஷே பூர்ண சந்த்ராக்ருதி: த்வம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஒவ்வொரு நொடியும், தேவர்களுக்கு ஆகாரமாக உட்கொள்ளத் தக்கவளாக நீ காணப்படுகிறாய். சிவனின் தலையில் பூர்ணமான அலங்காரமாக உள்ள தன்மையை அடைகிறாய். ஸ்ரீரங்கநாதனின் ஒவ்வொரு அடிவைப்பையும் நீ அடைந்து, சீரிய முனைகளைப் பெற்றுள்ளாய். இப்படி உள்ளபோதிலும் நீ பூர்ணசந்த்ரனாக, தங்கமயமாக உள்ளாய்.

**விளக்கம்** - சந்த்ரனின் கலையில் அமிர்தம் உள்ளதால் அதனைத் தேவர்கள் பருகிறார்கள்; இதனால் சந்த்ரன் பூர்ணமாக இருக்க முடியாது. சிவனின் தலையில் உள்ள சந்த்ரன் பூர்ணசந்த்ரன் அல்ல. ஒவ்வொரு நொடியும் சந்த்ரன் தேய்வதால், பூர்ணமாக இருக்க முடியாது. ஆனால் பாதுகைகள் சந்த்ரன் போன்றே உள்ளபோதும், பூர்ணமாக உள்ளாள் என்கிறார்.

746. கநகமபி த்ருணாம் யே மந்வதே வீதராகா:
த்ருணம் அபி கநகம் தே ஜாநதே த்வத் ப்ரகாசை:
மதுரிபு பதரக்ஷே யத் த்வத் அர்த்தோபநீதாந்
பரிணமயஸி ஹைமாந் தேவி தூர்வாங்குராதீந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைதேவியே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! ஒரு சிலர், ஸ்ரீரங்கநாதன் மீது கொண்ட ஆசை காரணமாக, மற்ற ஆசைகளைத் துறந்து, தங்கத்தைக் கூட அற்பமான புல்லாக எண்ணுவார்கள். ஆனால் அவர்கள் புல்லைக்கூட தங்கமாக எண்ணும்படிச் செய்கிறாய். எப்படி? அவர்களால் உனக்குச் சமர்ப்பணம் செய்யப்படும் அருகம்புல் போன்றவற்றை, உனது ஒளியால் தங்கமயமாக மாற்றி விடுகிறாய் அல்லவோ?

747. விசுத்திம் அதிகச்சதி ஜ்வலந ஸங்கமாத் காஞ்சநம்
விதந்தி ச ஜகந்தி தத் ந கலு தத் விபர்யஸ்யதி
கதம் கநக பாதுகே கமலலோசநே ஸாக்ஷிணி
த்வயைவ பரிசுத்ததா ஹுதபுஜ: அபி ஜாகட்யதே

**பொருள் -** தங்கமயமான பாதுகையே! தங்கம் என்பது அக்னியில் இடப்படும்போது மிகுந்த தூய்மையை அடைகிறது. இதனை உலகில் உள்ளவர்கள் அனைவரும் அறிவார்கள். இந்த விதி மாறுபடாமல் உள்ளது. ஆனால் அழகான கண்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதன் பார்த்துக்கொண்டு நிற்கையில், ஆராதனத்தின் முடிவில், உன்னை அக்னியின் தலையில் வைக்கும்போது, அந்த அக்னி தூய்மைப் பெறுவது எப்படி? (அக்னியால் தங்கம் தூய்மை அடையாமல், தங்கமயமான பாதுகையால் அக்னி தூய்மை அடைவதைக் கண்டு வியக்கிறார்).

748. தார ஆஸங்க ப்ரதித விபவாம் சாருஜாம் பூநதாபாம்
த்வாம் ஆரூட: த்ரிதச மஹிதம் பாதுகே ரங்கநாத:
ஸஞ்சாரிண்யாம் ஸுரசிகரிண: தஸ்துஷா மேகலாயாம்
தத்தே மத்தத் விரத பதிநா ஸாம்ய கக்ஷ்யாம் ஸமீக்ஷ்யாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! முத்துக்களின் தொடர்பால் ஏற்பட்ட மிகுந்த பெருமை, அழகான தங்கமயமான ப்ரகாசம் போன்ற தன்மைகள் கொண்ட நீ, தேவர்களால் கொண்டாடப்பட்டபடி உள்ளாய். இப்படிப்பட்ட உன் மீது நின்றபடி ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்யும்போது, தங்கமயமான மேரு மலையின் தாழ்வாரையில் நிற்கின்ற மதம் பிடித்த யானையின் உயர்ந்த தன்மையை அவன் அடைகிறான் (இங்கு பாதுகை = மேருமலை, ஸ்ரீரங்கநாதன் = மேருமலையில் நிற்கும் யானை).

749. கநக ருசிரா காவ்ய அக்யாதா சநை: சரண உசிதா
ச்ரித குரு புத பாஸ்வத் ரூபா த்விஜாதிப ஸேவிதா
விஹித விபவா நித்யம் விஷ்ணோ: பதே மணிபாதுகே
த்வம் அஸி மஹதீ விச்வேஷாம் ந: சுபா க்ரஹமண்டலீ

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! தங்கமயமான காரணத்தால் சிவந்தும் (செவ்வாய் = அங்காரகன் போன்று), இராமாயணம் போன்ற காவியங்களால் (சுக்கிரன்) கூறப்பட்டும், மெதுவான ஸஞ்சாரத்திற்கு (சனி) ஏற்றபடியும், ஆசார்யன் மற்றும் வித்வான்களால் (குரு, புதன்) அடையப்பட்டபடியும், பளபளப்பான திருமேனி கொண்டும் (சூரியன்), அந்தணர்களால் போற்றப்பட்டும் (சந்த்ரன்), ஸ்ரீரங்கநாதனின் திருவடியில் (ஆகாசம்) நீ எப்போதும் மேன்மையை ஏற்படுத்தியபடி உள்ளாய். இப்படியாக உள்ள நீ எங்களுக்கு எப்போதும் நன்மை அளிக்கவல்ல நவக்ரஹங்களின் கூட்டமாகவே உள்ளாய் (இதனால் பாதுகையே நவக்ரஹம் என்பதும், அந்தக் கூட்டம் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் எப்போதும் உள்ளன என்றும் கருத்து).

750. ப்ரஜ்வலித பஞ்சஹேதி: ஹிரண்மயீம் த்வாம் ஹிரண்ய விலயார்ஹ:
ஆவஹது ஜாதவேதா: ச்ரியம் இவ ந: பாதுகே நித்யம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! சக்கரம் முதலான ஐந்து ஆயுதங்களை ஏற்றியபடி, ஹிரண்யன் போன்றவர்களை அழிப்பதற்காக ஸ்ரீரங்கநாதன் உள்ளான். இப்படிப்பட்ட அவன், தங்கமயமான உன்னை, அவனுக்குச் செய்யும் கைங்கர்யச் செல்வமாக உள்ள உன்னை, எங்களுக்கு எப்போதும் தந்தருள வேண்டும்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
காஞ்சன பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (23. சேஷ பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

751. ஸ்ருஷ்டாம் பூமௌ அநந்தேந நித்யம் சேஷ ஸமாதிநா
அஹம் ஸம்பாவயாமி த்வாம் ஆத்மாநம் இவ பாதுகே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இந்தப் பூமியில் எப்போதும் கைங்கர்யம் செய்தபடி இருக்கவேண்டும் என்று ஆதிசேஷன் உன்னை இங்கு ஏற்படுத்தினான். இப்படியாகத் தன்னைப் போன்றே உன்னை இங்கு உண்டாக்கினான் என்றே எண்ணுகிறேன்.

752. பத்மா போகாத் பாதுகே ரங்கபர்த்து:
பாத ஸ்பர்சாத போகம் அந்யம் ப்ரபித்ஸோ:
சேஷஸ்ய ஏகாம் பூமிகாம் அப்ரவீத் த்வாம்
ஆசார்யாணாம் அக்ரணீ: யாமுநேய:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தொட்டபடி உள்ளதால் ஸ்ரீரங்கநாச்சியார் அடையும் இன்பத்தைக் காட்டிலும், உயர்ந்த இன்பமாகிய ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளால் மிதிபடும் இன்பத்தை அடையவேண்டும் என்று ஆதிசேஷன் எண்ணினான் போலும். இதனால்தான், ஆசார்யர்களில் உயர்ந்தவரான ஆளவந்தார், உன்னை ஆதிசேஷனின் அவதாரமாகக் கூறினார்.

753. சேஷத்வம் அம்ப யதி ஸம்ச்ரயதி ப்ரகாமம்
த்வத் பூமிகாம் ஸமதிகம்ய புஜங்கராஜ:
த்வாம் ஏவ பக்தி விநதை: வஹதாம் சிரோபி:
காஷ்டாம் கதம் ததிஹ கேசவ பாதரக்ஷே

**பொருள்** - அழகான கேசங்களைக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பவளே! தாயே! நாகங்களின் அரசனான ஆதிசேஷன் உனது உருவம் எடுத்து ஸ்ரீரங்கநாதனைத் தாங்கி நிற்கும்போது, அவனது அடிமைத்தனம் மேலும் அதிகமாகிறது. அப்படிப்பட்ட உன்னைத் தங்கள் தலையில் ஏற்பவர்களின் அடிமைத்தனம், இந்த உலகில் மேலும் உயர்வைப் பெறுகிறது.

**விளக்கம்** - படுக்கையாக உள்ளதைக் காட்டிலும் பாதுகையாக உள்ளபோது ஆதிசேஷனின் அடிமைத்தனம் அதிகமாகிறது. அப்படிப்பட்ட பாதுகையைத் தலையில் ஏற்பது, ஆதிசேஷனின் அடிமைத்தனத்தைக் காட்டிலும் உயர்ந்த செயல் அல்லவோ?

754. மாபூத் இயம் மயி நிஷண்ண பதஸ்ய நித்யம்
விச்வம் பரஸ்ய வஹநாத் வ்யதிதா இதி மத்த்வா
தத்ஸே பல அப்யதிகயா மணிபாதுகே த்வம்
சேஷாத்மநா வஸுமதீம் நிஜயைவ மூர்த்த்யா

**பொருள்** - இரத்தினக்கற்கள் கொண்டு இழைக்கப்பட்ட பாதுகையே! “என் மீது தனது திருவடிகளை வைத்தபடி ஸஞ்சரிக்கும் ஸ்ரீரங்கநாதனை இந்தப் பூமியானது எப்போதும் தாங்குவதால் வருந்துகிறதோ?”, என்று நீ எண்ணுகிறாய் போலும். அதனால், அதிக பலம் நிறைந்ததான ஆதிசேஷன் என்னும் உருவம் எடுத்து, இந்தப் பூமியைத் தாங்குகிறாய் போலும்.

755. தத்தாத்ருசா நிஜபலேந நிரூட கீர்த்தி:
சேஷ: தவ ஏவ பரிணாம விசேஷ ஏஷ:
ராமேண ஸத்ய வசஸா யத் அநந்ய வாஹ்யாம்
வோடும் புரா வஸுமதீம் பவதீ நியுக்தா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தன்னுடைய அளவு கடந்த பலம் என்னும் காரணத்தினால் நிலையான புகழ்பெற்ற ஆதிசேஷன், உனது அவதாரமே என்பதற்கு ஆதாரம் உள்ளது. அந்த ஆதாரம் எது? எப்போதும் உண்மையை மட்டுமே கூறுகின்ற இராமனால், யாராலும் தாங்க இயலாத பூமியைத் தாங்கும்படி, நீ அல்லவோ கட்டளை இடப்பட்டாய்?

756. சேஷத்வ ஸீமநியதாம் மணிபாதரக்ஷே
த்வாம் ஆகமா: குலவதூம் இவ பாலபுத்ரா:
த்வத் ரூபபேத சயிதஸ்ய பரஸ்ய பும்ஸ:
பாத உபதாந சயிநாம் உபதாநயந்தி

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! அடிமைத்தனத்தின் எல்லையாக நீ உள்ளாய்; உன்னுடைய உருவமான ஆதிசேஷன் மீது சயனித்துள்ள ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளையே தலையணை என்று எண்ணி, அங்கேயே நீ சயனித்துள்ளாய். இப்படியாகக் கணவனின் கால்களில் சயனித்துள்ள பதிவ்ரதை போன்ற உன்னைத் தங்கள் தாயாகக் கொண்டு, உன்னைத் தங்கள் தலையணை ஆக்கி, வேதங்கள் என்ற குழந்தைகள் நிம்மதியாக சயனித்துள்ளன.


**Email:**sridharan_book3yahoo.co.in

757. பரத சிரஸி லக்நாம் பாதுகே தூரத: த்வாம்
ஸ்வதநுமபி வவந்தே லக்ஷ்மண: சேஷபூத:
கிம் இதம் இஹ விசித்ரம் நித்யயுக்த: ஸிஷேவே
தசரத தநயஸ்ஸந் ரங்கநாத: ஸ்வமேவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஆதிசேஷனாகிய லக்ஷ்மணன் தனது உருவமான உன்னை, பரதனின் தலையில் நீ வீற்றிருந்தபோது, உன்னைத் தூரத்தில் நின்றபடி வணங்கினான். இப்படியாகத் தனது உருவமாகவே உள்ள ஒருவரை மற்றவர் வணங்குவது இந்த உலகில் வியப்பான செயல் அல்ல, எப்படி? தசரதனின் புத்திரனாக அவதரித்த ஸ்ரீரங்கநாதன் தன்னைத்தானே ஆராதித்தபடி இருந்தான் அல்லவோ? (திருவரங்கத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதன் இராமனால் ஆராதிக்கப்பட்டவன் ஆவான். இராமனாக வந்ததும் ஸ்ரீரங்கநாதனே என்பதால், இப்படிக் கூறுகிறார்).

758. பூயோ பூய: ஸ்திமித சலிதே யஸ்ய ஸங்கல்ப ஸிந்தௌ
ப்ரஹ்ம ஈசாந ப்ரப்ருதய இமே புத்புதத்வம் பஜந்தி
தஸ்யாநாதே: யுக பரிணதௌ யோகநித்ரா அநுரூபம்
க்ரீடா தல்ப்பம் கிமபி தநுதே பாதுகே பூமிகா அந்யா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸங்கல்பம் என்பது ஸமுத்திரம் போன்று அசையாமலும், அசைந்தபடியும் உள்ளது. இந்த ஸமுத்திரத்தில் நான்முகன், சிவன் போன்றோர் நீர்க்குமிழிகள் போன்றுள்ள தன்மையை அடைகின்றனர். இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனுக்கு, ப்ரளய காலத்தில் அவன் யோகநித்திரை கொண்டதற்கு ஏற்ற ஆலிலையாக நீ மற்றோர் உருவம் எடுக்கிறாய். இந்தத் தன்மை இனிமையான படுக்கையை ஏற்படுத்துகிறது.

759. அஹீநாத்மா ரங்கக்ஷிதி ரமண பாதாவநி ஸதா
ஸதாம் இத்தம் த்ராணாத் ப்ரதித நிஜ ஸத்த்ரத்வ விபவா
அவித்யா யாமிந்யா: ஸ்ப்ருசஸி புந: ஏகாஹ பதவீம்
க்ரதூநாம் ஆராத்யா க்ரதுரபி ச ஸர்வஸ்த்வம் அஸி ந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அஹீநம் என்னும் யாக ஸ்வரூபமாக (ஆதிசேஷன் ரூபமாக) நீ உள்ளாய். எப்போதும் நாங்கள் காணும்படியாக ஸத்துக்களைக் காப்பதால், மிகவும் ப்ரஸித்தமான ஸத்ரம் என்ற யாகமாக உள்ளாய். அஞ்ஞானம் என்ற இரவுப்பொழுது விடிவதற்கு ஏற்ற பகல் என்பதான ஏகாஹம் எனப்படும் யாகமாக

உள்ளாய். இப்படியாகப் பல யாகங்களுக்கு உரிய தேவதையாகவும், அனைத்துமாகவும் நீயே உள்ளாய்.

760. பஹுமுகபோக ஸமேதை: நிர்முக்ததயா விசுத்திம் ஆபந்நை:
சேஷாத்மிகா பதாவநி நிஷேவ்யஸே சேஷபூதை: த்வம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஆதிசேஷனின் அவதாரமான நீ, பலவிதமான இன்பங்களுடன் கூடியவர்களும், அனைத்து கர்மங்களில் இருந்தும் விடுபட்டதனால் தோஷம் இல்லாத தன்மையை அடைந்தவர்களும் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் தொண்டர்களால் எப்போதும் வணங்கப்படுகிறாய்.

**விளக்கம் -** இங்கு பஹுமுக என்பதைப் பல முகங்கள் என்றும், நிர்முக்ததயா என்பதை தோல் உரித்த காரணத்தினால் என்றும், விசுத்திம் என்பதைப் பளபளப்பு என்றும், சேஷ என்பதை நாகங்கள் என்றும் பொருள் கொள்ளலாம். இப்படிக் கொண்டால், பலவிதமான நாகங்களால் ஆதிசேஷனாக உள்ள நீ வணங்கப்படுகிறாய் எனலாம்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
சேஷ பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (24. த்வந்த்வ பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - இரண்டாகப் பாதுகைகள் உள்ளதை வர்ணிக்கிறார். ப்ரணவ மந்திரத்தின் அம்சமாகவே இவை உள்ளன என்கிறார்.

761. ப்ரபத்யே பாதுகாரூபம் ப்ரணவஸ்ய கலாத்வயம்
ஓதம் மிதம் இதம் யஸ்மிந் அநந்தஸ்யாபி தத்பதம்

**பொருள்** - ப்ரணவத்தின் ரூபமாகவே உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகை இணையை நான் சரணம் அடைகிறேன். இந்த இணையில் அற்பமான ஜீவனும், எல்லையற்ற ஸ்ரீரங்கநாதனின் ஸ்வரூபமும் கோர்க்கப்பட்டுள்ளது.

**விளக்கம்** - ஜீவன் என்பவன் அனைத்தையும் காக்கும் ஸர்வேச்வரனைச் சேர்ந்தவன் என்று ப்ரணவம் கூறுகிறது. ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தாங்கும் பாதுகைகள் ஜீவர்களின் தலையில் வந்து அமர்ந்து, இவர்கள் ஸ்ரீரங்கநாதனைச் சார்ந்தவர்கள் என்று உணர்த்துவதாகக் கூறுகிறார். ஆக இரண்டும் (ப்ரணவம், பாதுகைகள்) ஒரே தன்மை கொண்டவை என்கிறார்.

762. மணிபாதுகயோர் யுகம் முராரே:
மம நித்யம் விததாது மங்களாநி
அதிக்ருத்ய சராசரஸ்ய ரக்ஷாம்
அநுகம்பா க்ஷமயோ: இவ அவதார:

**பொருள்** - அசைபவை, அசையாமல் உள்ளவை போன்ற இரு தன்மைகள் கொண்ட இந்த உலகைக் காப்பாற்றும் பொருட்டு, ஸ்ரீரங்கநாதனுக்குத் தயை மற்றும் பொறுமை ஆகிய குணங்கள் உண்டு. இந்தக் குணங்களின் உருவம் போன்றே உள்ள ஸ்ரீரங்கநாதனின் இரண்டு இரத்தினமயமான பாதுகைகள், என் விஷயத்தில் எப்போதும் நன்மைகளைச் செய்யவேண்டும் (ஒரு பாதுகை தயை, ஒரு பாதுகை மன்னிக்கும் தன்மை அளிக்கின்றன).

763. சரணௌ மணிபாதுகே முராரே:
ப்ரணதாந் பாலயிதும் ப்ரபத்யமாநம்
விபதாம் இவ தைவ மாநுஷீணாம்
ப்ரதிகாரம் யுவயோ: த்வயம் ப்ரதீம:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளே! இந்த உலகில் உள்ளவர்களுக்கு மனிதர்களாலும் தேவர்களாலும் வருகின்ற ஆபத்தை நீக்குவதற்காகவே நீங்கள் உள்ளீர்கள் (இரண்டு பாதுகைகள்). இப்படியாக உள்ள நீங்கள், உங்களை வந்து

வணங்குபவர்களைக் காப்பாற்றுவதற்காகவே, நீங்கள் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைந்ததாக நாங்கள் எண்ணுகிறோம்.

764. முரபித் மணிபாதுகே பவத்யோ:
விஹிதோ நூநம் அஸௌ மிதோ விபாக:
பஜதாம் அபரஸ்பர ப்ரியாணாம்
அவிரோதாய ஸுர அஸுரேச்வராணாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! உங்களுக்குள் பரஸ்பரம் உள்ள இந்த இரண்டு என்னும் தன்மையானது, உங்களை வந்து வணங்குகின்ற, ஒருவருக்கொருவர் நட்பு இல்லாமல் உள்ள, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கலகம் ஏற்படாமல் இருப்பதற்காக உள்ளது போலும்.

765. அஹிதோந் மதநாய ஸம்ச்ரிதாநாம்
அலம் ஆலோக வசேந சப்ததோ வா
கரயோச்ச ரதாங்க பாஞ்சஜந்யௌ
மதுஹந்து: பதயோச்ச பாதுகே யே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருக்கரங்களில் உள்ள சங்கும் சக்கரமும், தங்கள் நாதம் மூலமும் ஒளி மூலமும் அடியார்களின் விரோதிகளையும், அவர்களின் திட்டங்களையும் நாசம் செய்கின்றன. இவை போன்றே, அவனது திருவடிகளில் உள்ள பாதுகைகள் துயரங்களை நீக்கப் போதுமானவையாக உள்ளன.

766. அவதீரித ஸாது பத்ததீநாம்
அலஸாநாம் மதுவைரி பாதுகே த்வே
இதரேதரஸாஹசர்ய மித்தம்
ப்ரதிபந்நே இவ தைவபௌருஷே ந:

**பொருள்** - முன்னோர்கள் கூறிய ஸத் மார்க்கத்தைக் கைவிட்டவர்களும், சோம்பேறிகளாகவும் உள்ள எங்களைப் போன்றவர்களுக்கு, மது என்ற அசுரனின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் இரண்டு பாதுகைகளும் செய்வது என்னவென்றால் – ஒன்றுக்கொன்று துணையாக நிற்பதான தெய்வத்தின் செயல்கள், மனிதர்களின் செயல்கள் போன்று இந்தப் பாதுகைகள் நின்று, எங்களுக்கு உதவுகின்றன.

767. பார்ச்வயோ: ஸரஸிஜா வஸுந்தரே
பாதயோச்ச மணிபாதுகே யுவாம்
ஸந்நிகர்ஷத நசேத் மது த்விஷ:
கிம் கரிஷ்யதி க்ருத ஆகஸாம் கண:

**பொருள் -** இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகைகளே! மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனுக்கு இரு பக்கங்களிலும் மஹாலக்ஷ்மியும், பூமிப்பிராட்டியாரும் உள்ளனர். இப்படியாக அந்தப் பிராட்டிமார்களாக நீங்கள் (பாதுகைகள்) ஸ்ரீரங்கநாதன் அருகே இல்லாமல் போனால், பாவம் செய்பவர்களின் கூட்டம் என்ன செய்யும்?

768. பாதுகே பவ பய ப்ரதீபயோ:
பாவயாமி யுவயோ: ஸமாகமம்
ஸக்தயோ: தநுஜவைரிண: பதே
வித்யயோ: இவ பராவராத்மநோ:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! அசுரர்களின் சத்ருவான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உள்ள நீங்கள், ஸம்ஸார பயத்திற்குச் சத்ருவாக உள்ளீர்கள். இப்படியாக உள்ள உங்கள் இருவரது சேர்க்கையைக் காணும்போது, பரை மற்றும் அபரை என்ற வித்யைகளின் சேர்க்கை என்றே நான் எண்ணுகிறேன்.

**விளக்கம் -** பலவிதமான சாஸ்திரங்களைக் கற்று, அவனை அடைவதற்கான செயல்களில் ஈடுபட உதவுவதற்கு அபரவித்யை என்று பெயர். எம்பெருமானைப் பற்ற உதவும் அவனது உபாஸனம் என்பதற்குப் பரவித்யை என்று பெயர்.

769. ரங்க ஸீமநி ரதாங்க லக்ஷ்மண:
சிந்தயாமி தபநீய பாதுகே
சாபதோஷ சமநாய தத்பதே
சக்ரவாக மிதுநம் க்ருதாஸ்பதம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! ஸ்ரீரங்க விமானத்தில் காணப்படும் சக்கரத்தை அடையாளமாகக் கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதனின் தங்கமயமான பாதுகைகளான உங்களைக் காணும்போது - சாபத்தின் பரிஹாரமாக அவனுடைய கோயிலில் வாஸம் செய்யும் சக்ரவாகப் பக்ஷிகளின் ஜோடி என்றே நான் எண்ணுகிறேன்.

**விளக்கம்** - இராமன் சீதையைப் பிரிந்து துன்பம் காரணமாகக் குயிலைத் தாய் வளர்க்காது, சக்ரவாகப் பறவைகள் இரவில் சேரக்கூடாது போன்ற சாபங்களை இட்டான். இதனை இங்கு கூறுகிறார். எந்தவிதமான சாபமும் ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்து, ஸ்ரீரங்கநாதனை அண்டியபடி நின்றால் நீங்கும் என்பது உட்கருத்து.

770. மாநயாமி ஜகத: தமோபஹே
மாதவஸ்ய மணிபாதுகே யுவாம்
தக்ஷிணோத்தர கதிக்ரம் உசிதே
பத்ததீ இவ மயூக மாலிந:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இந்த உலகில் உள்ள அஞ்ஞானம் என்னும் இருளை நீக்குபவர்களாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! தக்ஷிணாயம், உத்தராயணம் என்னும் சூரியனின் தெற்கு வடக்கு மார்க்கங்கள் போன்றே உங்களை நான் எண்ணுகிறேன்.

771. ரங்கநாத பதயோ: அலங்க்ரியா
ராஜதே கநக பாதுகா த்வயீ
தத்விபூதி யுகளீவ தாத்ருசீ
ச்சந்தத: ஸமவிபாகம் ஆச்ரிதா

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் அழகான திருவடிகளுக்கு அலங்காரமாக விளங்குகின்ற தங்கமயமான பாதுகைகள் இரண்டும் – அவனுடைய விருப்பத்தினால் ஒரே போன்ற பிரிவை அடைந்துள்ள அவனது லீலாவிபூதி, நித்யவிபூதி போன்று உள்ளன.

772. ஸாக்ஷாத் பதம் மதுபித: ப்ரதிபாதயந்த்தௌ
மாந உபபத்தி நியதே மணிபாதுகே த்வே
அந்யோந்ய ஸங்கதிவசாத் உபபந்ந ஆசர்யாம்
ஆஜ்ஞாம் ச்ருதி ஸ்ம்ருதி மயீம் அவதாரயாமி

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகள் இரண்டும் அவனது திருவடிகளை நாம் காணும்படிச் செய்கின்றன. அவனுடைய ஸ்வரூபத்தை நமக்கு உள்ளது உள்ளபடி அறிவிக்கின்றன. வேதங்கள் என்னும் ப்ரமாணங்களாலும், தர்க்கங்களாலும் நிச்சயிக்கப்பட்ட பெருமை கொண்டவையாக உள்ளன. அவை

ஒன்றுடன் ஒன்று சேர்ந்து அழகான நடையை கொண்டதாக உள்ளன. இப்படிப்பட்ட பாதுகைகள் ச்ருதிகள், ஸ்ம்ருதிகள் என்பதான ஸ்ரீரங்கநாதனின் கட்டளைகள் என்றே நான் எண்ணுகிறேன்.

773. விச்வ உபகாரம் அதிக்ருத்ய விஹார காலேஷு
அந்யோந்யத: ப்ரதமம் ஏவ பரிஸ்புரந்த்யோ:
த்ருஷ்டாந்தயந்தி யுவயோ: மணிபாதரக்ஷே
திவ்யம் ததேவ மிதுநம் திவிஷந் நிஷேவ்யம்

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகைகளே! இந்த உலகங்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தின் போது "நான் முந்தி, நீ முந்தி" என்று போட்டி போட்டுக்கொண்டு நீங்கள் முன்னே வருகிறீர்கள். இதனால், நான்முகன் தொடக்கமான அனைத்து தேவர்களாலும் ஆராதிக்கப்படுகின்ற திருவரங்கத்தின் திவ்யதம்பதிகளாகவே உங்களைப் பலரும் கூறுகின்றனர் போலும்.

**விளக்கம்** - இந்த உலகத்தைக் காப்பாற்றுவதில் எப்போதும் ஸ்ரீரங்கநாதனுக்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் போட்டி உள்ளது. யார் முதலில் சென்று காப்பாற்றுவது என்பதே ஆகும். இது போன்றே, ஸ்ரீரங்கநாதனின் இடது பாதுகையும் வலது பாதுகையும் போட்டி போடுகின்றன என்கிறார்.

774. த்வாவேவ யத்ர சரணௌ பரமஸ்ய பும்ஸ:
தத்ர த்விதா ஸ்திதவதீ மணிபாதுகே த்வம்
யத்ரைவ தர்சயதி தேவி ஸஹஸ்ர பாத்த்வம்
தத்ர அபி நூநம் அஸி தர்சித தாவதாத்மா

**பொருள்** - இரத்தினங்களால் இழைக்கப்பட்ட பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாதனாக நிற்கும் பரமபுருஷனுக்கு இரண்டு திருவடிகள் உள்ளபோது, நீ இரண்டாக உள்ளாய். ஆனால் வேதங்களில் கூறியபடி, ஆயிரம் திருவடிகளைக் கொண்டவனாக ஸ்ரீரங்கநாதன் நிற்கையில், நீ அத்தனை பாதுகைகளாகத் தோன்றுகிறாய் என்பது நிச்சயம்.

775. பர்யாயதோ கதிவசாத் மணிபாதரக்ஷே


Email:sridharan_book3yahoo.co.in

பூர்வாபரத்வ நியமம் வ்யதி வர்த்த யந்த்யௌ
மந்யே யுவாம் மஹதி விஷ்ணுபதே ஸ்புரந்த்யௌ
ஸந்த்யே ஸமஸ்த ஜகதாம் அபி வந்தநீயௌ

**பொருள்** - இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகைகளே! ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சாரம் செய்யும்போது நீங்கள் இருவரும் மாறிமாறி வருவதால், ”இது முன்னே, இது பின்னே” என்று என்ற கட்டுப்பாடு தாண்டியபடி உள்ளீர்கள். ஸ்ரீரங்கநாதனின் உயர்ந்த, பரந்த ஆகாசம் போன்ற திருவடிகளில் நீங்கள் உள்ளீர்கள். இப்படியாக உள்ள உங்களைக் காணும்போது, அனைத்து உலகங்களும் உபாஸிக்கத் தகுந்த ப்ராதஸ்ஸந்த்யை மற்றும் ஸாயம் ஸந்த்யை என்று நான் எண்ணுகிறேன் (காலை நேரம், மாலை நேரம்).

776. அச்ராந்த ஸஞ்சரணயோ: நிஜஸம்ப்ரயோகாத்
அம்லாநதாம் சரணபங்கஜயோ: நிசந்த்யௌ
மாந்யே யுவாம் ரகுபதேர் மணிபாதரக்ஷே
வித்யே பலாம் அதிபலாம் ச விசிந்துயாமி

**பொருள்** - இராமனுடைய இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளே! இடைவிடாமல் நடக்கின்ற இராமனின் திருவடித்தாமரைகள் வாடிவிடாமல் இருக்கக்கூடிய தன்மையை நீங்களே அளிக்கிறீர்கள். இதனால் நீங்கள் வணங்கத்தக்கவர்களாக உள்ளீர்கள். இதனைக் காணும்போது, விச்வாமித்திரர் இராமனுக்கு உபதேசித்த பலை மற்றும் அதிபலை என்னும் மந்த்ரங்களாகவே நீங்கள் உள்ளீர்கள் என்று நான் எண்ணுகிறேன்.

777. அந்தர் மோஹாத் அவிதிதவதாம் ஆத்மதத்வம் யதாவத்
பத்யாம் இத்தம் பரிசிதவதாம் பாதுகே பாபலோக்யாம்
நித்யம் பக்தே: அநுகுணதயா நாதபாதம் பஜந்த்யௌ
நிஷ்டே ஸாக்ஷாத் ஸ்வயம் இஹ யுவாம் ஜ்ஞாந கர்மாத்மிகேந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! மனதிற்கு எற்ற நன்மைகளை அறியக்கூடிய தெளிவு இல்லாத காரணத்தினால், ஜீவாத்மா-பரமாத்மாக்கள் பற்றிய உண்மையை, உள்ளது உள்ளபடி அறியக்கூடிய அறிவு அற்றவர்களாக நாங்கள் உள்ளோம். மேலும் நரகங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய வழிகளைப் பழகிக் கொண்டவர்களாகவே நாங்கள் உள்ளோம். ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைந்த நீங்கள், எங்களுக்கு எப்படி உள்ளீர்கள் என்றால் – எங்களுக்கு இந்த உலகில் பக்தியோகம் கிட்டவேண்டும்

என்பதற்காக ஞானயோகம் மற்றும் கர்மயோகம் என்பவையாகவே நீங்கள் வடிவு கொண்டதாக உள்ளீர்கள்.

778. ந்யஸ்தம் விஷ்ணோ: பதம் இஹ மஹத் ஸ்வேந பூம்நா வஹந்த்யோ:
ஆம்நாயாக்யாம் அவிஹதகதிம் வர்த்தயந்த்யோ: நிஜ ஆஜ்ஞாம்
ஆஸந்நாநாம் ப்ரணய பதவீம் ஆத்மநா பூரயந்த்யோ:
த்ரை ராஜ்யஸ்ரீ: பவதி ஜகதாம் ஜகராஜ்யே பவத்யோ:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! உங்கள் மீது வைக்கப்பட்ட மிகவும் உயர்ந்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தாங்கி நிற்கிறீர்கள். இதனால் மிகுந்த பெருமையுடன் உள்ளீர்கள். வேதங்கள் என்னும் உங்கள் கட்டளைகளைத் தடைபடாத செல்வாக்கு கொண்டதாக இந்த உலகில் நிலை நாட்டுபவர்களாக உள்ளீர்கள். உங்கள் அருகில் வந்தவர்கள் விரும்பும் பொருள்களை, அவர்கள் கேட்காமலேயே, நீங்களாகவே நிரப்புகிறீர்கள். இப்படியாக நீங்கள் இந்த உலகிற்கு ஒரே சக்ரவர்த்தியாக உள்ளபோதிலும், தோற்றம் காரணமாக இரண்டு சக்ரவர்த்திகளாக உள்ளீர்கள்.

779. அப்ராப்தாநாம் உபஜநயத: ஸம்பதாம் ப்ராப்திம் ஏவம்
ஸம்ப்ரப்தாநாம் ஸ்வயம் இஹ புந: பாலநார்த்தம் யதேதே
ஸாக்ஷாத் ரங்கக்ஷிதிபதி பதம் பாதுகே ஸாதயந்த்யௌ
யோக க்ஷேமௌ ஸுசரிதவசாத் மூர்த்திமந்தௌ யுவாம் ந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளே! எங்களால் இதுவரை பெறப்படாமல் இருந்துள்ள ஐச்வர்யத்தை நாங்கள் அடையும்படிச் செய்கிறீர்கள் (இது யோகம் எனப்படும்). இதுவரை நாங்கள் அடைந்துள்ளதைக் காப்பாற்றுதலுக்கு நீங்களாகவே பெரும் முயற்சி எடுத்துக் கொள்கிறீர்கள் (இது க்ஷேமம் என்பதாகும்). உங்களுக்கு என்று வைத்துக் கொள்ளாமல், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை எங்களுக்கே அளிக்கின்ற உங்களைக் காணும்போது, எங்கள் புண்ணியம் காரணமாக நாங்கள் பெற்ற யோகமும், க்ஷேமமும் வடிவெடுத்தது போன்றே உள்ளது.

780. பத்த ஹரி பாதயுகளம் தபநீய பாதுகே யுவயோ:
மோசயதி ஸம்ச்ரிதாநாம் புண்யாபுண்யமய ச்ருங்கலா யுகளம்

**பொருள் -** தங்கமயமான பாதுகைகளே! உங்களது இந்த இணை என்பது இரண்டாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை ஒன்றாகக் கட்டுகிறது. இந்த இணையே, உங்களை அண்டியவர்களின் புண்ணியம் மற்றும் பாவம் என்னும் சங்கிலிகளின் பிணைப்பை விடுவிக்கின்றன.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
த்வந்த்வ பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


Email:sridharan_book3yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (25. ஸந்நிவேச பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு -** இந்தப் பத்ததியில் பாதுகைகள் உருவம் பற்றிக் கூறுகிறார்.

781. அணோ: அணியஸீம் விஷ்ணோ: மஹத் அபி மஹியஸீம்
ப்ரபத்யே பாதுகாம் நித்யம் தத்பதேநைவ ஸம்மிதாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதன் வாமனனாக நிற்கும்போது மிகச் சிறியதாக உள்ளது; அவன் த்ரிவிக்ரமனாக நிற்கும்போது மிகவும் பெரியதாக உள்ளது. இப்படியாக அவனது திருமேனி போன்று பரிணாமம் கொண்டதாக இருக்கின்ற அவனது பாதுகையை நான் எப்போதும் சரணம் என்று பற்றுகிறேன்.

782. ப்ரதிஷ்டதி பாதஸம்மிதாயாம்
த்வயி நித்யம் மணிபாதுகே முகுந்த:
இதரே து பரிச்சதாஸ்த ஏதே
விபவ வ்யஞ்ஜந ஹேதவோ பவந்தி

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிக்குச் சரியான அளவுள்ள உங்கள் மீது ஸ்ரீரங்கநாதன் எப்போதும் நிலையாக நிற்கிறான். ஆனால் அவனுடைய மற்ற பொருள்களான குடை, சாமரம் போன்ற பலவும் அவனுடைய பெருமைகளை வெளிப்படுத்த மட்டுமே உள்ளன.

783. தவ ரங்கநரேந்த்ர பாதரக்ஷே
ப்ரக்ருதி: ஸந்நபி பக்தி பாரதந்த்ர்யாத்
பவதீம் வஹதீவ பந்நகேந்த்ர:
ப்ரதித ஸ்வஸ்திக லக்ஷணை: சிரோபி

**பொருள் –** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஆதிசேஷன் உனக்கு மூல காரணமாக உள்ள போதிலும், உன்னிடத்தில் அதிகமான பக்தி கொண்டிருந்தான். ஆகவே அவன், உன்னுடைய உருவம் போன்றே உள்ள ஸ்வஸ்திகம் என்ற கோடுகளைத் தனது தலைகளில் தாங்கி நிற்கிறான் போலும்.

784. பரஸ்ய பும்ஸ: பதஸந்நிவேசாந்
ப்ரயுஞ்ஜதே பாவித பஞ்சராத்ரா:
அகப்ரதீபாந் அபதிச்ய புண்ட்ராந்
அங்கேஷு ரங்கேசய பாதுகே த்வாம்


Email:sridharan_book3yahoo.co.in

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பாஞ்சராத்ர ஆகமத்தைக் கற்றவர்கள், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் போன்றவையும், பாவங்கள் அனைத்தையும் அழிப்பவையாகவும் உள்ள திருமண்ணை, தங்கள் உடல் உறுப்பகளில் வைத்துக் கொள்கிறார்கள். இவை உன்னைப் போன்றே உள்ளன.

785. விம்ருச்ய ரங்கேந்த்ர பதிம் வராயா:
ச்ருதே: ஸ்திதாம் மூர்த்தநி பாதுகே த்வாம்
பத்த்நந்தி வ்ருத்தா: ஸமயே வதூநாம்
த்வந் முத்ரிதாநி ஆபரணாநி மௌளௌ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனைத் தனது கணவனாகக் கொண்ட வேதங்களின் தலைப்பகுதியான உபநிஷத்துக்களில், நீ உள்ளதைப் பெரியவர்கள் காண்கின்றனர். இதனால்தான் அவர்கள், தங்கள் இல்லத்துப் பெண்களின் கல்யாணத்தின்போது, அவர்கள் தலையில் உனது முத்திரை கொண்ட ஆபரணம் ஒன்றைக் கட்டுகின்றனர் போலும்.

786. வஹந்தி ரங்கேச்வர பாதரக்ஷே
தீர்க்காயுஷாம் தர்சித பக்தி பந்தா:
ஆசாதிபாநாம் அவரோத நார்ய:
த்வந் முத்ரிகாம் மங்கள ஹேமஸூத்ரை:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாறும் பாதுகையே! தீர்க்கமான ஆயுளைக் கொண்டவர்களான கிழக்கு போன்ற திசைகளின் அதிபதிகளான தேவர்களின் அந்தப்புறப் பெண்கள் செய்வது என்ன? அவர்கள் தங்கத்தால் செய்யப்பட்ட திருமாங்கல்ய சரடுகளில், உனது முத்திரையைப் பதித்துக் கொள்கின்றனர்.

787. வ்யூஹ க்ரமேண ப்ரதிதாரம் அக்ரே
ஸந்தர்சயந்தீம் மணிபாதுகே த்வாம்
பாதும் த்ரிலோகீம் பதபத்மபாஜ,ம்
ஸௌதர்சநீம் சக்திம் அவைமி சௌரே:

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! வாஸுதேவன் முதலான ஐந்து விதமான ரூபங்களில் முதன்மையாக விளங்கும் ஸ்ரீரங்கநாதனை நீ எதிரில் காண்பித்துக் கொண்டு நிற்கிறாய். மூன்று உலகங்களையும் காப்பாற்றவே நீ ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை அடைந்தாய் போலும். இப்படியாகத் தாமரைமலர் போன்ற அவன் திருவடிகளை அடைந்துள்ள உன்னை நான் ஸுதர்சன யந்த்ரம் என்றே நினைக்கிறேன்.

788. பத்தாஸிகா கநகபங்கஜ கர்ணிகாயாம்
மத்யே க்ருசா முராரிபோ: மணிபாதுகே த்வம்
ஸந்த்ருச்யஸே ஸரஸிஜாஸநயா க்ருஹீதம்
ரூபாந்தரம் கிமபி ரங்க விஹார யோக்யம்

**பொருள் -** முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பொன்மயமான பாதுகையே! தங்கத்தால் செய்யப்பட்ட தாமரையில் (சடாரி), கர்ணிகை என்று கூறப்படும் மத்யபாகத்தில், இடை சிறுத்தவளாக நீ உள்ளாய். இப்படியாக உன்னைக் காணும்போது, ஸ்ரீரங்கம் என்னும் நாடகமேடையில் ஸஞ்சாரம் செய்வதற்காக ஸ்ரீரங்கநாச்சியாரால் எடுக்கப்பட்ட உருவம் போன்று தோன்றுகிறாய் (ஸ்ரீரங்கநாச்சியார் தனது அர்ச்சையில் தன்னுடைய ஸன்னதியை விட்டு வெளியில் வராமல் உள்ளதால், அவளே பாதுகை ரூபத்தில் வருகிறாள் என்று கொள்ளலாம்).

789. மநோசிதஸ்ய மதநீந ஜநஸ்ய நித்யம்
மாபூத் அத: க்ருபணதா இதி விசிந்தயந்த்யா
பந்தீக்ருதம் த்ருவம் அவைமி வலக்நதேசே
கார்ச்யம் த்வயா கமலலோசந பாதரக்ஷே

**பொருள் -** தாமரை போன்ற அழகான கண்களைக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது மனதில், "எப்போதும் அனைவராலும் வணங்கத்தக்க என்னைச் (பாதுகை) சார்ந்த மக்களிடம் சிறுமை அல்லது இளைப்பு என்பது சென்றடையக் கூடாது", என்று எண்ணுகிறாய் போலும். இதனால்தான், உன்னுடைய இடுப்பு பாகத்தில் இளைப்பு என்பது சிறைவைக்கப்பட்டது போலும் (சடாரியில் பாதுகை உள்ள இடம் சிறியதாகவே இருக்கும். இதனைக் கூறுகிறார். இங்கு சிறுமை என்பது சிறைபிடிக்கப்பட்டது என்றும், இதனால் இந்தத் தன்மை மற்றவர்களிடம் செல்லாமல் தடுக்கப்பட்டது என்றும் கூறுகிறார்).

790. மத்யே க்ருசாம் உபயத: ப்ரதிபந்ந வ்ருத்திம்
மந்யே ஸமீக்ஷ்ய பவதீம் மணிபாதரக்ஷே
நித்யம் முகுந்தபத ஸங்கம் விப்ரயோகௌ
நிச்சிந்வதே க்ருததிய: ஸுகதுக்க காஷ்டாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இரண்டு பக்கத்திலும் பருத்தும், நடுவில் சிறுத்தும் நீ காணப்படுகிறாய் (முன்புறமும், பின்புறமும் பருத்துள்ளது). இப்படியாக உள்ள உன்னைக் கண்ட பெரியவர்கள், "ஸ்ரீரங்கநாதனின் தொடர்பு உள்ள நிலை என்பது சுகம், அதனை இழந்த நிலை என்பதே துக்கம்", என்று நிச்சயம் செய்கின்றனர் என எண்ணுகிறேன்.

**விளக்கம்** - பாதுகையில் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை வைக்கும்போது, விரல்கள் உள்ள முன்பகுதியும், குதிகால் பகுதியும் மட்டுமே அகலமாக உள்ளன. பாதுகையின் நடுப்படுதி மீது ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் படுவதில்லை. இதனால்தான் அந்தப் பகுதி குறுகி உள்ளது. இதனையே இன்பம்-துன்பம் என்கிறார்.

791. ரங்கேசிது: சரணபங்கஜயோ: பஜந்தீ
ரக்ஷாப்ரஸாதந விகல்ப ஸஹாம் அவஸ்தாம்
மாந்யா அக்ருதி: நிவிசஸே மணிபாதரக்ஷே
மத்யே பரிச்சத விபூஷண வர்க்கயோ: த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அனைவராலும் கொண்டாடத் தக்கதான உருவம் உள்ள நீ, ஸ்ரீரங்கநாதனின் தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காப்பதற்காக உள்ளாயா அல்லது ஆபரணமாக உள்ளாயா என்று சந்தேகம் எழுகிறது. இப்படியாக இரண்டிற்கும் ஏற்ற நிலையைக் கொண்ட அவனது குடை போன்ற சாமான்களுடைய வரிசையிலும், ஆபரணங்களின் வரிசையிலும் நீ உள்ளாய்.

792. அங்காந்தரேஷு நிஹிதாநி அகிலாநி காமம்
பர்யாய கல்பந ஸஹாநி விபூஷணாநி
நித்யம் முகுந்த பத பத்ம தல அநுரூபம்
நைபத்யம் அம்ப பவதீ நயந அபிராமம்

**பொருள்** - அனைவருக்கும் தாய் போன்ற பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் மற்ற அவயவங்களில் (உடல் உறுப்புக்கள்) அணிவிக்கப்படும் ஆபரணங்கள் வெவ்வேறாகவே

உள்ளன. அந்த அவயவங்களில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு ஆபரணங்கள் அணிவிக்கப்படுவதை, அந்த அவயவங்கள் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால், தாமரை மலர் போன்ற மென்மையான அவன் திருவடிகளுக்கு ஏற்றதாகவும், காண்பவர்களின் கண்களுக்கு இனிமையாகவும் உள்ள உன்னைத் தவிர மற்ற எதனையும் அவனது திருவடிகளில் அணிவிக்கப்பட இயலாமல் நீ மட்டுமே உள்ளாய் (அதாவது, திருவடிகளில் பாதுகையைத் தவிர வேறு எதனையும் அணிவிக்க இயலாது).

793. யே நாம பக்தி நியதை: தவ ஸந்நிவேசம்
நிர்விச்ய நேத்ரயுகளை: ந பஜந்தி த்ருப்திம்
காலக்ரமேண கமலேக்ஷண பாதரக்ஷே
ப்ராயேண தே பரிணமந்தி ஸஹஸ்ர நேத்ரா:

**பொருள்** - தாமரை போன்ற அழகான கண்களைக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஒரு சிலர் உன்னுடைய, மிகவும் அழகான உருவத்தை, ஆழ்ந்த பக்தி கொண்டு, தங்கள் இரண்டு கண்களால் பார்த்து நிற்கக்கூடும். தங்களுக்கு உனது அழகை அனுபவிக்க இரண்டு கண்கள் போதவில்லையே என்று மனநிறைவு அடையாமல் நிற்கக்கூடும். அவர்கள் காலப்போக்கில் ஆயிரம் கண்கள் கொண்ட இந்திரபதவியை அடைகின்றனர்.

794. பதம் அப்ரமாணம் இதி வாதிநாம் மதம்
மதுஜித் பதே மஹதி மாஸ்ம பூத் இதி
வ்யுதபாதி தஸ்ய சரணாவநி த்வயா
நிகமாத்மந: தவ ஸமப்ரமாணதா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியின் அளவு எல்லையற்றது என்று ஒரு சிலர் எண்ணக்கூடும். இப்படிப்பட்ட எண்ணம் ஸ்ரீரங்கநாதனின் திருவடியைக் குறித்து வரக்கூடாது என்று நீ எண்ணினாய் போலும் (அதாவது, திருவடிகள் சரியான அளவில்லாதவை என்ற தவறான எண்ணம் உண்டாகக்கூடாது). இதனால், வேத ஸ்வரூபமாக உள்ள உன்னால், ஸ்ரீரங்கநாதனின் திருவடிக்குச் சரியான அளவு கொண்டு இருத்தல் என்பது உணர்த்தப்பட்டது போலும்.

795. அப்ரபூதம் அபவத் ஜகத் த்ரயம்
யஸ்ய மாதும் உதிதஸ்ய பாதுகே
அப்ரமேய அமிதஸ்ய தத்பதம்
நித்யமேவ நநு ஸம்மிதம் த்வயா


Email:sridharan_book3yahoo.co.in

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடி உலகங்களை அளப்பதற்காக உயர்ந்து சென்றபோது, அந்த அடிக்கு மூன்று உலகங்களும் போதாமல் இருந்தன. அப்படிப்பட்ட அளவிட இயலாத ஸ்ரீரங்கநாதனின் திருவடியானது உன்னால் எளிதாக அளக்கப்பட்டு (உன்னுடைய அளவாக) உள்ளது.

796. ஆலவாலாம் இவ பாதி பாதுகே
பாதபஸ்ய பவதீ மதுத்விஷ:
யத்ஸமீப விநதஸ்ய ஆலிந:
ஸாரிணீ பவதி மௌளி நிம்நகா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் என்னும் கற்பக மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட பாத்தி போன்று நீ காணப்படுகிறாய். உனது அருகில் வணங்கி நிற்கும் சிவனின் தலையில் உள்ள கங்கையானது, கால்வாய் போன்று அந்தப் பாத்தியில் பாய்கிறது.

797. மோதமாந முநிப்ருந்த ஷட்பதா
பாதி முக்தி மகரந்த வர்ஷிணீ
கா அபி ரங்க ந்ருபதே: பதாம்புஜே
கர்ணிகா கநக பாதுகா மயீ

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்னும் தாமரை மலரின் உள்ளே காணப்படும் தங்கமயமான காய் போன்று நீ உள்ளாய். ஸ்ரீரங்கநாதனை அடைகின்ற முனிவர்கள், வண்டுகளின் கூட்டம் போன்று உன்னை மொய்கின்றனர். நீ மோக்ஷம் என்னும் தேனைப் பெருகியபடி உள்ளாய் (அந்த வண்டுகள் அவற்றைப் பருகி நிற்கின்றன).

798. யுகபத் அநுவிதாஸ்யந் யௌவதம் துல்யராகம்
யதுபதி: அதிசக்ரே யவதோ ரூபபேதாத்
தத் இதம் அதிவிகல்பம் பிப்ரதீ ஸந்நிவேசம்
தவ கலு பதரக்ஷே தாவதீ மூர்த்தி: ஆஸீத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! தன் மீது சமமான ஆசை கொண்ட பதினாறாயிரம் பெண்களின் கூட்டத்தை ஒரே நேரத்தில் மகிழ்வு செய்ய எண்ணிய கண்ணன், ஒரே நேரத்தில் பல ரூபங்களை எடுத்துக் கொண்டான். மிகவும்

ப்ரஸித்தி பெற்ற அவனது இந்த லீலையை அனுபவிக்க எண்ணிய உனக்கு, அதிகமான எண்ணிக்கை கொண்டதான அவயவங்களின் இருப்பை அடைய, பல ரூபங்கள் ஏற்பட்டது அல்லவோ (அதாவது 32000)?

799. தத்தத் வ்ருத்தே அநுகுணதயா வாமநீம் வ்யாபிநீம் வா
ப்ராப்தே ரங்க ப்ரதித விபவே பூமிகாம் ஸூத்ரதாரே
மந்யே விச்வ ஸ்திதிமய மஹாநாடிகாம் நேதுகாமா
நாநா ஸம்ஸ்தா பவதி பவதீ பாதுகே நர்த்தகீவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கம் என்னும் நாடக மேடையில் கூத்தாடும் தலைவனான ஸ்ரீரங்கநாதன், இந்த உலகைக் காக்கும் நாடகத்தில் குட்டையாகவோ நெட்டையாகவோ பல வேஷங்கள் அடைகிறான். அப்போது இந்த உலகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற பெரிய நாடகத்தை, ஸ்ரீரங்கநாதனைக் கொண்டு நடத்த எண்ணும் நீ செய்வது என்ன? அந்த நாட்டியக்காரனின் அளவு போன்றே பலவிதமான உருவம் கொண்டுள்ள நாட்டியக்காரியாக மாறுகிறாய் (பெரிதும் சிறிதுமாக) என்று எண்ணுகிறேன்.

800. மாநே பரம் ஸமாநே ப்ரத்யக்ஷேண ஆகமே நாபி
ஹரி சரணஸ்ய தவாபி து வைஷம்யம் ரக்ஷ்ய ரக்ஷகத்வாப்யாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்கும் உனக்கும் பார்வை மற்று சாஸ்த்ரங்கள் மூலமாக அளவு மற்றும் ஞானம் ஒன்றாகவே உள்ளன. ஆயினும் அவன் திருவடியானது காப்பாற்றப்படுகின்ற வஸ்து, நீ காப்பாற்றுகின்ற வஸ்து என்ற வேறுபாடு காணப்படுகிறது.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ஸந்நிவேச பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (26. யந்த்ரிகா பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - இந்தப் பத்ததி முழுவதும் பாதுகைகளில் காணப்படும் குமிழை வர்ணிக்கிறார்.

801. உதக்ர யந்த்ரிகாம் வந்தே பாதுகாம் யந்நிவேசநாத்
உபயர்பி பதம் விஷ்ணோ: ப்ரத்யாதிஷ்ட ப்ரஸாதநம்

**பொருள்** - மேலே நீட்டியபடி உள்ள குமிழைக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை நான் வணங்குகிறேன். இப்படியாகக் குழிழைத் தனது மேற்பக்கத்தில் வைத்துள்ளதால் ஸ்ரீரங்கநாதன் திருவடிகள், "மேற்பக்கத்தில் தங்களுக்கு ஆபரணம் வேறு வேண்டாம்", என்று தள்ளியபடி உள்ளன.

802. ப்ரஸபம் ப்ரதிருத்ய கண்டகாதீந்
பவதீ சௌரி பதாம்புஜாத் அதஸ்தாத்
சரணாவநி தாரயதி அமுஷ்மிந்
உசிதச்சாயம் உபர்யபி ப்ரதீகம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளின் கீழ்பக்கத்தில் முள் போன்றவை ஏறாமல் வலிவுடன் நீ தடுத்துவிடுகிறாய். அந்தத் திருவடிகளின் மேற்புறத்தில் தகுதியான அழகிய நிழலை உண்டாக்குகின்ற குமிழ் என்ற அவயவத்தைத் தாங்கி நிற்கிறாய்.

803. முரபிந் மணி பதுகே த்வதீயாம்
அநகாம் அங்குளி யந்த்ரிகாம் அவைமி
ஸ்வயம் உந்நமிதாம் ப்ரதேசிநீம் தே
பரமம் தைவதம் ஏகம் இதி ருசந்தீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடி விரல்களுக்கு இன்பமான பிடிப்பாக உள்ள குமிழானது தானாகவே மேல்புறமாக நீண்டும், "அனைத்திற்கும் மேற்பட்ட தெய்வம் ஸ்ரீரங்கநாதனே", என்று உறுதிபடக் கூறும் ஆள்காட்டி விரல் போன்றும் உள்ளதாக நான் எண்ணுகிறேன்.


**Email:**sridharan_book3yahoo.co.in

804. ஸவததே மணிபாதுகே த்வதீயா
பதசாசாயுக யந்த்ரிகா விசித்ரா
பரமம் புருஷம் ப்ரகாசயந்தீ
ப்ரணவஸ்யேவ பரா அர்த்தமாத்ரா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் இரத்தினகற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஆச்சர்யம் ஏற்படுத்துவதாக உள்ளதும், உன் மீது உள்ளதும் ஆகிய இந்தத் திருவடிகளில் இரண்டு விரல்களுக்கும் பிடிப்பாக உள்ள குமிழ் எப்படி உள்ளது என்றால் – உயர்ந்தவனான ஸ்ரீரங்கநாதனைக் காண்பிக்கின்ற ப்ரணவ மந்த்ரத்தின் இறுதியில் உள்ள ”ம” என்ற எழுத்து போன்று (ம என்பது ஜீவாத்மாவைக் குறிக்கும்) இன்பமாக உள்ளது.

805. அநுயாத மனோரதா முராரே:
பவதீ கேளிரத ச்ரியம் ததாதி
சரணாவநி யந்த்ரிகா தவைஷா
தநுதே கூபர ஸம்பதம் புரஸ்தாத்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை அடைந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்ற எண்ணியவளாக, நீ நினைத்தபோது ஸ்ரீரங்கநாதனை அவர்களிடம் அழைத்துப் போகின்ற தேர் போன்று உள்ளாய். உனது குமிழ் என்பது அந்தத் தேரின் முன்னே காணப்படும் ஏர்க்கால் போன்ற தோற்றம் அளிக்கிறது.

806. சங்கே பவத்யாஸ் ஸுபகம் ப்ரதீகம்
ரங்கேச பாதாங்குளி ஸங்க்ரஹார்த்தம்
த்ராணாய பாதாவநி விஷ்டபாநாம்
ஆஜ்ஞாகரீம் அங்குளி முத்ரிகாம் தே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடி விரல்களுக்கு ஏற்ற பிடிப்பாக உனது குமிழ் உள்ளது. இந்தக் குமிழை - அனைத்து உலகங்களையும் காப்பாற்றும் பொருட்டு, உலகினருக்கு இடையூறு செய்பவர்களைக் கண்டு, ”இப்படிச் செய்யாதீர்கள்”, என்று கட்டளை செய்கின்ற உனது ஆள்காட்டி விரலின் முத்திரை என்றே நான் எண்ணுகிறேன்.


**Email:**sridharan_book3yahoo.co.in

807. அலங்க்ருதம் கர்ணிகயா உபரிஷ்டாத்
உதக்ரநாளம் தவ யந்த்ரிகாம்சம்
பத்மாபதே: பாதஸரோஜ லக்ஷ்ம்யா:
ப்ரத்யேமி பாதாவநி கேளிபத்மம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது குமிழின் மேற்புறம் தாமரை மலர்களின் நடுப்பாகத்தில் உள்ள கர்ணிகை என்னும் பாகத்தினால் அலங்கரிக்கப்பட்டது போன்று உள்ளது. இப்படியாக உள்ள இந்தக் குமிழைக் காணும்போது – ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கராஜனின் திருவடிகள் என்னும் தாமரை மலரில் காணப்படும் மஹாலக்ஷ்மி, தனது விளையாட்டிற்காகக் கையில் வைத்துள்ள தாமரைமலர் என்றே எண்ணுகிறேன் (திருவடியில் உள்ள மஹாலக்ஷ்மிக்காக உள்ள தாமரை மலர் என்று குமிழ்களை வர்ணிக்கிறார்)

808. உபரி விநிஹிதஸ்ய கேசவ அங்க்ரே:
உபரி பதாவநி யந்த்ரிகாத்மிகா த்வம்
இதி தவ மஹிமா லகூகரோதி
ப்ரணத ஸுரேச்வர சேகராதி ரோஹம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளின் மீது நீ குமிழ் ரூபமாக நிற்கிறாய். இதனால் உன்னை வணங்கி நிற்கின்ற தேவர்களின் க்ரீடங்களில் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் ஏறுகின்றன என்ற பெருமையை, உனது பெருமை சிறிதாக்குகிறது.

**விளக்கம்** - எது ஒன்றின் மீது வைக்கப்படுகிறதோ, அந்தப் பொருளே உயர்ந்தது, கீழே உள்ள பொருள் சற்றே தாழ்ந்தது என்பது பொதுவான உண்மை. தேவர்களின் க்ரீடங்களில் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் வைக்கப்படுவதால், அவை உயர்ந்தவையே. ஆனாலும், அந்தத் திருவடிகள் மீது குமிழ் உள்ளதால், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் சற்றே தாழ்ந்தன.

809. நித்யம் பதாவநி நிபத்தகிரீட சோபம்
பத்மாலயா பரிசிதம் பதம் உத்வஹந்த்யா:
அங்கீகரோதி ருசிம் அங்குளி யந்த்ரிகா தே
ஸாம்ராஜ்ய ஸம்பத அநுரூபம் இவ ஆதபத்ரம்


Email:sridharan_book3yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் எப்போதும் ஸ்ரீரங்கநாச்சியாரால் பிடிக்கப்பட்டபடி உள்ளது. இந்தத் திருவடிகள் உனக்குக் கிரீடம் போன்று உள்ளது. இப்படிப்பட்ட திருவடிகளைத் தாங்கும் உனது குமிழ் என்பது, நீயே சக்ரவர்த்தினி என்பதை அறிவிக்கும் குடை போன்ற அழகான தோற்றத்தை அடைகிறது.

810. ப்ரதமா கலேவ பவதீ சரணாவநி பாதி ரங்கசந்த்ரமஸ:
ச்ருங்க உந்நதிரிவ யத்ர ச்ரியம் விபாவயதி யந்த்ரிகா யோக:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னைக் காணும்போது ஸ்ரீரங்கத்தின் சந்த்ரனாகிய ஸ்ரீரங்கராஜனின் முதல் கலை போன்று உள்ளாய். இப்படியாக உள்ள அந்தக் கலையின் நுனி போன்ற அழகை உனது குமிழ் ஏற்படுத்துகிறது.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
யந்த்ரிகா பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book3yahoo.co.in

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (27. ரேகா பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - பாதுகைகளில் காணப்படும் பல கோடுகளை இங்கே கூறுகிறார்.

811. ஸூசயந்தீம் ஸ்வரேகாபி: அநாலோக்ய ஸரஸ்வதீம்
அலேகநீய ஸௌந்தர்யம் ஆச்ரயே சௌரிபாதுகாம்

**பொருள்** - எழுதத்தகாத சொற்களைத் தெரியப்படுத்துவதாகவும், எழுதி முடிக்க இயலாத அழகைக் கொண்டதாகவும் உள்ள கோடுகளைத் தன்னிடம் கொண்டதான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை நான் அடைகிறேன்.

**விளக்கம்** - வேதங்களை எழுதி வாசிக்கக் கூடாது என்பார்கள். அப்படிப்பட்ட வேதங்களே இந்தப் பாதுகையில் கோடுகளின் வடிவில் உள்ளன என்றார்.

812. மணி மௌளி நிகர்ஷணாத் ஸுரணாம்
வஹஸே காஞ்சந பாதுகே விசித்ரம்
கமலாபதி பாத பத்ம யோகாத்
அபரம் லக்ஷணம் ஆதிராஜ்ய ஸாரம்

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! தேவர்களுடைய கிரீடங்கள் உன்னை வணங்குவதற்காக அவர்கள் தலையைக் குனியும்போது, ஒன்றுடன் ஒன்று உராய்கின்றன. அப்போது அந்தக் கிரீடங்களில் உள்ள இரத்தினங்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் உன் மீது ஏற்படுத்துகின்ற கோடுகளைக் காட்டிலும் வேறுவிதமான கோடுகள் உன்னில் ஏற்படுகின்றன. இந்தப் புதிய கோடுகள் மூலம் அனைத்து உலகிற்கும் நீயே ராணியாக உள்ளாய் என்னும் அடையாளத்தை அடைகிறாய்.

813. அபிதோ மணி பாதுகே ஸ்புரந்த்யா:
தவ ரேகாவிததே ததாவிதாயா:
முரவைரி பதாரவிந்த ரூடை:
அநுகல்பாயிதம் ஆதிராஜ்ய சிஹ்நை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! தாமரை மலர் போன்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில், "இவனே அனைத்து உலகங்களுக்கும் அதிபதி", என்பதை உணர்த்தும் கோடுகள் உள்ளன. உன் மீது தேவர்களின் க்ரீடங்கள் ஏற்படுத்திய


**Email:**sridharan_book3yahoo.co.in

கோடுகளைக் காணும்போது, அவனது ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உள்ள கோடுகள் இரண்டாம்படியாகவே உள்ளன (பாதுகையில் உள்ள கோடுகள் மூலமாகவே ஸ்ரீரங்கநாதனுக்கு அதிகாரம் கிடைக்கிறது, அவனது திருவடிகளில் உள்ள கோடுகளால் அல்ல என்றார்).

814. ரேகயா விநமதாம் திவௌகஸாம்
மௌளிரத்ந மகரீ முக உத்தயா
பாதுகே வஹஸி நூநம் அத்புதம்
சௌரிபாத பரிபோக லக்ஷணம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை வணங்கி நிற்கும் தேவர்களின் க்ரீடங்களில் காணப்படும் இரத்தினங்களால் செய்யப்பட்ட மீனின் முகத்தினால் உன் மீது கோடுகள் ஏற்படுகின்றன. இதனைக் காணும்போது நீ ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடன் சேர்ந்து அனுபவித்த இன்பத்தின்போது அந்த அடையாளத்தை ஏற்றாய் போலும்.

**விளக்கம்** - தேவர்களின் தலையில் உள்ள க்ரீடங்களின் மீன் வடிவ நகைகள் உண்டு. அவை பாதுகைகள் மீது மீன் வடிவத்தில் அச்சு உண்டாக்குகின்றன. ஸ்ரீரங்கநாதனின் திருவடியில் மகர உருவம் உண்டு. அந்தத் திருவடியை நாயகன் என்றும், பாதுகையை நாயகி என்றும் கொண்டால், இவர்கள் சேர்ந்துள்ளபோது திருவடியின் அரவணைப்பு காரணமாக அந்த மகர வடிவம் பாதுகையில் வந்ததோ என்கிறார். உண்மையில் அவை தேவர்களின் க்ரீடங்களால் வந்தவை ஆகும்.

815. த்ரிதச மகுட ரத்ந உல்லேக ரேகா: உபதேசாத்
பரிமணயஸி பும்ஸாம் பாதுகே மூர்த்நி லக்நா
நரகமதந ஸேவாஸம்பதம் ஸாதயித்ரீ
நியதி விலகிதாநாம் நிஷ்க்ருதிம் துர்லிபீநாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நரகன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதையே செல்வமாக உண்டாக்கும் விதமாக, அனைத்து உயிர்களின் தலைகளில் நீ அமர்கிறாய். இதன் மூலம் நீ செய்வது என்னவென்றால் – தேவர்களின் க்ரீடங்களில் உள்ள இரத்தினங்கள் மூலம் உன்னில் உண்டாக்கிய கோடுகள் கொண்டு, மக்களுடைய விதியின் மூலம் அவர்கள் தலையில் எழுதப்பட்ட கெட்ட எழுத்துக்களை அழித்தல் என்பதைச் செய்கிறாய் (இதனால் கைங்கர்யச் செல்வம் ஏற்படுகிறது).

816. பதகமல தல அந்த: ஸம்ச்ரிதாநி ஆதபத்ர
த்வஜ ஸரஸிஜ முக்யாநி ஐச்வரீலக்ஷணாநி
அவகமயஸி சௌரே: பாதுகே மாத்ருசாநாம்
உபரி பரிணதை: ஸ்வை: தேவி ரேகாவிசேஷை:

**பொருள் -** பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில், "இவனே ஸர்வேச்வரன்", என்பதை உணர்த்தும் விதமாக குடை, தாமரை, கொடி போன்ற அடையாளங்கள் உள்ளன. இவற்றை அறியாத என்னைப் போன்றவர்களுக்காக இவற்றை உனது கோடுகளாகக் கொண்டு அறிவிக்கிறாய் போலும்.

817. ஸ்நாதா பதாவநி சிரம் பரிபுஜ்ய முக்தா
பாதேந ரங்கந்ருபதே: சுபலக்ஷணேந
ரேகாந்தரை: நவநவை: உபசோபஸே த்வம்
ஸம்ஸ்கார சந்தந விலேபந பங்க லக்நை:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! சுபமான பல அடையாளங்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இருந்து, ஸஞ்சாரம் முடிந்தவுடன் உன்னைக் கழற்றி, உன்னை நீராட்டுகின்றனர். உனக்குக் குளிர்ச்சியும் வாசனையும் உண்டாகும் விதமாக சந்தனம் பூசுகின்றபோது, அந்த சந்தனரேகைகள் புதிதாக வேறு கோடுகள் உருவாக்கியபடி நீ உள்ளாய்.

818. பக்த்யா முஹு: ப்ரணமதாம் த்ரிதசேச்வராணாம்
கோடீர கோடிகஷணாத் உபஜாயமாநை:
ஆபாதி சௌரி சரணாத் அதிகாநுபாவா
ரேகாசதை: தவ பதாவநி காபி ரேகா

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பக்தி காரணமாக தேவர்கள் உன்னை அடிக்கடி வணங்குகின்றனர். இதனால், அந்த க்ரீட முனைகளால் உன் மீது நூற்றுக்கணக்கான கோடுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காட்டிலும் அதிகமான கோடுகள் உனக்கு உள்ளது என்னும் உனது பெருமை விளங்குகிறது.

819. பாதாவநி ப்ரதிபதம் பரமஸ்ய பும்ஸ:
பாதாரவிந்த பரிபோக விசேஷயோக்யா
ஸ்வாபாவிகாந் ஸுபகபக்தி விசேஷ த்ருச்யாந்
ரேகாத்மகாந் வஹஸி பத்ரலதா விசேஷாத்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தாமரை மலர் போன்ற திருவடிகளின் அனுபவத்திற்கு ஏற்றவளாக நீ உள்ளாய். இதனால் இயற்கையாகவே உன் மீது அமைந்துள்ள ரேகை உருவத்தில் இலை, கொடி போன்றவற்றை நீ தரிக்கிறாய் போலும்.

**விளக்கம் -** நாயகன் நாயகியுடன் இன்பமாக இருக்கும்போது நாயகியின் கன்னம், தோள் போன்றவற்றில் மீன், இலை போன்ற வடிவங்களை நாயகன் வரைவது இயல்பாகும். இதற்கு மகரிகாபத்திரம் என்று பெயர். நாயகனான திருவடியுடன் இணைந்து நிற்கும் காலத்தில், இதே உருவங்கள் பாதுகையில் உள்ளன என்கிறார்.

820. ரேகா அபதேசத: தவம்
ப்ரசமயிதும் ப்ரளய விப்லவ ஆசங்காம்
வஹஸி மதுஜித் பதாவநி
மந்யே நிகமஸ்ய மாத்ருகா லேக்யம்

**பொருள் -** மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ப்ரளய காலத்தில் வேதங்கள் அழித்துவிடுமோ என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம். இதனால் அந்த சந்தேகத்தை நீக்கும் விதமாக உன்னில் காணப்படும் கோடுகள் என்பதன் மூலம், வேதங்களின் ப்ரதியை நீ வைத்துக் கொண்டுள்ளாய் என்பதை உணர்த்துகிறாய் போலும்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ரேகா பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (29. ப்ரகீர்ண பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - இதுவரை கூறப்பட்ட பத்ததிகள் ஒவ்வொன்றிலும் குறிப்பிட்ட விஷயங்கள் தொகுத்துக் கூறப்பட்டன. இந்தப் பத்ததியில் பல விஷயங்கள் குறித்துக் கூறப்பட உள்ளன. பொருள்களைக் கலந்து வைப்பதற்கு ப்ரகீர்ணம் என்று பெயர்.

831. விதௌ ப்ரவ்ருத்தே யத் த்ரவ்யம் குணஸம்ஸ்கார நாமபி:
ச்ரேயஸ்ஸாதநம் ஆம்நாதம் தத் பதத்ரம் ததாஸ்து மே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளின் தொடர்பு, அடியார்களுக்குத் தூய்மையை ஏற்படுத்துவது போன்ற குணங்களுடன் கூடியவள்; தங்கக்கவசம், இரத்தினக்கற்கள் ஆகிய மேன்மைகளுடன் கூடியவள்; பாதுகை, சடகோபன் என்று பல திருநாமங்களுடன் கூடியவள்; ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தின்போது காணப்படும் உயர்ந்த வஸ்து என்று கூறப்படுபவள் - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகை எனக்கு உயர்ந்த புருஷார்த்தத்தை அளிக்கட்டும்.

832. மதுர ஸ்மித ரம்ய மௌக்திகஸ்ரீ:
விசஸி வ்யஞ்ஜித மஞ்ஜுள ப்ரணாதா
ஸஹ ரங்கந்ருபேண வாஸகேஹம்
தநு மத்யா மணிபாதுகே த்வமேகா

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! இனிமையான சிரிப்பு போன்ற அழகான முத்துக்களின் ஒளியை உடையவளாகவும், இனிமையான நாதங்களை ஏற்படுத்துபவளாகவும், சிறிய நடுப்பகுதியைக் (இடுப்பு போன்று) கொண்டவளாகவும் உள்ள நீ, ஸ்ரீரங்கராஜனுடன் தனியாக அவனுடைய அந்தப்புறத்திற்குச் செல்கிறாய்.

833. சுபசப்த விசேஷ ஸம்ச்ரிதாபி:
பவதீ சௌரி பதாவநி க்ரியாபி:
அநுதிஷ்டதி நூநம் ஆச்ரிதாநாம்
அகில உபத்ரவ சாந்திகம் நவீநம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தின்போது சுபமான இனியநாதங்களை மந்த்ரங்கள் போன்று ஒலிக்கிறாய். இப்படிப்பட்ட ஸஞ்சாரம் என்பதன் மூலம் நீ, உன்னை அடைந்தவர்களுக்குப் புதிதுபுதிதாக ஏற்படக்கூடிய உபத்ரவங்களை நீக்கும் செயல்களைச் செய்கிறாய் என்பது நிச்சயம்.

834. மணிபி: மதுவைரி பாதரக்ஷே
பவதீ விக்ரமணே ப்ரவர்த்தமாநா
யுகபத் பவதாம் யுகாந்தகாலே
திவி லக்ஷ்மீம் விதததே திவாகராணாம்

**பொருள்** - மது என்ற அசுரனின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் த்ரிவிக்ரமனாக நின்று இந்த உலகங்களை அளக்கும்போது, நீயும் பெரிதாக வளர்ந்தாய். அப்போது உன்னில் பதிக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரளயகாலத்தில் ஒரே நேரத்தில் ஏற்படுகிற பல சூரியன்களின் தோற்றத்தை உண்டாக்கினாய்.

835. மஞ்ஜுஸ்வநாம் மணி மயூக கலாபநீம் த்வாம்
த்ருஷ்ட்வா கபர்த ஸவிதே விநிவேச்யமாநாம்
கூடீபவந்தி கருடத்வஜ பாதரக்ஷே
பூத்காரவந்தி புரவைரி விபூஷணாநி

**பொருள்** - கருடனைக் கொடியாக உடைய ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! த்ரிபுரன் என்ற அசுரனுக்கு விரோதியான சிவனின் தலைக்கு அருகில் நீ செல்கிறாய். அப்போது உன்னில் பதிக்கப்பட்ட பலவிதமான இரத்தினங்களின் ஒளியானது, மயில்தோகை போன்று உள்ளதைக் கண்டு, சிவனின் தலையில் உள்ள பாம்புகள் சீறிப்பாய்ந்து ஒளிந்து கொள்கின்றன (இங்கு பாம்புகளுக்குப் பகையான கருடனைக் கூறும் நயம் காண்க).

836. மத்யே பரிஸ்புரித நிர்மல சந்த்ர தாரா
ப்ராந்தேஷு ரத்நநிகரேண விசித்ரவர்ணா
புஷ்ணாஸி ரங்க ந்ருபதே: மணிபாதுகே த்வம்
சக்ஷுர் வசீகரண யந்த்ர விசேஷ சங்காம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாஜனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய நடுப்பகுதியில் ப்ரகாசமானதும், தோஷங்கள் அற்றதும் ஆகிய முத்துக்கள், தங்கம் போன்றவை உள்ளன. இதனைச் சுற்றி ஓரங்களில் பலவிதமான இரத்தினங்கள் மூலமாக வெண்மை, சிவப்பு போன்ற பலவிதமான நிறங்கள் எழுத்து போன்று உள்ளன. இப்படியாக உன்னைக் காணும்போது, காண்பவர் கண்களை வசப்படுத்தும் யந்த்ரமாக நீ உள்ளாயோ என்று ஐயத்தை உண்டாக்குகிறது.

837. பாதேந ரங்கந்ருபதே: பரிபுஜ்யமாநா
முக்தாபல ப்ரகடித ச்ரம வாரிபிந்து:
உத்கண்டகா மணிமயூக சதை: உதக்ரை:
ஸீத்காரிணீவ சரணாவநி சிஞ்ஜிதை: த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளால் அனுபவிக்கப்பட்டபடி நீ உள்ளாய். இதனால் உண்டாகும் வியர்வைத் துளிகளே முத்துக்கள் போன்று உள்ளன. மேலும் உனது இரத்தினக்கற்களின் ஒளியானது மயிர்க்கூச்சல் போண்று உள்ளது. உன்னுடைய நாதங்கள் மூலம் ஒருவனுடன் சேர்ந்த பெண் போன்று சப்தம் (இந்த ஓசைக்கு ஸீத்காரம் என்று பெயர்) கொண்டவளாக உள்ளாய்.

838. தூர ப்ரஸாரித கரா நிநதை: மணீநாம்
ஆயாதி தைத்ய ரிபு: இதி அஸக்ருத் ப்ருவாணா
தைத்யேச்வராந் அபிமுகாந் ஜநித அநுகம்பா
மந்யே நிவாரயஸி மாதவ பாதுகே த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரைத் தரித்த பெரியபெருமாளின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனை எதிர்த்து வருகின்ற அசுரர்களின் தலைவர்களை மிகுந்த கருணையுடன் நீ காண்கிறாய். உனது இரத்தினக்கற்களின் ஒளியைக் கைகள் போன்று நீட்டியும், உனது இரத்தினக்கற்களின் நாதம் மூலம் ஸ்ரீரங்கநாதன் வருவதை உணர்த்தியும் அவர்களைத் தடுக்கிறாய் போலும்.

839. அச்சேத்ய ரச்மி நியத க்ரம ரத்நதுர்யா
நிஷ்கம்பகூபர நிபம் தததீ ப்ரதீகம்
க்ரீடாகதேஷு மதுஜித் பதபத்ம லக்ஷ்ம்யா:
கர்ணீரத: த்வம் அஸி காஞ்சந பாதரக்ஷே

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! சற்றும் குறையாத ஒளி வீசுகின்ற, வரிசையாகப் பதிக்கப்பட்டுள்ள இரத்தினக்கற்களின் ஒளியானது அறுகாத கடிவாளங்கள் போன்று உள்ளன. இந்தக் கயிறுகளால் கட்டப்பட்ட ஒழுங்கான நடையுடன் கூடிய குதிரைகளாக அந்த இரத்தினக் கற்களே உள்ளன. இந்தக் குதிரைகள் கட்டப்பட்ட தேரின் முன்பாகமாக உனது குமிழ்கள் உள்ளன. இப்படியாக ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சார காலங்களில் அவனது திருவடியில் உள்ள மஹாலக்ஷ்மிக்கு ஏற்ற சிறு தேராக நீ உள்ளாய்.

840. மஞ்ஜுஸ்வநா மரதகோபல மேசக அங்கீ
சோணாச்ம துண்ட ருசிரா மணிபாதுகே த்வம்
பத்மாவிஹார ரஸிகஸ்ய பரஸ்ய யூந:
பர்யாயதாம் பஜஸி பஞ்ஜர சாரிகாணாம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! மரகதக்கற்களால் பச்சை நிறம் கொண்டவையாக, பத்மராகக் கற்களால் சிவந்த மூக்கை உடையவையாக, உனது நாதங்கள் மூலம் இனிய மழலைப் பேச்சு எழுப்பியபடி உள்ள கிளிகளின் தோற்றத்தை நீ அடைகிறாய். இப்படியாக ஸ்ரீரங்கநாச்சியாருடன் விளையாடி மகிழ்வதில் விருப்பம் கொண்ட உயர்ந்த புருஷனான ஸ்ரீரங்கநாதனின் அருகில் உள்ள கிளிகளின் ஒற்றுமையை நீ அடைகிறாய்.

841. சோணோபலை: சரண ரக்ஷிணி ஸம்ச்ரிதேஷு
ச்சாயாத்மநா மரதகேஷு தவ அவகாட:
அந்வேதி சௌரி: அபித: பலபங்க்தி சோபிநி
ஆத்மாந மேவ சயிதம் வடபத்ர மத்யே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை காப்பாற்றும் பாதுகையே! பத்மராகக்கற்களால் சூழப்பெற்ற உனது பச்சைக்கற்களின் பிரதிபிம்பமாக ஸ்ரீரங்கநாதன் புலப்படுகிறான். அப்போது அவன் அனைத்தும் பக்கங்களிலும் பவழ வரிசைகளால் சூழப்பட்டு ஆலிலையின் நடுவே சயனித்திருந்த திருக்கோலத்தை ஒத்த, தன்னையே நிகர்த்தபடி உள்ளான்.

842. ஸ்பீதம் பதாவநி தவ ஸ்நபந ஆர்த்ர மூர்த்தே:
ஆஸாகரம் ததம் அபூத் மணிரச்மி ஜாலம்
லீலோசிதம் ரகுஸுதஸ்ய சரவ்யம் ஆஸந்
யாதூநி யஸ்ய வலயேந விவேஷ்டிதாநி

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! திருமஞ்சனம் மூலம் நனைந்துள்ள உனது இரத்தினக்கற்களின் ஒளியானது ஸமுத்திரம் வரை பரவி நின்றது. அந்த ஒளியானது ஒரு வலை போன்று காணப்பட்டது. அந்த வலையில் சூழப்பட்ட அரக்கர்கள் அனைவரும் இராமனின் பாணங்களுக்கு விளையாட்டு போன்று இலக்கானார்கள்.

843. ரத்ந அம்சுபி: தவ ததா மணி பாதரக்ஷே
ஸம்ரஜ்யமாந வபுஷாம் ரஜநீமுகேஷு
ஆகஸ்மி காகதம் அதர்சி மஹௌஷதித்வம்
ஸாகேத பத்தந ஸமீபருஹாம் த்ருமாணாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! நீ அயோத்தியின் சக்ரவர்த்தினியாகப் பட்டம் ஏற்று, அந்த நாட்டைக் காப்பாற்றிய காலத்தில், உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளி காரணமாக பளபளப்பான உருவம் பெற்றதாக அயோத்திக்கு அருகில் இருந்த மரங்கள் காணப்பட்டன. இதனைக் காணும்போது, இரவுப்பொழுதில் ஜ்வலிக்கின்ற ஹௌஷதி என்ற தன்மை அவற்றுக்குத் திடீரென ஏற்பட்டதாகத் தோன்றின.

844. ராமே வநம் தசரதே ச திவம் ப்ரயாதே
நிர்தூத விச்வ திமிரா ஸஹஸா பபூவ
பூயிஷ்ட ரத்ந கிரணா பவதி ரகூணாம்
பூய: ப்ரதாப தபந உதய பூர்வஸந்த்யா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமன் கானகத்திற்கும், தசரதன் விண்ணிற்கும் சென்றபோது, இந்த உலகம் முழுவதும் இருண்டது. அப்போது உனது இரத்தினக் கற்களின் ஒளி மூலமாக, நீ மறுபடியும் ரகு வம்சத்து அரசர்களின் பராக்கிரமமாகிற சூரியன் உதிப்பதற்கு ஏற்ற காலை வேளையாக நின்றாய்.

845. ப்ரீதேந தேவி விபுநா ப்ரதிபாதநீயாம்
பாதாவநி ப்ரதிபத உதித மஞ்ஜுநாதாம்
வித்யாம் விதுர்பகவத: ப்ரதிபாதநார்ஹாம்
பாராயணாகம பயோநிதி பாரகாஸ்த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாதனால் மிகவும் மகிழ்வுடன் அடியார்களுக்கு அருளத் தக்கவளாகவும், ஒவ்வொரு அடிவைப்பிலும் இனிமையான வேத நாதத்துடன் கூடியவளாகவும், ஸ்ரீரங்கநாதனை எங்களுக்கு அளிக்கவல்லவளாகவும் நீ உள்ளாய். இப்படிப்பட்ட உன்னை வேத ஸமுத்திரங்களின் கரை கண்டவர்கள், வேதமாகவே அறிகின்றனர்.

846. முக்தாம்சு கேஸரவதீ ஸ்திரவஜ்ர தம்ஷ்ட்ரா
ப்ரஹ்லாத ஸம்பத் அநுரூப ஹிரண்யபேதா
மூர்த்தி: ச்ரியோ பவஸி மாதவ பதரக்ஷே
நாதஸ்ய நூநம் உசிதா நரஸிம்ஹ மூர்த்தே:

**பொருள்** - ஸ்ரீரங்கநாச்சியாரைத் தரித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் ஒளியானது சிங்கத்தின் பிடரிமுடி போன்று உள்ளது. உன்னில் பதிக்கப்பட்ட உறுதியான வைரங்கள், கோரைப்பற்கள் போன்று உள்ளன. உன்னில் உள்ள தங்கமயமான தன்மையானது, ப்ரஹ்லாதனின் பக்தி என்னும் செல்வமாக உள்ளது. இப்படியாக நரஸிம்ஹனாக நின்ற ஸ்ரீரங்கநாதனுக்கு ஏற்ற பிராட்டி போன்று உனது திருமேனியைக் கொண்டவளாக உள்ளாய் போலும் (பாதுகையைப் பெண்சிங்கம் என்கிறார்).

847. ஸம்பாவயந்தி கவயச் சதுர ப்ரசாராம்
மஞ்ஜுஸ்வநாம் மஹித மௌக்திக பத்ரளா அங்கீம்
ஸ்வாதீந ஸர்வபுவநாம் மணிபாதுகே த்வாம்
ரங்காதிராஜ பத பங்கஜ ராஜஹம்ஸீம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! நீ சீரிய நடையைக் கொண்டவளாகவும், இனிய நாதம் கொண்டவளாகவும், உயர்ந்த முத்துக்களால் வெண்மையான சிறகுகள் உடையவள் போன்றும், அனைத்து நீர் மற்றும் உலகங்களை வசப்படுத்தியவளாகவும் உள்ளாய். இப்படியாக உள்ள உன்னைக் காணும் நீரில் வாழ்கின்ற பறவைகள் அனைத்தும் உன்னை, ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரையில் எப்போதும் விளையாடுகின்ற பெண் ராஜஹம்ஸம் என்றே எண்ணுகின்றன.

848. முக்தாமயூக ருசிராம் மணிபாதரக்ஷே
மஞ்ஜுஸ்வநாம் மணிபி: ஆஹித வர்ணவர்க்காம்
மந்யே முகுந்த பதபத்ம மதுவ்ரதீநாம்
அந்யாம் அக்ருத்ரிமகிராம் அதிதேவதாம் த்வாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னில் பதிக்கப்பட்ட முத்துக்களின் ஒளியால் மிகவும் அழகாக உள்ளாய்; இனிமையான நாதங்கள் கொண்டவளாக உள்ளாய்; இரத்தினங்களால் உண்டாக்கப்படும் கருப்பு, சிகப்பு முதலான பல நிறங்களைக் கொண்டவளாக உள்ளாய். இப்படியாக உள்ள உன்னைக் காணும்போது - ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகளை எப்போதும்

மொய்த்தபடி உள்ள பெண் வண்டுகள் போன்றதும், யாராலும் செய்யப்படாததாக உள்ளதும் ஆகிய ச்ருதிகளின் அதிஷ்டான தேவதை என்று எண்ணுகிறேன்.

849. ஆஸாத்ய கேகயஸுதா வரதாநமூலம்
காலம் ப்ரதோஷம் அநிரீக்ஷ்ய ரமாஸஹாயம்
மஞ்ஜுப்ரணாத ரஹிதா மணிபாதரக்ஷே
மௌநவ்ரதம் கிமபி நூநம் அவர்த்தய: த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! கைகேயிக்கு வரம் அளித்த காரணத்தினால் சீதையின் துணைவனான இராமனைக் காண இயலாமல் நீ இருந்தாய். அந்த நேரத்தில் உனது இனிமையான நாதங்களை எழுப்பாமல், மௌனமாக அமர்ந்துவிட்டாய். இப்படியாக எம்பெருமானை வணங்கக்கூடாது என்ற விதி கொண்ட ப்ரதோஷ காலத்தின் மௌன விரதம் பூண்டாய் போலும்.

850. வைடூர்ய ரம்யஸலிலா மஹிதா மருத்பி:
சாயாவதீ மரதகோபல ரச்மிஜாலை:
அச்ராந்தமோஹ பதவீ பதிகஸ்ய ஜந்தோ:
விச்ராந்தி பூமி இவ சௌரிபாதாவநி த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது வைடூர்யக் கற்கள் தெளிவான நீரோடை போன்று உள்ளன; தேவர்கள் உன்னைக் கொண்டாடுவது என்னும் செயல் குளிர்ந்த காற்று போன்று உள்ளது; பச்சை நிற இரத்தினக்கற்களின் ஒளியானது அழகான மரநிழல் போன்று உள்ளது. இப்படியாக உள்ள நீ – சற்றும் இளைப்பாறாமல், உலக விஷயங்களில் மயங்குவது என்ற வழியில் நடக்கின்ற மனிதர்களின் சிரமத்தை நீக்கும் இடமாக உள்ளாய்.

851. ஆத்யோ ரகுக்ஷிதிபுஜாம் அபிஷேக தீப்தை:
ஆப்யாயித: தவ பதாவநி ரச்மிஜாலை:
மந்தீசகார தபநோ வ்யபநீத பீதி:
மந்தோதரீ வதந சந்த்ரமஸோ மயூகாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனக்குச் செய்யப்பட்ட பட்டாபிஷேகத்தால் உனது இரத்தினக்கற்களின் ஒளியானது வெகுவாக வீசியது. அந்த ஒளியால் ரகுகுலத்தின் முதல்வனாகிய சூரியன் மேலும் வலுவடைந்தான். இதனால் அவன் (இராவணனிடம்

கொண்டிருந்த பயம் நீங்கி) இராவணனின் பத்னியாகிய மண்டோதரியின் முகம் என்ற சந்த்ரனின் ஒளி மங்கும்படிச் செய்தான்.

852. மாந்யா ஸமஸ்த ஜகதாம் மணிபங்கலீலா
பாதே நிஸர்க கடிதா மணிபாதுகே த்வம்
அந்த: புரேஷு லளிதாநி கதாகதாநி
ச்சாயேவ ரங்கந்ருபதே: அநுவர்த்தஸே த்வம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! அனைத்து உலகங்களாலும் கொண்டாடத்தக்கவளாக உள்ள நீ, உனது இந்த்ரநீலக் கற்களின் ஒளியால் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளில் நிழல் போன்று சேர்ந்துள்ளாய். இப்படியாக நீ ஸ்ரீரங்கநாதனுடன் அவனது அந்தப்புரங்களுக்கு வருவதும் போவதுமாக, அவன் நிழலாக நின்று அனுஸரிக்கிறாய்.

853. ரங்காதி ராஜபதபங்கஜம் ஆச்ரயந்தீ
ஹைமீ ஸ்வயம் பரிகதா ஹரி நீலரத்நை:
ஸம்பாவ்யஸே ஸுக்ருதிபி: மணிபாதுகே தவம்
ஸாமாந்ய மூர்த்தி: இவ ஸிந்து ஸுதா தரண்யோ:

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை எப்போதும் பற்றியவளாகவும், தங்கமயமாக இந்த்ரநீலக் கற்களால் இழைக்கப்பட்டவளாகவும் நீ உள்ளாய். ஆக நீ திருப்பாற்கடலில் அவதரித்த மஹாலக்ஷ்மி என்றும், பூமிபிராட்டி என்றும் புண்ணியவான்களால் எண்ணப்படுகிறாய் (தங்க நிறம் = மஹாலக்ஷ்மி, இந்த்ரநீலம் = பூதேவி).

854. அப்யர்ச்சிதா ஸுமநஸாம் நிவஹை: அஜஸ்ரம்
முக்தா அருணோபல நக அங்குளி பல்லவஸ்ரீ:
ச்ரேயஸ்கரீம் முரபித: சரணத்வயி இவ
கந்திம் ஸமாச்ரயஸி காஞ்சந பாதுகே த்வம்

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! நீ எப்போதும் தேவர்களால் மலர்கள் தூவி பூஜிக்கப்பட்டபடி உள்ளாய். உனது முத்துக்கள் ஸ்ரீரங்கநாதனின் திருவடி நகங்கள் போன்று உள்ளன. உனது சிகப்புக்கற்கள் அவனது தளிர் போன்ற திருவடி விரல்கள்

போன்று உள்ளன. இப்படியாக நீ ஸ்ரீரங்கநாதனின் இணைந்த திருவடிகளின் ஐச்வர்யத்தைப் பெற்றவளாக, அதன் மேன்மையைப் பெற்றவளாக உள்ளாய்.

855. நிர்ம்ருஷ்ட காத்ரருசிரா மணிபாதுகே த்வம்
ஸ்நாதா அநுலேப ஸுரபி: நவமால்ய சித்ரா
ப்ராப்தே விஹாரஸமயே பஜஸே முராரே:
பாதாரவிந்த பரிபோகம் அநந்யலப்யம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! நன்றாக நீராட்டப்பட்டு துடைத்துவிடப்பட்டு, மிகவும் அழகான திருமேனியுடன் காணப்படுபவளாக உள்ளாய். சந்தனப் பூச்சுடன் வாசனை நிறைந்தவனாகவும், புதிய மாலைகள் சூட்டப்பட்டவளாகவும் உள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சார நேரத்தில், மற்ற யாராலும் பெற இயலாத ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளுடன் ஏற்படும் சேர்க்கை என்ற உயர்ந்த இன்பத்தைப் பெறுகிறாய்.

856. நாதே பதாவநி ததா தவ ஸந்நிவேசே
நிர்வேசந க்ரமம் அஸஹ்யம் அபாசிகீர்ஷு:
யைரேவ லோசந சதை: அபிவீக்ஷதே த்வாம்
தைரேவ பந்நகபதி: ச்ருதிமாந் பபூவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய இனிமையான நாதம், மிகவும் அழகான திருமேனி ஆகிய இரண்டையும் ஒன்றுக்குப்பின் மற்றொன்றை அனுபவிப்பது என்ற வரிசை காலதாமதத்தை ஆதிசேஷனால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. ஆகையால் இவை இரண்டையும் ஒரே நேரத்தில் அனுபவிக்க என்னிய பாம்புகளின் அரசனான ஆதிசேஷன் செய்தது என்னவென்றால் – நூற்றுக்கணக்கான எந்தக் கண்களால் உன்னைக் கண்டு அனுபவிக்கிறானோ அந்தக் கண்களே காதுகளாகவும் இருக்கும்படியாக நின்றான் போலும் (பாம்புகளுக்குச் செவி இல்லை).

857. பாதாவநி ஸ்புட மயூக ஸஹஸ்ர த்ருச்யா
விஷ்ணோ: பதேந பவதீ விஹிதப்ரசாரா
த்வத் பக்தி யந்த்ரித ஜந ப்ரதமஸ்ய சம்போ:
வைகர்தநீம் அநுகரோதி விஹாரமூர்த்திம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னிடத்தில் வெளிப்படும் ஆயிரக்கணக்கான கிரணங்களின் ஒளியால், பார்ப்பதற்கு மிகவும் அழகாக உள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளால் எங்கும் ஸஞ்சாரம் செய்கிறாய். உன்னிடம் உள்ள பக்தியால் பலர் ஆனந்தம் அடைந்து உன்னிடம் கட்டப்பட்டபடி உள்ளனர். அவர்களுள் முதன்மையாக உள்ள சிவனின் சூரியன் எனப்படும் சரீரத்தை நீ எடுத்து உள்ளாய்.

858. ராஜ்யே வநே அபி ரகுவீர பத உசிதாயா:
ஸம்ஸ்ம்ருத்ய கௌதமவதூ பரிரக்ஷணம் தே
மந்யே ஸமாஹித தியோ மணிபாதுகே த்வாம்
மூர்த்நா பஜந்தி அநுதிநம் முனிதர்மதாரா:

**பொருள் -** இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்ட பாதுகையே! அயோத்தியிலும், கானகத்திலும் இராமனின் திருவடிக்கும் பட்டத்திற்கும் ஏற்றவளாக நீ உள்ளாய். உன்னால் செய்யப்பட்ட அகலிகை ரக்ஷணம் (கௌதம முனிவரின் பத்தினியாகிய அகலிகையைக் காப்பாற்றியது) என்பதை முனிவர்களின் பத்தினிகள் எப்போதும் நினைத்தபடி உள்ளனர். இதனால் தங்கள் மனதில் வேறு எதனையும் எண்ணாமல், உன்னை அன்றாடம் தங்கள் தலையில் ஏற்று வணங்கிறார்கள்.

859. த்வாம் ஆச்ரிதோ மணிமயூக ஸஹஸ்ர த்ருச்யாம்
த்வத் சிஞ்ஜிதேந ஸஹ ரங்கபதி: ஸமுத்யந்
ஆசங்க்யதே ஸுமதிபி: மணிபாதரக்ஷே
வித்யாஸக: ஸவித்ரு மண்டல மத்யவர்த்தீ

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஆயிரக்கணக்கான கிரணங்களுடன் விளங்கும் உன்னை ஸ்ரீரங்கநாதன் தனது ஸஞ்சார காலத்தில் அடைகிறான். உன்னுடைய இனிமையான நாதங்களுடன் அவன் புறப்படுகிறான். இப்படியாக உள்ள ஸ்ரீரங்கநாதன், புத்திமான்களால் மூன்று வேதங்களுடன் கூடிய சூரிய மண்டலத்தின் நடுவில் உள்ள சூரியனாகவே எண்ணப்படுகிறான்.

860. ரத்நாச்ரிதை: ஹரிபதம் மணிபாதுகே த்வம்
ஸ்ப்ருஷ்ட்வா கரை: ச்ருதி ரஸாயந மஞ்ஜுநாதா
தத்வம் தத் ஏதத் இதி போதயஸீவ ஸம்யக்
வேதாந் ப்ரதாரிதவதோ விவிதாந் குத்ருஷ்டீந்


Email:sridharan_book3yahoo.co.in

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய இரத்தினக்கற்களைச் சார்ந்துள்ள ஒளி என்னும் கைகள் கொண்டு ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தொட்டு வணங்குகிறாய். செவிகளுக்கு இன்பம் உண்டாக்கும் விதமாக நாதங்கள் கொண்டுள்ளாய். வேதங்களைத் தவறாகக் கூறும் பலவிதமான வாதங்களை வைக்கின்ற வாதிகளைக் கண்டித்து, "வேதங்கள் கூறும் உண்மையான பொருள் இவனே", என்று ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தொட்டு உணர்த்துகிறாய் போலும்.

861. ஆனந்தஸூ: ப்ரணயிநாம் அநகப்ரஸாதா
ரங்காதிராஜ பதரக்ஷிணி ரத்நபாஸா
ந்யஸ்தே முஹு: நிஜபரே ஸ்திரதாம் பஜந்த்யா:
வர்ணாம்சுகம் விதரஸீவ வஸுந்தராயா:

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னை அடைந்தவர்களுக்கு மிகுந்த ஆனந்தம் அளிக்கிறாய். எந்தவிதமான காரணமும் இன்றி இயல்பாகவே அனைவருக்கும் அருளுகிறாய். இந்தப் பூமியின் பாரம் உன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது, உறுதியுடன் நின்ற பூமிக்கு உனது இரத்தினக்கற்களின் ஒளி மூலமாக (த்ரௌபதிக்கு வஸ்த்ரம் அளித்தது போன்று), பல நிறங்கள் கொண்ட வஸ்த்ரங்களை அளிக்கிறாய் போலும்.

862. த்வம் சித்ரபாநு அஸி ரத்ந விசேஷ யோகாத்
பூம்நா நிஜேந பரிபுஷ்யஸி பாவகத்வம்
ஸ்வேநைவ சௌரி சரணாவநி சந்த்ரரூபா
தேஜஸ் த்ரயீவ மிளிதாஸி தம: அபஹா ந:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பலவிதமான இரத்தினக்கற்கள் உன்னில் பதிக்கப்பட்டுள்ளதால் நீ வியப்பான பல வர்ணங்களுடன் கூடிய ஒளியைக் கொண்டு சூரியன் போன்று உள்ளாய். உன்னுடைய இயற்கையான தன்மை மூலம் மற்றவர்களைத் தூய்மைப்படுத்துவதால், அக்னி போன்று உள்ளாய். தங்கமயமான சந்த்ரனாகவும் உள்ளாய். இப்படியாக நீ எங்களுடைய துன்பம் என்ற இருளை நீக்கவல்ல மூன்று ஒளியாக உள்ளாய்.

863. ப்ரௌட ப்ரவாள ருசிரா புவந ஏகவந்த்யா
ரங்காதிராஜ சரணாவநி ரம்ய சந்த்ரா
ஸம்பிந்ந மௌக்திக ருசி: ஸததம் ப்ரஜாநாம்
தாபாத்யயம் திசஸி தாரகிதேவ ஸந்த்யா

**பொருள் -** ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய பவழங்கள் மூலம் இளம் துளிர் போன்ற அழகாகச் சிவந்து காணப்படுகிறாய். அனைத்து உலகங்களாலும் வணங்கப்பட்டபடி உள்ளாய். அழகான தங்கத்தைக் (சந்த்ரனை) கொண்டுள்ளாய். உயர்ந்த முத்துக்களின் ஒளியுடன் கூடியுள்ளாய். இப்படியாக உள்ள நீ நக்ஷத்ரங்களைக் கொண்டதான ஸந்த்யா காலம் போன்று மக்களுக்கு எப்போதும் ஸம்ஸாரத்தில் உள்ள துன்பங்கள் நீக்கி, சாந்தியை அளிக்கிறாய்.

864. ரங்கேச்வரஸ்ய புரதோ மணிபாதுகே த்வம்
ரத்நாம்சுபி: விகிரஸி ஸ்புடபக்திபந்தா
பாதௌ விஹாரயிதும் அத்புத ஸௌகுமார்யௌ
ப்ராய: ஸரோஜ குமுத உத்பல பத்ர பங்க்திம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! அனைவரும் அறிந்த கெட்டியான இரத்தினங்களைக் (உறுதியான பக்தியை) கொண்டவளாக உள்ளாய். மென்மையான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை உல்லாஸமாக ஸஞ்சாரம் செய்விக்க நீ எண்ணினாய். இதனால் நீ செய்வது என்ன? உனது பலவிதமான இரத்தினக்கற்களின் ஒளி மூலம் தாமரை மலர், அல்லி மலர், நெய்தல் மலர் போன்றவற்றினுடைய இதழ்களின் வரிசையைப் பரப்பி வைக்கிறாய்.

865. ஆஸந்நவ்ருத்தி: அவரோதக்ருஹேஷு சௌரே:
ஆபாதயஸி அநுபதம் வரவர்ணிநீநாம்
ஆலக்ந ரத்நகிரணா மணிபாதுகே த்வம்
மஞ்ஜுஸ்வநா மதநபாண நிகர்ஷசங்காம்

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் அந்தப்புரங்களில் நீ உள்ளபோது, உனது இரத்தினக்கற்களின் ஒளியை எங்கும் பரவச் செய்கிறாய். உனது இனிமையான நாதம் எங்கும் ஒலித்தபடி உள்ளது. இதனைக் காணும்போது - ஸ்ரீரங்கநாதனின் ஒவ்வொரு அடிவைப்பிலும், அவனது தேவிமார்கள் மன்மதனின் அம்புகள் தங்கள் மீது எய்யப்படுவதற்காகத் தீட்டப்படுகிறதோ என்ற எண்ணத்தை ஏற்படுவதாகத் தோன்றுகிறது.


Email:sridharan_book3yahoo.co.in

866. பர்யாப்த மௌக்திக நகா ஸ்புட பத்மராகா
ரேகாவிசேஷ ருசிரா லளிதப்ரசாரா
ரங்காதிராஜ பதயோ: மணிபாதுகே த்வம்
ஸாயுஜ்யம் ஆச்ரிதவதீவ ஸமஸ்த வந்த்யா

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னுடைய முத்துக்களானவை அழகான நகங்கள் போன்று உள்ளன. உனது பத்மராகக்கற்களானவை தாமரை மலர் போன்று சிவந்து காணப்படுகின்றன. மிகவும் அழகான ரேகைகள் கொண்டவளாக உள்ளாய். மிகவும் அழகான நடையைக் கொண்டவளாகவும் உள்ளாய். இப்படியாக நீ ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடன் மிகுந்த ஒற்றுமையை அடைந்துள்ளாய்.

867. ப்ராப்த அபிஷேகா மணிபாதுகே த்வம்
ப்ரதீப்த ரத்நா ரகுராஜதாந்யா:
ப்ரதக்ஷிண ப்ரக்ரமணாத் அகார்ஷீ:
ப்ராகாரம் அக்நேயம் இவ ப்ரபாபி:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! பட்டாபிஷேகம் செய்யப்பட்டதால் மிகவும் ப்ரகாசமாக உனது இரத்தினக்கற்கள் உள்ளன. இத்துடன் கூடியபடி நீ அயோத்தி மாநகர வீதிகளில் வலம் வருகிறாய். அப்போது உனது இரத்தினக்கற்களின் ஒளி மூலமாகவே அக்னியால் செய்யப்பட்ட மதிள் சுவரை அமைத்தாய் போலும்.

868. ரத்ந ஆஸநே ராகவ பாதரக்ஷே
ப்ரதீப்யமாநா: தவ பத்மராகா:
ப்ராயோ நரேந்த்ராந் பரதஸ்ய ஜேது:
ப்ரதாப வஹ்நே: அபவந் ப்ரரோஹா:

**பொருள்** - ஸ்ரீராமனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! உன்னுடைய ஸிம்ஹாஸனத்தில் உனது பத்மராகக் கற்கள் மிகவும் ப்ரகாசத்துடன் காணப்படுகின்றன. இவற்றைக் காணும்போது, எதிரிகளை வெல்பவனாகிய பரதனின் வீரம் என்ற நெருப்புக்கு முளைகளாகத் தோன்றுகின்றன.

869. சுபப்ரணாதா பவதீ ச்ருதீநாம்
கண்டேஷு வைகுண்ட பதிம் வராணாம்
பத்நாஸி நூநம் மணிபாதரக்ஷே
மங்கள்யஸூத்ரம் மணிரச்மிஜாலை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் என்னும் கணவனை அடைகின்ற வேதங்களின் கழுத்தில், உனது இரத்தினக்கற்களின் ஒளி மூலமாக நீ திருமாங்கல்யத்தை அணிவிக்கிறாய் போலும். இந்த நேரத்தில் உனது இனிமையான நாதங்கள் மங்கள வாத்தியங்களாக உள்ளன.

870. விசித்ரவர்ணா ச்ருதிரம்ய சப்தா
நிஷேவ்யஸே நாகஸதாம் சிரோபி:
மதுத்விஷ: த்வம் மணிபாதரக்ஷே
ச்ரேயஸ்கரீ காஸந பத்ரிகேவ

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உனது பலவிதமான கற்களின் ஒளியானது, பல எழுத்துக்கள் போன்று உள்ளன. உனது செவிக்கினிய நாதங்கள் அழகான சொற்கள் போன்று உள்ளது. இப்படியாக உள்ள நீ, அனைவருக்கும் நன்மை அளிப்பவளாக, தேவர்களின் தலைகளில் ஸ்ரீரங்கநாதனின் கட்டளைச் சீட்டுகள் போன்று உள்ளாய்.

871. ஸ்திரா ஸ்வபாவாந் மணிபாதுகே த்வம்
ஸர்வம்ஸஹா ஸ்வாது பலப்ரஸூதி:
ப்ருத்வீவ பத்ப்யாம் பரமஸ்ய பும்ஸ:
ஸம்ஸ்ருஜ்யஸே தேவி விபஜ்யஸே ச

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது ஸ்வபாவத்தினால் நீ ஸ்திரமாகவும், அனைத்தையும் பொறுத்துக் கொள்பவளாகவும், அனைத்து பலன்களையும் உண்டாக்குபவளாகவும் உள்ளாய். இப்படியாக நீ பூமாதேவி போன்று உள்ளாய். மேலும் பூமியானது எவ்விதம் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இருந்து பிரிக்கப்பட்டும் (ஸ்ருஷ்டி காலம்), சேர்க்கப்பட்டும் (ப்ரளயகாலம்) செய்யப்படுகிறதோ, அது போன்றே நீயும் அவன் திருவடிகளுடன் சேர்ந்தும் (ஸஞ்சார காலம்), பிரிந்தும் (ஸஞ்சாரம் அல்லாத காலம்) உள்ளாய்.

872. பச்யந்தி ரங்கேச்வர பாதரக்ஷே
பூஜாஸு தே ஸம்ஹித புஷ்பஜாலம்
ம்ருகீத்ருச: வாஸவ ரத்ந ரேகாம்
ஸசித்ரபுங்காம் இவ மன்மத ஜ்யாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே!ஸ்ரீரங்கநாதனுக்கு அர்ச்சனை செய்யப்படும் நேரத்தில் இடப்பட்ட மலர்களுடன் உனது இந்த்ரநீலக் கற்கள் சேர்ந்து ஒளிர்கின்றன. அவற்றை மான் போன்ற விழி கொண்ட பெண்கள் காணும்போது, அம்புகளுடன் கூடியதான மன்மதனின் வில்லில் கட்டப்பட்ட நாண் கயிறு என்றே எண்ணுகிறார்கள்.

873. கரை: உதக்ரை: ஸ்புரதாம் மணீநாம்
மஞ்ஜுஸ்வநா மாதவ பாதுகே த்வம்
அநூபதேசே கநகாபகாயா:
கலே: ப்ரவேசம் ப்ரதிஷேதஸீவ

**பொருள் -** ஸ்ரீரங்கநாச்சியரைத் தரித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! காவேரியின் தீவு போன்று உள்ள ஸ்ரீரங்கத்தில், கலிகாலத்தின் ப்ரவேசத்தை நீ தடுக்கிறாய். எப்படி என்றால் - உனது இரத்தினக்கற்களின் ஒளி என்ற கைகள் கொண்டும், உனது நாதங்கள் மூலம், “உள்ளே வராதே”, என்று அதட்டியும் தடுக்கிறாய்.

874. ஆக்ராந்தவேதி: பவதீ ததாநீம்
அதர்சி முக்தாந்வித சோணரத்நா
கரக்ரஹார்த்தம் பரதேந பூம்யா:
லாஜோத்கரை: வஹ்நிசிகேவ கீர்ணா

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய ஸிம்ஹாஸனமானது யாகம் செய்யவல்ல வேதி போன்று உள்ளது. அதன் மீது உள்ள அக்னி போன்று உனது பத்மராகக்கற்கள் உள்ளன. அந்த அக்னியில் இடப்பட்ட பொரி போன்று உனது முத்துக்கள் உள்ளன. இப்பாடியாக இராமன் கானகம் சென்றபோது, பரதன் பூமி என்ற பெண்ணை மணம் முடித்து, அங்கு பொரிகள் தூவப்பட்ட அக்னி உள்ளதாகக் காண்பிக்கிறாய்.

875. பத்ரளா மணிகணை: ஹிரண்மயீ
பாஸி ரங்கபதி ரத்ந பாதுகே
கேளி மண்டப கதாகத உசிதா
பூமிகேவ கருடேந கல்பிதா

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் இரத்தினமயமான பாதுகையே! உன்னுடைய இரத்தினக்கற்களின் ஒளியானது சிறகுகள் போன்று உள்ளது. நீ தங்கமயமாக உள்ளாய்.

இப்படியாக ஸ்ரீரங்கநாதனின் விளையாட்டு மண்டபத்திற்கு எளிதாகச் சென்று வரும்படியாக கருடனே ஏற்படுத்திய ரூபம் போன்று விளங்குகிறாய்.

876. உந்நதம் பலிவிரோதிந: ததா
பாதுகே பதசரோஜம் ஆச்ரிதா
மௌக்திக ஸ்தபக மத்ய ஸம்மிதம்
வ்யோம ஷட்பததுலம் அலம்பய:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மஹாபலியை அடக்கியபோது ஸ்ரீரங்கநாதன் தனது தாமரை மலர் போன்ற திருவடியை மேல் நோக்கு உயர்த்தினான். அப்போது உன்னுடைய முத்துக்கள் அனைத்தாலும் மேல்புறத்தில் மலர்கொத்துக்கள் போன்ற தோற்றம் உண்டாக்கினாய். ஆங்காங்கு காணப்பட்ட ஆகாயம், அந்த மலர்க்கொத்தில் அமர்ந்த வண்டு போன்று இருந்தது.

877. கோமள அங்குளி நிவேச யந்த்ரிகா
ந்யஸ்த மௌக்திக மயூக தந்துரா
மங்களாநி வமஸீவ தேஹிநாம்
ரங்கராஜ மணிபாதுகே ஸ்வயம்

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் மென்மையான அழகான திருவடி விரல்கள் பிடித்துக் கொள்வதற்கு ஏற்றபடி உனது குமிழ்களின் மீது முத்துக்கள் இழைக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஒளி மூலமாக நீ உலகில் உள்ளவர்களுக்கு ஏற்ற நன்மையைக் கக்குகிறாய்.

878. பங்கஜா ஸஹசரஸ்ய ரங்கிண:
பாதுகே நிஜபதாத் அநந்தரம்
ந்யஸ்த: த்வயி ஜகந்தி ஜாயதே
நாகபோகசயநம் நிரங்குஸம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தனது ஸஞ்சார காலம் முடிந்தவுடன் ஸ்ரீரங்கநாதன் தன்னுடைய திருவடிகளால் காக்கப்பட்டு வந்த உலகங்களை உன்னிடம் வைக்கிறான். இதனால்தான், ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடிய ஸ்ரீரங்கநாதனால் ஆதிசேஷன் மீது சயனித்தபடி உறங்குவதற்கு எந்தத் தடையும் இல்லாமல் உள்ளது (அனைத்தையும் நீ பார்த்துக் கொள்கிறாய் என்பதால் கவலை இன்றி அரங்கன் உறங்குகிறான் என்று கருத்து).

879. ஸாதயந்தி மதுவைரி பாதுகே
ஸாதவ: ஸ்திரம் உபாயம் அந்திமம்
த்வத் ப்ரவ்ருத்தி விநிவர்த்தந உசித
ஸ்வப்ரவ்ருதி விநிவர்த்தந அந்விதம்

**பொருள்** - மது என்ற அசுரனின் விரோதியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பெரியவர்கள் செய்வது என்னவென்றால் – நீ அவர்களைக் காப்பாற்றவிடாமல் தடுக்கின்ற செயலான “தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முயலுதல்” என்பதைச் செய்யாமல் இருந்து விடுகின்றனர் (ஆகவே அவர்களைக் காக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கின்றனர்). மேலும் அழிவற்ற பலத்தை (மோக்ஷம்) அளிக்கவல்ல, இறுதியான, சரணாகதி வடிவமான மோக்ஷ உபாயத்தையும் கடைபிடிக்கின்றனர்.

880. நந்தஸூநு பதபத்மம் இந்திரா
பாணி பல்லவ நிபீட நாஸஹம்
பாதுகே தவ பலேந பர்யூபூத்
ஊஷ்மளாம் உரக மௌளி சர்க்கராம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! கண்ணனின் திருவடிகள் மஹாலக்ஷ்மியின் திருக்கரங்களால் வருடப்படுவதைக்கூட பொறுக்க இயலாதபடி மென்மையானவை ஆகும். ஆனால் அந்தத் திருவடிகள் உன்னுடைய பலம் காரணமாகவே, சுடும்படியாக இருந்த காளியனின் தலைகள் என்ற கடினமான இடத்தில் மிதித்தபடி ஆடி, அந்தத் தலைகளைத் தலைகுனியும்படிச் செய்தன.

881. மணிநிகர ஸமுக்தை: ஸர்வவர்ணா மயூகை:
ப்ரகடித சுபநாதா பாதுகே ரங்கபர்த்து:
நிகில நிகமஸூதே: ப்ரஹ்மண: தத் ஸநாதாம்
அவகமயஸி ஹ்ருத்யாம் அர்த்த மாத்ராம் சதுர்த்தீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இரத்திக்கற்களின் குவியல் மூலமாக ஏற்பட்ட ஒளியாலும் ஒலியாலும், நீ பலவிதமான வர்ணங்கள் கொண்டவளாகவும், இனிமையான நாதம் உடையவளாகவும் இருக்கிறாய். அனைத்து வேதங்களுக்கும் காரணமாக உள்ள வேதமாகவே இருக்கிற ப்ரணவத்தின், ஸ்ரீரங்கநாதனுடன் கூடிய ஹ்ருதயத்தில் இருக்கிற நான்காவதான அரைமாத்ரையாக நீ உள்ளாய்.

**விளக்கம் -** ப்ரணவத்தில் உள்ள மூன்று எழுத்துக்கள் அ, உ, ம என்பதாகும். இவை தவிர நான்காவதாக அரைமாத்திரை என்ற ஒன்று ப்ரணவத்தில் உள்ளது. இது போன்று பாதுகை உள்ளதாகக் கூறுகிறார். அரைமாத்திரையாகவே இருந்தாலும் அனைத்து எழுத்துக்களையும் உள்ளடக்கியது என்பதைப் பலவிதமான வர்ணங்கள் கொண்டவள் என்று கூறுகிறார். அந்த அரை மாத்திரையே மிகவும் இனிமையாக உள்ளது என்பதை இவளது நாதம் என்றார்.

882. ச்ருதி விஷய குணா த்வம் பாதுகே தைத்ய ஹந்து:
ஸதத கதி மநோஜ்ஞா ஸ்வேந தாம்நா ஜ்வலந்தி
ஜதித புவந வ்ருத்தி: த்ருச்யஸே ஸ்தைர்ய யுக்தா
வித்ருத நிகலபூதா வைஜயந்தீவ மாலா

**பொருள் -** அசுரர்களை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது நாதம் எப்போதும் காதுகளுக்கு விஷயமாக உள்ளது (ஓசை = ஆகாயம்); எப்போதும் செய்யும் ஸஞ்சாரம் காரணமாக அழகாக உள்ளாய் (எப்போதும் ஸஞ்சாரம் செய்வது காற்று = வாயு); உன்னுடைய தேஜஸ் கரணமாக எப்போதும் ப்ரகாசமாக உள்ளாய் (அக்னி); உலகங்களை எப்போது வளரச் செய்கிறாய் (வளர்ப்பது = தண்ணீர்); என்றும் ஸ்திரமாக உள்ளாய் (ஸ்திரம் = பூமி). இப்படியாக உள்ள நீ, பஞ்சபூதங்களைத் தன்னுள் தரித்துள்ள வைஜயந்தீ என்னும் ஸ்ரீரங்கநாதனின் மாலை போன்றே உள்ளாய்.

883. ரகுபதி ஸங்காத் ராஜ்யகேதம் த்யஜந்தீ
புநரபி பவதீ ஸ்வாந் தர்சயந்தீ விஹாராந்
அபிஸமதித வ்ருத்திம் ஹர்ஷ கோலாஹலாநாம்
ஜநபத ஜநிதாநாம் ஜ்யாயஸா சிஞ்ஜிதேந

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இராமனின் திருவடிகளில் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் சேர்ந்ததால், அதுவரை ராஜ்ய பாரம் காரணமாக உண்டான துயரங்கள் அனைத்தையும் ஒரு நொடியில் நீ விட்டாய். மீண்டும் உனது உல்லாஸமான ஸஞ்சாரங்களைக் காட்டியபடி, இனிமையான நாதத்தால், அயோத்தியில் உண்டான இனிமையான சந்தோஷக் கூச்சல்களை மேலும் வளர்த்தாய்.

884. ஹரிசரணம் உபக்நம் பாதுகே ஸம்ச்ரிதாயாம்
அதிகத பஹுசாகா வைபவம் தர்சயந்த்யாம்
அபஜத விதிஹஸ்த ந்யஸ்த தர்மத்ரவாயாம்
த்வயி முகுள ஸம்ருத்திம் மௌக்திக ஸ்ரீஸ்ததாநீம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் த்ரிவிக்ரமனாக நின்றபோது அவனது திருவடியை நீ படர்கின்ற கொழுகொம்பாகப் பற்றினாய். அந்தக் கொடியானது வேத சாகைகள் என்னும் பலவிதமான கிளைகளை அடைந்து பெருமை பெற்றது. அந்தக் கொடிக்கு நான்முகன் தனது கைகளால் தர்மம் என்ற நீரை விட்டான். அந்த நீர் காரணமாக, அந்தக் கொடியில் தோன்றிய மொட்டுகள் போன்று உனது முத்துக்கள் காணப்படுகின்றன.

885. கநக ருசிர காந்தி: கல்பித அசோகபாரா
க்ருத பதகமல ஸ்ரீ: க்ரீடதா மாதவேந
திசி திசி ஸுமநோபி: தர்சநீய அநுபாவா
ஸுரபி ஸமயலக்ஷ்மீம் பாதுகே புஷ்யஸி த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய தங்கம் காரணமாக சண்பக மரம் போன்று அழகாக உள்ளாய். உன்னை அடைந்தவர்களின் துன்பங்களை நீக்குவதால், அசோக மரம் போன்று உள்ளாய் (அசோக = அ + சோக = சோகம் அற்ற). இனிமையுடன் விளையாடியபடி ஸ்ரீரங்கநாதனால் தனது திருவடிகளில் வைக்கப்பட்டுள்ளாய் (மாதவ என்ற பதம் ஸ்ரீரங்கநாதனையும், வைகாஸி மாதத்தையும் குறிக்கும்; திருவடிகள் என்பது தாமரையைக் குறிக்கும்). அனைத்துத் திசைகளிலும் உள்ள தேவர்கள் உன்னை வணங்கும்படியாகப் பெருமை கொண்டாய் (தேவர்கள் = பலவிதமான மலர்கள்). இப்படியாக நீ வஸந்த காலத்தின் எழிலை அடைந்தாய்.

886. ப்ரணிஹித பதபத்மா பாதுகே ரங்கபர்த்து:
சுபதர கதிஹேது: சாரு முக்தா ப்ரவாளா
ஸ்திர பரிணத ராகாம் சுத்த போத அநுபத்தாம்
ஸ்வஜநயஸி முநீநாம் த்வந்மயீம் சித்தவ்ருத்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் மீது ஸ்ரீரங்கநாதனின் தாமரை மலர் போன்ற திருவடிகள் எப்போதும் வைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கநாதனின் உல்லாஸமான ஸஞ்சாரத்திற்குக் காரணமாக (ஜீவன்கள் மோக்ஷத்தை அடையும் கதிக்கு காரணமாக) நீ உள்ளாய். அழகான முத்துக்கள், பவழங்கள் கொண்டுள்ளாய் (முக்தி பெற்ற ஜீவன்களைக் கொண்டுள்ளாய்). உறுதியான சிவந்த நிறம் கொண்டுள்ளாய் (உறுதியான பகவான்

விஷயத்தில் மட்டுமே ஆசை). தூய்மையான ஞானம் கொண்டு, உன்னை மட்டுமே பற்றி நிற்கின்ற பரதன் முதலானவர்களின் பக்திபோன்ற ஞானத்தை உன் வசப்படுத்தியுள்ளாய்.

887. விரசித நவ பாகா ரத்நபேதை: விசித்ரை:
விவித விததரேகா வ்யக்தி ஸீமாவிபாகா
ஹரி சரண ஸரோஜம் ப்ரேப்ஸதாம் அர்ச்சநீயம்
ப்ரதயஸி நவநாபம் மண்டலம் பாதுகே த்வம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பலவிதமான இரத்தினக்கற்களால் ஒன்பது பாகங்கள் உள்ளவளாக நீ ஆக்கப்பட்டாய். உனது பலவிதமான ரேகைகள் காரணமாக அந்த ஒன்பது பாகங்களும் ஒன்பது எல்லைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளை அடைய விரும்புபவர்களால் வணங்கத்தக்கதான ஒன்பது நாபி கொண்டதால், நவநாபம் என்ற பெயர் கொண்ட மண்டலத்தை நீ ப்ரகாசப்படுத்துகிறாய்.

**விளக்கம்** - முக்தியை அடைய விரும்புபவர்கள் நவநாபம் என்ற மண்டலத்தை ஆராதிக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த மண்டலத்தில் ஒன்பது சக்கரங்கள் காணப்படும். இதனைப் பாதுகைக்கு ஒப்பாகக் கூறுகிறார்.

888. பரிணத குண ஜாலா பங்கிதிபி: மௌக்திகாநாம்
பஹுவிதமணி ரச்மி க்ரந்தி பந்தாபிராமா
ரகுபதி பதரக்ஷே ராஜவாஹ்யஸ்ய கும்பே
கலிதருசி: அபு: த்வம் காபி நக்ஷத்ரமாலா

**பொருள்** - ரகுவம்சத்தின் அதிபதியான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய முத்துக்களின் வரிசையானது சரடுகள் போன்றும், அந்த முத்துக்களின் இடையே போடப்பட்ட முடிச்சுகள் போன்று உனது இரத்தினக்கற்களும் உள்ளன. இவை உனது இரத்தினக்கற்களில் இருந்து வெளிப்படும் ஒளி என்னும் கயிறு கொண்டு கட்டப்பட்டுள்ளன. இப்படியாக ரகுவம்சத்தின் அரசர்களுடைய சத்ருஞ்ஜயம் என்ற பட்டத்து யானையின் தலையில் ப்ரகாசமுடன் உள்ள (இருபத்தேழு முத்துக்களால் கோர்க்கப்பட்ட) நக்ஷத்ர மாலையாக உள்ளாய்.


**Email:**sridharan_book3yahoo.co.in

889. சரிதநிகில வ்ருத்தி: சாருபத்மாஸநஸ்தா
குணநிபிடித முக்தா பங்க்தி பத்தாக்ஷமலா
ஸலிதம் அதிவஸந்தீ பாதுகே ரங்கபர்த்து:
சரண கமலமந்தர் பிம்பிதம் த்யாயஸீவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸஞ்சாரம் என்னும் அன்றாட கர்மங்கள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டு, தாமரை மலர் போன்ற ஆஸனத்தில் (பாதபீடம்) நீ பத்மாஸன நிலையில் அமர்ந்து கொள்கிறாய். உயர்ந்த குணங்கள் என்னும் நூலில் கோர்க்கப்பட்ட முத்துக்களின் வரிசையாலாகிய ஜபமாலையை அணிந்து கொள்கிறாய். ஸ்ரீரங்கநாதனுக்கு மிகவும் அருகில் அமர்ந்து கொண்டு, உன்னுள்ளே பிரதிபலிக்கும் அவனது திருவடித் தாமரைகளைத் த்யானித்தபடி உள்ளாய்.

890. அநுபதி பரிரக்ஷந் ஏக புத்ர அபிமாநாத்
புவநம் இதம் அசேஷம் பாதுகே ரங்கநாத:
நிஹ பத நிஹிதாயாம் தேவி திஷ்டந் வ்ரஜந் வா
த்வயி நிஹித பரோ அபூத் கிம் புந: ஸ்வாபம் ருச்சந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஒரு புத்திரன் மட்டுமே இருந்தால் அவனிடம் பெற்றவர்களுக்கு எத்தனை ப்ரியம் இருக்குமோ அது போன்று அனைத்து லோகங்களையும் ப்ரியமாகக் காப்பாற்றியபடி ஸ்ரீரங்கநாதன் உள்ளான். அவன் நிற்கும்போதும், நடக்கும்போதும் தனது ராஜ்ய பாரத்தைத் திருவடியில் உள்ள உன் மீது வைக்கிறான். அவன் உறங்கும்போதும் இப்படி செய்வதைக் கூறவும் வேண்டுமோ?

891. த்வரிதம் உபகதாநாம் ஸ்ரீமதோ ரங்கபர்த்து:
த்வத் உபஹித பதஸ்ய ஸ்வைர யாத்ரோத்ஸவேஷு
முகயதி திகந்தாந் முஹ்யதாம் த்வத் ப்ரசஸ்தெள
விஹிதகுஸும வ்ருஷ்டி: வ்யாவகோஷீ ஸுராணாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னிடம் ஒப்படைக்கப்பட்ட திருவடிகளுடன் புறப்படுகின்ற ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியவனான ஸ்ரீரங்கநாதன் தனது விருப்பப்படி, எந்தவிதமான தடையும் இன்றி வெகுவேகமாக ஸஞ்சாரம் செய்கிறான். அப்போது உன்னைத் துதிக்கவேண்டும் என்ற மயக்கத்தில் நின்ற தேவர்கள், உன் மீது மலர்கள் தூவி, ஒருவரை ஒருவர் பார்த்து ஆரவாரம் செய்கின்றனர். இந்த ஒலியானது அனைத்துத் திசைகளையும் எதிரொலிக்கச் செய்கிறது.

892. மநஸி நியம யுக்தே வர்த்தமாநா முநீநாம்
ப்ரதிபதம் உபயாந்தீ பாவநீய க்ரமத்வம்
ச்ருதிரிவ நிஜசப்தை: பாதுகே ரங்கபர்த்து:
பதம் அநிதர கம்யம் வ்யங்க்தும் அர்ஹா த்வமேவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தெய்வபக்தி, ஆசார்யபக்தி, ஸத்யம், காமக்ரோதம் இல்லாமை, பொறாமை இல்லாமை போன்ற பலவிதமான தன்மைகளுடன் உள்ள முனிவர்களின் மனதில் நீ உள்ளாய். உன்னுடைய ஒவ்வொரு அடியிலும் (பதத்திலும்) கவனிக்கத்தக்க நடையைக் (பொருளை) கொண்டுள்ளாய். இப்படியாக நீ ச்ருதி போன்று இனிமையான சொற்களை உனது நாதங்களால் வெளிப்படுத்துகிறாய். வேறு எதனாலும் விளக்க இயலாத திருவரங்கனின் திருவடிகளை நீயே விளக்கும் தகுதி பெற்றவளாக உள்ளாய்.

893. அவிகல நிஜ சந்த்ராலோக ஸந்தர்சநீயா
ப்ரதிகலம் உபபோக்யா பாதுகே ரங்கபர்த்து:
முகுளயிதும் அசேஷம் மௌக்திக ஜ்யோத்ஸ்நயா ந:
ப்ரபவஸி திமிரௌகம் பௌர்ணமாஸீ நிசேவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தோஷங்கள் இல்லாத தூய்மையான தங்கத்தால் இழைக்கப்பட்டு (பூர்ணமான சந்த்ரனின் ஒளியால்) நீ மிகவும் அழகாக உள்ளாய். ஒவ்வொரு நொடியிலும் (சந்த்ரனின் கலையிலும்) நீ அனுபவிக்கத்தக்கவளாக உள்ளாய். உனது முத்துக்களின் ஒளி என்ற நிலவு மூலமாக நீ பௌர்ணமி ராத்திரி போன்று நின்று, எங்கள் அறியாமை என்ற இருளை ஒழிப்பதற்கு ஏற்ற வலிமை பெற்றுள்ளாய்.

894. ஹம்ஸ ச்ரேணீ பரிசித கதி: ஹாரிணீ கல்மஷாணாம்
மௌளௌ சம்போ: ஸ்திதிம் அதிகதா முக்த சந்த்ர அநுபத்தா
ராஜ்ஞாம் ஏகா ரகுகுல புவாம் ஸம்யக் உத்தாரிகா த்வம்
காலே தஸ்மிந் க்ஷிதிம் அதிகதா பாதுகே ஜாஹ்நவீவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அன்னப் பறவைகள் போன்ற ஸாதுக்களால் வணங்கப்பட்ட ஸஞ்சாரம் கொண்டுள்ளாய். அனைத்துவிதமான பாவங்களையும் நீக்குகிறாய். சிவனுடைய தலையில் அமர்கின்ற இருப்பை அடைந்தாய். அழகான தங்கத்துடன் கூடியவளாக உள்ளாய். ரகுகுலத்தின் அரசர்கள் அனைவரையும், வேறு எந்தத் துணையும் இல்லாமல் கரை ஏற்றி, உயர்ந்த கதி அளித்தாய். இப்படியாக நீ கங்கையைப் போன்று இந்தப் பூமியை அடைந்தாய்

**விளக்கம்** - கங்கையில் அன்னங்கள் உலவும்; ஸஞ்சாரம் என்பது கங்கையில் ப்ரவாஹம்; சிவனின் தலையில் கங்கையும் உள்ளது; பாவங்கள் நீக்குதல் கங்கைக்கும் இயல்பு.

895. ஸ்வச்ச ஆகாராம் ச்ருதி ஸுரபிதாம் ஸ்வாதுபாவ பந்நாம்
மார்க்கே மார்க்கே மஹிதவிபவாம் பாதுகே தீர்த்தபேதை:
சீத ஸ்பர்சாம் ச்ரம விநயிநீம் காஹதே மந்தமந்தம்
க்ரீடாலோல: கமலநிலயா தத்தஹஸ்தோ யுவா த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் தெளிந்த ரூபம் கொண்டுள்ளாய். வேதங்கள் மூலம் வாஸனை அளிக்கப்படுகிறாய். சிறந்த சுவையுடன் உள்ளாய். நீ ஸஞ்சாரம் செல்கின்ற வழி எங்கும் பல ஆசார்யர்களால் கொண்டாடப்படுகிறாய். குளிர்ந்த தன்மையுடன் உள்ளாய். உன்னை அடைந்தவர்களின் துன்பங்களையும் களைப்பையும் நீக்குகிறாய். இப்படியாக காவேரி போன்று பல தன்மைகளில் ஒத்திருக்கும் உன்னுடன் விளையாடி மகிழ ஸ்ரீரங்கநாதன் ப்ரீதியுடன் உள்ளான். அவன் ஸ்ரீரங்கநாச்சியாரால் திருக்கரங்கள் மெதுவாகப் பிடித்து விடப்பட்டு, உன்மீது மெதுவாக இறங்குகிறான் (காவேரியில் ஜலக்ரீடை செய்ய இறங்குகிறான். காவேரி போன்றே தன்மைகள் கொண்ட பாதுகையையும் தரித்துக்கொள்கிறான்).

896. அப்யஸ்யந்த்யோ: க்ரமம் அநுபமம் ரங்கபர்த்து: விஹாரேண
ஸ்தாநே ஸ்தாநே ஸ்வர பரிணதிம் லம்பித: தத்ததர்ஹாம்
பர்யாயேண ப்ரஹித பதயோ: பாதுகே ச்ருத்யுதார:
சிஞ்ஜாநாத: ஸ்புரதி யுவயோ: ச்ருங்கலா பந்தரம்ய:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைளே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சார காலத்தில் ஒப்பில்லாத அடிவைப்பை மீண்டும் மீண்டும் செய்கிறீர்கள். ஒன்று மாற்றி ஒன்றாக, ஒருவர் மாற்றி ஒருவராக அவனது திருவடிகளைச் செலுத்தியபடி உள்ளீர்கள். ஒவ்வொரு இடத்திலும் அந்தந்த இடத்திற்கு ஏற்ப ஸ்வரத்தின் மாறுபாட்டை உங்கள் நாதங்களில் காண முடிகிறது. இப்படியாக செவிக்கினிய உங்கள் நாதம், சங்கிலிப் பிணைப்பு போன்று அழகாக உள்ளது.

**விளக்கம்** - இங்கு க்ரமபாடம் கூறப்படுகிறது. முதல் இரண்டு பதங்களையும் முதலில் படிக்கவேண்டும். அடுத்து இரண்டாவது, மூன்றாவது பதங்கள்; மூன்றாவது, நான்காவது பதங்கள் என்று படிப்பது க்ரமபாடம் ஆகும். அதாவது “அப்யஸ்ஸந்த்யோ: க்ரமம்”, “க்ரமம்


Email:sridharan_book3yahoo.co.in

அநுபமம்", "அநுபமம் ரங்கபர்த்து:", "ரங்கபர்த்து: விஹாரே" என்று படிப்பதாகும். இத்தகைய சங்கிலி போன்ற பாராயணம் போன்று ஸ்ரீரங்கநாதனின் நடையழகு உள்ளது என்கிறார்.

897. ஆஸந்நாம் திவஸம் அபுந: நக்தம் ஆபாதயந்தீ
ஸ்பீதா லோகா மணிபிரபித: ப்ராணிநாம் அஸ்ததோஷா
ப்ரஹ்வை: ஜுஷ்டா விபுதநிவஹை: பாதுகே ரங்கபர்த்து:
பாத அம்போஜே திசதி பவதீ பூர்வ ஸந்த்யேவ காந்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை நெருங்கி வந்தவர்களுக்கு மறுபடியும் அறியாமை என்னும் இரவு வராமல், பகலை உண்டாக்கியபடி உள்ளாய். உனது இரத்தினக்கற்களின் ஒளி மூலம் அனைத்து திசைகளிலும் ப்ரகாசம் ஏற்படுத்துபவளாக உள்ளாய். மக்களின் தோஷங்கள், பாவங்கள் என்னும் இரவை நீங்குபவளாக உள்ளாய். தேவர்களின் கூட்டத்தால் வணங்கப்பட்டவளாக உள்ளாய். இப்படியாக உதய கால வேளை போன்றுள்ள நீ, ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளில் தாமரை மலரின் மலர்த்தியை ஏற்படுத்துகிறாய்.

898. ரம்ய ஆலோகா லளித கமநா பத்மராக அதரோஷ்டீ
மத்யே க்ஷாமா மணிவலயிநீ மௌக்திக வ்யக்தஹாஸா
ச்யாமா நித்யம் ஹரிதமணிபி: சார்ங்கிண: பாதரக்ஷே
மந்யே தாது: பவஸி மஹிளா நிர்மிதௌ மாத்ருகா த்வம்

**பொருள்** - சார்ங்கம் என்ற வில்லை உடைய ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் அழகிய தோற்றத்தைக் கொண்டவளாக, மெதுவான அழகிய நடையைக் கொண்டவளாக, பத்மராகக் கற்களின் சிவந்த தன்மையால் அழகான உதடுகள் கொண்டவளாக, நடுப்பாகத்தில் (இடை) சிறுத்தவளாக, இரத்தினக்கற்களின் கூட்டம் என்ற வளையல்கள் அணிந்தவளாக, முத்துக்கள் போன்ற அழகான சிரிப்பைக் கொண்டவளாக, பச்சைக்கல் மூலம் என்றும் யுவதியாகத் தோற்றம் அளிப்பவளாக நீ உள்ளாய். இப்படியாக நான்முகன் உத்தமப் பெண்களைப் படைக்க உதவுகின்ற மாதிரி உருவமாக (model) நீ உள்ளாய் என்று எண்ணுகிறேன்.

899. ஸ்தித்வா பூர்வம் க்வசந பவதீ பத்ர பீடஸ்ய மத்யே
ரத்ந உதஞ்சத் கிரண நிகரா ரங்கிண: பாதரக்ஷே
வ்யாகீர்ணாநாம் ந்ருபதி விரஹாத் தேவி வர்ணாச்ரமாணாம்
நூநம் ஸீமாவிபஜந ஸஹம் நிர்மமே ஸூத்ரபாதம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! இராமன் கானகம் சென்றபோது, அரசன் இல்லாத காரணத்தினால் அயோத்தியில் வர்ணங்களும், ஆச்ரமங்களும் (வர்ணம் = அந்தணன், க்ஷத்ரியன், வைசியன், சூத்திரன்; ஆச்ரமம் = ப்ரஹ்மசர்யம், க்ரஹஸ்தம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம்) எந்தவிதமான பிரிவும் இல்லாமல் ஒன்றுடன் ஒன்று கலந்து நின்றன. அப்போது உனது இரத்தினக்கற்களின் மூலமாக எழுகின்ற ஒளியானது, நூல் போல் நின்று, அந்த வர்ணாச்ரமங்களைச் சரியான எல்லையுடன் பிரித்து வைத்தன. இதனை நீ செய்தாய் போலும்.

900. மாதர் மஞ்ஜூஷ்வந பரிணத ப்ரார்த்தநா வாக்ய பூர்வம்
நிக்ஷிப்தாயாம் த்வயி சரணயோ: பாதுகே ரங்கபர்த்து:
த்வயி ஆயாத்தம் கிமபி குசலம் ஜாநதீநாம் ப்ரஜாநாம்
பர்யாப்தம் தத் ந கலு ந பவத்யாத்ம நிக்ஷேப க்ருத்யம்

**பொருள் -** இந்த உலகைக் காப்பாற்றும் தாய் போன்ற பாதுகையே! உன்னை ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கின்றனர். அப்போது நீ, "என்னை இனி நீ காக்க வேண்டும், வேறு கதி இல்லை", என்று உனது இனிய நாதங்கள் மூலம் ஸ்ரீரங்கநாதனிடம் ப்ரபத்தியைச் செய்கிறாய். இந்தச் செயல் மூலம் தங்களது அனைத்து நன்மைகளும் இனி பாதுகை மூலவே கிட்டிவிடும் என்று அறிகின்ற மக்களுக்கு, நீ செய்த பரஸமர்ப்பணமே போதுமானதாக ஆகிறது (தனியாக நாம் அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்று எண்ணுகின்றனர். அதாவது, நமக்காக பாதுகையே ப்ரபத்தி செய்துவிடுகிறாள்).

901. நித்யம் ரங்க க்ஷிதிபதி பதந்யாஸ தந்ய ஆத்மந: தே
சிஞ்ஜாநாதம் ச்ரவண மதுரம் பாதுகே தீர்க்கயந்த:
காலே தஸ்மிந் கரணவிகம க்லேசஜாதம் விஹந்யு:
ஸந்தாபம் நஸ்தருண துளஸீகந்திநோ கந்தவாஹா:

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடைய இன்மையான நாதம் என்பது ஸ்ரீரங்கநாதனின் ஒவ்வொரு அடிவைப்பிலும், மேலே ஓங்கிய சிறப்பை அடைகிறது.

இந்த நாதத்தை வெகுதூரம்வரை கொண்டு செல்லும் காற்றானது, தன்னுடன் ஸ்ரீரங்கநாதனின் திருவடியில் உள்ள துளஸியின் நறுமணத்தையும் சேர்த்து கொண்டு செல்கிறது. இப்படிப்பட்ட காற்றானது மரணத்தின் பிடியில் நிற்பவர்களின், இந்த்ரிய அழிதலால் உண்டான வேதனைகளை மாற்றி, அவர்களின் துன்பங்களை நீக்க வேண்டும்.

902. ஸம்ஸாரத்வ ச்ரமபரிணதம் ஸம்ச்ரிதாநாம் ஜநாநாம்
தாபம் ஸத்ய: சமயிதுமலம் சார்ங்கிண: பாதுகே த்வம்
சந்த்ராபீடே ப்ரணமதி நவாம் சந்த்ரிகாம் ஆபிபத்பி:
தாரா நிர்யத் ஸலில கணிகா சீகரைச் சந்த்ரகாந்தை:

**பொருள்** - சார்ங்கம் என்ற வில்லைக் கொண்ட பெரியபெருமாளின் பாதுகையே! சந்த்ரனைத் தலையில் கொண்ட சிவன் உன்னை வணங்கும்போது, அந்த நிலவின் ஒளி முழுவதையும் உன்னில் பதிக்கப்பட்ட சந்த்ரகாந்தம் என்ற கற்கள் குடித்துவிடுகின்றன. (சந்த்ரகாந்தம் என்ற இரத்தினக்கற்கள் மீது நிலவின் ஒளிபட்டவுடன், அவற்றிடம் இருந்து நீர் வெளிப்படும் என்பர்). இதனால் அந்தக் கற்கள் தங்களிடம் இருந்து தாரைதாரையாக நீர்த்துளிகளைப் பெருக்கியபடி உள்ளன. இந்த நீரானது ஸம்ஸாரம் என்ற வழியில் உள்ள பாலைவனத்தில் ஏற்படும் சிரமம் நீங்கும்படியாக தாகத்தை (வேதனையை) அடக்கி விடுகிறது. இப்படியாகத் துன்பம் போக்குபவளாக உள்ளாய்.

903. வஜ்ர உபேதாம் வலபிதுபல ச்யாமளாம் மஞ்ஜுகோஷாம்
முக்தாஸாராம் மதுரசபலாம் வீக்ஷ்ய விஷ்ணோ: பதம் த்வாம்
ஹர்ஷ உத்கர்ஷாத் உபரி சலயந் பாதுகே சந்த்ரகாந்தம்
தத்தே நித்யம் த்ருத கநருசி: தாண்டவம் நீலகண்ட:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது வைரக்கற்கள் இடி போன்று உள்ளன; இந்த்ரநீலக்கற்கள் எங்கும் கறுத்து காணப்படுகின்றன; இனிமையான நாதம் என்பது மெல்லிய சப்தத்துடன் உள்ளது; முத்துக்களால் சிறப்புற்று உள்ளாய் (இந்த முத்துகள் மழைத்துளி போன்று உள்ளன); அழகான உனது அசைவுகள் மின்னல் போன்று காண்படுகின்றன. இப்படியாக நீ மழைக்காலம் போன்றே ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் காணப்படுகிறாய். இதனைக் கண்டு வணங்கும் சிவன் (மயில்), தனது பிறைச்சந்த்ரனை (தோகையை) எப்போதும் மெதுவாக ஆட்டியபடி, எப்போதும் ஆனந்தத்தாண்டவம் ஆடுகிறார் (மயில் ஆடுகிறது). அதாவது, மழைமேகம் கண்ட மயில் ஆடுகிறது என்பதையும் ச்லேடையாகக் கூறுகிறார்.


Email:sridharan_book3yahoo.co.in

904. ஸ்ரீரங்க இந்தோ: சரணகமலம் தாத்ருசம் தாரயந்தீ
காலே காலே ஸஹகமலயா க்லுப்த யாத்ரோத்ஸவஸ்ரீ:
கத்வா கத்வா ஸ்வயம் அநுக்ருஹ த்வாரம் உந்நித்ர நாதா
பௌராந் நித்யம் கிமபி குசலம் பாதுகே ப்ருச்சஸீவ

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்து உலகங்களும் சரணம் அடைவதற்கு ஏற்றதான ஸ்ரீரங்கநாதனின் தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தாங்கி நிற்கிறாய். அந்தந்த காலங்களில் ஸ்ரீரங்கநாதன் தனது பிராட்டியுடன் கூடியவனாக திருவரங்கத்தின் திருவீதிகளில் வலம் வருதல் என்ற சிறப்பை நீ உண்டாக்குகிறாய். ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் நீ உனது நாதங்களை எழுப்பியபடி உள்ளாய். இதனைக் காணும்போது, அன்றாடம் திருவரங்கத்து மக்களிடம் சென்று, அவர்கள் நலம் விசாரிப்பது போன்று தோன்றுகிறது.

905. சதுர விஹாரிணீம் ருசிர பக்ஷருசிம் பவதீம்
மநஸிஜ ஸாயகாஸந குணோசித மஞ்ஜுரவாம்
அநுபதம் ஆத்ரியேமஹி மஹேந்த்ரசிலா மஹிதாம்
ஹரி சரணாரவிந்த மகரந்த மது வ்ரதிகாம்

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! மிகவும் நேர்த்தியான ஸஞ்சாரம் கொண்டவளாக உள்ளாய்; உனது அழகான பக்கங்கள், ஒளி வீசும் இறகுகள் போன்றே உள்ளன; மன்மத வில்லின் நாண் எப்படி ஒலிக்குமோ அது போன்று உனது நாதம் இனிமையாக உள்ளது; இந்த்ரநீலக்கற்கள் மூலம் மிகவும் பெருமை பெற்று, கறுத்தும் உள்ளாய். இப்படியாக ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரைகளில் உள்ள மதுவை எப்போதும் பருகியபடி உள்ள பெண் வண்டு போன்ற உன்னை, நாங்கள் ஒவ்வொரு நொடியிலும் வணங்குவோம்.

906. கநகருசா ஜடாம் உரகமௌளி மணீந் மணிபி:
த்ரிதிவ தரங்கிணீம் தரள மௌக்திக தீதிதிபி:
குடிலதயா க்வசித் சசிகலாம் அதரீ குருஷே
முரரிபு பாதுகே புரபித: சிரஸா வித்ருதா

**பொருள்** - முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! சிவனின் தலையால் நீ ஏற்கப்பட்டபடி நிற்கிறாய். அந்த நேரத்தில் – உனது தங்கத்தின் ஒளி மூலம் அவனது சடையின் ஒளி, உனது இரத்தினக்கற்களின் ஒளி மூலம் அவன் தலையில் உள்ள

நாகத்தின் தலைமணிகளின் ஒளி, நீரோட்டம் கொண்ட உனது முத்துக்களின் தன்மையால் கங்கையின் மேன்மை, உனது இடை வளைவு மூலம் அவனது தலையில் உள்ள சந்த்ரகலையின் அழகு ஆகியவற்றைத் தாழ்ந்து போகும்படிச் செய்கிறாய்.

907. காலே தல்பப புஜங்கமஸ்ய பஜத: காஷ்டாம் கதாம் சேஷதாம்
மூர்த்திம் காமபி வேத்மி ரங்க ந்ருபதே: சித்ராம் பத த்ரத்வயீம்
ஸேவா நம்ர ஸுராஸுரேந்த்ர மகுட சேஷாபட ஸங்கமே
முக்தா சந்த்ரிகயேவ யா ப்ரதயதே நிர்மோகயோகம் புந:

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! வியப்பை அளிக்கவல்ல ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளான உங்களை அவனது ஸஞ்சார காலத்தில் அடிமைத்தனத்தின் எல்லைக்கே செல்வதால், அவனுடைய படுக்கையான ஆதிசேஷனின் உருவமே என்று எண்ணுகிறேன். ஸ்ரீரங்கநாதனை வணங்கி நிற்பவர்களான தேவர்கள் மற்றும் அசுரர்களின் தலைகளில் உங்களை வைக்கும்போது உங்கள் முத்துக்களின் ஒளியானது பரிவட்டம் போன்று காணப்படுகிறது. மேலும் அவர்களின் தலையில் உள்ள பரிவட்ட வஸ்த்ரத்துடன் இந்த ஒளியும் இணையும்போது, உரித்த நாகத்தின் தோல் போன்று காணப்பட்டு, ஆதிசேஷனை நினைவுபடுத்துகிறது.

908. சந்த்ராபீட சிகண்ட சந்த்ர சிகர ச்யோதத் ஸுதாநிர்ஜ்ஜர
ஸ்தோக ஆச்லிஷ்ட ஸுரேந்த்ர சேகர ரஜ: ஸ்த்யாநாம் ஸ்தும: பாதுகாம்
ப்ரஹ்மஸ்தம்ப விபக்த ஸீமவிவித க்ஷேத்ரஜ்ஞ ஸர்க்கஸ்திதி
த்வம்ஸ அநுக்ரஹ நிக்ரஹ ப்ரணியிநீ யா ஸா க்ரியா ரங்கிண:

**பொருள்** - சிவனின் தலையில் ஆபரணம் போன்றுள்ள சந்த்ரனின் மேல் பாகத்தில் இருந்து பெருகும் அமிர்த அருவியின் துளிகளுடன், தேவர்களின் தலையில் உள்ள மலர்களின் துகள்களும் சேர்ந்து நிரம்பிய ஸ்ரீரங்கநதனின் பாதுகைகளை நாங்கள் வணங்குகிறோம். இந்த உலகில் நான்முகன் தொடங்கி, புல்பூண்டுவரை காணப்படும் பலவகையான ஏற்றத்தாழ்வுகள் கொண்ட உயிர்களின் ஸ்ருஷ்டி, இருப்பு (ஸ்திதி) மற்றும் ஸம்ஹாரம்; இவைகளுக்குக் கிட்டும் கடாக்ஷம் மற்றும் தண்டனைகள் ஆகியவற்றை ஸ்ரீரங்கநாதனின் லீலைகளாக மிகவும் பிரியத்துடன் பாதுகைகள் அல்லவோ செய்கிறாள்?

909. லக்ஷ்மீ நூபுர சிஞ்ஜிதேந குணிதம் நாதம் தவ ஆகர்ணயந்
ஆஜிக்ரந் நிகமாந்த கந்த துளஸீ தாம உத்திதம் ஸௌரபம்
காலே குத்ரசித் அகதம் கருணயா ஸார்த்தம் த்வயா சாக்ரத:
பச்யேயம் மணிபாதுகே பரதரம் பத்மேக்ஷணாம் தைவதம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! என்னுடைய அந்திம காலத்தில் - ஸ்ரீரங்கநாச்சியாரின் தண்டையின் ஓசையால் மேலும் அதிகரிக்கப்பட்ட உனது நாதம் கேட்க வேண்டும்; வேதவாஸனை வீசுகின்ற துளஸி மாலையை அதன் நறுமணத்துடன் முகரவேண்டும்; என் மீது மிகுந்த கருணையுடன், உன்னுடன் சேர்ந்தபடி அனைத்த்திற்கும் மேலானவனாகிய, தாமரை போன்ற கண்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதன் அங்கு வந்து நிற்க, அவனை நான் பார்க்கக் கடவேனாக.

910. வஹதி க்ஷிதிவ்யவஹிதாம் ஸோபி த்வாம் கதிஷு பாதுகே ரங்கீ
கமடபதி புஜகபரிப்ருட கரிவர குலசிகரி பூமிகா பேதை:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னால் தாங்கப்படுபவனாகவே இந்த உலகத்தினரால் ஸ்ரீரங்கநாதன் அறியப்படுகிறான். அப்படிப்பட்ட அவன் தனது ஸஞ்சார காலங்களில் ஆமை, திக்யானைகள், பர்வதங்கள் போன்ற பலவிதமான வடிவங்கள் கொண்டவனாய் உன்னைத் தாங்கி நிற்கிறான்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ப்ரகீர்ண பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (30. சித்ர பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு -** இந்தப் பத்ததியில் உள்ள ச்லோகங்களில் பலவிதமான சித்ரங்கள், பலவிதமான வியக்கவைக்கும் வாக்ய அமைப்புகள், முன்பின் சேர்க்கவல்ல வரிகள் போன்றவை உள்ளன.

911. ப்ரதிஷ்டாம் ஸர்வசித்ராணாம் ப்ரபத்யே மணிபாதுகாம்
விசித்ர ஜகத் ஆதார: விஷ்ணுர் யத்ர ப்ரதிஷ்டித:

**பொருள் -** பலவிதமான வியக்கவைக்கும் விஷயங்கள் கொண்ட இரத்தினமயமான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை நான் சரணம் அடைகிறேன். இந்தப் பாதுகையில் அல்லவோ பலவிதமான வியக்கவைக்கும் தன்மைகள் கொண்டவனும், உலகங்களுக்கு ஆதாரமாக உள்ளவனும் ஆகிய ஸ்ரீரங்கநாதன் நிலையாக நிற்கிறான்?

912. ச்ருணு தே பாதுகே சித்ரம் சித்ராபி: மணிபி: விபோ
யுகக்ரம புவோ வர்ணாந் யுகபத் வஹஸே ஸ்வயம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை பற்றிய வியக்கவைக்கும் செய்தியைக் கேட்பாயாக! ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு வர்ணம் எடுத்துக்கொள்ளும் ஸ்ரீரங்கநாதனின் நிறங்களை நீ பலவிதமான இரத்தினங்கள் மூலம், ஒரே யுகத்தில் வெளிப்படுத்துகிறாய்.

**விளக்கம் -** எம்பெருமான் க்ருத யுகத்தில் வெண்மை, த்ரேதா யுகத்தில் சிகப்பு, துவாபர யுகத்தில் பொன்னிறம், கலியுகத்தில் கருப்பு என்று காணப்படுகிறான். பாதுகையில் உள்ள இரத்தினக்கற்களில் இந்த நிறங்களைக் காணலாம்.

913. ஸுரா ஸுரா ஆர்சிதா தந்யா துங்கமங்கள பாலிகா
சராசர அச்ரிதா மாந்யா ரங்க புங்கவ பாதுகா

**பொருள் -** தேவர்களாலும் அசுரர்களாலும் பூஜிக்கப்படுபவள்; அனைத்து ஸம்பத்துகளும் நிறைந்தவள்; மிகவும் சிறந்த சுபங்கள் அனைத்தையும் காப்பவள்; நடப்பன, நிற்பன என்ற பலவற்றாலும் அடையத்தக்கவள் - இப்படிப்பட்டவளான ஸ்ரீரங்கநாதனின் பாதுகை அனைவராலும் கொண்டாத்தக்கவள் ஆவாள்.

**விளக்கம் -** paduka sahasram-chapter30-drawings.pdf என்பதில் காண்க.

914. பத்மேவ மங்கள ஸரித் பாரம் ஸம்ஸார ஸந்ததே:
துரித க்ஷேபிகா பூயாத் பாதுகா ரங்க பூபதே:

**பொருள்** - சுபங்கள் என்பது ஆறு போன்று ஓடி வருவதாவும், ஸம்ஸாரத்தின் எல்லை போன்று உள்ளதாகவும் ஸ்ரீரங்கநாதனின் பாதுகை உள்ளாள். அவை ஸ்ரீரங்கநாச்சியார் போன்று நம்முடைய பாவங்களை நீக்கவேண்டும்.

**விளக்கம்** - இங்கு உள்ளது பூதசதுர்த்தம் என்னும் சித்ர சப்தம் ஆகும். ”பாதுகா ரங்க பூபதே:” என்பதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் மற்ற பதங்களில் இருந்து அமைக்கப்பட்டவை ஆகும்

915. அநந்ய சரண: ஸீதந் அநந்த க்லேச ஸாகரே
சரணம் சரண த்ராணம் ரங்கநாதஸ்ய ஸம்ச்ரயே

**பொருள்** - வேறு எந்தவிதமான கதியும் இல்லாமல் ஸம்ஸாரம் என்ற துன்பக் கடலில் மூழ்கியபடி உள்ள நான், ஸ்ரீரங்கநாதனின் பாதுகையைச் சரணம் என்று அடைகிறேன்.

**விளக்கம்** - இன்கு உள்ளது நிரோஷ்ட்யம் என்ற சப்தசித்ரமாகும். உ, ப, ம, ஒ போன்ற எழுத்துக்கள் உதடுகளால் உச்சரிக்கப்படவேண்டியவை. இவற்றுக்கு ஓஷ்ட்யம் என்று பெயர். இவை இல்லாமல் இந்த ச்லோகம் அமைந்துள்ளது.

916. ப்ரதிபாயா: பரம் தத்வம் பிப்ரதீ பத்மலோசநம்
பச்சிமாயாம் அவஸ்தாயாம் பாதுகே முஹ்யதோ மம

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்திற்கும் மேலான பொருளை, தாமரை போன்ற கண்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதனை நீ எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, மரணகாலத்தில் மயக்கம் அடைகின்ற என் முன்பாக, ப்ரத்யக்ஷமாக நிறுத்த வேண்டும்.

**விளக்கம்** - இந்த ச்லோகத்தில் க்ரியாகுப்தம் என்ற சித்ர சப்தம் உள்ளது. இங்கு ப்ரதிபா என்ற முதல் பதம் காண்க. இது பெயர்ச்சொல் ஆகும். இதன் பொருள் - புதிய விஷயங்களை உடனடியாக உணரும் புத்திகூர்மை என்பதாகும். இதுவே முதல் பதமாக உள்ளது. இதனைக் கண்டவுடன் இந்த ச்லோகத்தில் வினைச்சொல் இல்லையே என்ற வியப்பு தோன்றும். ஆனால் இதுவே வினைச்சொல்லாகவும் கையாளப்பட்டுள்ளது. இதற்கு “நேரடியாக வருவாய்” என்ற பொருள் உள்ளது.

917. யாம: ச்ரயதி யாம் தத்தே யைந யாத்யாய யாச்ச யா
யாஸ்ய மாநாய யை வாந்யா ஸாமாம் அவது பாதுகா

**பொருள்** - எவளை ஸ்ரீரங்கநாதன் ஸஞ்சார காலத்தில் அடைகிறானோ; எவள் ஸ்ரீரங்கநாதனைத் தாங்குகிறாளோ; எவள் ஸ்ரீரங்கநாதனால் ஸஞ்சாரம் செய்கிறாளோ; எதவள் ஸ்ரீரங்கநாதனுக்காகவே உள்ளாளோ; எவள் ஸ்ரீரங்கநாதனிடமிருந்து தோன்றியவளோ; எவள் ஸ்ரீரங்கநாதனுக்கு பூஜையின்போது ஸமர்ப்பிக்கப் படுகிறாளோ; எவள் ஸ்ரீரங்கநாதனிடத்தில் பெறத்தக்கவளோ – அந்தப் பாதுகை என்னைக் காக்க வேண்டும்.

**விளக்கம்** – ”அ” என்னும் பதம் எம்பெருமானைக் கூறுவதாகும். இந்தப் பதத்தின் ஏழு வேற்றுமைகளையும் இந்த ச்லோகத்தின் காணலாம் (ஸ்ரீரங்கநாதனால், ஸ்ரீரங்கநாதனுக்காக, ஸ்ரீரங்கநாதனின் போன்ற ப்ரயோகங்கள்).

918. சர்யா ந: சௌரிபாது த்வம் ப்ராயச்சித்தேஷு அநுத்தமா
நிவேச்யஸே தத: ஸத்பி: ப்ராயச்சித்தேஷு அநுத்தமா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எங்களது பாவங்கள் தொலைவதற்காக நாங்கள் செய்யக்கூடிய பிராயச்சித்தங்களில் மிகவும் உயர்ந்த பிராயச்சித்த கர்மமாக நீயே உள்ளாய். இதனால்தான் அறிஞர்கள் உன்னைத் தங்கள் மனதில் எப்போதும் வைத்துக் கொள்ளும்படியாக நீ உள்ளாய்.

919. ராமபாத கதாபாஸா ஸா பாதா கத பாமரா
காத் உபாநஞ்ச காஸஹ்யா ஹி ஆஸ காஞ்சந பாதுகா

**பொருள்** - இராமனின் திருவடிகளில் இருப்பவளும், தனது ஒளி மூலம் விளங்கி நிற்பவளும், சத்ருக்கள் ஒழியப்பெற்ற தேவர்களை உடையவளும் ஆகிய தங்கமயமான பாதுகை நான்முகனிடமிருந்து அயோத்திக்கு வந்தாள். சூரியனாலும் தாங்க இயலாத ஒளியுடன் கூடியதாக உள்ளாள்.

**விளக்கம்** - இங்கு ப்ரதிலோம யமகம் கையாளப்பட்டுள்ளது. அதாவது முதல் பாதத்தைத் திருப்பிப் படித்தால் இரண்டாம் பாதம் ஆகிறது. இது போன்றே இரண்டாம் பாதத்தைத் திருப்பினால் முதல் பாதம் ஆகிறது. உதாரணமாக, “ஸா பாதா கத பாமரா” என்பதைத்

திருப்பிப் படித்தால், “ராமபாத கதாபாஸா” என்றாகும். இதுவே முதல் பாதமாக உள்ளதைக் காண்க.

920. பாடாகாளீ ஜ்ஜாட துச்சே காதாபாநாய புல்லகே
ஸமாதௌ சடஜித் சூடாம் வ்ருணோஷி ஹரி பாதுகே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வலிமையான பாவங்களின் வரிசை என்னும் புதர்கள் அற்றதாகவும், மலர்ந்த மனதை உடையதான யோகப்யாஸத்தில் திருவாய்மொழி தோன்றும் பொருட்டு, நீ நம்மாழ்வரின் தலையைப் பற்றுகிறாய் போலும்.

**விளக்கம் -** இங்கு அபுநருக்தவ்யஞ்ஜனம் என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. வ்யஞ்ஜனம் என்றால் மெய் எழுத்துக்கள் ஆகும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட மெய்எழுத்துக்கள் மீண்டும் பயன்படுத்தப்படவில்லை.

921. ஸா பூபா ராமபாரஸ்தா விபூபாஸ்தி ஸபாரதா
தாரபா ஸக்ருபா துஷ்டி பூரபா ராமபாதுகா

**பொருள் -** இந்தப் பூமியைக் காத்தபடி உள்ளாள்; துக்கக்கடலின் கரையாக உள்ள இராமனிடம் உள்ளாள்; ஸ்ரீரங்கநாதனின் உபாஸனத்தின் எல்லையாக உள்ளாள்; ப்ரணவத்தில் பொருளான ஸ்ரீரங்கநாதனை ஸஞ்சார காலத்தில் காப்பாற்றும் தயை கொண்டவள் - இப்படிப்பட்ட இராமனின் பாதுகை நம்மை அனைத்துக் குற்றங்களில் இருந்தும் காப்பாற்றுகிறாள்.

**விளக்கம் -** இங்கு முரஜபந்தம் என்பது பயன்பத்தப்பட்டுள்ளது. முரஜம் என்றால் உடுக்கு முதலான வாத்யங்களைப் போன்றதாகும். அதனுடைய மூலைக்கு மூலை கட்டப்படும் கயிறுகள் போன்ற அமைப்பை இங்கு காணலாம்.


**Email:**sridharan_book3yahoo.co.in

922. காரிகா ந ந யாத்ராயா யா கேயாஸ்யஸ்ய பாதுபா
பாதபா ஹ ஹ ஸித்தாஸி யஜ்ஞாய மம ஸஞ்ஜஸா

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்திற்குக் காரணமாக நீ உள்ளாய்; புகழத்தக்கவளாக உள்ளாய்; சூரியன் போன்ற ப்ரகாசம் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளைக் காப்பாற்றும் பாதுகைகளாக உள்ளாய். இப்படிப்பட்ட நீ, நான் செய்யும் ஆராதனையை ஏற்பதற்காக, நீயாகவே என் இருப்பிடம் வந்துள்ளாயே! என்ன ஆச்சர்யம்!

**விளக்கம்** - இந்த ச்லோகத்தில் அவிசிஷ்ட ப்ரதிலோம பாடம் என்ற அமைப்பில் உள்ளது. இதன் கருத்து - இந்த ச்லோகத்தைத் திருப்பிப் படித்தாலும், இதே பொருளையே அளிக்கவல்லதாகும். இது கீழே உள்ளது:

ஸாஞ்ஜஸா மம யஜ்ஞாய ஸித்தாஸி ஹ ஹ பாதபா
பாநுபா கேயாஸ்யஸ்ய யா யாத்ராயா ந ந காரிகா

923. ஸராகவா ச்ருதௌ த்ருஷ்டா பாதுகா ஸந்ருபாஸநா
ஸவாகவா கதௌ ச்லிஷ்டா ஸ்வாதுர்மே ஸதுபாஸநா

**பொருள்** - வேதங்களால் போற்றப்படுபவள், இராமனுடன் எப்போதும் சேர்ந்தே உள்ளவள், அயோத்தியின் ஸிம்ஹாஸனத்தை அடைந்தவள், ஸ்ரீராமனின் ஸஞ்சார காலங்களில் எளிதாகச் சிரமம் இன்றிச் செல்லக்கூடியவள், ஒன்றுடன் ஒன்று சேர்ந்து உள்ளவள், ஸாதுக்களால் உபாஸனை செய்யப்படுபவள் - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் எனக்கு இனிமையாக உள்ளாள்.

924. காவ்யாய ஆஸ்தித மாவர்க்க வ்யாஜயாதக மார்க்கா
காமதா ஜகத: ஸ்தித்யை ரங்கபுங்கவ பாதுகா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் தங்கள் ஸஞ்சாரத்தின்போது, செல்லும் இடங்களில், ஸ்ரீரங்கநாச்சியாரை அங்கு வரவழைப்பதற்குக் காரணமாகி விடுகிறாள் (அங்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகிறது). அனைத்து விருப்பங்களையும் அளிக்கவல்லவளாக உள்ளாள். இந்த உலகின் ரக்ஷணத்தின் பொருட்டு,

ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள், இராமாயணம் முதலான காவியங்கள் தோன்றக் காரணமாக இருந்தாள்.

925. ஸுரகார்யகரீ தேவீ ரங்கதுர்யஸ்ய பாதுகா
காமதா கலிதாதேசா சரந்தீ ஸாதுவர்த்மஸு

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் தேவர்களின் செயல்களைச் செய்து தருகிறாள். தேவர்களின் தன்மைகளைக் கொண்டவளாக உள்ளாள். வேண்டியவற்றை அளிக்கிறாள். இந்த உலகிற்கு எது நன்மை அளிக்குமோ, அவற்றைச் செய்யும்படி ஆணை இடுகிறாள். நல்ல வழிகளில் ஸஞ்சாரம் செய்கிறாள்.

926. பரத ஆராதிதாம் தாரம் வந்தே ராகவ பாதுகாம்
பவதாப ஆதி தாந்தாநாம் வந்த்யாம் ராஜீவ மேதுராம்

**பொருள்** – பரதனால் ஆராதனை செய்யப்பட்டவளும், மிகவும் உயர்ந்தவளும், ஸம்ஸாரம் என்னும் துன்பங்களை மூலம் மனவருத்தம் கொண்டு வருந்துபவர்களின் துன்பம் நீங்க வணங்கத்தக்கவளும், தேவர்களால் அர்ச்சிக்கப்பட்ட தாமரை மலர்களால் சூழப்பட்டவளும் ஆகிய இராமனின் பாதுகையை நான் வணங்குகிறேன்.

927. காத் உபாஸ்ய ஸதாலோகா கால உதாஹ்ருத தாமகா
காமதா அத்வரிரம்ஸாகா அகாஸா ரங்கேச பாதுகா

**பொருள்** – தண்ணீர் தவிர வேறு எதனையும் உட்கொள்ளாத முனிவர்களால் உபாஸிக்கப்படும் ப்ரகாசம் கொண்டவள்; பூஜை காலங்களில் மாலைகள் ஸமர்ப்பிக்கப்பட்டவளாக உள்ளவள்; எங்கும் ஸஞ்சாரம் செய்தபடி உள்ளதில் மகிழ்வு கொண்டவள்; இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள், அவனைப் போன்றே நடையைக் கொண்டுள்ளாள் (வேண்டியதை அளிக்கிறாள்).

928. பாபாகூபார பாளீபா த்ரிபாதீ பாத பாதபா

க்ருபாரூபா ஜபாலாபா ஸ்வாபா மா அபாத் ந்ருபாதிபா

**பொருள்** – பாவங்கள் என்பவை வரிசையான ஸமுத்திரங்களாக நின்றாலும் அவற்றைப் பருக வல்லவள்; தயை வடிவமாக உள்ளவள்; அஷ்டாக்ஷரம் போன்ற மந்த்ரங்களின் ஜபம் போல் தூய்மை ஏற்படுத்தவல்லவள்; எளிதாக அடையக்கூடியவள்; அரசர்களுக்கு சக்ரவர்த்தினியாக நிற்பவள் – நித்யவிபூதியில் உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையானவள் என்னை அவன் பக்கம் சேர்த்துக் காப்பாற்றினாள்.

929. ஸ்திராகஸாம் ஸதா ஆராத்யா விஹத ஆகதத அமதா
ஸத்பாதுகே ஸராஸா மா ரங்கராஜபதம் நய

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் வலிமையான பாவங்கள் செய்த ஸம்ஸாரிகளால் எப்போதும் ஆராதிக்கத்தக்கவள்; போக்கப்பட்ட துன்பங்கள், விருப்பம் அல்லாதவற்றை அனுபவிக்காத நிலை ஆகியவற்றைக் கொண்டவள் (உன்னை அடைந்தவர்களுக்கு இவற்றை அளிப்பவள்); இனிமையான நாதம் கொண்டவள் – இப்படிப்பட்ட பாதுகையான நீ, என்னை ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளிடம் அழைத்துச் செல்வாயாக.

930. ஸ்திதா ஸமய ராஜத்பா கதரா மாதகே கவி
துரம்ஹஸாம் ஸந்நதாதா ஸாத்யா அதாப கரா ஆஸரா

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! வேதங்கள் கூறும் தர்ம மார்க்கத்தில் நிலையாக நிற்பவர்களைக் காப்பாற்றுபவளும், தங்கமயமாக அடியார்களுக்குச் கைங்கர்ய செல்வத்தை அளிப்பவளும், வணங்குபவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவல்ல ஒளி மண்டலத்தில் உள்ளவளாகவும் (அல்லது தனது ஒளி மூலம் அவர்கள் துன்பத்தை நீக்கி மகிழ்வை அளிப்பவள்), மிகுந்த பாவம் செய்தவர்களின் பலனாக உள்ள கெட்ட காலங்களை விலக்குபவளாகவும், தாபம் இல்லாத தன்மையை அளிப்பவளாகவும், எங்கும் ஸஞ்சாரம் செய்து காப்பாற்றுபவளாகவும் உள்ள நீ, என்னை ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் சேர்க்க வேண்டும்.

931. லோகதாரா காமசாரா கவிராஜ துராவசா
தாரா கதே பாத ரா ஆம ராஜதே ராமபாதுகா

**பொருள்** – தன்னை அண்டி நிற்பவர்களை எப்போதும் காப்பாற்றுபவளாகவும், தனது விருப்பப்படி எங்கும் ஸஞ்சாரம் செய்தபடி இருப்பவளும் (அல்லது, காமசாரா = ஆகாம சாரா என்று பிரித்து, அனைவரும் விரும்பக்கூடிய ஸஞ்சாரம் உடையவள் எனலாம்), வால்மீகி போன்ற உயர்ந்த கவிகளால் கூட தனது பெருமையை முழுவதும் உணர இயலாமல் உள்ளவளும், ஸஞ்சாரத்தில் தேர்ச்சி பெற்றவளும், மிகுந்த ஒளியுடன் கூடியவளும் - என்று பல தன்மைகளுடன் ஸ்ரீராமபாதுகை உள்ளது.

932. ஜய ஆம பா அபாமயா அஜாய மஹே துதுஹே மயா
மஹேச க ஆகாச ஹேம பாதுகா அமமக அத் உபா

**பொருள்** – இந்த்ரியத்தை வெல்வது போன்ற வெற்றி இல்லாதவர்களைக் காப்பாற்றுபவளாகவும், அமயம் எனப்படும் உடல் மற்றும் சரீரம் கலந்த வ்யாதி நீங்கும்படிச் செய்பவளும், மமகாரம் (எனது என்ற எண்ணம்) இல்லாத முனிவர்களிடம் எப்போதும் செல்பவளும், சிவனைக் காப்பாற்றுபவளும், உலகின் ஈச்வரர்களாக உள்ள இந்திரன் போன்றவர்களின் தலையில் அமர்பவளும் ஆகிய தங்கமயமான பாதுகைகள் – ஸ்ரீரங்கநாதனின் உத்ஸவ காலங்களில் என்னால், எனது விருப்பங்களைத் அளிக்கும்படியாகக் (காமதேனு பசு போன்று) கறக்கப்பட்டது.

933. பாபாதபாபாதபாபா அபாதபாதத பாதபா
தபாதபாபாதபாத பாதபா ததபாதபா

**படித்தல்** - இந்த ச்லோகத்தைப் பின்வருமாறு பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும்:

பாபாத் அபாபாத் அபாபா அ பாத பாத த பாத பா
த பாத பாப அத பாத பாதபா தத பாத் அபா

**பொருள்** – அடியார்களின் பாவங்களை நீக்குபவளாகவும்; ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்கு வேண்டிய ஒளியை அளிக்கின்ற ஒளியைத் தன்னிடம் கொண்டவளாகவும்; தன்னை ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கின்றவர்கள் விஷயத்தில் காப்பாற்றும் அபிஷேக நீரை உடையவளாகவும், எப்போதும் காப்பாற்றுதலைச் செய்பளாகவும், பாவங்களை நீக்குவதற்காக இருக்கின்ற திருவடிகளைக் காப்பாற்றுபவளும் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் என்னைப் பாவங்களில் இருந்து காப்பாற்றினாள்.

**விளக்கம்** – இந்த ச்லோகத்தில் த, ப என்ற இரண்டு மெய் எழுத்துக்களும்; அ, ஆ என்ற இரண்டு உயிர் எழுத்துக்களும் மட்டுமே உள்ளன. இதில் கடந்த ச்லோகம் போன்றே ஸர்வதோபத்ரம் உள்ளது.

934. கோப உத்தீபக பாபே அபி க்ருபா பாக உபபாதிகா
பூத பாதோதக அபாத உத்தீபிகா கா அபி பாதுகா

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் கோபத்தைத் தூண்டிவிடும் அளவிற்குப் பாவம் செய்கிறவன் விஷயத்திலும் ஸ்ரீரங்கநாதனின் கருணை வெளிப்படும்படியாகச் செய்பவள், தூய்மையை அளிக்கின்ற கங்கையைத் திருவடிகளில் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்கு ஒளியை அளிப்பவள் – இப்படிப்பட்ட பாதுகையானவள், இப்படிப்பட்டவள் என்று தெளிவாகக் கூற இயலாத மேன்மை கொண்டவளாவாள்.

935. ததாதத்தாதித்த்தேதா தாததீதேதாதிதுத்
தத்தத்தத்தா ததிததா ததேதாதேத தாதுதா

**படித்தல்** - இந்த ச்லோகத்தைக் கிழே உள்ளபடி பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும்:

தத அதத்தா அதி தத்தா இதா தாததி இத ஈதிதா அதிதுத்
தத்தத் தத்தா ததி ததா ததா இ தாத இத தாதுதா

**பொருள்** – இந்த உலகைக் காப்பாற்றும் பொருட்டு எங்கும் ஸஞ்சாரம் செய்தபடி இருப்பவள்; ”தத்” என்று போற்றப்படும் ப்ரஹ்மத்தின் தன்மையால் அடையப்படுபவள்; ஸம்ஸாரிகள் அடைகின்ற பலவிதமான துயரங்களை அடியுடன் நீக்குபவள்; உலகில் உள்ள அந்தந்த வஸ்துக்களின் தன்மைகளையும், அந்தந்த வஸ்துக்களையும் தனக்கு வசப்படுத்தியவள்; வீணை முதலான வாத்யங்கள் கொண்ட மன்மதனின் தந்தையான எம்பெருமானால் அடையப்பட்டது - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகை நமக்குத் தந்தையாக உள்ளது.

936. யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா
யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா யா

**படித்தல்** – இந்த ச்லோகத்தைக் கீழே உள்ளபடி பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும்:

யாயா யா ஆய ஆயாய அயாய அயாய அயாய அயாய அயாய
யாயாய ஆயாயாய ஆயாயா யா யா யா யா யா யா யா யா

**பொருள்** – எவள் ஸ்ரீரங்கநாதனைச் சேர்ந்தவர்களின் லாபத்தின் பொருட்டு பாடுபடுகிறாளோ, எவள் அவனை அடைந்தவர்களின் சுபத்தின் பொருட்டு உள்ளாளோ, எவள் ஞானத்திற்காக உள்ளாளோ (ஞானத்தை அளிக்கிறாளோ), எவள் நல்ல விஷயங்கள் மீது விருப்பங்கள் அதிகரிக்கத் தூண்டும்படியாக உள்ளாளோ, எவள் அடியார்களின் விரோதிகளை அழிப்பதற்காக ஸ்ரீரங்கநாதனை அடைந்துள்ளாளோ, எவள் ஸ்ரீரங்கநாதனின் ஸஞ்சாரத்தின் பொருட்டு அவனை அடந்துள்ளாளோ, எவள் ஸ்ரீரங்கநாதனை நம்மிடம் அழைத்து வருவதற்காக உள்ளாளோ, எவள் முக்தர்கள் எங்கும் ஸஞ்சாரம் செய்யும்படி செய்கிறாளோ - நல்ல கதியை அடைய உதவும் இப்படிப்பட்ட பாதுகையானவள், ஸ்ரீரங்கநாதனுக்கு எப்போதும் அடிமை செய்தபடி உள்ளாள்.

**விளக்கம்** - இந்த ச்லோகத்தில் பலவிதமான அமைப்புகள் உள்ளன. இவையாவன - ஏகஸ்வரிசித்ரம் (ஒரே ஸ்வரம்), ஏகவர்ணசித்ரம் (ஒரே எழுத்து), த்விஸ்தாநகம் ஸ்தாநீசித்ரம், கோமுசித்ரிகா, ஸர்வதோபத்ரம், கங்கணபந்தம், முரஜபந்தம், பத்மபந்தம், ச்லோகாநுலோம ப்ரதிலோம கதிசித்ரம், அர்த்தயமகம், பாதசதுராவ்ருத்தி யமகம், பாதார்த்த அஷ்டாவ்ருத்தி யமகம், ஏகாக்ஷர சித்ரசதா வ்ருத்தியகம் - ஆகும்.

937. ரகுபதி சரணாவநீ ததா விரசித ஸஞ்சரணா வநீபதே
க்ருத பரிசரணா வநீபகை: நிகமமுகைச்ச ரணாவநீ கதா

**பொருள்** – விச்வாமித்திரரின் யாகம் காக்கும் பொருட்டு கானக மார்க்கத்தில் சென்றவளும், மாரீசன் முதலான அசுரர்களை அழிப்பதற்காகப் போர்க்களம் சென்றவளும் ஆகிய ரகுகுல நாயகனான இராமனின் பாதுகை - விரோதிகளை அழித்துக் காப்பாற்ற வேண்டும் என்று வந்த விச்வாமித்திரர் போன்ற யாசகர்களாலும், வேதங்களில் சிறந்த மஹரிஷிகளாலும் செய்யப்படும் கைங்கர்யத்தைக் கொண்டதாக உள்ளாள்.

**விளக்கம்** - இதில் பாத சதுஷ்டய பாகவ்ருத்தி யமகம் உள்ளது. முதல் பாதம் மற்றும் மூன்றாம் பாதங்கள் 11 அக்ஷரங்களும், இரண்டு மற்றும் நான்காம் பாதங்கள் 12 அக்ஷரங்களும் கொண்டதாக உள்ளது.

938. தத்த கேளிம் ஜகத் கல்பநா நாடிகா
ரங்கிணா ரங்கிணா ரங்கிணா ரங்கிணா
தாத்ருசே காதி புத்ர அத்த்வரே த்வாம் விநா
அபாத் உ கா பாதுகா பாது காபாதுகா

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இந்த உலகத்தை ஸ்ருஷ்டி செய்தல் என்னும் நாடகத்தை நடத்துபவனாகவும், இதற்குத் தனக்கு வேறு யாரும் கற்றுக் கொடுக்கும் நாடகக்காரன் இல்லாதபடி தானே கைதேர்ந்த நாடகக்காரனாகவும், ஸ்ரீரங்கநாதன் உள்ளான். இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனால் உனக்கு உல்லாஸமான ஸஞ்சாரம் அளிக்கப்பட்டது. உன்னைத் தவிர எந்தப் பாதுகை - காதி என்னும் அரசனின் புத்ரனாகிய விச்வாமித்ரரின் யாகத்தைக் காப்பாற்றி, அவருக்கு மட்டும் அல்லாமல் மற்றவர்களுக்கும் இன்பம் அளித்துக் காப்பாற்றியது?

939. பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா

**படித்தல்** – இந்த ச்லோகத்தைக் கீழே உள்ளபடி பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும்:

பாதப அபாதப ஆபாத பாப அத் அபா
பாதபா பாத பா அ பாதபா அபாதபா
பாத பாபாத் அ பாபாத் அ பாபாத் அபாபாத்
அபாபா த பாபா ஆத பா பாத பா

**பொருள்** – கால்கள் என்னும் வேர் மூலம் நீரைப் பருகும் தாவரங்கள், அவ்விதம் கால்களால் பருகாமல் உள்ள மற்ற உயிரினங்கள் போன்றவற்றைச் சூழ்ந்துள்ள பாவங்களை நீக்கவல்ல அபிஷேக நீரை உடையவள்; ஸ்ரீரங்கநாதனின் உடைமையானவற்றில் நான்கில் ஒரு பங்கான இந்த லீலாவிபூதியைக் காப்பாற்றுபவள்; மேலே உள்ள பங்கு தவிர மீதம் உள்ள முக்கால் பங்கான நித்யவிபூதியைக் காப்பாற்றுபவள்; ரக்ஷிக்கப்பட வேண்டிய தாய் தந்தையர்களைக் காப்பாற்றுபவர்கள், அவ்விதம் காப்பாற்றாதவர்கள் விஷயத்தில் நன்மையை அளிப்பதும், நல்லதை

நீக்குவதுமாக உள்ளவள்; ஸ்ரீரங்கநாதனின் திருக்கல்யாண குணங்களை எப்போதும் பருகும் ஸாதுக்களை, அவர்களின் புலன் வசப்படுத்தும் குணங்கள் போன்றவையே தூய்மைப்படுத்துகின்றன, அந்தக் குணங்களை வளரச்செய்கிறாள்; ஸ்ரீரங்கநாதனின் அடியார்களுடைய விரோதிகளை உலர்ந்து போகும்படிச் செய்கின்ற கிரணங்களை கொண்டுள்ளாள்; உயர்ந்த பதவிகளில் உள்ள இந்த்ரன் போன்றவர்களைக் காப்பாற்றும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளையும் காப்பாற்றுபவளாக பாதுகை உள்ளாள்.

940. ஸாகேத த்ராண வேளா ஜநித தத நிஜ ப்ராங்கண ஸ்ரீப்ரபாஸா
ஸாபா ப்ரச்ரீ: அடவ்யாம் இயம அமம யமி வ்யாபத் உச்சேதி லாஸா
ஸாலாதிச்சேத திக்ம ஆஹவ ருருரு வஹ ஹ்ரீ கரஸ்ய ஆம ராஸ அஸா
ஸா ராமஸ்ய அங்க்ரிம் அப்யாஜதி ந ந நதி ஜ ஸ்தூலம் உத்ராதகே ஸா

**பொருள்** – அயோத்தியைக் காப்பாற்றி அரசாண்ட காலத்தில் அமைக்கப்பட்ட ராஜசபையின் ஆஸ்தான மண்டபத்தில் தனது ஞானம், ஐச்வர்யம் முதலானவற்றுடன் கூடிய ஒளியை உடையவள்; இதனால் மேலும் அழகும் மேன்மையும் அடைந்தவள்; மேன்மேலும் வளர்ந்த ராஜ்யசெல்வம் கொண்டதாக விளங்கியவள்; ஸம்ஸாரம் என்ற காட்டில் மமகாரம், பொருள் ஆசை, பற்றுதல்கள் போன்றவை இல்லாமல் வாழ்கின்ற உயர்ந்தவர்களுக்கு, சத்ருக்கள் மூலம் உண்டாகவல்ல ஆபத்துக்களை அடியுடன் வெட்டிச் சாய்ப்பதைத் தனது விளையாட்டாகவே கொண்டவள்; அதிக ஞானம் பெறாதவர்களாக இருந்தாலும் ஸ்ரீரங்கநாதனையும், பாதுகையையும் போற்றி நிற்பவர்களின் தவறான சொல் அமைப்புக்களை நீக்கி, அவர்களுக்கு ஞானமும் உயர்ந்த சொற்களையும் கொடுத்தபடி உள்ளவள் - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகை மேலும் செய்வது என்ன? ஸாரம் என்ற பலம் போன்றவற்றை முறியடிப்பதில் மிகவும் உக்ரமான யுத்தம் நடக்கும்போது, மானைக் கையில் ஏந்திய சிவனுக்கு தனது “ஹூம்” என்ற ஓசையால் மட்டுமே பயந்து வெட்கம் ஏற்படும்படிச் செய்த இராமனுடைய திருவடிகளை வழி நடத்துகிறாள். இந்தத் திருவடிகள், ரக்ஷிக்கத் தகுந்தவர்கள் செய்கின்ற வணக்கம் காரணமாக மிகவும் மகிழ்வுடன் உள்ளன அல்லவோ?

941. ரம்யே வேச்மநி பாப ராக்ஷஸ பிதா ஸ்வாஸக்ததீ நாயிகா
நந்தும் கர்ம ஜ துர்மத அலஸ தீயாம் ஸா ஹந்த நாதீக்ருதா
ஸத்வாட ப்ரமிகாஸு தாபஸ தபோ விஸ்ரம்ப பூ யந்த்ரிகா
காசித் ஸ்வைரகமேந கேளிஸமயே காமவ்ரதா பாதுகா

**பொருள்** – பாவங்கள் நிறைந்த அசுரர்களை அழிப்பதில் மிகுந்த ஆவல் கொண்ட புத்தியுள்ள இராமனை அழைத்துச் செல்கிறாள்; தனது விருப்பத்தின்படி ஸஞ்சாரம் செய்வதால், விளையாடும் காலங்களில் தன்னையும் ஸ்ரீரங்கநாதனையும் அண்டி நிற்பவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதை ஒரு விரதமாகவே கொண்டுள்ளாள். ஸாதுக்களான முனிவர்கள் உள்ள இடங்களில் ஸஞ்சாரம் செய்யும்போது, அந்த முனிவர்களுக்கு தங்கள் தவங்கள் மீது உள்ள நம்பிக்கையை வளர்த்து, தங்கள் தவம் வீணாகாது என்ற உறுதியை அளிப்பதான அடிவைப்பைக் (தனது ரேகையை அந்த பூமியில் பதித்து) கொண்டதாக உள்ளாள். இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகை – பாவங்கள் காரணமாக உண்டான கர்வம் முதலியவற்றால் ஏற்பட்ட சோம்பல் காரணமாகச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் உள்ளவர்கள் வணங்குவதற்காக, மிகவும் அழகான ஸ்ரீரங்கவிமானத்தில் எஜமானியாக அமர்ந்துள்ளாளே! என்ன வியப்பு!

942. ஸ்ரீ ஸம்வேதந கர்ம க்ருத் வஸு தவ ஸ்யாம் ருத்த தைர்ய ஸ்புட:
ஸ்ரீபாதாவநி விஸ்த்ருதா அஸி ஸுகிநீ த்வம் கேய யாதாயநா
வேதாந்த அநுபவ அதிபாதி ஸுதநு: ஸாந்த்ர இட்யபாவ ப்ரதே
அங்கஸ்தா அச்யுத திவ்ய தாஸ்ய ஸுமதி: ப்ராணஸ்த ஸீதா தன

**பொருள்** – அதிகமாக வணங்கப்படும் தகுதியைக் கொண்டதால் மேன்மையும், இராமனின் உயிர்நிலையாக உள்ள சீதையின் செல்வமாகவும் உள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே, வேதங்களின் எல்லையாக உள்ள உபநிஷத்துகளின் மூலம் மட்டுமே அறியவல்லதான ஸ்ரீரங்கநாதனின் அனுபவத்தைக் காட்டிலும், மேலான இன்பம் அளிக்கவல்ல திவ்யமான திருமேனி கொண்டவள்; அடியார்களை எப்போதும் நழுவவிடாத ஸ்ரீரங்கநாதனின் கைங்கர்யங்களில் தனது புத்தியை எப்போதும் வைத்துள்ளவள்; இதனால் அவனுடைய சாமரங்கள் முதலான பொருட்களில் முதன்மையாக உள்ளவள்; அழகான ஸஞ்சாரங்கள் கொண்டவள்; எல்லையற்ற ஆனந்தம் கொண்டவள்; ஸ்ரீரங்கநாதனின் பல திரு அவதாரங்களுக்கு ஏற்றபடி பல ரூபங்களைக் கொண்டவள். இப்படியாகப் பல மேன்மைகள் பொருந்தியவளாக நீ உள்ளாய். ஸாதுக்களின் செல்வம் என்று போற்றப்படும் வேதங்கள் கூறிய உயர்ந்த கர்மங்களை இயற்றுபவர்களின் பெரும் செல்வமாக நீ உள்ளாய். இதனால் மிகவும் தெளிந்து நம்பிக்கை பெற்ற நான், உனக்கே அடிமையாக வேண்டும்.

943. கநக பீட நிவிஷ்ட தநு: ததா
ஸுமதி தாயி நிஜ அநுபாவ ஸ்ம்ருதா
விதிசிவ ப்ரமுகை: அபிவந்திதா

விஜயதே ரகு புங்கவ பாதுகா

**பொருள்** – கோஸல நாட்டை அரசாண்ட காலத்தில் தங்கமயமான ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தவள்; நல்ல புத்தியை அளிக்கவல்ல தனது தரிசனம் மற்றும் நினைவைக் கொண்டவள் (தன்னைத் த்யானிப்பவர்களுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்து அவர்களுக்கு நல்ல புத்தி அளிப்பவள்); நான்முகன், சிவன் போன்றவர்களால் எப்போதும் வணங்கப்படுபவள் – இப்படிப்பட்டவளான ரகுகுலத்தின் நாயகன் இராமனின் பாதுகை எப்போதும் வெற்றியுடன் உள்ளாள்.

944. தீந கோபீ ஜநி க்லிஷ்ட பீ நுத் ஸதா
ராமபாதாவநி ஸ்வாநுபவ ஸ்திதா
ஏதிமே அவச்யம் உத்தாரபாவச்ரிதா
தேஜஸா தேந குஷ்டிம் கதா பாலிகா

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! கண்ணனைத் தவிர வேறு எதனையும் நினைக்காமல் இருந்த கோபிகைகளின் மறு பிறவியையும், கம்ஸன் மூலம் ஏற்பட்ட பயம் போன்ற துன்பங்களையும், இந்திரன் போன்றவர்களின் மூலம் ஏற்பட்ட அச்சத்தையும் நீ போக்கினாய்; எந்த உனது தேஜஸ் மூலம் இந்த உலகை நியமித்தபடியும், ரக்ஷித்தபடியும் உள்ளாயோ, அந்த மேன்மை மூலம் நீ என்னைக் கண்டிப்பாகக் காப்பாற்றி, உனது கைங்கர்யத்தில் நிலை நிறுத்தவேண்டும்.

945. தாம நிராக்ருத தாமஸ லோகா
தாத்ருமுகை: விநிதா நிஜதாஸை:
பாபம் அசேஷம் அபாகுருஷே மே
பாது விபூஷித ராகவ பாதா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது தேஜஸ் மூலமாக அசுரர்களின் ஸ்வபாவம் நிறைந்ததான தமோ குணத்தை நீங்கப் பெற்றவர்களை உடையவளாக உள்ளாய். உனது அடிமைகளாக உள்ள நான்முகன் போன்றவர்களால் எப்போதும் வணங்கப்பட்டவளாக உள்ளாய். உன்னால் அலங்கரிக்கப்பட்ட இராமனின் திருவடிகளுடன் எப்போதும் உள்ளாய். என்னுடைய அனைத்துப் பாவங்களையும் போக்கி வருகிறாய்.

946. க்ருபா அநக த்ராத ஸுபூ: அதுஷ்டா

மேத்யா ருசா பாரிஷதா ஆம பூபா
பாதாவநி ஸ்த்யாந ஸுகை: ந த்ருப்தா
காந்த்யா ஸமேதா அதிக்ருதா அநிரோதா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது கருணை காரணமாக, எந்தவிதமான துயரமும் இந்த பூமிக்கு உண்டாகாதபடி இந்தப் பூமியை ஆண்டாய்; தோஷங்கள் ஏதும் இல்லாமல் உள்ளாய்; உனது ஒளியால் தூய்மையாக உள்ளாய்; ஸாதுக்களின் கோஷ்டியில் எப்போதும் உள்ளாய் (அல்லது ஸபையோர்களாக ஐச்வர்யம் நிறைந்த அரசர்களை உடையவள்); ஸ்ரீரங்கநாதனின் திருவடி அநுபவம் மூலம் எழுகின்ற இன்பத்தினால் மனநிறைவு அடையாமல், மேலும் அவன் திருவடிகளை சுவைக்க விருப்புகிறாய்; அவ்விதம் அவனது திருவடிகளை அனுபவிப்பதால் முழு அதிகாரம் பெற்று, தடை இல்லாமல் உள்ளாய். இப்படிப்பட்ட நீ வரவேண்டும்.

947. ஸாரஸ ஸௌக்ய ஸமேதா
க்யாதா பதபா புவி ஸ்வாஜ்ஞா
ஸாஹஸ கார்யவந ஆசா
தீரா வஸுதா நவ ந்யாஸா

**பொருள்** - அர்ச்சனை செய்யப்பட்ட தாமரை மலர் மூலம் ஸௌக்யத்தை அடைந்தவளும், நன்மையே அளிக்கவல்ல ஆணைகளை இடுபவளும், இராமனை எப்படியாவது மீண்டும் அழைக்கவேண்டும் என்ற ஸாஹஸம் செய்த பரதனைக் காப்பதில் விருப்பம் கொண்டவளும், அடியார்களுக்கு எத்தனை துன்பங்கள் வந்தாலும் காப்பாற்றியே தீருவது என்ற உறுதி உள்ளவளும், அடியார்கள் வேண்டிய ஸம்பத்தை அளிப்பவளும், புதிது புதிதான இரத்தினக்கற்கள் உடையவளும் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் பாதுகை - இந்த உலகில் உள்ள அடியார்களால் மிகவும் சுலபமாக அடையத்தக்கவள் என்னும் பெருமை கொண்டவள் ஆவாள்.

**விளக்கம்** - இந்த ச்லோகத்தை அப்படியே தலைகீழாகப் படித்தால் அடுத்த ச்லோகம் தோன்றுவதைக் காண்க.

948. ஸா அந்யா அவநதா ஸுவரா
அதீசாநா வர்ய க ஸஹஸா
ஜ்ஞா ஸ்வா விபு பாதபதா
க்யாதா மே ஸக்யஸௌ ஸரஸா

**பொருள்** - அனைவராலும் பூஜிக்கத்தக்கவள், அனைவரையும் காப்பாற்றுபவள், "என்னைக் காப்பாற்று" என்று உரிமையுடன் நாம் கேட்கக்கூடிய தோழி போன்று உள்ளவள், அனைத்து உலகின் எஜமானியாக உள்ளவள், உயர்ந்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்று சுகம் கொண்டவள், அனைத்தையும் அறிந்தவள், ஸ்ரீரங்கநாதனைத் தன்வசப்படுத்தியவள், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை காப்பாற்றும் பெருமை கொண்டவள் – இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் எனது தோழியாக உள்ளாள்.

949. தாரஸ் பாரதர ஸ்வர ரஸ பர ரா
ஸா பதாவநீ ஸாரா
தீரஸ்வைர சர ஸ்திர ரகுபுரவாஸ
ரதி ராம ஸவா

**பொருள்** - தான் தொடங்கிய செயலில் எத்தனை தடைகள் ஏற்பட்டாலும் அதனை பொருட்படுத்தாமல், எடுத்த செயலை நிறைவேற்றுபவள்; தனது விருப்பத்தின்படி ஸஞ்சாரம் செய்பவனும், மாறாத குணங்கள் கொண்டவனும், ரகுவம்ஸத்தினரின் ராஜ்யமான அயோத்தியில் உள்ளவர்களிடம் ஆசையுடன் உள்ளவனும் ஆகிய இராமனைத் தான் ஏவும்படியாக வசப்படுத்தியவள்; தனது இனிமையான நாதங்கள் மூலம் உரத்த தொனியில் ஆனந்த அளிக்கவல்லவள் – இப்படியாக ஸௌலப்யம் போன்றவை வெளிப்படும்படியாக உள்ளாள்.

**விளக்கம்** - இந்த ச்லோகம் எட்டு தளங்கள் கொண்ட பத்மபந்தம் என்பதாகும். இதில் ஸ்ரீரங்கநாதனின் திருவடி அமைப்பு உள்ளதைக் கணலாம். இந்த யந்திரத்தையும் ச்லோகத்தையும் அன்றாடம் அனுஷ்டித்து வந்தால், எந்தவிதமான தடைகளும் நீங்கிவிடும் என்பது பலரின் கருத்தாகும்.

950. சரம் அசரம் ச நியந்து: சரணௌ
அந்தம் பரேதரா சௌரே:
சரம் புருஷார்த்த சித்ரௌ சரணாவநி
திசஸி சத்வரேஷு ஸதாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அடியார்களைக் காப்பாற்றும் அதே சிந்தனை கொண்டவளாக உள்ளாய். அசைகின்றதும், அசையாமல் உள்ளதும் ஆகிய அனைத்தையும் நியமிக்கின்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள், உயர்ந்த புருஷார்த்தமான

மோக்ஷத்தைப் பற்றிய ஞானத்தை உண்டாக்கி, காக்கவல்லவையாக உள்ளன. இப்படிபட்ட அவனது திருவடிகளை (இதன் மூலமாக ஸ்ரீரங்கநாதனை) ஸாதுக்களின் வீட்டிற்கே அழைத்து வந்து, அவர்களின் பூஜை அறையில் நிலையாக நிறுத்தி விடுகிறாய். ஆக நீ ஸ்ரீரங்கநாதனை வெகு சுலபமாக அவர்களது இல்லங்களுக்கு அழைத்து வருகிறாய்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
சித்ர பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

913. ஸுரா ஸுரார்ச்சிதா தந்யா துங்கமங்கள பாலிகா

சராசரார்ச்ரிதா மாந்யா ரங்க புங்கவ பாதுகா

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸு | ரா | ஸு | ரா | ர்ச்சி | தா | த | ந்யா | துங் | க | மங் | க | ள | பா | லி | கா |
| ச | ரா | ச | ரா | ஸ்ரீ | தா | மா | ந்யா | ரங் | க | புங் | க | வ | பா | து | கா |

**சித்திரத்தின் விளக்கம் –** இது கோமூத்ரிகா பந்தம் என்பதாகும். கோ என்பது பசுவாகும். பசு ஒன்று மூத்திரத்தை வெளியேற்றியபடி நடந்து சென்றால் உருவாகும் அமைப்பு இதுவாகும்.

**படிக்கும் முறை –** கட்டங்களில் உள்ள எழுத்துக்களை இடமிருந்து வலமாகப் படிக்கும்போது மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். இதே போன்று, கட்டங்களில் வரையப்பட்டுள்ள கோடுகளைப் பின்பற்றிப் படித்தாலும் அதே ச்லோகம் கிட்டுவதைக் காணலாம்.

921. ஸா பூபா ராமபாரஸ்தா விபூபாஸ்தி ஸபாரதா
தாரபா ஸக்ருபா துஷ்டிபூரபா ராமபாதுகா

சித்திர முறை – 1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1<br>ஸா | 10<br>பூ | 11<br>பா | 4<br>ரா | 5<br>ம | 14<br>பா | 15<br>ர | 8<br>ஸ்தா |
| 9<br>வி | 2<br>பூ | 3<br>பா | 12<br>ஸ்தி | 13<br>ஸ | 6<br>பா | 7<br>ர | 16<br>தா |
| 17<br>தா | 26<br>ர | 27<br>பா | 20<br>ஸ | 21<br>க்ரு | 30<br>பா | 31<br>து | 24<br>ஷ்டி |
| 25<br>பூ | 18<br>ர | 19<br>பா | 28<br>ரா | 29<br>ம | 22<br>பா | 23<br>து | 32<br>கா |

**சித்திரத்தின் விளக்கம் –** இது முரஜபந்தம் என்னும் அமைப்பாகும். முரஜம் என்றால் உடுக்கை என்று பொருள். ஓர் உடுக்கையில் கயிறுகள் எவ்விதம் இழுத்துக் கட்டப்பட்டுள்ளனவோ அது போன்று இங்கு சொற்கள் அமைந்துள்ளன.

**படிக்கும் முறை -** கட்டங்களில் உள்ள எழுத்துக்களை இடமிருந்து வலமாகப் படிக்கும்போது மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். இதே போன்று, கட்டங்களில் வரையப்பட்டுள்ள கோடுகளைப் பின்பற்றிப் படித்தாலும் அதே ச்லோகம் கிட்டுவதைக் காணலாம். கட்டங்களில் உள்ள எண்களையும் பின்பற்றிப் படிக்கலாம்.

923. ஸராகவா ச்ருதௌ த்ருஷ்டா பாதுகா ஸந்ருபாஸநா
ஸவாகவா கதௌ ச்லிஷ்டா ஸ்வாதுர்மே ஸதுபாஸநா




**சித்திரத்தின் விளக்கம் –** இது சரபந்தம் எனப்படும். அம்பின் வடிவத்தை ஒத்தபடி உள்ளதால் இவ்விதம் அழைக்கப்படுகிறது.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

924. காவ்யாயாஸ்தித மாவர்க்க வ்யாஜ்யாதக மார்க்கா
காமதா ஜகத: ஸ்தித்யை ரங்கபுங்கவ பாதுகா

சித்திர முறை – 1




**சித்திர விளக்கம் –** இதற்கு கருடகதி சக்ர பந்தம் என்று பெயர். ஆகாயத்தில் கருடன் வட்டமிடும்போது எவ்விதம் மேலே ஏறி, கீழே இறங்கி வட்டமிடுமோ அது போன்றுள்ள அமைப்பாகும்.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

924. காவ்யாயாஸ்தித மாவர்க்க வ்யாஜ்யாதக மார்க்கா
காமதா ஜகத: ஸ்தித்யை ரங்கபுங்கவ பாதுகா

சித்திர முறை – 2




**சித்திர விளக்கம் –** இதற்கு கருடகதி சக்ர பந்தம் என்று பெயர். ஆகாயத்தில் கருடன் வட்டமிடும்போது எவ்விதம் மேலே ஏறி, கீழே இறங்கி வட்டமிடுமோ அது போன்றுள்ள அமைப்பாகும்.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

925. ஸுரகார்யகரீ தேவீ ரங்கதுர்யஸ்ய பாதுகா
காமதா கலிதாதேசா சரந்தீ ஸாதுவர்த்மஸு




**சித்திர விளக்கம் –** இதற்கு த்விச்ருங்காடக சக்ர பந்தம் (இரண்டு சுற்றுத் தாமரை) என்று பெயர்.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

926. பரதாராதிதாம் தாராம் வந்தே ராகவ பாதுகாம்
பவதாபாதிதாந்தாநாம் வந்த்யாம் ராஜீவ மேதுராம்




**சித்திர விளக்கம்** – இதற்கு த்விசதுஷ்க சக்ர பந்தம் என்று பெயர். இதில் எட்டு கோணங்கள் உள்ளன. ச்லோகத்தில் உள்ள இரண்டு பாதிகளில் காணப்படும் பொதுவான ஒற்றைப்படை எழுத்துக்கள் எட்டு கோணங்களுக்குள் அடைக்கப்படுகின்றன.

**படிக்கும் முறை** – படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

927. காதுபாஸ்யஸதாலோகா காலோதாஹ்ருத தாமகா
காமதாத்வரிரம்ஸாகாகாஸா ரங்கேசபாதுகா

சித்திர முறை – 1




**சித்திர விளக்கம் –** இதற்கு சதுரர சக்ர பந்தம் என்று பெயர்.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

927. காதுபாஸ்யஸதாலோகா காலோதாஹ்ருத தாமகா
காமதாத்வரிரம்ஸாகாகாஸா ரங்கேசபாதுகா

சித்திர முறை – 2




**சித்திர விளக்கம் –** இதற்கு அஷ்டதள பத்ம பந்தம் என்று பெயர். அதாவது, எட்டு தாமரை இதழ்களைக் கொண்டதாகும்.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

928. பாபாகூபாரபாளீபா த்ரிபாதீ பாதபாதபா
க்ருபாரூபா ஜபாலாபா ஸ்வாபா மாபாத் ந்ருபாதிபா




**சித்திர விளக்கம் –** இதற்கு ஷோடச தள பந்தம் என்று பெயர். அதாவது, பதினாறு தாமரை இதழ்களைக் கொண்டதாகும். ச்லோகத்தின் இரண்டு பாதியில் காணப்படும் இரட்டைப்படை எழுத்துக்கள் ஒரே எழுத்துக்கள் ஆகும். இவற்றைத் தாமரை கர்ணிகையில் (நடுப்பகுதி) எழுதி, மற்றவற்றைப் பதினாறு தளங்களில் எழுதுவது வழக்கம்.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

929. ஸ்திராகஸாம் ஸதாராத்யா விஹதாகததாமதா
ஸத்பாதுகே ஸராஸா மா ரங்கராஜபதம் நய

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1<br>ஸ்தி | 30<br>ரா | 9<br>க | 20<br>ஸாம் | 3<br>ஸ | 24<br>தா | 11<br>ரா | 26<br>த்யா |
| 16<br>வி | 19<br>ஹ | 2<br>தா | 29<br>க | 10<br>த | 27<br>தா | 4<br>ம | 23<br>தா |
| 31<br>ஸ | 8<br>த்பா | 17<br>து | 14<br>கே | 21<br>ஸ | 6<br>ரா | 25<br>ஸா | 12<br>மா |
| 18<br>ரங் | 15<br>க | 32<br>ரா | 7<br>ஜ | 28<br>ப | 13<br>த | 22<br>ந்ந | 5<br>ய |

**சித்திர விளக்கம்** – இதற்கு சதுரங்க குதிரை பந்தம் என்று பெயர். அதாவது, சதுரங்கக் கட்டத்தில் நான்கு வரிசைகளை வரையவேண்டும். அவற்றில் இந்த ச்லோகத்தின் எழுத்துக்களை வரிசையாக எழுதவேண்டும். பின்னர், முதல் எழுத்தில் தொடங்கி, மேலே உள்ள படத்தில் காணப்படும் எண்களைப் பின்பற்றிப் படித்தல் வேண்டும். இந்த வரிசை, சதுரங்கத்தில் குதிரையில் நகர்தலை ஒத்து உள்ளதைக் காண்க. இப்படியாகப் படிக்கும்போது, ஒரு புதிய ச்லோகம் உருவாகும். இதுவே ச்லோகம் 930-ஆக உள்ளது காண்க.

**படிக்கும் முறை** – படத்தில் இடமிருந்து வலம் என்ற வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் ச்லோகம் 930 கிடைப்பதைக் காணலாம்.

931. லோகதாரா காமசாரா கவிராஜதுராவசா
தாராகதே பாதராம ராஜதே ராமபாதுகா

சித்திர முறை - 1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 லோ | 9 க | 17 தா | 25 ரா | 32 கா | 24 ம | 16 சா | 8 ரா |
| 2 க | 10 வி | 18 ரா | 26 ஜ | 31 து | 23 ரா | 15 வ | 7 சா |
| 3 தா | 11 ரா | 19 க | 27 தே | 30 பா | 22 த | 14 ரா | 6 ம |
| 4 ரா | 12 ஜ | 20 தே | 28 ரா | 29 ம | 21 பா | 13 து | 5 கா |

**சித்திர விளக்கம்** – இதற்கு அர்த்தப்ரமக பந்தம் என்று பெயர். அதாவது, ச்லோகத்தில் உள்ள எழுத்துக்களை மேலே உள்ள படத்தில் காண்பித்தது போன்று வரையவும். பின்னர் இடமிருந்து வலமாகப் படித்தால் ச்லோகம் கிட்டும். மேலும், படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி, முதல் நெடுக்கு வரிசையையும், கடைசி நெடுக்கு வரிசையையும் படித்தால், ச்லோகத்தினுடைய முதல் வரியின் பாதி கிட்டும். இதே போன்று இரண்டாம் நெடுக்கு வரிசையையும், கடைசிக்கு முந்தைய நெடுக்கு வரிசையையும் படித்தால், ச்லோகத்தினுடைய முதல் வரியின் இரண்டாம் பாதி கிட்டும்.

**படிக்கும் முறை** – படத்தில் இடமிருந்து வலம் என்ற வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

931. லோகதாரா காமசாரா கவிராஜதுராவசா
தாராகதே பாதராம ராஜதே ராமபாதுகா

சித்திர முறை – 2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| லோ | க | தா | ரா | கா | ம | சா | ரா |
| க | வி | ரா | ஜ | து | ரா | வ | சா |
| தா | ரா | க | தே | பா | த | ரா | ம |
| ரா | ஜ | தே | ரா | ம | பா | து | கா |
| கா | து | பா | ம | கா | தே | ஜ | ரா |
| ம | ரா | த | பா | தே | க | ரா | தா |
| சா | வ | ரா | து | ஜ | ரா | வி | க |
| ரா | சா | ம | கா | ரா | தா | க | லோ |

932. ஜயாமபாபாமயாஜயாமஹே துதுஹே மயா
மஹேசகாகாசஹேமபாதுகாமமகாதுபா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜ | யா | ம | பா | பா | ம | யா | ஜ |
| யா | ம | ஹே | து | து | ஹே | ம | யா |
| ம | ஹே | ச | கா | கா | ச | ஹே | ம |
| பா | து | கா | ம | ம | கா | து | பா |
| பா | து | கா | ம | ம | கா | து | பா |
| ம | ஹே | ச | கா | கா | ச | ஹே | ம |
| யா | ம | ஹே | து | து | ஹே | ம | யா |
| ஜ | யா | ம | பா | பா | ம | யா | ஜ |

**சித்திர விளக்கம் –** இதற்கு அர்த்தப்ரமக பந்தம் என்று பெயர். அதாவது, ச்லோகத்தில் உள்ள எழுத்துக்களை மேலே உள்ள படத்தில் காண்பித்தது போன்று வரையவும். பின்னர் இடமிருந்து வலமாகப் படித்தால் ச்லோகம் கிட்டும். மேலும், படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி, முதல் நெடுக்கு வரிசையையும், கடைசி நெடுக்கு வரிசையையும் படித்தால், ச்லோகத்தினுடைய முதல் வரியின் பாதி கிட்டும். இதே போன்று இரண்டாம் நெடுக்கு வரிசையையும், கடைசிக்கு முந்தைய நெடுக்கு வரிசையையும் படித்தால், ச்லோகத்தினுடைய முதல் வரியின் இரண்டாம் பாதி கிட்டும்.

**படிக்கும் முறை –** படத்தில் இடமிருந்து வலம் என்ற வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

933. பாபாதபாபாதபாபாபாதபாதத பாதபா
தபாதபாபாதபாத பாதபா ததபாதபா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | பா | த | பா | பா | த | பா | பா |
| பா | த | பா | த | த | பா | த | பா |
| த | பா | த | பா | பா | த | பா | த |
| பா | த | பா | த | த | பா | த | பா |
| பா | த | பா | த | த | பா | த | பா |
| த | பா | த | பா | பா | த | பா | த |
| பா | த | பா | த | த | பா | த | பா |
| பா | பா | த | பா | பா | த | பா | பா |

939. பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா

சித்திரம் – 1




**சித்திர விளக்கம்** – இதற்கு அஷ்டதள பந்தம் என்று பெயர் (எட்டு இதழ்கள் கொண்ட தாமரை)

**படிக்கும் முறை** – படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

939. பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா
பாதபா பாதபா பாதபா பாதபா

சித்திரம் – 2




**சித்திர விளக்கம் –** இதற்கு சதுர்தள பந்தம் என்று பெயர் (நான்கு இதழ்த் தாமரை)

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

940. ஸாகேத த்ராண வேளாஜநித ததநிஜப்ராங்கண ஸ்ரீப்ரபாஸா
ஸாபா ப்ரச்ரீடவ்யாம் இயமமமமமிவ்யாபதுச் சேதிலாஸா
ஸாலாதிச்சேத  திக்மா ஹவ ருருரு வஹஹ்ரீகரஸ்யாமராஸா
ஸா ராமஸ்யாங்க்ரி மப்யாஜநி ந ந நதிஜஸ்தூலமுத்த்ராதகே ஸா



**சித்திர விளக்கம் –** இதற்கு அஷ்டதள பத்ம பந்தம் என்று பெயர். ச்லோகத்தின் தாமரை இதழ்களின் நுனியில் உள்ள எழுத்துக்களைப் படித்தால் "வேங்கடபதி கமலம்" என்று கிட்டும். ஸ்வாமி தேசிகனின் இயற்பெயர் வேங்கடேசன் என்பதாகும். இதனை இந்தச் சித்திரம் வெளிப்படுத்துகிறது.

**படிக்கும் முறை –** படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

941. ரம்யே வேச்மநி பாபராக்ஷஸபிதாஸ்வாஸக்ததீ நாயிகா
நந்தும் கர்மஜ துர்மதாலஸதியாம் ஸாஹந்தநாதீக்ருதா
ஸத்வாட ப்ரமிகாஸ்ஸு தாபஸ தபோவிஸ்ரம்ப பூயந்த்ரிகா
காசித் ஸ்வைரகமேந கேளிஸமயே காமவ்ரதா பாதுகா



**சித்திர விளக்கம்** – இதற்கு மஹாசக்ர பந்தம் என்று பெயர். ச்லோகத்தில் உள்ள 3, 22, 41, 17, 36, 55 என்னும் எண்களைப் படித்தால் “வேங்கடநாதீய” என்று ஸ்வாமி தேசிகனின் பெயர் வெளிப்படும். அடுத்து ச்லோகத்தில் உள்ள 6, 25, 44, 14, 33, 52 என்னும் எண்களைப் படித்தால் “பாதுகாஸஹஸ்ர” என்று இந்த நூலின் பெயர் வெளிப்படும். இதனை இந்தச் சித்திரம் வெளிப்படுத்துகிறது.

**படிக்கும் முறை** – படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

942. ஸ்ரீஸம்வேதநகர்மக்ருத் வஸு தவ ஸ்யாம் ருத்ததைர்யஸ்புட:
ஸ்ரீபாதாவநிவிஸ்த்ருதாஸி ஸுகிநீ த்வம் கேயயாதாயநா
வேதாந்தாநுபவாதி பாதி ஸுதநு: ஸாந்த்ரேட்யபாவப்ரதே
அங்கஸ்தாச்யுததிவ்யதாஸ்ய ஸுமதி: ப்ராணஸ்தஸீதாதன



**சித்திர விளக்கம்** – இதற்கு சதுரங்கம் அஷ்டார சக்ரம் என்று பெயர். இந்த ச்லோகத்தின் மூலம் ஸ்வாமி தேசிகனுக்கு வழங்கப்பட்ட நான்கு விருதுகள் கூறப்படுகின்றன. அவையாவன:

- ச்லோகத்தில் உள்ள 20, 39, 58, 19, 38, 57, 76 என்னும் எண்களைப் படித்தால் "ஸ்ரீவேங்கடநாதேந" என்று ஸ்வாமி தேசிகனின் பெயர் வெளிப்படும்.
- ச்லோகத்தில் உள்ள 3, 22, 41, 60, 17, 36, 55, 74 என்னும் எண்களைப் படித்தால் "வேதாந்தாசார்யதாவதா" – வேதாந்தங்களைப் பற்றிய விஷயங்களில் ஆசார்யராக உள்ளவர்.
- ச்லோகத்தில் உள்ள 6, 25, 44, 63, 14, 33, 52, 71 என்னும் எண்களைப் படித்தால் "கவிவாதிம்ருகேந்த்ரேண" – கவிகளுக்கும் சிங்கம் போன்றவர்.
- ச்லோகத்தில் உள்ள 8, 27, 46, 65, 12, 31, 50, 69 என்னும் எண்களைப் படித்தால் "க்ருதா பாதாவநீநுதி:" – பாதுகையின் ஸ்தோத்ரம் இயற்றப்பட்டது.

இதனை இந்தச் சித்திரம் வெளிப்படுத்துகிறது.

**படிக்கும் முறை** – படத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசையில் படித்தால் மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

943. கநகபீட நிவிஷ்ட தநுஸ்ததா
ஸுமதி தாயிநிஜாநுபாவஸ்ம்ருதா
விதிசிவ ப்ரமுகை ரபிவந்திதா
விஜயதே ரகு புங்கவ பாதுகா

944. தீந கோபீஜநிக்லிஷ்ட பீநுத் ஸதா
ராமபாதாவநி ஸ்வாநுபவ ஸ்திதா
ஏதிமேவச்யம் உத்தாரபாவச்ரிதா
தேஜஸா தேந குஷ்டிம் கதா பாலிகா

க ந க பீ ட நி வி ஷ்ட த நு ஸ்த தா ஸு ம தி தா யி நி ஜா நு ப வ ஸ்தி தா



தீ ந கோ பீ ஜ நி க்லி ஷ்ட பீ நு த்ஸ தா ரா ம பா தா வ நி ஸ்வா நு ப வ ஸ்தி தா

வி தி சி வ ப்ர மு கை ர பி வ ந்தி தா வி ஜ ய தே ர கு பு ங்க வ பா து கா



ஏ தி மே வ ச்ய மு த்தா ர பா வ ச்ரி தா தே ஜ ஸா தே ந கு ஷ்டி ங்க தா பா லி கா

**சித்திரத்தின் விளக்கம்** – இது கோமூத்ரிகா பந்தம் என்பதாகும். முதல் படத்தின் முதல் வரியும், இரண்டாவது படத்தின் முதல் வரியும் சேர்ந்து ச்லோகம் 943 ஆகும். இதே போன்று இரண்டாம் படத்தின் இரண்டாம் வரியும், இரண்டாவது படத்தின் இரண்டாம் வரியும் சேர்ந்து ச்லோகம் 944 ஆகும்.

**படிக்கும் முறை** – கட்டங்களில் உள்ள எழுத்துக்களை இடமிருந்து வலமாகப் படிக்கும்போது மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். இதே போன்று, கட்டங்களில் வரையப்பட்டுள்ள கோடுகளைப் பின்பற்றிப் படித்தாலும் அதே ச்லோகம் கிட்டுவதைக் காணலாம்.

945. தாம நிராக்ருத தாமஸ லோகா
தாத்ருமுகைர் விநிதா  நிஜதாஸை:
பாபமசேஷமபகுருஷே மே
பாது விபூஷித ராகவபாதா

946. க்ருபாநகத்ராத ஸுபூரதுஷ்டா
மேத்யா ருசா பாரிஷதாம பூபா
பாதாவநி ஸ்த்யாநஸுகைர் ந த்ருப்தா
காந்த்யா ஸமேதாதிக்ருதாநிரோதா







**சித்திரத்தின் விளக்கம் –** இது கோமூத்ரிகா பந்தம் என்பதாகும். முதல் படத்தின் முதல் வரியும், இரண்டாவது படத்தின் முதல் வரியும் சேர்ந்து ச்லோகம் 945 ஆகும். இதே போன்று இரண்டாம் படத்தின் இரண்டாம் வரியும், இரண்டாவது படத்தின் இரண்டாம் வரியும் சேர்ந்து ச்லோகம் 946 ஆகும். இரண்டாவது ச்லோகத்தின் வரிகள் படத்தில் தலைகீழாக எழுதப்பட்டுள்ளதைக் காண்க.

**படிக்கும் முறை** – கட்டங்களில் உள்ள எழுத்துக்களை இடமிருந்து வலமாகப் படிக்கும்போது மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம். இதே போன்று, கட்டங்களில் வரையப்பட்டுள்ள கோடுகளைப் பின்பற்றிப் படித்தாலும் அதே ச்லோகம் கிட்டுவதைக் காணலாம்.

949. தாரஸ்பாரதரஸ்வர ரஸபரரா ஸா பதாவநீ ஸாரா
தீரஸ்வைர சரஸ்திர ரகுபுரவாஸரதி ராமஸவா




**சித்திரத்தின் விளக்கம் –** இது எட்டு தளங்கள் கொண்ட பத்மபந்தம் என்பதாகும். இதில் தாமரை மலர் மீது ஸ்ரீரங்கநாதனின் திருவடியும் பாதுகையும் உள்ள அமைப்பைக் காணலாம்.

**படிக்கும் முறை** – கட்டங்களில் உள்ள எழுத்துக்களை இடமிருந்து வலமாகப் படிக்கும்போது மேலே உள்ள ச்லோகம் கிடைப்பதைக் காணலாம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (31. நிர்வேத பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

951. ப்ரபத்யே பாதுகாம் தேவீம் பரவித்யாம் இவ ஸ்வயம்
யாம் அர்ப்பயதி தீநாநாம் தயமாநோ ஜகத் குரு:

**பொருள்** - அனைத்து உலகிற்கும் முதல் ஆசார்யனாக உள்ள ஸ்ரீரங்கநாதன் மிகவும் கருணையுடன், துன்பம் உற்றவர்கள் உய்யும் விதமாகச் செய்வது என்னவென்றால் – மோக்ஷ ஸாதனமான பக்தி மற்றும் ப்ரபத்தி என்னும் ஞானம் போன்ற தனது பாதுகைகளைத் தானாகவே அளிக்கிறான். அந்தப் பாதுகைகளை நான் சரணம் அடைகிறேன்.

952. அபி ஜந்மநி பாதுகே பரஸ்மிந்
அநகை: கர்மபி: ஈத்ருசோ பவேயம்
ய இமே விநயேந ரங்கபர்த்து:
ஸமயே த்வாம் பதயோ: ஸமர்ப்பயந்தி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அந்தந்த காலங்களில் ஸ்ரீரங்கநாதனின் அர்ச்சகர்கள் உன்னை அவனது திருவடிகளில் மிகவும் அன்புடன் ஸமர்ப்பணம் செய்கிறார்கள். எனது அடுத்த பிறவியில் இவர்கள் போன்று ஸ்ரீரங்கநாதனின் அர்ச்சகராகப் பிறந்து உனக்கு கைங்கர்யம் செய்வேனோ?

953. பரிவர்த்தயிதா பிதாமஹாதீந்
த்வம் இவ அநந்தம் அஸௌ வஹதி அநேஹா
அதுநாபி ந ஸௌரிபாதுகே த்வாம்
அநக ஆலம்பநம் நாப்யுபைதி சித்தம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது பாட்டன், அவனுக்குப் பாட்டன் என்று தொடங்கி நான்முகன் வரையுள்ள பல உயிர்களும் மாற்றி மாற்றி ஸம்ஹாரம் செய்யப்பட்டும், ஸ்ருஷ்டி செய்யப்பட்டும் செய்வதான காலச்சுழற்சி என்பது, நீ ஸ்ரீரங்கநாதனை தாங்கியபடி உள்ளது போன்று, எல்லையற்ற காலமாக இயங்கி வருகிறது. ஆயினும் எனது மனமானது, த்யானிக்கத் தகுந்த மிகவும் உயர்ந்த வஸ்துவாக உள்ள உன்னைக் கைக்கொள்ளாமல் இருக்கிறதே!


**Email:**sridharan_book3yahoo.co.in

954. கமலாத்த்யுஷிதே நிதௌ நிரீஹே
ஸுலபே திஷ்டதி ரங்க கோச மத்யே
த்வயி தத் ப்ரதிலம்பநே ஸ்திதாயாம்
பரம் அந்விச்சதி பாதுகே மந: மே

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்ககநாச்சியாரால் எப்போதும் வாஸம் செய்யப்படுவதாகவும், உலக விஷயங்கள் மீது உள்ள ஆசைகளை நீக்குவதாகவும், மிகவும் எளிதாக அடையக்கூடியதாகவும் உள்ள ஸ்ரீரங்கநாதன் என்ற மிகப் பெரிய புதையல், ஸ்ரீரங்கவிமானம் என்ற இடத்தில் உள்ளது. அந்தப் புதையலை அடைய உதவும் மந்திரவாதி போன்று நீ உள்ளாய். இப்படி நீங்கள் இருவரும் உள்ளபோது, உங்களை நாடாமல் எனது மனம் வேறு எதனையோ தேடுகிறதே!

955. யத்யபி அஹம் தரளதீ: தவ ந ஸ்மரேயம்
ந ஸ்மர்த்தும் அர்ஹதி கதம் பவதீ ஸ்வயம் மே
வத்ஸே விஹார குதுகம் கலயதி அவஸ்தா
கா நாம கேசவ பதாவநி வத்ஸல்யா

**பொருள்** - அழகான தலைமுடி கொண்ட ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உலக விஷயங்களில் மேயும் கன்று போன்ற புத்தியுடையவன் என்பதால், பசுவாகிய உன்னை நான் எண்ணாமல் இருக்கக்கூடும். தனது கன்று வெகுதூரம் சென்று விளையாட எண்ணும்போது, பசுவின் நிலை எப்படி இருக்கும்? அந்தப் பசு எவ்விதம் தனது கன்றைத் தேடிச் செல்லுமோ அது போன்று, நீயாகவே என்னை எண்ணி வரவேண்டும்.

956. மாதர் முகுந்த கருணாம் அபி நிஹ்நுவாநாத்
கிம் வா பரம் கிமபி கிஷ்பிஷதோ மதீயாத்
காடம் க்ருஹீத சரணா கமநாபதேசாத்
தத் ப்ரேரண ப்ரணயிநீ தவ சேத் ந லீலா

**பொருள்** – தாயே! ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே (கடந்த ச்லோகத்தில் "நீயாகவே தேடி வர வேண்டும்", என்று கூறியவுடன் பாதுகைகள், "நான் உன்னைத் தேடி வரவில்லை என்றால் உனது பாவமே அதற்குக் காரணம்", என்றாள். உடனே ஸ்வாமி அவளிடம், "உனது லீலைகள் என் பாவங்களை விட வலிமையானது அல்லவோ?", என்கிறார்) ஸஞ்சாரம் என்பதைக் காரணமாகக் கொண்டு ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை நீ கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறாய். இப்படியாக அவனைப் புறப்படத் தூண்டியபடி

உள்ளாய். இத்தனை உயர்ந்தவையாக உனது லீலை இல்லை என்றால் – ஸ்ரீரங்கநாதன் தானாகவே என் மீது செலுத்துகின்ற கருணையை மறுக்கின்ற அளவிற்கு உள்ள எனது பாவங்களை விட உயர்ந்த வஸ்து வேறு என்ன உள்ளது? (உனது கருணை மட்டுமே எனது பாவங்கள் நீக்கவல்லது)

957. க்ஷீபா அஸி காஞ்சந பாதாவநி கைடபாரே
பாதாரவிந்த மகரந்த நிஷேவணேந
தேவி த்வதந்திகஜுஷ: கதம் அந்யதா மே
தீநாக்ஷராணி ந ச்ருணோஷி தயாதிகா த்வம்

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! கைடபன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்ற தாமரையில் உள்ள தேனைப் பருகி மயக்கம் கொண்டு நீ உள்ளாய். இவ்விதம் நீ மயக்கம் கொள்ளாமல் தெளிந்த நிலையில் இருந்தாய் என்றால் – கருணை நிரம்பிய நீ, எனது வருத்தம் நிறைந்த சொற்களைக் கேட்காமலா இருந்திருப்பாய் (நீ கேட்காத காரணத்தால் அரங்கனின் திருவடி அழகில் மயங்கி உள்ளாய் என்று கருத்து).

958. மாத: த்வத் அர்ப்பித பரஸ்ய முகுந்தபாதே
பத்ரேதராணி யதி நாம பவந்தி பூய:
கீர்த்தி: ப்ரபந்ந பரிரக்ஷண தீக்ஷிதாயா:
கிம் ந த்ரபேத தவ காஞ்சந பாதரக்ஷே

**பொருள்** - என் தாய் போன்ற தங்கமயமான பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உன்னால் ஸமர்ப்பிக்கப்பட்ட, மோக்ஷத்தின் உபாயமான பக்தி என்பதைச் சரியாகச் செய்யவேண்டிய பொறுப்பைச் சுமர்த்தப்பட்டவனாகிய எனக்கு - அதன் பின்னரும் நன்மை அல்லாத தீமைகளே தொடர்ந்து வருகின்றன என்று வைத்துக்கொள்வோம். அப்படி என்றால், சரணம் அடைந்தவர்களைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்ற விரதம் கொண்டுள்ள உனது கீர்த்தியானது வெட்கம் கொள்ளாதோ? (அதற்குக் பயந்தாவது நீ காப்பாற்றவேண்டாமோ)

959. தௌவாரிக த்விரஸந ப்ரபலாந்தராயை:
தூயே பதாவநி துராட்ய பிலப்ரவேசை:
தத் ரங்கதாம நிரபாய தந உத்தராயாம்
த்வய்யேவ விச்ரமய மங்க்ஷு மநோரதம் மே


**Email:**sridharan_book3yahoo.co.in

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பாம்பின் புத்துக்கள் போன்று இந்த உலகில் உள்ள தீமை நிறைந்த செல்வந்தர்களின் வீடுகள் உள்ளன. அந்த வீடுகளின் வாயிலில் உள்ள வாயிற்காப்போன் பாம்பு போன்றே உள்ளான். இப்படிப்பட்ட இடையூறுகளால் நான் பலமுறை துயரப்படுகிறேன். ஸ்ரீரங்கநாதன் என்ற அழிவற்ற பெரும் செல்வத்தை நீ எப்போதும் தாங்கியபடி உள்ளாய். இப்படிப்பட்ட உன்னிடம் நிலையாக இருக்கும்படி எனது ஆசை என்ற தேரைச் செலுத்தி வருவாயாக.

960. வ்யாமுஹ்யதாம் த்ரிவித தாபமயே நிதாகே
மாயாவிசேஷ ஜநிதாஸு மரீசிகாஸு
ஸம்ஸ்ப்ருஷ்ட சௌரி சரணா சரணாவநி த்வம்
ஸ்தேயா ஸ்வயம் பவஸி ந: சரமே புமர்த்தே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் மற்றும் ஆதிதைவிகம் என்ற மூன்று விதமான வேதனைகள் நிறைந்த கோடைகாலம் போன்று இந்த ஸம்ஸாரம் உள்ளது, இந்தக் கோடையில், ப்ரக்ருதியின் மூன்று குணங்களானவை கானல்நீரைப் போன்று தோன்றி, எங்களை மயக்கியபடி உள்ளன. இந்த நேரத்தில் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை எப்போதும் வருடியபடி உள்ள நீயே, உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷ விஷயத்தில் எங்களிடம், "இந்தத் திருவடிகளைப் பாருங்கள் – இதுதான் உயர்ந்த மோக்ஷம். இது நிச்சயம் கிட்டும்", என்று கூறுகிறாய் போலும்.

961. அச்சேத்யயா விஷய வாகுரயா நிபத்தாந்
தீநாந் ஜநார்த்தந பதாவநி ஸத்பதஸ்த்தா
ப்ராய: க்ரமேண பவதீ பரிக்ருஹ்ய மௌளௌ
காலேந மோசயதி ந: க்ருபயா ஸநாதா

**பொருள் -** ஜனங்களால் எப்போதும் வேண்டப்படும் ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அறுத்துக் கொண்டு வெளியே வர இயலாதபடி இருக்கின்ற உலக விஷயங்கள் என்னும் வலையில் நாங்கள் சிக்கித் தவிக்கிறோம். அப்போது உனது கருணை காரணமாக நீ ஆகாய மார்க்கமாக வருகிறாய். சரியான காலகட்டத்தில் மேலே நின்றபடி எங்கள் தலையைப் பிடித்து, அந்த வலையில் இருந்து இழுத்து, எங்களை விடுவிக்கிறாய்.

962. ஸம்வாஹிகா சரணயோர் மணிபாதரக்ஷே
தேவஸ்ய ரங்கவஸதே: தயிதா நநு த்வம்
கஸ்த்வாம் நிவாரயிதும் அர்ஹதி யோஜயந்தீம்
மாத: ஸ்வயம் குணகணேஷு மம அபராதாந்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாயே! ஸ்ரீரங்கவிமானத்தைத் தனது ஆஸ்தானமாகக் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை எப்போதும் தாங்கியபடி உள்ள ப்ரியமானவள் நீ அல்லவோ? எனது குற்றங்களுக்காக ஸ்ரீரங்கநாதன் என்னைத் தண்டிக்க முற்பட்டாலும், எனது குற்றங்களைச் சட்டென்று குணங்களாக நீ மாற்றிக் காட்டி, அவனது தண்டிக்கும் செயலைத் தடுக்கிறாய். இப்படிப்பட்ட உன்னை வேறு யார் தடுக்கக்கூடும்?

963. கிம் வா பவிஷ்யதி பரம் கலுஷ ஏக வ்ருத்தே:
ஏதாவதா அப்யநு பஜாதம் அநேஹஸா மே
ஏகம் ததஸ்தி யதி பச்யஸி பாதுகே தே
பத்மாஸஹாய பதபங்கஜ போகஸாம்யம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! இது நாள் வரை நான் பாவங்கள் செய்வதை மட்டுமே தொழிலாகக் கொண்டபடி உள்ளேன். இவற்றின் பலனாகிய துன்பமோ இன்பமோ இனிப் புதிதாக எதுதான் எனக்கு ஏற்படப்போகிறது? ஆனால் நீ என்னை உற்று நோக்கினால் போதுமானது. அதன் மூலம், இதுவரை எனக்குக் கிட்டாமல் உள்ள ஒன்று கிட்டிவிடும். அது என்னவென்றால் - ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளை உனக்கு சமமாக நின்று நானும் அனுபவிக்கும் நிலையே ஆகும்.

964. விவித விஷய சிந்தா ஸந்ததாபி: சிரம் மாம்
ஜநித கலுஷம் இத்தம் தேவி துவாஸநாபி:
பதஸரஸிஜயோ: த்வம் பாதுகே ரங்கபர்த்து:
பரிமள பரிவாஹை: பாவநை: வாஸயேதா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! உலக விஷயங்கள் என்னும் பலவிதமான சிந்தனைகளின் வாஸனைகள் காரணமாக நான் பாவங்கள் என்னும் அழுக்கு சூழ நிற்கிறேன். இந்த நாற்றம் தீரும்படியாக, ஸ்ரீரங்கநாதனின் திருவடித்தாமரையின் வாசனை வெள்ளம் மூலம் என்னை நறுமணம் வீசும்படிச் செய்வாயாக.

965. சரணம் அதிகத: த்வாம் சார்ங்கிண: பாதரக்ஷே
ஸக்ருதபி விநியுக்தம் த்வத் ஸபர்யாதிகாரே
புநரபி சதமேநம் ஹஸ்தம் உத்தாநயேயம்
தநமத முதிதாநாம் மாநவாநாம் ஸமாஜே

**பொருள்** - சார்ங்கம் என்னும் வில்லைக் கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னையே சரணம் என்று புகுந்த நான், ஒருமுறையாவது உன்னை ஆராதிக்கப் பயன்படுத்தப்பட்ட எனது கையை, செல்வம் அதிகமாக உள்ள காரணத்தினால் கர்வத்துடன் ஆனந்தமாக உள்ள மனிதர்களின் முன்பாக எவ்விதம் நீட்டி நிற்பேன்?

966. யதி கிமபி ஸமீஹே கர்ம கர்த்தும் யதாவத்
ப்ரதிபதம் உபஜாதை: ப்ரத்யவேயாம் நிமித்தை:
அவதிரஸி யதி த்வம் தத்ர நைமித்திகாநாம்
சரணம் இஹ கிம் மே சௌரிபாதாவநி ஸ்யா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! சாஸ்த்ரங்கள் விதிக்கின்ற கர்மங்களை நான் அனுஷ்டிக்க முயற்சி செய்யும்போது பலவிதமான தவறுகள் அடிக்கடி ஏற்பட, இதனால் குற்றம் நிறைந்தவன் ஆகிறேன். இப்படிப்பட்ட தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக நீயே உள்ளாய். இப்படி நீ உள்ளபோது, கர்மங்களை நான் கடைப்பிடிக்காமல் உள்ள நேரத்திலேயே நீ ஏன் என்னைக் காப்பாற்றக்கூடாது?

967. அந்தர்லீநை: அகபரிகரை ஆவிலா சித்த விருத்தி:
சப்தாதீநாம் பரவசதயா துர்ஜயாநி இந்த்ரியாநி
விஷ்ணோ: பாத ப்ரணயிநி சிராத் அஸ்ய மே துக்க ஸிந்தோ:
பாரம் ப்ராப்யம் பவதி பரயா வித்யயா வா த்வயா வா

**பொருள்** - எங்கும் நிறைந்தவனான ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் மீது மிகவும் ஆசை கொண்ட பாதுகையே! எனது மனதிற்குள் நிறைந்துள்ள பாவங்களின் காரணமாக மனம் மிகவும் கலங்கியே நிற்கிறது. இந்த்ரியங்கள் அனைத்தும் சப்தம் போன்ற அவற்றின் விஷயங்களுக்கு வசப்பட்டு நிற்பதால், வெல்ல இயலாதபடி உள்ளன. இத்தகைய எனது துக்கம் நீங்குவது என்பது பக்தியின் மூலமா (ஸ்ரீரங்கநாதனிடம் எல்லையற்ற ப்ரியம்), ப்ரபத்தி மூலமா (ஸ்ரீரங்கநாதனிடம் அசைக்க இயலாத நம்பிக்கை) அல்லது உன்னைச் சரணம் அடைவதன் மூலமா?

968. கோமாயூநாம் மலயபவநே தஸ்கராணாம் ஹிமாம்சௌ
துர்வ்ருத்தாநாம் ஸுசரிதமயே ஸத்பதே த்வத்ஸநாதே
தத்வஜ்ஞாநே தரளமநஸாம் சார்ங்கிண: பாதரக்ஷே
நித்யோத்வேகோ பவதி நியதே: ஈத்ருசீ துர்விநீதி:

**பொருள்** - சார்ங்கம் என்ற வில்லை உடைய ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! குள்ளநரிகளுக்கு தென்றல் காற்றும், திருடர்களுக்குக் குளிர்ந்த கிரணங்கள் கொண்ட பௌர்ணமி நிலவும் பிடிக்காமல் உள்ளது. தீய நடத்தை உள்ளவர்களுக்கு உன்னையே தெய்வமாக எண்ணியபடி பின்பற்றக்கூடிய தர்ம மார்க்கம் என்பது பிடிக்காமல் உள்ளது. தடுமாறும் மனதைக் கொண்டவர்களுக்கு, உண்மையான ஞானம் அறிவதில் வெறுப்பு உள்ளது. இப்படியாக அல்லவோ தெய்வத்தின் போக்கு உள்ளது?

969. காலே ஜந்தூந் கலுஷகரணே க்ஷிப்ரம் ஆகாரயந்த்யா:
கோரம் நாஹம் யமப்ரிஷதோ கோஷமாகர்ணயேயம்
ஸ்ரீமத் ரங்கேச்வர சரணயோ: அந்தரங்கை: ப்ரயுக்தம்
ஸேவாஹ்வாநாம் ஸபதி ச்ருணுயாம் பாதுகா ஸேவக இதி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது புலன்கள் ஒடுங்கி நிற்கின்ற அந்திம காலத்தில், "உடனடியாக வா", என்று மனிதர்களை விரட்டுகின்ற யமகிங்கரர்களின் பயங்கரமான ஓசையை நான் கேட்காமல் இருக்கவேண்டும். ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்ந்துள்ள ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்பவர்களால், "அந்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகா ஸேவகனை அழைத்து வா", என்ற அருளிப்பாட்டை வெகு விரைவாக நான் கேட்கவேண்டும்.

**விளக்கம்** - ஸ்வாமி தேசிகனுக்கு உபயவேதாந்தாசார்யர், கவிதார்க்கிகஸிம்ஹம், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் போன்ற பல விருதுகள் திருவரங்கத் திவ்யதம்பதிகளால் அளிக்கப்பட்டது. ஆனால் தனது அந்திம காலத்தில் அந்தப் பெயர்கள் கூறி அழைப்பதை ஸ்வாமி பெரிதாக எண்ணவில்லை. மாறாக "பாதுகா ஸேவகன்" என்ற பெயரையே விரும்புகிறார்.

970. பாஷாண கல்பம் அந்தே பரிசித கௌதம பரிக்ரஹந்யாயாத்
பதிபத பரிசரணார்ஹம் பரிணமய முகுந்த பதரக்ஷிணி மாம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது அந்திம காலத்தில் கல்லைப் போன்று நான் எந்தவிதமான நினைவும் இன்றிக் கிடப்பேன். அந்த நிலையில் நான் உனக்கு முன்பே பழக்கமான கௌதம முனிவரின் பத்னியாகிய அகலிகை போன்று கிடப்பேன். அவளை நீ எப்படிப் பிழைக்க வைத்து, அவளது கணவனின் பணிவிடையில் ஈடுபடுத்தினாயோ, அது போன்று என்னையும் எனது பதியான ஸ்ரீரங்கராஜனின் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்யும்படிச் செய்வாயாக.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
நிர்வேத பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


Email:sridharan_book3yahoo.co.in

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (32. பல பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

971. உபாக்யாதாம் ததாத்வேந வஸிஷ்டாத்யை: மஹர்ஷிபி:
உபாய பலயோ: காஷ்டாம் உபாஸே ராமபாதுகாம்

**பொருள்** - வஸிஷ்டர் போன்ற மஹரிஷிகளால் உபாயத்தின் எல்லையாக உள்ளது என்று கூறப்பட்டதாக ஸ்ரீராமனின் பாதுகையை நான் உபாஸனை செய்கிறேன்.

972. நிவிசேய நிரந்தரம் ப்ரதீத:
த்ரிதசாநாம் விபவம் த்ருணாய மத்வா
ஸவிதே தவ தேவி ரங்கபர்த்து:
பதலீலாகமலம் ஸமுத்வஹந்த்யா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! தேவர்களின் ஐச்வர்யங்கள் அனைத்தையும் அற்பமாக உள்ள பொருள்களுக்குச் சமமாக எண்ணி, அவற்றைத் தள்ளி ஸ்ரீரங்கநாதனின் திருவடி என்னும் விளையாட்டுத் தாமரை மலரை தாங்கியபடி உள்ள உன் அருகில் நான் நின்று கொண்டு, உன் மீது மிகவும் ப்ரீதியுடன் வாழக்கடவேன்.

973. கிம் அஹம் மணி பாதுகே த்வயா மே
ஸுலபே ரங்கநிதௌ ச்ரியா ஸநாதே
கரணாநி புந: கதர்த்தயேயம்
க்ருபணத்வார துராஸிகாதி துக்கை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாச்சியார் என்னும் நிதியுடன் கூடியதாக, மிகவும் உயர்ந்த நிதியாக ஸ்ரீரங்கநாதன் எனக்கு உள்ளான். அவன் உன் மூலம் மிகவும் சுலபமாகக் கிடைக்கக் கூடியவனாகவும் இருக்கிறான்.இப்படி உள்ளபோது, அற்பமானவர்கள் வீட்டு வாசலில் காத்து நிற்பது போன்ற துன்பங்கள் மூலம் எனது இந்த்ரியங்களை நான் வருத்துவேனோ?

974. ஸ்க்ருதபி அநுபூய ரங்கபர்த்து:
த்வதுபச்லேஷ மநோஹரம் பதாப்ஜம்
அபுநர்ப்பவ கௌதுகம் ததைவ
ப்ரசமம் கச்சதி பாதுகே முநீநாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னையே எப்போதும் ஆராதனை செய்தபடியும், த்யானித்தபடியும் உள்ளவர்களுக்கு, உன்னுடன் சேர்ந்து நிற்பதான

ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகள், மேலும் அழகாகத் தோன்றுகின்றன. அந்த நேரத்தில் அவ்விதம் சேவிப்பவர்கள் முனிவர்களாகவே இருந்தாலும், ”மறுபிறவி எடுக்கக்கூடாது”, என்று எண்ணம் அப்போதே அடங்கிவிடுகிறது (மீண்டும் பிறவி எடுத்து, பாதுகையுடன் கூடிய ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைச் ஸேவித்தபடி இருக்கவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது).

975. அபரஸ்பர பாதிநாம் அமீஷாம்
அநிதம் பூர்வ நிரூட ஸந்ததீநாம்
பரத வ்யஸநாத் அநூந ஸீம்நாம்
துரிதாநாம் மம நிஷ்க்ருதி: த்வம் ஆஸீ:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் வளர்ந்தபடி உள்ளது; ”இது முதல்” என்று கூற இயலாமல், எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளது; உறுதியாகவும் உள்ளது; பரதனுக்கு உண்டான துன்பத்தைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது - இப்படியாக உள்ள எனது பாவங்களுக்கு ஏற்ற ப்ராயச்சித்தமாக நீயே ஆகிறாய்.

976. த்வத் உபாஸந ஸம்ப்ரதாயவித்பி:
ஸமயே ஸாத்வத ஸேவிதே நியுக்தா:
பரதவ்ரதிநோ பாவாம்புராசிம்
கதிசித் காஞ்சந பாதுகே தரந்தி

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! பாஞ்சராத்ர ஆகமத்தைப் பின்பற்றுபவர்கள் மூலம் கைக்கொள்ளப்பட்ட முறையில், உன்னை எப்படி ஆராதனை செய்வது என்று நன்று அறிந்தவர்கள் மூலம், ஒரு சிலர் உன்னை ஆராதிக்க நியமிக்கப்பட்டனர். இப்படியாக பரதன் போன்று விரதம் மேற்கொண்ட சிலர், தாண்ட இயலாத ஸம்ஸாரம் என்ற கடலைக் கடக்கின்றனர்.

977. அலம் அச்யுத பாதுகே யதாவத்
பவதீ யச்ச பதம் த்வத் ஏகதார்யம்
இதரேதர பூஷிதம் தத் ஏதத்
த்விதயம் ஸம்வநநாய சேதஸோ ந:

**பொருள்** - அடியார்களை நழுவவிடாத ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நீயும், உன்னால் மட்டுமே தரிக்கப்படுவதாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் - ஆகிய இருவரும்

ஒருவருக்கு ஒருவர் அலங்காரமாகவே உள்ளீர்கள். இப்படியாக உள்ள நீங்கள் எங்கள் மனதை முழுவதுமாகக் கவர்வதற்குப் போதுமானதாக உள்ளீர்கள்.

978. அநந்ய ஸாமாந்யதயா முராரே:
அங்கேஷு அவாப்தேஷு கிரீடமுக்யை:
பாதாவநி த்வம் நிஜம் ஏவ பாகம்
ஸர்வாத்ம ஸாதாரணதாம் அநைஷீ:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் க்ரீடம் முதலானவற்றால் அலங்கரிக்கப்பட்ட அவனது அவயவங்கள், அந்தந்த ஆபரணங்களுக்காக மட்டுமே இருக்கின்றன. அந்த அவயவங்கள் மற்றவர்களுக்குப் பொதுவாக இருப்பதில்லை. ஆனால் உனக்கு மட்டுமே சொந்தமான திருவடிகளை “அனைத்து ஆத்மாக்களுக்கும் பொது”, என்று நீயே ஆக்கியுள்ளாய்.

979. ஸமாச்ரிதாநாம் மணிபாதுகே த்வாம்
விபச்சிதாம் விஷ்ணுபதே அப்யநாஸ்தா
கதம் புநஸ்தே க்ருதிநோ பஜேரந்
வாஸாதரம் வாஸவ ராஜதாந்யாம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! உன்னையே அடைந்தவர்களுக்கு ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் மீதும், ஸ்ரீவைகுண்டத்தின் மீதும் கூட ஆசை இருப்பதில்லை. இப்படி உள்ளபோது அவர்கள் இந்த்ரனின் பட்டணமான அமராவதி நகரத்தில் வசிக்கவேண்டும் என்ற ஆசையை எப்படி அடைவார்கள்?

980. விம்ருச்ய ரங்கேச்வர பாதரக்ஷே
வாரக்ரமம் நூநம் அவாரணீயம்
பத்மாக்ரஹேபி ஸ்ப்ருசதீ ப்ரதீதா
ஸ்தூலேந ரூபேண வஸுந்தரா த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் பாதுகையான உன்னை ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் நீளாதேவி என்று ஒருநாள் ஒருவர் முறை என, அவன் திருவடிகளில் ஸமர்ப்பிக்கின்றனர். ஆனால் உன்னிடம் உள்ள ஆசை காரணமாக பூதேவி உன்னை எப்போதும் தொட்டபடி இருக்கவேண்டும் என்ற எண்ணினாள். இதனால்தான் மற்றவர்களின் முறை நாள்களிலும் கூட, தான் பூமி என்ற ஸ்தூல வடிவமாக நின்று, உன்னைத் தொட்டு மகிழ்ந்தபடி உள்ளாள் போலும்.

981. அபி ரக்ஷஸி த்வம் அநபாயநிதிம்
மணிபாதுகே மதுபித: சரணம்
அத ஏவ தேவி தத் அநந்ய தநா:
சிரஸா வஹந்தி பவதீம் க்ருதிந:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் என்ற மிகவும் உயர்ந்த அழிவற்ற செல்வத்தை நீ எப்போதும் காத்தபடி உள்ளாய். இதனால்தான், அந்தத் திருவடிகளைத் தவிர தங்களுக்கு வேறு எதுவும் உயர்ந்தது அல்ல என்று எண்ணுபவர்கள், உன்னைத் தங்கள் தலையில் தாங்குகிறார்கள்.

982. பதயுகம் இவ பாதுகே முராரே
பவதி விபூதி: அகண்டகா த்வயைவ
கதம் இவ ஹ்ருதயாநி பாவுகாநாம்
த்வத் அநுபவாத் உபஜாத கண்டகாநி

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! முரன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் இரண்டும் உன்னால் எப்படி முள் குத்தாமல் காப்பாற்றப்படுகிறதோ அது போன்று, இந்த உலகமும் உன்னால் சத்ருக்கள் இல்லாமல் ஆக்கப்படுகின்றது. இப்படி உள்ளபோது, உன்னைத் த்யானம் செய்பவர்களின் இதயங்களில் மட்டும், உனது அனுபவம் காரணமாக கண்டகம் (கண்டகம் என்றால் முள் என்று பொருள். ஆனால் இங்கு மயிர்க்கூச்சல் என்று சிலேடையாக வந்தது) உள்ளதாக இருக்கின்றது?

983. ஜ்ஞாநக்ரியா பஜந ஸீம விதூர வ்ருத்தே:
வைதேசிகஸ்ய தத் அவாப்தி க்ருதாம் குணாநாம்
மௌளௌ மமாஸி மதுஸூதந பாதுகே த்வம்
கங்கேவ ஹந்த பதித விதிதைவ பங்கோ:

**பொருள்** - மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஞானயோகம், கர்மயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றின் எல்லைகளுக்கு வெகுதூரத்தில் நான் உள்ளேன். அவற்றைப் பெறுவதற்குரிய குணங்களுக்கும் அப்பால் நான் உள்ளேன். இப்படிப்பட்ட என் தலை மீது, முடவன் ஒருவன் கங்கையில் விழுந்தது போன்று, நீயாகவே வந்து அமர்ந்தாய். என்ன வியப்பு!

984. ரங்கேச்வரஸ்ய யதிதம் மணிபாதரக்ஷே
பாதாரவிந்தயுகளம் பவதீ ஸமேதம்
பும்ஸாம் உபோஷித விலோசந பாரணார்ஹம்
க்ஷீரம் தத் ஏதத் இஹ சர்க்கரயா ஸமேதம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னுடன் எப்போதும் சேர்ந்தே உள்ள ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகள், தீயவை மட்டுமே அதிகமாக உள்ள இந்த உலகத்தில், நன்மை பயக்கும் மேன்மை கொண்டவையாக உள்ளன. இவற்றையும், உன்னையும் எண்ணியபடி ஒரு சிலர் உபவாஸம் (உண்ணாநோன்பு) இருக்கக்கூடும். அவர்களுக்கு நீங்கள் இருவரும் கண்களால் பருகப்படுகின்ற சர்க்கரை இட்ட பால் போன்று உள்ளீர்கள்.

985. காமாதி தோஷ ரஹிதம் த்வத் அநந்ய காமா:
கர்ம த்ரயோதசவிதம் பரிசீலயந்த:
பாதாவநி த்வத் அநுஷங்க விசேஷ த்ருச்யம்
ஏகாந்திந: பரிசரந்தி பதம் முராரே:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காக்கும் பாதுகையே! உன்னைத் தவிர வேறு எதனையும் தங்கள் பயனாகக் கொள்ளாமல் உள்ள, உன்னை மட்டுமே நம்பியுள்ள உத்தமர்கள் செய்வது என்ன? பலனில் விருப்பம் கொள்வது முதலான தோஷங்கள் இல்லாத பதின்மூன்று விதமான கர்மங்களை இயற்றிபடி, உன்னுடைய சேர்க்கை மூலம் மிகவும் அழகு பெற்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை உபாஸித்தபடி உள்ளனர்.

**விளக்கம்** - பதின்மூன்று கர்மங்கள் = எம்பெருமான், அந்தணன், குரு, ஞானிகள் ஆகியவர்களை ஆராதிப்பது, சுத்தம், நேர்மை, அஹிம்ஸை, ப்ரம்மசர்யம் என்று உடலால் செய்யப்படும் ஐந்து கர்மங்கள்; நல்ல சொற்கள் கூறுதல், ஸத்யம் பேசுதல், வேதம் ஓதுதல் என்று வாயால் செய்யப்படும் மூன்று கர்மங்கள்; மகிழ்வுடன் இருத்தல், பரம்பொருளை எப்போதும் த்யானித்தல், மனம் அடக்குதல், உலக விஷயங்களை எண்ணாமல் இருத்தல், அனைவரும் நன்றாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் என்பதான மனதால் செய்யப்படும் ஐந்து கர்மங்கள்.

986. மௌளௌ ஸ்திதா மகபுஜாம் அதவா ச்ருதீநாம்
தத் ரங்கராஜ சரணாவநி வைபவம் தே
அஸ்மாத்ருசாமபி யதி ப்ரதிதம் ததஸ் ஸ்யாத்
ஸௌலப்யம் அம்ப ததிதம் தவ ஸார்வபௌமம்

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! தாயே! நீ வேதங்களின் தலைகளில் உள்ளாய் அல்லது வேதங்களின் தலைப்பகுதியான உபநிஷத்துக்களில் உள்ளாய்; இது உனது பூர்ணமான மேன்மையாக உள்ளது. ஆனால் இப்படிப்பட்ட நீ எங்களைப் போன்ற தாழ்ந்தவர்களின் தலைப்பகுதிகளில் நின்றால் அல்லவோ, அனைத்து சாஸ்திரங்களும் கூறப்படுகின்ற உனது ஸௌலப்யம் (எளிமை) அனைவராலும் அறியப்பட்டதாகும்?

987. ஸ்வப்நேபி சேத் த்வம் அஸி மூர்த்தநி ஸந்நிவிஷ்டா
நம்ரஸ்ய மே நரக மர்தந பாதரக்ஷே
ஸ்தாநே தத் ஏதத் இஹ தேவி யத: ஸமாதௌ
ஸந்தோ விதுஸ்தமபி தாத்ருச புத்திகம்யம்

**பொருள்** - நரகாசுரனை வதம் செய்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் மீது ப்ரேமை கொண்டு உன்னை எப்போதும் வணங்கியபடி உள்ள எனது கனவில் நீ தோன்றி, எனது தலையில் அமரவேண்டும். அப்படி நீ அமர்ந்தாலும், அந்தச் செயல் பலனை அளிக்கவல்லதே ஆகும். காரணம் – யோகநிலையில் உள்ள முனிவர்கள் ஸ்ரீரங்கநாதனை இப்படியாக மானஸீக நிலையில் கண்டு அல்லவோ நன்மை அடைகிறார்கள்?

988. பத்தாஞ்சலி: பரிசரந் நியமேந ரங்கே
விச்ராணித அச்யுத நிதிம் மணிபாதுகே த்வாம்
கஸ்யாபி கூணித த்ருசோ தநிந: புரஸ்தாத்
உத்தா நயேய ந கதாபி கரம் விகோசம்

**பொருள்** - இரத்தினக்கற்கள் இழைக்கப்பப்பட்ட பாதுகையே! ஸ்ரீரங்கநாதன் என்னும் நழுவாத பெரும் நிதியை அளிப்பவளாக நீ உள்ளாய். இப்படிப்பட்ட உன்னை நான் எப்போதும் பற்றியவனாக, உனக்குக் கைங்கர்யம் செய்பவனாக இருப்பேனாக. இதனால் பயத்தை ஏற்படுத்துகின்ற கோபமான பார்வை பார்க்கின்ற எந்த ஒரு செல்வந்தன் முன்பும் நான் எனது விரித்த கையை ஏந்த மாட்டேன்.

989. த்வயி அர்ப்பிதேந சரணேந ஸத்த்வபாஜ:
பாதாவநி ப்ரதித ஸாத்விக பாவத்ருச்யா:
ரங்கேசவத் விதத்தே முஹுரங்க ஹாராந்
ரங்கே மஹீயஸி நடா இவ பாவுகாஸ்தே

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன் மீது வைக்கப்பட்ட திருவடிகள் கொண்ட ஸ்ரீரங்கநாதன் தனது அவயவங்கள் அசைத்து பலவிதமான நடைகள் செய்து ஸஞ்சாரம் செய்கிறான். இது போன்று ஒரு சிலர் உன்னிடம் தங்கள் அனுஷ்டானத்தை அர்ப்பணம் செய்கிறார்கள். இதனால் அவர்கள் நல்வழி பெற்று, ஆனந்தம் அடைந்து, கண்ணீர் பெருகி, மேன்மையும் அடைகின்றனர். இப்படியாக உனது மேன்மையை அடைந்த அப்பெரியோர்கள், ஸ்ரீரங்கநாதன் போன்று மிகவும் பெரியதான ஸ்ரீரங்கம் என்ற அரங்கில் ஆட்டக்காரர்கள் போன்று, தங்களையும் மறந்து, அவயவங்களை அசைத்து ஆடுகின்றனர்.

990. யேந ஸ்திதா சிரஸி மே விதிநாதுநா த்வம்
தேநைவ தேவி நியதம் மம ஸாம்பராயே
லக்ஷீகரிஷ்யஸி பதாவநி ரங்கநாதம்
லக்ஷ்மீ பதாம்புருஹ யாவக பங்கலக்ஷ்யம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகா தேவியே! நீ இப்போது எனது எந்தப் புண்ணியத்தின் பலனாக என் தலையில் உள்ளயோ, “இனி இங்கிருந்து செல்லமாட்டேன்”, என்று உறுதியுடன் நிற்கிறாயோ - அதே காரனத்தினால், எனது அந்திம காலத்தில், ஸ்ரீரங்கநாச்சியாரின் தாமரை மலர் போன்ற திருவடிகளில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பின் அடையாளம் பொருந்திய ஸ்ரீரங்கநாதனை, எனது பார்வைக்கு இலக்காகக் காண்பிப்பாயாக.

991. ஹரிசரண ஸரோஜ பக்தி பாஜாம் ஜநாநாம்
அநுகரண விசேஷை: ஆத்மநைவ உபஹாஸ்யம்
பரிணமய தயார்த்ரா பாதுகே தாத்ருசம் மாம்
பரத பரிஷத் அந்த: வர்த்திபி: ப்ரேக்ஷணீயம்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! தாமரை மலர் போன்ற திருவடிகள் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் மிகுந்த பக்தி கொண்டவர்கள் பலர் உள்ளனர். நான் அவர்கள் போன்று பக்தி உள்ளவனாக நடித்தபடி உள்ளேன். இதனால் என்னை நானே

பரிஹாஸம் செய்து கொள்ளும்படி உள்ளேன். இப்படிப்பட்ட என் மீது நீ இளகிய மனதுடன் அருள் சுரக்கவேண்டும். இதனால் நான் அவர்கள் போன்று பக்தி கொண்டவனாகவும், பரதனின் கோஷ்டியைச் சேர்ந்த “பாதுகா சேவகர்கள்” மூலம் கடாக்ஷிக்கப்பட்டவனாகவும் ஆகும்படி நீ செய்யவேண்டும்.

992. துரிதம் அபநயந்தீ தூரத: பாதுகே த்வம்
தநுஜ மதந லீலா தேவதாம் ஆநயந்தீ
அநிதர சரணாநாம் அக்ரிமஸ்ய அஸ்ய ஜந்தோ:
அவச கரணவ்ருத்தே: அக்ரத: ஸந்நிதேயா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனையும் உன்னையும் தவிர வேறு எந்தவிதமான கதியும் இல்லாதவர்களில் முதன்மையானவனாக நான் உள்ளேன்; எனது இந்த்ரியங்கள் எதுவும் என் வசம் இல்லை (அந்திம காலத்தில் உள்ள நிலை); இப்படியாக உள்ள பிராணி போன்ற எனது பாவங்கள் அனைத்தையும் நீ வெகு தூரம் விரட்டுவாயாக. அத்துடன் நில்லாமல், அசுரர்களை வதம் செய்வதைத் தனது லீலையாகக் கொண்ட ஸ்ரீரங்கநாதனை என்னிடம் எழுந்தருளப் பண்ணுவாயாக.

993. சரம நிகமகீதே ஸப்ததந்தௌ ஸமாப்தே
நிஜ ஸதந ஸமீபே ப்ராபயிஷ்யந் விஹாரம்
ஜ்வலநமிக பவத்யோ: ஸம்யக் ஆரோபயேந மாம்
ப்ரதம வரணவச்ய: பாதுகே ரங்கநாத:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! “எனக்கு நீயே கதி”, என்று ஒருமுறை கூறினாலே அந்தச் சரணாகதிக்கு வசப்பட்டு ஸ்ரீரங்கநாதன் நிற்கிறான். உபநிஷத்துக்களில் கூறப்பட்ட வேள்வி முடிந்தவுடன், அந்த அரணிக்கட்டைகள் அனைத்தையும் ஏற்றிக்கொண்டு வீட்டின் அருகில் உள்ள அக்னி ஸ்தானத்திற்குக் கொண்டு வருவார்கள். இது போன்று எனது ஜீவன் என்ற யாகம் முடியும்போது என்னைத் தனது மாளிகையின் அருகில் கொண்டு செல்லும் பொருட்டு ஸ்ரீரங்கநாதன் செய்வது என்னவென்றால் – என்னை அக்னியைப் போன்று உங்கள் இருவர் மீதும் ஏற்றிக் கொள்ளப்போகிறான்.

994. புந: உதரநிவாஸ ச்சேதநம் ஸஹ்யஸிந்தோ:
புளிநம் அதிவஸேயம் புண்யம் ஆப்ரஹ்மலாபாத்
பரிணமதி சரீரே பாதுகே யத்ர பும்ஸாம்
த்வம் அஸி நிகமகீதா சாச்வதம் மௌளிரத்நம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனக்கு பரப்ரஹ்ம ப்ராப்தி கிட்டும் வரையில், மறு பிறவியை அழிக்கவல்லதான, தூய்மையான காவேரியின் திட்டான, ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்து வருவேனாக. இந்த மணலில் ஒருவனது சரீரம் சாயும்போது, அவர்களது தலையில் விளங்கும் ஆபரணம் போன்று, வேதங்களால் துதிக்கப்படும் நீ அமர்கிறாய்.

995. பஹுவித புருஷார்த்த க்ராம ஸீமாந்தரேகாம்
ஹரிசரண ஸரோஜ ந்யாஸ தந்யாம் அநந்ய:
பரத ஸமய ஸித்தாம் பாதுகே பாவயம் ஸ்த்வாம்
சதம் இஹ சரத: தே ச்ராவயேயம் ஸம்ருத்திம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! அனைத்துவிதமான புருஷார்த்தங்களைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவளாகவும், அந்தப் புருஷார்த்தங்களின் எல்லையாகவும் நீ உள்ளாய். ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற மென்மையான திருவடி வைப்பின் மூலம் மேன்மையுடன் உள்ளாய். ஸ்ரீரங்கநாதனைக் காட்டிலும் மேன்மையானவள் என்று பரத ஸித்தாந்தம் மூலம் உணர்த்தப்பட்டாய். இப்படிபட்ட உன்னைத் தவிர வேறு எதனையும் நான் அண்டாமல், இந்த ஸ்ரீரங்கத்தில் நூறு வருடம் வாழ்ந்து, உன்னைப் புகழ்ந்தபடி இருப்பேனாக.

996. திலகயஸி சிரோ மே சௌரிபாதாவநி த்வம்
பஜஸி மநஸி நித்யம் பூமிகாம் பாவநாக்யாம்
வசஸி ச விபவை: ஸ்வை: வ்யக்திம் இத்தம் ப்ரயாதா
தத் இஹ பரிணதம் மே தாத்ருசம் பாகதேயம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எனது தலையை நீ எப்போதும் அலங்கரித்தபடி உள்ளாய். எனது மனதில் எப்போதும் நினைவு ரூபமான உருவத்தில் நீ அமர்ந்துள்ளாய். என்னுடைய வாக்கிலும் உன்னுடைய தோற்றம் வெளிப்படும்படியாகவே உள்ளாய். இப்படிப்பட்ட பரிபூர்ணமான புண்ணியம் எனக்குக் கிட்டியது.

997. அஜநிஷி சிரம் ஆதௌ ஹந்த தேஹ இந்த்ரியாதி:
ததநு தததிகஸ்ஸந் ஈச்வர: அஹம் பபூவ
அத பகவத ஏவாபூவம் அர்த்தாத் இதாநீம்
தவ புந: அஹம் ஆஸம் பாதுகே தந்ய ஜந்மா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எல்லையற்ற காலமாக நான் எனது உடல் மற்றும் இந்த்ரியங்கள் ஆகியவற்றையே எனது ஸ்வரூபமாக எண்ணி இருந்தேன். அதன்

பின்னர், கர்மகாண்டங்களைச் சற்றே அறிந்த பின்னர், உடல் போன்றவற்றைக் காட்டிலும் நான் மாறுபட்டவன் என்று உணர்ந்தும், ஈச்வரன் நானே என்று எண்ணியபடி இருந்தேன். அதன் பின்னர் ஸ்ரீரங்கநாதன் என்னிடம் எதனையும் எதிர்பார்க்காமல் என்னைக் கடாக்ஷித்தபோது, அவனுக்கே உடமையாக நின்றேன். ஆனால் இப்போது பாகவத அடிமைத்தனத்தின் எல்லையை அடைந்து, உனக்கே அடிமையாக நின்று, சிறந்த பிறவிப்பயனை அடைந்தேன்.

998. த்வயி ஆயத்தெள பகவதி சிலாபஸ்மநோ: ப்ராணதாநாத்
அஸ்த்ரீபாலம் ப்ரதித விபவெள பாத பத்மெள முராரே:
தாமேவ அஹம் சிரஸி நிஹிதாம் அத்ய பச்யாமி தைவாத்
ஆத்மாதாரம் ஜநநி பவதீம் ஆத்மலாப ப்ரஸூதிம்

**பொருள்** - அனைத்து திருக்கல்யாண குணங்களும் நிறைந்த பாதுகையே! இந்த உலகின் தாயே! அகலிகை என்ற கல்லுக்கும், சாம்பலாகக் கிடந்த பரீக்ஷித் என்ற சிசுவுக்கும் உயிர் அளித்த காரணத்தினால் பெண் - குழந்தை வரையில் ப்ரஸித்தம் பெற்றதாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் தாமரை போன்ற திருவடிகள், உனக்கு வசப்பட்டவையாகவே உள்ளன. அனைத்து உலகங்களுக்கு ஆத்மாவாக உள்ள ஸ்ரீரங்கநாதனுக்கு நீயே ஆதாரபூதையாக உள்ளாய். உன்னைத் தாங்குபவர்கள் யாரும் இல்லாத காரணத்தினால், ஸ்ரீரங்கநாதனைக் காட்டிலும் மேம்பட்டவளாக விளங்குகிறாய். இவ்விதம் உள்ள நீ, எங்கள் ஸ்வரூபத்தை நாங்கள் அறிவதற்குக் காரணமாக உள்ளாய். எனது புண்ணியம் காரணமாக இப்படி நீ எனது தலையில் உள்ளதைக் காண்கிறேன்.

999. கதம் காரம் லக்ஷ்மீ கரகமல யோக்யம் நிஜபதம்
நிதத்யாத் ரங்கேச: குலிசகடிநே அஸ்மிந் மநஸி ந:
ந சேதேவம் மத்யே விசதி தயயா தேவி பவதீ
நிஜாக்ராந்தி க்ஷுண்ண ஸ்மரசரசிகா கண்டக ததி:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! எங்களது மனம் என்பது மன்மதனின் ஆக்கிரமிப்பு காரணமாக அவன் பாணங்கள் நிறைந்ததாக, கூர்மையான முள் வரிசைகள் கொண்டதாக உள்ளது. உன்னுடைய தயை காரணமாக எனது மனம் மற்றும் ஸ்ரீரங்கநாதன் திருவடிகள் ஆகிய இரண்டிற்கும் இடையில் புகுந்து கொள்கிறாய். இப்படி நீ செய்யவில்லை என்றால் – ஸ்ரீரங்கநாச்சியாரின் தாமரை போன்ற திருக்கரங்களால் மட்டும் வருடக்கூடிய மென்மையான தனது திருவடிகளை ஸ்ரீரங்கநாதன், வஜ்ராயுதம் போன்ற கடினமான எங்கள் மனதில் எப்படி வைப்பான்?

1000. க்ரீடா லௌல்யம் கிமபி ஸம்யே பாதுகா வர்ஜயந்தீ
நிர்வேசம் ஸ்வம் திசஸி பவதீ நாதயோ: ஸ்ரீதரண்யோ:
மாமபி ஏவம் ஜநய மதுஜித் பாதயோ: அந்தரங்கம்
ரங்கம் யாஸௌ ஜநயஸி குணை: பாரதீ ந்ருத்தரங்கம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னையே தங்கள் எஜமானியாக எண்ணி, தங்களது ஐச்வர்யம் அனைத்தும் உன்னுடைய வசப்பட்டவை என்று எண்ணியபடி இருக்கின்ற ஸ்ரீதேவி மற்றும் பூதேவி ஆகியோர்களுக்கு நீ செய்வது என்னவென்றால் - அவர்கள் விரும்பும் காலத்தில், உன்னால் மட்டுமே ஏகபோகமாக அனுபவிக்கப்படும் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளின் அனுபவம் என்ற சுகத்தை, உனது ஸஞ்சாரத்தை சற்றே நிறுத்திவிட்டு அவர்களுக்குக் கொடுக்கிறாய். இது போன்று என்னையும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுக்கு ஏற்ற அடிமையாக நீ செய்தருள வேண்டும். உனது எந்தக் குணம் மூலம் நீ ஸ்ரீரங்கத்தை ஸரஸ்வதியின் நாட்டிய மேடையாக மாற்றுகிறாயோ, அந்தக் குணம் மூலம் எனக்கு அருளவேண்டும்.

1001. இதி ரங்கதுரீண பாதுகே த்வம்
ஸ்துதி லக்ஷ்யேண ஸஹஸ்ரசோ விம்ருஷ்டா
ஸபலம் மம ஜந்ம தாவத் ஏதத்
யதிஹாசாஸ்யம் அத: பரம் கிம் ஏதத்

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! இப்படியாக உன்னைத் துதிப்பது என்ற ஸ்தோத்ரம் ஒன்றைச் சாக்காக வைத்துக்கொண்டு, என்னால் ஆயிரக்கணக்கில் நீ சிந்திக்கப்பட்டாய். இதன் மூலமாக எனது பிறவியானது மிகுந்த ப்ரயோஜனம் மிக்கதாகி விட்டது. இதற்கு மேல் இந்த உலகத்தில் நான் பெற வேண்டியதும், ப்ரார்த்தனை செய்யவேண்டியதும் வேறு என்ன உள்ளது?

1002. மாத: ஸ்வரூபம் இவ ரங்கபதே: நிவிஷ்டம்
வாசாம் ஆஸீமநி பதாவநி வைபவம் தே
மோஹாத் அபிஷ்டுதவத: மம மந்த புத்தே:
பாலஸ்ய ஸாஹஸம் இதம் தயா ஸஹேதா:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகைத்தாயே! ஸ்ரீரங்கநாதனின் ஸ்வரூபத்தைக் காட்டிலும், வாக்கின் மூலம் எட்டாத பெருமை கொண்டவளாக நீ உள்ளாய். இப்படிப்பட்ட உனது மேன்மைகளை, தாழ்வான அறிவு கொண்ட சிறுவனாகிய நான், எனது அறியாமை காரணமாகத் துதிக்க முற்பட்டேன். உனது மேன்மையை ஆயிரம்

ச்லோகத்தின் மூலம் அளவிட்டுக் கூற முயன்ற எனது அறியாமையைப் பொறுத்துக் கொண்டு, எனது ஸாஹஸத்தை உனது தயை மூலம் மன்னிப்பாயாக.

1003. யே நாம பக்திநியதா: கவயோ மதந்யே
மாத: ஸ்துவந்தி மதுஸூதந பாதுகே த்வம்
லப்ஸ்யே குணாம்ச விநிவேசித மாநஸாநாம்
தேஷாம் அஹம் ஸபஹுமாந விலோகிதாநி

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனின் பாதுகையே! என் தாயே! அம்மா! என்னைக் காட்டிலும் உன்னிடம் பக்தி அதிகமாக உள்ள கவிஞர்கள் உன்னைத் துதிக்கக்கூடும். அவர்கள் உனது வாத்ஸல்யம் போன்ற குணங்களில் தங்கள் மனதை நிலை நிறுத்திப் புகழ்வார்கள். அவர்களின் கடாக்ஷம் நிறைந்த பார்வையை நான் அடையப் போகிறேன்.

1004. ஸங்கர்ஷயந்தி ஹ்ருதயாநி அஸதாம் குணாம்சே
ஸந்தஸ்து ஸந்தமபி ந ப்ரதயந்தி தோஷம்
தத் ரங்கநாத சரணாவநி தே ஸ்துதீநாம்
ஏகா பரம் ஸதஸதோ: இஹ ஸாக்ஷிணீ த்வம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! கவிகள் அல்லாதவர்களில் அஸத்துக்கள் எனப்படும் மனிதர்களின் இதயங்கள், நல்ல விஷயங்களில் உள்ள நன்மைகளிலும் குற்றமே காண முற்பட்டு, இதனால் பொறாமையும் கொள்ளும். ஸத்துக்கள் என்பவர்கள் குற்றம் இருந்தாலும் அவற்றை வெளியிடமாட்டார்கள். ஆகவே இந்த நூலில் உள்ள குணங்களுக்கும், தோஷங்களுக்கும் நீயே மத்யஸ்தமாக நின்று ஆராயவேண்டும்.

1005. இத்தம் த்வம் ஏவ நிஜகேளி வசாத் அகார்ஷீ:
இக்ஷ்வாகு நாதபத பங்கஜயோ: அநந்யா
ஸ்வீயம் பதாவநி மயா ஸுமஹத் சரித்ரம்
ஸீதேவ தேவி ஸஹஜேந கவீச்வரேண

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகாதேவியே! இக்ஷ்வாகு குலத்தின் நாயகனான இராமனின் திருவடிகளைத் தவிர வேறு எதனையும் நாடாத சீதை, தனது உடன் பிறந்தவரான வால்மீகி முனிவரைக் கொண்டு, தனது மேன்மைகள் வெளிப்படும் இராமாயணத்தைச் செய்வித்தாள். நீயும் அவள் போலே, ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைப் பிரியாதவளாக உள்ளாய். ஆக நீயும் அவள் போன்று என்னைக் கொண்டு, உன்னுடைய மிகப் பெரிய சரிதத்தை ஏற்படுத்திக் கொண்டாய்.

1006. ப்ருதுக வதந சங்கஸ்பர்ச நீத்யா கதாசித்
சிரஸி விநிஹிதாயா: ஸ்வேந பூம்நா தவைவ
ஸ்துதி: இயம் உபஜாதா மந்முகேந இதி அதீயு:
பரிசரணபரா: தே பாதுகே அபாஸ்த தோஷா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனது கைங்கர்யத்தில் மட்டுமே ஈடுபட்டு நிற்கும் உத்தமர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா - துருவன் முகத்தில் எம்பெருமானின் பாஞ்சஜன்யம் என்ற சங்கின் தொடர்பு ஏற்பட்டவுடன், ஞானம் உண்டானது போன்று, எனது தலையில் வைக்கப்பட்ட உனது மேன்மையால் இந்த ஸ்தோத்ரம் என் மூலமாக உண்டாயிற்று என எண்ணுவார்கள்.

**விளக்கம்** - எம்பெருமானைக் குறித்து துருவன் கடுமையான தவம் செய்தான். அப்போது அவன் முன்பாக எம்பெருமான் வந்து நின்றான். ஆனால் குழந்தையான துருவனுக்கு எம்பெருமானை எப்படித் துதிப்பது என்று தெரியவில்லை. அப்போது எம்பெருமான் தனது சங்கின் மூலம் துருவனின் கன்னத்தைத் தொட, அவனுக்கு ஞானம் உண்டானது. இது போன்று ஸ்ரீரங்கநாதனுடைய பாதுகையின் ஸ்பர்சம் தன் மீது பட்டதால், இந்தத் துதி ஏற்பட்டதாகக் கூறுகிறார்.

1007. யதி ஸ்பீதா பக்தி: ப்ரணயமுக வாணீ பரிபணம்
பதத்ராண ஸ்தோத்ரம் ஹ்ருதி பிப்ருத ரங்கக்ஷிதி ப்ருத:
நிருந்மாதோ யத்வா நிரவதி ஸுதா நிர்ஜ்ஜரமுசோ
வசோபங்கீ: ஏதா கதம் அநுருந்தே ஸஹ்ருதய:

**பொருள்** – மக்களே! உங்களுக்கு ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் மீது பக்தி ஏற்பட்டால், வேதங்கள் மூலம் அறித்தக்கதான பாதுகையை வெளிப்படுத்தும்படியாக உள்ள இந்த ஸ்ரீரங்கநாத பாதுகா ஸஹஸ்ர ஸ்தோத்ரத்தை, உங்கள் மனதில் எப்போதும் நிலையாக வைத்து இருப்பீர்களாக. அப்படிப்பட்ட பக்தி உங்களிடம் இல்லை என்றாலும், புத்தி தடுமாற்றம் அடையாத ஒருவன், நல்ல விஷயத்தை அறியவல்ல ஒருவன், அளவற்ற சொல் அமிர்தம் அருவி போன்று கொட்டுகின்ற இந்த ஸ்தோத்ரத்தை எப்படி ஆதரிக்காமல் இருப்பான்?


**Email:**sridharan_book3yahoo.co.in

1008. ஜயதி யதிராஜ ஸூக்தி:
ஜயதி முகுந்தச்ய பாதுகாயுகளீ
தநுபயதநா: த்ரிவேதீம்
அவந்தயயந்த: ஜயந்தி புவி ஸந்த:

**பொருள்** - யதிகளின் தலைவர் என்று போற்றப்படும் எம்பெருமானாரின் ஸ்ரீபாஷ்யம் போன்ற நூல்கள் மிகவும் மேன்மையுடன் விளங்குகின்றன. ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகள் மிகவும் மேன்மையுடன் விளங்குகின்றன. இந்த இரண்டையும் ஒருவர் தனது செல்வமாகக் கொண்டாலே போதுமானது - அப்படிப்பட்டவர்கள் மூன்று வேதங்களையும் ஸபலமாக்கியபடி வாழ்ந்து மேன்மை அடைகின்றனர்.

**விளக்கம்** - முதல் ச்லோகம் "ஸந்த" என்ற தொடங்கியது. இந்த ச்லோகத்தின் முதல் பதமும் "ஸந்த" என்று முடிவதைக் காண்க. இந்த ச்லோகம் கூறி முடித்தவுடன், மீண்டும் முதல் ச்லோகத்தைக் கூறுவது மரபாகும்.

ஸந்த: ஸ்ரீரங்க ப்ருத்வீச சரணத்ராண சேகரா:
ஜயந்தி புவந த்ராண பத பங்கஜ ரேணவ:

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீரங்கநாத பாதுகாஸஹஸ்ரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீரங்கநாத திவ்ய மணிபாதுகாப்யாம் நம:

ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத அழகியமணவாளன்
திருவடிகளே சரணம்

திருவரங்கத் திவ்ய தம்பதிகளை சரணம் புகுந்த
எம்பெருமானார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளைப் பற்றிய
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book3yahoo.co.in